SCRIPTURE UNION

தின தியானம்

அனுதின கிறிஸ்தவ வாழ்க்கைக்கான ஆதாரம்

2016

Scripture Union - India

தின தியானம் 2016

அனுதின வேத வாசிப்புக்கு உற்ற துணைவன்

வேதாகம ஐக்கிய சங்கம் - தமிழ் வெளியீட்டுத் துறை

தின தியானம் - 8000 பிரதிகள்

© Scripture Union - India, 2016

Printer :- J.R.Printech, Chennai

______________________________க்கு

அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

வழங்கியவர்

____

நன்கொடை ரூ.100/-

தியானிக்கும் புத்தகங்கள்

ஆதியாகமம், யோசுவா, நியாயாதிபதிகள், சங்கீதம் 1-48, ரூத், உன்னதப்பாட்டு, ஏசாயா 1-13, ஒபதியா, யோனா, நாகூம், ஆபகூக், செப்பனியா, மாற்கு, அப்போஸ்தலருடைய நடபடிகள் 1-12, எபேசியர், 1, 2 தெசலோனிக்கேயர், எபிரெயர், 1 யோவான், 2 யோவான், 3 யோவான், யூதா

செயலரிடமிருந்து......

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தில் புது வருட வாழ்த்துக்கள்!

உங்களின் வேத வாசிப்பு மற்றும் ஆவிக்குரிய தியானத்திற்காக வேதாகம ஐக்கிய சங்கத்தின் ***தின தியானம்*** என்ற நூலை நீங்கள் தெரிந்து கொண்டதற்கு நன்றி.

இந்நூலின் குறிப்புகளில் திருத்தங்கள் மேற்கொண்ட வேளைகளில் ஆண்டவரோடு நாம் செலவிடும் நேரத்தின் தன்மையைக் குறித்து அதிகமாய் சிந்தித்துக் கொண்டிருந்தேன். நம்மோடு இடைபடும் மக்களிடம் நாம் அர்த்தமுள்ள வகையில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமெனில், நாம் தேவனோடு தனிமையில் செலவிடும் நேரம் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். நாம் ஜெபிக்கிறோம், நல்லதுதான். ஆனால், அவர் சித்தப்படியும், விசுவாசத்தோடும் ஜெபிக்கிறோமா? வேதத்தை வாசிக்கிறோம், நல்லதுதான். ஆனால், தேவனைப்பற்றிய அறிவில் வளர்ந்திருக்கிறோமா? அவரோடு நெருங்கி வாழ்கிறோமா? மற்றவர்களுக்கு இயேசுவைப் பற்றி கூறுகிறோம், நல்லதுதான். ஆனால், நம் செய்தி நம்பத்தகுந்ததாய் இருக்கிறதா?

இயேசுவே திரளான மக்களையும், தன் சீஷர்களையும் விட்டு, தனித்துப்போய் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார் (மாற்கு 1:35; லூக்கா 5:15; 22:41; மத்தேயு 26:36) என்றால், நமக்கு அது எவ்வளவு அவசியம்! இந்த புதிய ஆண்டு உங்களுக்கு ஆண்டவரோடு இன்னும் நெருங்கி வாழ்கிற ஆண்டாக அமைய நான் ஜெபிக்கிறேன்.

இத்தருணத்தில் 2016-ம் ஆண்டிற்கான தியானக் குறிப்புகளை எழுதிய அனைவருக்கும் என் அன்பான நன்றிகளை உரித்தாக்குகிறேன். குறிப்புகளில் திருத்தங்கள் செய்ய உதவிய அனைவருக்கும், குறிப்பாக திரு.மனோகரன், அருட்திரு.பாலின் தம்பிதாஸ், அருட்திரு.மோகன் மாணிக்கராஜ், திரு.பால் ஆரவமுதம், திரு.பால்ராஜ், சகோதரி கிருபா, திருமதி.லாவண்யா சரவணன் மற்றும் திருமதி.கீதா ஜாய்சன் ஆகியோருக்கும் நிர்வாக உதவிகளை நல்கிய திருமதி.கிரேஸ் சாலொமோன் மற்றும் திரு.பாரத் ஆகியோருக்கும் நன்றி கூறுகிறோம்.

எங்கள் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள், எங்கள் தியான நூல்களை மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். நீங்கள் எங்கள் ஊழியத்தின் உடன் பங்காளிகளாக இருப்பதற்காக தேவனைத் துதிக்கிறேன்.

இறைப்பணியில் உங்களுடன்,

வடிவேல் விக்டர்
தமிழ் வெளியீட்டுத் துறை

தியானிக்கும் முறை

ஆயத்தமாகுங்கள் (Prepare) :

தேவ வார்த்தையை விளங்கிக் கொள்ள பரிசுத்த ஆவியானவரின் உதவிக்காக ஜெபியுங்கள்.

வாசியுங்கள் (Read) :

கொடுக்கப்பட்டுள்ள வேத பகுதியை அவசரமில்லாமல், கவனமாக வாசியுங்கள்.

கண்டுபிடியுங்கள் (Explore) :

வாசித்த பகுதியிலிருந்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலைக் கண்டுபிடியுங்கள்.

அ) இன்றைய வேதபகுதியின் முக்கிய கருத்து என்ன? இதில் ஆண்டவர் எதைக் குறித்து எச்சரிக்கிறார் அல்லது மெல்லிய சத்தத்தோடு பேசுகிறார்?

ஆ) இன்றைய பகுதியில் ஆண்டவர் தன்னைப்பற்றி (பிதா, குமாரன், பரிசுத்த ஆவி) அல்லது என்னைப் பற்றி கூறுவது என்ன?

இ) நாம் பின்பற்ற வேண்டிய கட்டளை அல்லது மாதிரி, விட்டுவிட வேண்டிய பாவங்கள், ஏற்றுக்கொள்ளக் கூடிய வாக்குத்தத்தம் ஏதேனும் இருக்கிறதா?அதன் பிறகு தின தியான நூலிலுள்ள தியான பகுதியை வாசியுங்கள்.

செயல்படுத்துங்கள் (Respond) :

இன்று கற்றுக் கொண்டவைகளைப் பிறரோடு பகிர்ந்து கொள்வதின் மூலமும் நீங்கள் வாழ்ந்து காட்டுவதின் மூலமும் செயல்படுத்துங்கள்.

இவ்வாண்டின் எழுத்தாளர்கள்

அருட்திரு.அகஸ்டின் பிரேம்ராசு, சென்னை	- ஜன.1 - 14
திரு.ஜீவராஜ், சென்னை	- ஜன.15 - 30
டாக்டர்.பிரான்சிஸ் ஹென்றி, மதுரை	- பிப்.1 - 6; 22 - 27
அருட்திரு.மோசஸ், சென்னை	- பிப்.8 - 20
அருட்திரு.நித்தியானந்தன், சென்னை	- பிப்.29 - மார்.5
அருட்திரு.ரூஸ்வெல்ட், மதுரை	- மார்.7 - 12 ஏப்.11 - 16
அருட்திரு.ஸ்டீபன் முல்லர், ஆனைக்குடி	- மார்.14 - 27
திருமதி.ஜெயா தனசீலன், சென்னை	- மார்.28 - ஏப்.9
திருமதி.கீதா ஜாய்சன், சென்னை	- ஏப்.18 - 23; ஜுன்.13 - 18 ஆக.29 - செப்.3
திரு.ஸ்டீபன் ஆபிரகாம், நாகர்கோயில்	- மே.2 - 7 ஆக.1 - 6
திருமதி.மெக்தலின் பாண்டியன், திருநெல்வேலி	- மே,9 - 12 செப்.5 - 10
திருமதி.பியூலா ஹெர்பர்ட், சேலம்	- மே.13 - 28
திரு.பால்ராஜ், திருச்சி	- மே.30 - ஜுன்.4
திருமதி.லாவண்யா சரவணன், சென்னை (ஜுன் 6 முதல் 11 வரை திரு வேலன்டைன் டேவிட்தார் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு திருமதி லாவண்யா சரவணன் அவர்களால் தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது)	- ஜுன்.6 - 11 செப்.19 - 24
திரு.சாலமன் கிருபாகரன், சென்னை	- ஜுன்.20 - 25

அருட்திரு.ஜேக்கப் போஸ், சென்னை	- ஜுன்.27 - ஜுலை.9
திரு.ஆத்ம சொரூபன், சென்னை	- ஜுலை.11 - 23
திருமதி.பெத்ஷீபா சந்திரலீலா, திருநெல்வேலி	- ஜுலை.25 - 30 செப்.12 - 17
திருமதி.கிரேஸ் அகஸ்டின், திருநெல்வேலி	- ஆக.8 - 20
அருட்திரு.பிரேமையா, சென்னை	- ஆக.22 - 27
திருமதி.மீகாள் காட்வின், கேரளா	- செப்.26 - அக்.8
திரு.பில்லி, கோத்தகிரி	- அக்.24 - நவ.5
திரு.வடிவேல் விக்டர், சென்னை	- நவ.7 - 12
அருட்திரு.மோகன் மாணிக்கராஜ், சென்னை	- நவ.14 - 26
டாக்டர்.ஜேம்ஸ் மார்ட்டின், கோயம்புத்தூர்	- நவ.28 - டிச.3 டிச.12 - 17
திரு.ஜான் சக்திவேல், திருச்சி	- டிச.5 - 10
திருமதி.யூனிஸ் எலியாஸ், திருச்சி	- டிச.19 - 31

கீழ்கண்ட நாட்களுக்கான தியான குறிப்புகள் முந்தய ஆண்டுகளில் பிரசுரிக்கப்பட்ட **தின தியானம்** நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவை:

ஏப்.25 - 30	மே.22, 29
ஜுன்.5,12,19,26	ஜுலை 3
அக்.10-15; 17-22	

ஆதியாகமம்

ஆதியாகமம் என்றால் "ஆரம்பம்" என்று பொருள். உலகம், ஆகாய விரிவு மற்றும் மனிதகுலம் ஆகியவை எப்படி ஆரம்பமானது என்பதைப் பற்றிக் கூறுவதால் ஆதியாகமம் என்ற பெயர் இப்புத்தகத்திற்குப் பொருத்தமே!

இப்புத்தகத்தை மோசே சுமார் கி.மு.1445-1405க்குள் எழுதி இருக்கக் கூடும் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

ஆதியாகமப் புத்தகத்தில் 4 சிறப்பு நிகழ்ச்சிகளும் (சிருஷ்டிப்பு, வீழ்ச்சி, ஜலப்பிரளயம், மனித இனவிருத்தி), 4 பெரிய மனிதர்களின் வாழ்க்கையும் (ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு) அடங்கியுள்ளன. 10 குடும்ப வம்ச வரலாறுகளில் ஆறு வம்ச வரலாறுகள் முக்கியமானவை. அவை ஆதாம் (1-5அதி.); நோவா (6-10அதி); ஆபிரகாம் (11-25:18); ஈசாக்கு (25:19-27:46); யாக்கோபு (28-36அதி.); யோசேப்பு (37-50) இதில் குறிப்பாக கொடுக்கப்பட்டுள்ளனவாகும்.

விசுவாசத்தைப் பற்றிப் பேசுகிறது இந்தப் புத்தகம். நோவா கர்த்தரை விசுவாசித்து, பேழையைச் செய்தான். ஆபிரகாம் விசுவாசத்தினாலே தன் சொந்த இடத்தை விட்டு கானானுக்குச் சென்றான். வயதான ஆபிரகாமும், சாராளும் தேவனை விசுவாசித்தார்கள்.

மாறுதல்களைப் பற்றி இப்புத்தகம் பேசுகிறது. சில கதாபாத்திரங்கள் எவ்வாறு இருக்க வேண்டுமோ அந்நிலைமைக்கு அவர்கள் வரும்வரை தேவன் எவ்வாறு செயலாற்றினார் என்பதைக் காண்கிறோம். எடுத்துக் காட்டாக யாக்கோபு ஏமாற்றுக்காரனாயிருந்தவன் தேவனால் மாற்றம் பெற்றான் அல்லவா?

1.	சிருஷ்டிப்பு	1: 1 – 2:3
2.	மனித வரலாறு	2:4 –11:26
3.	ஆபிரகாமின் வரலாறு	11:27 – 23:20
4.	ஈசாக்கின் வரலாறு	24 – 26 அதி.
5.	யாக்கோபின் வரலாறு	27 – 36 அதி.
6.	யோசேப்பின் வரலாறு	37: – 50 அதி.

ஆண்டவரே, எங்கள் படைப்பாளரே!

இயற்கை, விலங்கினம், மனித இனம் ஆகிய இம்மூன்று படைப்பிற்கு ஆசி வழங்கி அவரை வணங்கச் செய்வதே ஆண்டவரின் சித்தமாகும்.

திருமறையின் ஆண்டவர் அனைத்தையும் ஒழுங்குப்படுத்துபவர். ஒழுங்கின்மையும் வெறுமையுமாக இருந்த பூமியை ஒழுங்குப்படுத்தி, அவர் படைத்த மரம், செடி, கொடி, விலங்கினம், மனித இனம் ஆகியன வாழ்வதற்குரிய சுமூகமான சூழலை உண்டாக்குகிறார். திருமறையில் முதன்முதலில் இறைவன் பேசிய வார்த்தை வெளிச்சம் உண்டாகக்கடவது என்பது. எனவேதான் ஆண்டவர் அனைவரையும் அனைத்தையும் ஒழுங்குப்படுத்துபவர் என அறியலாம்.

தேவன் தாம் படைத்த இயற்கையையும், விலங்கினத்தையும் பலுகிப் பெருகி ஆசீர்வதித்து பூமியை நிரப்புங்கள் என்று சொல்வது இயற்கைப் படைப்பின் முக்கியத்துவத்தை விளக்குவதோடு, மனிதன் வாழ்வதற்கான பிராண வாயுவை (O_2- Oxygen) இந்த இயற்கைப் படைப்புகள் மட்டுமே தர முடியும் என்பதனை அறிவியல் பூர்வமாகவும் நமக்கு வெளிப்படுத்துகிறார். மனிதன் வாழ பிராண வாயுவையும், தாவரங்கள், விலங்கினங்கள் வாழ (CO_2- Carbondioxide) கரியமில வாயு மனிதரிலிருந்து வெளியேற்றி, படைப்புகள் எப்போதும் ஒன்றையொன்று சார்ந்திருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

தேவன் மனிதர்களை படைப்பின் மேன்மையாகவே படைத்தார். எல்லாவற்றையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று அவர் சொன்னதன் நோக்கம் அழிப்பதற்கல்ல, மாறாகப் பாதுகாக்கவே விரும்புகிறார். பாதுகாக்கும் பொறுப்பை மனிதர்களாகிய நம் கரங்களில் கொடுத்திருக்கிறார். தேவ சாயலைப் பெற்ற நாம், நாம் வாழ வேண்டிய சுயநலனோடு இயற்கை அழிவுக்கு காரணமாகி, அவர் சாயலை இழந்து போகிறோம். மரக்கன்று நடுதல், பிற படைப்பு மீது அன்பு செலுத்தி வளர்த்தெடுத்தல் போன்றவற்றையே ஆண்டவரின் சாயலை நாம் பெற்றிருப்பதின் அடையாளமாகும். அப்படி வாழும் போதே ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பார். தேவையில்லாமல் இலைகளைப் பறித்து மரத்திற்கு வலி உண்டாக்குகிறேனா அல்லது தேவன் படைத்த இயற்கையை நான் நேசிக்கிறேனா?

ஆண்டவரே, படைப்பின் மகுடமாகிய நான் பொறுப்போடு என்னோடு படைக்கப்பட்ட உயிரினங்களை பாதுகாக்க அருள் தாரும். ஆமென்.

ஆதியாகமம் 2:4–25

உழைப்பாளராம் தேவன்

மனிதன் மகிழ்ச்சியோடு வாழ ஏதேன் எனும் இடம், உண்ண உணவு, பருகத் தண்ணீர் மற்றும் சேர்ந்து வாழ துணை, இவையனைத்தையும் இப்பகுதி நமக்கு உணர்த்துகிறது.

தேவன் மனிதரை மண்ணிலிருந்து உருவாக்குகின்றார். தூசியைக் குறிக்கும் மண் மனிதனின் நிலையற்ற தன்மையைக் குறிக்கிறது. அடிப்படையில் தேவன் ஒரு உழைப்பாளர். இங்கே குயவனாகச் செயல்படும் ஆண்டவரை நாம் கவனிக்க முடிகிறது. தான் உண்டாக்கின மனிதனை இனிமையான இடத்தில் (ஏதேன் என்பதன் பொருள்) இயற்கை வளத்தோடு, இயற்கை உணவோடு, நீர் பாய்ச்சலை ஏற்படுத்தி, மிகுந்த பொறுப்போடும் கவனத்தோடும் மனிதனை கொண்டு வந்து அமர்த்தும் கடவுளை இப்பகுதி உணர்த்துகிறது. தான் படைத்த ஒவ்வொரு மனிதரின் வாழ்வும் இப்படி அமைந்திருக்க வேண்டும் என்றே கடவுள் விரும்புகிறார். இயற்கையோடு கலந்திருக்கும் வாழ்வு ஆதாமைப் போல ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். இயற்கை உணவு உண்பதையே ஆண்டவர் விரும்புகிறார்.

மனிதனாகிய ஆதாம் இறைச் சாயலை பெற்றதன் விளைவாக அவரைப் போலவே உழைக்க வேண்டும் என்று கடவுள் விரும்பி ஆதாமை ஏதேன் தோட்டத்தில் உழைத்து வாழ அழைத்துக் கொண்டு வருகிறார். ஒவ்வொரு மனிதனும் தன் ஜீவனத்துக்காக உழைக்க வேண்டும். அதுவே அவருக்கு மதிப்பாகவும், மேன்மையாகவும் கருதப்படுகிறது. பாவத்தைப் பிறப்பிக்காத எந்த உழைப்பும் மிகுந்த ஆசீர்வாதமானதாகும். உழைப்பின் இன்னொரு நோக்கம், அடுத்தவர் நலன் கருதியும் நம் உழைப்பின் பலன் பிறருக்கு மகிழ்ச்சியை உண்டு பண்ண வேண்டும் என்பதுமே ஆகும். யாரையும் கடவுள் தனிமையாக விடுபவரல்ல. அவர் கரிசனை மிகுந்தவர். ஏற்றத் துணையை உண்டு பண்ண வல்லவர். அவர் நினைப்பது (நாம் நினைப்பது அல்ல) ஒன்றும் தடைபடாது. நாம் பாவம் செய்யாத வரையில் ஒருவரிடத்திலும் வெட்கமடையப் போவதில்லை. இயற்கை உணவைத் தவிர்த்து துரித உணவகங்களை விரும்புகிறோமா? என் உழைப்பின் ஊதியம் என் குடும்பத்திற்கே என்று சேர்த்து வைக்கிறேனா?

தான் உண்டாக்கின ஏதேன் தோட்டத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஆதாமுக்கு வழங்கினபோல இவ்வுலகைப் பாதுகாக்கும் பொறுப்பை இன்று ஒவ்வொரு மனிதருக்கும் கொடுத்திருக்கிறார்.

ஆண்டவரே, இயற்கையான உம் படைப்பின் உணவுதனை உண்டு வாழவும், என் ஊதியம் ஏழை எளிய மக்களின் தேவைக்காகப் பயன் படவும் என் உள்ளத்தில் ஒளியேற்றும். ஆமென்.

செய்வதெல்லாம் வாய்க்கும்

> **கர்த்தர் யோசேப்போடே இருந்தார். அவன் காரிய சித்தியுள்ளவன் ஆனான். தானியேலின் காரியமோவென்றால் ஜெயமாயிருந்தது. யாருடைய காரியம் ஜெயமாய் மாறும்?**

150 பாடல்களுக்கும் நுழைவாயிலாக முதலாம் சங்கீதம் அமைகின்றது. உண்மையாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ விரும்பும் ஒரு மனிதன் தேவனின் வழிநடத்துலின்படியே தன் வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வான்.

யார் செய்வதெல்லாம் வாய்க்கும்? (வச.2,3):- கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து அவருடைய வேதத்தை தியானிக்கிற மனுஷன் செய்வது எல்லாம் வாய்க்கும். கர்த்தருடைய வேதவசனங்களின் சத்தியத்தை அறிந்து கொண்டு அதன்படி கீழ்ப்படிந்து நாள்தோறும் நடக்க வேண்டும். சங்.104:34ல் தேவனை தியானிப்பது இனிமை என்கிறது வேதம். எரே.17:7,8ல் கர்த்தரையே தன் நம்பிக்கையாக கொண்டவன் செய்வதெல்லாம் வாய்க்கும். அப்படிப்பட்டவர்கள் தண்ணீரண்டையில் நடப்பட்டதும், கால்வாய் ஓரமாய் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதை காணாமல் இலை பச்சையாக இருக்கிறதும் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான அனுபவம் உள்ளவர்களாய் இருப்பார்கள்.

என்ன செய்தால் வாய்க்கும்? (வச.1,4,5):- துன்மார்க்கர், பாவிகள், பரியாசக்காரர்கள் எனும் வார்த்தைகளை கவனியுங்கள். அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கும், கடந்து வரும் நபர்களில் அநேகர் இப்படி இருக்கக் கூடும். அவர்களது வழியில் நடவாமல், நில்லாமல், உட்காராமல் என்பது தேவ பிள்ளைகளுக்கு தேவனது நல்லாலோசனை. கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிற நீங்கள் செய்வதெல்லாம் வாய்க்கும்.

நீதிமான்களின் வழி வாய்க்கும் (வச.6):- கர்த்தர் நீதிமான்களின் வழியை, சோதனைகளை அவர்கள் வாழ்க்கையில் அனுமதிப்பதின் மூலம் அறிந்து இருக்கிறார். யோபு 23:10ல் அவர் என்னைச் சோதித்தபின் பொன்னாக விளங்குவேன். நீதி. 15:9ல் நீதியைப் பின்பற்றுகிறவனையோ அவர் நேசிக்கிறார். நம்மை சுற்றிலும் உள்ள மக்கள் மத்தியில் தேவனுக்கு பிரியமாய் நடக்க அர்ப்பணிப்போம்.

ஆண்டவரே, நான் செய்வதெல்லாம் வாய்க்கும்படி வெற்றி வாழ்க்கையை எனக்கு தாரும். நீதிமான்களின் சபையில் நிற்க உதவும். ஆமென்.

மனிதரின் கீழ்ப்படியாமை

மனிதரின் துன்ப நிலைக்கு காரணம் என்ன?

ஆதாம் ஏவாளைப் பாவத்திற்கு உட்படுத்திய சூழ்ச்சி மிகுந்த விலங்குதான் இந்தச் சர்ப்பம். நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசித்தால் சாகவே சாவாய் என்று கடவுள் ஏற்கனவே சொல்லியிருந்தார். ஆனால் ஏவாளோ அவ்வார்த்தைகளோடு அதைத் தொடவும் வேண்டாம் என்று ஓரிரு வார்த்தைகளை சேர்த்துக் கொள்கிறாள். கடவுள் தொட வேண்டாம் என்று சொல்லவில்லை, மாறாக புசிக்க வேண்டாம் என்றே கூறியிருந்தார். ஏவாள் அம்மரத்தை தொடாமல் இருந்திருந்தால் அவள் பழத்தை சாப்பிட்டு இருக்க மாட்டாள். அதைத் தொட்டதினாலே புசித்தாள். கடவுள் சொல்லாததை நாம் சொல்வோமாகில் நாமாகப் பெரும் பாவத்தில் சிக்கிக் கொள்வோம். இது பிசாசானவன் நம்மை வஞ்சிக்க மிகவும் எளிமையான வழியாகும். கடவுள் சொன்ன வார்த்தையிலிருந்து நாம் ஒரு வார்த்தையும் கூட்டக்கூடாது. அப்படி கூட்டினால் குழப்பமும், பயமும், அவமானமும், போராட்டமுமே உருவாகும்.

கடவுள் பாவம் செய்த மனிதர்களைத் தேடி வருகிறார். ஆதாமே நீ எங்கே இருக்கிறாய் என்று கேட்கிறார். பாவம் செய்ததினால், ஆதாம் தன்னை மறைத்துக் கொண்டான். ஏனோக்கைப் போலவும் (வச.5:22), நோவாவைப் போலவும்(வச.6:9) நீதிமானாக வாழ்ந்திருந்தால் கடவுளோடு சஞ்சரித்து நல்வாழ்வைப் பெற்றிருப்பான். ஆனால் கடவுள் மீதே பழி போடுகிறவனாக, என்னுடன் இருக்கும்படி நீர் தந்த அந்தப் பெண் தந்த கனியைப் புசித்தேன் என்கிறான். ஏவாளோ சர்ப்பம் என்னை வஞ்சித்தது என்று மாறி மாறி தாங்கள் செய்த பாவத்தை உணராமல், மன்னிப்பு கேட்காமல், பிறர் மீது குற்றம் சுமத்துகின்றனர். பாவம் செய்ததால் இறைச் சாயலை இழந்து போனார்கள். பிறர் நம்மைப் பாவம் செய்ய தூண்டினாலும் நாம் ஆண்டவரின் பிள்ளை, ஆண்டவர் இதனை அறுவறுக்கிறார் என்ற உணர்வு நம்மில் இருக்குமாயின் ஆண்டவரின் சாயலை நாம் இழக்க நேரிடாது.

அன்பு நண்பரே! பாவம் அமைதியையும், அன்பையும், நம்பிக்கையையும், உறவையும், அழித்து வெறுப்பு, தாழ்ப்புணர்ச்சி ஆகியவற்றை உண்டாக்கும். பாவ வாழ்வு தேவையா?

ஆண்டவரே, நீர் சொல்வதை நான் கேட்டு கீழ்ப்படிந்து நடக்கவும், பிறர் மீது குற்றஞ் சாட்டாமல் வாழவும் எனக்கு உதவி செய்யும். ஆமென்.

கடவுளின் தீர்ப்பும் வாக்குறுதியும்

பாவத்தின் சம்பளம் மரணம் என்ற திருமறையின் கூற்று இப்பகுதியின் வழிதான் பிறந்தது என்பதை நாம் முதலில் உணர வேண்டும்.

சர்ப்பமே மனிதரிடம் பாவம் விளைவிக்க மூலக்காரணமாக இருப்பதால் முதலாவது பாம்பிற்கு ஆண்டவர் சாபம் கொடுக்கிறார். பாவம் செய்யக் காரணமாக இருப்போர் மனம் வருந்தாவிட்டால் நிச்சயம் அதற்குரிய தண்டனையைப் பெற்றுக் கொள்வர். அவமானமடைந்து, தரையில் விழுந்து பிறர் காலை பிடித்துக் கெஞ்சுகிற அளவிற்குப் பாவம் நம்மை கொண்டு போய் விட்டுவிடும். மனிதரின் காலடியில்தான் சர்ப்பமானது ஊர்ந்து வர முடியும் என்று கடவுள் சபிக்கிறார். ஏவாள் பாம்பின் வஞ்சக வார்த்தைக்கு மயங்கியதால் அவள் கர்ப்பத்தின் வேதனையை கடவுள் கூட்டுகிறார். ஒரு வேளை இந்தப் பாவச் செயலை செய்யாமல் இருந்திருந்தால் பலுகி பெருகி பூமியை நிரப்புங்கள் என்ற ஆண்டவரின் ஆசீர்வாதம் நிறைவேறி இருக்கும்.

ஆதாம் கடவுள் சொன்னதைக் கேளாமல் தன் மனைவி சொன்னதைக் கேட்டு நடந்தமையால் பூமியோடு அவருக்கு இருந்த உறவு முறிந்தது. வருத்தத்தோடே அதன் பலனை புசிக்க கடவுள் சாப ஆணையிடுகிறார். அழகான மரங்களான ஏதேன் தோட்டத்தில் வைத்திருந்த ஆண்டவர் பாவத்தின் காரணமாக முட்செடியும், முட்புதரும் உண்டாகும் என்று கூறி நிலத்தையும் சபிக்கிறார். மரங்களின் பழங்களை நடந்து சென்று எட்டிப் பறித்து உண்பாய் என்றவர், வியர்வை சிந்தி நிலத்தை உழுது பயிர் வைத்து உழைத்து உண்ண வேண்டிய நிலை உனக்கு உண்டாகும் என்கிறார். ஏதேன் தோட்டத்திலிருந்தே விரட்டி அடிக்கப்படுகின்ற அவல நிலைக்கு பாவம் ஆதாமையும் ஏவாளையும் தள்ளிற்று. ஊர்ந்து செல்லுதல், பிரசவ நேரத்து வேதனை, உழைக்கும்போது வியர்வை ஆகிய இம்மூன்றும் கடவுளின் சாபங்கள் என்பதனை நாம் உணரவேண்டும். இதனைவிட மேலான பாவத்தை நாம் செய்து ஆண்டவரோடுள்ள உறவை முறித்துக் கொள்ள கூடாது.

பாவம் செய்து வேதனையும் சாபத்தையும் கூட்டிக் கொள்ளப் போகிறாயா? ... உன் நிமித்தம் அநேகர் சபிக்கப்படுகிறார்களா?

ஆண்டவரே, நீர் கூறும் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் எனும் கூற்று என் வாழ்வில் நடந்தேற பாவத்திற்கு செத்து நீதிக்கு பிழைத்து இருக்க அருள் தாரும். ஆமென்.

காயீனா? ஆபேலா?

> மனிதன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்.

திருமறையில் முதல் காணிக்கையிடுபவராக காயீன் சுட்டிக் காட்டப்படுகிறார். நிலத்தின் பலனிலிருந்து ஆண்டவருக்கு காணிக்கைப் படைக்கிறார். ஆபேல் தன் மந்தையிலிருந்த கொழுத்த தலையீறுகளில் ஒன்றைக் கொண்டு வந்து ஆண்டவருக்குக் காணிக்கையாக்குகிறார். ஆபேலுடைய காணிக்கையை கனிவுடன் அங்கீகரிக்கிறார். காயீனுடையதை நிராகரிக்கக் காரணம் அவர் நன்மை செய்யாதிருந்ததால் என்று 6ம் வசனத்தில் குறிப்பிடுகிறார். ஆக கடவுள் நம்மையும் நம் காணிக்கையையும் கனிவுடன் கண்ணோக்க வேண்டுமானால் நன்மை செய்பவர்களாக இருக்க வேண்டும். கடவுளுக்கு படைக்கும்போது இருப்பதிலேயே சிறந்ததைப் படைக்க வேண்டும்.

ஆடு மேய்த்தல், நிலத்தைப் பண்படுத்துதல் எனும் இருவேறு தொழில் செய்வதன் வழியே ஏற்பட்ட போதும் பகைமை உணர்வாலும் கூட ஆபேலை காயீன் கொன்றிருக்கலாம். பொறாமை கோபத்தை விளைவிக்கும். கோபம் பாவத்தை விளைவிக்கும். பாவம் மரணத்தை விளைவிக்கும். நீ சாகவே சாவாய் என்று ஆதாமுக்குச் சொன்ன (வச.2:17;3:19) வசனம் இங்கே ஆபேலின் வழியாக நிறைவேறுகிறது. உண்மைக்காகவும், நீதிக்காகவும், தம் உயிரைத் தியாகம் செய்பவர்கள் ஆபேலைப் போன்றவர்கள்.

நாம் செய்யும் வேலை இறைவன் படைத்த பிற படைப்பை அன்புடன் பேணி காக்க உதவுகிறதா அல்லது பிறரை ஏய்த்து நாம் ஊதியம் பெற உதவுகிறதா? ஏதேன் தோட்டத்தை விட்டு ஆதாம் துரத்தப்பட்டது போல தான் பண்படுத்தி வந்த நிலத்திலிருந்து காயீனும் தன் பாவச் செயலால் துரத்தப்பட்டு அலைந்து திரிகிறவனானான். ஒரே குடும்பத்தில் ஒரே சூழ்நிலையில் வளர்ந்த இருவரிடையே வெறுப்பும், பகையும் தோன்றுகின்றன. பாவத்தின் விளைவுதான் இது.

என் சகோதரனே! என் சகோதரியே! நான் பொறாமையோடு பார்க்கிறேனா? கோபத்தோடு நடத்துகிறேனா? நான் ஆபேலா? காயீனா?

ஆண்டவரே, அனைவருக்கும் குறிப்பாக என் சகோதர, சகோதரிகளுக்கும் நான் நன்மை செய்கிறவனாயும், சிறந்த காணிக்கையையே நான் உமக்குச் செலுத்தவும் அருள் தாரும். ஆமென்.

இறைவனோடு சஞ்சரிப்பாயா?

அதிகாலமே உம்மை தேடுகிறேன்; என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது.

ஆதியாகமம் 5ம் அதிகாரத்திம் முழுவதுமே ஆதாமின் மகனாகிய சேத்தின் வம்ச வழி வந்த நபர்களைப் பற்றினக் குறிப்பாகவே உள்ளது. இவர்களில் மிக மிக முக்கியமானவர்கள், ஏனோக்கு மற்றும் மெத்தூசாலா.

ஏனோக்கு :- யாரேதின் மகனாகிய ஏனோக்கு இவ்வதிகாரத்தில் சொல்லப் பட்டவர்களில் மிக முக்கியமானவர். எப்படியெனில் இவர் மட்டுமே கடவுளோடு சஞ்சரித்து வாழ்ந்தார் என்று சொல்லப்படுகிறது. ஏனோக்கு என்பதற்கு அர்ப்பணிப்புள்ள, ஒழுக்கமுள்ள என்று சொல்லப்படுகிறது. மேலும் ஆதாமுக்கு ஏழாம் தலைமுறையானவர் ஏனோக்கு (யூதா 1:14). யூதர்கள் மரபில் ஏழு என்ற எண் முறைமையைக் குறிக்கிறது என்றும் புரிந்துக் கொள்ளலாம். ஏனோக்கு கடவுளோடு சஞ்சரித்தார், ஆதாம் எவ்வாறு ஏதேன் தோட்டத்தில் பாவம் செய்வதற்கு முன்னர் கடவுளோடு வாழ்ந்து வந்தாரோ, அது போலவே (ஆதி. 3:8), எப்படி (ஆதி. 6:9) நோவா வாழ்ந்து வந்தாரோ, அது போலவே கடவுளோடு சஞ்சரித்தார் என்று புரிந்து கொள்ள வேண்டும். கடவுளோடு நல்ல ஐக்கியத்தையும், அவருடைய சித்தத்தையும் நிறைவேற்றுவதில் மட்டுமே அதிகப்படியான கவனம் செலுத்தி வாழும்போதே அவரோடு கூட சஞ்சரிக்க முடியும் என்று ஏனோக்கு நமக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறார்.

மெத்தூசாலா :- ஏனோக்கு 300 ஆண்டுகள் மெத்தூசாலாவைப் பெற்றபின் கடவுளோடு சஞ்சரித்துக் கொண்டிருந்து குமாரனையும், குமாரத்திகளையும் பெற்றெடுத்தார். குடும்பம் தழைக்க வேண்டுமானால் பிள்ளைச் செல்வம் கிடைக்க வேண்டுமானால் கடவுளோடு கூட ஏனோக்கைப் போல இணைந்து வாழ்தல் இன்றியமையாததாகிறது. இப்படிப்பட்ட வாழ்க்கையை ஏனோக்கு வாழ்ந்ததன் நிமித்தம் திருமறையில் யாருமே வாழ்ந்திட முடியாத காலமாக மெத்தூசாலா 969 ஆண்டுகள் வாழ்ந்தார். இது ஏனோக்கின் குடும்பத்தாருக்கு கடவுள் கொடுக்கும் ஆசீர்வாதம். ஆண்டவரோடு சஞ்சரிப்தென்பது அவரது கட்டளைகயையும் கற்பனைகளையும் கீழ்படிந்து நடப்பது ஆகும்.

ஒரு நாளைக்கு எத்தனை மணித்துளிகள் நான் கடவுளோடு சஞ்சரிக்கிறேன்?

ஆண்டவரே, உம்மோடு சஞ்சரித்து நீர் தரும் குடும்ப வாழ்வில் பிள்ளைச் செல்வ ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ள அருள் தாரும். ஆமென்.

கர்த்தர் மனஸ்தாபப்படுகிறார்

ஆண்டவர் தான் படைத்த மனிதர்களை மண்ணிலிருந்து அழித்து ஒழிக்க தீர்மானம் செய்யும் பகுதியாக இப்பகுதி விளங்குகிறது.

பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் (ஆதி. 1:28) என்று ஆசி வழங்கின அதே ஆண்டவரின் வாயிலிருந்து மனிதர்களைப் படைத்ததற்காக மனஸ்தாபப் படுகிறதாக பகிரங்கமாக வெளிப்படுத்துகிறார். இந்த அளவுக்கு கடவுளின் கோபம் வெளிப்படக் காரணம் மனிதர்களின் அக்கிரமமும், தீமையுமே. பாவச் செயலின் நிமித்தமே மனிதனுடைய சராசரி வாழும் கால அளவை 120 ஆண்டுகள் போதும் என்று குறைக்கிறார். நாம் ஐந்தாம் அதிகாரத்தில் படித்ததில் ஆதாம் மகன் சேத்தின் வழி வந்தவர்கள் அனைவருமே 800 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து வந்தனர். வாழும் கால அளவை கர்த்தர் குறைத்ததற்குக் காரணம் மனிதர்களின் பாவமே அன்றி வேறில்லை. என் ஆவி தீங்கு செய்யும் மனிதர்களோடு போராடுவதில்லை (6:3) என்று சலிப்படைந்தவராக அவர் பேசுவதைக் காணமுடிகிறது. மனிதர்களை உண்டாக்கியதற்காக துன்பப்படுகிற ஆண்டவரைக் காணமுடிகிறது (6:6).

மனிதர்கள் கடவுளோடு ஐக்கியப்படவும், தமக்குக் கீழ்ப்படியவும் தம்மை வணங்கவுமே ஆண்டவர் படைத்தார். ஆனால் மனிதர்களின் பாவ அளவீடு உண்ணக்கூடாது என்று சொன்ன பழம் (3:6), தொடங்கி கொலை செய்யும் (4:8) அளவும், ஆண்டவர் ஏற்படுத்தின ஒருவனுக்கு ஒருத்தி என்று மாறி ஒருவனுக்கு ஒருத்திக்கு மேல் என்ற திருமண அமைப்பு முறை, பல கொலைகள் (4:23) என பாவத்தின் பட்டியல் நீண்டதினால் ஆண்டவரின் பொறுமையின் எல்லை முடிவடைகிறது. பாவம் செய்தது மனிதன். ஆனால் மனிதனோடுகூட ஒட்டு மொத்த இயற்கையையும், விலங்கினத்தையும் அழிக்க முடிவு செய்கிறார். ஆதாமின் பாவம் ஏதேன் தோட்டத்தில் இருந்து வெளியேற காரணமானது போல, காயீனின் பாவம் மண்ணோடிருந்த உறவிலிருந்து துரத்தப்பட்டது போல மனிதர்களின் பாவம் பூமியை விட்டே அழிந்து போகுமளவும் காரணமாகிறது. ஆனாலும் இரக்கத்தின் கடவுள் நோவாவின் குடும்பத்தாரையும், வகைக்கு இரண்டு உயிரினங்கள் என எல்லா உயிரினங்களை மட்டும் பேழைக்குள் அனுமதிக்கிறார். நான் செய்யும் பாவங்களினாலும் என்னைப் படைத்ததற்காகவும் கடவுள் மனஸ்தாபப்படுகிறாரா?

ஆண்டவரே, நோவாவைப் போல உமக்கு முன்பாக நேர்மையாக நடக்க அருள் தாரும். ஆமென்.

புதிய ஆதாம் - நோவா

கர்த்தர் படைத்தப் படைப்பின் அழிவை இந்தப் பகுதி விளக்குகிறது.

மனித வாழ்வின் தொடக்கமே மிகப் பெரும் அழிவுக்குள் முடிந்து விடுகிறது. நோவாவின் காலத்தில் இருந்தது போலவே மனுஷகுமாரன் வருகையின் போதும் இருக்கும் (மத். 24:37).

கர்த்தர் கட்டளையிட்டபடியே நோவா செய்து முடித்தார். இதன் பொருள் நோவா பேழைக்குள் நுழைந்தது மட்டுமல்லாமல், 600 ஆண்டுகளாக தான் வாழ்ந்து வந்த உலக வாழ்விலிருந்து (பாவ வாழ்விலிருந்து) விடுபட்டு புது வாழ்வுக்கு நேராகப் பயணம் செல்கிறார். 1 பேதுரு 3:26ன்படி நோவா குடும்பத்தாருள் 8 நபர்கள், குடும்பங்கள், வீடு, சொத்து, நண்பர்கள், தங்கள் வாழ்வு முறை எல்லாவற்றையும் விட்டுவிட்டு புதிய வாழ்வை நோக்கி கடவுளோடு பயணிக்கின்றனர். நோவாவையும், அவர் குடும்பத்தையும் பொறுத்தவரையில் பழைய உலகம் இறந்து விட்டது. ஆனால் லோத்துவின் மனைவியை எண்ணிப் பார்த்தால் தன் சொத்து, வீடு, நண்பர்கள், வாழ்வுமுறை இவைகளை விட்டுவிட முடியாதவளாக மீண்டும் அப்பழைய வாழ்வுக்கு திரும்புகிறபோது அவள் உப்புத் தூணாக மாறிப் போகிறாள்.

ஆண்டவர் பேழையின் கதவை மூடினார். கடவுள் கதவை அடைப்பாரானால் உள்ளேயிருப்பவர் வெளியேயும், வெளியிலிருப்பவர் உள்ளேயும் வரவும் போகவும் முடியாது. நோவா கர்த்தரோடு நடந்ததினிமித்தம் (6:9) இவ்வாறு அவர்களை காப்பாற்றுகிறார். நோவா புதிய ஆதாரமாக மாறிப் போகிறார். எப்படியெனில் கடவுளுக்கு பயந்து அவர் சொல்லுக்கு கீழ்ப்படிந்து அவர் விரும்புகிற ஒரு குடும்பமாக, வகை வகையான விலங்கினங்கள் என்று புதிய வாழ்வு வாழ கடவுளின் அழைப்பையும் ஆசியையும் பெற்று நோவா பயணமாகிறார். நோவா கடவுள் விரும்புகிற இயற்கை மனிதன் இரண்டும் சேர்ந்த கூட்டு வாழ்வு வாழ ஒப்புக்கொடுக்கிறார்.

கடவுள் விரும்பும் வாழ்வு வாழ நான் விரும்பினாலும், என் குடும்பம், வீடு, சொத்து, வாழ்வுமுறை என்று கடவுளுக்கேற்ற வாழ்வை வாழ இவை யாவும் தடையாக உள்ளதா?

ஆண்டவரே, ஆதாம் செய்யத் தவறியதை நோவா செய்து முடித்தது போல, நானும் உமக்கு கீழ்ப்படிந்து,* நேர்மையாக நடந்து உம் படைப்பைக் காக்க அருள் தாரும். ஆமென்.

அரசாளும் ஆண்டவர்

சமாதானத்தை உண்டுபண்ணவே இப்பூவுலகில் எனக்காக மனுவுருவெடுத்து வந்த நல்ல மேய்ப்பரே உம்மை துதிக்கிறேன்.

புறஜாதி [ராஜாக்களின்] குரல் [வச.1-9]:- கர்த்தரை அறியாத மனிதன், தேவனுக்கும், தேவனுடைய காரியத்திற்கும் எதிராக எழும்புவதைப் பற்றி இப்பகுதி விளக்குகிறது. இராஜாக்கள் கர்வம் கொண்டு கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவர்களுக்கு விரோதமாகவும் எழும்பி ஆலோசனை பண்ணி, தேவனுக்கு எதிராக மனிதன் செயல்படுவதை காட்டுகிறது. இன்றும் தேவனுக்கு எதிராக பூமியின் இராஜாக்களும் அதிகாரிகளும் நியாயமற்ற முறையில் செயல்பட நினைக்கின்றனர்.

தேவனின் குரல் [வச.4-6]:- பரலோகத்திலிருக்கிற தேவன், வானம் அவரது சிங்காசனம், பூமி அவரது பாதப்படி, ஒளியை வஸ்திரமாகத் தரித்த தேவன், இராஜாவாக வீற்றிருப்பவர். கர்த்தருக்கு எதிராக செயல்படும் மனிதர்களை நோக்கி நகைப்பார். நீதி.1:26ல் ஆண்டவர் அவர்களை இகழுவார். சங்.2:5ல் தமது கோபத்திலே அவர்களோடே பேசி.. அவர்களை கலங்கப் பண்ணுவார்.

கிறிஸ்துவின் குரல் [வச.7-9]:- கிறிஸ்துவாகிய மேசியாவின் முடிசூட்டு விழா வச.7-9ல் விளக்கப்படுகிறது. நீர் என் குமாரன், இன்று உம்மை ஜெநிப்பித்தேன் என்பது அவருக்கு தேவனோடுள்ள ஒப்பற்ற உறவை காட்டுகிறது. ரோ.1:5ன்படி தேவனுடைய சுதனென்று பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரன் அவர். சர்வ லோகத்திலும் அவருடைய அதிகாரம் உள்ளது வச. 8. மேசியாவின் இறுதி வெற்றி வச.9ல் கூறப்பட்டுள்ளது.

பரிசுத்த ஆவியானவரின் குரல் [வச.10-12]:- ராஜாக்களே உணர்வு அடையுங்கள் ஆண்டவரை எதிர்க்க வேண்டாம், பூமியின் குடிகளே பயத்துடனே கர்த்தரை சேவியுங்கள் - வச.11. அவருக்கு ஊழியம் செய்வதே அவருடைய சித்தத்தை செய்வதாகும். வச. 12ல் அவரை முத்தஞ் செய்யுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் பேசுகிறார். எதிர்ப்பும் அமைதியின்மையும் நிறைந்த இவ்வுலகில் கிறிஸ்துவை தங்கள் ஆண்டவரும் இராஜாவுமாக ஏற்றுக் கொண்டு பகிரங்கமாக அவரை நேசிக்கும், சேவிக்கும் மக்களை கர்த்தர் நேசிக்கிறார்.

ஆண்டவரே உமது தூய ஆவியானவரின் குரல் கேட்டு, திருக்குமாரனின் சித்தம் செய்ய எங்களுக்கு உதவும்.

ஆண்டவரை முதலாவது வணங்கு

> உலகம் முழுவதும் வெள்ளப் பெருக்கினால் அழிந்து விட்டதையும் நோவாவும் அவரோடு இருந்தவர்களும் கடவுளுக்குப் பலி செலுத்துவதையும் இப்பகுதி உணர்த்துகிறது.

ஆதியாகமம் 8ம் அதிகாரத்தில் கடவுள் தமது மக்களை மறந்துவிடுகிறவரல்ல, அவர் நினைவில் வைத்திருக்கிறவர். ஆதி.7:1ல் பேழைக்குள் ஏறிச் செல்லும் கர்த்தர் அதோடு ஆதி.8:15ல் கிட்டத்தட்ட ஓராண்டிற்குப் பின் நோவாவிடம் பேசுகிறார். கடவுள் 8:1ல் படிக்கிறபடி பேழைக்குள் இருந்த அனைவரையும் நினைவு கூருகிறார். ஓராண்டாக நோவாவும் எந்தவித கஷ்டமும், முறு முறுப்பும் இல்லாமல் பேழைக்குள் கடவுள் நமக்கு உதவி செய்வார் என்று உறுதியாக நம்பி அவருடைய அடுத்த சொல்லுக்காகக் காத்திருக்கிறார். பொறுமையோடு ஓராண்டு வாழ்கிறார். கடவுள் நம்மை அழைத்தவரானால் அவர் நம்மை இரட்சிப்பார் என்று இப்பகுதியின் வாயிலாக நமக்கு அவர் கற்றுத் தருகிறார்.

நோவா பலிபீடம் கட்டி தகனபலி செலுத்தினநிமித்தம் சுகந்த வாசனையாக கர்த்தர் அப்பலியை நுகர்ந்து இனி முதல் மனிதர்களைத் தாம் சபிக்கப் போவதில்லை என்று திட்டமாக உணர்த்துகிறார். நோவா தம்மிடத்தில் மிகக் குறைந்த அளவிலேயே விலங்கினங்களை வைத்திருந்தார். அவைகளில் இருந்து சுத்தமான சிலவற்றை எடுத்து கடவுளுக்கு பலி செலுத்தி, இன்று நம்மையும் மிகக் குறைவாக இருந்தாலும் அவைகளைக் கடவுளுக்கு பலி செலுத்தத்தக்கதாக உந்தித் தள்ளுகிறார். புதிய உகைத்திற்குள் நுழைந்த நோவா முதலாவது கடவுளுக்கு வழிபாடு செய்கிறார். பலி செலுத்துவதில் நோவா இங்கே நமக்கு ஒன்றைக் கற்றுக்கொடுக்கிறார். தன்னிடம் குறைந்த அளவே விலங்கினங்கள் இருந்தாலும் அவற்றில் மிகச் சிறந்த தூய்மையான ஒன்றை ஆண்டவருக்குப் படைக்கிறார். நம்மிடமுள்ள மதிப்புமிக்க விலையுயர்ந்த காணிக்கையையே ஆண்டவருக்குப் படைக்க வேண்டும் என நோவா உணர்த்துகிறார்.

இன்றைக்கும் கடவுள் நம்மை ஒரு போதும் மறக்கிறவரல்ல. அவருடைய அதிசயிக்கத்தக்க செயலின்படி உன்னை நினைவுகூறுகிறவராக இன்னும் இருக்கிறார். உன்னை அழைத்தாரானால் அவர் உனக்கு சகாயம் செய்யாமல் இருப்பாரோ? நோவாவைப் போன்ற பொறுமையும் புதிய வாழ்வுக்குள் பிரவேசிக்கும் போது கடவுளை நினைத்துப் பார்க்கிறேனா?

ஆண்டவரே, என் வாழ்வின் புதிய தருணங்களில், உம்மை முதலாவது வணங்க இன்று என்னை ஒப்படைக்கிறேன். ஆமென்.

உடன்படிக்கையின் கர்த்தர்

நோவாவோடு கடவுள் செய்த உடன்படிக்கையைப் பற்றியே இந்தப் பகுதி பேசுகிறது.

ஆதாமுக்குச் சொன்னது போலவே நோவாவும் கர்த்தர் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்று ஆசீர்வதிக்கிறார். ஆதி.6:18ல் நோவாவோடு கர்த்தர் செய்து கொள்ளும் உடன்படிக்கையின் நிறைவேறுதலாக இந்தப் பகுதியை (8-11) கவனிக்கலாம். நோவாவின் காலத்தில் நேர்ந்தது போன்ற வெள்ளப் பெருக்கிலான அழிவு இனி ஒரு போதும் ஏற்படப் போவதில்லை என்பதே இந்த உடன்படிக்கையின் ஆசீர்வாதம். திருமறையில் கடவுள் செய்யும் முதல் உடன்படிக்கையாக இந்தப் பகுதியைக் காணலாம். கடவுள் செய்யும் எல்லாமே மனிதருக்கு ஆசீர்வாதமாக உள்ளது. அவரது உடன் படிக்கைக்குக் கட்டுப்பட்டு வாழுகிறபோதே அந்த ஆசீர்வாதம் நிறைவை நோக்கிய பயணமாக நோவாவைப் போல் மாறிப் போகிறது.

தாம் செய்து கொள்ளும் உடன்படிக்கையை அவர் உறுதி செய்து கொள்ளும் படிக்கு அடையாளம் ஒன்றை கடவுள் ஏற்படுத்தினார். உலகை இனி வெள்ளப் பெருக்கினால் அழிக்கப் போவதில்லை என்பதே அந்த உடன் படிக்கையின் அடையாளமாகிய வானவில். வானவில் ஒரு காரண உருவகமாக இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது. அதாவது கடவுள் மனிதர்களோடும் உயிரினங்கள் அனைத்தினோடும் செய்து கொள்ளும் உடன்படிக்கையாகும். கடவுளின் வாக்குறுதியை நினைவூட்டும் அடையாளங்கள் வில்லும் அம்புமாகிய போர்க் கருவிகள். கடவுள் வில்லை வானத்தில் வைத்துவிடுகிறார். இனிமேல் மனித சமுதாயத்திற்கு அழிவினைக் கொண்டு வரமாட்டார். இங்கு அமைதியின் அடையாளம் வானவில் இருண்ட மேகத்திலேயே ஒளிவீசுகின்றது. ஆகவே கடவுளின் கோபம் என்ற இருளில் அன்பு மட்டுமே ஒளி வீசும் என்பதே கர்த்தர் வானவில்லை உடன்படிக்கையின் அடையாளமாகக் கொடுத்ததன் நோக்கம். ஆண்டவருக்கு உகந்து கீழ்படிந்து நடந்த நோவா மெத்தூசாலாவுக்குப்பின் 950 ஆண்டுகள் வாழ்ந்தார். இத்தனை ஆண்டு வாழ்வு என்பது கீழ்படிதலின் ஆசீர்வாதமாகும்.

கடவுளோடு ஞானஸ்நானம், திடப்படுத்துதல் போன்ற நேரங்களில் நான் செய்து கொண்ட உடன் படிக்கையை நிறைவேற்றுகிறேனா?

ஆண்டவரே, நான் உம் பிள்ளையாக உம்மோடு இணைந்து வாழும் பந்தத்தை எப்போதும் என்னில் உறுதிப்படுத்தும். ஆமென்.

ஆதியாகமம் 10:1–32

சேம், காம், யாப்பேத்து

> மனிதன் தன் அறிவுத்திறனால் வெளிப்படுத்தும் அனைத்தும், நாளடைவில் பழையதாகிவிடும். ஆனால் திருமறையின் நிகழ்வுகள் என்றென்றும் புதிதாய் நிலைத்து நிற்கும்.

இந்தப் பகுதி நோவாவின் வம்ச வழி வந்த அவரின் பிள்ளைகளின் வழி மரபினரைப் பற்றி குறிப்பிடுகிறது. சேம், காம், யாப்பேத்துக் குடும்பத்தார் வழி வந்த சந்ததிகள் மொத்தம் 70. இந்த 70 என்ற எண் யூத மரபின் படி முழுமைப் பெற்ற இரண்டு எண்களின் கூட்டுத் தொகையாகப் பார்க்கப்படுகிறது. 7 நாட்களில் உண்டாக்கப்பட்ட படைப்பின் வரலாறு மற்றும் மனிதனின் 10 விரல்கள். இதன் கூட்டுத் தொகை 7x10=70. அதாவது ஆண்டவர் படைத்த இவ்வுலகில் பலுகிப் பெருகி பூமியை நிரப்பி மனிதரின் ஆளுகைக்கு உட்படுத்தி மகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்ற அவரின் திட்டத்தை நிறைவேற்றுகின்ற வாழ்வுக்கான முழுமையே இந்த சந்ததிகளின் மற்றும் அவர் தம் நாடுகளின் பெருக்கம் ஆகும்.

யாப்பேத்தின் வழி மரபினர் மொத்தம் 14 என்று குறிப்பிடப்படுகின்றது. இவர்கள் கப்பல் போக்குவரத்து நடைபெறும் கடற்கரை வழியாக வாழ்ந்தவர்கள். அதிலும் குறிப்பாக மத்திய தரைக் கடல் பகுதியில் இருந்தவர்கள் என்று வரலாற்றுச் செய்தி கூறுகிறது. காமின் வழி மரபினர் மொத்தம் 30 பேர் என்று குறிப்பிடப்படுகிறது (வச.6.7). இந்தச் சந்ததியாரின் பெயர்கள் புவியியல் மற்றும் இன அடிப்படையில் காணும் போது வரலாற்றில் அழிந்து போனதாக அறியப்படுகிறது. ஆனால் இவர்கள் அரேபியர் மற்றும் ஆப்பிரிக்கர் வாழ்வோடு தொடர்புடையவர்களாகவும் வரலாற்று செய்திகள் உள்ளன. கூஷின் மகனாகிய நிம்ரோத் மிகவும் பராக்கிரமசாலி. அவர் தான் பூமியில் வாழ்ந்த ஆற்றல் மிக்க முதல் மனிதர் என்று காணமுடிகிறது. அரசுகளைக் கட்டி எழுப்புவதில் வல்லுனராகவும் திகழ்ந்து வெற்றி கண்டவர். ஆதிகாலத்து எகிப்திய மற்றும் மெசபத்தோமிய அரசர்களைப் போல இவர் ஒரு நல்ல வேட்டைக்காரராகவும் இருந்திக்கிறார். நிம்ரோத்தின் அரசாட்சி தெற்கு முதல் வடக்கு வரை அதாவது பாபிலோன் மற்றும் நினிவே ஆகிய நகரங்களை உள்ளடக்கியது ஆகும். நோவாவின் சந்ததியில் சேமின் சந்ததியர் மட்டுமே தெரிந்து கொள்ளப்பட்டனர். இவர்கள் மொத்தம் 26 சந்ததிகள். ஆதி.11ம் அதிகாரம் இந்தச் சந்ததியரைப் பற்றி சொல்கிறது. சேமின் வம்ச வழியிலே ஆபிரகாம், இஸ்ரவேல் மக்கள்,

ஆண்டவரே, பிறரை அழிவிலிருந்தும் ஆபத்திலிருந்தும் காப்பாற்றும் நிம்ரோத்தைப் போல் நான் வாழ எனக்கு அருள் தாரும். ஆமென்.

பாவத்தின் வீழ்ச்சி

பாபேல் கோபுர நிகழ்வு மற்றும் நோவாவின் மூத்த மகன் ஷேமின் வம்ச வழிவந்தவர்கள் பற்றியே இப்பகுதியில் காண்கிறோம்.

ஆதி.3ம் அதிகாரத்தில் வரும் ஏதேன் தோட்ட ஆதாம் ஏவாள் செய்த பாவமும், இந்தப் பகுதியும் ஏறத்தாழ ஒரே பொருளை உணர்த்துவதாக உணரலாம். இரண்டு நிகழ்விலும் கடவுளைப் போல ஆவதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டு பாவத்தின் வீண் பெருமையினால் பாவிகளாக தண்டனைப் பெற்று விரட்டப்படுவதை காணலாம். பாபிலோன் கோபுர நிகழ்ச்சி ஆதி.10ம் அதிகாரத்திற்கு முன்பதாகவே நடந்திருக்க வேண்டும். ஏனெனில் 10ம்அதிகாரத்தில் வரும் 5,20,31 ஆகிய வசனங்களில், "தங்கள் தங்கள் பாஷைகளின்படியே" என்று வருவதைக் காண முடிகிறது.

கோபுரம் கட்டின மக்களின் பெருமையையும், அவர்களது நோக்கத்தினையும் மூன்று பிரிவுகளில் காணலாம். முதலாவது "நாம்", "நமக்கு" என்று முன்னிறுத்துகிற கூட்டுப் பெயர், இரண்டாவதாக வானளாவிய பெரும் கோபுரம் கட்டி கடவுளுக்கு ஒப்பாகத் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்த நினைப்பது. மூன்றாவதாக தங்களுக்கு சுய மகிமையை வருவித்துக் கொள்ளத்தக்க, "நமக்கு பெயர் உண்டாக்கப் பண்ணுவோம் வாருங்கள் (வச.11:4)" என்று சொல்லுவதைக் காணலாம். ஏனென்றால் உலகெங்கிலும் சிதறுண்டு வாழ்வதற்கு அவர்களுக்கு விருப்பமில்லை. இவை யாவுமே ஆதி.9:11ல் காண்கிற ஆண்டவரின் ஆசீர்வாதமாகிய நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்ற வார்த்தைக்கும் கட்டளைக்கும் எதிர்த்து செய்ய வேண்டும் என்ற எண்ணம் படைத்த மக்களாகவே அவர்கள் இருப்பதை அறியமுடிகிறது. மனிதர்கள் கட்டிய கோபுரத்தை காண்பதற்காக ஆண்டவர் இறங்கி வந்தார். மகிமை என்பது கர்த்தர் ஒருவருக்கே உரியது. மனிதர்கள் அதை அடைய விரும்பினால் ஆண்டவர் அதை அனுமதிக்க மாட்டார். ஆதி. 11:3 மற்றும் 11:7 ஆகிய வசனங்கள் ஒன்றுக்கொன்று எதிர் பொருளை கொடுக்கும் வசனங்களாகும். "நாம் செங்கல் அறுத்து" என்பதற்கு பதில் கொடுக்கும்படி "நாம் இறங்கிப் போய்" எனும் கர்த்தரின் மறுமொழியைக் காணலாம். ஆதி.1:26ல் நமது சாயலாக மனிதர்களை உண்டாக்குவோம் என்றவர் ஆதி.11:7ல் பாஷையைத் தாறுமாறாக்கி குழப்பம் விளைவிக்கிறார். காரணம் இன்னும் அதிகப்படியான தீமையை மனிதர்கள் செய்ய வேண்டாம் என்பதே இறைவனின் எண்ணம்.

கர்த்தரவே எங்கள் மகிமைக்காக அல்ல எப்போதும் உம் ஒருவருக்கே எல்லா கனத்தையும் மகிமையையும் செலுத்தும் பிள்ளையாக வாழ அருள் தாரும். ஆமென்.

மாற்கு

நான்கு நற்செய்தி நூல்களில் மாற்கு நற்செய்தி நூல்தான் முதலில் எழுதப்பட்டது என்று பொதுவாகக் கருதப்படுகிறது. இயேசுவின் சீஷன் பேதுருவுக்கு அரேமிக் மொழி மட்டுமே தெரியும். இன்று ஆங்கிலம் பொது மொழியாக இருப்பது போல அந்நாட்களில் கிரேக்க மொழி பொதுமொழியாக இருந்தது. ஆகவே போகுமிடமெங்கும் பேதுரு அரேமிக் மொழியில் பிரசங்கிக்க, அவற்றை மாற்கு (ரோமப் பெயர்)என்னும் மறுபெயருள்ள யோவான் (ரோமப் பெயர்) கிரேக்க மொழியில் மொழி பெயர்பான். இதற்காக அவனைத் தன்னோடு கூட்டிக் கொண்டு பேதுரு செல்வான். இவ்வாறாக பேதுரு பிரசங்கித்த சுவிசேஷத்தை மாற்கு நன்கு அறிந்து கொண்டு இந்நற்செய்தி நூலை எழுதினான் என்று வேத வல்லுனர்கள் கூறுகிறார்கள். ஆகவே இது பேதுருவின் சுவிசேஷம் என்று வர்ணிக்கப்படுகிறது. இந்நூலை ரோமாபுரியிலிருந்து கி.பி.65-66க்கும் இடையில் எழுதியிருக்கலாம்.

மனுஷகுமாரனாகிய இயேசு மனித உருவம் எடுத்து உலகிற்கு வந்த தேவகுமாரன் என்று எழுதுகிறார். இயேசு செய்த அற்புதங்கள் சிறப்பாய் எழுதப்பட்டுள்ளன.

இந்த நற்செய்தி நூலில் பாதி அளவுக்குக் கடைசி வாரத்தில் எருசலேமில் இயேசு இருந்ததைப் பற்றி குறிப்பிடப்படுகிறது. துவக்கத்திலிருந்தே இயேசுவின் மரணத்தைப் பற்றி உறுதியாகக் கூறப்பட்டுள்ளது. கெத்சமனே தோட்டத்தில் அவரைப் பிடிக்க ஒரு கூட்ட மக்கள் வரும் போது அவர் எதிர்ப்பு ஒன்றும் தெரிவிக்கவில்லை. பாடுகளினூடே செல்ல அவர் தயங்கவில்லை.

1. யோவானின் ஆயத்தப் பணிகள்	**1: 1 – 13**
2. இயேசுவின் கலிலேய ஊழியம்	**1:14 –9:50**
3. எருசலேம் பயணம்	**10:1 – 52**
4. பாடுபட்ட வாரம்	**11 – 15 அதி.**
5. உயிர்த்தெழுதலும், பரமேறுதலும்	**16 அதி.**

முன்னுரைக்கப்பட்ட தீர்க்கதரிசி

திட்டத்தின்படி வந்து, சித்தத்தை செய்து, தாழ்மையாய் வாழ்ந்த யோவானைப் போல என்னை அர்ப்பணிக்கிறேன், ஆண்டவரே.

பாவம் செய்ததினால் தம்மை விட்டு விலகிச் சென்ற மனுக்குலத்தை மீட்க தேவன் ஒரு திட்டத்தை வகுத்தார். அது தீர்க்கதரிசிகளின்மூலம் முன்னுரைக்கப்பட்டது. இப்போது அந்தத் திட்டம் நிறைவேற துவங்கியது.

திட்டத்தின்படி வந்தவன் (வச.1-4):- கர்த்தருக்கு வழியை ஆயத்தம் செய்வதற்காக அனுப்பப்பட்ட யோவானின் பிறப்பைப் பற்றி ஏசாயாவும், மல்கியாவும் முன்னுரைத்திருக்கிறார்கள். இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடையேயுள்ள சுமார் 400 ஆண்டுகளை இருண்ட காலம் என்று குறிப்பிடுகிறார்கள். ஏனெனில் வேதத்தைக் கற்றுக் கொடுக்கும் ஆசாரியர்களோ, நல்வழிப்படுத்தும் தீர்க்கதரிசிகளோ அப்போது இல்லை. ஆகவே மக்கள் தங்கள் மனம் போன போக்கிலே வாழ்ந்து புறமதத்தினரின் முறைமைகளைப் பின்பற்றி வாழ்ந்தார்கள். தேவ வார்த்தைக்கு மக்களை ஆயத்தப்படுத்துவதற்காக யோவான் வந்தான். தேவன் நமக்கென்று வைத்திருக்கும் திட்டத்தை அறிந்து அவருக்காக வாழ வேண்டும்.

சித்தத்தைச் செய்தவன் (வச.5):- பாவத்திலிருந்து மக்களை மனந்திரும்பச் செய்வதே தேவனுடைய நோக்கம். மக்களை தேவனுக்கு நேராகத் திருப்புவதே யோவானின் முக்கிய பணி. அதற்காக யோவான் செய்த பிரசங்கம் கடுமையானதாக இருந்தது (மத்.3:5-8). சூழ்நிலைக்கேற்றவாறும், மக்களுக்கேற்றவாறும் தேவ செய்தியை நாம் மாற்றுவோமானால் தேவ சித்தத்தை நிறைவேற்ற முடியாது.

தாழ்மையாய் வாழ்ந்தவன் (வச.6-8):- தேவ பிள்ளைகள் வாழ்வில் தாழ்மை காணப்பட வேண்டியது அவசியம். யோவான் மிகவும் தாழ்மை உள்ளவனாயிருந்தான். **உடை** - யோவானின் உடை பழைய ஏற்பாட்டுக் காலத்து தீர்க்கதரிசிகளின் உடையாகும் (2 இரா.1:8) **உணவு** - வெட்டுக்கிளி என்பது ஒரு பூச்சியினத்தைச் சேர்ந்த, உலர்ந்து போன வெட்டுக்கிளிகளாகும். ஒரு துறவியைப் போன்று எளிய உணவை உண்டு வாழ்ந்தான். **ஊழியம்** - தன்னையோ, தனது பணியையோ யோவான் ஒருபோதும் பெருமையாக எண்ணவில்லை.

தேவனே உம் சித்தம் செய்ய என்னைத் தாழ்த்தி அர்ப்பணிக்கிறேன். என்னை ஏற்றுக்கொள்ளும். ஆமென்.

இயேசுவின் ஊழியத் துவக்கம்

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குக் கற்றுத் தாரும் தேவனே.

யோவானைப் பற்றி மிகச் சுருக்கமாகக் கூறி விட்டு, இயேசுவின் ஊழியத்தைப் பற்றி மாற்கு துவக்குகிறார்.

யூத முறைமை பின்பற்றப்பட்டது (வச.9):- புற மதத்தினர் யூத மார்க்கத்திற்குள் வரும்போது அவர்கள் செய்ய வேண்டிய சுத்திகரிப்பின் முறைமைகள் பின்பற்றப்பட்டன. அவ்வாறே ஆசரிப்புக் கூடாரத்திற்குள் செல்லும்போதும் அனைவரும் தங்கள் கை, கால்களைக் கழுவி விட்டுச் செல்ல வேண்டும். இந்தச் சுத்திகரிப்பு முறைமையே ஞானஸ்நானம் என்று மாறி விட்டது. யோவான் கொடுத்த ஞானஸ்நானம் மனந்திரும்புதலுக்கேற்றதாகையால், இயேசு ஞானஸ்நானம் எடுக்கத் தேவையில்லை. பாவமுள்ள மக்களோடு தம்மை இணைத்துக் கொள்வதற்காகவே அவர் ஞானஸ்நானம் எடுத்தார்.

பரலோகத்திலிருந்து சாட்சி பகரப்பட்டது (வச. 10,11):- எந்தவொரு காரியமும் இரண்டு அல்லது மூன்று சாட்சிகளால் உறுதிப்படும் (உபா.19:13). அவ்வாறே இங்கு இயேசு ஞானஸ்நானம் எடுத்து கரையேறியதும் பிதாவும், பரிசுத்த ஆவியானவரும் சாட்சியிடுவதைக் காண்கிறோம். நம்முடைய ஊழியத்தைக் குறித்து நாமல்ல, மற்றவர்கள்தான் சாட்சி கொடுக்க முடியும். நேசகுமாரன் என்பது பிதாவுக்கு பிரியமானவர் என்பது மட்டுமல்ல, பிதாவுக்கு ஒரே பேரானவர் என்பதையும் காட்டுகிறது.

சோதனை வந்தது (வச.12-13):- மேன்மையான ஊழியத்தின் துவக்கம் அபசகுணமாக அமைவது போல் தோன்றுகிறது. 1. நல்ல மக்கள் நிறைந்த இடத்திற்கல்ல, வனாந்திரத்திற்கு இயேசு வழி நடத்தப்பட்டார். 2) பிசாசினால் நாற்பது நாட்களும் சோதிக்கப்பட்டார். இவ்விருகாரணங்களால் உலக மக்கள் இயேசுவின் ஊழியத்தை முதல் கோணல் முற்றிலும் கோணல் என்று தீர்ப்பளிக்கலாம். ஆனால் இந்த எண்ணத்தை முற்றிலும் நீக்கத்தக்க விதத்தில், ஆவியானவரால் வழி நடத்தப்பட்டார் என்று வச.12 கூறுகிறது. இது தான் ஊழியத்தில் மிக முக்கியமானதாகவும், வெற்றியைத் தருவதாகவும் அமைகிறது.

இயேசுவே, நீர் பிதாவுக்குப் பிரியமான குமாரனாக இருந்தது போல நானும் உமக்குப் பிரியமானவனா(ளா)க வாழ அருள்புரியும். ஆமென்.

ஜனவரி 17
ஞாயிறு

போராட்டத்தில் காக்கும் தேவன்

> ***தாவீது, தேவனால் சிநேகிதன் என்று அழைக்கப்பட்டான்; இயேசு நம்மையும் சிநேகிதர் என்றே அழைக்கிறார். அவர் எனக்கு சிநேகிதரா அல்லது வேறொருவரா?***

மூன்று முதல் ஏழு வரையுள்ள சங்கீதங்கள் விசுவாசியின் வாழ்க்கையில் ஏற்படும் போராட்டங்களை விவரிக்கின்றன.

தாவீதின் நெருக்கம் [வச.1-2]:- தாவீது தனக்கு எதிராய் பெருகியிருக்கும் தன் சத்துருக்களையும், விரோதிகளையும் பற்றி கூறுகிறார், எதிரிகளின் எண்ணிக்கை மிக அதிகம். நாம் கடவுளோடு நெருங்கும்போது இந்தப் போராட்டம் தீவிரமாகிறது. இரட்சிப்பின் மூலம் தேவ இராஜ்ஜியத்தைச் சேர்வோருக்கு இது உண்மையான போராட்டமாக அமையும்.

தாவீதின் நம்பிக்கை [வச.3-6]:- போராட்டத்தின் மத்தியில் நம்பிக்கையின்மை வரலாம். கர்த்தர் நம்பக்கம் இல்லை, அவர் உதவி செய்யமாட்டார் என்று சாத்தான் சொல்லுவான். நாம் தனிமையாக போராடுவது போல் இருக்கும். தாவீதின் நம்பிக்கை தேவன் கேடகம், தலையை உயர்த்துகிறவர். இந்தப் போராட்டத்தில் இறுதியில் உண்டாகும் விடுதலைதான் நமக்கு கிடைக்கப் போகும் அனுபவம். கர்த்தர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து செவி கொடுக்கிறார். கர்த்தர் தாங்குகிறார். ஆகவே நான் பயப்படேன் என்பது நமது நம்பிக்கை ஆகட்டும்.

தாவீதின் விண்ணப்பம் [வச.7-8]:- போராட்ட நேரத்தில் கர்த்தாவே எழுந்தருளும், என் தேவனே என்னை இரட்சியும் என்று விண்ணப்பிக்க வேண்டும். இரட்சிப்பு கர்த்தருடையது என்பதை உணர்ந்து இறுதி ஜெயத்தை நோக்குவோமாக. இவை எல்லாவற்றிலேயும்... மரணமானாலும், ஜீவனானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும்... ஜெயங் கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோம் - ரோமர் 8:37,38. பவுல் தான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல் விரும்பாத தீமையையே செய்கிறேன் என்று தன்னுடைய போராட்டத்தை கூறுகிறார். உள்ளம் என்ற போர்க்களத்தில் நன்மைக்கும், தீமைக்கும் நடக்கும் இந்த போராட்டம் மிகப் பழமையானதாக இருக்கலாம். ஆனால் இவைகளை தாண்டி செல்ல ஆண்டவர் நமக்கு பெலனளிக்கிறார் என்பதை ஒருநாளும் நாம் மறந்து விடக் கூடாது.

ஆண்டவரே, எங்கள் நெருக்கத்தின் மத்தியில் உம்மீது நம்பிக்கை வைத்து, நீர் தரும் வெற்றியை அனுபவிக்க உதவி செய்யும். ஆமென்.

மாற்கு 1:14–20

பரந்த எண்ணம் கொண்ட இயேசு

நாம் சில நேரங்களில் நாம் விரும்பியவாறு மற்றவர்கள் செய்ய வேண்டும் என்று எண்ணுகிறோம். அப்படியிருக்க ஊழியத்தை அவர் விரும்புகிற வண்ணம் நாம் செய்ய வேண்டாமா?

இயேசு செய்த ஊழியம் நம் யாவருக்கும் முன்மாதிரியாக உள்ளது. இயேசுவின் மாதிரியைப் பின்பற்றினால் ஊழியம் பெருகும். மக்கள் மனந்திரும்புவார்கள் இறுதியில் தேவ நாமம் மகிமைப்படும்.

ஊழியத்தைத் தொடர்ந்தார் (வச.14,15):- யோவான் ஏரோது மன்னனால் சிறையிலடைக்கப்பட்டான். மக்களை மனந்திரும்பச் செய்யும் ஊழியம் நின்று போனது போல் இருந்தாலும், இயேசு அந்தப் பணியைத் தொடருகிறார். அவர் மனந்திரும்புதலைப் பற்றியும் தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பற்றியும் போதித்தார். இயேசு விட்டுச்சென்ற பணியை இன்றைக்குப் பலர் செய்கிறார்கள். அதில் பெரும்பான்மையோர் மாறுபட்டவர்களாகச் செய்வது வேதனைக்குரியதல்லவா!

சீஷர்களை அழைத்தார் (வச.16-18) :- இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்ற தான் ஒருவராகவே அனைத்தையும் செய்ய வேண்டுமென இயேசு எண்ணாமல், சாதாரணமானவர்களையும் அதில் ஈடுபட வைக்கிறார். மீன் பிடித்துக்கொண்டிருப்பவர்களை இயேசு தம்மோடு ஊழியப் பணியைச் செய்வதற்கு அழைத்தார். எந்த வேலையும் செய்யாமல், சோம்பேறிகளாய் இருப்பவர்களை தேவன் பயன்படுத்துவதில்லை. கிதியோனை அழைத்தபோது அவன் ஆலைக்கு அருகில் கோதுமையை போரடித்துக் கொண்டிருந்தான் (நியா.6:11). மோசே ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான் (யாத்.3:1,2). நம் ஒவ்வொருவரையும் வேறுவேறு பணிக்கென தேவன் அழைத்திருக்கிறார்.

ஊழியம் விரிவடைந்தது (வச.19,20):- முதலில் இரண்டு பேரை அழைத்தவர் இதுவே போதும் என்று எண்ணாமல் வேறு இரண்டு பேரையும் அழைத்தார். சீமோன்–அந்திரேயா, யாக்கோபு-யோவான் என்று சகோதரர்களாக அழைத்தார். பிற்பாடு இரண்டு இரண்டு பேராக இயேசு அனுப்பும்போதும் இதே விதமாகத் சென்றனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றாகச் சென்றால் ஊழியத்தை ஒருமனதோடு செய்ய முடியும். இயேசுவின் ஊழியத்தில் இந்த விரிவாக்கம் நிதானமாகவே சென்றது.

ஆண்டவரே, நீர் விரும்புகிற வண்ணம் நான் உமது பணியைச் செய்ய பெலன் தாரும். ஆமென்.

மாற்கு 1:21–28

செய்ய வேண்டியவை

> குயவனின் கையிலுள்ள களிமண்ணைப் போல ஆண்டவரே உம் கரத்தில் என்னைத் தருகிறேன்.

நாம் விரும்புகிற வண்ணம் ஊழியத்தைச் செய்வதை விட கர்த்தர் விரும்புகிறபடி செய்ய வேண்டும். பவுல் தாம் அழைக்கப்பட்டபோது நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டாரல்லவா (அப்.9:6).

போதிப்பது (வச.21,22):- இயேசு எந்த ஊருக்குச் சென்றாலும் அங்கிருக்கும் ஜெபாலயத்தில் போதிப்பது வழக்கம். யூதர்களது முறைமையின்படி போதனை ஜெப ஆலயத்தில்தான் செய்யப்பட வேண்டும். அவ்வாறே இயேசு போதித்தார். அவர் போதிக்கும்போது அதிகாரமுடையவராகப் போதித்தார். வேதபாரகர் போதிக்கும்போது, முற்பிதாக்கள் மற்றும் தீர்க்கர்கள் சொன்னவைகளை மேற்கோள்காட்டி பேசுவார்கள். ஆனால் இயேசு யாரையும் மேற்கோள் காட்டாமல் தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பற்றி அதிகாரத்தோடும், உறுதியாகவும் பேசினார்.

பிசாசின் பிடியிலிருந்து விடுவிப்பது (வச.23-25):- இயேசு தம்முடைய சீஷர்களை ஊழியப் பணிக்கென்று அனுப்பும் போது அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அந்த அதிகாரத்தைக் கொண்டு மக்களை பாவத்திலிருந்து மட்டுமல்ல, பிசாசின் பிடியிலிருந்தும் விடுவிக்க அனுப்பினார். எல்லோராலும் பிசாசுகளைத் துரத்த முடியாது (அப்.19:13-16). இயேசுவின் ஊழியத்தில் தேவ இராஜ்ஜியத்தைப் போதிப்பதே முதன்மையாயிருந்தது. அற்புதங்கள் செய்வதும் பிசாசுகளைத் துரத்துவதும் போதிக்கும் பணிக்கு உறுதுணையாயிருந்தவையாகும்.

மனித பாராட்டை விரும்பாமலிருப்பது (வச.26-28):- பிசாசு இயேசுவை "நீர் தேவனுடைய பரிசுத்தர்" என்று சாட்சி பகர்ந்தபோது, "நீ பேசாமல் இவனை விட்டுப் போ" என்று அதட்டினார். அவருடைய கீர்த்தி கலிலேயா நாடெங்கும் பரவியது. இயேசு இப்படிப்பட்ட சாட்சிக்கும், பேர் பிரஸ்தாபத்திற்கும் மயங்குகிறவரல்ல. எப்போதெல்லாம் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்டனவோ, உடனே அந்த இடத்தை விட்டு புறப்பட்டுப் போய் விடுவார். மனிதப் பாராட்டு களிலும், ஊழிய வெற்றிகளிலும் மயங்கிப் போய் பலர் தங்கள் ஊழியத்தையே இழந்து போயிருக்கின்றனர்.

> **பிதாவே, நீர் தந்திருக்கும் ஊழிய வாய்ப்புகளை உமக்கேற்றவாறு செய்து உம்மை மகிமைப்படுத்த உதவி செய்யும். ஆமென்.**

மாற்கு 1:29-34

சுகம் தருபவர்

> சர்வ வல்லமையுள்ள தேவனே உம்முடைய வல்லமையுள்ள செயல்களுக்காய் நன்றி.

இயேசு அற்புதவிதமாக மக்களைச் சுகமாக்கினதைப் பற்றி இன்றையப் பகுதியில் காண்கிறோம். இயேசு போதனையோடு கூட அற்புதங்களையும் செய்தார்.

தனிநபர் சுகம் (வச.29,31):- பேதுருவின் மாமியை இயேசு சுகமாக்குகிறார். இதன் பின்னணி என்னவென்பதை நாம் உற்று நோக்கினால் சில உண்மைகளை அறிந்து கொள்ள முடியும். 1) பேதுரு தன் நண்பர்களான யாக்கோபையும் யோவானையும் அவர்களோடு இயேசுவையும் ஜெபாலயத்திலிருந்து தன் வீட்டிற்கு அழைத்து வந்தான். இச்செயல் நாம் பின்பற்றுவதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. நாமும் இயேசுவை நம் உள்ளம் என்னும் இல்லத்திற்கு அழைத்து வர வேண்டும். இது என்னே சிலாக்கியம்! ஒருநாள் பேதுருவின் படகில் ஒரு பயணியைப் போன்று ஏறியவர் இப்போது அவனது தலைவராக மாறிவிட்டார் (லூக்.5:1-11). 2) இயேசுவிடம் மாமியின் வியாதியைப் பற்றி கூறினார்கள். அவளது கையைப் பிடித்து தூக்கி விட்டதும் ஜுரம் அவளை விட்டு உடனே போய் விட்டது. இந்த மூன்று வசனத்தில் உடனே என்ற வார்த்தை மூன்று முறை வருகிறது. ஒரு தனி நபருக்காக இயேசு சென்று சுகப்படுத்தியதில் பேதுருவுக்கும் அவன் நண்பர்களுக்கும் முக்கிய பங்கு உண்டு.

பலரது சுகம் (வச.32-34):- ஓய்வுநாளில் சுகமாக்கக் கூடாது என்ற சட்டத்தை மக்கள் மதித்ததினால் மாலை ஆறு மணிக்குப் பின் இயேசுவிடம் வந்தார்கள். இதற்கு முந்திய நிகழ்ச்சியில் இயேசு சுகவீனமானவரிடம் சென்றார். இங்கு மக்கள் அவரைத் தேடி வந்தனர். ஜெபாலயத்தில் பிசாசு பிடித்திருந்தவனை விடுவித்ததையும், பேதுருவின் மாமி உடனே சுகமானதையும் கேள்விப்பட்ட இந்த மக்கள் தாங்கள் வீட்டிலிருந்த சுகவீன மானவர்களைக் கொண்டு வந்தனர். வியாதிகள் பிசாசினால் வருகிறது என்றும் சாபங்களினால் வருகிறதென்றும் மக்கள் எண்ணினர். இயேசு எவ்வித பாரபட்சம் பாராமல் அனைவரையும் சுகமாக்கினார். இயேசுவிடம் பாரபட்சம் இல்லை. நான் எப்படி?

> வல்லமையுள்ள தேவனே, என்னிடமுள்ள சுகவீனங்களை நீக்கி என்னை ஆரோக்கியப்படுத்தும். ஆமென்.

எனது முன் மாதிரி

நாம் நமக்கு பிரியமானதைச் செய்ய, நண்பர்கள், குடும்பத்தினருடன் நிறைய நேரத்தை செலவிடுகிறோம். ஆனால் ஆண்டவருடைய காரியங்களுக்கு?

இயேசுவிடமிருந்து நாம் அனைத்து காரியங்களையும் கற்றுக்கொள்ளலாம். இன்று நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வசனங்களில் இயேசுவின் முன்மாதிரி என்னவென்பதைக் காண்கிறோம்.

தனித்து சென்ற இயேசு (வச.35):- தம் மூலம் அற்புதங்கள் நடைபெறுகின்றன. மக்கள் தேடி வருகின்றனர். உறுதுணையாக சீஷர்கள் தம்மோடு இருந்தனர். இவ்வளவு இருந்தும் இயேசு தனித்து சென்று ஜெபிப்பதை மறக்கவில்லை. அதிகாலை இருட்டோடு என்பதை அதிகாலை நான்கு மணி என்று வேத வல்லுனர்கள் கூறுகின்றனர். பலர் தாங்கள் வேலைகளில் அதிகமாக ஈடுபட்டு தேவனோடு தனிமையில் நேரம் செலவழிப்பதை மறந்து விடுகின்றனர் அல்லது விட்டு விடுகின்றனர்.

தேடப்பட்ட இயேசு (வச.36,37):- பேதுருவும், வேறு சில சீஷர்களும் எழுந்து பார்த்த போது, அவர் அங்கே இல்லை. ஆகவே அவரைத் தேடி வந்தனர். அப்போது நன்கு விடிந்து விட்டது. நேற்று இரவில் நடைபெற்ற நிகழ்ச்சி, இயேசுவை அதிகமாக பிரபல்யப்படுத்திவிட்டது. ஆகவே எல்லாரும் உம்மைத் தேடுகிறார்கள் என்று சீஷர்கள் சொன்னார்கள். தாம் பலரால் விரும்பப்படுகிறோம் என்பதை அறிவதில் இயேசு அதிகம் ஆர்வம் கொண்டு, மக்கள் கூட்டத்தோடு இருக்கவும் விரும்புவார் என்று சீஷர்கள் எண்ணிருக்கக்கூடும்.

நோக்கத்தை விட்டுவிடாத இயேசு (வச.38,39):- ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கோ, நாட்டிற்கோ அல்ல, உலக மக்கள் அனைவருக்காகவும் இயேசு இவ்வுலகிற்கு மனிதனாக வந்தார். ஆகவே ஒரே இடத்தில் இருந்து பணியாற்ற விரும்பாமல், பல ஊர்களுக்குச் சென்று தேவனுடைய இராஜ்யத்தைப் பிரசங்கிக்கும் நோக்கத்தோடு இருந்தார். புகழோ, பெயரோ இயேசுவின் நோக்கத்தைத் தடுத்து நிறுத்தவில்லை. பேரும், புகழும் விரைவில் மறைந்து விடக் கூடியவை. இதனால் பலர் மிக விறுவிறுப்பாகவும், ஆரவாரமாகவும் ஆரம்பித்து, பாதி வழியிலேயே நின்று விடுகின்றனர்.

கர்த்தாவே, உலக காரியங்களை பெரிதாக நினைக்காமலும் உம்மை நான் மறவாமலிருக்கவும் எனக்கு உதவி செய்யும். ஆமென்.

மாற்கு 1:40–45

ஒதுக்கப்பட்டவர்கள்

தேவனே, உம் இரத்தத்தால் என்னைக் கழுவி தேவ இராஜ்ஜயத்திற்கு என்னை பாத்திரவானாக்கும்.

அன்று குஷ்டரோகம் சுகமாக்க முடியாத வியாதியாக கருதப்பட்டது. யூதர்கள் சாபம் என்றே எண்ணினர். இன்றையப் பகுதியில் குஷ்டரோகி ஒருவன் சுகமானதைப் பற்றி வாசிக்கிறோம்.

தீட்டுள்ளவன் [வச.40,41]:- பழைய ஏற்பாட்டுக் காலத்தில் குஷ்டரோகம் வந்தவர்கள் தீட்டுள்ளவர்களாக எண்ணப்பட்டனர். அவர்கள் சமுதாயத்தோடும், குடும்பத்தோடும் வாழ முடியாது. சாகும் வரை தனித்தே வாழ வேண்டும். லேவி. 13ல் அன்று வெளிப்புறத்தில் குஷ்டரோகத்தைக் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது. இன்று குஷ்ட ரோகத்தைப் போன்று அரித்துக் கொண்டிருக்கும் பாவப் பழக்க வழக்கங்கள் நம்மிடம் இருக்குமானால் நாமும் தீட்டுள்ளவர்கள்தான்.

சுத்தமானவன் [வச.42]:- குஷ்டரோகமுள்ளவன் எதையாவது தொட்டாலோ அல்லது அவனை வேறு யாராகிலும் தொட்டாலோ தீட்டாக எண்ணப்படும். இந்த மனிதன் இயேசுவின் தெய்வத் தன்மைக்கு மதிப்பளித்து முழங்காற்படியிட்டு அவரது வல்லமையை அறிக்கையிட்டான். இயேசு அவனைத் தொட்டு சுகப்படுத்தினார். உடனே அவன் சுகமானான். அவன் சுத்தமுள்ளவனானான். இன்று நம் இருதயம் எவ்வகை தீட்டுகளினாலும் கறைபடிந்திருந்தாலும் இயேசு தமது இரத்தத்தால் நம்மை சுத்திகரிக்கிறார்.

பிரசித்தம் செய்தவன் [வச.43-45]:- வச.43.44ல் மூன்று கட்டளைகளை இயேசு சுகமான குஷ்டரோகிக்குக் கொடுத்தார். 1) சுகமான விதத்தை ஒருவருக்கும் சொல்லாதே. 2) யூத முறைமையின்படி குஷ்டரோகி தான் சுகமானதை ஆசாரியனிடம் காட்ட வேண்டும். 3) சுகமானதற்கு சுத்திகரிப்பு முறைமைகளைச் செய்ய வேண்டும். ஆனால் இந்த மனிதனிடம் ஒருவருக்கும் சொல்லாதே என்ற போதிலும் பிரசித்தம் பண்ணியதால் இயேசுவின் ஊழியம் அந்தப் பட்டணத்தில் தடைபட்டது (வச.45). பேச வேண்டாதவைகளைப் பேசி தேவ நாமத்துக்கு இழுக்கை உண்டாக்கக் கூடாது. அதே நேரத்தில் சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்லாமல் இருக்கவும் கூடாது.

கர்த்தாவே, என்னிலுள்ள அசுத்தங்களை நீக்கி, என்னைப் பரிசுத்தமாக்கி அருளும். ஆமென்.

விசுவாசமும் அற்புதமும்

> எனக்காக யாவையும் செய்து முடிக்கிறவரே. உம்மையே விசுவாசித்து அற்புதத்தை பெற்றுக் கொள்ள உதவி செய்யும். ஆண்டவரே.

கேள்விப்பட்டு வந்தவர்கள் [வச.1,2]:- இயேசு சுகமாக்குவதைக் கேள்விப்பட்ட கப்பர் நகூமின் மக்கள் அவர் மீண்டும் வந்திருக்கிறார் என்பதை அறிந்து திரளாகக் கூடி வந்தனர். தாங்கள் வியாதியினின்று சுகமடையவும், பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்படவும் வந்தார்கள். இயேசுவால் தங்களுக்கு உதவி செய்ய முடியும் என்பதை பலர் அறிந்திருந்தாலும், இயேசுவிடம் வர தயக்கம் காட்டுகிறார்கள்.

சுகத்திற்காக தூக்கி வந்தவர்கள் [வச.3-5]:- மனிதர்களால் கைவிடப்பட்டுப் போன திமிர்வாதக்காரனின் நண்பாகள் இயேசுவிடம் சுகத்தைப் பெறலாம் என்ற விசுவாசத்தோடு வந்தார்கள். அவர்களது விசுவாசம் சோதிக்கப்படும்படியாக உள்ளே நுழைய முடியாதபடி மக்கள் கூட்டமாக இருந்தனர். அவர்கள் தங்கள் விசுவாசத்தில் தளராமல் மேற்கூரையைப் பிரித்து உள்ளே இறக்கினார்கள்.சுயநலமிக்க உலகத்தில் பிறருக்காக யார் சிரமம் எடுப்பார்கள்?

குறை காண வந்தவர்கள் [வச.6-9]:- வியாதியுள்ளவர்களும், பிசாசு பிடித்திருந்தவர்களும் விடுதலையைப் பெற்றார்கள். இயேசுவை குறைகாணும்படியாக திரண்டு வந்த வேதபாரகர்கள் இவர்களால் சுகம் கொடுக்க முடியாது என்றாலும் சுகத்தை கொடுக்கக் கூடிய இயேசுவை விமர்சிக்காமல் இருந்திருக்கலாம். இத்தகையக் கூட்டத்தார் இன்றும் நம் திருச்சபைகளில் உண்டல்லவா.

சுகத்தோடு சென்றவன் [வச.10-12]:- நம்பிக்கையற்றவனாய், உடலில் எவ்வித உணர்ச்சியும் இல்லாதவனாய் சுமந்து கொண்டு வரப்பட்டவனிடம் இரண்டு காரியங்களைச் செய்யும்படி இயேசு கூறினார். 1) உன் படுக்கையை எடுத்துக் கொள், 2) உன் வீட்டுக்குப் போ. உடனே சுகம் பெற்று தன் படுக்கையை எடுத்துக் கொண்டு சென்றான். இவனது சுகம் உடனேயும் முழுமையாகவும் கிடைத்தது. இவன் தான் சுகம் பெற்றவன் என்பதை பிறர் அறிய வேண்டுமென்பதற்காக அவனது படுக்கையை அவனே எடுத்துக் கொண்டு செல்ல சொன்னார்.

தேவனே, நீர் அனைத்து வியாதிகளையும் சுகமாக்க வல்லவராய் இருப்பதற்காக உம்மைத் துதிக்கிறேன். ஆமென்.

கோபம்.... பாவம்

> கர்த்தர் தமக்கு பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார். கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள நான் அவருக்கு பிரியமாயிருக்கிறேனா?

4ம் சங்கீதத்தை இரவு நேர தியான சங்கீதம் (Evening Psalm) என்பார்கள். இதில் சங்கீதக்காரன் சமாதானத்துடன் படுத்து உறங்குவேன். என்று வச.8ல் கூறுகிறார்.

கோபம்-பாவம் :- சங்.4:4ல் நீங்கள் கோபம் கொண்டாலும், பாவம் செய்யாதிருங்கள். கோபத்தை நெகிழ்ந்து உக்கிரத்தை விட்டுவிடு; பொல்லாப்பு செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம் - சங்.37:8. சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது எபே.4:26. எந்த கோபமும் நியாயமானதாயிருக்க வேண்டும். ஆண்டவர் இயேசுவும் ஆலயத்திற்கு வெளியே இருக்க வேண்டியவைகள் உள்ளே இருப்பதைக் கண்டு கோபித்தார் - மத்.21:13,14.

படுக்கையில் - பேசிக் கொண்டு :- சங்.4:4ல் - உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக் கொண்டு அமர்ந்திருங்கள். இரவு நேரங்களில் தேவனோடு பேசிக் கொண்டு தேவ சமாதானத்தை அனுபவிக்க வேண்டும். முறுமுறுப்புகளின்றி தேவனை துதிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து, நன்றி சொல்ல வேண்டும். அப்பொழுது நாம் படுத்துக் கொண்டு தேவ பிரசன்னத்தில் சுகமாய் நித்திரை செய்ய முடியும், காலையில் தேவ சாயலில் எழுந்திருக்க முடியும்.

அமர்ந்திருங்கள் - நம்பிக்கையாயிருங்கள்:- நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறியுங்கள் - சங்.46:1. கோபத்தை நெகிழ்ந்து தேவனை அறிய உதவுவதுதான் அமைதியாக அமர்ந்திருத்தல். நீங்கள் ஸ்தோத்திர பலிகளை (எபி.13:15) செலுத்தி கர்த்தர்மேல் நம்பிக்கையாய் இருங்கள். உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே நம்மை சுகமாய் வாழ செய்ய முடியும். இதனை தாவீது அழுத்தம் திருத்தமாய் சொல்லுகிறார். நம்முடைய வாழ்வில் அவருக்கு இடம் கொடாவிட்டால் இந்த உலகத்தின் போராட்டங்களை நம்மால் மேற்கொள்ள முடியாது. எனவே நாம் யாரை சார்ந்து வாழ்கிறோம் என்பது முக்கியம்.

> ஆண்டவரே, சமாதானத்தோடே படுத்துக் கொண்டு நித்திரை செய்ய எனக்கும் உதவி செய்யும், ஆமென்.

ஊழியத்தின் தன்மை

கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும் உமது சமூகத்தில் ஏற்புடையதாக இருப்பதாக!

இயேசுவின் ஊழிய நிகழ்ச்சிகளைக் குறித்து வாசித்து வருகிறோம். அவர் தமது ஊழியத்தில் செய்தவைகளில் சிலவற்றை இப்பகுதியில் காண்கிறோம். இயேசுவைப் போன்று செயல்படுபவர்கள் எத்தனை பேர் நம்மிடையே உண்டு?

போதித்தார் (வச.13):- போதிப்பதின்மூலம் பிரபலமடைவதைவிட அற்புதங்கள் செய்வதன் மூலம் இயேசுவின் பெயர் மிகவும் பிரபலம் அடைந்தது. தமது ஊழியம் இதில் நல்ல வெற்றியடைகிறது என்பதற்காக இயேசு போதிக்கும் பணியை விட்டுவிடாமல், அதையே முதன்மையாக வைத்திருந்தார். எப்போதெல்லாம் மக்கள் கூடினார்களோ, அப்போதெல்லாம் தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பிரசங்கித்தார். சரியான போதனைகள் இல்லாததினால் மக்கள் வழித் தவறிப் போகின்றனர். இதற்கு ஏலியின் பிள்ளைகள் நமக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர் (1 சாமு.3:13).

அழைத்தார் (வச.14):- வேறுபட்ட பண்புகளையும், பின்னணியங்களையும் கொண்ட மக்களை இயேசு தமது பணிக்கு அழைத்தார். சமுதாயத்தில் நல்ல மதிப்பு ஆயக்காரர்களுக்கு எப்போதும் கிடையாது. அதிலும் மத்தேயுவுக்கு முற்றிலும் கிடையாது. ஏனெனில் யூதனாயிருந்து கொண்டு ரோம அரசாங்கத்திற்கு வரியை வசூலித்துக் கொடுப்பவனாக இருந்தான். அப்படிப்பட்டவனை இயேசு அழைத்தார். இன்று நாம் எப்படிப்பட்டவர்களாயினும் நம்மையும் அழைக்கிறார்.

போஜனம் செய்தார்(வச.15-17):- பரிசேயர்களும், வேதபாரகர்களும் பொதுவாக பொது மக்களோடு சேர மாட்டார்கள். சேர்ந்தால் தாங்கள் தீட்டுள்ளவர்களாவோம் என்பதாலும், ஆயக்காரர்கள் ஏற்கெனவே நன்மதிப்பைப் பெறாதவர்கள் என்பதாலும் இப்படிப்பட்ட மக்களோடு சேரவோ, அவர்களோடு உணவருந்தவோ மாட்டார்கள். ஆனால் இயேசு மக்களது தகுதியின்மையை நோக்காமல் அவர்களோடு உணவருந்தினார். அவர் மனுக்குலம் அனைத்துக்கும் இரட்சகராக வந்தார். யாரையும் தள்ளி விடுகிறவரல்ல அவர்.

ஆண்டவரே, நான் உமக்காகச் செய்யும் ஊழியங்கள் யாவும் உம்முடைய எதிர்பார்ப்புக்கு ஏற்றவையாக இருக்க உதவி செய்யும். ஆமென்.

மாற்கு 2:18-22

வலியுறுத்திக் கூறும் இயேசு

> ஆண்டவரே, உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு என் கண்களைத் திறந்தருளும்.

ஆசாரங்களைக் கூறினார் (வச.18):- பரிசேயர்கள் தாங்கள் பக்தி முறைமையின்படி வாரம் இரண்டு முறை உபவாசம் இருப்பார்கள் (லூக்.18:32). இந்தப் பழக்கம் மோசே கொடுத்த சட்டத்தில் இல்லை. முதலாம் நூற்றாண்டில் யூத மதத்தில் இதை ஒரு பழக்கமாக மாற்றி விட்டனர். யோவானின் சீஷர்கள் உபவாசிக்கிறார்கள். உம்முடைய சீஷர்கள் உபவாசிக்கவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறி பிளவை ஏற்படுத்த முயற்சித்தனர். மனிதக் கோட்பாடுகளைக் கொண்டு சமுதாயத்தை, திருச்சபையைப் பிளவுபடுத்தும் சக்திகளுக்கு நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

அவசியத்தைக் கூறினார் (வச.19,20):- இந்த வார்த்தைகளைக் கூறுவதின் மூலம் இயேசு தம்முடைய மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதல் ஆகியவற்றை மறைமுகமாகக் கூறுவதை நாம் அறியலாம். யூத ரபிமார்கள் திருமணத்திற்குப் பின் ஒரு வாரத்திற்கு நடைபெறும் சிறப்பு விழாவிற்கு புது மண தம்பதிகள் திறந்த ஒரு வீட்டில் இருப்பார்கள். அப்போது நண்பர்கள், உறவினர்கள் வருவார்கள். மகிழ்ச்சியோடு இருப்பார்கள். அந்த வாரத்தில் உபவாசிக்கும் நாள் வந்தால், உபவாசத்தை விட மணவாளனோடு மகிழ்ச்சியாயிருப்பதே முக்கியம் என்று மாற்றிக் கொள்வார்கள். இந்நிகழ்ச்சியை இயேசு சுட்டிக்காட்டி இப்போது மணவாளன் (தாம்) சீஷர்களோடு இருக்கும்போது எவ்வாறு உபவாசிப்பார்கள். எப்போது உபவாசிப்பார்கள் என்பதற்குரிய விடையையும் கூறுகிறார்.

போதனைகளைப் பற்றி கூறினார் (வச.21,22):- பழைய துணி - புது துணி, புது திராட்சரசம் - பழைய துருத்தி ஆகிய இவ்விரு எடுத்துக்காட்டுகளைக் கொண்டு போதனைகளைப் பற்றி இயேசு விவரிக்கிறார். பழைய வஸ்திரம் என்பது பழைய நியாயப்பிரமாணமும், அதனைச் சார்ந்த பரிசேயரது போதனைகளுமாகும். புதிய வஸ்திரம் என்பது இயேசு போதிக்கும் போதனைகளாகும். இவ்விரண்டையும் நாம் இணைக்க முடியாது. ஏதாவதொன்றைத் தான் நாம் பின்பற்ற முடியும்.

> பிதாவே உம் வேதத்திலுள்ள வார்த்தைகளையே எப்போதும் மேன்மைப் படுத்தி பேச எனக்கு உதவி செய்யும். ஆமென்.

பதிலளிப்பவர்

> நாம் தேவனின் வார்த்தைக்கா? அல்லது உலகப் பெருமிதற்கா? எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம்?

பரிசேயர்கள் மத ஆசாரங்களைக் குறித்து மிக அக்கறையோடிருப்பது சரிதான் என்றாலும், அவர்களது சொல்லும் செயலும் வேறுபட்டிருப்பதை நாம் இங்கு காண முடியும்.

சீஷர்கள் செய்ததென்ன? [வச.23]:- வாற்கோதுமை விளைந்த நிலத்தின் வழியே போகையில் சீஷர்கள் தாங்கள் பசியை ஆற்றிக் கொள்ள சில கதிர்களைக் கொய்து தின்றார்கள். இது தவறல்ல. ஆனால் பரிசேயர்கள் குறைகாணும் நோக்கிலேயே இயேசுவின் பின்னாலே சென்று சிறிய பிரச்சனையைப் பெரிதுபடுத்தினார்கள்.

பரிசேயர்கள் கேட்டதென்ன? [வச.24]:- ஓய்வுநாளோடு தொடர்புடையவற்றில் யூத ரபிமார்கள் செய்ய வேண்டியவை, செய்ய வேண்டாதவை என்று பல சட்டங்களைக் கொண்டிருந்தனர். சீஷர்கள் பயிர்களைக் கொய்தது தவறல்ல. ஆனால் அதை ஓய்வு நாளில் செய்தது தான் தவறு என்று சுட்டிக்காட்டப்பட்டது. பயிர்களைக் கொய்தது அறுவடை செய்ததற்குச் சமம். நிமிட்டித் தின்பது தானியத்தைப் போரடிப்பதற்குச் சமம். பயிரைக் கொய்யும்போது வரும் உமியை ஊதுவது பதரை நீக்குவதாகும். தின்றார்கள் என்பது உணவை ஆயத்தம் செய்வதற்குச் சமம். இவை ஓய்வுநாளில் வேலை செய்வதற்குச் சமம். ஆகவே சீஷர்கள் செய்தது தவறு என்று பரிசேயர்கள் குற்றஞ்சாட்டினார்கள். எப்போதும் குறை காணும் மக்களுக்கு சிறு காரியம் கூட பெரிதாகத் தோன்றும்.

இயேசு சொன்னதென்ன? [வச.25-28]:- பரிசேயர்கள் பழைய ஏற்பாட்டை நன்றாகக் கற்றுத் தேர்ந்தவர்களாதலால், அவர்களிடத்தில் பழைய ஏற்பாட்டிலுள்ள நிகழ்ச்சி (சாமு. 21:6) ஒன்றை விளக்கிக் கூறி சீஷர்கள் செய்தது தவறு அல்ல என்றார். சட்டத்திட்டங்கள் அனைத்தும் மனிதனை நல்வழிப்படுத்துவதற்காக உண்டாக்கப்பட்டவை. ஓய்வுநாளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அன்பை விட்டுவிடக்கூடாதல்லவா (மத்.23:23). பிரச்சனையை உருவாக்குவதில் பலர் வல்லவர்களாயிருக்கிறார்கள் ஏன்?

ஆண்டவரே, பிரச்சனைகளைப் பெரிதுபடுத்தாமல், மனித அன்பை வெளிப்படுத்திக் காட்ட கிருபை செய்யும், ஆமென்.

எவற்றால் நிறைந்திருக்கிறோம்?

> **நாம் விசேஷங்களுக்கு செல்லும் போது நம்முடைய எண்ணங்கள் எல்லாம் அங்கு நடைபெறவிருக்கும் காரியத்தை குறித்தே சிந்தித்துக் கொண்டிருக்கும்.**

மனிதர் வெளிப்புறத்தைப் பார்ப்பார்கள். கர்த்தரோ நமது உள்ளத்தைப் பார்க்கிறார். இன்றையப் பகுதியில் சிலரது உள்ளம் எவற்றால் நிறைந்திருந்தது என்பதைக் காண்கிறோம்.

பல தரப்பட்ட மக்களால் நிறைந்திருந்த ஜெபாலயம் (வச.1,2):- ஜெபாலயத்தில் அங்கவீனமுள்ள ஒருவன் இருந்தான். இயேசுவும் அங்கு இருந்தார். அதே ஜெப ஆலயத்தில் குற்றஞ்சாட்டும் எண்ணத்தோடு மதத் தலைவர்களும் இருந்தனர். தேவனைத் தொழுதுகொள்ள அல்ல, தேவ பணியைச் செய்வதற்கும் அல்ல! இயேசுவிடம் குறை காணும் நோக்கத்தோடு வந்திருந்தனர். இன்றையத் திருச்சபைகளில் எப்படிப்பட்ட மக்களை நாம் காண முடிகிறது?

நன்மை செய்யும் எண்ணத்தால் நிறைந்திருந்த இயேசு (வச.3-5):- இயேசு இவ்வுலகில் வாழும் போது நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார் (அப்.10:34). நன்மை செய்யும் எண்ணம் தம்மைப் போல மதத் தலைவர்களுக்கு இருக்கிறதா என்று எதிர்பார்த்தார். கேட்கப்பட்ட கேள்விக்கு பரிசேயரால் பதிலளிக்க முடியவில்லை. அதற்கு முக்கிய காரணம் இயேசுவைக் கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத் தோடு அவர்கள் இருந்ததுதான். நன்மை செய்ய நாம் திராணியுள்ளவர்களாயிருக்கும்போது நன்மை செய்யாமல் இருக்கக் கூடாது.

கொலை வெறியால் நிறைந்திருந்த தலைவர்கள் (வச.6):- இயேசு நன்மையைச் செய்ததைத் தவிர வேறு ஒன்றும் தீமையையோ, சட்ட மீறலோ செய்யவில்லை. ஆனால் பரிசேயரும், ஏரோதியரும் (இருவரும் விரோதிகள். ஆனால் இப்போது கூடிக் கொண்டார்கள்) இயேசுவைக் கொல்ல வேண்டும் என்பதில் ஒன்று கூடித் திட்டமிட்டார்கள். ஏரோதியர்கள் என்பது பரிசேயரைப் போன்று மதவாதக் குழுவினர் அல்ல. யூதர்களில் ஒரு பிரிவினர் ஏரோது மன்னனையும், அவனது ஆட்சியையும் ஆதரித்தவர்கள் தான் இவர்கள். கொலை செய்ய திட்டம் தீட்டினது பத்து கற்பனைகளுக்கு எதிரானது.

நீதிபரராகிய கர்த்தாவே, உம் சிந்தைகளினால் என் உள்ளத்தை நிரப்பும். ஆமென்.

மாற்கு 3:7–19

இயேசுவின் வல்லமை

> **தேவ சித்தம் நிறைவேற என்னையும் ஒப்படைக்கிறேன், தேவ சித்தம் என் உள்ளம் பலமாக தொனித்திடுதே!**

இயேசுவின் ஊழிய நிகழ்வுகளை உற்று நோக்கினால் இயேசு ஓய்வின்றி, தொடர்ந்து செய்ததை நாம் அறியலாம். தேவ சித்தத்தைச் செய்வதே இயேசுவின் நோக்கமாக இருந்தது.

வியாதிகளைச் சுகமாக்கினார் (வச.7-9):- ஜெப ஆலயத்தில் தம்மைக் கொலை செய்ய வகை தேடுகிறார்கள் என்பதால் இயேசு உடனே தம் சீஷர்களோடு கடற்கரை பக்கம் சென்றார். மக்கள் திரளாக இயேசுவைத் தேடி வந்தனர். இவர்கள் சரீரச் சுகத்திற்காகவே தேடி வந்தனர். ஆயினும் இயேசு அவர்களைச் சுகமாக்கினார்.

பிசாசின் பிடியிலிருந்து விடுவித்தார் (வச.10-12):- அன்றைக்கு மக்கள் மத்தியில் மூட நம்பிக்கைகள் இருந்ததால் எளிதில் பிசாசினால் பிடிக்கப்பட்டு அலைக்கழிக்கப்பட்டார்கள். அசுத்த ஆவிகள் இயேசுவைக் கண்டவுடன் ஓடிப் போயின. அப்போது அவை செய்ததென்ன? 1) இயேசுவைப் பணிந்து - அசுத்த ஆவிகள் இயேசுவின் வல்லமைக்கு முன் நிற்க முடியாமல், அவருக்கு முன்பாக விழுந்தன. 2) அவைகள் ஒரே வார்த்தையில் இயேசுவைப் பற்றி சாட்சியளித்தன. அதாவது இயேசுவே மேசியா என்பதை அறிக்கையிட்டன. இயேசுவும் தம்மைப் பற்றி சொல்லாதபடிக்குக் கட்டளையிட்டு அவற்றை விரட்டினார்.

சீஷர்களைத் தெரிந்தெடுத்தார் (வச.13-19):- தமக்குச் சித்தமானவர்களை என்று வாசிக்கிறோம். லூக்கா சுவிசேஷத்தில் அவர் இரவு முழுவதும் ஜெபித்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (6:12). அப்படியானால் பிதாவின் சித்தத்தின்படி வழிநடத்தப்பட்டு தெரிந்தெடுத்தார். ஏனெனில் யாக்கோபின் பிள்ளைகளான 12 பேர்களால் இஸ்ரேல் என்னும் தேசம் உருவானது. அவ்வாறே இந்த 12 பேரைக் கொண்டு புதிய ஆவிக்குரிய சந்ததியை உருவாக்க இயேசு தெரிந்தெடுத்தார். வச.14,15ல் தெரிந்தெடுத்ததின் நோக்கங்களைக் காண்கிறோம். தேவன் நம்மைத் தெரிந்தெடுத்திருக்கிறார் என்றால் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் தான். அந்த நோக்கம் நிறைவேற தேவனோடு நாம் ஒத்துழைக்க வேண்டும்.

கர்த்தாவே, உம் வல்லமை இன்றும் மாறாமல் இருப்பதற்காக உம்மைத் துதிக்கிறேன். ஆமென்.

ஊழியப் பாதையில்.....

ஆண்டவரே, உமது பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதபடிக்கு என்னைக் காத்துக் கொள்ளும்.

தவறான எண்ணம் கொண்ட இனத்தார் (வச.20-22):- மதிமயங்கியிருக்கிறார் என்பதை பைத்தியம் பிடித்து விட்டது என்று பொருள்படுத்துகின்றனர் வேத வல்லுனர்கள். பிணியாளிகளைச் சுகமாக்கியது, ஜெபாலயங்களில் பிரசங்கித்தது, சீடர்களைத் தமக்கெனத் தெரிந்தெடுத்தது, தம்மைத் தேடி திரளான மக்கள் வருவது ஆகியவற்றால் இயேசுவுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று இனத்தார் கூறினர். இயேசுவின் ஊழிய வாழ்க்கையைப் பற்றி அவர்கள் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை. ஆகவே இப்படிப்பட்ட தப்பான எண்ணங்களைக் கொண்டிருந்தார்கள்.

சரியான விளக்கத்தைத் தந்த இயேசு (வச.23-30):- யூதர்களில் பிசாசைத் துரத்துகிறவர்கள் பலவித சடங்குகளையும் ஜெபங்களையும் செய்வார்கள். ஆனால் இயேசுவோ இவர்களைப் போன்று எந்தவித முறைமை-களையும் பின்பற்றாமல் ஒரு வார்த்தையினால் பிசாசுகளுக்குக் கட்டளை கொடுத்து விரட்டுகிறார். இயேசு தேவ வல்லமையினால் பிசாசுகளைத் துரத்தினார். ஆனால் பரிசேயரோ அதை பிசாசுகளின் தலைவனால் துரத்துகிறார் என்றனர். தேவ வல்லமையை உணர்ந்து அதற்குரிய மதிப்பை நாம் கொடுக்காமல் அதை பிசாசுகளுக்குக் கொடுப்பது பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசியதாகும்.

தேடி வந்த குடும்பத்தினர் (வச.31-35):- இயேசு நல்ல வருமானத்தைக் கொடுத்த தச்சுத் தொழிலை விட்டுவிட்டு வந்து விட்டார். இயேசுவைக் கொல்ல அரசியல் மற்றும் மதத் தலைவர்களது சதித் திட்டத்தால் ஆபத்து வந்து விடுமோ என்ற பயம். ஊழியத்தின் தேவைகளால் அவரது வழக்கமான உணவு நேரத்தைத் தவற விடுகிறார் ஆகிய காரணங்களே குடும்பத்தினர் இயேசுவைத் தேடி வருவதற்குக் காரணம் என்று வேத வல்லுனர்கள் கூறுகிறார்கள். இயேசு இவ்வுலகப் பந்தத்தைப் பற்றி பேசாமல் ஆவிக்குரிய உறவுகளைப் பற்றி பேசினார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

தேவனே, நான் ஆவியில் வளருவதோடு என் குடும்பத்தினரது ஆன்மீக வளர்ச்சிக்கு நான் என்னால் இயன்ற உதவியைச் செய்ய பெலன் தாரும். ஆமென்.

காலை ஆயத்தம்

> பத்து நரம்பு வீணையினாலும் பாட்டுக்களினாலும் நமது ஆண்டவரை துதிக்க பாட அழைக்கப்படுகிறோம்.

கர்த்தாவே காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்; காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி காத்திருப்பேன்.

அதிகாலை ஜெபம்: நம் ஆண்டவரும் இரட்சகருமான இயேசுகிறிஸ்து "அதிகாலையில் இருட்டோடே எழுந்து, புறப்பட்டு வனாந்திரமான ஓரிடத்திற்குப் போய் அங்கே ஜெபம் பண்ணினார்" (மாற்கு 1:35). சங். 5:3 ல் காலையிலே என்று இரண்டு முறை கூறப்படுவதால் காலை நேரத்தின் முக்கியத்துவம் புரியும். அதிகாலையில் என்னை தேடுபவர்கள் என்னைக் கண்டடைவார்கள். அதிகாலையில் நாம் ஆண்டவருக்கு நேரே வந்து ஆயத்தமாகிக் காத்திருக்க வேண்டும். அதிகாலை ஜெப நேரங்கள் நம் அன்றாட வாழ்வில் பெருகட்டும்.

வாயில் உண்மை:- பிரியமானவர்களே! நாம் மருத்துவரிடம் காய்ச்சல் ஏற்பட்டு சென்றால் பரிசோதிக்கும் மருத்தவர் வாயை திறக்க சொல்லி, நாக்கை நீட்ட சொல்லி பரிசோதிப்பார். வியாதிஸ்தரின் வாயை பார்த்தாலே வியாதியின் தன்மை மருத்துவருக்கு தெரிந்துவிடும். அவர்கள் வாயில் உண்மை இல்லை. அவர்கள் உள்ளம் கேடுபாடுள்ளது; பொய் பேசும் நாவு கர்த்தருக்கு அருவருப்பானது. அவரவர் வாயின் வார்த்தைகளுக்கு அவரவர் கணக்கு கொடுக்க வேண்டும். நம் நாவு எப்படி உள்ளது. தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழியா?

உம்மில் களிகூறுவார்களாக: சங். 5:11 கர்த்தரை நம்புகிறவர்கள் கர்த்தரில் அடைக்கலம் புகுந்தவர்கள்; மகிழ்ச்சியினாலே கெம்பீரிப்பார்கள். இயேசு கூறினார் என்னை நேசிப்பவன் என் கற்பனைகளை கைக்கொள்வான் என்று. ஆகவே விசுவாசத்தின் பிள்ளைகளாய் கீழ் படிதலை உடையவர்கள் மட்டுமே கெம்பீரித்து களிகூருவார்கள். நீர் நீதி மானை ஆசீர்வதித்து, காருணியம் என்னும் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்து கொள்வீர். உலகம் தரக்கூடாத சமாதானத்தினால் நம்மை நிறைத்து நம்முடன் என்றும் வருபவர் மரண பரியந்தமும் நம்மை களிகூறப்பண்ணுவார்.

ஆண்டவரே, நீர் விரும்புகிற வண்ணம் நான் உமது பணியைச் செய்ய பெலன் தாரும். ஆமென்.

யோசுவா

இப்புத்தகத்தின் நாயகனான யோசுவா எகிப்தில் பிறந்த அடிமை. இவர் மோசேயின் உதவியாளராக இருந்தவர். கானான் நாட்டை உளவு பார்க்கச் சென்ற 12 பேர்களில் ஒருவர். இதில் இவரும் காலேபும் மட்டும் தேவனை நம்பினர். இவரது இயற்பெயர் ஓசேயா - இரட்சிப்பு. இவரது பெயரை யோசுவா (யெகோவாவே இரட்சிப்பு) என்று மாற்றியமைத்தார்.

யூத பாரம்பரியத்தின்படி இந்நூலை எழுதியவர் யோசுவா (24:25). சில பகுதிகள் பிரதான ஆசாரியனான எலியேசர் அவரது மகன் பினேகாஸ் மற்றும் வேறு சிலரால் எழுதப்பட்டு யோசுவாவின் மறைவிற்குப் பின் சேர்க்கப்பட்டிருக்கலாம். இப்புத்தகத்தின் காலக்கட்டத்தைச் சரியாகக் கூற முடியாவிட்டாலும், கி.மு.1405முதல் யோசுவா மறைந்த கி.மு.1390 வரை என்று கணிக்கப்படுகிறது. யோசுவா கிறிஸ்துவைப் போன்றவர் **(Type of Christ)** என்று கணிக்கப்படுகிறார். இயேசு என்னும் கிரேக்கப் பெயரின் எபிரெயச் சொல் யோசுவா ஆகும்.

12 வரலாற்று நூல்களில் முதலில் அமைந்துள்ளது. வேதாகமத்தின் 5 ஆகமங்களையும் இஸ்ரவேலரின் வரலாற்று நூல்களையும் இணைக்கும் நூல் இது. யோசுவாவின் தலைமையின்கீழ், பல போர்க்களங்களைச் சந்தித்த இஸ்ரவேலர், பலமுமல்ல, எண்ணிக்கையுமல்ல, தேவன் பேரிலுள்ள நம்பிக்கையும் அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படிதலுமே வெற்றியைத் தரும் என்னும் பாடத்தைக் கற்றுக் கொண்டனர். 24ம் அதிகாரம் முக்கிய அதிகாரமாகக் கருதப்படுகிறது.

தலைமைத்துவம், மோசேயிடமிருந்து யோசுவாவுக்கும், பின் அவரிடம் இருந்து நியாயாதிபதிகளிடத்திலும், அவர்களிடமிருந்து இராஜாக்களுக்கும் மாறியது. தலைமைத்துவம் மாறலாம்; ஆனால் கர்த்தரின் வாக்கு மாறாச் செயல்களை நினைவுபடுத்தி அவருடன் புது உடன் படிக்கை செய்யும்படி வலியுறுத்துகிறார்.

1. **கானானின் மேல் வெற்றி பெறுதல்** **1: 1 – 2:3**
2. **கானானில் குடியேறுதல்** **2:4 –11:26**

ஒரு புதிய ஆரம்பம்

மனிதன் தன் அறிவுத்திறனால் வெளிப்படுத்தும் அனைத்தும், நாளடைவில் பழையதாகிவிடும். ஆனால் திருமறையின் நிகழ்வுகள் என்றென்றும் புதிதாய் நிலைத்து நிற்கும்.

தேவனின் திட்டம் (வச.1-4): கர்த்தருடைய தாசனாகிய மோசே மரித்தபின்பு இஸ்ரவேலரை வழிநடத்திச் செல்வது யார்? என்ற கேள்வி எழுந்தது. மோசேயிடம் நன்கு பயிற்சி பெற்று தேவ ஆவியைப் பெற்ற நூனின் குமாரனாகிய யோசுவாவிடம் தேவன் அப்பொறுப்பினைக் கொடுத்தார். யோர்தானைக் கடந்து கானானுக்குள் பிரவேசியுங்கள். நீங்கள் கால் மிதிக்கும் இடமெல்லாம் உங்களுக்குச் சொந்தமாகும் என நினைப்பூட்டி அதற்கென எல்லைகளையும் வகுத்துக் கொடுத்தார். அவர் யோசனையிலே பெரியவர். செயலிலே வல்லவர் என்பதனைப் புரிந்துகொண்டு தொடர்ந்து பயணம் செய்வோம்.

தேவனின் வாக்குத்தத்தம் (வச.5,6) : ஆசரிப்புக் கூடாரத்தை விட்டுப் பிரியாதிருக்கப் பழகின யோசுவாவிடம் தேவன் கூறினார். "மோசேயுடன் இருந்ததுபோல உன்னோடும் இருப்பேன். நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உன்னை எதிர்ப்பதில்லை". திகைத்துப் போயிருந்த யோசுவாவிற்கு தேவன் கூறியவை உற்சாகத்தைத் தந்திருக்கும். கானானுக்குள் செல்லும் பாக்கியத்தையும், அதனைப் பங்கிடும் பொறுப்பையும் தேவன் தந்தார். பரம கானானை நோக்கிப் பயணப்படும் உங்களுக்கும் தாம் வாக்களித்ததை நிறைவேற்றுவார். நம்பிக்கையுடன் பயணம் செய்வோம்.

தேவனின் அறிவுரை (வச.7-9) : கர்த்தர் யோசுவாவினிடத்தில் தாசனாகிய மோசே கற்பித்தபடியெல்லாம் செய்யவும், நியாயப்பிரமாணம் அவன் வாயைவிட்டு நீங்காமலும், இரவும் பகலும் அதை தியானிக்கவும் கூறுகிறார். அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணி, புத்திமானாய் இருப்பாய் என்றார். விசுவாச வாழ்க்கையிலே சரியான பாதையிலே செல்லவும் கவனமாயிருக்கவும் நாம் எச்சரிக்கப்படுகிறோம். புத்திமானாய் நடந்துகொள்ள வேண்டுமெனில் தேவன் நமக்கு விதித்த, கட்டளைகளையும், கற்பனைகளையும் கைக்கொள்ள கவனம் செலுத்த வேண்டும். நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு (2 தீமோ. 3:16) என திருமறை கூறுவது போல வாழ முயற்சிக்கிறோமா?

தேவனே உம்முடைய திட்டத்தைப் புரிந்துகொண்டு வாழ என்னை அர்ப்பணிக்கிறேன். ஆமென்.

யோசுவா நினைப்பூட்டியவை

எனது அலுவலகமோ அல்லது வேலை செய்யும் இடமோ என்னுடைய மேல் அதிகாரிகளின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய என்னை ஆயத்தம் செய்கிறேன்.

சத்திய வேதாகமத்தில் உள்ள வசனங்கள் தலைமுறைதோறும் மக்களுக்கு நினைப்பூட்டுதலாய் அமைந்துள்ளன. தலைவனாகிய யோசுவா தேவன் தனக்கு கற்றுக் கொடுத்தவற்றை மக்களுக்கு நினைப்பூட்டுகிறார். நல்மனதுடன் மக்களும் அவற்றை ஏற்றுக்கொண்டனர்.

அதிபதிகள் அறிவித்தவை (வச.10,11): ஆண்டவர் நம்மை உண்மை உள்ளவர்கள் என்று எண்ணி பல பொறுப்புகளைத் தருகிறார். யோசுவா கூறிய செய்திகளை அதிபதிகள் மக்களிடம் எடுத்துச் சென்றனர். சரீரம் சோர்வடையாதிருக்க உணவை ஆயத்தப்படுத்தவும். கானான் வெகுதொலைவில் இல்லை எனவும் நினைப்பூட்டினர். கர்த்தரின் வழிகள் ஆராயப்படாதவைகள். இன்றும் நம் வாழ்க்கைப் பயணத்தில் நாம் செய்ய வேண்டியவை, கடக்க வேண்டியவற்றை தேவன் திருமறையின் வழியாக விளக்கி நம்மை நடத்துகிறார்.

மக்களை ஒருங்கிணைத்த யோசுவா (வச.12-15): ஒரு நல்ல தலைவன் மக்களுக்கு வழிகாட்டியாக இருப்பதோடு தேவனின் வல்லமையான செயல்களை மக்களுக்கு நினைப்பூட்டுகிறவனாக இருத்தல் வேண்டும். யோர்தானுக்கு வெகு அருகில் கானான் இருந்தது. இந்நிலையில் ரூபன், காத், மனாசே கோத்திரத்தார் தங்களின் உதவி எவருக்கும் தேவைப்படாது என ஒதுங்கிவிட கூடாது என நினைத்த யோசுவா அவர்களின் பணியையும் நினைப்பூட்டினார். இதிலிருந்தது ஒரு நல்ல தலைவனின் ஒருங்கிணைக்கும் தன்மை புலப்படுகிறது. உங்களிடம் இப்பண்பு உண்டா?

மக்களின் மறுமொழி (வச.16-18): தலைமையை ஏற்றுக்கொள்ளவோ, கீழ்ப்படியவோ, மனமற்ற அநேகர் நாம் வாழும் சமூகத்திலும் உண்டு. இஸ்ரவேலர் யோசுவாவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தனர், மதிப்பு அளித்தனர், செய்வோம் என வாக்களித்தனர். கிறிஸ்துவைப் பின்பற்றும் கூட்டத்தில் இருக்கும் நம்மில் இத்தகு மனப்பான்மை உண்டா? இல்லையெனில் நம்மை சரிசெய்யப் பழகுவோம். தேவனுடைய வழிகளை முழுமனதுடன் பின்பற்ற தடை உண்டா?

ஆண்டவரே நீர் தந்த தலைவர்களை மதிக்கவும், ஒத்துழைப்பு தரவும் எனக்கு உதவிடும் ஆமென்.

ராகாபின் விவேகமும், துணிச்சலும்

தீமை நம்மை விட்டு அகன்றோட தினம் தேடுவது தேவ ஞானம்.

விவேகத்துடன் காரியத்தை நடப்பிக்கிறவன் நன்மை பெறுவான் என்கிறது திருமறை. இத்தகு பண்புகளைக் கொண்ட பெண்மணிதான் ராகாப்.

ராகாபின் விவேகம் (வச.1-6): எரிகோவை வேவுபார்க்க யோசுவா அனுப்பின இருவரையும் ராகாப் தன் வீட்டில் தங்க வைத்தாள். இச்செய்தி எரிகோ மன்னனுக்குத் தெரிந்தால் தனக்கு ஆபத்து நேரிடும் என அறிந்தும் துணிச்சலுடன் இதனைச் செய்தாள். மன்னனின் சேவகர்கள் ராகாபை தேடி வந்தும் அவர்கள் நம்பும்படியான பதிலைத் தந்து விவேகத்துடன் செயல்பட்டாள். ராகாபிற்குள் இருந்த தேவபயமும், விசுவாசமும் இவ்வாறு செயல்பட வைத்தது.

ராகாபின் விசுவாசம் (வச.7-11): கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை. தன் சொந்த நாட்டைக் காட்டிக் கொடுப்பது தேசத்திற்கு எதிரான குற்றம் என்றபோதிலும் வேவுக்காரர்களுக்குப் பாதுகாப்பும், அடைக்கலமும் கொடுத்தாள். தேவன் இஸ்ரவேலரை அற்புதமாய் வழிநடத்தினதையும், எதிரிகளை மடங்கடித்து வீழ்த்தினதையும் கேள்விப்பட்டு திகிலடைந்தாள். எரிகோ நிச்சயம் அழியும். இதனோடே தானும் தன் குடும்பத்தாரும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் கவனம் செலுத்தினாள். நிர்விசாரமாய் வாழும் மக்கள் மத்தியில் அனைவரும் காக்கப்பட ஒரே வழி தேவனை விசுவாசித்து, அழிவு நேராமல் காத்துக் கொள்வதாகும்.

ராகாபின் விருப்பம் (வச.12-16): பாவத்தின் பிடியில் சிக்கியிருந்த எரிகோ அழிவின் விளிம்பில் இருந்தது. அலங்கத்தில் பலரும் குடியிருந்தாலும் அவர்களின் உள்ளான வாழ்வு அலங்கோலமாயிருந்தது. அவர்களின் நடுவில் வாழ்ந்த ராகாபின் வாழ்வில் மாற்றம் மலரத் தொடங்கியது. அழிவு அருகில் வந்தும் அஞ்சாத மக்களிடையே தன் குடும்பத்தாரின் பாதுகாப்பை அதிகமாக சிந்தித்தாள். ஆணையிட்டுக் கொண்டதின் மூலம் புதிய வாழ்வுக்கு ஆயத்தமானாள். நற்பண்புகளால் என் வாழ்க்கை அலங்கரிக்கப்பட்டுள்ளதா?

ஆண்டவரே என்னுள் கிடக்கும் தன்னல உணர்வை மாற்றி பிறர்நலம் குறித்த உணர்வை எனக்கு தாரும் ஆமென்.

அடையாளமும், ஆணையும்

வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார்.

வேவுகாரரின் அறிவுரை (வச.17-20): ஜலபிரளயத்திற்குபின் தேவன் உடன்படிக்கையின் அடையாளமாக வானவில்லை உண்டாக்கினார். ராகாபின் குடும்பம் பாதுகாக்கப்படும் என்பதற்கு அடையாளமாக சிவப்பு நூல் ஜன்னலில் கட்டப்பட்டது. யோசுவா அனுப்பிய வேவுகாரர் இருவரும் அனைத்திலும் கவனமாக செயல்பட்டனர். தங்களுக்கு அடைக்கலமும், பாதுகாப்பும் தந்த ராகாபிற்கு நன்றியுடையவர்களாயிருந்தனர். ராகாபின் குடும்பமும் உடைமைகளும் பாதுகாக்கப்பட அறிவுரையும் எச்சரிக்கையும் தந்தனர். நாம் வாழும் சமுதாயமும் அழிவிலிருந்து தப்ப அறிவுரைகளையும், எச்சரிப்பையும் தேவன் தந்துகொண்டே இருக்கிறார். நாம் முதலில் ஆயத்தப்பட்டு பின்னர் இந்த சமுதாயம் ஆயத்தப்பட நம்மால் இயன்ற முயற்சிகளை நாம் எடுப்போம்.

ராகாபின் அறிவார்ந்த செயல் (வச.21): யெகோவா தேவனின் மகத்துவமான செயல்களை நன்கு அறிந்திருந்தவள் ராகாப். வேவுகாரரின் வார்த்தை களை முழுமையாக நம்பியவள். தானும் தன் குடும்பத்தாரும் அழிவிலிருந்து தப்ப வேவுகாரர் கூறிய அடையாளத்தை முழுமையாக நம்பி சிவப்புநூல் கயிற்றை ஜன்னலில் கட்டினாள். நாமும் கீழ்ப்படியாத சந்ததியோடே சேதமாகாதிருக்க கவனத்துடன் செயல்படுவோம். எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. எதுவரையில் தேறியிருக்கிறோமோ அது முதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு ஒரே சிந்தையாயிருப்போம்.

வேவுகாரரின் அறிக்கை (வச.22-24): ராகாப் கூறின ஆலோசனையின் படியே வேவுக்காரர் கவனமாய் செயல்பட்டனர். எரிகோ வீரர்களின் பார்வையில் படாமல் தங்களைக் காத்துக்கொண்டனர். தாங்கள் கேட்ட, கண்ட அனைத்தையும் யோசுவாவிற்குத் தெரிவித்தனர். கர்த்தர் தேசத்தை எல்லாம் நம்முடைய கைகளில் கொடுத்தார். மேலும் குடிகள் அனைவரும் நமக்கு முன்பாக சோர்ந்து போனார்கள் என்று கூறினர். ஆவிக்குரிய பிள்ளைகளாகிய நாமும் விழிப்புடன் இருப்போம். நம்பிக்கையுடன் செயல்படுவோம். திருமறை எனக்குச் சுட்டிக்காட்டும் அடையாளங்களையும், எச்சரிக்கைகளையும் நான் புரிந்துகொண்டேனா?

ஆண்டவரே, எல்லா சூழலிலும் அறிவுடனும் விவேகத்துடனும் செயல்பட எனக்கு உதவும். ஆமென்.

யோசுவா 3:1-17

அற்புதங்களைப் பெற ஆயத்தம்

அண்டினோரின் வாழ்வை இன்பமாக மாற்றும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்குண்டு.

ஆயத்தம் என்பது ஆசீர்வாதத்தின் முன்னோடியாகும். உங்களை அதிசயங்களைக் காணைப்பண்ணுவேன் என்று ஆண்டவர் கூறுகிறார். இன்று நம்முடைய எதிர்ப்பார்ப்பும் அதுவாக உள்ளது. உங்களை உய்த்து ஆராய்ந்து சோதியுங்கள் என்கிறார் தீர்க்கன் செப்பனியா.

அதிபதிகள் ஜனங்களிடம் தெரிவித்தவை [வச.1-6]: சித்தீமிலிருந்து யோர்தான் வரை வந்த மக்கள் மூன்றுநாள் ஓய்விற்குப்பின் பயணத்தைத் தொடங்கினர். உடன்படிக்கைப் பெட்டியை எவ்வாறு பின்தொடர வேண்டும்? எவ்வளவு இடைவெளியில் செல்ல வேண்டுமென அதிபதிகள் மக்களுக்கு அறிவுரை வழங்கினர். அற்புதங்களைப் பெற விரும்பிய இஸ்ரவேலரிடம் யோசுவா கூறியது உங்களைப் பரிசுத்தம் செய்துகொள்ளுங்கள் என்று.

யோசுவா ஜனங்களிடம் தெரிவித்தவை [வச.7-11]: மோசே தலைமையின்கீழ் வனாந்திரப்பயணத்தைக் கடந்து வந்த மக்கள், யோசுவாவுக்கு கீழ்ப்படிந்து, ஒத்துழைப்பு தர வேண்டும் என தேவன் விரும்பினார். மேலும் மக்களிடையே யோசுவாவையும் கனப்படுத்தி மேன்மைப்படுத்த நினைத்தார். யோசுவா ஜனங்களுக்கு கடந்த காலங்களில் தேவன் மக்களுக்குச் செய்தவற்றையும், எதிரிகளை மடங்கடித்து வீழ்த்தினதையும் தேவன் நம்மை வழிநடத்தின விதம், பாதுகாப்பு இவற்றை நினைவுகூர்ந்து நன்றி செலுத்துதல் அவசியம் என்றும் கூறினார்.

அற்புதத்தைக் கண்ட மக்கள் [வச.12-17]: யோர்தான் அறுப்புக்காலம் முழுவதும் கரைபுரண்டோடும். நீர் நிலைகளை உண்டாக்கின ஆண்டவர், செங்கடலை வற்றச் செய்ய தேவன் கீழ்க்காற்றை அனுப்பினார். உடன்படிக்கை பெட்டியைச் சுமந்த ஆசாரியரின் கால்கள் நீரில் பட்ட உடனே யோர்தானின் தண்ணீர் குவியலாக நின்றது. ஏனெனில் அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். இதனைக் கண்ட மக்கள் பிரமித்து சென்றிருப்பர். தடைகளை நீக்கிப் போடுகிறவரின் பின்னே ஆர்ப்பரிப்புடன் கடந்துச் செல்வோம். என் வாழ்வில் தேவன் அற்புதம் செய்ய எனக்குள் இருக்கும் தடைகள் எவை?

ஆண்டவரே, அற்புதங்களைச் செய்பவர் என்னுடன் வருகிறார் என்பதை உணர எனக்கு உதவும். ஆமென்.

தேவ கட்டளையும் நினைவுகூருதலும்

அருங்காட்சியகத்தில் உள்ளவைகளை பற்றி நமக்கு ஒருவர் தெரிவித்தால்தான் அதனுடைய தனித்தன்மையை புரிந்துக் கொள்ளவோ அல்லது கற்றுக் கொள்ளவோ முடியும்!

தேவன் மனிதனை உருவாக்கின நாள்முதல் அவனுக்கு கட்டளைகளையும் நியமங்களையும் பின்பற்றும்படி கொடுத்தார். இவற்றை மறவாதிருக்க அவனுக்கு நினைப்பூட்டினார். முற்பிதாக்கள் யோர்தானைக் கடந்த விதம் பற்றி பின்வரும் தலைமுறையினர் அறிந்து கொள்ள 12 கற்களை நினைப்பூட்டும் அடையாளமாக்க குறிப்பிட்டார்.

கீழ்ப்படிந்த இஸ்ரவேலர் (வச.1-9): இஸ்ரவேலர் தண்ணீரற்ற உலர்ந்த தரைவழியாய் யோர்தானை கடந்தனர். இந்நிலையில் தேவன் 12 பேரைத் தெரிந்துகொண்டு 12 கற்களை நாட்ட யோசுவாவிடம் கூறினார். யோசுவாவும் தாம் ஆயத்தப்படுத்தின மக்களுடன் செய்து நிறைவேற்றினார். தங்களின் தலைவன் கட்டளையிட்ட அனைத்தையும் கேட்கவும் செய்யவும் மக்கள் ஆயத்தமாயிருந்தனர். இன்றைய சூழலில் தேவன் சொன்னதைக் கேட்கவும் செய்யவும் விருப்பம் நம்மில் யாருக்கு உண்டு?

ஒருமனம் கொண்ட இஸ்ரவேலர் (வச. 10-19): தேவன் கட்டளையிட்டதை மனப்பூர்வமாய் செய்ய இஸ்ரவேல் மக்கள், ஆசாரியர்கள், ரூபன், காத், மனாசே, யுத்தவீரர் ஆகியோர் ஒருமனப்பட்டு இருந்தனர். அவர்களுக்குள் எவ்விதமான முரண்பாடும் இருந்ததில்லை. மோசேயுடன் இருந்த தேவன் யோசுவாவோடும் இருந்து அவரை மேன்மைப்படுத்தினார். ஆவிக்குரிய பிள்ளைகளாகிய நாமும் நமது வீட்டில், சபையில், சமுதாயத்தில் கருத்து ஒருமித்து எந்தவொரு செயலையும் செய்யும்போது அது மனநிறைவையும், வெற்றியையும் தரும்.

இஸ்ரவேலர் அறிவிக்க வேண்டியவை (வச.20-24): முற்பிதாக்களின் வனாந்திரப் பயணத்தில் தேவன் எவ்வித குறைவில்லாமல் அவர்களை வழிநடத்தினார். அவர் ஆராய்ந்து முடியாத காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களையும் செய்கிறவர் என யோபு குறிப்பிடுகிறார். அவர் வல்லமையுள்ளவர். அவர் மகிமையான காரியங்களை இன்றும் செய்கிறார். நாம் கண்ட கேட்ட அனைத்தையும் பின்வரும் சந்ததிக்கு அறிவிக்கின்றோமா?

ஆண்டவரே உம்முடைய கட்டளைகளை என்றும் நினைவுகூர எனக்கு உதவி செய்யும். ஆமென்.

கிருபை..... நியாயத்தீர்ப்பு

> **கலையற்ற நீரை உறிஞ்சி வளர்ந்தாலும் எப்போதும் இனிப்பான நீரையே கொடுக்கிறது தென்னை மரம்.**

பாவமும், பாவியும் :- பாவத்தின்மீது கோபம் கொள்ளும் ஆண்டவர், பாவியின்மீது கோபம் கொள்வதில்லை, மாறாக பாவியை நேசிக்கிறார். பாவத்தை விட்டு பரிசுத்தமான வாழ்க்கை வாழ தீர்மானிக்கும்போது தேவன் நித்திய கிருபையுடன் இரக்கம் செய்கிறார். ஆயினும் "கிறிஸ்துவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை" - ரோமர் 8:1. ஆண்டவரின் கிருபை இருந்தால் மட்டுமே நமக்கு பாவ மன்னிப்பின் நிச்சயமும், இரட்சிப்பும் உண்டு என்பதை தாவீது தனது பாடலில் கூறியிருக்கிறார்.

மரணமும், பாதாளமும் :- "பாதாளம் உம்மைத் துதியாது, மரணம் உம்மைப் போற்றாது. குழியில் இறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தைத் தியானிப்பதில்லை"- ஏசாயா 38:18. "மரித்தவர்களும் மௌனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரை துதியார்கள்" - சங்கீதம் 117:17. ஆனால் உயிரோடிருக்கும் நாம் கர்த்தரை துதித்து ஸ்தோத்தரிப்போம்.

மரணத்திற்குப் பின் விசுவாசி ஆக்கினை தீர்ப்புக்கு உட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் - யோவான் 5:24. இவ்வசனத்தை சீர்திருத்த தலைவர் மார்ட்டின் லூத்தர் சிறிய வேதாகமம் என்கிறார். பவுலடியார், "இந்த தேகத்தை விட்டுக் குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் விரும்புகிறேன்" - 2 கொரிந்தியர் 5:8. என்று கூறுகிறார். இரட்சிக்கப்படாதவர்களின் ஆத்துமா நியாயத்தீர்ப்பு நாள் வரைக்கும் மவுனமான இடத்தில் இறங்கியிருக்கும். "ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" - எபிரெயர் 9:27. நாம் கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்; இது நம்மால் உண்டானது அல்ல; இது தேவனுடைய ஈவு என்பதை நாம் ஒருக்காலும் மறந்து விடக்கூடாது. தேவ கிருபையினால் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே கிருபையை இழந்து விடாமல் வாழ முயற்சிப்போம்.

கர்த்தாவே, என் விண்ணப்பத்தை கேட்டு, என் அழுகையின் சத்தத்துக்கு பதில் தந்த உம்மை துதிக்கிறேன், ஆமென்.

எபிரேயர்

நீரோ மன்னன் (கி.பி.54-98) கிறிஸ்தவர்களை அதிகமாக ஒடுக்கின போது, யூதக் கிறிஸ்தவர்கள் தாங்கள் கிறிஸ்தவர்களாக மாறியது தவறோ எனச் சிந்திக்கத் தொடங்கினர். யூத மதம் தேவ திட்டத்தைப் பூரணப்படுத்த வில்லை. தேவாலயம் அழிக்கப்படும், ஆசாரியத்துவம், பலி ஆகியவை ஒழியும் என்றும் இயேசுவும் அவருடைய சீஷர்களும் கூறியதை நம்பி வந்த இவர்கள் இப்போது சந்தேகப்பட ஆரம்பித்தனர்.

இயேசு உயிர்த்தெழுந்து 30 வருடங்களாகியும் தேவாலயம் அழிய வில்லை, யூத மதமும் ஒழியவில்லை. ஆனால் கிறிஸ்தவ மார்க்கம் அழிககப்பட்டுக் கொண்டிருந்தது. எனவே யூதக் கிறிஸ்தவர்கள் ஜெபக் கூட்டங்களுக்குச் செல்வதை நிறுத்திவிட்டு மீண்டும் யூத மார்க்கத்துக்கே திரும்பிவிட்டனர் (எபிரெயர் 20:25-31). அவர்கள் இப்படி பின்வாங்கிப் போகாமலிருப்பதற்காக கி.பி.67-69ல் இந்நிருபம் எழுதப்பட்டது.

இந்நிருபத்தின் ஆசிரியர் யார் என்பது இன்று வரை தீர்க்க முடியாத பிரச்சனையாக இருக்கிறது. எபிரெய மொழியில் பவுல் இக்கடிதத்தை எழுதிய தாகவும் சொல்லப்படுகிறது. இதை பவுல் எழுதவில்லை என்றும் அக்காலத்தில் பிரபலமாயிருந்த ஒரு பிரசங்கி எழுதினார் என்றும் கருதப்படுகிறது. இதில் பெரும்பாலான பகுதிகள் பிரசங்க நடையிலே உள்ளன (3:22). இந்நூலின் அடிப்படைக் கருத்துக்கள் ஸ்தேவான், பேதுரு, பவுல், யோவான் மற்றும் பல முக்கிற அப்போஸ்தலர்களின் பிரசங்கக் கருத்துக்களாகும்.

1.	தேவ தூதர்களை விட மேலானவர்	அதி. 1 – 2
2.	மோசே, ஆரோனை விட மேலானவர்	அதி. 3 – 6
3.	மேலான ஆசாரியத்துவத்தை உடையவர்	அதி. 7
4.	மேலான உடன்படிக்கையை உடையவர்	அதி. 8
5.	யூதரது பலிகளை விட மேலானவர்	அதி. 9 – 10
6.	விசுவாச வீரர்களது பட்டியல்	அதி. 11
7.	கிறிஸ்து விசுவாசத்தின் துவக்கமும், முடிவும்	அதி. 12
8.	அறிவுரைகள்	அதி. 13

கிறிஸ்துவின் மேன்மை

> எல்லா பறவையினங்களும் பிறக்கும்போது தரையில் ஊர்ந்து செல்லுகிறது. வளர்ந்து வரும் போது தகப்பனால் உயர பறக்கும்படி பயிற்றுவிக்கப்படுகிறது.

மேன்மையடைவது எல்லாருடைய விருப்பமாகும். எல்லா நிலைகளிலும் தன்னை மேன்மைப்படுத்த விரும்புகிறவர்கள் அநேகர். பிறரைக் காட்டிலும் தான் மேன்மையடைய வேண்டும் என்று முயற்சிக்கிறவர்கள் அநேகர். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எப்படி மேன்மையுள்ளவரானார் என்பதை தியானிப்போம்.

பிதாவினால் மேன்மைப்படுத்தப்பட்டார் (வச.1-2): பழைய ஏற்பாட்டில் பிதாவானவர் தம்மை வார்த்தையின் மூலமாகவும் வல்லமையான செயல்கள் மூலமாகவும் வெளிப்படுத்தினார். பின்பு நியாயாதிபதிகள் இராஜாக்கள் தீர்க்கத்தரிசிகள் மூலமாக வெளிப்படுத்தினார். புதிய ஏற்பாட்டில் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக தம்மை வெளிப்படுத்தினார். இயேசுவானவரும் என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்றும் நானும் பிதாவும் ஒன்றாய் இருக்கிறோம் என்றார்.

பாவங்களை பரிகரித்தார் (வச.3) : இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது. வாலிபன் தன் வழியை வசனத்தை கைகொள்ளுகிறதினால் சுத்திகரிக்கிறான். இயேசுவும் உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம் என ஜெபித்தார். நம் பாவங்களை கழுவி பரிசுத்தப்படுத்துவதற்காக இயேசு கல்வாரி சிலுவையிலே தமது இரத்தத்தை சிந்தி நமக்காக மரித்து உயிர்த்தெழுந்து பிதாவின் வலது பாரிசத்தில் நமக்காக வேண்டுதல் செய்து கொண்டிருக்கிறார் (1 யோ. 2:1).

மேலான நாமம் பெற்றார் (வச.4): தேவதூதரைப் பார்க்கிலும் இயேசுவானவர் விசேஷித்த நாமத்தை பெற்றுக்கொண்டார். நாம் இரட்சிக்கப்படும்படிக்கு மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம், கட்டளையிடப்படவும் இல்லை. கிறிஸ்து தம்மைத்தாமே வெறுமையாக்கி மரணபரியந்தம் பிதாவுக்கு கீழ்ப்படிந்து தாழ்த்தியதால் வானோர், பூதலத்தோர் அனைவரும் இயேசு கிறிஸ்து கர்த்தர் என அறிக்கை செய்யும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார்.

இயேசுவே, நீர் பிதாவின் சித்தத்துக்கு கீழ்படிந்து மேன்மையடைந்தது போல நானும் எல்லாவற்றிலும் உமக்கு கீழ்ப்படிய உதவி செய்யும். ஆமென்.

எபிரெயர் 1:5–14

தேவன் மாறாதவர்

இன்று காண்கிற மாளிட நிலை மற்றும் , உலக நிலையை நாளைய தினத்தில் பார்க்க நினைத்தால் மறைந்து புதியதை காண்கிறேன்.

நாம் வாழுகின்ற உலகம் மாறுகிறது. மறைந்து போகிறது. அது போல மனிதர்களும் மாறுகிறவர். இயேசு கிறிஸ்துவோ நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

ஆளுகையில் மாறாதவர் [வச.5-8]:- பிதாவானவர் தம்முடைய ஒரே பேரான குமாரனாக ஜெநிப்பித்தார். தேவ தூதர்கள் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றனர். குமாரனுக்கென ஒரு இராஜ்ஜியத்தைக் கொடுத்து. செங்கோலை கொடுத்து நித்திய ஆளுகையை அவருக்கு கொடுத்தார். எனவே இயேசுவானவர் இவ்வுலகில் வாழ்கிற நாட்களில் கடலின்மேல், காற்றின்மேல் அவருக்கு ஆளுகை இருந்தது. நீயும் கர்த்தருடைய பிள்ளையாக மாறுவாயானால் உனக்கும் ஆளுகையை பகிர்ந்து கொடுக்கிறார் (லூக்.10:19; மாற்கு 16:17,18).

செயல்களில் மாறாதவர் [வச.9-11]:- விசுவாசப்பிரமாணத்தை நாம் அறிக்கையிடும்போது வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமை உள்ள பிதா என வாரந்தோறும் கூறுகிறோம். வேதத்திலும் (எபி.1:10; ஆதி.1:1) வாசிக்கிறோம். அவருடைய கிரியைகள் அழிந்து போகலாம். வஸ்திரம் போல பழமையாய் போகலாம் (மத்.5:18) ஆனால் அவரும் அவருடைய வார்த்தைகளும் மாறாமல் என்றும் நிலைத்திருக்கும் என மாற்கு 13:31 கூறுகிறது. எனவே உன் வாழ்வில் அவர் வார்த்தைகள் உலகில் நிலைத்து இருந்தால், நீ கேட்டுக் கொள்வது எதுவோ, அவைகள் உனக்கு செய்யப்படும்.

நித்தியத்தில் மாறாதவர் [வச.12-14]:- நீரோ மாறாதவராயிருக்கிறீர். உமது ஆண்டுகள் முடிவதில்லை. உம்முடைய சத்துருக்களை உமது பாதபடியாக்கி போடும் வரைக்கும் நீர் என் வலது பக்கத்தில் உட்காரும் என வேதம் கூறுகிறது. சத்துருக்கள் பிடியிலிருக்கிற நம்மை அவர் விடுவித்து இரட்சிப்பை தந்து நம்மையும் உன்னதத்தில் அவரோடு உட்கார வைக்கும்படி தொடர்ந்து ஆயத்தம் பண்ணுகிறார் (எபே.2:7). எனவே நித்தியத்தில் அவரோடு இருப்பதற்கு உன்னை சரிசெய்து அவருக்கு ஏற்ற பிள்ளையாக வாழ இன்றே அர்ப்பணித்துவிடு.

பிதாவே நீர் எனக்கு உம்முடைய குமாரனை, உம்முடைய தூதரை, உம்முடைய இரட்சிப்பை, என் உள்ளத்தில் வைத்திருக்கிற இதற்காக ஸ்தோத்திரம். ஆமென்.

எபிரெயர் 2:1-9

பெரிதான இரட்சிப்பு

உபவாச நாட்கள் துவங்குகிறது. தேவனும் நாமும் ஒன்றாயிருக்க அழைக்கப்படுகிறோம்.

சாம்பல் புதன்கிழமை லெந்துகாலத்தின் முதல்நாள். இன்று முதல் 40 நாட்கள் ஆண்டவர் நமக்காக பட்ட பாடுகளையும் மரணத்தையும் நினைவுகூர்ந்து நம்மை சீர்திருத்தும் காலமாகும். நமது வாழ்வின் பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்பு கேட்டு இரட்சிப்பு பெற்று நம்மை புதுப்பித்துக் கொள்வோம்.

இரட்சிப்பின் முக்கியத்துவம் (வச.1-4): நமக்கு அறிவிக்கப்பட்ட சுவிசேஷத்தை விசுவாசத்துடன் கேட்டு அதற்கு கீழ்ப்படிவது அவசியமாகும். இயேசுகிறிஸ்து மனுவுருவெடுத்தார் என்ற நற்செய்தி முதலில் தூதர்களால் அறிவிக்கப்பட்டது. பின்பு சீடர்களாலும் அவரை பின்பற்றினவர்களாலும் இரட்சிப்பின்செய்தி அறிவிக்கப்பட்டது. ஆண்டவர் தமது விலையேறப் பெற்ற இரத்தத்தால் சம்பாதித்த இரட்சிப்பை நழுவ விடாது அதை பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த இரட்சிப்பை நான் பெற்றுள்ளேனா?

இரட்சிப்பை புறக்கணித்தவன் (வச.5-7): மனிதனை கர்த்தர் தமது சாயலாக உண்டாக்கி சிருஷ்டிப்பின் மகுடமாகப் படைத்தார். எல்லாவற்றையும் ஆளும் பொறுப்பை ஒப்படைத்தார். ஆனால் ஆதி மனிதன் செய்த பாவத்தால் தேவ சாயலை இழந்து, எல்லா ஆளுகையையும் இழந்து நின்றான். எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள் (ரோ.3:23). நிர்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? என அங்கலாய்த்தான் பவுல் (ரோ.7:24).

இரட்சிப்பை பெற்ற மனிதன் (வச.8,9): இரட்சிப்பை இழந்த மனிதன் இயேசு கிறிஸ்துவின் மரணத்தினால் புதிய மனிதனாக வாழவும் தலை நிமிர்ந்து நிற்கவும் கர்த்தர் உதவி செய்தார். அப்பா, பிதாவே என்று கூப்பிடும் புத்திர சுவிகாரம் பெற்றான். நித்திய வாழ்வின்மேல் நம்பிக்கை, இரட்சிப்பின் மகிழ்ச்சி, பாவமன்னிப்பின் நிச்சயம் பெற்று வாழ தேவன் அவனுக்கு தருணம் கொடுத்தார். அவருடைய மரணத்தினாலே மனிதன் கனத்தினாலும் மகிமையினாலும் முடி சூட்டப்பட்டான். எனவே எந்த பாவியாயினும் தள்ளமாட்டேன் என்கிறார். துரோகம் செய்த போதிலும் நோக்கிப்பார் உன்னை இரட்சிப்பார்.

ஆண்டவரே, நீர் அருளின மாபெரும் இரட்சிப்பை இழந்து நித்திய அழிவுக்குள் சென்றுவிடாமல் இரட்சிப்பை பெற உதவிசெய்யும். ஆமென்.

பாடுகளை அனுபவித்தவர்

முருங்கை மரம் காற்றடித்தால் முறிந்துவிடும், தொட்டால் சுருங்கி செடியை தொட்டவுடன் முடங்கிக் கொள்ளும், பனைமரமோ புயல் காற்றடித்தாலும் பலம் வாய்ந்ததாக மாறும்.

பாடுகளை அனுபவிப்பவர்கள் பிறருடைய பாடுகளை புரிந்து கொள்ள முடியும். ஏழையாக இருந்து படிப்படியாக முன்னேறுகிறவர்களுக்கு பணத்தின் அருமையையும், பிறருடைய தேவைகளையும் புரிந்து கொள்ள முடியும்.

நம்முடன் ஒன்றுபடுவதற்காக (வச.10-13):- நம்மை அவருடைய பிள்ளைகளாக்கப்படுவதற்காக அவர் பாடுகளை அனுபவித்தார். திருச்சபையின் வித்து பரிசுத்தவான்களின் இரத்தமே என்று ஒரு பரிசுத்தவான் கூறினார். இன்று சந்தோஷமாக திருச்சபைகளில் ஒன்று கூடி ஆராதிக்கிறோம். ஆனால் முற்காலத்தில் இரத்தம் சிந்தி சபை சம்பாதிக்கப்பட்டிருக்கிறது. இருள் சூழும் காலம் வருமுன் சபையில் ஒருமனப்பட்டு ஜெபிப்போம். அன்பு கூறுவோம். ஒவ்வொருவருக்கும் உதவி செய்திடுவோம்.

நம்மை விடுவிப்பதற்காக (வச.14-16):- ஆண்டவர் நம்மை மீட்பதற்காக மனிதனாகி, மனிதனாக வாழ்ந்து மனிதனாக பாடுகளை சகித்தார். 1)மரணத்துக்கு அதிகாரியான பிசாசை தமது மரணத்தினாலே அழித்ததால் மரணம் முடிவு அல்ல. நித்தியவாழ்வின் ஆரம்பம் என உணர்கிறோம். 2) மரண பயத்திற்கு அடிமையானவர்களை விடுவித்ததால், மரண இருளின் பள்ளத்தாக்கிலும் தேவன் நம்முடனிருக்கிறார் என்ற நம்பிக்கை.

நமக்கு உதவி செய்வதற்காக (வச.17-18):- எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான். பாவியை நீதிமானாக்கவும், அசுத்தனை பரிசுத்தனாக்கவும் அவர் சிலுவை மரணத்தை ஏற்றார். ஆண்டவரும் சோதிக்கப்பட்டு வெற்றி பெற்றதால் நாம் சோதிக்கப்படும்போது தப்பித்துக் கொள்ளும்படியான போக்கை உண்டாக்குவார். ஆண்டவரும் பாடுகளை அனுபவித்து வெற்றி பெற்றதால் நமது துன்பம் துயரம் பாடுகளிலும் அவர் நம்மை புரிந்து உதவி செய்ய வல்லவராக இருக்கிறார். சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தைப் பெருக பண்ணுகிறார் (ஏசா. 40:29).

ஆண்டவரே, எங்கள் பாடுகளில் நீர் உதவி செய்ய வல்லவராயிருக்கிறீர் உமக்கு நன்றி ஆமென்.

எபிரெயர் 3:1-6

தேவனுடைய வீட்டின் மேன்மை

> செல்வ செழிப்பினால் கட்டப்பட்ட ஒவ்வொரு வீடும் மேன்மையில் வித்தியாசப்படும். தேவனுடைய வீட்டின் மேன்மை தேவனுடைய பிள்ளைகளால் வித்தியாசப்படுவதை காண்கிறோம்.

தேவனுடைய வீடு என்பது தேவனுடைய ஆலயமாக கருதப்படுகிறது. அந்த தேவாலயத்தில் தேவனுக்கு அர்ப்பணிக்கிற மக்கள் பெருகும்பொழுது தேவனுடைய மகிமையும் பெருகுகிறது. தேவன் அங்கே வாசம் பண்ணுகிறார்.

மோசேயின் மேன்மை [வச.1-2]:- மோசே 30வது வயதில் தேவனுடைய அழைப்பை பெற்றார். அந்த 40ஆண்டுகள் தேவனுடைய ஆசாரிப்புக் கூடாரத்தை தேவ சித்தத்தை கேட்டு 6 இலட்சம் ஜனங்களை வழி நடத்தினார். அப்போது கர்த்தர் தமது தாசனாகிய மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவராக இருந்ததாக சாட்சி பகிர்ந்தார் (எண்.12:7). உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களை பெறுவான் (நீதி. 28:20).

கிறிஸ்துவின் மேன்மை [வச.3-5]:- மோசே தேவனுடைய பணிவிடைக்காரனாய் எங்கும் உண்மையுள்ளவர் என்று கர்த்தரால் சாட்சி பெற்றான். மோசே தேவனுடைய வீட்டை உண்டு பண்ணினான். ஆனால் கர்த்தரோ வீட்டை உண்டு பண்ணி மேன்மையுள்ளவராக எண்ணப்பட்டார். மோசேயோ தேவனுடைய ஊழியக்காரன். கிறிஸ்துவோ தேவனுடைய ஒரே குமாரனாக மோசேக்கு மேற்பட்டவராக வேதத்தில் வாசிக்கிறோம். நாம் தேவனுடைய பிள்ளையானால், தேவனுடைய சகல அதிகாரத்தையும், ஆசீர்வாதத்தையும் பெறுவோம். பிசாசின் பிள்ளைகளாக இருந்தால் தேவனுடைய மேன்மையை இழந்து போவோம் (1 யோ. 3:8-10).

நம்முடைய மேன்மை [வச.6]:- வேதம் நம்மை தேவனுடைய வீடு என்று அழைக்கிறது. நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாய் இருக்கிறார் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள் (1 கொரி. 3:16). நாம் பரம அழைப்புக்கு பங்குள்ள சகோதரர்கள் என்பதையும். கிறிஸ்துவின் மேன்மையையும் உணர்ந்து முடிவு பரியந்தம் நிலைத்திருப்போமானால் நாமே தேவனுடைய வீடாயிருப்போம். முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான் (மத்.24:13).

மகிமைக்குப் பாத்திரரே, என் வாழ்வின் மூலம் உம்மை மகிமைப்படுத்த உதவி செய்யும், ஆமென்.

கீழ்ப்படிதலின் அவசியம்

சுவிசேஷகர், டி.எல்.மூடி வேதத்தை வாசிக்க, ஜெபிக்கும் போது கர்த்தாவே, நான் இன்னும் எந்த வசனத்திற்கு கீழ்ப்படியாமல் இருக்கிறேன் என்பதை உணர்த்தியருளும் என்று ஜெபிப்பவர்.

வாழ்வில் ஆசீர்வாதம் பெற கீழ்ப்படிதல் மிக அவசியம். பிள்ளைகள் கீழ்ப்படியவேண்டும் என்று பெற்றோர் எதிர்பார்ப்பதைவிட ஆண்டவர் அதிகமாக நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

கடினப்படுத்தாதிருங்கள் [வச.7-11]:- 'இன்று' அவருடைய சத்தத்தை கேட்பீர்களாகில் என்று கூறப்பட்டுள்ளதால் ஆண்டவரின் அகராதியில் நாளை என்ற சொல்லுக்கே இடமில்லை. ஆண்டவரின் சத்தத்தை கேட்கிற ஒவ்வொருவரையும் காதுள்ளவன் கேட்கக்கடவன் (மத்.13:9) என இயேசு சொல்லுகிறார். கீழ்ப்படிகிறவர்கள் வசனத்தைக் கேட்டு, ஏற்றுக் கொண்டு, உணர்ந்து பொறுமையுடன் பலன் கொடுக்க வேண்டும் கீழ்ப்படிந்த யோசுவா, காலேப் போன்று நாமும் கீழ்ப்படிந்து நித்திய கானானுக்குள் பிரவேசிப்போம்.

எச்சரிக்கையாயிருங்கள் [வச.12-14]:- ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகாமல் இருக்கவேண்டும். சர்வ சிருஷ்டிகரும் சர்வத்தையும் ஆள்பவரும், சர்வ வல்லமையுள்ளவரும் சர்வ அதிகாரமுடைய ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவது மிகவும் பரிதாபமான நிலையாகும். சிம்சோன் கர்த்தர் தன்னை விட்டு விலகினதை அறியாதிருந்தான் (நியா.16:20). சவுலுக்கு கர்த்தர் எந்த வழியிலும் உத்தரவு அருளவில்லை (1 சாமு.28:16). ஏசா சீர்கெட்டுப் போனபின்பு கண்ணீர் விட்டு கவலையோடே தேடியும் மன மாறுதலை காணாமற்போனான் (எபி.12:17).

அவிசுவாசமும் கீழ்ப்படியாமையும் [வச.15-19]:- இன்றைய பகுதியில் 'இன்று' என்ற வார்த்தை 3 தரம் வருகிறது. நாளை பார்த்துக்கொள்ளலாம் என்று ஒத்திபோடாமல் இன்றே ஆண்டவருக்கு உன் வாழ்வில் தருணம் கொடுத்துப்பார். இஸ்ரவேல் மக்களின் அவிசுவாசமும், கீழ்படியாமையும் பெரிய ஆசீர்வாதத்தை இழக்க நேரிட்டது. உபா.28ம் அதிகாரத்தில் 1-14 வசனங்களுக்கு கீழ்ப்படியும் போது 27 ஆசீர்வாதங்களும், 15 முதல் 68 வசனங்கள் முடிய கீழ்படியாமைக்கு 114 சாபங்களும் வருகிறது. இன்றே கர்த்தருக்குக் கீழ்ப்படிவோம்.

ஆண்டவரே உமக்கு கீழ்ப்படிந்து ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள உதவி செய்யும். ஆமென்.

சத்துரு சிங்கம்

பென்யமீனாகிய கூஷ் என்பவனுடைய வார்த்தைகளினிமித்தம் தாவீது கர்த்தரை நோக்கிப் பாடின சங்கீதம்.

சத்துரு சிங்கம் போல் என் ஆத்துமாவைப் பிடித்து கொண்டு போய், அதை பீறாதபடிக்கு என்னை தப்புவியும் - சங்கீதம் 7:2.

சத்துரு சிங்கம் [வச.2]:- உங்கள் எதிராளி பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான் - 1 பேதுரு 5:8.

பிரியமானவர்களே, சத்துரு நம்மை விழுங்கிவிட சமயம் பார்த்து வகை தேடி சுற்றி திரிகிறான். அதே சமயம் கர்த்தரோ நமக்குத் துணையாக நின்று நம்மைக் காப்பாற்றுகிறார் சங்கீதம் 8:15,16ல் தாவீதின் சத்துருக்கள் தாங்கள் தாவீதுக்கு எத்தனம் செய்து அழிவை தாங்களே சந்தித்தனர். 1 சாமுவேல் 31ம் அதிகாரத்தில் சவுல், தாவீது இல்லாமல் பெலிஸ்தியரோடு போரிட்ட யுத்தத்தில் கொல்லப்பட்டான். 2 சாமுவேல் 18ம் அதிகாரத்தில் அப்சலோமும் தாவீதுக்கு எதிராக தொடுத்த யுத்தத்தில் கொல்லப்பட்டான்.

தேவன் நீதியுள்ள நியாயதிபதி [வச.11]:- சத்துருக்களுடைய மூர்க்கத்தினிமித்தம், உம்மை உயர்த்தி எனக்காக விழித்துக் கொள்ளும். நீதியை சரிக்கட்டுகிற தேவனாகிய கர்த்தர் - சங்கீதம் 94:1.

அவர் வருகிறார். பூமியை நியாயந்தீர்க்க வருகிறார். அவர் பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை சத்தியத்தோடும் நிதானத்தோடும் நியாயந்தீர்ப்பார் - சங்கீதம் 96:18.

பாவி மனந்திரும்பாவிட்டால் தமது பட்டயத்தை கருக்காக்குவார் [வச.12]:- கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் - மத்தேயு 3:10. தாங்கள் வெட்டின குழியில் தாங்களே விழும் நிலை உருவாகும்.

தேவனை நம்புகிற மக்களுக்கு எதிரிகளாக இருப்பவர்களைத் தேவன் நியாயந்தீர்ப்பார், கலங்காதீர்கள்.

ஆண்டவரே, எங்களை என்றென்றைக்கும் தள்ளிவிடாதிரும். எங்களுக்கு துணையாக நின்று எங்களைக் காப்பாற்றும். ஆமென்.

எபிரெயர் 4:1-11

இளைப்பாறுதல்

ஆண்டவரே என்னுடைய இன்றைய தியான பகுதி என் ஆவி, ஆத்மா மற்றும் சரீரத்திற்கு பயனுள்ளதாக இருக்க உதவிடும்.

இளைப்பாறுதல் என்பது அனைவராலும் விரும்பப்படும் ஒன்று. இந்த இளைப்பாறுதலை விசுவாசத்தின்மூலம் பெற்றுக் கொள்கிறோம்.

சுவிசேஷத்தினால் இளைப்பாறுதல் [வச.1-3]:- தேவனுடன் கொண்டுள்ள சமாதானமே இளைப்பாறுதல் என்று கூறப்பட்டுள்ளது (எபே.2:15,16). சிலுவையில் இயேசுகிறிஸ்து தமது மரணத்தின் மூலமாக சமாதானத்தை உண்டுபண்ணினார். நாம் விசுவாசத்தினாலே நீதிமான்கள் ஆக்கப்பட்டிருக்கிறபடியால் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் (ரோ.5:1). தேவசமாதானம் நம் சிந்தைகளையும் இருதயத்தையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்கிறது (பிலி.4:7).

ஆராதிப்பதில் இளைப்பாறுதல் [வச.4-7]:- ஆண்டவர் ஆறு நாளில் உலகத்தையும் பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் சிருஷ்டித்து விட்டு ஏழாம் நாளில் இளைப்பாறினார். ஆண்டவர் நமக்கு முன்மாதிரியாக திகழ்கின்றார். ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பாயக என பத்து கட்டளை கூறுகிறது (யாத்.20:8-11). ஆறு நாள் கடினமாக உழைக்கின்றோம். உழைப்பு அவசியம்தான். அதே நேரம் வாரத்தின் முதல் நாளில் இயேசுவானவர் உயர்த்தெழுந்த ஞாயிற்றுக்கிழமைகளில் ஆண்டவரை ஆராதிப்பதற்கு குடும்பமாக ஆலயம் செல்ல கண்டிப்பாக அழைக்கப்படுகிறோம் (எபி. 10:25-27). அதன்பிறகு குடும்பத்துடன் சந்தோஷமாக இருந்து, சரீரத்திற்கும் ஓய்வுக்கொடுத்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

மரணத்திற்குப் பின் இளைப்பாறுதல் [வச.8-11]:- மரணத்திற்கு பிறகு ஆண்டவருடன் நித்திய நித்தியமாக வாழ்வதே இளைப்பாறுதல் ஆகும். இஸ்ரவேல் மக்கள் கானானுக்குள் பிரவேப்பதை இளைப்பாறுதல் என அறிந்தோமனால் நாம் நித்திய கானானுக்குள் பிரவேசிப்பதும் இளைப்பாறுதல் ஆகும். நித்திய வாழ்வு இங்கேயே ஆரம்பித்துவிடுகிறது. நாமும் நித்தியத்திற்குரியவர்கள். காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில் கண்ணீர் விட வேண்டிய நிலைமைதான்!

ஆண்டவரே நீர் அருளும் இளைப்பாறுதலை பெற ஆயத்தமுள்ளவனாக இருக்க உதவி செய்யும் ஆமென்.

எபிரெயர் 4:12-16

நித்தியத்தின் மேன்மைகள்

> அழிந்து போகிற ஒவ்வொன்றிற்கும் மனிதனிடத்தில் அதிக வரவேற்பு உண்டு. நித்தியத்தை தேடுகிறவர்களை தேடுகிறேன்.

நாம் நம்பியிருக்கும் மனிதர்கள், வீடுகள், உலகப்பொருட்கள், வேலைகள், தொழில்கள் எல்லாம் நம்மை விட்டு கடந்து போய்விடும். நம்முடன் இறுதி வரை இருப்பது ஆண்டவருடைய பிரசன்னமும், வார்த்தையுமே.

மாறாத கர்த்தரின் வார்த்தை [வச.12]:- (1) **ஜீவனுள்ள வார்த்தை**-நம்மை உயிர்ப்பிக்கும் வார்த்தை. சோர்வில் உற்சாகமும், துக்கத்தில் ஆறுதலும், துன்பத்தில் இன்பமும் அருளும் வார்த்தை. கர்த்தாவே யாரிடத்தில் போவோம்? நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே என்று பேதுரு கூறினார். (2) **வல்லமையுள்ள வார்த்தை** - அவருடைய வார்த்தையால் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. சீறிவரும் கடலின் கொந்தளிப்பும் அமைதலானது. (3)**இருப்புறமும் கருக்குள்ள பட்டயம் போன்ற வார்த்தை** - அனைவரையும் பட்சபாதமில்லாமல் எந்த வாழ்விலும் ஈடுபட்டு வாழ்வை மாற்றும் வார்த்தை வீரத்தீரமாக சென்ற சவுலையும் சந்தித்து பவுலாக மாற்றிய வார்த்தை.

கணக்கொப்புவித்தல் [வச.13]:- அவருடைய கண்களுக்கு மறைவானது ஒன்றுமில்லை. நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டியவர்கள். சிறுவயதில் இருந்து பெரியவர் வரைக்கும் கணக்கு பார்ப்பவர்களாகவும் கணக்கு கேட்கிறவர்களாக இருக்கும் நாம் கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும். ஆண்டவர் நம்மிடம் கொடுத்துள்ள வாழ்க்கை, பொறுப்புகள், காலம், தாலந்து, இவைகளைப்பற்றி கணக்கு ஒப்புவிக்க வேண்டும். ஆகவே வாழ்வை உதாசீனப்படுத்தாமல் கவனமாக வாழ வேண்டும்.

கிருபாசனம் சேருதல் [வச.14-16]:- இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களுக்கு மரித்து, உயிர்த்தெழுந்து பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். ஆகவே 1. நாம் செய்துகொண்ட அறிக்கையில் உறுதியாயிருப்போம். 2. நமது பலவீனங்களை நிவிர்த்தி செய்யும் பிரதான ஆசாரியர் 3. நாம் தைரியமாய் கிருபாசனத்தண்டையில் சேரவும், இரக்கத்தை பெறவும், கிருபையை அடையவும் தயங்காமல் வல்லமையும் அன்பும் உள்ள ஆண்டவரிடம் செல்வோம். அவர் நம்மை ஏற்றுக்கொள்வார்.

இயேசுவே, நிலையில்லாத இந்த ஜீவிய வாழ்வில் நித்தியத்திற்குரிய யாவற்றின் மேலும் ஆர்வம் காட்ட உதவும், ஆமென்.

கிறிஸ்துவின் ஆசாரியத்துவம்

ஆசாரியனுக்குரிய பணியே போதகரின் பணியாகும். போதகரின் முறைமைகள் வேதத்திலிருந்து வருகிறது. எனவே போதகர்களை கனம் பண்ண கற்றுக் கொள்ள வேண்டும்.

பிரதான ஆசாரியனின் ஊழியம் (வச.1-3):- பிரதான ஆசாரியன் நியமிக்கப்படுகிறான். மனிதனின் பாவங்களுக்காக காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தி மனிதன் தேவனுடன் ஒப்புரவாக நியாயப் பிரமாணத்தை கைக்கொள்ளுகிறான். ஆசாரியன் தானும் பாவம் செய்கிறவனானபடியால் முதலாவது தனக்காக பலி செலுத்திவிட்டு பிறகு மக்களுக்காக பலிசெலுத்துவான். இயேசுகிறிஸ்து தமக்காக பலி செலுத்த வேண்டுவதில்லை. ஆனால் நமக்கு பலி தேவைப்பட்டது. எனவே நமக்காக தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார். இயேசு என்னுடைய பாவங்களுக்காக மரித்து, உயிர்த்தெழுந்தார் (எபே.2:1).

ஊழியத்துக்கான அழைப்பு (வச.4-6):- ஆரோனை இந்த கனமான ஊழியத்தைச் செய்ய அழைத்தார். அவரால் அழைக்கப்படுபவர்கள் பயன்படுத்தப்பட்டார்கள். பயன்படுத்தப்படுவார்கள். சீடர்களை எப்படிப்பட்டவர் என்று அழைக்கவில்லை. மாறாக என்ன செய்வார்கள் என்று அழைத்தார். நம்மையும் அவரால் பயன்படுத்தப்பட அழைக்கிறார். அர்ப்பணிப்போமா?

இயேசு கிறிஸ்துவே பிரதான ஆசாரியர் (வச.7-10):- இயேசுகிறிஸ்து எவ்விதமாக தம்முடைய பிரதான ஆசாரியத்துவத்தை நிறைவேற்றினார். 1.கெத்சமனே தோட்டத்தில் வேதனைகளின் மத்தியிலும் என் சித்தமல்ல, தேவசித்தம் நிறைவேற வேண்டுமென ஜெபித்தார். நாமும் தேவசித்தத்துக்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும். 2.கிறிஸ்து தாம் அடைந்த பாடுகளின்மூலம் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். நாம் பாடுகளின் வழியாக கடந்து செல்லும்போது, ஏன் என்ற கேள்வியை கேட்காமல் பாடுகள் நமக்குக் கற்றுத் தருவது என்ன என்று அறிந்துகொள்ள முடியும். 3. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தமது விலையேறப்பெற்ற இரத்தத்தால் சம்பாதித்த இரட்சிப்பை பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த இரட்சிப்பு நம்மை இம்மையிலும் மறுமையிலும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும். ஆண்டவரின் அழைப்பும் கிருபை வரங்களும் மாறாதவைகள்.

ஆண்டவரே நீர் சம்பாதித்து தந்த இரட்சிப்பை நானும் பெற்றுக்கொண்டு பிறருக்கு இரட்சிப்பின் வழியை காண்பிக்க எனக்கு உதவி செய்யும். ஆமென்.

எபிரெயர் 5:11–6:3

பூரண வளர்ச்சி அடைதல்

ஒரு பழம் முழுமையாக பழுத்திருந்தால் தான் அதன் ருசியை உணரமுடியும். பிறந்த குழந்தை அழகாக இருக்கிறது. அது அப்படியே இருக்கட்டும் என்று யாரும் விரும்புவதில்லை.

எதிலும் குறைவான வளர்ச்சியை யாரும் விரும்புவதில்லை. பூரண வளர்ச்சியடைய என்ன செய்யவேண்டும் என்றுதான் முயற்சிப்பார்கள்.

கிறிஸ்துவில் வளர வேண்டும்:- உள்ளான மனிதனில் பலப்படுத்தப்பட்டு விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும். கிறிஸ்துவின் சிந்தையும் தன்மைகளும் நம்மில் காணப்படவேண்டும்.

அன்பில் வளரவேண்டும்:- கிறிஸ்துவின் அன்பை அளவிட முடியாது. அது மாபெரும் அன்பு. தன்னைத் தந்து நம்மை மீட்ட அன்பு. அது இணையில்லா அன்பு. அது இயேசுவின் அன்பு. அவருடைய அன்பிலிருந்து நம்மை எவரும் எதுவும் பிரிக்காமல் கவனமாக இருக்கவேண்டும்.

அவருடைய வசனத்தில் வளருதல்:- புதிதாக பிறந்த குழந்தைகள் எவ்விதம் உணவின்மேல் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கின்றார்களோ அவ்விதமாக திருவசனத்தின்மேல் வாஞ்சையுள்ளவராய் இருக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தை நம்மை வளர்க்கும், வாழ வைக்கும்.

ஆண்டவரை அறிகிற அறிவிலும் கிருபையிலும் வளர்தல்:- அப்போஸ்தலனாகிய பவுல் ஆண்டவரை அறிகிற அறிவின் மேன்மைக்காக, தனக்கு லாபமாயிருந்தவைகளை நஷ்டமும் குப்பையுமாக எண்ணினார். ஆண்டவரை அறிகிற அறிவில் வளர விருப்பம் வேண்டும்.

முக்கியமானது எது?:- அநேகர் தேவையற்ற காரியங்களை முக்கியப் படுத்தி ஏற்கனவே போடப்பட்ட அஸ்திபாரத்தின்மேல் மறுபடியும் அஸ்திபாரமிட்டு செய்யவேண்டியதை செய்யாமல் விட்டு விடுகின்றனர். கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர்கிற நாம் கிறிஸ்துவுக்காக எதை செய்ய வேண்டும் என்று யோசிக்க வேண்டும். பிறருக்கு கிறிஸ்துவின் அன்பை காண்பிக்கின்றவர்களாகவும் இரட்சிப்பின் மகிழ்ச்சியை பிறருடன் பகிர்ந்துகொள்பவராகவும் இருத்தல் அவசியம். எனது ஆவிக்குரிய வளர்ச்சி எத்தகையது?

ஆண்டவரே, உமக்குப் பிரியமில்லாத நீர் வெறுக்கிற காரியங்களை நான் செய்யாதபடி பாதுகாத்திடும். ஆமென்.

பிப்ரவரி 19
வெள்ளி

எபிரெயர் 6:4–12

நம்பிக்கையில் உறுதி

> **நம்பிக்கை கப்பலின் நங்கூரத்துக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. இருமனம் உள்ளவர்களாக இல்லாமல் இயேசுவால் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை என்ற நம்பிக்கையில் உறுதியாய் இருக்க வேண்டும்.**

இன்னல்கள் மத்தியிலும் நம்பிக்கை[வச.4-6]:- ஆண்டவரிடமிருந்து எல்லா நன்மைகளை பெற்று வாழ்ந்தாலும், சில நேரங்களில் வாழ்வில் வரும் இன்னல்களின் மத்தியில் நம்பிக்கை இழந்து தேவனை புறக்கணிக்கின்றவர்களாகவும் கர்த்தரை மறுதலிக்கிறவர்களாவும் இருக்கிறோம். இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவை மறுபடியும் சிலுவையில் அறைகின்றார்கள். நகோமி தன் வாழ்வில் வந்த பாடுகளினால் நம்பிக்கையை இழந்து கர்த்தர் என் வாழ்வில் கசப்பை கட்டளையிட்டார் என்கிறாள். ஆனால் ரூத்தோ நம்பிக்கையுடன் இருந்தாள்.

பயன்தருவதில் நம்பிக்கை [வச.7-8]:- ஒரு செடி தனக்கு அளிக்கப்படும் நீர், உரம், நல்ல சூரிய ஒளி இவைகளை கொண்டு தேவையான உணவை எடுத்து நான் வளர்ந்து பயன்படுவேன் என்று நம்பிக்கையுடன் வளர்ந்தால்தான் நல்ல பலன் தரும், ஆசீர்வாதமாகவும் இருக்கும். ஆண்டவர் நமக்கு கொடுக்கின்ற நன்மைகளை பெற்றுக் கொண்டு அவருக்கு பிரியமில்லாத வாழ்க்கை வாழ்ந்தால் முள்செடிகளாயும் முள்பூண்டுகளாயும்தான் பலன் தருவோம். எனவே பரத்திலிருந்து வரும் நன்மைகளை அனுபவிக்கிற நாம் கிறிஸ்துவுக்காக பயன் தர வேண்டும்.

ஆசீர்வாதத்லத மறவாதீர்கள் [வச.9-12]:- ஆண்டவரின் பிள்ளைகள் நம்பிக்கையுள்ளவர்களாகவும் பயனுள்ளவர்களாகவும் எப்பொழுதும் கிறிஸ்துவை பிரியப்படுத்தும் வாழ்க்கையை வாழ வேண்டும். நமது கிரியை, சேவை, உபசரிப்பு இவைகளின்மூலம் நாம் ஆண்டவரை பின்பற்றுகிறவர்கள் என்று பிறர் அறிந்து கொள்வார்கள். ஆகவே அசதியாயிராமல் சர்ப்பத்தை போல வினாவுள்ளவர்களும் புறாவைப்போல கபடற்றவர்களுமாய் இருக்கவேண்டும். நாம் செல்லும் வழி யாரும் செல்லாத பாதையல்ல. ஏற்கனவே இதன் வழியாக நமது ஆண்டவர் சென்றிருக்கிறார். அவரை நம்பிக்கையுடன் பின்பற்றவேண்டும். கைவிடா காத்திடும் கர்த்தர் நம்முடன் இருக்கிறார்; விசுவாசத்துடன் பின்செல்வோம். மகிமையை அவருக்கே செலுத்திடுவோம்!

ஆண்டவரே! நம்பிக்கை அருள்பவரே உறுதியான நம்பிக்கையுடன் வாழ உதவி செய்யும். ஆமென்.

எபிரெயர் 6:13–20

நிலையான வாக்குத்தத்தம்

> மனிதன் கொடுக்கும் வாக்குறுதிகளும், கணவன் மனைவி திருமணத்தில் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் வாக்குறுதிகளும் அநேக நேரங்களில் நிலைத்திருப்பதில்லை.

ஆசீர்வாதத்துக்கானது [வச.13-15]:- ஆபிரகாமுக்கு கர்த்தர் அநேக வாக்குத்தத்தங்களை கொடுத்து அதை நிறைவேற்றினார். ஊர் என்கிற இடத்திலிருந்து ஆபிரகாமை கானானுக்கு செல்ல அழைத்தபோது வாக்குத்தத்தம் கொடுத்து ஆசீர்வதித்தார். வானத்து நட்சத்திரங்களைப்போல உன் சந்ததி இருக்கும். எல்லாரும் உனக்குள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று ஆசீர்வதித்தார். உனக்கு ஒரு குமாரனைத் தருவேன் என்றார். இதற்காக ஆபிரகாம் 25 வருடம் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. எனவே வாக்குத்தத்தம் தந்தவர் உண்மையுள்ளவர்; அவர் வாக்கை நிச்சயம் நிறைவேற்றுவார்.

ஆணையிடுதலுக்கானது [வச.16-18]:- ஆபிரகாமின் மகன் ஈசாக்கை பலியிடும்படி கூறப்பட்டபோது ஆபிரகாம் அதற்கு மாறுத்தரம் பேசாமல் விசுவாசத்துடன் கீழ்ப்படிந்தான். தனது மகனையும் திரும்பப்பெற்றான். இதினிமித்தம் ஆபிரகாம் தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று விளங்கினது. இந்த காரியத்தை செய்தபடியால் நான் உன்னை ஆசீர்வதிப்பேன், பெருகப்பண்ணுவேன் என்று கர்த்தர் கூறினார். கர்த்தர் தனது பேரிலே ஆணையிட்டார். இரண்டு மாற்ற முடியாத காரியங்களான வாக்குத்தத்தம் மற்றும் நோக்கத்தை நமக்கு அளிக்கிறார். வாக்குப்பண்ணினவர் பரிசுத்தமும், பொய்யுரையாத தேவனுமாயிருக்கிறார். அவருடைய வாக்குத்தத்தத்தை நமக்கு கொடுப்பதன்மூலம் அது கட்டாயம் நிறைவேறும் என்று உறுதியளிக்கிறார்.

ஆத்துமாவுக்கானது [வச.19-20]:- கர்த்தரின் வாக்குத்தத்தம் நம்மை கிறிஸ்துவுக்குள் வளர்வதற்கு உற்சாகப்படுத்தும். நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள உதவும். வாக்குத்தத்தங்கள் அனைத்தும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஆம் என்றும், ஆமென் என்றும் இருப்பதால், நாம் நமது விசுவாசத்தில் உறுதியாய் இருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரம கானானை சுதந்தரிப்போம். இம்மையிலும், மறுமையிலும் கிறிஸ்துவுடன் வாழ அவருடைய வாக்குத்தத்தங்களை நமக்கு சொந்தமாக்குவோம். வாக்குத்தத்தங்கள் தந்த கர்த்தர் என்றென்றும் நம்மோடிருக்கிறார்.

> ஆண்டவரே வாக்குத்தத்தம் நிறைவேற ஆபிரகாமைப் போல காத்திருக்க உதவி செய்யும். ஆமென்.

கர்த்தரின் கரிசனை

> **மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்.**

கடவுளின் தன்மை [வச.1-3]:- "எங்கள் ஆண்டவராகிய கர்த்தர்" என்கின்ற பதம் ஆங்கிலத்தில் **Lord** என்றும், மூல மொழியில் யேகோவா என்றும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மோசேயிடம் தேவன் "யேகோவா என்னும் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை" (யாத்திராகமம் 6:2,3) என்றார். இதற்கு முன்பு தேவன் தானாய் இருக்கிறவராகவே அறியப்பட்டார். (யாத்திராகமம் 3:13,14) இப்பிரபஞ்சம் அவரால் உண்டாக்கப்பட்டது. அவரது மகிமை வானங்களுக்கு மேலானது.

கரத்தின் கிரியைகளின்மேல் ஆளுகை [வச.4-6]:- மனிதன் தேவனால் நினைவு கூறப்படுவதற்கு அவன் எம்மாத்திரம் (8:4). மனிதனை தேவ தூதரிலும் சற்று சிறியவனாக படைத்து மனிதனுக்கு மகிமையையும், கனத்தையும், ஆளுகையையும் கொடுத்தார். இந்த மனிதனை தேவனை முடிசூட்டி சகலத்தையும் அவனுடைய பாதத்துக்கு கீழ்ப்படுத்தினார். மனிதன் பாவம் செய்தபொழுது தேவ கிருபையை இழந்தான். இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும, கனத்தினாலும் திரும்பவும் முடிசூட்டப்பட்டதை எபிரெயர் 2:8,9ல் காண்கிறோம்.

மேன்மையுள்ள நாமம் [வச.7-9]:- இழந்த கிரீடத்தை மீட்டினால் மனிதன் திரும்பப் பெற்றுக் கொள்வான். கிறிஸ்துவின் இரட்சிப்பின் நோக்கம் மனிதனை மனிதனாக்கி, மகிமைப்படுத்துவதே. ஒரு நேரத்தில் வானம் முழுவதையும் நம்மால் பார்க்க முடியாது. அப்படிப்பட்ட வானத்தில் ஏராளமான பறவையினங்கள் பறந்து கொண்டிருக்கின்றது. அதேபோல கடலின் ஒரு கரையை மாத்திரமே நாம் அனைவரும் பார்த்துஇருக்கிறோம். அதிலுள்ள அனைத்தையும் ஆண்டவர் நமக்கு கீழ்ப்படுத்தியிருக்கிறார் என்றார் அவர் எவ்வளவாய் நம்மை நேசிக்கிறார் என்பதை நாம் புரிந்துக் கொள்ள முடிகிறது அல்லவா! நம்மை நேசித்து வழிநடத்துகிற அவருடைய நாமமே அல்லாமல் பூமியில் வேறு எந்த நாமமும் கொடுக்கப்பட வில்லை. உயர்ந்த மேலானா நாமம் உடையவராகிய இயேசு என்ற நாமத்தையே நாம் நம்முடைய வாழ்வில் நோக்கிப்பார்ப்போம்.

ஆண்டவரே, கிறிஸ்து இயேசுவுக்குள் நாங்கள் அவரோடே கூட மகிமையை பெற உதவி செய்யும். ஆமென்.

செய்ததும் நினைவுகூரவேண்டியதும்

> மனிதனின் உதவி என்றோ ஒருநாள், ஆனால் ஆண்டவரின் உதவி எப்போதும் நமக்கு உண்டு.

அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே என்கிறார் தாவீது. வனாந்திரப் பயணத்திலே தம்முடைய ஜனங்களுக்கு அனுகூலமான அனைத்தையும் செய்தார். இவற்றை நினைவுகூரல் அவசியமாகும்.

ராஜாக்களின் சோர்வு [வச.1]: எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை தந்தவர் நம் தேவன். தம் சொந்த ஜனங்களின் கூக்குரலைக் கேட்டு பதில் அளித்து குறைவில்லாமல் வழிநடத்தினார். யோர்தானின் தண்ணீரை வற்றிப்போகப்பண்ணினார். இவற்றையெல்லாம் கேட்ட எமோரியர் மற்றும் கானானிய ராஜாக்களின் இதயம் கரைந்து போயிற்று. ஆகாயத்துப் பட்சிகளுக்கு உணவளிக்கிற தேவன் நம்மையும் பிழைப்பூட்டுகிறார் என்பதில் சந்தேகமென்ன? ஆவிக்குரிய பிள்ளைகளாகிய நாமும் நமக்குக் கிடைத்த நன்மைகளுக்கு நன்றி கூறாமல் கிடைக்காதவைகளுக்காக ஏன் மனம் வருந்த வேண்டும்?

உடன்படிக்கையின் அடையாளம் [வச.2-9]: விருத்தசேதனம் என்பது தேவனுடன் நமக்குள்ள உடன்படிக்கையை குறிக்கிறது. மோசேயினால் விருத்தசேதனம் செய்துகொண்டோர் வனாந்திர வழிப்பயணத்தில் அழிந்து போயினர். முற்காலத்தில் விருத்தசேதனம் என்பது பொதுவாக குழந்தை பிறந்து 8ம் நாளிலும் வாலிப பருவத்திலும் செய்யப்பட்டது. தலைவனாகிய யோசுவாவின் வழிநடத்துதலின் பேரில் தேவனுடன் கொண்ட உடன்படிக்கையின் அடையாளமாக ஆண்கள் யாவரும் விருத்தசேதனம் செய்து கொண்டனர். இன்றைய சூழலில் தேவனுக்கும் நமக்கும் உள்ள உறவு எவ்வாறு உள்ளது?

விடுதலையின் அடையாளம்[வச.10-12]: இஸ்ரவேலர் எகிப்திலிருந்து பெற்ற விடுதலையை நினைவுகூருவதே பஸ்கா. கானானின் எல்லையில் நின்றவர்கள் இதனை நினைவுகூர கொண்டாடினர். நாங்கள் இனி அடிமைகளோ, பரதேசிகளோ அல்ல என்பதனை மனதில் கொண்டு, கானானுக்கு உரிமைப்பட்டவர்கள் என்ற உறுதியுடன் பயணத்தைத் தொடர்ந்தனர். தேவன் எனக்குச் செய்த நன்மைகளுக்கு நன்றி கூறினேனா?

ஆண்டவரே, நன்றி கூறும் நாவை எனக்குத் தாரும். ஆமென்.

தலைமைப் பண்பும் தாழ்மையும்

> **"இயேசுவே இவ்வீட்டின் தலைவர்" என்று வீடுகளில் பலகை போடுகிறோம். உண்மையாக அவர் தலைவராய் செயல்பட முயற்சிப்போம்.**

இன்றைய சூழலில் தலைமைப் பண்பில் பலரும் வெற்றி பெற்றதில்லை. தலைமைப் பொறுப்பை வகித்தவர்களுக்குத்தான் அதில் உள்ள கடினம் புரியும். அனைத்தையும் நன்கு அறிந்து திறம்பட செய்பவரே வெற்றி பெறுவர்.

யோசுவாவின் கூரிய பார்வை [வச.13]: தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் எப்பொழுதும் விழிப்புடனும் கவனமுடனும் இருத்தல் வேண்டும். உண்மை, விவேகம் ஆகிய நற்பண்புகளையும் கொண்டிருத்தல் நலம். குற்றம் சாட்டப் படாதவனும் தெளிந்த புத்தியுள்ளவனும் யோக்கியதை உள்ளவனுமாய் இருத்தல் நல்லது என்பது திருமறை கூறும் அளவுகோல். பொறுப்புகள் பிரித்துக் கொடுக்கப்பட்டாலும் தலைமைப் பொறுப்பில் உள்ளவர் கூரிய நிர்வாகத் திறன் பெற்றவராய் இருப்பது சிறந்தது. எரிகோவின் வெளியே ஒரு நபரைக் கண்ட யோசுவா அவர் யார் என வினவுகிறார். இத்தகு கண் காணிக்கும் திறன் எனக்கு உண்டா என ஆராய்ந்து பார்ப்பது நல்லது.

யோசுவாவின் தாழ்மை [வச.14]: கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர் களை சூழப் பாளயமிறங்கி விடுவிக்கிறார். உருவின பட்டயத்தைக் கையில் கொண்டிருந்த(நபர்) அதிபதி முன் தாழ விழுந்து யோசுவா மரியாதை செலுத்தினார். தான் செய்ய வேண்டியது என்ன என்பதனையும் வினவுகிறார். இதிலிருந்து கடவுளின் பிள்ளைகள் எப்பொழுதும் தனிமையில் இல்லை என்றும் தேவனே அவர்களைத் தலைமை தாங்கி நடத்துகிறார் என்பதனையும் நன்கு அறியலாம்.

யோசுவாவின் கீழ்ப்படிதல் [வச.15]: சேனையின் அதிபதி கூறிய காரியங் களுக்கு யோசுவா உடனே கீழ்ப்படிந்தார். தேவன் தவறு என சுட்டிக்காட்டி சரிசெய்யக் கூறும் காரியங்களில் நான் கீழ்ப்படிகிறேனா? வீட்டில், ஆலயத்தில், திருச்சபையில் மேய்ப்பரின் சத்தத்திற்குக் கீழ்ப்படிவோர் எத்தனை? தர்க்கம் செய்வோர் எத்தனை? குழப்பம் விளைவிப்போர் எத்தனை? எதிராக எழும்புவோர் எத்தனை? நாம் எக்கூட்டத்தில் இருந்து செயல்படுகிறோம்?

இயேசுவே, உம்மில் உள்ள தாழ்மை, கீழ்ப்படிதல் என்னில் வர எனக்கு உதவும், ஆமென்.

இஸ்ரவேலரே கேள்! கவனி! செய்!

சிக்னலில் பச்சை, சிவப்பு, மஞ்சள் விளக்குகள் ஒளிர்கின்றது. சிவப்பு – நில், பச்சை – செல், மஞ்சள் – ஆயத்தம் என்பதை உணர்த்துகிறது. வேதமும் இதையே நமக்கு உணர்த்துகிறது.

போரில் எதிரியை வீழ்த்தி வெற்றி பெற வேண்டுமெனில் தலைவன் சொல்வதைக் கூர்ந்து கேட்க வேண்டும். வழிமுறைகளை நன்கு கவனிக்க வேண்டும். அதன் பின்னர் செயல்பட்டால் வெற்றி நிச்சயம். இக்கூற்று ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நமக்கும் பொருந்தும்.

நன்று கேட்க வேண்டியவை (வச.1-5): வாழ்வின் ஒவ்வொரு இலக்கையும் அடைய நாம் கவனத்துடன் செயல்பட வேண்டும். கானானுக்குள் பிரவேசிக்கப் போகிறோம் என்ற ஆவல் இஸ்ரவேலருக்கு அதிகமாகவே இருந்தது. இந்நிலையில் எரிகோ அவர்களுக்கு எதிராக அடைக்கப்பட்டிருந்தது. பட்டணத்தை எவ்வாறு வீழ்த்த வேண்டும் என்ற உத்திகளை யோசுவாவிடம் தேவன் தெரிவித்தார். உடன்படிக்கைப் பெட்டிக்கு முன் செல்வோர், எக்காளம் ஊதுவோர், எத்தனை முறை சுற்றி வரவேண்டும்? எப்பொழுது ஆர்ப்பரிக்க வேண்டும்? போன்ற யுத்த இரகசியங்களை யோசுவா கேட்கும்படி விளக்கினார்.

கவனிக்க வேண்டியவை (வச.6-16): யோசுவா தேவனிடம் பெற்ற யுத்த முறைகளை மக்களிடம் கொண்டு சென்றார். உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து செல்ல ஆசாரியர்களை நியமித்தார். ஏழு எக்காளங்களைப் பிடிக்கின்ற ஏழு ஆசாரியர்களும் எக்காளங்களை ஊதிக்கொண்டே பெட்டிக்கு முன்பாக நடக்கச் செய்தார். வீரர்கள் யுத்தத்தில் நன்கு பயிற்சி பெற்றுத் தேர்ந்தவர்களாக இருந்தாலும், தலைவனின் கட்டளையை கவனித்து நிறைவேற்ற ஆயத்தமாயினர். நமது விசுவாச வாழ்விலும் ஆண்டவரின் சத்தம் கேட்கவும் அதனை நிறைவேற்றவும் பழகிக்கொள்ள வேண்டும்.

செய்ய வேண்டியவை (வச.17-19): தேவன் நமக்குக் கற்றுக்கொடுத்த காரியங்கள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும். இன்றைய தலைமுறையினர் பண ஆசை, பொருளாசை இவற்றில் விழுந்து தேவ கட்டளைகளையும் நியமங்களையும் கைக்கொள்ளாமல் இருப்பது வருத்தம் தருகின்றது. நான் கேட்க, கவனிக்க, செய்யத் தவறிய காரியங்கள் எவை?

ஆண்டவரே உமது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய என்னைத் தகுதிப்படுத்தும். ஆமென்.

யோசுவா 6:20–27

தயவினால் கிடைத்த பாதுகாப்பு

> நம் தேசத்தை காப்பதற்காக இந்திய இராணுவ வீரர்கள் நம் தேசத்தின் எல்லைப்பகுதியெங்கும் பாதுகாப்பாய் இருக்கின்றனர். ஆனால் நம்முடைய பாதுகாப்பு ஆண்டவர் மாத்திரமே.

நன்மை செய்ய மறவாதிருங்கள். நன்மை செய்ய திராணியிருக்கும்போது செய்யாமல் இராதே என்கிறது திருமறை. மிகுதியான பாவம் செய்து கீழ்ப்படியாத மக்களுடன் அலங்கத்தில் குடியிருந்தாலும் ராகாப் சேதமாகாதிருந்தாள். காரணம் வேவுபார்க்கச் சென்றவர்களுக்குப் பாராட்டின தயவும் அடைக்கலமுமே ஆகும்.

துதியினால் இடிந்தது அலங்கம் (வச.20,21): போர் ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் எரிகோ மதில் விழுந்தது இன்றும் நமக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது. இஸ்ரவேலர் ஒருமித்து ஒரே குரலில் விசுவாசத்துடன் ஆர்ப்பரித்தனர். தலைவனாகிய யோசுவாவின் வார்த்தைக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து செயல்பட்டதே வெற்றிக்குக் காரணமாயிருந்தது. என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு என்கிறார் பவுலடியார். சத்துருவைப் பார்க்காமல் தேவனை துதிக்கும்போது நாம் முற்றிலும் ஜெயம் பெறுவோம்.

ராகாபிற்குக் கிடைத்த தயவு (வச.22,23,25): எரிகோவில் வாழ்ந்த ராகாப் தேவனை நன்கு அறிந்தவள். அவரின் வல்லமையையும் இஸ்ரவேலருக்கு தேவன் செய்த அதிசயங்களையும் நன்கு கேள்விப்பட்டாள். நிச்சயமாக எரிகோ அழியும் என்பதனை உணர்ந்த அவள், தானும் தன் குடும்பத்தாரும் காக்கப்பட தீவிரமாக செயல்பட்டாள். மன்னன் அனுப்பின ஆட்களுடன் சாமர்த்தியமாய்ப் பேசி தன்னை பாதுகாத்துக் கொண்டாள். தேவனுடைய பிள்ளைகளுக்கு ராகாப் கொடுத்த பாதுகாப்பில் யோசுவா அவள் குடும்பத்தாருக்கு தயவு பாராட்டினார்.

கீழ்ப்படிந்த இஸ்ரவேலர்(வச.24): இஸ்ரவேலரை வழிநடத்திச் செல்லும் தலைவனாக நூனின் குமாரனாகிய யோசுவாவை தேவன் ஏற்படுத்தின நாள்முதல் மக்கள் அவரின் கட்டளைகளை ஏற்றுக்கொண்டு முழு ஒத்துழைப்பு தந்தனர். சுட்டெரிக்க வேண்டியதை சுட்டெரித்தனர். விலையேறப் பெற்ற பொருட்களை ஆண்டவரின் பொக்கிஷத்தில் சேர்த்தனர். தேவ கட்டளைகளுக்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிய மனமுண்டா?

ஆண்டவரே தேவ ஊழியர்களின் ஆலோசனைகளை முழுமனதுடன் ஏற்றுக்கொள்ள நல்ல அறிவை எனக்கு தாரும், ஆமென்.

கவனமாயிரு! விழிப்பாயிரு!

> **பிள்ளைகள் வகுப்பறையில் ஆசிரியர் நடத்தும் பாடங்களை விழிப்புடன் கவனித்தால் மட்டுமே புரியும். நாமும் விழித்திருந்து கவனமுடன் செயல்படுவோம்.**

கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணுகிறவர் தேவன். நாம் பெற்ற வெற்றியை நினைத்துக்கொண்டு மமதையில் இருந்து விடக்கூடாது. நம்முடைய வெற்றி நிரந்தரமாக இருக்க வேண்டுமெனில் நம்மில் உள்ள பரிசுத்தம் காக்கப்படவேண்டும்.

ஆயி பட்டணத்தை வேவுபார்த்தல் (வச.2,3): ஆயி பட்டணத்தின்மீது போர் தொடுப்பதற்கு முன்னர் வழக்கம்போல வேவுபார்க்க யோசுவா ஆட்களை அனுப்புகிறார். ஆயி பட்டணம் குறைவான மக்கள்தொகை கொண்டது. நாம் எளிதாக அதனை வெற்றி கொள்ளலாம் என்ற பதிலை அவர்கள் தந்தனர். எதிரியின் பலத்தையும் பலவீனத்தையும் நாம் நன்கு அறிந்திருத்தல் அவசியம். நாம் செய்ய விரும்பும் காரியம் சிறியதோ, பெரியதோ தேவ சித்தத்தை அறிந்து, அவரின் ஆலோசனைபடி செய்தால் வெற்றி நிச்சயம்.

முறிந்தோடிப்போன இஸ்ரவேலர் (வச.4,5): தேவன் நமக்கு விதித்த கட்டளைகளையும், கற்பனைகளையும் நாம் மீறும்போதும், பாவம் கலக்கம் இவை சத்துருவால் நமக்கு நேரிடலாம். மறைக்கப்பட்ட பாவம் தோல்விக்கு நேராக நம்மை இழுத்துச் செல்லும். ஆயி பட்டண வீரர்களை எதிர்கொள்ள மூவாயிரம்பேர் சென்றனர். ஆனால் மூவாயிரம் பேரும் சிறிய பட்டணமாகிய ஆயிக்கு முன்பாக முறிந்தோடினர். இன்று நம் வாழ்வில் நிகழும் தோல்விகளுக்கான காரணம் என்ன?

யோசுவாவின் மனச்சோர்வு (வச.6-9): கர்த்தர் நன்மையானதைத் தருவார் என்கிறார் சங்கீதக்காரன். தேவனை நம்பி வாழும்போது ஏன் இந்தத் தோல்வி? இதனையும் தேவன் அனுமதிக்கிறாரா? என்று எண்ணத் தோன்றுகிறது அல்லவா? தோல்விகளைக் கண்டு துவண்டு விடவேண்டும். யோசுவாவும் மூப்பரும் உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்னர் விழுந்து கிடந்தனர். ஏன் எங்களை அழைத்து வந்தீர் என யோசுவா தேவனிடம் கேட்பதின்மூலம் மனச்சோர்வுக்கு உட்படுகிறார். உள்ளான நிலையை அறிய முடியாமல் குழம்பினார் யோசுவா. என்னிலே மறைந்து கிடக்கிற பாவம் எது?

ஆண்டவரே! என்னில் உள்ள மனச்சோர்வை நீக்க எனக்கு உதவும். ஆமென்.

எச்சரிக்கை

> *அதிகப்படியான மின் திறன் கொண்டு இயங்கும் மின்சார அறையில் அபாயம் என்று எழுதியும், அதை குறிக்கும் ஒரு சிறு படத்தையும் வரைந்திருப்பார்கள். இது நமக்கு எச்சரிப்பைத் தருகின்றது.*

நம்மிடையே இலைமறை காயாகக் காணப்படும் சிறு தவறுகள் மற்றும் அந்தரங்க செயல்கள் பெரிய வெற்றியை இழக்கவும், நம்மைக் காயப் படுத்தவும் செய்கின்றன. தேவனுடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கின்றன என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது.

இனி உங்களோடு இரேன் (வச.10-15): தோல்விக்கான காரணங்களை ஆராயாமல் நமக்கு நாமே சோர்வை வருவித்துக் கொள்ளுதல் நல்ல தல்ல. இஸ்ரவேலர் பாவம் செய்து கர்த்தரின் உடன்படிக்கையை மீறி, சாபத்தீடானதை எடுத்து, வஞ்சித்து, புதைத்து வைத்ததை தேவன் யோசுவாவிற்கு வெளிப்படுத்தினார். ஒரே மனிதனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளானார்கள். அதுபோல ஒரு மனிதனுடைய தீய செய்கையினாலே இஸ்ரவேலருக்கு தோல்வியும், அவமானமும் தேவ கோபமும் வந்தது. நீங்கள் என்னுடையவர்களாய் இருக்கும்படிக்கு உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன் என்றார் தேவன்.

நீ செய்ததை எனக்குச் சொல் (வச.16-19): பாவம் செய்து சாபத்தீடானதை மறைத்த நபரைக் கண்டுபிடிக்க யோசுவா திட்டமிட்டார். தேவன் சொன்னபடியே கோத்திரமாக, வம்சமாக, பேர்பேராக வரப்பண்ணினார். கர்மியின் மகன் ஆகான் குறிக்கப்பட்டான். நீ செய்ததை மறைக்காமல் சொல் என்றார் யோசுவா. பாவத்துடன் விளையாடுவது நியாயத்தீர்ப்புடன் விளையாடுவது போன்றதாகும்.

கர்த்தர் உன்னைக் கலங்கப்பண்ணுவார் (வச.20-26): சாபத்தீடான பொருட்களை ஆகான் கண்டான், இச்சித்தான், எடுத்துக்கொண்டான். இதனை அவன் ஒத்துக்கொண்டான். ஒரு தனிமனிதனின் பாவம் ஒட்டு மொத்த தோல்விக்கும் காரணமாயிற்று. இன்று பலருக்கு பாவ உணர்வு உண்டாகிறது. அதனைப் போக்க எங்கெங்கோ பரிகாரம் தேடி ஓடுகிறார்கள். எங்கு வரவேண்டுமோ அங்கு வராமல் நிம்மதியை இழந்து தவிக்கின்றனர். அவர்களைப்போல நாமும் செய்யாமல் சிலுவை நாதராம் இயேசுவண்டை வருவோம். மன்னிப்பைப் பெற்று புதிய வாழ்வு வாழ்வோம்.

ஆண்டவரே துணிகரமான பாவங்களுக்கு என்னை விலக்கிக் காத்தருளும். ஆமென்.

துதி, விவரி, அறிவி

எல்லாம் சிருஷ்டித்த நமது தயாபர பிதாவுக்கு அநந்த காலமாக அல்லேலூயா!

தாவீது தேவனுடைய நீதியான நியாயதீர்ப்பு குறித்து சங்கீதம் 9 மற்றும் ...ல் குறிப்பிடுகிறார். நியாயத்தீர்ப்புக்கு அனுதின வாழ்வில் ஆயத்தமாக ...வேண்டிய விதத்தை இங்கு காண்போம்.

...ர்த்தரை, துதி, விவரி, அறிவி (வச. 1-7) :- துதிப்பேன் (வச9:1) - நான் ...பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டதால் துதிப்பேன். என் முழு இருதயத்தோடு துதிப்பேன். சங்கீதம் 139:14. களிகூருவேன் (வச. 9:2). விவரிப்பேன் (வச. 9:11) - கர்த்தருடைய மகத்துவமான செயல்களை மக்களுக்கு அறிவிப்பேன். இயேசு கிறிஸ்து என்று வரப்போகிறார் என்பது பிதாவை தவிர வேறொருவருக்கும் தெரியாது. தாவீதின் காலத்தில் இயேசு கிறிஸ்து பிறக்கவும் இல்லை. ஆனால் தாவீது சொல்லுகிறார் நீதியுள்ள நியாயதிபதியாக அவர் வருவார். நீதியாய் நியாயம் தீர்ப்பார் என்றும் மேலும் அவர் நியாயத்தீர்ப்புக்காக தம்முடைய சிங்காசனத்தை ஆயத்தம் செய்து விட்டார் என்றும் தாவீது கூறுகிறார். நீதியுள்ள நியாயதிபதியாகிய இயேசு கிறிஸ்து நம் அனைவரையும் நியாயம் தீர்க்க வரும்போது நாம் ...ந்நிலையில் இருப்போம் என்பதை சிந்தித்து பார்க்க அழைக்கப்படுகிறோம்.

...ர்த்தரது நியாயதீர்ப்பு (வச.9,8,19,20):- கர்த்தர் இந்த உலகத்தை ...மது சிங்காசனத்திலிருந்து நீதியின் நியாயத்தீர்ப்பு செய்வார் எனவும், ...துன்மார்க்கரும் தேவனை மறுக்கிற எல்லா தேசங்களும் அழிந்து நரகத்தில் ...தள்ளப்படுவார்கள் என வச.3,7,15-17 ல் கூறுகிறார். கர்த்தர் நியாயாதிபதியாய் ...ற்றிருக்கிறார் - வச.4. கர்த்தர் நியாய தீர்ப்பை ஆயத்தம் பண்ணினார் ... வச.7. கர்த்தர் கிரியைகளின்படி நியாயம் தீர்ப்பார் - வச.18,19. கர்த்தர் ...ரகத்தில் தள்ளுவார் வச.4. அவர் நியாயந்தீர்க்கும்போது எளியவனை ...றக்கவும் மாட்டார்; சிறுமைப்பட்டவர்களுடைய நம்பிக்கையை ...கெட்டுப்போகவும் விடமாட்டார். அரசனாகிய தாவீதுக்கு எவ்வளவோ ...டுகள் வந்தாலும் ஆண்டவர் பேரில் மட்டுமே நம்பிக்கையாய் இருந்தார். ...டுகள் மத்தியில் என் நம்பிக்கை எங்கே, யாரை சார்ந்து இருக்கின்றது?

கர்த்தாவே, உம்மை தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை. நான் எப்பொழுதும் உம்மைத் தேடி உம்மில் மகிழ எனக்கு கிருபை செய்யும். ஆமென்.

நினிவேயின் மறு மனமாற்றம்

இதோ சமாதானத்தை அறிவிக்கிற நற்செய்தியாளரின் கால்கள் மலைகளின் மேல் வருகிறது. சந்தர்ப்பத்தை பயன்படுத்த நீ தயாரா?

நாகூம் தீர்க்கதரிசியின் காலத்திற்கு 100 வருடங்களுக்கு முன்பதாக யோனா உரைத்த தீர்க்கதரிசனத்தினால் நினிவே மக்கள் மனந்திரும்பினர். ஆனால் காலப் போக்கில் அவர்களது நிலைமை மிக மோசமாக மாறியது.

கர்த்தரின் சித்தம் [1-8]:- மனந்திரும்பாத மக்களுக்கு எதிராக கர்த்தரின் சித்தத்தை நாகூம் வெளிப்படுத்தினார். 'எரிச்சலுள்ள தேவன்' என்னும் வார்த்தை நீதியை விட்டு விலகிச் செல்லும் மக்கள் மேல் கர்த்தர் காட்டும் கடும் கோபத்தைக் காட்டுகிறது. மனந்திரும்புகிற மக்கள் மேல் நீடிய சாந்தத்தைக் காட்டும் கர்த்தர், மனந்திரும்புவதற்காக நீடிய பொறுமையுடன் காத்திருக்கும் அவர் மனந்திரும்பாத மக்கள் மேல் கொள்ளும் கோபத்தை இப்பகுதி காட்டுகிறது. பிதாவாகிய கர்த்தரின் கடும் கோபம் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் மன்னிக்கப்படுகிறது. கொடுமையான பாவிகளும் மனம் திரும்பும் பட்சத்தில் மன்னிக்கப்படுவர்.

நினிவேயின் நிலை [9-11]:- கி.மு.663-612ம் ஆண்டு காலத்தில் யோனா தீர்க்கதரிசியின் தீர்க்கதரிசனத்திற்கு சுமார் 100-125 வருடங்களுக்கு பின்பாக இருந்த நினிவே மக்களின் வாழ்வை இங்கே காணலாம். யோனாவின் செய்தியினால் மனந்திரும்பிய மக்கள் காலப்போக்கில் கர்த்தர் கொடுத்த மாபெரும் மன்னிப்பையும், அழிவிலிருந்து விடுதலையும் மறந்து பாவத்தில் மூழ்கினர். அந்நிய தெய்வ வணக்கம் மெய்யான கர்த்தரை மறக்க செய்து பாவ வாழ்க்கையில் வழிநடத்தியது. அவர்களது வாழ்வு அழிவை நோக்கிச் சென்றது. கர்த்தரின் வார்த்தையையும், கொடுக்கும் விடுதலையையும் மறந்து வாழும் வாழ்வு அழிவை நோக்கியே செல்லும்.

தீர்க்கரின் வாக்கு [12-15]:- மனந்திரும்புகிற பாவியின் நிமித்தம் பரலோகில் மகிழ்வு உண்டாகும் (லூக்.15:7) எனும் இயேசு கிறிஸ்துவின் வாக்கு இங்கு நினைவு கூரப்படவேண்டியது. இங்கு கர்த்தரை அவரது செயலை மறந்து போன நினிவேக்கு இரண்டாந்தரம் அழைப்பு கொடுக்கப்படுகிறது. பழைய வாழ்வினுள் செல்ல முற்பட்ட பேதுருவை இயேசு கிறிஸ்து ஆட்கொண்டாரல்லவா?

ஆண்டவரே, நீர் தரும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மனந்திரும்பவும், சாட்சி பகரவும் என்னை வழிநடத்தும். ஆமென்.

ஜெயிப்பவர் யார்?

மனித பெலம் பாவத்திலும் தள்ளும், தேவ பெலனே நம்மை விடுவிக்கும் நீ எதைச் சார்ந்து நிற்கிறாய்?

மனந்திரும்பிய மக்கள் பாவத்திற்குள் மீண்டும் சென்றதால் விளைவு மிகவும் பயங்கரமாகும் என்பதை தீர்க்கர் உரைக்கிறார்.

நினிவேக்கு எச்சரிக்கை [1-2]:- தண்டனை வந்தாலும் அதற்குத் தப்புகிற வழியையும் கர்த்தர் தருகிறார். அவரது இரக்கம் மனந்திரும்புகிற பாவியின்மேல் இருக்கிறது. யாக்கோபின் மகிமையைத் திரும்பி வரப்பண்ணுவது போல இஸ்ரவேலின் மகிமையையும் திரும்பி வரப்பண்ணுவார் (வச.2). அவர் யூத மக்களுக்கும் மாத்திரமல்ல, புறதேசத்தார்க்கும் புற இனத்தவர்க்கும் கர்த்தராய் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. அறியாமல் சேவிக்கிறவர்கள் அவரை அறிந்து உணர்ந்து வாழ வேண்டும்.

மனித பெலத்தை நம்பாதே [3-10]:- நினிவேக்கு எதிராக வருகிற நியாயத்தீர்ப்பைக் குறித்த செய்தி இது. அசீரியர் பாபிலோனியருக்கு எதிராக வருவார்கள். ஆனாலும் நினிவே மனந்திரும்பும் பட்சத்தில் நடக்கும் நிகழ்வுகளைக் கூறுகிறார் தீர்க்கன். தமது மக்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பாத பட்சத்தில் அந்நிய அரசுகளைக் கொண்டு அவர்களைத் தண்டிப்பது கர்த்தரின் செயல். மனந்திரும்பாத இஸ்ரவேல் மற்றும் யூதாவின் மேல் அசீரிய, சீரிய மற்றும் பாபிலோனிய படையெடுப்புகள் மூலம் தண்டனை வந்ததல்லவா? அதே போல் இங்கு நினிவேக்கு வரும் அச்சுறுத்தல்களும் சொல்லப் படுகின்றன. ஆனாலும் தேவன் நினிவேயை விடுவிப்பார்.

கர்த்தரின் பெலன் இங்கே [11-13]:- எவ்வளவு தான் தன் சுய மதியையும், சுய பெலத்தையும் நம்பினாலும் கர்த்தரின் பெலத்திற்கும், சித்தத்திற்கும் எதிராக எதையும் செய்ய முடியாது என்பதை இப்பகுதி விளக்குகிறது. நன்மைக்கும் தீமைக்கும் எதிரான போரில் இறுதி வெற்றி நன்மைக்கே. எதை கர்த்தர் கொண்டு வந்தாலும் தண்டிக்க வருபவர்களையும் தண்டித்து தமது மக்களைக் காக்கும் அதிகாரம் கர்த்தருக்கு மாத்திரமே உண்டு.

ஆண்டவரே, எந்த நிலையிலும் உமது பெலத்தைச் சார்ந்து வாழவே உதவி செய்யும். ஆமென்.

கர்த்தரும் - மனிதனும்

இயற்கை கீழ்ப்படிய முற்படும்போது, நீ கீழ்ப்படிய மறுப்பது ஏன்?

தப்பி ஓடிய யோனா (1-3):- மாபெரும் நகரம் எனப்பட்ட நினிவேக்கு எதிராக தீர்க்கதரிசனம் சொல்லி, அவர்களை மனந்திரும்ப அழைக்க யோனாவிற்குக் கட்டளை பிறந்தது. நினிவேயின் முரட்டாட்டமுள்ள குணத்தை யோனா அறிந்திருக்க வேண்டும். யூதரல்லாதவர்களுக்கு ஏன் இரட்சிப்பு என்ற எண்ணமும் அவனுள் இருந்திருக்க வேண்டும். கர்த்தரின் இரக்க மனமும், அதாவது மனந்திரும்புபவர்களை மன்னிக்கும் குணமும், அவன் அறிந்த ஒன்று. எனவே இந்த விஷயத்தில் தான் தலைகுனியக் கூடாது என்று தப்பி ஓட முற்பட்டான்.

கடலில் தள்ளிய மாலுமிகள் (4-15):- யோனாவின் எண்ணத்திற்கு எதிராக புயல் வருகிறது. தன்னைச் சுற்றியுள்ளவர்கள் பதறித் துடிக்கின்ற சூழ்நிலையில் கர்த்தரின் ஊழியன் கண்மூடித் தூங்குவதை யோனாவின் செயல் காட்டுகிறது. மாலுமிகளுடைய கோரிக்கைகளும் (வச.6), யோனாவின் பதிலும் (வச.9) அவர்களுக்குப் பயத்தை ஏற்படுத்தியது. கடல் பயணத்தில் புயலிலிருந்து தப்பிக்க கப்பலில் பாரத்தைக் குறைப்பதற்காக சரக்குகளை கடலில் தள்ளி விடுவர். முடியாத பட்சத்தில் சிறுபடகுகள் மூலம் தப்ப முற்படுவர். இங்கு யோனாவின் வேண்டுகோளுக்கு இணங்க மாலுமிகள் அவனைக் கடலில் தள்ளினர். தங்களைக் காப்பாற்ற மற்றவர்களை அழிப்பது மாலுமிகள் நோக்கமாக இருக்கவில்லை. இயேசு கிறிஸ்துவும் மக்களுக்காக தம்மை சிலுவைக்கு ஒப்புக் கொடுத்தாரல்லவா.

பிடித்துக் கொண்ட கர்த்தர் (16-17):- கர்த்தரின் சமூகத்தை விட்டு எவரும் ஓடிச் செல்ல முடியாது. அதிலும் ஊழியத்திற்கு அழைப்புப் பெற்றவன் அழைப்பை விட்டு ஓட முடியாது. கர்த்தர் எப்படியாகிலும் பிடித்துக் கொள்வார் என்பதற்கு யோனாவே சாட்சி. தமது பணியை நிறைவேற்ற இயற்கைக்கு மாறான செயல்களையும் செய்ய கர்த்தர் தவறவில்லை. கர்த்தரின் உன்னத படைப்பாகிய மனிதன் மாத்திரமே கர்த்தரை மீறுகிறான். ஏனைய படைப்புகள் எல்லாம் அவருக்குக் கீழ்ப்படிகின்றன. இங்கு யோனாவைக் காப்பாற்ற பெரிய மீன் தயாராக உள்ளது.

ஆண்டவரே என்னுள் கிடக்கும் தன்னல உணர்வை மாற்றி பிறர்நலம் குறித்த உணர்வை எனக்கு தாரும் ஆமென்.

யோனாவின் ஜெபமும் விடுதலையும்

> மக்களுக்காக மரிப்பது மகத்தானது. கர்த்தரின் சித்தத்தை முழுமனதுடன் நிறைவேற்றுவோமாக.

இக்கட்டுகளில் அகப்பட்டுக் கொண்டவனின் ஜெபமாக மட்டுமல்லாமல், பாவ அறிக்கையாகவும் யோனாவின் ஜெபம் அமைந்துள்ளது.

யோனாவின் ஜெபம் [1-9]:- எல்லா வசதிகளும் இருக்கும் போது கர்த்தரை மறந்து மனம் போன போக்கில் வாழ்ந்துவிட்டு அதிக துன்பம், ஆபத்து வரும்போது அவரை நோக்கிக் கூப்பிடும் மக்களின் பிரதிநிதியாக யோனாவைப் பார்க்கிறோம். பிழைப்போமா என்கிற நிலையில் கடலின் ஆழத்தில் இயற்கைக்கு மாறான வகையில் இருக்கும் யோனா தனது தவறை உணர்ந்து அறிக்கை பண்ணுகிறான். தனது செயலினாலேயே தனக்கு ஆபத்து வந்தது என்பதை உணர்ந்து கர்த்தர் எனக்கு சகாயம் செய்வார் என்று ஜெபம் செய்கிறார். இன்னுமொரு சந்தர்ப்பம் கிடைத்தால் நான் விசுவாச வாழ்வு வாழ்வேன் என அறிக்கை யிடும் விசுவாச தொனி யோனாவிடம் வெளிப்படுகிறது. உண்மையாகவே மனந்திரும்புவனுக்கு கர்த்தர் விடுதலை அளிக்கிறார். கெட்ட குமாரனின் கதை இதற்கு உதாரணம்.

கர்த்தரின் பதில் [10]:- யோனாவின் ஜெபத்திற்கு மூன்று நாட்களுக்குப் பின் விடை கிடைக்கிறது. தண்ணீரில் மூழ்குபவர்கள் உயிரற்ற உடலாகவோ அல்லது உடலே கிடைக்காமல் போவதையும் காண்கிறோம். ஆழ்கடலில் இருந்து யோனா வெளி வருவது கர்த்தரின் நோக்கத்திற்காகவே. அதிலும் விஞ்ஞானிகளாலும், அஞ்ஞானிகளாலும், "இது சாத்தியமா" என எழுப்பப்படும் மீன் வயிற்றிலிருந்து எழும் கேள்விக்கும் கர்த்தர் பதில் தருகிறார். தமது மக்களுக்காக கர்த்தரால் கழுதையையும் பேச வைக்க முடியும் (எண்.22:28-30), பத்து பாகை பின்னிட்டு போக வைக்கவும் முடியும் (2 இராஜா. 20:9-11). மனிதன் அழிந்து போகும் நிலை வரும்போது அடையாளங்கள் மூலமாக கர்த்தர் எச்சரிப்பு தருகிறார். பாவம் அறியாத இயேசு பாவ மக்களுக்காக மூன்று நாட்கள் பாதாளத்தில் இருந்தார். பாவத்தை உணர்ந்து மனந்திரும்பிய யோனா பாதாள இருளிலிருந்து மூன்று நாட்களுக்குப் பின் வெளியே வந்தான்.

ஆண்டவரே, உமது ஊழியத்தில் அசதியோடு இல்லை, முழுமனதோடு செய்ய உதவி செய்யும். ஆமென்.

அறியாத தேசம் - ஆண்டவரின் கட்டளை

மக்கள் தம்மை உணர்ந்து மனந்திரும்பச் செய்ய எத்தகைய சிரமங்களை ஏற்றுக் கொள்கிறோம்?

புதிய இடத்தில், புதிய மக்கள் மத்தியில் ஊழியத்திற்குச் செல்ல தயங்குகிற ஊழியர்களுக்கு ஆண்டவரின் கட்டளையும், யோனாவின் தீர்மானமும் ஒரு முன்னுதாரணமாகட்டும்.

புதுப்பிக்கப்பட்ட பணி (1-4):- கர்த்தரின் திட்டத்தில் எவ்வித மாற்றமுமில்லை. எந்த சாக்குப் போக்குச் சொல்லியும் திட்டத்தை மாற்றவோ அல்லது வேறு பணியை கேட்கவோ மனிதனுக்கு எந்தவித உரிமையுமில்லை. யோனா கீழ்ப்படிந்து பணியை ஏற்றுக் கொண்டான். அவனது பயணத்தில் பல சிரமங்களைக் காணலாம் (வச.3,4). கிட்டத்தட்ட 20மைல்கள் ஒரு நாள் வீதம் நடந்து சென்றதாக அறிய முடிகிறது?! கர்த்தரின் பணியில் பிரயாசத்தை பொறுப்புடன் செயல்படும்போது நல்ல பலன்களும், மன நிறைவும் ஏற்படும்.

நினிவேயின் மனந்திரும்புதல் (5-9):- நினிவே மக்கள் மனந்திரும்ப ஒரு கால அளவு கொடுக்கப்படுகிறது. 40 நாட்கள் என்பது நீண்ட காலம் தான். மனந்திரும்ப ஒரு நாழிகை போதுமானது. அதன் விளைவை அரசன் முதல் ஒட்டு மொத்த மனித - மிருக ஜீவன்களில் மனமாற்றத்தின் அடையாளம். தங்கள் செயல்களை உணரவும், தீமையை விட்டு நன்மைக்குத் திரும்பவும், மெய்யான தேவனைக் கண்டுக் கொள்ளவும் கிடைத்த சந்தர்ப்பம் இது (வச.8).

கர்த்தரின் செயல் (10):- தம் தவறை உணர்ந்து மனந்திரும்பியதால் கர்த்தர் தாம் செய்ய நினைத்த தீங்கை செய்யாமல் அவர்களை விடுதலை கட்டளையிட்டார். தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால் அவர்கள் தேசத்திற்கு நன்மையை வரப் பண்ணுவேன் (2நாளா. 7:14) என்பதை கர்த்தர் நிரூபிக்கிறார். இன்று நம் நாட்டில் அக்கிரமம் பெருகிவிட்டது. நாம் எத்தனை பேர் ஆட்சியாளர்களிடம் சென்று அவர்கள் தவறுகளையும், ஆற்ற வேண்டிய பணிகளையும் சொல்கிறோம்? தலைவர்களின் தவறுகளை திருத்த வேண்டியப் பணி ஒவ்வொரு ஊழியக்காரனுக்கும், கிறிஸ்தவனுக்கும் உண்டு!

ஆண்டவரே, உமது ஊழியத்தில் திடமான மனதைத் தாரும். ஆமென்.

ஏற்றுக் கொள்ளாத மனம்

மனந்திரும்புபவர்களை ஏற்றுக் கொள்ள மறுப்பது கிறிஸ்தவம் அல்ல. உறவை வளர்ப்பதையே தேவன் விரும்புகிறார்.

இந்தியாவின் ஜனத் தொகை 127 கோடியைத் தாண்டியும் கூட கிறிஸ்தவர்களின் 3 சதவீதம் இருப்பதன் காரணம் கிறிஸ்துவுக்குள் வருகிறவர்களை வழிநடத்தத் தவறியதால் தான்.

யோனாவின் கோபம் [1-4]:- மக்கள் மனந்திரும்பியதால் தீங்கு வரவில்லை. இதனால் யோனாவிற்கு கோபம் வந்தது. யோனாவின் கோபத்தில் எந்தவித நியாயமுமில்லை. மனந்திரும்பும் மக்களே தீர்க்கதரிசியின் எதிர்ப்பார் இருக்க, யோனா தேவையற்ற கோபங் கொண்டான். இது யோனாவின் சுயபெருமைக்கு விழுந்த அடி. இன்னும் கூட சுயபெருமைக்காகவும், சுயலாபத்திற்காகவும், விளம்பரத்திற்காகவும் ஊழியத்தை பயன்படுத்தவோர் உண்டு. தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதே நமது பங்கு.

ஆமணக்குச் செடியின் உதாரணம் [5-7]:- கர்த்தர் தமது விருப்பப்படி செயல்படவேண்டும் என்பதையே யோனா விரும்பினான். தான் கர்த்தரின் சித்தப்படி நடக்க வேண்டும் என்கிற எண்ணம் இன்னும் அவனுள் வரவில்லை. அ) நகரத்திற்கு நடக்கும் தீங்கை எதிர்பார்த்துக் காத்திருந்தான் (வச.5). ஆ) ஆமணக்கின் மேல் யோனா மகிழ்ச்சியடைந்தான் (வச.6). இ) அது காய்ந்து போனதினால் வருத்தமடைந்தான் (வச.7). மக்கள் காக்கப்பட்டதை கண்டு மகிழ்ச்சியடைய வேண்டியவன், கர்த்தரை துதிக்க வேண்டியவன், "தான் சாகிறது நலமாயிருக்கும்" என்றான் (வச.8). நாம் இறைவன் வசமானால் இவ்வுலகமே நம்மை பின் தொடரும் என்கிற எண்ணம் ஒவ்வொரு ஊழியனுக்கும் வரவேண்டும்.

கர்த்தரின் பதில் [9-11]:- வலது கைக்கும் இடது கைக்கும் வேறுபாடு அறியாத......... நினிவேக்காக நான் கரிசனை கொள்ளாதிருப்பேனோ என்னும் கர்த்தரின் கேள்வி, மனந்திரும்பும் மக்களை ஏற்றுக் கொள்ளாத கர்த்தரின் பிள்ளைகளுக்கு பெருத்த சாட்டையடி. மனந்திரும்பிய தன் சகோதரனை ஏற்றுக் கொள்ள மறுத்த மூத்த மகனைப் போல, யோனாவைப் போல , பல கிறிஸ்தவர்களும் நம் சமுதாயத்தில் உண்டு.

ஆண்டவரே, நீர் என்னை ஏற்றுக் கொண்டதைப் போல, நானும் மற்றவர்களை ஏற்றுக் கொள்ள உதவும். ஆமென்.

கர்த்தாவே ஏன் மறைந்திருக்கிறீர்?

துன்மார்க்கரின் மாயையான வெற்றியையும், செழிப்பையும் பார்க்கும் போது, கர்த்தர் தூரமாய் நிற்பது போல உணருகிறேன்.

ஆபத்து நேரத்தில் கர்த்தர்:- ஆபத்து நேரங்களில் தேவன் தூரத்தில் நிற்பது போலவும், சில சமயங்களில் அவர் மறைந்திருப்பது போலவும் அநேக விசுவாசிகள் உணருகின்றனர். தேவன் நான் சமீபத்திற்குக் மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவா என்று எரேமியா 23:23 சொல்லுகிறார் தேவனுடைய கண்களுக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. எபிரெயர் 4:13 - அவரது முகம் நமக்கு மறைக்கப்பட்டது போல தோன்ற காரணம், நாம் அவரை நோக்கி பார்க்காது, நமது பிரச்சனைகளையும், துன்பங்களையும் நோக்கிப் பார்ப்பதினால்தான். ஆபத்து காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமைப்படுத்துவாய் சங்கீதம் 50:15 என்றாரே அவரையே நம்புவோம்.

துன்மார்க்கரின் மாயையான வெற்றி :- இந்த உலகில் அநியாயமும், அக்கிரமமும் பரவி வளர்ந்து வருகிறது. தேவனும் அதை தடுக்காதது போல் தோன்றுகிறது. துன்மார்க்கன் தான் விரும்பிய வெற்றியை பெற்றதினால் அது தற்காலிகமானது. தேவனுக்கு பிரியமற்றது என்பதை அறியாமல், பெருமைக் கொண்டு தேவனை தேடாமல் அசட்டை செய்கிறான். வச.3-7ல் துன்மார்க்கன் ஆகடியம் பேசி திரிகிறான். ஆகையால் சடிதியில் அவனுக்கு ஆபத்து வரும் சகாயமின்றி சடிதியில் நாசமடைவான். துன்மார்க்கன் சிறுமையானவனைக் கொடூரமாய் துன்பப்படுத்தி வஞ்சகமான சூழ்ச்சிகளால் குற்றமற்றவர்களை தன் வலைக்குள் பிடித்துக் கொள்ளுகிறான். தேவன் அதை விசாரிக்க மாட்டார் என்று எண்ணம் கொள்ளுகிறான். நான் அசைக்கப்படுவதில்லை என்றும் தனக்குள் நினைக்கிறான் வச.2,6; வச.11,13 வசனங்களில் வாசிக்கிறோம். தேவன் துன்மார்க்கனை கவிழ்த்துப் போட்டு திக்கற்றவர்களுக்கும், சிறுமைப்பட்டவர்களுக்கும் சகாயம் செய்ய வச.12,15ன் படி ஜெபிப்போம். பிறரின் மாயையான வெற்றியைக் கண்டு நாம் பொறாமை படுகிறோமா அல்லது இது மாயை என்று உணர்ந்து செயல்படுகிறோமா?

தேவனே, துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் கையினின்று நாங்கள் விடுவிக்கப்படும்படிக்கு வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

எபேசியர்

நிருபங்களின் அரசி என்று அழைக்கப்படும் எபேசியர் நிருபத்தின் மொழி நடை பவுலின் பிற நிருபங்களை விட வேறுபட்டதாக இருப்பதால் இதை வேறு எவராவது எழுதியிருக்கலாம் என்கின்றனர் சில வேத வல்லுனர்கள். ஆனால் இந்நிருபத்தை பவுலே எழுதியிருப்பதை அவரே குறிப்பிடுகிறார். (3:1).

இந்நிருபம், பவுல் ரோமாபுரி சிறையிலிருந்த போது கி.பி.60-61 ஆண்டுகளில் எழுதப்பட்டது. பவுல் தனது தூதுவனான தீகிக்குமூலம் கொலோசெயர் சபைக்கு தான் எழுதிய கடிதத்தைக் கொடுத்து அனுப்பும் போது, இந்நிருபத்தை கொடுத்தனுப்பியிருப்பார் என்ற நம்பப்படுகிறது. (6:21,22; கொலோ.4:7).

கொலோசெயர் நிருபத்திற்கும், இந்நிருபத்திற்கும் நெருங்கியத் தொடர்பு காணப்படுகிறது. இந்நிருபம் எபேசுவிற்கு மட்டுமல்ல, அதைச் சுற்றியுள்ள பிற சபைகளுக்கும் எழுதப்பட்ட பொதுவான நிருபம் (Circular Letter). இதன் பிரதிகள் எல்லா சபைகளுக்கும் விநியோகிக்கப்படும்போது வாங்கும் நபர் அந்த சபையின் பெயரை முதலில் எழுதி கொடுத்திருக்கலாம் என்று வேத வல்லுனர்கள் கருதுகின்றனர். இந்நிருபத்தின் பழைய கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில் எபேசு சபையின் பெயரும், சிலவற்றில் பெயர் இல்லாமலும் இருப்பதே இதற்குச் சான்று. லவோதிக்கேயா சபைக்கு பவுல் எழுதிய கடிதமும், இதன் பிரதிகள் ஒன்று என்றும் கருதப்படுகிறது. (கொலோ. 4:16).

இந்நிருபம் சரீரத்தின்படி புறஜாதியானவர்களுக்கு எழுதப்படுகிறது. இதில் பவுல் தனது தனிப்பட்ட வாழ்த்துக்களைக் கூறாததால் மற்ற நிருபங்களில் இருந்து வேறுபட்டிருக்கிறது. பவுல் எபேசுவில் தான் அதிக நாட்கள் (மூன்று ஆண்டுகள்) தங்கியிருந்தார். இந்நிருபத்தில் "கிறிஸ்துவுக்குள்" அல்லது இதற்குச் சமமான பொருளுடைய வார்த்தை ஏறக்குறைய 35 முறை வருகிறது.

1. முன்னுரை	1: 1 – 14
2. கிறிஸ்துவுக்குள் திருச்சபையின் வாழ்வு	1:15 –3:21
3. சமுதாயத்தில் திருச்சபையின் வாழ்வு	4:1 – 6:9
6. முடிவுரை	6:10–24

"ஆவிக்குரிய ஆசீர்வாதம்"

இன்று ஆசீர்வாதம் என்றால் என்ன நினைக்கிறோம்...? மனிதனுடைய வாழ்வில் பிரதான தேவை உலக ஆசீர்வாதமா...? ஆவிக்குரிய ஆசீர்வாதமா...?

உலகத்தில் பல செல்வந்தர்களின் செல்வத்தின் மதிப்பு "பல பில்லியன்" டாலர்களாக இருக்கலாம். எனினும் கிறிஸ்துவில் நமக்குள்ள ஆன்மீக செல்வங்களை ஒப்பிடும்போது அவை வெறும் காசுகளே. ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்ப்படிவதின் வழியாக ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளுக்குத் தருகிறார். இதுதான் பிரதானமான, தேவையான ஆசீர்வாதம் ஆகும். ஆனால் "ஆவிக்குரிய ஆசீர்வாதம்" வரும்போது திருப்தியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கு ஆண்டவர் நமக்கு கற்று தருகிறார். எனவே பொருளாதார ஆசீர்வாதத்தை விட "ஆவிக்குரிய ஆசீர்வாதமே" போதுமானது.

இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதம் பிதாவாகிய தேவனிடமிருந்து வருகிற ஆசீர்வாதம்(வச.4-6). நம்மைத் தெரிந்து கொண்டது, சுவிகாரப் புத்திரராக்கியது. நம்மை ஏற்றுக்கொண்டது. இந்தக் காலங்களில் தேவனே, உம் வழியாக வருகின்ற ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தாரும் என்று தேவனிடம் கேட்போம். குமாரனாகிய கிறிஸ்து இயேசு நமக்கு ஆசீர்வாதம் தருகிறார் (வச.7-12). அவர் நம்மை மீட்டிருக்கிறார், மன்னித்திருக்கிறார். தேவ சித்தத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். என்னே! மகத்துவமான ஆசீர்வாதம்.

பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வரும் ஆசீர்வாதம் (வச.13-14). பிதாவாகிய அவருக்குள் முத்திரை போடப்பட்டோம். இனி "நாம் அவருக்கு சொந்தமானவர்கள்" என்பதே. பணத்தால் வாங்கமுடியாத ஒவ்வொன்றையும் நீங்களும் நானும் அவரில் பெற்றிருக்கிறோம். அவரில் நாம் நெருங்கி வாழ்கின்றபோது, நமக்குத் தேவையான ஆசீர்வாதங்களை அவரிடமிருந்து பெற்றுக்கொள்கிறோம். நாம் வெறுமனே இம்மைக்கான ஆசீர்வாதங்களுக்காக ஏங்காமல் தேவனிடத்திலிருந்து வருகின்ற உன்னதமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் மீது நாட்டம் கொண்டு அதை வாஞ்சிக்கின்ற மனவிருப்பம் தாரும் என்று ஜெபித்து புதிய நாளுக்குள் நுழைவோம்.

ஆண்டவரே, இன்று உம்முடைய சத்தத்தை நான் கேட்கவும் அதன்படி நடக்கவும் என்னோடு பேசியதற்காய் நன்றி, ஆமென்.

"ஆவிக்குரிய அறியாமை"

நாம் ஜெபிக்கும்போது நமக்குள் புதைந்து கிடக்கின்ற ஆவிக்குரிய அறியாமையைத் தேவன் வெளிப்படுத்துகிறார்.

நம்முடைய வாழ்விலே தேவனையும், அவருடைய வல்லமையையும் எந்த அளவுக்குப் புரிந்து வைத்துள்ளோம்? நமது ஆண்டவர் சகலத்தையும் உடையவர், சகலத்தையும் தனக்குள் கொண்டவர், சகலத்தையும் செய்ய வல்லவர். அப்படியிருக்கும்போது நம் வாழ்வில் எதைக் குறித்தும் கலங்கத் தேவையில்லை. நம்முடைய ஆவிக்குரிய அறியாமை தேவனிடத்திலிருந்து வருகின்ற ஆசீர்வாதங்களை இழந்துபோகச் செய்கின்றது. தேவனுடைய ஐசுவரியம், தேவனுடைய வல்லமை ஆகியவற்றை அனுதினமும் அனுபவிக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

தேவனைப் பற்றிய நம்முடைய அறியாமை நம்மை பல தீமையான செயல்களை செய்கின்றவர்களாக்குகிறது. அது மனிதனை வீழ்ச்சிக்குள்ளாகத் தள்ளுகிறது. இன்று நம்மில் அநேகர் உலகப்பிரகாரமான காரியங்கள் மற்றும் அடுத்தவர்களின் விஷயங்கள் ஆகிய இவற்றை அறிந்து கொள்ள பிரயாசம் எடுக்கின்றோம். நாம் தேவனை அறிகிற அறிவில் எந்த அளவு வளர்ந்துள்ளோம். நாம் தேவ சாயலில் படைக்கப்பட்டவர்கள். ஆண்டவரைப் பற்றி அறிகிற அறிவில் நாம் வளரும்போது நாம் நம்மை அறிந்துகொள்ள முடிகிறது. ஆண்டவரை என் வாழ்வில் சரியாய் அறிந்து இருக்கின்றேனா?

நாம் ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவுக்குள் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ தேவனின் வல்லமை தேவைப்படுகிறது. நமக்குள் இருக்கின்ற அனைத்து தேவனின் செயல்களையும் சரியாகப் பயன்படுத்த அவருடைய வல்லமை நமக்குத் தேவைப்படுகிறது. தடையாக இருந்த செங்கடலை, எரிகோ கோட்டையைத் தேவனுடைய வல்லமை தகர்த்தெறிந்தது. நமக்குள் உள்ள தேவ வல்லமையை அறிந்து விரக்தியின் தன்மையை உடைத்தெறிவோம். ஆண்டவரே உம்மை அறிகின்ற அறிவில் வளரவும், என்னில் உள்ள உம் வல்லமையை அறியவும், உதவிசெய்யும் என்று கூறி இந்த புதிய நாளுக்குள் பிரவேசிப்போம். **தேவனே நான் உமதண்டையில், இன்னும் நெருங்கிச் சேர்வதே என் ஆவல். மாவலிய கோரமாக வன் சிலுவை மீதினில் நான், கோவே தொங்க நேரிடினும் ஆவலாய் உம்மண்டை சேர்வேன்.** இந்தப் பாடலின்படி நம்முடைய அர்ப்பணிப்பு உள்ளதா?

ஆண்டவரே, உம்முடைய வல்லமையைப் பெற்று தினமும் வாழ செய்யும். ஆமென்.

எபேசியர் 2:1–10

"ஆவிக்குரிய நிலை"

> உன் மீறுதல்கட்காய் இயேசு காயங்கள்பட்டார்; உன் அக்கிரமங்கட்காய்; அவர் நொறுக்கப்பட்டார்; உனக்காகவே அடிக்கப்பட்டார் உன்னை உயர்த்த தன்னைத் தாழ்த்தினார்"

கிறிஸ்துவை உறுதியாய் பற்றுகிறவனுடைய வாழ்வில் ஆவிக்குரிய நிலையைக் காத்துக்கொள்வது அவசியம். ஆனால் நம்முடைய வாழ்விலுள்ள குற்ற செயல்கள், பாவ செயல்கள், நாம் உயிரோடிருந்தாலும், நாம் மரித்தவர்களுக்குச் சமமாய் கடவுளுடைய பார்வையில் கருதப்படுகின்றோம். ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்து கொள்ள முடியாதவனாகவும், மதிப்பிட முடியாதவனாகவும் அவன் இருக்கிறான். இப்படிப்பட்டவன் எந்தவகையிலும் கடவுளை பிரியப்படுத்த முடியாது. பாவ வாழ்வில் நிலைத்திருக்கின்றவனுடைய நிலையும் பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது.

ஆன்மீக மரணத்திற்குக் காரணம் மனிதனுடைய அக்கிரமங்களும், பாவங்களுமே. திருமறையில் மரணம் என்கிற வார்த்தைக்குப் பொருள்: "பிரிக்கப்படுதல்". இது மனிதனைக் கடவுளுடைய உறவிலிருந்தும் அவருடைய தொடர்பிலிருந்தும் அவனைப் பிரிக்கிறது. என்னுடைய ஆவிக்குரிய நிலைமை உயிருள்ளதாய் இருக்கிறதா? அல்லது செயலற்றதாய் இருக்கிறதா? கிறிஸ்துவைப் பின்பற்றுகிற அநேக கிறிஸ்தவர்கள் கூட இவ்வுலக வழக்கத்திற்கேற்றப்படியாக நடக்கிறார்கள். தேவன் அனுமதிக்கின்ற ஒவ்வொன்றும் நன்மைக்கேதுவானது என்று உணர்ந்து கொள்ள வேண்டும். நம்முடைய எண்ணங்களும், செயல்களும், புரிந்து கொள்ளுதலும், திருமறை வழிகாட்டலின்படி மாறவேண்டும். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் என்னுடைய ஆவிக்குரிய நிலையை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

வச.5-7 இந்த வசனங்கள் அக்கிரமங்களில் மரித்தவர்களாய் இருந்த நம்மீது கடவுளின் அன்பு எப்படிப்பட்டதாய் செயல்படுகிறது என்பதை உணர்ந்துகொள்ள உதவுகிறது. உயிர்ப்பித்திருக்கிறது, உயர்த்தியிருக்கிறது, பாதுகாத்திருக்கிறது. அக்கிரமங்களுக்கும் பாவங்களுக்கும் எனக்கு சம்மந்தமில்லையென்று கூறுவோம். இந்த தீர்மானத்திற்கு ஆண்டவர் உங்களுக்கு உதவி செய்வார். ஆண்டவரே எங்கள் ஆவிக்குரிய நிலையைக் காத்துக்கொள்வதற்கு எங்களுக்கு உதவி செய்யும்.

தேவனே, என் ஆத்மாவும் சரீரமும் உமக்கே சொந்தம், ஆமென்.

எபேசியர் 2:11-22

"ஆவிக்குரிய சமாதானம்"

> சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.

இன்று உலக நாடுகள் சமாதான முயற்சிகள் பல எடுத்தும் அவைகள் தோல்வியில் முடிகின்றன. ஆனால் என்றென்றும் நீடிக்கப்போகிறதுமான "ஒரே சமாதான" முயற்சி நம்முடைய ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாக இன்றும் காணப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் வழியாக வருகின்ற சமாதான முயற்சியை அறிந்துகொள்வோம்.

சமாதான பயணம் முதலாவது துவங்க வேண்டிய இடம் நமது உள்ளம் மற்றும் நமது இல்லம். நமது உள்ளத்தில் துவங்கி நாம் வாழும் இடம், சமுதாயம், பணி செய்யும் இடம், திருச்சபை, உலகம்... என பரவ வேண்டும். தேவன் நமக்கு அமைத்து தந்த குடும்பத்தில் சமாதானமாக இருக்க முடியாததினால்தான் இன்று உலக நாடுகளிலும் சமாதானம் இல்லை.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இணைப்புப்பணி செய்கிறார் (வச.13). முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். பிரிந்து சென்றவர்கள் யாரிடமிருந்து பிரிந்து சென்றார்களோ அவர்களிடம் ஒப்புரவாகும்போது அங்கே சமாதானம் பிறக்கிறது. இயேசு கிறிஸ்து ஒப்புரவாக்கினது போல நாமும் பிரிவினை உள்ள இடங்களில் ஒப்புரவாக்குதல் செயலில் ஈடுபட்டு சமாதானம் உண்டுபண்ணுவோம்.

சமாதானம் ஏற்பட நமக்குள் ஏற்படவேண்டிய எண்ணம் "நாம் தேவனுடைய குடும்பத்திற்குள் இருக்கிறோம்" ஒரே குடும்பத்தின் பிள்ளைகள் என்ற உணர்வு வேண்டும். ஒரே வீட்டார், ஒரே ஆலயம். சமாதானம் வர ஒரே வழி "நாம் அனைவரும் ஒருவரே" என்ற எண்ணம்தான். இதற்காகத்தான் கிறிஸ்து பாடுபட்டார். எனவே கிறிஸ்துவைப் பின்பற்றுகிற நாம் "என்னையும் சமாதானத்தின் கருவியாக பயன்படுத்தும்" என ஆண்டவரிடம் வேண்டுதல் செய்வோம். "சமாதானத்தைக்கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து இரட்சிப்பை பிரசித்திப்படுத்துகிற சுவிசேஷனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன?"

ஆண்டவரே, என்னையும் சமாதானக் கருவியாக எடுத்து பயன்படுத்தும், ஆமென்.

மார்ச் 11
வெள்ளி

எபேசியர் 3:1–12

“ஆவிக்குரிய கிருபை”

> ஒரு கடைக்கு சென்று ஒரு பொருள் வாங்கும்போது கடைக்காரர் வாங்கிய பொருளுக்கு இலவசமாய் மற்றொரு பொருளை கொடுத்தால் அதுதான் கிருபையின் அர்த்தம்.

நம்முடைய கிறிஸ்தவ பயணத்தில் ஒவ்வொரு நாளும் அவருடைய கிருபை வெளிப்படுகிறது. கிருபை என்பது “தகுதி இல்லாத நமக்குக் கடவுள் அளிக்கும் ஈவு” ஆகும். பவுல் தன்னுடைய வாழ்வில் எல்லா நிலையிலும் தேவ கிருபையை உணர்ந்தார். அந்த கிருபையை தன்னுடைய நலனுக்காகவோ அல்லது தன்னுடைய மேன்மைக்காகவோ அவர் பயன்படுத்த விரும்பவில்லை. புதிய மொழிபெயர்ப்பில் (வச.2) “உங்கள் நலனுக்காகக் ஆண்டவரின் அருளால் எனக்களிக்கப்பட்ட பொறுப்பைப்...”. கர்த்தர் நமக்கு அளித்துள்ள பொறுப்புகளில் எந்தளவு பிறருடைய நலனில் அக்கரையுள்ளவராக காணப்படுகிறோம்.

நான் பிறருக்கு பயனுள்ள வாழ்க்கை வாழ வேண்டும். என்னுடைய பணி வழியாக பிறர் வாழ்வு பெற வேண்டும். பயன்பட வேண்டும். அதற்காகத்தான் தேவன் எனக்குத் தமது “கிருபையை” தந்துள்ளார். இது என்னுடைய தகுதியின் அடிப்படையில் கிடைத்தது அல்ல. தேவன் என்மீது வைத்துள்ள அன்பின் மூலமாக கிடைத்தது. ஆண்டவர் நம்மீது தமது கிருபையை தந்ததற்கான காரணம், நாம் ஊழியத்தின் பாதையில் நடத்தப்பட வேண்டும். என்பதற்காகதான் (வச.7, 8).

கிறிஸ்துவின் அளவற்ற செல்வத்தைப் பற்றிய நற்செய்தியை கிறிஸ்துவை அறியதவர்களுக்கு அறிவிப்பது நமது கடமை. இதனை பவுல் தன்னுடைய வாழ்விலிருந்து நமக்குக் கற்றுத்தருகிறார். கடவுள் எனக்கு தந்துள்ள அனைத்தும் கிருபையால் கொடுக்கப்பட்டது. அது பிறரைத் தேவனிடம் கொண்டுவருவதற்கே என்பதை நாம் உணரவேண்டும். நான் பிறரைக் காட்டிலும் ஏதாவது ஒன்றை சிறப்பாக செய்யக்கூடியவனாக இருந்தால், அதன் வழியாக கடவுளின் அன்பை மற்றவர்களும் அறிந்து கொள்ள வாழ வேண்டும் என்பதற்காகவே அச்சிறப்பு தன்மை நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. 1. தேவன் எனக்குத் தந்துள்ள பொறுப்பை எப்படி பயன்படுத்துகிறேன். 2. நான் என்னுடைய சிறப்புத் திறமையை எப்படி பயன்படுத்துகிறேன்.

ஆண்டவரே, நீர் எனக்கு கிருபையாக தந்தவைகளை பிறருக்கு என்று பயன்படுத்த உதவி செய்யும், ஆமென்.

எபேசியர் 3:14–21

"ஆவிக்குரிய வல்லமை"

சாத்தானின் சதிகளை ஒழிப்பதற்கு தேவனுடைய வல்லமையால் மாத்திரமே முடியும்.

அநேகர் தங்களுடைய விசுவாச வாழ்வில் தோல்விகள், பிரச்சனைகள் வருகின்றபோது, மிகவும் சோர்ந்துபோய் இருக்கிறார்கள். வேதாகம விசுவாச வீரர்கள் போன்றோர் உள்ளான மனிதனில் தேவ வல்லமையினால் பலப்படுத்தப்பட்டபடியினால் சிறைச்சாலையிலும் பாடல்பாடி மகிழ்வாக இருக்க முடிந்தது. இன்றைய நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அவருடைய வல்லமை தேவையான ஒன்றாக இருக்கிறது. தேவனுடைய வல்லமையை பெறுவது என்பது நம்முடைய ஆன்மீக புலன்களை தேவன் ஆட்கொள்வது ஆகும்.

நாம் கிறிஸ்துவுக்காக வைராக்கிய வாழ்வு வாழ அழைக்கப்பட்டுள்ளோம். தேவனுடைய வல்லமை நமது உள்ளான மனிதனைப் பெலப்படுத்தும்போது தேவனுக்காக பெரிய காரியம் செய்ய முடிகிறது. "ஆவிக்குரிய வல்லமை தேவனுக்காக தேவனோடு நாம் பெரிய காரியங்களைச் செய்ய தேவைப்படுகிறது". தேவனுடைய வல்லமை தேவனுடைய சபை தலைமுறை தலைமுறையாக பெலப்படுத்த தேவைப்படுகிறது. இன்று சபைகளில் தேவனுடைய வல்லமை (ஆளுமை) இல்லாதபடியினால் அநேக விரும்பப்படாத நிகழ்வுகள் நடைபெறுகிறது. "வல்லமை" என்ற வார்த்தை "செயல்படுதல்" என்று பொருள்படுத்தப்படுகிறது. இந்த வல்லமை உள்ளான மனிதனில் துவங்கி, சபையில் பரவ வேண்டும். என்னுடைய சபையில் தேவன் செயல்படுகின்றவராக இருக்கிறாரா? என்று சிந்திப்பது அவசியம்.

இன்று சபையில் யார் மகிமைப்படுகின்றார் என்பதை சிந்திப்பது அவசியம். இன்றைய சபையில் தேவன் மகிமைப்பட அவருடைய வல்லமை அவசியமான ஒன்றாக இருக்கிறது. நம்முடைய சபை தேவ வல்லமை நிறைந்ததாக காணப்பட நான் உழைப்பேன் என கூறி இந்த இனிய நாளை துவங்குவோம். 1. என்னில் மற்றும் என்னுடைய சபையில் யாருடைய ஆளுகை உள்ளது? 2. தேவனுடைய முழுமையான ஆளுகை கொண்டுவர நான் என்ன செய்ய வேண்டும்?

ஆண்டவரே, என்னுள், என்னுடைய சபையில் தேவனுடைய வல்லமை ஆட்கொள்ள உதவி செய்யும், ஆமென்.

பதறாதீர்!

துன்மார்க்கன் கர்த்தரை நம்பியிருக்கிறவனை பார்த்து பட்சியைப் போல உன் மலைக்கு பறந்து போ என்று கூறுகிறான். இது அநீதி நிறைந்த உலகம். நீதியுடன் வாழமுடியாதா?

இந்த சங்கீதம் உறுதியான நம்பிக்கையின் பாடல் எனலாம். கர்த்தர் நீதிமானை சோதித்து அறிகிறார் (வச.1-3). துன்மார்க்கரின் செயல்களில் கொடுமை (வச.4-7), கர்த்தர் பார்த்துக் கொள்வார்.

தாக்கப்படும் விசுவாசம் [வச.1-3]:- நண்பர்களையாவது, எதிரிகளையாவது பயன்படுத்தி நமது விசுவாசத்தை சேதப்படுத்த விரும்புபவன் சாத்தானே. சில நேரங்களில் பிறரிடம் இருந்து வரும் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் மூலமாகவும் இத்தாக்குதல் தொடர்கிறது. நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி... - எபேசியர் 6:11-17. பிசாசின் தாக்குதல் சோர்வின் உருவில் வருகிறது. அச்சுறுத்தலின் உருவில் வருகின்றது. நம்பிக்கை இழக்கச் செய்கிறது. அஸ்திபாரங்களும் நிர்மூலமாகிறதே. நீதிமான் என்ன செய்வான்?

தளர்ந்து போகாத விசுவாசம் [வச.4-7]:- நமது விசுவாசம் கர்த்தரை நம்பி அவரை மையமாகக் கொண்டிருக்கும்போது தளர்ந்து போவதில்லை. பாதாளத்தின் வாசல்கள் நம்மை மேற்கொள்வதில்லை (மத்தேயு 16:18). கர்த்தருடைய கண்கள் மனுபுத்திரரைப் பார்க்கிறது. அவருடைய இமைகள் சோதித்தறிகிறது. வச.4ல் அவரது கண்களுக்கு மறைவானது ஒன்றும் இல்லை. கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார். கர்த்தர் நீதியுள்ளவர். அவருடைய முகம் செம்மையானவர்களை நோக்கிப் பார்க்கிறது - வச.7. நம்மால் தீர்க்கமுடியாத தாங்க முடியாத பிரச்சனைகள், துன்பங்கள், இழப்புகள், நம்மை தாக்கும் போது எங்காவது ஓடிப் போகலாமா? கண் காணாத தேசத்துக்கு போகலாமா? என்று நினைப்பது மனித இயல்பு. ஓடிப் போக வேண்டுமானால் கிருபாசனத்தண்டைக்கு ஓடுவோம், இரக்கத்தைப் பெறுவோம். ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடைவோம். அவர் உன்னை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள். 1 பேதுரு5:7. உங்கள் விசுவாசம் சோதிக்கப்படும்போது மனிதரையோ, மாம்ச பெலத்தையோ சாராமல் கர்த்தரை நோக்கிப் பாருங்கள். அவர் உங்களை இரட்சிப்பார்.

ஆண்டவரே, சிக்கலான சமயங்களில் மனிதர்களின் வார்த்தைகளால் காயப்படும்போது உம்மை நம்பியிருக்க கிருபை தாரும். ஆமென்.

அர்ப்பணிக்கும் அன்பு

நாம் எவ்வளவு கொடுக்கிறோம் என்பதல்ல, அதை எவ்வளவு அன்பாகக் கொடுக்கிறோம் என்பதுதான் முக்கியம்.

இயேசு பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டில் போஜனபந்தியிருக்கையில் ஒரு பெண் விலையேறப்பெற்ற தைலத்தை இயேசுவின் சிரசின்மேல் ஊற்றினாள். இந்நிகழ்ச்சியை யோவான் எழுதும் பொழுது (யோ.12:13) அவள் மரியாள் என்று அடையாளப்படுத்துகிறார். இந்த மரியாள், மார்த்தாள் மற்றும் லாசருவின் சகோதரியாகக் காணப்படுகிறாள். மரியாளின் வலிமை வாய்ந்த ஒரு அர்ப்பணிப்பின் பங்களிப்பாக இந்நிகழ்வு காணப்படுகின்றது.

தன்னலமற்ற அன்பு : தன்னலம் பாராமல் பிறர்நலம் காணுவது. அன்பில் மிக சிறந்த அன்பு. இந்த விலை உயர்ந்த தைலத்தை தனக்கு என்று வைத்துக் கொள்ளாமல் இயேசுவின் சிரசில் ஊற்றி சந்தோஷமடைகிறாள். பலர் தன்னுடைய பொருளை தனக்காக தன் குடும்பத்திற்காக செலவிடுவதில் மகிழ்ச்சியடைவர். ஆனால் அதை பிறருக்கு கொடுத்து மகிழ்வது என்பது மிக சிறந்தது. இதுதான் மரியாளின் தன்னலமற்ற அன்பு.

விலைமதிப்பற்ற அன்பு : வச.4-ல் சிலர் கோபம் அடைந்து இந்த தைலத்தை இப்படி வீணாய் செலவழிப்பானேன். இதை முந்நூறு பணத்துக்கு அதிகமாக விற்றிருக்கலாமே என்றார்கள். பரிமள தைலத்தை ராஜாக்கள் அதிகமாக பயன்படுத்தினார்கள். 300 பணம் என்பது ஒரு வருட கூலியாகும். தன் அன்பு மிகுதியினாலே இத்தனை விலை மதிப்புடன் கூடிய தைலத்தை இயேசுவின் சிரசில் ஊற்றினாள்.

போற்றப்பட்ட அன்பு : வசனம் 8,9-ல் காணும்பொழுது அவளுடைய அந்த விலையேறப்பெற்ற அன்பு இயேசுவால் போற்றப்பட்டது. இயேசு அவள் செய்த நற்கிரியைகளை அங்கீகரித்து அவள் செய்ததைக்குறித்துப் போற்றினார். யுகோஸ்லாவியா நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்த கருணை தேவதை என்று அழைக்கப்பட்ட அன்னை தெரசா, ஆற்றிய சேவை, மற்றோரிடம் காட்டிய அன்பு, அநாதை மற்றும் குஷ்டரோகிகளையும், ஏழைகளையும் இறைவனிடம் இணைக்கச் செய்தது. அவர் காட்டிய அன்பு சமுதாயத்தில் இன்றும் போற்றப்படுகிறது.

பிதாவே, நான் உம்மையும், என்னையும், பிறரையும் நேசிக்க எனக்கு கிருபை தாரும். ஆமென்.

இராவிருந்து

> **திருவிருந்து என்பது திருப்பீடத்தில் மட்டும் நடப்பது அல்ல, ஒவ்வொருவரின் வாழ்விலும் நடப்பதேயாகும்!**

சமஸ்கிருத மொழியில் 'இராப்போஜனம்' என்று அழைக்கின்றனர். பன்னிரண்டு சீடர்களோடு இயேசு போஜனம் பண்ணுகையில், அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி சீடர்களுக்கு கொடுத்தார். இந்த விருந்து சமுதாயத்திலும், திருச்சபையிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இயேசுவின் இராவிருந்தின் சிறப்பு அம்சங்களை இன்றைய பகுதியில் காண்போம்.

நன்றியுணர்வு அன்பு : Euchavaisteo என்பதற்கு நன்றி கூறுதல் என்று பொருளாகும் **E'u**= நல்ல கேரிங் (xapcs = கருணை). ஆகவே கடவுளின் நல்ல கருணைக்காக நன்றி செலுத்தும் ஒரு விருந்தாகக் காணப்பட்டது. வச.22-ல் இயேசு அப்பத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி கூறுகின்றார். கடவுளுக்கு நாம் நன்றி கூறுவதும் நன்றியாக வாழ்வதும் இன்றியமையாததாக உள்ளது.

ஐக்கியப்படுத்தும் விருந்து : முற்காலத்தில் சீரியர்களுக்கு அன்பிற்கும் ஐக்கியத்திற்கும் அடையாளமான ஒரு வழக்கம் இருந்தது. தாங்கள் நண்பர்களில் ஒருவன் தாங்களைவிட்டுப் பிரிந்து செல்கையில் நிலையான அன்பிற்கு அடையாளமாக விருந்து அளிப்பது வழக்கம். "எங்கள் நட்பை, உறவை பிரிக்க முடியாது" என்று தன் கையால் நிறைவாக திராட்ச ரசம் பகிர்ந்தளிப்பார். ஆகவே இயேசு தம்முடைய சீடர்களோடு ஒரு மிக நெருங்கிய நட்பை விருந்தின் மூலமாக ஏற்படுத்துகின்றார்.

உடன்படிக்கையின் விருந்து : துவக்கக் காலங்களில் துன்புறுத்தப்பட்ட திருச்சபை மக்கள் ஒன்றாக அமர்ந்து, பொது உணவை உண்பர். பிற சமயத்தாரின் முன்னிலையில் நாங்கள் எச்சூழலிலும் கிறிஸ்துவின் பெயரில் ஒன்றுபட்டு நிற்கிறோம் என்பதைக்காட்ட உடன்படிக்கை செய்து கொண்டனர். தூய பவுலடியார் அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால் அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம் என்று கூறுகின்றார். இயேசு கிறிஸ்துவும் திருவிருந்தை உடன்படிக்கை என்று கூறுகிறார் (வச. 24). நாம் கடவுளின் இராபோஜனத்தின் வாயிலாக பாவமன்னிப்பாகிய உடன்படிக்கையை நாம் பெற்றுக்கொள்கிறோம்.

ஆண்டவரே, நீர் விரும்புகிற வண்ணம் நான் உமது பணியைச் செய்ய பெலன் தாரும். ஆமென்.

பேதுரு மறுதலிப்பதை பற்றிய முன்னறிவிப்பு

சீக்கிய மதத்தில் பிறந்த சாது சுந்தர்சிங் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு கடவுளின் பெலத்தினால் சுவிசேஷத்தை பிரசங்கித்தார்.

நீங்கள் அனைவரும் என்னைவிட்டு ஓடிப்போவீர்கள் என இயேசு தன்னுடைய இராவிருந்தை முடித்தவுடன் சீடர்களைப் பார்த்து கூறுகிறார். இடறல்டைவீர்கள் என்ற வார்த்தைக்கு பொது மொழி பெயர்ப்பிலே ஓடிப்போவீர்கள் என்ற வார்த்தை உபயோகிக்கப்படுகின்றது. பேதுரு தன்னை மறுதலிப்பதை இயேசு அறிந்து அதை முன்னறிவிக்கிறார்.

சொந்த ஆற்றலை நம்பின பேதுரு : வசனம் 29-ல் பேதுரு எல்லாரும் ஓடிப்போனாலும் நான் ஓடிப்போகமாட்டேன் என்று கூறினான். தன்னுடைய சொந்த ஆற்றலை நம்பி இடறலடையேன் என்றான். நான் மறுதலிக்க மாட்டேன் என்று எண்ணியது தோல்வியில் கொண்டு போய்விட்டது. (சங்.94:18) நாம் விழாதிருப்பது கர்த்தருடைய கிருபையே என்று தாவீது கூறுவது போல நாம் கர்த்தரை நம்ப வேண்டும். ஆண்டவருடைய பலம் தன்னில் இருந்ததால்தான் கோலியாத்தைப் பார்த்து தாவீது கொஞ்சமும் பயப்படவில்லை. என்னுள் ஆண்டவரின் பலம் இருக்கின்றதா?

வார்த்தையை ஏற்றுக் கொள்ளாத பேதுரு : இயேசு பேதுருவிடம், சேவல் கூவுவதற்கு முன்னே நீ என்னை மறுதலிப்பாய் (வச.29-31) என்றார். சேவல் கூவுதல் என்பது ரோமக் கணக்கெடுப்பின்படி நடுநிசியிலிருந்து அதிகாலை 3 மணி வரையுள்ள நேரத்தைக் குறிக்கும். பேதுரு இயேசுக் கூறிய வார்த்தையை ஏற்று கொள்ளுகின்ற மனம் உடையவனாக இல்லை. இயேசுவின் வார்த்தைகளை கேட்டு கீழ்படிந்திருந்தால் இயேசுவிடம் நான் உம்மை மறுதலிக்காமல் இருக்க எனக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள் என்று கேட்டிருப்பான். மேலும் இயேசுவானவர் ஜெபித்தபோது தானும் உடன் சேர்ந்து ஜெபித்திருப்பான். ஆனால் அவன் தன் சுய பெலத்தை நம்பிவிட்டான்.

நாமும் கூட பேதுருவைப்போல் சொந்த திறமைகளை நம்பி, ஆண்டவரின் வார்த்தைக்கு இடம் கொடாமலும் ஏற்றுக் கொள்ளாமலும் இருக்கிறோம். பரிசுத்த ஆவியின் வல்லமையை சார்ந்து நிற்க பேதுரு பழகியபின் தைரியமுள்ளவனாக பேச ஆரம்பித்தான்.

ஆண்டவரே! எத்தனை துன்பங்கள் வந்தாலும் உம்மில் நிலைத்திருக்க எனக்கு பெலன்தாரும். ஆமென்.

மாற்கு 14:32–42

கெத்செமனேயில் இயேசு

> துராசை நீங்கத்தக்கதாய் தெய்வன்பை ஊற்றிடும்; கற்போன்ற நெஞ்சை மெழுகாய் உருகச் செய்திடும்.

கெத்செமனே என்பது ஒலிவ மரங்களால் நிறைந்த தோட்டமாகும். கெத்செமனே என்றாலே இயேசுவின் பாடுகளும் அவரின் மன வேதனைகளும் ஆரம்பமான ஓர் அனுபவமாகும். யோவான் 18.1 ல் ஆற்றுக்கு அப்புறத்தில் உள்ள தோட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பிதாவோடு நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தும் தோட்டம் : வச.32-ல் நாம் காணும்பொழுது இயேசு ஜெபம் பண்ணும்படி அந்த தோட்டத்திற்குள் சென்றார். அந்த தோட்டத்தை இயேசு பார்க்கும்படியல்ல, ஜெபம் பண்ணும்படி சென்றார். ஏனெனில் அவருடைய ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருந்தது. இயேசுவுக்கு நெருங்கிய ஒரு ஜெப உறவு நிலையை ஏற்படுத்தி கொடுத்த தோட்டமாக காணப்பட்டது. ஜெபம் என்பது நம்மை இறைவனோடு இணைப்பது. எனவே பிதாவோடு நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொள்ளவும், தன்னுடைய மனபாரத்தை பிதாவோடு பகிர்ந்து கொள்ளவும் விரும்பினார். சீடர்களை அருகில் வைத்து ஜெபிக்காமல், தனித்துப் போய் ஜெபிக்க ஆரம்பித்தார். அவருடைய உணர்வுகளின் வெளிப்பாட்டால் வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாக விழுந்தது. தன்னுடைய இக்கட்டான நிலைமையை பகிர்ந்து, நல்ல ஒரு தீர்வை பெற்றுக் கொள்ளக்கூடிய அளவு அந்த ஜெபவேளை இயேசுவுக்கு அமைந்திருந்தது.

பிதாவின் சித்தத்தை அறிந்த தோட்டம் : வச.36-ல் இயேசு பிதாவின் சித்தத்திற்கு தன்னையே ஒப்புக்கொடுக்கின்ற ஒரு தோட்டமாக அது அமைந்து இருந்தது. பிதாவே இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும் என்று கேட்கிறார். எல்லா காரியங்களிலும் இயேசு நமக்கு முன்மாதிரி என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு. ஜெபம் என்பது நம்முடைய விருப்பத்தை தேவனுக்கு தெரியப்படுத்தி இறைவனின் சித்தத்திற்கு காத்திருக்கும் நேரமாகும். ஜெபிக்கும் நேரத்தில் நம்மை முற்றிலுமாக ஆண்டவரிடம் ஒப்படைத்து விட வேண்டும். அப்பொழுது தேவன் தம்முடைய சித்தத்தின்படி நம்முடைய விருப்பங்களை நிறைவேற்றுவார்.

ஆண்டவரே, நாம் உம்மோடு நெருங்கி வாழவும், உம் சித்தம் அறிந்து அதற்கு கீழ்ப்படியவும் எனக்கு கிருபை தாரும். ஆமென்.

யூதாசின் நம்பிக்கை துரோகம்

> **அன்பு விசுவாசமும் நம்பிக்கை இம்மூன்றிலும் ஒப்பற்ற மேலானதும் அன்பே, ஈயுமேன்.**

முத்தம் நட்பின் அடையாளம். ஆனால் யூதா முத்தத்தை ஓர் வஞ்சக அலைது ஏமாற்றுதலுக்கு அடையாளமாக மாற்றினான். ஸ்காரியோத் என்னும் ஊரைச் சேர்ந்தவராதலால் யூதாஸ்காரியோத் என்று அழைக்கப்பட்டான். இவன் இயேசுவின் சீடனாக இருந்தான். பணப் பொறுப்பு அவனிடம் கொடுக்கப்பட்டது. ஆண்டவரால் அப்போஸ்தலன் என்று அழைக்கப்பட்டவனாக இருந்த போதிலும் இயேசுவின் நம்பிக்கைக்கு எதிர் மறையான காரியங்களை செய்துவிடுகிறான்.

வஞ்சக அர்ப்பணிப்பு : மாற்கு14:14-ல் நான் எவனை முத்தஞ் செய்வேனோ அவன்தான் இயேசு, அவனை பிடித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருந்தான். அவன் எதற்காக அழைக்கப்பட்டானோ, அந்த அழைப்பின் தன்மையை மறந்து பணத்தின்மேல் நாட்டங்கொண்டவனாக பின்மாற்றம் அடைந்தான். இயேசு அவன் நிலையைப் பார்த்து 'ஐயோ' என்று வருந்தினார். கெத்செமனேயில் இயேசு யூதாவிடம் "சிநேகிதனே என்னத்திற்காக வந்திருக்கிறாய்" எனக் கேட்டு இறுதி வேளையில் அவன் மனம் திரும்ப வாய்ப்பளித்தார். அவன் அதை பயன்படுத்தவில்லை.

சுயசித்தம் ஆட்டிப்படைத்த யூதா : மரியாள் இயேசுவின் சிரசில் தைலத்தை வார்த்த போதே யூதா அதை வீண் என்று புலம்பினான். இயேசுவின் சித்தத்திற்கும், யூதாவின் சித்தத்திற்கும் இடையே பெரிய இடைவெளி இருந்தது. திருமறை கூறுகிறது யூதாவுக்குள்ளே சாத்தான் புகுந்தான் என்று. எனவே யூதா பிசாசின் சித்தத்தை மனதில் நிறுத்தினவனாக இயேசுவுக்கு எதிராக செயல்பட ஆரம்பித்தான். எப்பொழுது நாம் இறைவனின் சித்தத்திற்கு எதிராக செயல்படுகிறோமோ அப்பொழுதே இறைவனின் சந்நிதியிலிருந்து வெளியேறி விடுகிறோம். ஆதாம், ஏவாள் கர்த்தர் புசிக்கக்கூடாது என்று கூறின கனியை புசித்தவுடனே தோட்டத்தை விட்டு விரட்டப்பட்டார்கள். ஆண்டவரின் சித்தத்தை நாம் கேள்வி கேட்க இயலாது என்பதை யோபுவின் சரித்திரத்தில் நாம் புரிந்துக் கொள்ளமுடியும். என் சித்தம் அல்ல உம் சித்தம்; என்னாலே அல்ல உம்மாலே ஆகும் என்று நாம் எப்போது சொல்லப் போகிறோம்?

> **பிதாவே, நான் இழிவான ஆதாயத்திற்காக உம்மைப் பின்பற்றாமல், உமது அன்பினிமித்தம் உம்மைப் பின்பற்ற எனக்கு கிருபை தாரும். ஆமென்.**

மறுதலித்த பேதுரு

> **மறுதலித்த பேதுரு மனங்கசந்து அழுதார். மனதுருக்கமுள்ள இயேசு கிறிஸ்துவின் பார்வை ஒப்புரவாக்கியது.**

பேதுரு இயேசுவின் நெருங்கிய நண்பர். அப்போஸ்தலர்களில் தலைமையானவர். தன் அந்தஸ்தை எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவை பின்தொடர்ந்தவர். ஆனால் சூழ்நிலைகள் மற்றும் உபத்திரவங்கள் நேரிடும்போது இயேசு யார் என்று மறுதலிக்கிறார்.

இயேசுவுடன் நடக்காத பேதுரு : வச.54 பேதுருவின் இருதயம் இயேசுவோடு பாடுகளைப்பட இயலாததால் தூரத்திலே போய்விட்டார். சமுதாய, சமய அரசியலின் அதிகாரத்திற்கு பயந்தவனாய் இயேசுவை விட்டு தூரம் செல்லுகிறார். இயேசுவோடு இணைந்து தன்னை பாடுகளுக்கு பங்காளியாக கொண்டிருக்காமல், குளிர்காய்ந்து கொண்டு தன் சுகமான வாழ்வை விரும்பினார்.

முதல் நிலை : பேதுரு உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும் நான் இடறலடையேன் என்று நின்றார். இயேசு அவனை நோக்கி சேவல் இரண்டுதரம் கூவுவதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்கின்ற வசனத்தை நினைவு கூர்ந்து மாற்கு 14:72 பேதுரு மனங்கசந்து அழுகிறார். இதுவே முதல் நிலையான மனம் திரும்புதல்.

இரண்டாம் நிலை : கூட்டத்தை விட்டே வெளியே போனார். அவிசுவாசிகளின் ஐக்கியத்தை அறுத்து எறிந்து விட்டார். கர்த்தர் அவனை நோக்கி பார்த்ததும் வெளியே போனான் லூக்.24:61. பாவத்தையும் அவிசுவாசிகளின் ஐக்கியத்தையும் விட்டு இயேசுவை சந்தித்தலே இரட்சிப்பின் நேரம் ஆகும்.

மனம் கசந்து அழுதான் : மாற்கு 14:72-ல் இயேசுவின் பார்வையும், பாடுகளும் பேதுருவின்மேல் ஊடுருவிப்பாய்ந்தது. உடனே பேதுரு மனங்கசந்து அழுதார். தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனம்திரும்புதலை உண்டாக்குகிறது (2கொரி. 7:10). மனங்கசந்து அழுத பேதுரு தன்னை மனம் திரும்ப ஒப்புக்கொடுக்கிறார். ஆண்டவரிடம் நாம் முற்றிலும் மனம்மாற அர்ப்பணிக்கும்போது உண்மையான மனநிறைவை நாம் பெற்றுகொள்கிறோம்.

பிதாவே, எங்கள் பாவங்களுக்காக மனம் கசந்து அழுது, மனந்திரும்பி உம்மோடு ஒப்புரவாக கிருபை தாரும். ஆமென்.

மாற்கு 11:1–11

விசுவாசமும் அற்புதமும்

> எனக்காக யாவையும் செய்து முடிக்கிறவரே, உம்மையே விசுவாசித்து அற்புதத்தை பெற்றுக் கொள்ள உதவி செய்யும். ஆண்டவரே.

இயேசுவின் குருத்தோலைப் பவனி பெத்தானியா, பெத்பகேயில் தொடங்கி எருசலேம் வந்தடைந்தது. பெத்தானியா என்பதன் பொருள் - "கர்த்தரின் பரிசாம் வீடு". பெத்பகே என்பதன் பொருள் - "வாயின் வீடு" இயேசு தம் வாயின் போதனையின் வழியாக அநேகரை தம்மிடம் வழிநடத்தினார் என்பதை 'பெத்பகே' என்ற வார்த்தையை குறிக்கும்.

மேசியாவின் சின்னம் : இயேசு மேசியா என்பதை தம் பவனியின் வழியாக வெளிப்படுத்துகின்றார். சீயோன் குமாரத்தியே மிகவும் களிகூறு. கழுதையின் மேலும் கழுதைக்குட்டியாகிய மரியின் மேலும் ஏறிவருகிறவராயிருக்கின்றார் என்று சக.9:9 தீர்க்கன் குறிப்பிடும் வண்ணமாக ஜனங்கள் இயேசுவை மேசியாவாக எண்ணி திரளான ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள். யாரும் தங்களுடைய வஸ்திரத்தை கழுதையின் காலடியில் மிதிப்பதற்காக போடுவதில்லை. ஆனால் தங்களுடைய மேன்மையான வஸ்திரத்தை மேசியாவுக்காக கொடுக்க ஆயத்தமானார்கள். ஏனெனில் மேசியாவின் வருகையால் தங்கள் வாழ்க்கை மீண்டும் பொற்காலத்தை நோக்கிச் செல்லும் என்று எண்ணினர். தாவீது அரசன் காலத்தைப் போன்ற வெற்றியுள்ள, பயமில்லாத சுகமான வாழ்வு கிடைக்கும் என்பதை நினைத்து ஏக்கம் கொண்டனர்.

சமாதானத்தின் சின்னம் : குதிரை யுத்தத்தின் சின்னமாக உள்ளது. ஆனால் இயேசு கழுதையில் பவனியாக வந்ததற்கு காரணம் தான் சமாதானம் தருகின்றார் என்பதுதான். இயேசு நமக்கு சமாதானம் தரவே பவனி வந்தார். யோ.14:27 சமாதானத்தையே கொடுப்பதற்காக இவ்வுலகில் அவர் பவனியாக வந்தார். உம்மை பின்பற்றுகிறவர்களும் சமாதானத்தின் கருவிகளாக விளங்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். ஆகவேதான் சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள் என்று மலைப்பிரசங்கத்தில் இயேசுவானவர் குறிப்பிடுகிறார். இன்றைய உலகில் எங்கு பார்த்தாலும் சமாதான குறைச்சல். நம் நாட்டின் சமாதானத்திற்காக ஒருநாளாவது நாம் ஜெபித்ததுண்டா? ஜெபிக்காவிடில் நமது நாட்டின் சமாதானத்துக்காக ஜெபிப்போம்.

> ஆண்டவரே, என்னையும் சமாதான கருவியாகப் பயன்படுத்தும். ஆமென்.

மாற்கு 14:66–72

விழுதலும், எழுதலும்

> சுய ஞானத்திலும், சுய பெலத்திலும் காரியங்களைச் சாதிக்க நினைத்தால் தோல்வியடைவோம் என்பது நிச்சயம்.

மறுதலித்தது ஏன்? : இயேசுவின் சீஷன் என்பதால் அவனுக்கு வீழ்ச்சியே இல்லை என்பது தவறு. "எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக் காலும் இடறலடையேன்" என்ற அளவுக்கு மீறிய தன்னம்பிக்கையும் (சுய நம்பிக்கை), இயேசுவையே கடிந்து கொள்ளுமளவுக்கு இருந்த துணிச் சலும் (குறைகாணுதல்), ஜெபிக்க வேண்டிய நேரத்தில் தூங்கியதும் (செய்ய வேண்டியதைச் செய்யாமலிருத்தல்), இயேசுவைப் பிடித்ததும் அவரை விட்டு விட்டு சீஷர்களோடு ஓடிப்போனதும் (பயம்), இயேசுவை ஏற்காத மக்கள் கூட்டத்தோடு குளிர்காய்ந்ததும் (தவறான ஐக்கியம்) ஆகியன இயேசுவை மறுதலிக்கும் அளவுக்குப் பேதுருவை வீழ்ச்சியடையச் செய்தன. இயேசுவை விட்டு நம்மை வேறுபடுத்தும் செயல்கள் என்னென்ன நம்மிடத்தில் உள்ளன?

மறுதலித்தது எதை? : மரிக்க நேர்ந்தாலும் உம்மோடிருப்பேன் என்று உறுதியளித்தவன், பின் விளைவுகளைச் சிந்திக்காமல் இயேசுவைப் பிடிக்க வந்தவனின் காதைத் தைரியமாய் வெட்டியவன், இப்போது தடுமாறி 1)இயேசுவோடிருந்ததை மறுதலித்தான் (வச.67). 2) தான் இயேசுவின் சீஷர்களில் ஒருவன் என்பதை மறுதலித்தான் (வச.69). 3) அவனிடமிருந்த கிறிஸ்துவைப் பிரதிபலித்துக் காட்டிய பண்புக்காக இயேசுவை மறுதலித்தான் (வச.70). மக்கள் முன்பாக இயேசுவை அறிக்கையிட்டால் அவரும் பிதா முன்பு நம்மை அறிக்கையிடுவார். மறுதலித்தால் அவரும் நம்மை மறுதலிப்பார்.

மறுதலித்த பின் என்ன? : தான் இயேசுவை மறுதலித்தது தவறு என்பதை உணர்ந்து, மனங்கசந்து அழுது தன் மனமாற்றத்தை வெளிப் படுத்தினான். இயேசு அவனது மனமாறுதலை அங்கீகரித்து, மனிதரைப் பிடிக்கும் உன்னதமான பணிக்கு மீண்டும் அழைத்தார். நம் தவறுகளை உணர்ந்து ஆண்டவரிடம் திரும்பும்போது அவர் நம்மை மன்னித்து தம் முடைய கிருபைக்கு உட்படுத்துகிறார். ஆனால் இந்த கிருபையைப் போக்கடிப்பவர்கள் பலருண்டல்லவா!

கர்த்தாவே, எந்தச் சூழ்நிலையிலும் உம்மை மறுதலிக்காமல், உறுதியாய் நிற்க என்னைப் பெலப்படுத்தும். ஆமென்.

மக்களை பிரியப்படுத்தின பிலாத்து

யாருக்காய் வாழ்கிறாய் நீ? இந்த வையகம் தனிலே வாழ்கின்ற நாட்களெல்லாம், யாருக்காய் வாழ்கிறாய் நீ?

கி.பி.26 முதல் 36 வரை யூதேயாவில் ரோமப் பேரரசின் முகவராக அல்லது மாகாணக் கருவூல அதிகாரியாகப் பிலாத்து செயல்பட்டார். மக்களைப் பிரியப்படுத்தி இயேசுவை கொலை செய்ய தன்னை அர்ப்பணிக்கிறதை நாம் மூன்று விதங்களில் காண்போம்.

ஜனங்களை பிரியப்படுத்திய பிலாத்து : வச.9,10 பொறாமையினாலே அவரை ஒப்புக்கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்து ஜனங்களை நோக்கி யூதருடைய ராஜாவை உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்களா என்று கேட்டான். ஜனங்கள் விருப்பத்திற்கு தன்னை முற்றிலுமாக இணைத்துக்கொண்டான். இயேசுவைக் குறித்து எந்த ஒரு குற்றமும் அறியாதவர் என்று தெரிந்தபோதும் ஜனங்களை பிரியப்படுத்துகிறார். நீதியை நிலைநாட்ட வேண்டியவன் மக்களிடம் ஆலோசனைக் கேட்கிறான். தீமை செய்யவேண்டுமென்று இருக்கிற கூட்டத்தோடு ஆலோசனை கேட்டால் எப்படி நியாயம் கிடைக்க இயலும்?

பொறுப்பை மறந்த பிலாத்து : வச.12-ல் தீர்ப்பளிக்க அதிகாரமுடைய பிலாத்து தன்னுடைய பொறுப்பு அதிகாரம் எல்லாவற்றையும் இழந்தவனாய் ஜனங்களைப் பார்த்து யூதருடைய ராஜாவை நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். இயேசுவை நன்கு அறிந்தும், அவனுக்கு அதிகாரமும், பொறுப்பும் இருந்த போதும் இயேசுவை கொலை செய்ய ஒப்புவிக்கிறான்.

துன்பத்திற்கு உட்படுத்தாத பிலாத்து : வச.:15 பரபாசை விடுதலையாக்கி இயேசுவை கொலைசெய்ய ஒப்புக்கொடுத்தான். இயேசு ஒரு குற்றமற்றவர் என்று அறிந்தும் தன்னை இயேசுவோடு இணைத்துக்கொள்ளாமல் ஜனத்திற்காக தன்னை அர்ப்பணிக்கிறான். இயேசுவோடு துன்பத்திற்கு தன்னை இணைத்து கொண்ட மாபெரும் தியாகி டாமியன், தென் பசிபிக் தீவில் தொழுநோயால் மக்கள் பாதிக்கப்பட்ட நேரம், 'மக்களால் கைவிடப்பட்டவர்கள் கடவுளால் கைவிடப்பட்டோம்' என்ற முடிவுக்கு வந்த மக்களை சந்தித்து 12 வருடம் அவர்களோடு அயராது உழைத்தவர் டாமியன், துன்பத்தில் வாழும் மக்களோடு தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஆண்டவரே, நான் என் வார்த்தையாலும் வாழ்க்கையாலும் உம்மைப் பிரியபடுத்த எனக்கு அருள் தாரும். ஆமென்.

நிந்தனையை சுமந்த இயேசு

> இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல.

பிலாத்து இயேசுவை தண்டனைக்கு ஒப்புக் கொடுப்பதற்கு முன்பாக போர் சேவகரின் கூட்டம் முழுவதையும் வரவழைத்து இயேசுவை நிந்தித்தார்கள்.

பண்டிகை காலங்களில் இகழ்ச்சி என்பது ஒரு பாதகமாக அமைந்து, யாரையாவது அவமானம் செய்து கூத்தாடுவது ரோம வழக்கில் காணப்பட்டது. போர் சேவகர் கூட்டம் என்பது கிட்டதட்ட 600 பேர்கள் அடங்கிய அரண்மனையில் உள்ள சேவகர் கூட்டத்தை குறிக்கும். மத்தேயுவில் அவரது கையில் கோல் கொடுத்ததாக உள்ளது (மத். 27:29). இந்நிகழ்ச்சி அவமதிப்புக்கு அடையாளமாக காணப்பட்டது. இவ்விதமாக இயேசு தம்முடைய மரணத்தை சந்திப்பதற்கு முன்னதாக நிந்தனை அடைந்தார். ஏசா.53:3 தீர்க்கன் வாக்குரைத்த வண்ணம் அவர் அசட்டைப்பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார். அவரைவிட்டு நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம். அவர் அசட்டை பண்ணப் பட்டிருந்தார். அவரை எண்ணாமற்போனோம் என்கிற வசனத்தின்படி நாம் நிந்திக்கப்படுவதற்கு பதிலாக அவர் அத்தனை நிந்தனைகளையும் ஏற்றுக்கொண்டார்.

கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் சிமிர்னா என்ற இடத்தில் பேராயராக வாழ்ந்தவர் போலிகார்ப். வாழ்வில் எத்தனையோ நெருக்கமும், அவமானமும் சந்தித்த அவர் ஒரு நாள் சிமிர்னா இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு பல வேதனைகளுக்கு ஆளானார். அவரை பிடித்த போர்ச்சேவகர்கள் இயேசுவை மறுதலிக்க கட்டாயப் படுத்தினார்கள். ஆனால் பிஷப் போலிகார்ப் அஞ்சாத நெஞ்சத்தால் இயேசு எனக்கு எந்த ஒரு தீமையும் செய்யவில்லை எப்படி அவரை மறுதலிப்பேன் என்று கூறினார். உடனே சிமிர்னா இராணுவத்தினர் அவரை நெருப்பில் போட்டனர். ஆனால் நெருப்பு அவரை பற்றிப்பிடிக்கவில்லை. கடைசியாக அவர் ஈட்டியால் குத்தி கொலை செய்யப்பட்டார். நாம் எப்படி வாழ்கிறோம்? அவமானங்களும் இகழ்ச்சிகளும் வரும்பொழுது கிறிஸ்துவுக்காய் சாட்சியாய் வாழ கற்றிருக்கிறோமா?

ஆண்டவரே, எத்தனை உபத்திரவங்கள் வந்தாலும் எந்த சூழ்நிலையிலும் உம்மை மறுதலித்துவிடாதபடி என்னை காத்துக் கொள்ளும், ஆமென்.

மாற்கு 15:21–32

இயேசுவின் பாடுகளில் சீமோன்

எந்த நிலையில் நான் இருந்தாலும், என்னை ஒருபோதும் தள்ளாமல் என்னை அங்கீகரித்து கொள்ளும் உமது அன்புக்காக உமக்கு நன்றி.

சிரேனே என்னும் ஊர் வடக்கு ஆப்பிரிக்காவில் உள்ளது. சிரேனே ஊரானும், அலெக்சந்தருக்கும் ரூப்புக்கும் தகப்பனுமாகிய சீமோன் எனப்பட்ட ஒருவனை அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி பலவந்தம் பண்ணினார்கள்.

அந்நியனான சீமோன் : சீமோன் ஒரு யூதன். யூதர்கள் பொதுவாக எருசலேமிற்கு பஸ்காவை பலியிடுவதற்கு வருவார்கள். இந்த சீமோன் எருசலேமிற்கு வந்தபோது அவனை பலவந்தம் பண்ணினார்கள். இயேசுவை அறியாதவனாய் இருந்தபோதும் சீமோன் தன்னை ஒரு அடிமையாக மாற்றிக் கொண்டு, சிலுவையை சுமக்கிறான். ஒரு கிறிஸ்தவன் இயேசுவின் சிலுவையை அனுதினமும் சுமக்கிறவனாக இருக்கவேண்டும் மற்றவர்களுக்கு உதவி செய்வதும் துயரத்தில் பங்கு கொள்வதும் கிறிஸ்தவத்தின் மேலான உதவியாகும்.

சுமையை ஏற்றுக்கொண்ட சீமோன் : இயேசுவின் பாரம் நிறைந்த சிலுவையை தன் சுமையாக ஏற்றுக்கொண்டு சுமக்க தன்னை அர்ப்பணித்தான். சிலுவை என்பது ஒரு கொலைக் கருவியாகும். இது ரோம பேரரசின் நாட்களில் ரோமர்கள் அல்லாத பிற சமுகத்தினரை குற்றவாளிகளாக பிடித்து, கொலை செய்து தண்டிக்கிற ஒரு தண்டனை முறைக்கு பயன்படுத்தப்பட்ட கொலைக் கருவியாகும். ரோமர், கிரேக்கர், யூதர் முதலானவர்களால் அவமானத்தின் அடையாளமாக, சாபத்திற்கானவர்களை கொலை செய்ய பயன்படுத்தப்பட்டதுதான் மரசிலுவை. சாபத்தின் அடையாளமான சிலுவையில் இயேசு கொலை செய்யப்பட்டதால் அச்சிலுவை புனிதமானது. அதுபோலவே சிலுவையாகிய பாடுகளை சுமப்போர் இயேசுவின் பாடுகளுக்கு பங்காளிகளாகிறார்கள் மற்றும் புனிதமாக்கப்படுகின்றனர். இவ்வாறாக சீமோனும் இயேசுவின் பாடுகளுக்கு பங்காளியாக மாற்றப்பட்டு புனிதமானான். நாமும் இயேசுவின் பாடுகளுக்கு நம்மை அர்ப்பணித்துகொள்வோம். நாம் ஒவ்வொருவரும் அவரவர் சிலுவையை எடுத்துக் கொண்டு இயேசுவின் பாடுகள் வழியாய் செல்வோம். வாடாத ஜீவ கிரீடத்தைப் பெற்று இறைவனோடு இணைந்து நித்திய நித்திய காலமாய் வாழுவோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, நாளும் உமது சிலுவைப் பாடுகளில் என்னை இணைத்துக் கொள்ள எனக்கு பெலன்தாரும். ஆமென்.

மாற்கு 15:33–41

துன்புறும் இயேசு

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே... அன்பை விளங்கப் பண்ணுகிறார்.

ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு, 'ஏலி ஏலி லாமா சபக்தானி!' என்று மிகுந்த சத்தமிட்டு கூப்பிட்டார் அதற்கு என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம். இயேசு தம் பிதாவை நோக்கி என் தேவனே என் தேவனே என்று இறைவனோடுள்ள பாசப்பிணைப்பினை வெளிக்காட்டினார்.

துன்புறும் தூயோர் : விசுவாசிகளாகிய நாமும் வேதனை, விபத்து, வியாதி வருகையில் ஏன் என்கின்ற கேள்வி எழுப்புகின்றோம். நகோமி தன் கணவனை இழந்து, தன் தாய் நாடு வருகையில் தன் ஊர் மக்களிடம் என்னை மாராள் என்று கூறுங்கள் என்றாள். விசுவாசிகளின் வாழ்விலும் இத்தகைய வேதனைகள் வரலாம் என்பதை இயேசு செயல் விளக்கமாக தன் வாழ்வின் வாயிலாக மெய்ப்பித்து காண்பிக்கிறார். அவர் பாடுபடுகையில் அகில உலகத்தின் பாவமும் அவர்மேல் வர, என் தேவனே, என் தேவனே என்று கூப்பிடுகிறார். பாவமறியாத இயேசு நமக்காக பாவமாகி, பாவம் தரும் வேதனையை சுமக்கிறார்.

துன்புறும் ஊழியன் : தூய பவுலடியார் தனக்கிருந்த முள் நீங்க மும்முறை வேண்டினார் இறைவன் எடுக்கவில்லை. என் கிருபை உனக்குப்போதும் என்றார் (2 கொரி.12:7-9). தன்னை நிர்ப்பந்தமான மனுஷன் என்றார். நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார் என்பதை உணர்ந்து, பாடுகளின் மத்தியில், "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?" என்று அறைகூவல் விடுக்கிறார்.

பாவப் பிரிவினை : ஏசா.59:1,2 இரட்சிக்கக் கூடாதபடிக்கு கர்த்தருடைய கை குறுகிப் போகவில்லை. கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் தேவனுக்கும் நடுவாக பிரிவினை உண்டாக்குகிறது. இதனுடைய விளக்கமே என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர். பாவம் மனிதனை கடவுளிடமிருந்து பிரிக்கிறது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, எனக்காக என் பாவம் மன்னிக்க நீர் பட்ட பாடுகளுக்காக உமக்கு நன்றி சொல்லுகிறேன். ஆமென்.

கனம் பொருந்திய யோசேப்பு

இயேசு சிலுவையில் மரித்தபின் அவரது சரீரத்தை அடக்கம் செய்ய முந்திக்கொண்டு.... நல்லடக்கம் செய்த யோசேப்பு.

செல்வந்தனும் சனகெரிப் சங்கத்தின் அங்கத்தினனும் அரசியல் செல்வாக்கு மிக்கவருமாகிய யோசேப்பு ஆண்டவருடைய சீடர்களில் ஒருவராக இருந்திருக்கலாம். அவனுடைய ஊர் அரிமத்தியா. அவருக்கென கல்லறை எருசலேமில் இருந்தது என்பதால் ஒரு வேளை அவர் எருசலேமில் அடியுரியவராக இருக்கலாம். இந்த அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு இயேசுவின் இறப்பிற்கு பின் இங்குதான் முதன் முதலில் அறிமுகமாகிறார். வச.15:43 யோசேப்பின் குண நலன்களை நாம் காண்போம்.

காத்திருந்தவன் : வச.15:43-ல் நாம் பார்க்கும்போது இவன் தேவனுடைய இராஜ்ஜியம் வர காத்திருந்தவன் என்று கூறுவதை நாம் காண்கிறோம். தேவனுடைய இராஜ்ஜியம் வர காத்திருந்தவன் என்பது மேசியாவின் வருகைக்காக வரக்காத்திருந்த உண்மையான யூதன் எனப்பொருள்படும். இவன் கடவுளின் வருகைக்காக தன்னை தயார்படுத்திக் கொண்டு காத்திருக்கிறான். நாமும் கூட நம்முடைய இரட்சிப்புக்காக ஆண்டவர் வருகையில் காத்திருக்கிறோமா?

துணிந்த யோசேப்பு : வச.43ஆ பிலாத்துவினிடத்தில் துணிந்துபோய் இயேசுவின் சரீரத்தை கேட்டான். எருசலேம் வாசி ஒருவர் சீடரானார் என்பது ஆச்சரியமாகும். ஆனால் இரகசிய சீடராக இருந்து அவர் தைரியமாக முன்வந்தது அவரிடமிருந்து யூத தலைமைக்கான பயங்கள் பறந்து விடுபட்டதைக் காட்டுகின்றது.

கல்லறையை ஆயத்தப்படுத்திய யோசேப்பு : மூன்றாவதாக பார்க்கும்போது வச.46 அவன் போய் மெல்லிய துப்பட்டியை வாங்கி கொண்டு வந்து கன்மலையில் வெட்டியிருந்த புதிய கல்லறையில் வைக்கிறான். இயேசு இறந்தபின் அவரை அடக்கம் செய்வதற்காக கல்லறையை ஆயத்தப்படுத்துகிறான். மற்றவர்களைப் போல இந்த கனம் பொருந்திய யோசேப்பு காணப்படாமல் முடிவு வரைக்கும் இயேசுவின் மரணத்தில் பங்கு கொள்ளுகிறான். இயேசுவுக்காக எதையாகிலும் செய்வதற்கு நீங்கள் யோசேப்பைப் போல் ஆயத்தமா?

ஆண்டவரே, நானும் உமக்காக, நீர் விரும்புகிறதை செய்ய துணிவைத் தாரும். ஆமென்.

உயிர்த்தெழுந்த திருநாள்

பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம். மரணத்தை மரணத்தினால் வென்றவர் இயேசு கிறிஸ்து.

வெறுமையான கல்லறை : உலக வரலாற்றில் கல்லால் மூடப்பட்ட கல்லறையைக் காவலர் காவல் செய்வதும், உயிரற்ற உடல் உயிர்பெற்று எழுந்துவிடாதபடி தடுக்க, கல்லறையை காவலர் காவல் செய்வதும் அற்புதமான, சரித்திரப் பூர்வமான எடுத்துக்காட்டாகும். மகதலேனா மரியாள், யாக்கோபின் தாய் மரியாள் ஆகியோர் வாரத்தின் முதல்நாள் காலையில் இயேசுவின் கல்லறைக்கு நறுமணப் பொருட்களுடன் சென்றார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து கல்லறையின் கல் புரட்டப்பட்டு அவர் உயிர்த்தெழுந்து சென்றுவிட்டார். ஆகவே இயேசுவின் கல்லறை வெறுமையான கல்லறையாய் மாறினது.

முத்திரைக்கல் : வலிமை வாய்ந்த பலர் சேர்ந்துதான் அக்கல்லை கல்லறையினின்று வெளியே தள்ள முடியும். இயேசுவின் கல்லறைக்கு வந்த பெண்களால் அக்கல்லை அணுவளவும் அசைக்கமுடியாது. லாசருவின் கல்லறைக்கல்லை எடுத்துப்போட்டார்கள். யோவான் 11:4 அதன்பொருள் கல்லை எடுத்துப்போட பலர் தேவைப்பட்டனர். மேலும் இயேசுவின் கல்லறையின் கல் முத்திரை வைக்கப்பட்டது.

வெறுங்கல்லறையும் இயேசுவும் : கல்லறையிலிருந்து உயிர்பெற்றெழுந்த செயல் இயேசுவின் தெய்வீக சான்றாகும். சாதாரண மனிதன் சாவினின்று மீண்டும் உயிர்பெற்று எழ முடியுமா? இயேசு கிறிஸ்து பிறப்பில், போதனையில், வாழ்வில், சாவில், உயிர்த்தெழுதலில் தன்னை அசாதாரணமானவர் என மெய்ப்பித்துவிட்டார். குறிப்பாக அவரது உயிர்த்தெழுதல் அவரை இயற்கைக்கு மேலானவராக மாற்றியது. ஓர் ஆசிரியர் மாணவர்களிடம் உயிருடன் வாழ்பவர்களில் சிறந்தவர் எவர்? என கேள்வி எழுப்பினார் சிலர் அப்துல் கலாம் என்றனர், சிலர் ஒபாமா என்றனர், ஒரு மாணவன் இயேசு கிறிஸ்து என கூறினான். ஆசிரியர் மீண்டும் மீண்டும் கேட்டார். உயிருடன் இருப்பவர்களில் சிறந்தவர் யார்? மாணவன் உறுதியாக சொல்கிறேன் உயிருடன் வாழ்பவர்களில் உயர்ந்தவர் இயேசு கிறிஸ்துவே என்றான். இத்தகைய அனுபவம் நமக்கு உண்டா?

ஆண்டவரே, உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையால் என்னை நிரப்பும். ஆமென்.

இப்படியும் ஒரு மனிதர்

கிருபையுடன் என் இருதயந்தனில் வாரும்; கேடுபாடுகள் யாவையும் தீரும்; பொறுமை, நம்பிக்கை, அன்பு போதவே தாரும்.

அடி புறப்படு, போ (வச.1-3):- தந்தை தேராகு மரிக்கும் வரை ஆரான் ஊரில் தங்கிய ஆபிராம், கானான் நோக்கிப் பயணம் செய்கிறார். பொதுவாகவும் பழகிய இடம், சூழ்நிலை, உறவுகள் ஆகியவற்றிலிருந்து புதிய விசுவாசப்பயணம் ஏற்க மனித மனம் சிரமப்படுகிறது. அதிலும் எங்கு போகிறோம் என்றும், அந்த இடத்தைக் குறித்த தகவல்கள் எதுவுமே தெரியாத நிலையும், பயங்களை உண்டாக்கும். இருப்பினும் கர்த்தர் தனக்கு ஆணையிட்டதால் உடனே எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஆபிராம் புறப்படுகிறார். கர்த்தர் தனக்கு கூறிய ஆசீர்வாதமான வார்த்தைகளுக்காக புறப்படாமல், அழைத்த தேவன் மரண பரியந்தம் தன்னை வழிநடத்த சகல வல்லமையையும் உடையவர் என்பதை உணர்ந்து, விசுவாசித்து புறப்பட்டு செல்கிறார். ஆபிராமின் விசுவாசத்தைக் குறித்த நற்சாட்சியை எபிரேயர் 11:8 தருகிறது. இத்தகைய விசுவாசமே நம்மை ஆசீர்வாதத்திற்கு உகந்தவர்களாக்குகிறது. பிறருக்கு ஆசீர்வாதமாகவும் மாற்றுகிறது (வச.2). நாம் செய்ய வேண்டியது எல்லாம் ஒன்றே ஒன்றுதான். ஆபிராமை போன்ற விசுவாசம் கர்த்தர் பேரில் நமக்கு வேண்டும்.

வழிநட, வழிபடு (வச.4-9):- கர்த்தர் காட்டிய வழியில் நடந்த ஆபிராமும் அவரைச் சேர்ந்தவர்களும் கானான் தேசத்திற்கு வந்தனர். ஆபிராம் சாராயையும், லோத்தையும் அழைக்கும்போதும் அவர்கள் எதிர்பேசாமல் உடன் செல்கின்றனர்(வச.5). கானானியர் அங்கு இருந்தாலும், கர்த்தர் தம் வழிநடந்த ஆபிராமுக்குத் தரிசனமாகித் அவரை திடப்படுத்தினார் (வச.7). இரண்டு இடங்களில் கர்த்தருக்குப் பலிபீடம் கட்டி, கர்த்தரைத் தொழுது கொண்ட ஆபிராம் நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார். இவ்வுலகில் தற்காலிக குடிமக்களாக, பரம கானான் நோக்கிப் பயணிக்கும் நாம் கர்த்தருடன் அனுதினமும் நேரம் செலவிடுவோம். நமது உள்ளமும், இல்லமும் பலிபீடங்களாகட்டும். நன்றியுடன் அவரைத் தொழுதுகொள்ளும் நேரங்களை அதிகப்படுத்துவோம். உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார். 1 தெச.5:24. எனவே ஆபிராமைப் போன்று கர்த்தருக்கு கீழ்படிவோம்.

ஆண்டவரே, என் வாழ்வில் தீர்மானங்கள் கர்த்தர் நிர்ணயித்தவையாக, கர்த்தரால் வழிநடத்தப்படுவதாய் அமைவதாக. ஆமென்.

சோதனைகள்

> 'ஏயே' என்றிகழும் உலகோடெனக் கென்னுரிமை? ஆயே,
> உன்னையல்லால் எனக்கார்துணை, யார் உறவே?

பரவும் பயம் (வச.11-16):- கர்த்தர் அழைத்துச் சென்ற இடத்தில் பஞ்சம் ஏன் தனது பெரிய குடும்பம் மற்றும் உயிரினங்களுக்கு உணவு கிடைக்காது என்ற பயம் ஆபிராமை எகிப்திற்கு நேராய் நடத்தியது. பஞ்சத்தைக் குறித்த பயம் நீங்கும்போது, எகிப்தில் இன்னொரு பயம் ஆபிராமைக் கவ்வுகிறது. இதிலிருந்து தப்ப ஒரு பொய் - அதன் விளைவுகள் கர்த்தர் தனக்கு பாதுகாப்பையும், ஆசீர்வாதத்தையும் வாக்குப் பண்ணியும் தேவ மனிதன் தனது சூழ்நிலைக்குக் பயந்து தவறான தீர்மானம் எடுத்தது நமக்கு எச்சரிப்பாக இருக்கிறது. சாராளைக் குறித்த கரிசனையல்ல, தன்னை கொன்று விடுவார்களே என்று, தன்னைக் குறித்த எண்ணமே ஆபிராமுக்கு மேலோங்கி நின்றது. பொய் சொல்வதால் ஒரு நன்மை வருமென்றால் அதைச் சொல்வதில் தவறு இல்லை என்கிறது நாம் வாழும் சமுதாயம் கர்த்தரின் வசனமோ பொய் சாத்தானின் மொழி என்கிறது (யோவா. 8:44) எனவே பொய்யைக் களைந்து ஒருவரோடொருவர் உண்மை பேசுவோம் (எபே. 4:25).

பரவிய தீமை (வச.16):- ஆபிரகாம் சொன்ன பொய் ஆபிரகாமுக்கு ஆசீர்வாதமான மழையைக் கொடுத்தது. ஆனால் பார்வோனுக்கும் அவன் வீட்டாருக்கும் வாதைகளைக் கொண்டு வந்தது. நம்முடைய தவறான வாழ்க்கை உலக ஆசீர்வாதத்தைக் கொண்டு வரலாம். ஆனால் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை ஒருநாளும் கொண்டு வராது. நமது தவறுகள் பாவங்கள் பல தலைமுறைகளுக்குப் பிரச்சனையாக மாறிவிடும் என்பதை உணருவோம்.

பரம குறுக்கீடு (வச.17-20):- கர்த்தர் குறுக்கிட்டு சாராளை விடுவித்தார். பார்வோனின் கேள்விகள் ஆபிராமை எவ்வளவாய் வெட்கப்படுத்தியிருக்கும். ஆதாரமற்ற, அனாவசியமான நமது சந்தேகங்களும், பயங்களும் நமக்கு துக்கத்தையும், அவமானத்தையும் அளிக்கும் என்பதை நினைவில் கொள்வோம். கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்ட மனிதன் பாக்கியவான் (சங்கீதம் 84:12). பயப்படாதிருங்கள் என்று கூறுகிற ஆண்டவர் நமக்குண்டு.

ஆண்டவரே, பாதுகாப்பு உமது கரங்களில் என்ற உண்மையை உணர்ந்து செயல்பட உதவி செய்யும். ஆமென்

தெரிந்தெடுப்புகள்

நாம் நம்பியிருக்கும் மனிதர்கள், உலகப்பொருட்கள் எல்லாம் நம்மை விட்டு கடந்து போய்விடும். நம்முடன் இறுதி வரை இருப்பது ஆண்டவருடைய பிரசன்னமும், வார்த்தையுமே.

உரிமைகளை விட்டுக் கொடுப்பது எளிதல்ல! தனக்குரிய இடத்தைத் தெரிவு செய்வதில் ஆபிராமே முன்னுரிமையுடையவர். ஆயினும் இளையவரான லோத்திற்கு அவர் முன்னுரிமையை விட்டுக்கொடுத்ததால், கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டார்.

...ம் **சார்ந்த தெரிந்தெடுப்பு (வச.5-11):-** லோத்து தனது சிறிய ...தையாகிய ஆபிராமின் பாசத்தையும், அரவணைப்பையும் உணர்ந்து ...ததாகத் தெரியவில்லை (வச.7). மேய்ப்பர்களிடையே நடைபெற்ற ...க்குவாதங்களுக்கும் பிரச்சனைகளுக்கும் நிவாரணம், லோத்து ...மை விட்டுப்பிரிந்து போவதே என்று ஆபிராம் கண்டு செயல்படுகிறார் (வச.8). லோத்து தனது ஐம்புலன்களின் அடிப்படையில் தெரிவு செய்த இடம் சோதோமிற்கு அருகிலிருந்தது (வச.12-13). பின்னர் அவர் சோதோமிற் ...வே குடியிருந்து, அங்கு ஒரு பெரிய மனிதனாவதையும் ...கிறோம். இறுதியில் நடைபெற்ற சோகமான நிகழ்வுகள் (ஆதி. 19) ...க்கு எச்சரிப்பாக இருக்கிறது. பிரச்சனைகள் உருவாகும்போது நமது ...க்கு முறை எப்படியிருக்கிறது? நமது தெரிந்தெடுப்பின் அடிப்படை, ...னால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் ஆகியவற்றை ஆழமாக சிந்தித்து ...யல்பட தீர்மானிப்போம்.

...ர் **சார்ந்த தெரிந்தெடுப்பு (வச.14-20):-** கர்த்தர் தெரிவு செய்த ...த்தை ஆபிராம் பெற்றுக் கொள்கிறார் (வச. 11). தன்னை அழைத்த ...த்தர் தனக்காக வைத்துள்ள ஆசீர்வாதத்தைப் பெற பொறுமையுடன், ...முழுமையான கீழ்ப்படிதலுடன் வாழ்ந்த ஆபிராம் கர்த்தரின் திட்டத்தில் ...னை இணைத்துக்கொண்டார். கர்த்தரை முற்றிலும் சார்ந்திருக்கும் ...து பிறரைக் குறித்த பொறாமையான எண்ணங்களோ, சுயநலம் ...ந்த தீர்மானங்களோ நம்மை வேதனைப்படுத்தாதபடி "கர்த்தர் ...க்காக யாவையும் செய்து முடிப்பார்" என்ற நிச்சயத்துடன் வாழக் கற்றுக் ...வோம். "நேர்த்தியான இடங்களில் எனக்குப் பங்கு கிடைத்தது; ஆம், ...யான சுதந்தரம் எனக்கு உண்டு" சங்கீதம் 16:6.

ஆண்டவரே, உம்மையே எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். உமது ...தையில் நடக்க என்னை அர்ப்பணிக்கிறேன். ஆமென்.

விசுவாசத்துடன் தைரியம்

> ***கீழ்ப்படிதலுடனான விசுவாசம் தைரியத்துடனான செயல்பாட்டிற்கு நம்மை தூண்டுகிறது.***

மாம்ச பெலன் [வச.1-11]:- வலிமை மிக்க நான்கு அரசர்கள், 12 ஆண்டுகள் தங்களுக்குக் கீழ்ப்பட்டிருந்து இப்போது வரிகட்ட மறுத்த 5 சிறிய அரசர்களை முறியடித்தனர். இதனால் அவற்றில் ஒன்றான சோதோமில் வாழ்ந்த லோத்துவும் அவரது குடும்பத்தினரும் சிறைபிடிக்கப்பட்டனர். வெறும் பகட்டையும், உலக ஆசீர்வாதங்களையும் நம்பி, கர்த்தரின் பாதுகாப்பை விட்டு வெளிவந்த லோத்து, சோதோமில் ஒரு பெரிய மனிதனாக வாழ்ந்தும், இப்போது இழப்பு வேதனை, அடிமைத்தனம் மற்றும் நிச்சயமற்ற வாழ்வையே சந்திக்க நேர்ந்தது. சிறைபட்ட லோத்தின் சிறையிருப்பை மாற்றுவதற்கு, கர்த்தர் ஆபிராமைப் பயன்படுத்தினார். ஆனாலும் லோத்து விடுதலை பெற்ற பின்னும் சோதோமிற்கே திரும்பினார்.

தேவ பெலன் [வச.13,14]:- கர்த்தரின் மீதுள்ள விசுவாச துணிவுடன் தனது பணியாளர் 318 பேரை அழைத்துச் சென்ற ஆபிராம் நான்கு பெரும் சேனைகளை வென்று, லோத்தையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் மீட்டு வந்தார். இதனால் உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொடுத்து ஆபிராமை ஆசீர்வதித்தார். எபிரேயர் 5 முதல் 7 அதிகாரங்கள் இவைகளை பற்றி அதிகமாக கூறுவதை நாம் வாசிக்கும் போது தெரிந்துக் கொள்ளலாம். ஆபிராம் இவருக்குத் தசமபாகம் அளித்தது குறிப்பிடத்தக்கது.

திவ்விய சுபாவம் [வச.21-24]:- ஆபிராமின் உச்சகட்ட விசுவாச அறிக்கை அவர் கர்த்தரிடம் எத்தனை பற்றுறுதியைக் கொண்டிருந்தார் என்பதைத் தெளிவுபடுத்துகிறதல்லவா? உலக உல்லாசங்கள், வாழ்க்கை வசதிகளுக்காகவே ஓடி, ஓடி உழைப்பவர்கள் நின்று கற்றுக்கொள்ள வேண்டிய உண்மை இது. நமது விசுவாசத்தின் ஆழம், கீழ்ப்படிதலுடனான துணிச்சலான செயல்பாட்டில் வெளிப்பட வேண்டும். நம்மிடத்தில் ஆபிரகாமை போன்ற விசவாச அறிக்கை கேட்கின்றதா? இல்லையெனில் விசுவாசிகளின் தகப்பன் நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார். அவரை போல விசுவாசிக்க பழகிக் கொள்வோம்.

> **உலகத்தையும், மாம்சத்தையும் நம்பாமல், உம்மையே சார்ந்து வாழ, உமக்காய்த் துணிந்து செயல்பட ஊக்குவியும் ஆண்டவரே. ஆமென்.**

கேள்வி

பெரிய வெற்றிக்குப் பின் ஒரு தளர்ச்சி உண்டாவது இயற்கையே.

என்ன தருவீர்? [வச.1-6]:- வச.1-ல் 'நானே உன் பாதுகாப்பு, நானே உனக்கு மிகப்பெரிய பலன்' என்று கர்த்தர் கூறினாலும், என்ன தருவீர் என்ற கேள்வியே ஆபிராமிடமிருந்து வந்தது. காரணம் அவருக்கு பிள்ளையில்லாததே. அன்றைய முறைமையின்படி மூத்த ஊழியன் வாரிசாகட்டும் என்று தன்னுடைய விரக்தியை வெளிப்படுத்துகிறார். உலகத்தை மீட்கும் மாபெரும் பணியில் தான் இணைக்கப்பட்டிருப்பதை உணராத நிலையில் ஆபிராம் தனது உடனடித் தேவை சந்திக்கப்படவில்லை என்று அங்கலாய்த்தது போல, நாமும் இருக்கிறோமல்லவா? உன் கர்ப்பப்பிறப்பே உனக்கு சுதந்தரவாளி ஆவான். வானத்து நட்சத்திரங்களை உன்னால் எண்ணக்கூடுமா? என்று கர்த்தர் கேட்கிறார். உன் சந்ததி இவ்வளவாய் இருக்கும் என்று வாக்குக்கொடுக்கிறார். கர்த்தர் ஆபிராமுக்கு உறுதி தருவதையும், ஆபிராம் அதனை விசுவாசித்தது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டதையும் நினைவில் கொள்வோம். 'ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்' என்று கேட்க பழகிக் கொள்வோம்.

எதனால் அறிவேன்? [வச.7-21]:- இரண்டாவதாக, கர்த்தர் வாக்குப்பண்ணின நாட்டைக் குறித்த ஆபிராமின் கேள்விக்கு, அன்றைய வழக்கப்படியான உடன்படிக்கை மூலம் உறுதி செய்கிறார் கர்த்தர் (வச.13-21). அந்நாட்டு மக்களின் அக்கிரமம் நியாயத்தீர்ப்பை எட்ட நாலு தலைமுறைகள் செல்லும் (வச.14, 16). கர்த்தரின் கால அட்டவணைக்கு நாம் உட்பட வேண்டும். வசனம் 14-ல் கர்த்தர் கூறிய மிகுந்த பொருள்களுடன் புறப்பட்டு வருவார்கள் என்பது யாத்திராகமம் 12:35-ல் நிறைவேறியதைப் பார்க்கிறோம். நீதிமான்களோடே அவருடைய இரகசியம் இருக்கிறது என்ற வசனத்தின்படி ஆபிராம் நீதிமானாய் இருந்ததினால் எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் சம்பவங்களை முன்கூட்டியே கர்த்தர் வெளிப்படுத்துகிறார். அனைத்தையும் செய்ய வல்லவர் எப்போது, எப்படி செய்ய வேண்டுமென்ற ஞானமும் உடையவர் என்னையும் சரியாய் நடத்துவார் என்ற நிச்சயத்துடன் பொறுமையுடன் காத்திருப்போம்.

ஆண்டவரே, உமது அன்பை உறுதியுடன் பற்றிக்கொள்ளவும் கேள்விகள் இன்றி உம்மை நம்பவும் நல்ல மனதைத் தந்தருளும். ஆமென்.

அவசர முடிவு

> 'காத்திருப்பதற்கும் ஓர் எல்லை உண்டு'. காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்.

மாறும் மனித மனம் (வச.1-6):- ஆண்டுகள் பல கடந்தும் கர்த்தரின் வாக்கு நிறைவேறாததால், பொறுமையையும் நம்பிக்கையையும் இழந்த சாராய், அவளின் பிடிவாதத்தை எதிர்த்து நிற்க இயலாத ஆபிராம், சூழ்நிலைக் கைதியாக எஜமாட்டியிடம் சிக்கிக்கொண்ட புறநாட்டு இளம் பெண் ஆகார் ஆகியோரை ஒரு குடும்ப சூழலில் சந்திக்கிறோம். குடும்பத் தலைவியின் திட்டம் வெற்றிபெற்றது போன்ற ஒரு நிலையில் மோதல்கள் வலுக்க, இளம்பெண் குடும்பத்தை விட்டு வெளியேறுகிறாள். நம் கர்த்தர் யாரென்ற தெளிவான அறிவு; அவரின் உன்னத திட்டத்திற்கு நம்மை விட்டுக் கொடுப்பது; அவரின் கால அட்டவணைக்கு அடங்கியிருப்பது; திகைத்து தவிக்கும் வேளைகளில் நமது யோசனைகளின்படியல்ல, அவரிடத்தில் ஆலோசனை பெறுவது ஆகியவை குடும்பத்தில் சமாதானம், மகிழ்ச்சி, நிறைவு ஆகியவற்றைத் தரும்.

கரிசனையுள்ள கர்த்தர் (வச.7-16):- தனிமையில், வேதனையில், தான் செல்லும் வழி தெரியாத நிலையில் கர்த்தரின் கேள்விகள் ஆகாரை சந்திக்கின்றன. எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்? இவை அவருக்குத் தெரியாதா? அவள் வாய்மொழியாக அவளது நிலையை அறிய வேண்டும் என்பதே கேள்விகளின் நோக்கம். திக்கற்றவர்களை, துன்புறுவோரைத் தேற்றும் தேவன் ஆகாரைத் தேற்றி, ஆபிராம் - சாராய் அவளுக்கு சமநிலையில் அளிக்க வேண்டிய பாதுகாப்பையும், பராமரிப்பையும் தர மீண்டும் ஆபிராமிடமே அனுப்புகிறார். ஆகாரைப் போன்றவர்களும் கர்த்தரின் பார்வைக்கு உட்பட்டவர்கள். அவர்கள் கர்த்தரின் சத்தம் கேட்கும்போது அவர்களுக்கும் ஆசீர்வாதம் உண்டு (வச.10). எளியவர்களை வலியவர்கள் தங்கள் வசதிக்காக பயன்படுத்திவிட்டு உதறிவிட முடியாது என்ற உண்மையும் இங்கு புலப்படுகிறது. எல்லா சூழ்நிலையிலும் நம்மைக் காணும் கர்த்தர் நமக்கு இருக்கிறார். எல்லாக் காரியங்களிலும் நிதானம் வேண்டும். சாராயும் அவசரப்படுத்திவிட்டாள், ஆகாரும் புரிந்துக் கொள்ளாமல் அவசர முடிவு எடுக்கிறாள். எனவே பொறுமை நமக்கு மிக முக்கியம். காத்திருப்போம் கர்த்தரின் வேளைக்கு.

சூழ்நிலைகள் என்னைப் பயமுறுத்துகையில் உம்மை நோக்கிப்பார்க்க உம் சத்தம் கேட்க என் விசுவாசக் கண்களைத் திறந்தருளும். ஆமென்.

சொற்கள்

> என் பாவமெல்லாம் மன்னித்தீர், சுதந்தரம் நல்கினீர்; என் ஆற்றலெல்லாம் தாங்கினீர்; அன்பின் பிரவாகம் நீர்!

மனிதர்களின் **வஞ்சக சொற்கள் [வச.2-4]**:- பொய், இச்சக உதடு, இரு மனதாய் பேசுகிறார்கள். உள்ளத்தில் ஒன்று வைத்து உதட்டில் ஒன்று பேசுபவர்கள். நேரத்திற்கேற்றபடி மாற்றிக் கொள்ளுபவர்களை உங்கள் சமுதாயத்திலும் நீங்கள் காணலாம். இச்சகம், பெருமை பேசும் நாவை கர்த்தர் அறுத்துப் போடுவார் - வச.3. பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார் - 1 பேதுரு 5:5; நாவுகளால் மேற்கொள்வோம் என்கிறார்கள். யார் எங்களுக்கு ஆண்டவன் என்று சொல்வது அவர்களது அகங்காரத்தின் உச்சக்கட்டத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. ஏழை எளியவர்களுக்கும் விரோதமாக சீறுகிறவர்களாக மனிதர்கள் இருக்கிறார்கள். எளியவர்களின் பெரு மூச்சியினிமித்தும் நான் எழுந்து அவனை காப்பாற்றி சுகமாயிருக்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். பொய் பேசுதல், முகஸ்துதி செய்தல், இருமனதாக பேசுதல், பெருமையாகப் பேசுதல், சொற்களால் மேற்கொள்ளுதல் போன்ற இவை எல்லாவற்றையும் கர்த்தர் வெறுக்கிறார். நம் சொற்களைக் குறித்து கவனமாயிருக்க வேண்டும் - யாக்கோபு 3:4-12.

கர்த்தருடைய **சொற்கள் [வச.6-7]**:- தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள் - நீதிமொழிகள் 30:5. கர்த்தரின் சொற்கள் மிகவும் சுத்தமானவை. கர்த்தரின் வேதத்திற்காக அவரை துதித்து அவரது வசனங்களை வேதாகமத்தில் வாசித்து, தியானித்து அவருடன் அனுதினமும் நாம் பேசுவோமாக. வேத வசனத்துடன், கற்பனைகளை சேர்த்து, மனித அறிவை புகுத்தி பல மாறுபாடான போதனைகள் மற்றும் உபதேசங்கள் நிறைந்து மலிந்து கிடக்கிறது. இந்த காலத்தில் சத்தியத்தை அறிந்து கொள்ள ஆவியானவரின் உதவியை நாடுவோமாக. கர்த்தருடைய சொற்கள்....... மெய்யாக ஒப்பான சொற்களாயிருக்கிறது. கர்த்தரின் சொற்களை நம்புவோம், அவை நம்மையும் நமது திருச்சபைகளையும் வழிநடத்தும். தேவ வார்த்தைகளை நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு கருத்தாய்ப் போதித்து வீட்டிலும், நடக்கும்போதும், உட்கார்ந்திருக்கும்போதும், படுத்துக்கொள்ளுகிறபோதும் எழுந்திருக்கிறபோதும் சொல்லி தருகிறோமா?

ஆண்டவரே, எங்கள் அரசியல் தலைவர்கள் உம்மை அறிந்து கொள்ள அருள் புரியும், ஏழை எளியவர்களை கண்ணோக்கிப் பாரும். ஆமென்.

வாக்கு மாறாதவர்

> **பற்பல வர்ணத்தோடு, மலரும் புஷ்பமும் இனிமையாகப் பாடி பறக்கும் பட்சியும் கர்த்தாவின் படைப்பாம்.**

சர்வ வல்லவர் (வச.1-8):- ஆபிரகாமுக்கு 99 வயது ஆனபோது, கர்த்தர் ஆபிராமுக்கு தரிசனமானதையும் உடன்படிக்கை செய்ததையும் இன்றைய வேத பகுதி கூறுகிறது. நாளைய தினம் நடப்பதை அறியாத நாம், நமது ஞானத்தை நம்பி, பல திட்டங்களை வகுத்து செயல்படுகிறோம். நம் கர்த்தரோ முக்காலங்களையும் அறிந்தவர். நமது செயல்திட்டங்களை ஏற்றபடி நடப்பிப்பவர். எனவே கர்த்தர் ஆபிராமை நோக்கி 'நீ திரளான ஜாதிகளுக்கு தகப்பனவாய்'. எனவே நீ இனி **'ஆபிராம்'** என்று அழைக்கப்படாமல் **'ஆபிரகாம்'** என்று அழைக்கப்படுவாயாக என்று கூறுகிறார். இந்த ஜனங்களை எனக்கென்று ஏற்படுத்தினேன். இவர்கள் என் துதியை சொல்லி வருவார்கள். அவர்கள் கர்த்தரின் ஜனங்கள் என்று அழைக்கப்படவேண்டும். இதுதான் தேவனின் திட்டம். குறுகிய கண்ணோட்டத்துடன் வாழும் நாம் கர்த்தரின் மாபெரும் செயல்திட்டங்களில் இணைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணரும்போது நமது மனநிலையில், அணுகுமுறைகளில், செயல்பாடுகளில் மாற்றம் பெறுவோம். நம் வாழ்வில் மாற்றம் பெற வேண்டிய பகுதிகள் யாவை?

நித்திய உடன்படிக்கை (வச.9-14):- சர்வ வல்ல தேவன் ஆபிரகாமின்மூலம் அவர் சந்ததியுடன் உடன்படிக்கை செய்கிறார். இந்த உடன்படிக்கையின் அடையாளம் அவர்களின் உடலில் என்றும் இருக்கும். கிறிஸ்துவுக்குள் தேவனுடைய பிள்ளைகளாகும்படி நாம் திருமுழுக்கின் மூலம் அவரது குடும்பத்தில் அங்கமாகிறோம். விருத்தசேதனத்தைக் குறித்து மேன்மை பாராட்டி, கிறிஸ்துவின் கிருபையை இழந்த அநேக யூத மக்களைப் போலல்ல. கிறிஸ்து நமக்காகத் தமது திரு இரத்தம் சிந்தி நமக்காய் பெற்ற இரட்சிப்பைப் பெற்று, போற்றிப் பாதுகாப்போம். சம்பிரதாயங்களல்ல, கிறிஸ்துவே பிரதானம் கலா.6:14. கிறிஸ்து இயேசுவுக்குள்... புது சிருஷ்டியே காரியம் (கலா.6:15). ஆபிரகாமின் தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவர் வாக்குப் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார். கர்த்தரின் வாக்கை நம்பி நாம் முன் செல்வோம்.

தள்ளாடும் விசுவாசமல்ல, தளராத விசுவாசத்துடன் உம்மை நோக்கி தொடர்ந்து நடக்க உதவி செய்யும் கர்த்தாரே. ஆமென்.

ஆதியாகமம் 17:15-27

வம்சம்

> **என் ஆவி ஆன்மா தேகமும் இதோ படைக்கிறேன்; என்றும் உம் சொந்தமாகவும் பிரதிஷ்டை செய்கிறேன்.**

நம்பிக் கீழ்ப்படிவோம் (வச.15-22):- ஒரு மகவுக்காக ஏங்கி சுயமுயற்சியின் மூலம் அதைப் பெற்றுக் கொண்ட சாராளுக்கு மனக் கசப்புதான் கிடைத்தது. ஆனால் தேவனின் திட்டம் அதுவல்ல. சாராள் மக்கள் கூட்டங்களின் தாய் என்று அழைக்கப்படவே தேவன் நினைத்தார். வச.3-ல் கர்த்தர் பேசியவுடன் முகங்குப்புற விழுந்தது போன்றே, வச.17-லும் ஆபிரகாம் விழுகிறார். ஆனால் அவநம்பிக்கையுடன் சிரித்து, இஸ்மவேலுக்காக விண்ணப்பிக்கிறார். விசுவாசத் தளர்ச்சி நமக்கு ஏற்படுவது ஏன்? கர்த்தரோ ஆபிரகாமைக் கடிந்து கொள்ளாமல், தாம் செய்யப்போவதை விளக்குகிறார் (வச.19). ஆபிரகாம் உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்த விசுவாசத்தைக் கண்டதாலோ? ரோமர் 4:18,21-ல் நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும் நம்பினார் என்று ஆபிரகாம் பாராட்டப்படுகிறார். சூழ்நிலைகள் பாதகமாக இருக்கும் நேரங்களில் கர்த்தரின் வாக்கை நம்பிக் கீழ்ப்படிந்து விசுவாசத் தளர்ச்சிகளை மேற்கொள்வோம்.

செயல்படுவோம் (வச.23-27):- கர்த்தர் தன்னுடன் பேசியபின் ஆபிரகாம் உடனடியாக செயலில் இறங்குவதைக் காண்கிறோம். 99 வயதான தந்தையும், 13 வயது மகனும், வீட்டு மனிதர் அனைவரும் விருத்தசேதனம் மூலம் கர்த்தருடையவர்களாக மாறுகின்றனர். ஒரு புதிய வம்சம் உருவாகிறது. கர்த்தரின் மேலான திட்டம் செயல்பட ஆரம்பிக்கிறது. உலகத் தோற்றத்திற்கு முன்னரே இயேசு கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்ட தேவன் (எபே.1:4) நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கையில் பரிசுத்த ஆவியினால் நம்மை முத்திரையிட்டுத் தமக்குச் சொந்தமாக்குகிறார் (எபே.1:13). நம்மைத் தமக்கு சுதந்திரமாக்குவதே அவரின் மாபெரும் திட்டம் (எபே.1:18). நமது இல்லாமை, இயலாமை ஆகியவை கர்த்தருக்கு ஒரு பொருட்டல்ல. நம்பிக் கீழ்ப்படிவோம். கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார். தேவ சித்தம் அறிவோம். தேவசித்தம் நிறைவேற செயல்படுவோம். விண்ணரசு இம்மண்ணில் விரிவடைய நமது பங்கை நிறைவேற்றுவோம்.

இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிற எங்கள் ஆண்டவரே, தளரா விசுவாசத்தைத் தந்தருளும். ஆமென்.

தேவனால் எல்லாம் கூடும்!

> ஆகாதது எதுவுமில்லை, உம்மால் ஆகாதது எதுவுமில்லை, கர்த்தர் செய்ய நினைத்தது ஒருநாளும் தடைப்படாது.

உடனடி தேவையை சந்தித்த ஆபிரகாம் (வச.1-8):- கூடாரவாசலில் வெயிலின் கொடுமையைத் தணிக்க காற்று வாங்கிக் கொண்டிருந்த ஆபிரகாம், விருந்தினரைக் கண்டதும் ஓடி உபசரிக்கிறார். ஆபிரகாமின் அன்பான விருந்தோம்பும் பண்பு இங்கு வெளிப்படுகிறது. விருந்தினரின் நினைவை அறிந்திருந்த ஆபிரகாம் 'அப்பம் கொண்டு வருகிறேன்' என்று சொல்லி (வச.3), சாராளிடம் மூன்று படி மாவு கொண்டு அப்பம் சுடு என்றும், அப்பம் மட்டுமல்லாமல் அப்பத்திற்கு ஏற்ற ஏனைய பதார்த்தங்களை சமைத்து விருந்தினர் முன் வைத்து அவர்களை அன்போடு உபசரிப்பதை பார்க்கிறோம்.(வச.8). எபிரேயர் 13:-ஐ மனதிற்கொண்டு தேவைகளோடும், உணவின்றி பசியோடும் இருக்கும் உள்ளங்களை உபசரிக்க மறவாதிருங்கள்.

அவசரமாய் ஒவ்வொரு நாளையும் கழிக்கும் நாம், தேவையுள்ள மக்களை இனம் காண, அவர்களிடம் அன்புடன் பேச, நேரம் எடுத்துக் கொள்கிறோமா? அல்லது தீராத நமது பிரச்சனைகள், பிறரின் தேவைகளைக் கண்டு கொள்ளாதபடி இடையில் திரையாக நிற்கின்றனவா?

உள்ளான தேவையை சந்தித்த கர்த்தர் (வச.9-15):- இதுவரை ஆபிரகாமிடமே பேசிய கர்த்தர் சாராளைத் தேடி (வச.9), மீண்டும் தமது வாக்கை உறுதிப்படுத்துகிறார். இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களை செய்ய வல்லவர் என்பதை சற்று மறந்த ஆபிரகாமைப் போல் சாராளும் தனது நிலையைக் கண்டு உள்ளத்தில் சிரிக்கிறாள், பின் அதை மறுக்கிறாள் (வச.12, 13). நமது உள்ளங்களை ஆராய்பவர், நம்மை முற்றிலும் புரிந்து கொள்பவர், நமக்கு இரங்கி நமது குறைகளை மன்னித்து, தம் சித்தத்தை நிறைவேற்றுகிறார். முடியாதவைகளை முடிக்கச் செய்கிறார். காலம் கடப்பதால், இருதய கடினமும், அலட்சியப் போக்கும் நம்மில் உருவாகாதபடி கவனமாயிருப்போம். முழுமையான விசுவாசத்தை பெற்றுக்கொள்ள ஒவ்வொரு நாளும் என்னை பெலப்படுத்தும் என்று அவரிடம் கேட்டு அவர் நம்மை நடத்துவதை உணர்வோம். கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?

தேடி வந்து என்னை ஆசீர்வதிப்பவரே, உம்மைக் காணும் கண்களை, கேட்கும் காதுகளை, கீழ்ப்படியும் இருதயத்தை எனக்குத் தாரும். ஆமென்.

ஏப்ரல் 7
வியாழன்

ஆதியாகமம் 18:16-33

பரிந்து பேச முன்வருவோம்

"கர்த்தராகிய ஆண்டவர் தம்முடைய ஊழியக்காரருக்குத் இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்"

பரிந்து கொள்ளும் கர்த்தர் [வச.16-23] :- இரண்டு தூதர்களும் சோதோம் நோக்கிச் செல்ல, கர்த்தர் ஆபிரகாமிடம் தனது செயல்பாட்டை அறிவிக்கிறார். அதன் காரணத்தை வச.19-ல் பார்க்கிறோம். ஆபிரகாம் கர்த்தரின் சித்தம் செய்பவர் என்பது கர்த்தருக்குத் தெரியும். நம்மைக் குறித்தும் இவ்விதமான சாட்சி வெளிப்பட நாம் செய்யவேண்டியவை யாவை? கர்த்தர் தன்னிடம் கூறியதைக் கேட்டபின் ஆபிரகாம் கர்த்தர் முன் தொடர்ந்து நின்றார். ஆபிரகாம் தனது சகோதரனின் மகன் லோத்தைக் குறித்த அக்கறையில் வெளிப்பாடாய் கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தார். ஒரு நிரபராதி எக்காரணம் கொண்டும் தண்டனை அனுபவிக்கக் கூடாது என்று அவனுடைய வழக்கறிஞர் நீதிபதியிடம் எப்படியாவது அவன் காப்பாற்றபட வேண்டும் என்று வாதாடுவது போல ஆபிரகாம் பரிந்து பேசுவதை இங்கு பார்க்கிறோம். வேத வசனங்களின் மூலம் தேவ செயல்பாட்டை அறியும் நாம் கர்த்தரை அறியாதோருக்காக பாரம் கொள்ளுகிறோமா? மன்றாட்டு ஜெபத்திற்காக நாம் ஒவ்வொரு நாளும் நேரம் ஒதுக்கி மன்றாடுகிறோமா?

மன்றாடி நின்ற மனிதன் [வச.23-33] :- சோதோமின் பாவங்களை ஒருவேளை ஆபிரகாம் அறிந்திருந்தாலும், அங்குள்ள நீதிமான்களை நினைவில் கொண்டு வச.25-ல் கேட்கிறார். 'இல்லை' என்ற கர்த்தரிடம் 10 பேர் வரை கேட்டு முடிக்கிறார். லோத்தும் அவரது குடும்பத்தினருமாவது சோதோமின் அழிவைத் தடுப்பார்கள் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்திருக்கலாம். இவ்வுலக மக்களுக்காய் கர்த்தரிடம் மன்றாட, பரிந்துபேச நாம் பொறுப்பு பெற்றிருக்கிறோம். நாம் இன்னும் கரிசனைக் கொள்ளாமல் உலகில் அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்காய் பாரப்படாமல் அமைதியாய் காலம் கடத்துவோமானால் குற்றம் நம்மேல் சுமரும் என்பதை உணர்ந்து ஆபிரகாமைப் போல் பாரத்தோடு செயல்படுவோம்; இறை ஆசீர் பெற்றுக்கொள்வோம். "காலம் கடந்திடுமுன்னர் கருத்தில் கொள்வார் வாருமே ஞாலத்தில் இயேசுவின் நாமம் எடுத்துச் சொல்ல சேருமே" என்ற வரிகளின்படி செய்ய முயற்சிப்போம். நம் முயற்சிகளை கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

உம்மை அறியாத மக்களுக்கு உம்மைப் பற்றிக் கூற, தேவவை உள்ள மக்களுக்காய் உம்மிடம் மன்றாட உதவி செய்யும். ஆமென்.

ஆதியாகமம் 19:1–14

நீங்களே எனக்கு சாட்சிகள்!

> **இனிக்காத தேனுமில்லை, மின்னாத பொன்னுமில்லை. கிறிஸ்தேசு நாயகரின் நற்செய்திதனை அறிவிக்காம கிறிஸ்தவனேயில்ல.**

சோதோமின் பாவங்களை எசேக்கியேல் 16:49,50 மற்றும் யூதா 7-ல் கூறப்படுகிறது. இதன் நடுவே லோத்து நீதிமானாய் வாழ்ந்தார் என்று 2 பேதுரு 2:8-ல் வாசிக்கிறோம்.

உபசரிக்கும் பண்பு [வச.1-3]:- வாசலில் உட்கார்ந்திருக்கும்' நிலை, லோத்து சோதோமின் உயர்ந்த மனிதர்களுள் ஒருவராக இருந்ததைக் காட்டுகிறது. அந்நியரை உபசரிக்கும் பண்பும் இவரிடம் இருந்தது (வச.2,3). மட்டுமல்ல, ஆபத்து நேரத்திலும் தனது விருந்தினரைப் பாதுகாக்கும் துணிவும் காணப்படுகிறது (வச.7,8). தனது இரண்டு பெண் பிள்ளைகளை வேண்டுமானால் வெளியே கொண்டு வருகிறேன். அவர்களுக்கு உங்கள் இஷ்டம் போல் எதை வேண்டுமானாலும் நீங்கள் செய்யுங்கள் என்ற வார்த்தை நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது அல்லவா. தேவ தூதரால் லோத்து பாதுகாக்கப்படுகிறார். லோத்தின் தெரிந்தெடுப்பு (13:10) ஆரம்பத்தில் அவருக்கு செல்வாக்குடன் சுகவாழ்வைத் தந்தாலும், பாவிகள் நடுவே வாழ்ந்ததன் விளைவு பாதிப்பை கொண்டு வந்தது. கர்த்தரின் கிருபையே அவரைக் காத்தது. நமது தெரிந்தெடுப்புகளைக் குறித்து எச்சரிக்கையாயிருப்போம். ஐம்புலன்களை அல்ல, கர்த்தரின் வசனத்தையே நமது தீர்மானங்களுக்கு ஆதாரமாக்குவோம்.

உதவியற்ற நிலை [வச.9-14]:- சோதோமில் செல்வாக்கு பெற்ற லோத்துவை 'பரதேசி' என்று பட்டணத்தார் இகழ்ந்தனர் (வச.9). பாவத்தோடு விளையாட வந்த வாலிபர்களுக்கு லோத்து கேலி பேசுவது போல் தோன்றியது (வச.14). உலகத்துடன் ஒத்து வாழ்ந்த அவரது பேச்சு இப்போது எடுபடவில்லை. உதவியற்ற நிலையில், கர்த்தரின் புயமே நமக்கு அடைக்கலம். சங்கீதம் 1:1-ஐ நினைவில் கொள்வோம். பரிசுத்தமாய் நம்மைக் காத்துக் கொள்வோம். பிறரின் ஆன்மீக நலனில் அக்கறை காட்டுவோம். இது கர்த்தரின் கட்டளை லூக்கா 24 : 47,48. கர்த்தருக்கு சாட்சிகளாக வாழ்வதும், சாட்சி கூறுவதும் நமது பொறுப்பு. ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறவன் ஞான இருதயமுள்ளவன் ஆவான். நாம் எப்படி?

ஆண்டவரே, உம்மைப் பற்றி அனைத்து மக்களும் தெரிந்து கொள்ள என்னையும் தயவாய் பயன்படுத்தும். ஆமென்.

ஜீவன் தப்ப ஓடு

திருமறையின் மொழிகளிலே தேன் வழியும். அதன் அருள் நிறைந்த உரைகளினால் தீங்கழியும்.

தீமை மற்ற செயல்பாடு [வச.15-26]:- கர்த்தர் லோத்தைக் காப்பாற்றியது ஆபிரகாமின் மன்றாட்டின் விளைவே என்று நாம் அறிந்து கொள்ள முடிகிறது. தூதர்கள் துரிதப்படுத்தியும் லோத்தின் குடும்பத்தில் இருந்த மாறவில்லை. அவர்கள் உலக வாழ்வில் எத்தனை ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தனர் என்பதைக் காட்டுகிறது. முந்தைய இரவில் நடந்த அதிசயங்கள் அவர்களைத் துரிதப்படுத்தவில்லை. தாமதமான கீழ்ப்படிதல் குடும்பத்தில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்துகிறது. லோத்தின் மனைவியோ என்ன நடக்கிறது என்றோ அல்லது எல்லா உடைமைகளும் போய்விடுகிறதே என்றோ பார்த்தாளோ இல்லையோ நாம் அறியோம். ஆனால் தேவ தூதர்கள் பின்னிட்டு பார்க்காதீர்கள் என்று கூறியும் கீழ்ப்படியாமல் பார்த்து தன் முடிவைத் தானே தேடிக்கொள்ளுகிறாள். மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை (ரோமர் 8:7). இன்று நமது கண்களையும் கவனத்தையும் ஈர்க்கும் விளம்பரங்கள் வசதி மிகு வாழ்விற்கு நம்மை அழைக்கின்றன. பாவங்களுக்குப் பல வண்ணங்கள் பூசி, தனி நபர் சுதந்திரம், தெரிந்தெடுப்பு, வாழ்க்கை முறை என்று நியாயம் கூறும் உலகில் வாழ்கிறோம். கர்த்தரின் வசனம் அனுதினமும் நம்மை [illegible]கை செய்ய வழி நடத்த இடமளிப்போம்.

ஒழுக்கமற்ற வாழ்க்கை முறை [வச.30-38]:- ஆபிரகாமிடம் செல்ல மனமின்றி தனியே வாழ்ந்த குடும்பம் எத்தனை பரிதாபமான நிலைக்குத் தள்ளப்பட்டது! அன்றைய கலாச்சாரத்தின்படி எப்படியும் ஒரு குழந்தையைப் பெற்று சந்ததியை உருவாக்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் அப்பெண்கள் பாவம் செய்தனர். இதன் விளைவே மோவாபியர், அம்மோனியர் என்ற மக்கள் எழும்பி, கடவுளின் மக்களான இஸ்ரவேலருக்கு எதிராய் வர வழிவகுத்தது. சோதனைகள் நேர்கையில் தப்பிக் கொள்ளும் வழியை லோத்தும் அவரது புதல்விகளும் கண்டுகொள்ளவில்லை (1 கொரி. 10:13) என்பது நமக்கு எச்சரிப்பாயிருக்கிறது. உலகத்துடன் ஒத்துப்போகும் பழக்கம் உண்டானால் இன்றே அதை மாற்றிக் கொண்டு, கர்த்தரின் வழிநடப்போம்.

***உம்மை விட்டு ஒருபோதும் விலகாத விசுவாசத்தைத் தாரும். ஆமென்.**

சலிப்பில் களிப்பு

> என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு.

இந்த தாவீதின் சங்கீதம் ஒவ்வொரு மனிதனின் அன்றாட வாழ்வில் ஏற்படும் ஏக்கப்பெருமூச்சோடு ஆரம்பித்து, ஆண்டவரைச் சார்ந்துகொள்வதினால் ஏற்படும் துதியின் சந்தோஷத்தோடு நிறைவடைகிறது. ஒவ்வொரு நாளின் ஆவிக்குரிய போராட்டத்தை வெளிப்படுத்துகிறதாயும் இருக்கிறது.

துக்கிப்பு (வச.1,2): எதுவரைக்கும் என்ற ஒரு மிகப்பெரிய கேள்வியோடு இந்தச் சங்கீதம் ஆரம்பிக்கிறது. என் வாழ்வில் சத்துருவினால் எனக்கு நேரிடும் சம்பவங்கள், என்னைச் சுற்றிலும் எனக்கு எதிராக நடக்கும் நிகழ்வுகள் தேவன் என்னை மறந்திருக்கிறாரா அல்லது எனக்கு மறைந்திருக்கிறாரா என்று என் இருதயத்தில் நித்தமும் சஞ்சலத்தையும், ஆத்துமாவிலே குழப்பத்தையும் ஏற்படுத்துகின்றன. இது எதுவரைக்கும்? என நான்குமுறை இக்கேள்வியை எழுப்புகிறார். பாவம் நம் வாழ்வில் இத்தகைய தடுமாற்றத்தைக் கொண்டுவருகிறதா? இப்போராட்டம் எதுவரைக்கும் என்கிற சலிப்பு நமக்குள் ஏற்படுகிறதா?

ஜெபிப்பு (வச.3,4): சலிப்பிற்கான காரணத்தை ஜெபத்தோடு ஆராய்ந்து ஆண்டவரிடம் அறிக்கை செய்கிறார். பகைவர்கள் தன்னை மேற்கொள்ளாதபடிக்கும், தன்னுடைய வீழ்ச்சியிலே களிகூறாதபடிக்கும் என்னை நோக்கிப்பாரும், என் வேண்டுதலுக்குச் செவிகொடும், மரண நித்திரைக்கு என்னை விலக்கும்படி என் கண்களை தெளிவாக்கும் என்று ஆண்டவருடைய உதவிக்காக ஜெபிக்கிறார். பாவம் நம்மை மேற்கொள்ளாதபடி நாமும் அனுதினமும் ஜெபிக்கிறோமா?

துதிப்பு (வச.5,6): ண்டவரிடம் அனுதினமும் ஜெபிப்பதினால் அவரது கிருபையின்மேல் நம்பிக்கையும், அவருடைய இரட்சிப்பினால் வரும் களிகூறுதலும், அவர் செய்த நன்மையினால் ஏற்படும் துதியின் நிறைவும் தனக்கு ஏற்படுவதாக குறிப்பிடுகிறார். எனவே பாவத்தினால் சோர்ந்து போகாமல், தாவீதைப் போல் அவரைச் சார்ந்து, நம்பிக்கையுடன் வாழ்ந்து, துதியினால் நிறைந்து அவரைச் சேவிப்போம். துக்கம் துதியாக மாறும் ஆண்டவரால், அவரிடம் ஜெபிப்பதால்!

> ஆண்டவரே நாங்கள் பாவத்தினால் பெலனற்று போகாதபடி உம் கிருபையினால் எங்களைப் பெலப்படுத்தும், நிலைநிறுத்தும். ஆமேன்.

"ஆவிக்குரிய நடைப்பயிற்சி"

> மருத்துவர்கள் சில நோயாளிகளுக்கு கூறுகிற ஆலோசனை அனுதின 'நடைப்பயிற்சி'.

ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைகளையும் ஆண்டவர் அழைத்து இருக்கிறார். அநேகர் நாம் எதற்காக அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை அறியாதபடியினால் எப்படியோ வாழ்கின்றனர். நாம் தேவனுடைய பிள்ளைகள் போல் நடந்து கொள்வது நமது பிரதானமான நோக்கமாக இருக்கவேண்டும். எபேசிய சபையில் இந்தக் குறைபாடு காணப்பட்டது. நம்முடைய அனுதின வாழ்வில் நாம் தேவனுடன் நடக்கின்றவர்களாக இருக்கின்றோமா? பவுல் தன்னுடைய மனவேதனையை சிறைச் சாலையிலிருந்து எபேசுவுக்கு எழுதுகிறார்.

பெற்றுக்கொண்ட அழைப்புக்குப் பாத்திரவானாய் நடந்து கொள்வதற்கு ஒருமை, ஐக்கியம் தேவைப்படுகிறது. ஐக்கியம் என்பது ஒரு ஆன்மீகக் தேவையாகும். இந்த ஐக்கியத்தை வலுசேர்க்க நம்முடைய சரீரத்தை முன்மாதிரியாக பவுல் காட்டுகிறார் (வச.13-16). சரீரத்தின் ஒவ்வொரு பகுதியும் பிற பகுதிகளிலிருந்து மாறுபட்டவை. எனினும் இவை அனைத்தும் சேர்ந்து ஒரே சரீரமாக இணைந்து செயல்படுகிறது. நம்முடைய வாழ்வில் 'ஐக்கியம்' வளர முதலாவது நமக்குள் இருக்க வேண்டிய எண்ணம் நாம் ஒவ்வொருவரும் "தனித்தன்மை" வாய்ந்தவர்கள். நாம் இணைந்து செயல்படவே ஆண்டவர் விரும்புகிறார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இன்றைய கால சூழ்நிலையில் ஒற்றுமை என்பது தேவைப்படுகின்ற ஒன்றாக இருக்கிறது.

நம்முடைய அழைப்புக்குப் பாத்திரவானாய் நடக்க நமக்குத் "தாழ்மை" அவசியமாக தேவைப்படுகிறது. நம்முடைய கிறிஸ்து எவ்வளவு சிறப்பு வாய்ந்தவராக இருந்தாலும் அவர் தாழ்மையுள்ளவராக (வச.6-10) இருந்தார். அநேக காரியங்களில் "தாழ்மை" நமக்குள் வரமுடியாததற்கான அடிப்படைக் காரணம் நமக்குள் வருகின்ற பெருமை. தாழ்மை நமக்குள் வர பொறுமை அவசியம். நமக்குக் கிடைக்காத ஒன்று மற்றவர்க்கு கிடைக்கும்போது அதை ஏற்றுக்கொண்டு அவர்களுடன் இணைந்து செயல்படுகின்ற மனநிலை நமக்கு வேண்டும். தாழ்மை சிந்தனையுடன் நாம் வாழ முயற்சி எடுத்துள்ளோமா?

இயேசுவே, அழைப்புக்கு பாத்திரவானாய், தாழ்மை சிந்தையோடு வாழ உதவி புரியும். ஆமென்.

எபேசியர் 4:17-32

"ஆவிக்குரிய மாற்றம்"

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கு ஆவிக்குரிய மாற்றம் தேவை.

"கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் செய்யத்தக்கவைகள்" "செய்யத் தகாதவைகள்" எவை என்பதை பவுல் தெளிவாக நமக்கு கற்றுத்தருகிறார். முக்கியமான ஒன்று (வச.17) கிறிஸ்துவை அறியாதவர்கள் வாழ்வதுபோல நாம் வாழக்கூடாது. நாம் கிறிஸ்துவை பின்பற்றும்போது நம்முடைய மதிப்பீடு, குறிக்கோள் வாழ்க்கையின் அர்த்தம் எல்லாமே மாறிவிட வேண்டும். ஆனால் இன்று உலகத்தாருக்கும், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கும் வித்தியாசம் இல்லை. எனவே மற்றவர்கள் சிலுவையண்டை வரமுடியவில்லை.

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின்பு லஞ்சம் பெறுவது ஒருவனுக்குத் தவறு என்று தெளிவாகிறது. அதற்கு பின் லஞ்சம் வாங்க மாட்டேன் என்கிற தீர்மானத்தை எடுக்கிறான். அவன் வாழ்வில் ஏற்பட்ட இந்த மாற்றத்தை அனைவரும் உணரமுடிந்தது. நம்முடைய வாழ்வில் ஏற்படுகின்ற ஆவிக்குரிய மாற்றத்தை மற்றவர்கள் உணர முடிகிறதா...?

ஆவிக்குரிய வாழ்வில் மாற்றத்துக்கு மன்னிப்பைப் பற்றிப் போதிக்கிறார். நாம் எந்தளவு நமக்கு விரோதமான செயல்களைச் செய்தவர்களை மன்னித்து இருக்கிறோம். மன்னிப்பு நம்மை உண்மை வழியில் நடத்துகின்றதாக இருக்கிறது. மன்னிப்பு நாம் மற்றவர்கள் மீது கொண்டுள்ள "கசப்பை" மாற்றுகிறதாக உள்ளது.

ஒவ்வொரு பழமும் அதன் சுவையின் மூலமாக அறியப்படுகிறது. அதுபோல ஆவிக்குரிய வாழ்வில் கிறிஸ்துவை கொண்டுள்ள நாம் மன்னிப்பை மற்றவர்களுக்குக் கொடுக்க தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். சாதாரணமான சிறிய காரியங்கள் மூலம் ஏற்படுகிற கசப்பும், கோபமும், வைராக்கியமும் வீடுகளில், சபைகளில், வாழும் இடங்களில் அமைதியை சீர்குலைக்கின்றதாக உள்ளது. எனவே நாம் மன்னிப்பின் சிந்தனையில் வளர ஆண்டவர் நமக்கு கற்றுத் தருகிறார். 1. என்னுடைய வாழ்வை எந்த அளவு அர்த்தம் நிறைந்த வாழ்வாக மாற்ற முடியும்? 2. ஏன் என்னால் "மன்னிப்பை" கொடுக்க முடியவில்லை?

ஆண்டவரே, என்னுடைய வாழ்வின் ஆவிக்குரிய மாற்றத்தை கண்டு பிறர் உம்மண்டை வர உதவி செய்யும், ஆமென்.

"ஆவிக்குரிய வளர்ச்சி"

நம்முடைய கிறிஸ்தவ வாழ்வில் தேவன் வளர்ச்சியை விரும்புகிறார்.

ஜெபம், திருமறை தியானம் அடிப்படையில் வெளிப்படுகின்ற உள்ளான வளர்ச்சிதான் நம்முடைய வாழ்வில் அதிகமா தேவைப்படும் ஒன்று. இதற்கு கிறிஸ்து நமக்கு முன்மாதிரி (வச.2). இந்த வளர்ச்சி நம்மில் ஏற்பட ஒவ்வொரு நாளும் ஆண்டவருடன் நடக்கின்ற அனுபவம் நம்மில் வளரவேண்டும்.

இன்று உலகம் நம்மிடம் எதிர்பார்க்கின்ற ஒன்று 'அன்பு'. இந்த அன்பு நம் வாழ்வில் எல்லா நிலைகளிலும் பிரதிபலிக்க வேண்டும். அன்பு தணிந்து போன காலங்களில் "பவுல் கிறிஸ்துவை மாதிரியாக" காண்பித்து அடிப்பட்ட அன்பில் நடந்துகொள்ள நம்மை அழைக்கிறார். கிறிஸ்துவின் அன்பின் சிறப்புத் தன்மை: 1. நம்முடைய பாவத்தை மன்னித்துள்ளார். 2. நம்மை அரவணைக்கிறார் 3. நம்முடைய தேவைகளைச் சந்திக்கிறார். 4. நம்முடைய வேண்டுதலை நிறைவேற்றுகிறார். 5. சமாதானத்தைத் தருகிறார். இந்த அன்பை பிறருக்கு மன்னிப்பின் மூலமாக அல்லது நன்மையின் மூலமாக நம்மால் கொடுக்க முடிகிறதா?

நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில் அன்பில் வளர்கின்றவர்களாக மட்டும் இல்லாமல் நாம் உலகத்தில் உள்ளவற்றில் நம்முடைய தூய்மையை இழக்காமலும் இருக்கவேண்டும். நம்முடைய பரிசுத்தத்தன்மையில் குறை ஏற்படக்கூடாது. அதற்கு ஒவ்வொரு நாளும் நம்முடைய வாழ்வில் செய்ய வேண்டிய ஒரு மதிப்பீடு என்னவென்றால் கர்த்தருக்குப் பிரியமானதை செய்வதே ஆகும். எனவே கர்த்தருக்கு பிரியமானது என்ன என்பதை அறிந்து, அதன்படி செய்கின்றவராக மாற ஆண்டவரின் உதவியை நாடுவோம். அன்பில் வளர்வதும், பரிசுத்த தன்மையில் வளர்வதும் ஆவிக்குரிய வளர்ச்சியில் நம்மை வளர உதவுகிறது. ஆண்டவரே இன்றைய திருமறையில் வாசித்த வசனங்களின்படி வளர்வதற்கு எங்களுக்கு உதவி செய்யும் என்று கூறி புதிய நாளுக்குள் நுழைவோம். 1. அன்புள்ளவனாய் வாழ்கிறேனா... அன்பை வெளிப்படுத்த முடிகிறதா! 2. பரிசுத்தமாக வாழ்கிறேனா.... பரிசுத்தத்தை வெளிப்படுத்த முடிகிறதா!

தேவனே, உம்முடைய அன்பிலே நிலைத்திருந்து ஆவிக்குரிய வளர்ச்சியடைய உதவி செய்யும். ஆமென்.

"ஆவிக்குரிய செயல்கள் ஒப்படைப்பு"

நம்முடைய செயல்கள் அனைத்தையுமே ஆண்டவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

நம்முடைய இல்லற வாழ்வில், தேவனுடைய ஆளுகை இல்லாதபடியினால் பலவிதமான கசப்பான நிகழ்வுகள் நடைபெறுகிறது. ஒருவரை ஒருவர் குற்றப்படுத்துகிற செயல்கள் அதிகமாக இருப்பதை நாம் அறிகிறோம். இதற்கு அடிப்படை காரணம் தேவனுடைய வசனத்தினால் குடும்பங்கள் ஆளுகை செய்யப்படவில்லை. தேவ ஆளுகையினால் கணவன் மனைவி உறவு காணப்படுவது அவசியம்.

தேவ ஆளுகைக்கு முதலாவது "கீழ்ப்படிதல்" அவசியம். 'கீழ்ப்படிதல்' என்பது அன்பின் செயல்பாடு. நம் குடும்பத்துக்குள் அன்பு, அமைதி, ஒழுங்கு ஏற்பட நமக்குள் 'கீழ்ப்படிதல்' வர வேண்டும். "ஒருவரையொருவர் தாங்களிலும் மேன்மையானவர்களாக எண்ண வேண்டும்". (பிலிப்பியர் 2:4, 5) நாம் கிறிஸ்துவுக்கும், அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிகின்றபோது தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்கிறோம். இன்று குடும்பங்களில் ஒருவருக்கொருவர் "கீழ்ப்படிந்து" நடக்கின்ற ஆவிக்குரிய ஒப்படைப்பான செயல்பாட்டை தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். கீழ்ப்படிதல் காணப்படுகின்ற குடும்பம் தழைத்தோங்கும்.

தேவ ஆளுகைக்கு இரண்டாவது தேவை "அன்பு". குடும்பங்களில் உள்ள உறுப்பினர்களிடம் குறிப்பாக கணவன் மனைவி உறவில் 'அன்பு' அடிப்படையாக காணப்பட வேண்டும். எந்த ஒரு செயலையும், அன்பினால் செய்யும்போது, பார்க்கும்போது அதில் உள்ள நிறையை நாம் காணமுடியும். சற்று யோசித்துப் பாருங்கள்! நீங்கள் தேவன் ஏற்படுத்தித் தந்த குடும்ப உறவில் 'அன்பு' செலுத்த முடியாமல்போனால், நாம் எப்படி தேவனிடத்தில் 'அன்பு' செலுத்த முடியும். பவுல் இந்த குடும்ப உறவின் அன்பை கிறிஸ்துவுக்கும் சபைக்கும் உள்ள உறவை உதாரணமாகக் காட்டுகிறார். கிறிஸ்தவ அன்பை ருசிபார்க்கச் சிறந்த இடம் குடும்பம்தான். இதை ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தும்போது நம்மால் உணர முடிகிறது. 1. குடும்பத்தில் என்னுடைய செயல்பாடு எப்படி இருக்கிறது. அனைவராலும் ஏற்றுக்கொள்ள முடிகிறதா?

ஆண்டவரே "எங்கள் குடும்பத்தில் நாங்கள் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து நடந்து, உம்முடைய அன்பை வெளிப்படுத்த எங்களுக்கு உதவி செய்யும்" ஆமென்.

எபேசியர் 6:1-9

"ஆவிக்குரிய பரிசோதனை"

கிறிஸ்து மீதுள்ள நம்பிக்கை வாழ்வில் நாம் எப்படி இருக்கிறோம்?

...வர் ஏற்படுத்தித்தந்த அமைப்புதான் "சமுதாயம்". இந்த சமுதாயத்தில் கிறிஸ்தவனின் பங்களிப்பு செயல்பாடு மிக முக்கியமானது. சமுதாயத்தில் சிறந்த பங்களிப்பை கொடுக்க வேண்டுமென்றால் ...வது அந்தப் பணியை நம்முடைய குடும்பத்தில் இருந்து துவங்க வேண்டும். ஒருவன் கிறிஸ்துவுடன் இசைந்து வாழும்போது அவன் ...வர்களிடம் கொண்டுள்ள உறவில் சீரானவனாக செயல்படுகின்றான்.

...து நமக்குக் கற்றுத் தருகின்ற பாடம் பெற்றோர் பிள்ளைகள் என்ற ... நிலையில் பிள்ளைகள் பெற்றோர்க்குக் கீழ்ப்படிந்து அவர்களை ...து நடப்பதும் அவசியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. திருமறை ... இறை நம்பிக்கை, கடவுளின் செயல்பாடுகள், கடவுளின் வல்லமை ...கள், கடவுள் விரும்பும் ஆளுகை போன்றவை போதிக்கப்பட வேண்டும். நம்முடைய நெறிமுறைப்படுத்தல் நியாயமாகவும், ...சீராகவும், பாசமுடையதாகவும் இருக்க வேண்டும். இது கோபத்தின் வெளிப்பாடாக இருக்க வேண்டாம். பிள்ளைகளும் பெற்றோர் எடுக்கிற ... தாய்மையான நெறிப்படுத்துதல் செயல்பாட்டிற்கு இசைந்து ...கிறவர்களாக இருக்க வேண்டும். இது இன்றைய குடும்பத்தில் ...கின்றதா? நம்மைநாமே சோதித்துப் பார்ப்போம்.

...தவ எஜமான்கள் எஜமான்களாக அல்ல, கிறிஸ்துவுடன் இணைந்து ...செய்கிறவர்களாக செயல்பட வேண்டும். தனக்குக் கீழ் பணி செய்கின்ற ... பணியாளர் வரை ஒவ்வொருவரையும் கண்ணியத்துடன் நடத்த வேண்டும். பணியாளர்களுடைய நலத்தின் மீது அக்கறையுடையவராக, ...களுக்கு உதவி செய்கின்றவராக, வழிகாட்டியாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பணியாளரும் என்னுடைய மேலதிகாரி ஒரு கிறிஸ்தவனாக ...வேண்டும்" என்று கூறும்நிலை உருவாக வேண்டும். பொறுப்பில் ... நான் இதை செய்கின்ற பொறுப்பாளர்களாக இருக்கின்றோமா என்று ... பரிசோதிப்போம். 1. என்னுடைய குடும்பத்தில் என் செயல்பாடு ...படி உள்ளது? 2. என் கீழ் உள்ள பணியாளரை எப்படி நடத்துகின்றேன்?

தேவனே, நான் ஆவியில் வளருவதோடு என் குடும்பத்தினரது ஆன்மீக வளர்ச்சிக்கு நான் என்னால் இயன்ற உதவியைச் செய்ய பெலன் தாரும். ஆமென்.

நிலையான வாக்குத்தத்தம்

கிறிஸ்துவை பின்பற்றுகிற யாவருக்கும் மாபெரும் பதவியை ஆண்டவர் கொடுத்துள்ளார். அது என்ன?

கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் "ஸ்தானாதிபதி". இதன் அர்த்தம் "கிறிஸ்துவின் தூதன்". நாம் கடவுளின் தூதனாக இந்த உலகத்தில் அனுப்பப்பட்டுள்ளோம். கடவுளின் பிரதிநிதிக்கு நாம் அனுப்பப்பட்டவரின் "இறை செய்தியை", "இறை அரசை" பரப்புவதும் அதைக் கட்டுவதும் முக்கிய கடமையாக இருக்கிறது. ஒரு நாட்டின் பிரதிநிதி மற்றொரு நாட்டிற்கு சென்று தான் அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றாமல் இருந்தால், அதனால் ஒரு பயனும் இல்லை. அவனை அனுப்பினது வீணாகத்தான் இருக்கும். நான் ஸ்தானதிபதியாக என் கடமையை செய்கிறேனா?

கிறிஸ்துவின் 'ஸ்தானாபதி' துணிவுடன் தைரியமாக இறையரசு, இறையன்பு, இறை ஆளுகை பற்றிய செய்தியை அறிவிக்க வேண்டும். இன்று உலகம் எதிர்கொண்டுள்ள அனைத்து கேள்விக்கும் கடவுளின் அரசில் விடை இருக்கிறது. இதை எப்படி உலகிற்கு எடுத்துச் சொல்லமுடியும். ஒரே வழி நாம் தைரியமாக நம்முடைய வாயைத் திறக்க வேண்டும். கிறிஸ்துவின் மதிப்பீடுகளை தைரியமாக கூறாதவரை நாம் ஸ்தானாபதியாக நம்முடைய கடமையை நிறைவேற்றவில்லை என்பதுதான் பொருள். நாம் கடவுளிடம் கேட்போம், நான் தைரியமாக, துணிவுடன் நற்செய்தியின் மதிப்பீடுகளைத் தெரியப்படுத்த வேண்டும் என்று. உண்மையான ஸ்தானாபதியாக இருக்க வேண்டும். பவுலின் உடன் கிறிஸ்தவர்கள் ஜெபித்த ஜெபங்களின் விளைவாகவே அவர் இத்தனை அரும்பெரும் காரியங்களை செய்யமுடிந்தது.

கிறிஸ்தவ "ஸ்தானாபதி" அடுத்தவர்களை தன்னைப்போலவே உருவாக்குகின்றவனாக இருக்க வேண்டும். ஆண்டவரே நாங்கள் உண்மை ஸ்தானாபதியாகவும், உருவாக்குகின்றவர்களாகவும் மாற உதவி செய்யும் என கூறி இந்த புதிய நாளில் நுழைவோம். 1. இன்றைய உலகில் கிறிஸ்துவின் ஸ்தானாபதியாகிய என்னுடைய பொறுப்பு என்ன...? 2. நான் யாரை எனக்கு அடுத்தபடியாக உருவாக்கி இருக்கின்றேன்...?

ஆண்டவரே, உமக்கு உண்மை ஸ்தானாதிபதியாகவும் அநேக ஸ்தானாபதிகளை உருவாக்குகின்றவனாக(ளாக) என்னை மாற்றும். ஆமென்.

யார் மதியீனன்?

என்னை கண்டடைகிறவன் ஜீவனைக் கண்டடைகிறான்.

இந்தச் சங்கீதம் யார் மதியற்றவர்கள் என்பதை விளக்குகிறது. மேலும் மதியீனம் என்கிற வார்த்தை கல்வி அறிவு இல்லாதவற்களை குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படாமல், தங்கள் உள்ளத்திலும், எண்ணத்திலும் தேவனுக்கு இடமளிக்காதவர்களோடு தொடர்புபடுத்தி அவர்களது நிலைகளை விளக்குகிறது. தேவன் இல்லை என்று சொல்வதினால் அவனுடைய வாழ்க்கையில் ஏற்படும் விளைவுகள் என்ன?

தேவன் இல்லை என்பவன் : கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி.1:7;9:10) என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். ஆனால் தேவன் இல்லை என்பவன், தேவனுக்குப் பயப்படுகிறதில்லை. அதினால் அவன் வாழ்க்கை நேர்மையற்றதாக, நல்லொழுக்கம் தவறினதாகவே இருக்கிறது. தேவன் அவர்களை நோக்கிப் பார்க்கும்போது, அவர்கள் இருதயம் பரிசுத்தத்தினால் அல்ல அசுத்தத்தினால் நிறைந்திருக்கிறது. மேலும் கட்டுபாடற்ற, கறை நிறைந்த வாழ்க்கையாக புறையோடிப்போகிறது. நம் வாழ்க்கை தேவன் இருப்பதை உலகிற்கு அறிவிக்கிறதா?

தேவனைத் தேட மனமில்லாதவன் : மதியீனன் தேவன் இல்லை என்று தன் உள்ளத்திலே சொல்வதோடு மட்டுமல்லாமல், தேவனுக்கு தன் உள்ளத்திலே இடம் இல்லை என்றும் சொல்லுகிறான். அவன் தேவனுக்கு இடமளிக்காததினால் தன்னை உண்டாக்கினவரைக் காட்டிலும் தான் எல்லாம் அறிந்தவனாக, அதிகாரமுடையவனாக எண்ணிக்கொள்கிறான். அவருக்கு இடமளிக்காததினால் அவரைத்தேட மனமற்றவனாக மாறிவிடுகிறான். அதினால் அவருடைய ஆசீர்வாதத்தையும் இழந்துபோகிறான். நம் உள்ளத்திலே தேவனுக்கு, அவர் ஆளுகைக்கு இடமுண்டா?

தேவனைத் தொழுதுகொள்ளாதவன் : இன்றைக்கு அநேகர் தங்கள் வாழ்க்கையில் தேவனுக்குப் பயப்படாததினால், தேவனைத் தேட மனமில்லாததினால் தேவன் அவர்கள் உள்ளத்திலும், எண்ணத்திலும் இருப்பதில்லை. தேவன் இல்லை என்பவன் வாழ்க்கையில் நன்மை இல்லை!

தேவனே உம்மை அறியும் அறிவை எங்களுக்குத் தாரும். அதினால் உம்மை இருந்தவராக, இருப்பவராக, வருபவராக உலகுக்கு அறிவிக்க உதவி செய்யும். ஆமென்.

உத்தமன்

நீர் பெருக, நான் சிறுக என்னை தாழ்த்தி உம் கரங்களில் தருகிறேன். தயவாய் என்னை ஏற்றுக் கொள்ளும்.

இருதயம்: ஆபிரகாம் கேராகின் மக்களிடம் தெய்வ பயம் இல்லையென்பதாலும், தன் மனைவியினிமித்தம் தன்னை கொன்று விடுவார்கள் என்று தனக்கு இருந்த பயத்தினாலும் கேராகிடம் பொய் உரைக்கிறான். இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அவனுடைய இருதயம் கேராகின் மக்களை நம்பவில்லை. இதனிமித்தம் ஆபிரகாம் அபிமலேக்கை பாவம் செய்ய தூண்டுபவனாக காட்சியளிக்கிறான். ஆபிரகாமின் சகோதரி என்பதினால்தான் அபிமலேக்கு சாராளை அழைத்தனுப்புகிறான். உண்மையை அறியாதவனாகதான் இச்செயலை செய்ய நினைக்கிறான். ஆனால் அவன் உத்தம இருதயம் கொண்டவன் என்பது ஆண்டவருக்குத் தெரியும். அதனால்தான் ஆண்டவர் உடனே அபிமலேக்கை எச்சரிக்கிறார். இந்த எச்சரிப்பின் சத்தத்தைக் கேட்ட உடனே சாராளை தன்னிடத்திலிருந்து அனுப்பிவிடுகிறான். தான் எதையும் அறியாமல், உத்தம இருதயத்தோடுதான் இதை செய்தேன் என்று கர்த்தரிடத்தில் தைரியமாய் சொல்லுகிறான். அவன் தவறான எண்ணத்தோடு இதை செய்யவில்லை என்பது அவன் பேச்சிலே நமக்கு தெளிவாகின்றது. நமக்கு ஆபிரகாமின் இருதயமா? அல்லது அபிமலேக்கின் இருதயமா?

கைகள் : அபிமலேக்கு ஆண்டவரிடத்தில் சுத்தமான கைகளோடு இந்த காரியத்தை செய்ததாக கூறுகிறான். சங்.15:2ல் வாசிக்கிற வண்ணம் உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதார சத்தியத்தை பேசுகிறவனாய் அபிமலேக்கு நடந்து கொள்ளுகிறான். நமது சிந்தை தூய்மையாய் இருக்கும்போது நமது சரீரத்தின் அனைத்து அவயவங்களும் நிச்சயமாகவே தூய்மையாய் இருக்கும்.

நாவு : இருதயமும், கைகளும் மாத்திரம் தூய்மையாய் இருக்கவில்லை. அவனுடைய நாவுதான். அதனால்தான் மனம் பதறி ஆபிரகாமை பற்றி ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. மாறாக இக்காரியத்தை கேட்க மாத்திரம் செய்கிறான். உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான். என் இருதயம், கைகள், நாவு எப்படி நடக்கின்றது?

பிதாவே, உத்தமமாய் நடப்பதற்கு உதவி செய்திடும், ஆமென்.

அதிசயம் ஆனால் உண்மை

> தேவனாகிய பிதாவே என் இருதயத்தின் தியானமும் என் நடக்கையும் உமக்கு ஏற்புடையதாயிருப்பதாக!

ஆபிரகாம் விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்ற வாக்கின்படி தன்னுடைய 100வது வயதிலே ஆபிரகாமுக்கு ஈசாக்கைக் கொடுத்தார். ஆதி.18ம் அதிகாரத்தில் சாராளுக்கு வாக்குக் கொடுத்தார். அப்போது சாராள் நகைத்தாள். ஆனால் ஆண்டவர் தான் சொன்னதை நிறைவேற்றினார். தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்து போனதையும் ஆபிரகாம் எண்ணவில்லை (ரோம.4:19). எனக்கு வாக்குக்கொடுத்தவர் நிச்சயமாய் நிறைவேற்றுவார் என்று எண்ணி, அதைக் குறித்து தேவனிடத்தில் ஒரு கேள்வியும் கேட்கவில்லை. இறைவனின் பார்வையில் இது மேன்மையாக காணப்பட்டதினால்தான் விசுவாசிகளுக்கு அவர் தகப்பன் என்று அழைக்கப்படுகிறார். இறைவன் பேரில் கண் மூடித்தனமான விசுவாசத்தை ஆபிரகாம் வைத்திருந்தார். நம்மிடம் அப்படிப்பட்ட விசுவாசத்தைதான் ஆண்டவர் எதிர்பார்க்கிறார். அவரின் எதிர்ப்பார்ப்பை நாம் பூர்த்தி செய்கிறோமா?

சொல் **ஒன்று செயல் ஒன்று அல்ல:** சாராளின் அவசரத்தினால் ஆகாருக்கு பிள்ளை பிறக்கின்றது. இரண்டு மனைவி என்றாலே நிச்சயம் கருத்து வேறுபாடு வரும். சாராளுக்கு பிள்ளை இல்லாதிருக்கும்போது ஆகாரின் பிள்ளை தேவைப்பட்டது. இப்போது ஆகாரின் பிள்ளை தேவையில்லையென்று நினைத்துவிட்டதால் ஆகாரை அனுப்பிவிடுகிறாள். இப்போது ஆகாரின் நிலை மிகவும் மோசமாகிவிடுகிறது. நீர் என்னை காண்கிற தேவன் என்று கூறியவள் இப்போது அவரை மறந்து விடுகிறாள். உன் சந்ததியை பெருகப் பண்ணுவேன் என்ற வாக்கையும் மறந்து விடுகிறாள் (ஆதி16:10). நம் ஆண்டவர் சொல் ஒன்று செயல் ஒன்று என்று செயல்படுபவர் அல்ல. அன்றைக்கு என்ன வாக்கு கொடுத்தாரோ அதை நிறைவேற்றுகிறார் (வச. 20,21). ஆகார் எப்போது தனக்கு சோதனை வருகிறதோ அப்பொழுது மட்டுமே தேவனை தேடுகிறவளாய் இருக்கிறாள். மொத்தத்தில் இரண்டு முறை மட்டுமே அவள் தேவனை தேடுகிறாள். அவள் தேவனைத் தேடி ஜெபித்ததாக வேறெங்கும் குறிப்பில்லை. ஆகாரை போல சோதனை நேரத்தில் மட்டுமே தேவனை தேடுகிறோமா?

> பிதாவே, உம்மை இக்கட்டான வேளையில் மாத்திரம் அல்ல, எப்போதும் உம்மை தேடும் பிள்ளையாய் இருக்க உதவிடும். ஆமென்.

தயை செய்ய வேண்டுகிறான்

உம்மோடு சேர்ந்து வாழ்வதே பேரானந்தம், உம் நாமம் துதித்திடுவேனே, உங்கை ஜெயித்திடுவேனே.

கேள்வி: உத்தமனாகிய அபிமலேக்கும் அவனுடைய சேனாதிபதியும் ஆபிரகாமை சந்திக்கிறார்கள். அவர்கள் ஆபிரகாமை நோக்கி உன் காரியங்கள் அனைத்திலும் தேவனாகிய கர்த்தர் உன்னுடனே எப்போதும் இருக்கிறார். அதனால் தேவன் உன் பட்சத்தில் இருக்கிறார் என்றும் உன் காரியங்கள் எல்லாவற்றிலும் உன்னுடனே இருக்கிறார் என்பதினால் எனக்கு ஒரு பயம் ஏற்படுகிறது. நீ எனக்கோ, என் குடும்பத்தாருக்கோ ஏதாகிலும் வஞ்சனை செய்து விடுவாயோ என்பதுதான் அந்த பயம். முன் ஒருமுறை ஆபிரகாம் செய்த தவறினால் தான் பாவம் செய்ய நினைத்ததால் தேவன் தன்னுடைய மனைவிகளின் கர்ப்பத்தை அடைத்திருந்தார். ஏற்கனவே நடந்த தவறு மறுபடியும் நடந்து விடக் கூடாது என்பதும் அபிமலேக்கின் எண்ணம். எனவேதான் ஆபிரகாமை பார்த்து அவன் தனக்கு தயவு செய்ய வேண்டும் என்று கேட்கிறான். அவனுக்கு மாத்திரமல்ல அவன் குடும்பத்தாருக்கும் ஆபிரகாம் தங்கியிருக்கிற தேசத்திற்கும் தயவு செய்ய வேண்டும் என்றும் தனக்கு ஆணையிட வேண்டும் என்றும் அபிமலேக்கு கேட்கிறான். பல வேளைகளில் நம் பயத்தின் நிமித்தம் ஆண்டவரிடம் நாமும் கூட அடையாளங்களை கேட்கிறோம். கிதியோனும் இந்த வரிசையில் வருகிறார்.

பதில்: அபிமலேக்கின் பயம் நிறைந்த தொடர்ச்சியான கேள்விகளுக்கு ஆபிரகாம் பதில் அளிக்கிறான். எவ்விதமான மறுமொழியும் கூறாமல் உடனடியாக ஆணையிட்டுக் கொடுக்கிறான். ஆனால் ஒரு காரியத்தில் மட்டும் தனக்கு வருத்தம் இருப்பதாக கூறுகிறான். அபிமலேக்கின் வேலைக்காரர் துரவுகளை கைப்பற்றியதில் தனக்கு கோபம் இருப்பதாக கூறுகிறான். இதனால் அபிமலேக்கை கடிந்து கொள்கிறான். பின்பு இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டு, அபிமலேக்கு திரும்பி செல்கிறான். ஆபிரகாம் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு தோப்பை உண்டாக்கி சதாகாலமுமுள்ள தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்கிறான். தேவன் வாக்குத்தத்தங்களை அள்ளி கொடுத்திருக்கிற போதும் நாம் ஏதோ ஒரு அடையாளத்தை தேடுகிறோம்.

ஆண்டவரே, வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர், அவர் மாறாதவர் என்பதை எப்போதும் மறவாதிருக்க உதவிடும், ஆமென்.

இதோ! அடியேன்

> பள்ளியில் படிக்கும் பிள்ளைகளுக்கு ஒவ்வொரு மாதமும் பயிற்சியின் மூலம் அவர்களுடைய தரம் சோதிக்கப்படுகிறது.

கல்தேயர் :ஊர் பட்டணத்தை விட்டு புறப்படு என்று கூறியவுடன் ஆபிரகாம் ஒரு வார்த்தையும் சொல்லாமல் கானானை நோக்கி சென்றார். போகிற இடமோ, மொழியோ தெரியாத நிலையில் கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்படிந்து சென்றாரே. இதைவிட ஒரு சோதனை தேவையா? தன்னுடைய 100வது வயது வரை ஒரு பிள்ளைக்காக காத்திருந்தாரே. இதைவிட ஒரு சோதனை தேவையா? இந்த சோதனைகள் போதாதா? ஆம் ஆண்டவர் இன்னும் ஒருமுறை ஆபிரகாமை சோதிக்கிறார். கர்த்தர் ஆபிரகாமை சோதித்த பின்பு அவர் சுத்த பொன்னாக விளங்கவேண்டுமென்று, இறுதியாக சோதித்தார். கர்த்தர் ஈசாக்கை பலியாகக் கேட்கிறார். இதுவே இறுதி சோதனை.

கொடுத்தான்: பெயர்செபாவிலிருந்து 55மைல் தூரம் உள்ளதுதான் மோரியா தேசம். தன் மகனை பலியிடுவதற்கு மூன்று நாள் பிரயாணமாய் போகிறார்கள். தன்னுடைய ஒரே மகனை, தன்னுடைய சந்ததியை, தன் சொந்த கைகளினால் தன் இளம் வயது மகனை வெட்டி, பலியிட வேண்டும் என்பது எந்தவொரு பெற்றோராலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு காரியம். இன்றைய நடைமுறைக்கு இது சாத்தியமா? ஆனால் ஆபிரகாமுக்கு கர்த்தர் பேரில் இருந்த நம்பிக்கை மாற வில்லை. எல்லாவித அங்கலாப்பையும் தன் மனதில் வைத்துக்கொண்டு, பலிக்கான கட்டைகளை தன் வீட்டிலிருந்து பிளந்து எடுத்துச் செல்கிறான்.

இப்படியும் ஒரு நிலையா என்று நினைக்கும் அளவுக்கு இச்சோதனை காணப்படுகிறது. தான் பலியாக போகிறோம் என்று அறியாத ஈசாக்கிடம் அவனை பலியிட்டு, எரிப்பதற்கான கட்டைகளை அவனையே சுமக்க சொல்கிறார். சுமந்து செல்லும் ஈசாக்குக்கு பலி செலுத்த ஒன்றுமில்லை என்பதினால் தந்தையிடம் பலி எங்கே என்று கேட்கிறான். தன்னுடைய மகனைதான் பலி கொடுக்கபோகிறோம் என்பது தெரிந்தும், தன் விசுவாச மிகுதியினால் பலியை கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று கூறுகிறார். தந்தையின் பதிலை நம்பினான் ஈசாக்கு. தந்தை கீழ்படிந்து விசுவாசித்தார். மகனும் அப்படியே செய்கிறான். இன்று நம்முடைய பிள்ளைகள் நம்மை பார்த்து எதைக் கற்றுக்கொள்கிறார்கள்?

ஆபிரகாமின் தேவனே, ஈசாக்கின் தேவனே நானும் என் சந்ததியும் கீழ்படிந்து வாழ்ந்து உம்மை மகிமைப்படுத்த கிருபை செய்யும். ஆமென்.

உச்சக்கட்டம்

எந்நிலைமையிலும் அன்பாக செயல்பட கற்றுக்கொள்வோம்.

ஆபிரகாம் தனக்கு பிள்ளை செல்வமே இல்லாமல் போய்விடும் என்ற நிலையில் 100வது வயது வரை காத்திருந்து பெற்ற ஒரே மகனை பலியிடவதற்கு பொறுமையோடு பலிபீடம் கட்டுகிறார். தேவன் காண்பித்த மலையில் ஈசாக்கை பலியிட்டு வந்திருக்கலாம். அங்கு யாரும் இல்லை. இருப்பினும் புதிய பலிபீடம் கட்டி பலியிட வேண்டுமென்று செய்கிறார். எதை செய்தாலும் நேர்த்தியாய் செய்ய நினைக்கிறார். ஆபிரகாமின் பொறுமை இங்கே விளங்குகின்றது. ஆண்டவர் நம்மிடம் பலியிட சொல்லியிருந்தால் நாம் முறுமுறுத்துக்கொண்டேதான் செய்திருப்போம்.

பலிபீடம் கட்டி முடித்த பிறகு தன் மகனை கட்டி பலிபீடத்தின்மேல் கிடத்துகிறார். இன்றைய சூழ்நிலையில் உள்ள பிள்ளைகளை நாம் இப்படிப்பட்ட நிலையில் வைத்து பார்ப்போம் என்றால் அவர்கள் ஓடிவிடுவார்கள் அல்லது பெற்றோர்களுக்கு ஏதோ ஆகிவிட்டது என்று கூறுவார்கள். ஆனால் ஈசாக்கை கவனித்துப்பாருங்கள். பலி எங்கே என்று அவர்க்ள் புறப்படும்போது கேட்டானே தவிர அதன்பிறகு இக்காரியத்தில் அவன் பேசவே இல்லை என்று நாம் தெரிந்துக்கொள்கிறோம். பலிபீடத்தின்மேல் ஈசாக்கை கிடத்தி, தன் கைகளை நீட்டி தன் மகனை பலிக்கொடுக்க கத்தி எடுத்துவிட்டார். இதற்குமேலும் விட்டால் ஆபிரகாம் பலி கொடுத்து விடுவான் என்று உடனடியாக தேவதூதன் ஆபிரகாமை கூப்பிட்டு பிள்ளையை விட்டுவிடு என்று கூறுகிறார். ஆபிரகாம் தேவனுக்கு பயந்தவர் என்று சான்றிதழ் கொடுக்கிறார்.

ஈசாக்கு கேட்கும்போது பலியை ஆண்டவர் பார்த்துக்கொள்வார் என்று கூறியதை போன்று தான் கட்டிய பலிபீடத்தில், புதரிலே சிக்குக்குண்ட ஆட்டுக்கடாவை தேவனுக்கு பலியிட்டு அந்த இடத்திற்கு யேகோவாயீரே என்று பெயரிடுகிறார். அளவில்லா மகிழ்ச்சி, ஆனந்தம், சந்தோஷத்துடன் ஆபிரகாம் தன் வேலைக்காரரிடத்தில் வந்திருப்பார். ஆபிரகாமின் விசுவாசத்திற்கு அளவே இல்லை. ஆபிரகாமின் விசுவாசத்தின் அளவுகோலையும் நம் விசுவாசத்தின் அளவுகோலையும் ஒப்பிட்டு பார்த்தால் எப்படி இருக்கும்?

ஆண்டவரே, ஆபிரகாமை போல விசுவாசமும் கீழ்ப்படிதலும் எனக்கு தாரும், ஆமென்.

ஆதியாகமம் 23:1-20

இழப்பு

உன் வாழ்க்கையை யார் அல்லது எது ஆளுகிறது?

வளமையாய் காணப்பட்ட ஆபிரகாமின் வாழ்வில் இப்போது பிரிவும், இழப்பும் ஏற்படுகிறது.

பிறக்க ஒரு காலமுண்டு; இறக்க ஒரு காலமுண்டு என்று எழுதுகிறார் பிரசங்கி. இங்கேயும் ஒரு இறப்பு சம்பவம்தான் நிகழ்கின்றது. 127 வயதடைந்த ஆபிரகாமின் அன்பு மனைவி சாராள் இவ்வுலக வாழ்வை முடித்து விண்ணுலக வாழ்கை சென்றடைகிறாள். ஆபிரகாமுக்கு சாராளிடம் இருந்த அன்பு புலம்பலாய், அழுகையாய் வெளிப்படுகிறது. தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக் கடவன் என்கிற வார்த்தையின்படி கடைசி வரையிலும் இணைப்பிரியாமல் வாழ்ந்து தேவனின் கற்பனையை நிறைவேற்றிய தம்பதிகள் இவர்கள். இவர்கள் தம்பதிகளாக ஏறத்தாழ 75 இருந்து 85 ஆண்டு காலமாக ஒன்றாக வாழ்ந்திருக்கலாம். ஆனால் இன்று சாராள் இறந்ததால் ஆபிரகாம் மிகுந்த துக்கமடைந்தவராய் காணப்படுகிறார். இன்றைய காலகட்டத்தில் இப்படிப்பட்ட தம்பதிகளை நாம் காணமுடிகிறதா? சிறு சிறு கருத்துவேறுபாடுகள் வந்தவுடன் பிரிந்து வாழ்ந்து இறைவனின் கற்பனையை மீறுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

இறந்து போன தன் அன்பு மனைவியை அடக்கம் செய்வதற்கு ஆபிரகாமுக்கு ஒரு இடம் தேவைப்படுகிறது. எனவே ஏத்தின் புத்திரர்களை கேட்கிறார். அவர்களும் இந்த பூமியிலே எங்கு வேண்டுமானாலும் நீர் அடக்கம் பண்ணலாம் என்று கூறுகிறார்கள். ஆனால் ஆபிரகாம் இலவசமாய் நிலத்தை வாங்கிக் கொள்ள விரும்பவில்லை. மாறாக அவர்களிடம் எனக்கு விலைக்கு ஒரு இடத்தை தர வேண்டும் என்று கேட்கிறார். அதனால் அவர்களும் எப்பெரோனுடைய நிலத்தை 400 சேக்கல் நிறை வெள்ளியை வாங்கிக் கொண்டு அந்த நிலத்தை ஆபிரகாமுக்கு கொடுத்தார்கள். கானான் தேசத்தை உனக்கும் உன் பின்வரும் சந்ததிக்கும் கொடுப்பேன் என்ற வாக்கு இங்கே நிறைவேற தொடங்கியது. ஆபிரகாமின் உண்மை நேர்மையானது நமக்கு ஒரு முன்மாதிரியாக காணப்படுகிறது. கொடுக்கல், வாங்கல் காரியங்களில் நாம் எவ்வாறு நடந்து கொள்ளுகிறோம்?

ஆண்டவரே, நீர் தந்த குடும்ப உறவுகளை வளர்க்க வேண்டிய பண்புகளை என்னில் பெருகச் செய்யும். ஆமென்.

ஏப்ரல் 24
ஞாயிறு

யார் அசைக்கப்படுவதில்லை?

நாம் இந்த உலகத்திற்கு உரியவர்கள் அல்ல.

நாம் தேவனோடு வாழ்வதற்கு நம்மில் எத்தகைய தகுதிகள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்த பார்ப்பது அவசியம். இந்த தாவீதின் சங்கீதம் அத்தகைய பகுப்பாய்வு செய்வதற்கு நமக்கு உதவுகிறது.

தேவனிடத்தில் உண்மை [வச.1-2]: முதலாவதாக தேவனோடு தங்கவும், வாசம்பண்ணவும், நாம் தேவனோடு உள்ள உறவிலே உண்மையாய் இருப்பது மிகவும் அவசியம். அதற்கு நடத்தையில் உத்தமமும் (சங்.18:21-26) செய்கையில் நீதியும், வாக்கில் சத்தியமும் நிறைந்திருக்க வேண்டும். நமது கால்கள் உத்தமத்தில் நடக்கிறதா? கரங்கள் நீதியை செய்கிறதா? உதடுகள் உண்மையை பேசுகிறதா?

தோழனிடத்தில் உண்மை [வச.3] : தேவனோடு உள்ள சீரான உறவே நம் அன்றாட வாழ்விலும் நாம் எடுக்கும் தீர்மானங்களிலும், நம் தெரிந்தெடுப்புகளிலும் பிரதிபலிக்கிறது. எனவே தேவனிடத்தில் உண்மையாய் இருப்பவன் சகமனிதனிடத்திலும் உண்மையுடையவனாக இருப்பான். எப்படியெனில் பிறரைக் குறித்து தீமையானவற்றை பேசாதவனாகவும், தீமை செய்யாதவனாகவும், பிறருக்கு ஏற்படும் நிந்தையில் களிகூறாதவனே தேவனுக்கு ஏற்புடையவன். நாம் தேவனுடைய காரியத்தில் உண்மையாய் இருப்போமென்றால், பிறருடைய காரியத்திலும் உண்மையாய் வாழ எதிர்பார்க்கப்படுகிறோம்.

தோற்றத்திலும் உண்மை [வச.4,5]: நாம் தேவனுக்குப் பிரியமில்லாத செயல்களைச் செய்வோரோடு எவ்விதத்திலும் தொடர்பு அற்றவர்களாய், அத்தகைய செயல்களுக்கு அந்நியராய் வாழவும், சொல் தவறாதவர்களாகவும், அந்தரங்க வாழ்வின் பரிசுத்தத்தை அன்றாட வாழ்வில் வெளியரங்கமாய் வெளிப்படுத்தவும், எல்லாவற்றிலும், எல்லா நிலையிலும் உண்மையாய் வாழ அழைக்கப்படுகிறோம். இவ்வாறு வாழ்பவனே என்றென்றும் அசைக்கப்படுவதில்லை. உள்ளொன்றும், புறமொன்றுமாய் வாழ்பவனல்ல. உண்மையாய் வாழ்பவனே உத்தமன்.

ஆண்டவரே உம்முடையதில் உண்மையாய் வாழ எனக்குக் கற்றுத்தாரும், அதினால் உம்மோடு என்றென்றுமாய் வாழ வழிசெய்யும், அசையா வாழ்வை ஈந்தருளும். ஆமென்.

மெல்கிசேதேக்

> இயேசு கிறிஸ்து மெல்கிசேதேக்கை விட பெரியவர். எவ்விதத்தில்?

எபிரெயர் நிருபத்தில் பல இடங்களில் மெல்கிசேதேக்கைக் குறித்து எழுதப் பட்டுள்ளது. இந்த அதிகாரத்தில் அது விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

இயேசுவைப் போன்றவன் [வச.1-3] :- 1) மெல்கிசேதேக் என்பதற்கு சமாதானத் தின் இராஜா என்றும் நீதியின் இராஜா என்றும் பொருளாகும். இயேசுவும் நீதியுள்ளவர், சமாதான பிரபு என்று அழைக்கப்படுகிறார். 2) நீதியுள்ள தேவனுக்கும், பாவமான மக்களுக்குமிடையே சமாதானத்திற்காக மத்தியஸ்தம் செய்வதே ஆசாரியனின் பணியாகும். அதே போல் இயேசு நமக்கு மத்தியஸ்தராயிருக்கிறார். 3) ஆரம்பமும், முடிவும் இல்லாதவர் மெல்கிசேதேக். தேவனும் ஆதியும், அந்தமுமாயிருக்கிறார். 4) தேவனால் ஆசாரியனாய் நியமிக்கப்பட்டவன் மெல்கிசேதேக். கிறிஸ்து மனுக்குலத்தை மீட்கும் பலியாக தேவனால் நியமிக்கப்பட்டார்.

காணிக்கையைப் பெற்றவன் [வச.4-7] :- லோத்துவை சிறையாக்கிக் கொண்டு போன கெதர்லாகோமேரை முறியடித்து ஆபிரகாம் திரும்பி வந்தபோது மெல்கிசேதேக்கைச் சந்தித்து, மெல்கிசேதேக்குக்கு தசமபாகக் காணிக்கையைக் கொடுத்தான். லேவியர்கள் மக்களிடமிருந்து தசம பாகத்தை வாங்க தேவ கட்டளையைப் பெற்றிருந்தனர். மெல்கிசேதேக்கோ கோத்திரப் பிதாவாகிய ஆபிரகாமிடமிருந்து தனது மகிமையினிமித்தம் காணிக்கையைப் பெற்று, ஆபிரகாமை ஆசீர்வதித்தான்.

நித்திய ஆசாரியத்துவத்தை உடையவன் [வச.8-10] :- இஸ்ரவேலர் வம்சத்தில் மெல்கிசேதேக் பிறக்கவில்லை. தேவ கட்டளையின்படி காணிக்கையை வாங்கிய ஆரோனும், அவன் சந்ததியாரும் மரித்துப் போனார்கள். மெல்கிசேதேக்கின் முடிவைப் (மரணம்) பற்றி வேதத்தின் மூலம் நாம் அறிந்து கொள்ள முடியாது. ஆகவே அவன் முடிவு இல்லாதவன் என்று சொல்லப்படுகிறது. இவன் கோத்திரத் தலைவன் ஆபிரகாமும், லேவியும் ஆசாரியன் என்ற முறையில் காணிக்கை கொடுத்ததால் அவர்களை விடப் பெரியவன் என்று யூதர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

எங்கள் பிரதான ஆசாரியனாகிய இயேசுவே, நீர் எவ்வளவு மேன்மை உள்ளவர் என்பதை அறிய உதவி செய்யும். ஆமென்.

எபிரெயர் 7:11–25

இயேசுவின் ஆசாரியத்துவம்

உலக அமைப்புகளுக்கும், செயல்களுக்கும் மேலானவர் இயேசு, எவ்வாறு?

ஆரோனின் ஆசாரியத்துவம் தேவ திட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்டாலும் மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவமும், இயேசுவின் ஆசாரியத்துவமும் மிகச் சிறந்தது என்று இங்கு விவரிக்கப்படுகிறது.

நியாயப்பிரமாணத்துக்கு உட்படாதது [வச.11,12] :- யூத மக்களுக்கு நியாயப் பிரமாணமும், ஆசாரியத்துவமும் மிகவும் முக்கியமானவை. இவை இரண்டும் இஸ்ரவேல் மக்களை வழிநடத்தக் கொடுக்கப்பட்டன. நியாயப் பிரமாணத்தின்படி அழைக்கப்பட்டவர்கள் லேவி கோத்திரத்தார். ஆனால் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி கிறிஸ்து ஆசாரியரானதால் வேறொரு நியாயப்பிரமாணம் தேவை. ஏனெனில் மோசேயின் நியாயப் பிரமாணம் மனிதனை முழுமையடையச் செய்யவில்லை.

யூதா கோத்திரத்தைச் சேர்ந்தது [வச.13,14] :- லேவி கோத்திரத்தின் முறைப்படி இயேசு ஆசாரியராக வேண்டுமானால் அவர் லேவிக் குடும்பத்தில் பிறந்திருக்க வேண்டும். யூதா கோத்திரத்தில் பிறந்த இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையில் ஆசாரியரானார். ஆரோனின் முறைமை ஆசாரியத்துவம் உலகத்துக்குரியது. மற்றவையோ தேவனால் ஏற்படுத்தப்பட்டது.

நித்தியமானது [வச.15-17] :- பிரதான ஆசாரியனின் காலம் குறிக்கப்பட்டது. ஆனால் கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் நித்தியமானது. அவரது ஊழியத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியாது. வச.17ல் அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார். ஆகவே அழியும் உலகத்தில் அல்ல, அழியாத ஜீவனுக்குரிய ஆசாரியர் இயேசு கிறிஸ்து.

பூரணப்படுத்துவது [வச.18,19]:- எத்தனை பலிகளைச் செலுத்தினாலும், மற்றவர்களைக் குற்றமற்றவர்களாக்க ஆசாரியர்களால் முடியவில்லை. ஏனெனில் அவர்களோ குறைவுள்ளவர்கள். இவர்கள் காட்டும் நியாயப் பிரமாணம் உலகத்திற்கு அழிவையேக் கொண்டு வந்தது. பூரணப்படுத்த முடியவில்லை. கிறிஸ்து செய்தவைகளோ மனிதனுக்குள் பூரணத்தை ஏற்படுத்துகிறது.

அன்புள்ள இயேசுவே, நீர் ஒருவரே எங்களைப் பூரணப்படுத்துகிறவர். உம்மைப் போற்றுகிறேன். ஆமென்.

இயேசுவின் ஆசாரியத்துவம்

பிரபலமானவர்களாக வேண்டுமென விரும்புவதை விட இயேசுவைப் போல் மாற விரும்புவது நல்லது.

இந்நிருபத்தை வாசிக்கும்போது லேவியராகமத்தையும் இணைத்து படிப்பது நமக்கு மேலும் தெளிவை உண்டாக்கும். இயேசுவின் ஆசாரியத்துவத்தைப் பற்றி தொடருகிறார் ஆசிரியர்.

ஆணையினாலான ஆசாரியத்துவம் (வச.20-22) :- பூமியில் ஆசாரியர்களாய் இருந்தவர்கள் அரசியல் செல்வாக்கின்மூலம் நியமிக்கப்பட்டார்கள். மோசே காலத்தில் தேவ அழைப்பை பெற்ற நிலைமை மாறி. கிறிஸ்துவின் காலத்தில் தேசாதிபதி போன்ற நாட்டை ஆள்பவர்களது செல்வாக்கில் ஆசாரியர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் நியமனத்துக்குக் கட்டளைப் பெற்றனர். இந்நியமனம் மாற்றப்படக் கூடியது. ஆனால் இயேசுவோ கட்டளையின்படியல்ல. ஆணையின்படி வாக்குறுதி பிரமாணத்தினால் ஆசாரியராக்கப்பட்டார். இது மாற்றப்பட முடியாது.

மாறாத ஆசாரியத்துவம் :- ஆசாரியன் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே மத்தியஸ்தனாக செயல்பட்டான். அதோடு மனிதர்களால் நியமிக்கப்பட்டவர்கள் மரணமடைந்தார்கள். அவர்களது இடத்தில் வேறொருவர் ஆசாரியராக நியமிக்கப்படுவார். இந்தப் பிரதான ஆசாரியத்துவம் கை மாறக் கூடியது. நிரந்தரமானதுமல்ல. ஆனால் தேவனால் நியமிக்கப்பட்ட கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் மாறாதது. நிலையானது! ஏனெனில் கிறிஸ்து மரணத்தை வென்றவராக இன்றும் உயிரோடிருக்கிறபடியால் அவரது ஆசாரியத்துவம் மாறாதது.

பூரணமான ஆசாரியத்துவம் :- பிரதான ஆசாரியர்கள் என்றாலும் கூட அவர்கள் பாவமில்லாதவர்களல்ல. தங்கள் பாவத்திற்காக பலியிட வேண்டியவர்கள். தங்களது பாவத்திற்குப் பின்தான் மற்றவர்களது பாவங்களைப் பற்றி எண்ணிப் பார்க்க முடியும். பாவ மன்னிப்புக்காக மீண்டும் மீண்டும் பலிகளை செலுத்த வேண்டும். ஆனால் இயேசு பாவமில்லாத. குற்றமில்லாத. பரிசுத்தர் என்பதால் ஒரே தரம் தம்மை பலியாக்கி, இரட்சிப்பின் திட்டத்தைப் பூரணப்படுத்தினார். அவரை விசுவாசிப்பவர்கள் இயேசுவால் பூரணராக்கப்படுகிறார்கள்.

இயேசுவே, நீர் பரிசுத்தர். பூரணர், மேலானவர். உம்மைப் போல என்னை மாற்றும். ஆமென்.

எபிரெயர் 8:1-

இயேசுவின் ஆசாரியப் பணி

கிரியையைச் சார்ந்த உடன்படிக்கை அழிந்தது. கிருபையை சார்ந்த உடன்படிக்கை நிலைத்திருக்கிறது.

இயேசு கிறிஸ்துவின் ஆசாரியப் பணியை வேறொரு கோணத்தில் ஆசிரிய விளக்குகிறார்.

முடிவுற்ற ஆசாரியப் பணி :- பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆசரிப்புக் கூடாரத்தில் நாற்காலிகள் என்று எதுவும் கிடையாது. ஏனெனில் ஆசாரியப் பணி தொடர்ந்து நடைபெற வேண்டியதொன்று. ஆனால் இயேசுவோ தமக்குக் கொடுக்கப்பட்டிருந்த மீட்பின் பணியை செய்து முடித்ததினால் அவர் பிதாவின் வலது பாரிசத்தில் போய் உட்கார்ந்தார். இந்தக் கூடாரம் மனுஷர்களால் அல்ல, தேவனால் நிறுவப்பட்ட மெய்யான கூடாரம். இந்த கூடாரத்தில்தான் இயேசு பணி செய்து முடித்தார். ஆகவே இனியொரு பலி நம் மீட்புக்காக செய்ய வேண்டியதில்லை. இயேசுகிறிஸ்து தனக்கு கொடுத்த ஆசாரியப்பணியை செய்து முடித்த விட்டார். நம்மிடமும் நற்செய்தியை அறிவிக்கும் பணியை கொடுத்திருக்கிறார். நாம் எவ்விதம் எவ்வளவு தூரம் அப்பணியை செய்து முடித்திருக்கிறோம். முயற்சியாவது எடுத்திருக்கிறோமா?

உண்மையான ஆசாரியப் பணி :- யூத ஆசாரியர்கள் தேவனால் மோசேக்குக் கொடுக்கப்பட்ட மாதிரியின்படி செய்யப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்தில் பணியாற்றினார்கள். ஆனால் கிறிஸ்துவோ மெய்யான கூடாரத்தில் (பரலோகத்தின் ஆலயம், ஆராதனை) ஊழியம் செய்த பிரதான ஆசாரியராய் இருக்கிறார். இந்தக் கூடாரத்தில் இருக்கும் பொருட்களின் மாதிரியின்படி சீனாய் மலையில் மோசேக்குச் சொல்லப்பட்டபடி பூமியின் கூடாரத்தில் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. கிறிஸ்து செய்த ஆசாரிய பணியே உண்மையும் முதன்மையுமானது. யூத ஆசாரியர்கள் செய்த தெல்லாம், அதனைப் பிரதிபலிக்கிறது. இயேசுவோ முக்கியமான ஆசாரிய ஊழியத்தை பெற்று வந்து தனது ஊழியத்தை நிறைவேற்றினார். பிதாவு இந்த உலகத்தை ஆறு நாளளவும் படைத்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் பிதா எப்படியோ அப்படியே குமாரனும் தனக்கு கொடுக்கப்பட்ட ஆசாரிய ஊழியத்தை நிறைவேற்றினார்.

கர்த்தாவே, உமது தியாகத்தின் மூலம் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தியமைக்காக நன்றி கூறுகிறேன். ஆமென்.

புது உடன்படிக்கை

> உம்முடைய அன்பின் எட்டாத ஆழத்தை நான் உணர்ந்து கொள்ள எனக்குக் கற்றுத்தாரும்.

தேவன் தம் மக்களோடு புது உடன்படிக்கை செய்தார். இயேசு கிறிஸ்துவே பிரதான ஆசாரியரும், பலியான ஆட்டுக் குட்டியாகவும் இருந்து இந்த மேன்மையான உடன்படிக்கையை நிறைவேற்றிவிட்டார்.

புது உடன்படிக்கையின் சிறப்பு: பழைய உடன்படிக்கையில் இஸ்ரவேலர் நிபந்தனைகளை மீறியதால் அந்த உடன்படிக்கை உடைக்கப்பட்டது. புது உடன்படிக்கையின் நிபந்தனைகளை எல்லாம் தேவ குமாரனாம் இயேசு கிறிஸ்து நிறைவேற்றினபடியால் இந்த உடன்படிக்கை தோல்வி அடைய வாய்ப்பு இல்லை. பழைய உடன்படிக்கையை மனிதன் முறித்துப் போட்டதால் புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. பழைய உடன்படிக்கை குறைகளால் நிரம்பியது. பிழையும், பலவீனமும் பயனற்றதுமாயிருந்தது. புது உடன்படிக்கை அப்படிப்பட்டதல்ல. புது உடன்படிக்கையின் நிபந்தனை இயேசு கிறிஸ்து நிறைவேற்றியதால் நிலை நிற்கிறது. பழைய உடன்படிக்கை கற்பலகைகளில் எழுதப்பட்டது. புதிய உடன்படிக்கையோ ஒவ்வொரு உள்ளத்திலும் எழுதப்படுகிறது. அந்த உடன்படிக்கை கிறிஸ்துவே. கிரியைச் சார்ந்த உடன்படிக்கை அழிந்தது. கிருபையைச் சார்ந்த உடன்படிக்கை நிலைத்திருக்கிறது.

பிரமாணங்கள் இருதயத்தில் : பழைய பிரமாணங்கள் கற்பலகைகளில் எழுதப்பட்டன. அவைகள் மனிதனால் நிறைவேற்றப்பட முடியவில்லை. இதைக் கண்ட தேவன் புது உடன்படிக்கையின் பிரமாணங்களை மனிதனின் இருதயத்திலேயே எழுதினார்.

தேவனை அறியும் அறிவு: பழைய உடன்படிக்கையில் தேவனைக் குறித்து கேள்விப்பட்டே வாழ்ந்தனர். புது உடன்படிக்கையின் ஈவாக இந்த அறிவு ஆவியானவரால் நமக்குள் வைக்கப்படுகிறது.

தேவன் தரும் மன்னிப்பு : புது இருதயம் பெற்றவர்கள் கர்த்தரை அறிந்தவர்கள். பாவத்தை துணிகரமாக செய்யவே மாட்டார்கள். செய்த பாவத்திற்கு மனஸ்தாபப்படும் போது மட்டுமே தேவன் மன்னித்து நம்மை ஏற்றுக் கொள்கிறார்.

தேவனே! புது உடன்படிக்கையின் மூலம் நித்தியமாய் உம்முடைய பிள்ளையாக என்னை ஏற்றுக் கொண்டதற்காக நன்றி. ஆமென்.

இயேசுவின் ஆசாரியத்துவம்

கூடாரத்தில் வாசம் செய்வதை விட, நம் உள்ளங்களில் வாசம் செய்வதை தேவன் விரும்புகிறார்!

இஸ்ரவேலரது வாழ்வில் ஆசரிப்புக் கூடாரம் முக்கியமானது. இதன் பொருட்கள், அமைப்பு, நியமங்கள் ஆகியவற்றை விட இயேசுவின் மீதுள்ள விசுவாசம் மிக மேன்மையுள்ளது என்று விளக்கப்படுகிறது.

கூடாரத்தின் அமைப்பு :- கூடம், பரிசுத்த பீடம், மகா பரிசுத்த ஸ்தலம் என 3 பிரிவுகளாக ஆசரிப்புக் கூடாரம் அமைந்திருந்தது. இதன் நீள, அகலங்கள், அலங்காரம் தேவனுக்குரிய பொருட்கள் வைக்க வேண்டிய இடம் என்பன தேவனால் மோசேக்குத் தெளிவாகச் சொல்லப்பட்டது. பிரதான ஆசாரியன் மட்டும் மகா பரிசுத்த ஸ்தலத்தினுள் வருடத்தில் ஒருமுறை மட்டும் பிரவேசிக்க முடியும். இஸ்ரவேலர் தாங்கள் போகுமிடமெல்லாம் கொண்டு செல்ல வசதியாக கூடாரமாக அமைந்தது. இவ்வாறு ஆசரிப்புக் கூடாரத்தின் அமைப்புகள் சிறந்தது என்றால், இதன் உண்மை அமைப்பான பரலோகம் எத்தனை சிறப்புடையதாயிருக்கும்.

கூடாரத்தின் நோக்கம் :- மக்கள் மத்தியில் வாசமாயிருந்து அவர்களை வழிநடத்துவதற்கு அடையாளமாக ஆசரிப்புக் கூடாரம் வைக்கப்பட்டது. தேவன் மக்கள் மத்தியில் வாசமாய் இருக்கிறார் என்பது அவரது தன்மையை வெளிப்படுத்தியது. மேலும், மக்களது பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படுவதற்காக ஆசாரியன் கூடாரத்தின் மகா பரிசுத்த இடத்தில் பலி செலுத்துவான். இக்கூடாரம் தேவன் வாசம்பண்ணும் இடமாக மட்டுமல்ல, மக்களையும் தேவனையும் இணைக்கும் இடமாகவும் அமைந்தது.

கூடாரத்தின் நியமங்கள் :- தேவனுடைய சந்நிதியில் மக்கள் சேரக் கூடாதபடி தொங்குதிரை இருந்தது. தனக்காவும், மக்களுக்காகவும் பலி செலுத்த பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பான். அவன் செலுத்தும் பலி ஒரு திருப்திக்காகவே தவிர ஆத்தும ஈடேற்றத்திற்கு உதவவில்லை. மிருகத்தின் இரத்தம் மனிதனை தேவனிடத்தில் சேர்ப்பதற்கு வல்லமையற்றது. இந்த நியமங்களை விட தேவன் ஏற்படுத்தி இரட்சிப்புக்கான நியமங்கள் மிக உன்னதமானவை.

தேவனே, நான் குறைவுள்ளவனா(ளா)யினும் நீர் என்னில் வாசம் செய்ய விரும்புகிறதற்காக நன்றி. ஆமென்.

ஆண்டவரே எல்லாம்

நம் வாழ்வில் மனநிறைவைத் தருவது எது?

என் ஆண்டவர் : முதல் இரண்டு வசனங்களில் தேவன் என்னை ஆள்பவராக இருப்பதினால் எனக்குக் குறைவில்லை என்பதை விளக்குகிறார். பொதுமொழி பெயர்ப்பில் இரண்டாம் வசனம் இவ்வாறு விளக்கப்பட்டிருக்கிறது. தேவனே உம்மையன்றி எனக்கு வேறே செல்வமில்லை. தேவன் நம்மை ஆளுகை செய்கிறாரா? என் வாழ்வின் எல்லா பகுதிகளும் அவரது ஆளுகைக்கு உட்பட்டிருக்கிறதா? அப்படியென்றால் என் வாழ்வில் குறைவிற்கு இடம் இல்லை.

என் நண்பர் : அடுத்த இரண்டு வசனங்களில் தேவனோடு ஐக்கியம் கொண்டுள்ள பரிசுத்தவான்களோடு தான் கொண்டுள்ள உறவினால் வரும் நன்மையை விவரிக்கிறார். அவர்களோடு நாம் ஐக்கியம் கொள்வதினால் தேவனே நம் நண்பராகும் பாக்கியத்தைப் பெறுகிறோம் (யோவான் 15:14,15). அவரை நம் நண்பராக்கும் போது நம் வாழ்வில் குறைவில்லை.

என் கர்த்தர் : தேவனே நம்முடைய ஆசீர்வாதத்தின் திறவுகோள். எப்படி யெனில் அவரே நம் நேர்த்தியான பங்கு, நம் சிறப்பான சுதந்திரம், நம் வாழ்வில் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு ஆசீர்வாதமும் அவராலே யல்லாமல், வேறொருவராலுமில்லை என்கிற நம்பிக்கை நம் வாழ்வில் சோர்வுண்டாக்காது, மாறாக மனநிறைவையே உண்டாக்கும். நாம் எத்தகைய எண்ணமுடையவர்களாயிருக்கிறோம்?

என் ஆலோசகர் : தேவனே நாம் எல்லாவற்றிலும், எல்லாவற்றிற்காகவும் ஆலோசித்து செயல்பட்டால், நம் வாழ்வில் எது வந்தாலும் நாம் அசைக்கப் படுவதில்லை. மேலும் நாம் அவருடைய பிரசன்னத்தினால் ஆட்கொள்ளப் படுவதினால், உணர்வுள்ள இருதயத்தை நமக்குத் தந்து நம்மை நிறை வாழ்விற்கு நேராய் நித்தமும் அவர் நடத்துகிறார்.

என் ஆத்தும நேசர் : எல்லாவற்றிற்கும் மேலாக அவர் நம் ஆத்துமாவின் மேல் கரிசனையுடையவராய் இருக்கிறதினால் நம் ஆத்துமாவிற்கு அவர் செய்வதை எண்ணும்போது நாம் மனமகிழ்ச்சியினால் நிரப்பப்படுவோம். அவரே எல்லாம், என் எல்லாமும் அவருக்கே.

ஆண்டவரே, என் வாழ்வில் நீர் என் ஆத்தும நேசராக, ஆலோசகராக இருந்து ஆட்சி செய்ய என்னை அர்ப்பணிக்கிறேன். ஆமென்.

மனசாட்சியைச் சுத்திகரித்தல் அவசியம்!

ஆண்டவரே, உம்மண்டை வருகிறேன். உமது வசனத்தால் எனது உள்ளான மனிதனைச் சுத்திகரியும்.

உடலை சுத்தம் செய்துவிட்டு கடவுளைத் தேடுவது நமது நாட்டு மக்களின் பழக்கம். உடல் சுத்தம் மட்டும் போதாது. நமது மனசாட்சியும் சுத்திகரிக்கப்பட்டால்தான் நாம் அவரை கிட்டிச் சேரமுடியும்.

இந்நிருபம் எழுதப்பட்ட காலத்தில் யூத மதத்திலிருந்தவர்கள் கிறிஸ்தவர்களாக ஆகி இருந்தனர். அவர்களுள் சிலர், கிறிஸ்துவை விட்டுவிலகி மீண்டும் யூத சமயம் திரும்பும் சோதனையில் சிக்கி இருந்தனர். அவர்களுக்காக எழுதப்பட்ட இந்நிருபத்தில், இதை ஆக்கியோன் தேவதூதர், பழைய ஏற்பாட்டுக் காலத்துப் பெரும் மனிதர் மற்றும் யூத சமய சடங்காச்சாரங்களை விட இயேசு கிறிஸ்து எவ்வண்ணம் மேலானவர் என்பதை முந்தைய அதிகாரங்களில் விளக்கிவிட்டார். தொடர்ந்து, இயேசு கிறிஸ்து மட்டுமே நமது மனசாட்சியைச் சுத்திகரிக்க முடியும் என்று காட்டுகிறார். யூத சமய பலிகள் வழியாக உடல் சுத்தம் மட்டுமே கிடைக்க வழி இருந்தது; கிறிஸ்து தரும் சுத்திகரிப்பால் தேவனை மன உறுதியுடன் நாம் அண்டிச் சேரமுடியும்.

இந்நாட்களில் கோவில்கள், மசூதிகள் மற்றும் ஆலயங்கள் நிரம்பி வழிகின்றன. அங்கு வரும் அனைவரும் உள்ள சுத்தியும், ஆன்மீக அமைதியும் சமாதானமும் நாடி வருகின்றனர். நம்மனைவருக்காகவும் தம்மை பரிபூரணமான பலியாகத் தந்த இயேசு கிறிஸ்து ஒருவர் மட்டுமே இதை நமக்குத் தரமுடியும். நமக்குள் காணப்படும் வேற்றுமைகளைத் தள்ளிவிட்டு அனைவரையும் சுத்திகரிக்க அவரால் மட்டுமே முடியும்.

அந்நிய இரத்தம் அல்ல, தமது சொந்த இரத்தத்தைச் சிந்தி நமக்காக நித்திய ஆவியினாலே பழுதற்ற பலியானவர் இயேசு கிறிஸ்து (வசனம் 14). இதனால், நித்திய மீட்பை நம்மனைவருக்கும் அவர் ஏற்படுத்திவிட்டார் (வச.12). எனவே, நித்திய சுதந்தரமான உரிமைப்பேற்றை நாம் பெற்றுக்கொள்ள உடன்படிக்கையைச் செய்துவிட்டார் (வச.15).

குத்தும் மனசாட்சி, பயம் நிறைந்த உள்ளம், குழப்பமான மனநிலை - இவை இனி வேண்டாம்.

தேவனே, நீர் தரும் மனசுத்திகரிப்புடன் என் வாழ்நாளில் ஒவ்வொரு நாளும் வாழ்ந்திட அருள்கூரும், ஆண்டவரே! ஆமென்.

பரிபூரணமான பலி

ஆண்டவரே, எனது மன இருளை நீக்கும், நீர் இருக்கும் வண்ணம் உம்மைக் கண்டுகொள்ள அருள்தாரும்.

அவதாரங்கள் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம் 'நல்லவர்களைக் காக்கவும், அல்லாதவர்களை அழிக்கவும் கடவுள் அவதாரம் எடுக்கிறார்' என்பது நம் நாட்டு மக்களால் நம்பப்படுகிறது. மனித சமுதாயத்தின் ஒழுக்க வாழ்வு சுழலும் சக்கரம் போன்று அலையாக எழும்புகிறது என்றும் ஒழுக்கச் சீர்கேடு ஏற்பட்டு அவ்வலை கீழ்நோக்கிப் போகும்போது, அவ்வலையின் உச்சியில், அவ்வாறு அறுநூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை, கடவுள் அவதாரம் எடுத்து மனித சமுதாயத்தை நல்வழிப்படுத்துகிறார் என்றும் நம்பப்படுகிறது. அப்படியே மகாவீரர், புத்தர், இயேசு கிறிஸ்து மற்றும் முகமது நபி ஆகியோர் தோன்றினர் என்றும் கூறப்படுகிறது.

இன்றைய வேதபகுதி, இக்கருத்து தவறானது என்று காட்டுகிறது. இயேசு 'அவதாரம்' எடுக்கவில்லை. பலருள் அவரும் ஒருவர் என்பது தவறு. அவர் ஆண்டவர்; ஒப்பற்றவர்; மனிதனாக ஒரே ஒரு முறைதான் மனித வரலாற்றில் அவர் வந்தார். பரிபூரணமான பலியாகி, உயிர்த்தெழுந்து இன்று தேவனின் வலதுபாரிசத்தில் அரியணையில் சகல அதிகாரங்களுடன் அமர்ந்துள்ளார். பலிகளோ அவதாரங்களோ மீண்டும் தேவையில்லை. மனுக்குலத்தவர் அனைவரும் தேவனைச் சேர்ந்திட இயேசு கிறிஸ்து வழி திறந்துவிட்டார்.

கடவுளைச் சாந்திப்படுத்துவதற்காக ஆண்டுதோறும், மாதந்தோறும், வாரந்தோறும் - ஏன், நாள்தோறும் பூஜைகளும், சிறப்பு வழிபாடுகளும் ஏராளம் நடத்தப்படும் நாட்டில் நாம் வாழ்கிறோம். இத்தகைய, நிறைவின்றி குறையாக உள்ள முயற்சிகள் இனிமேல் தேவை இல்லை. ஒரே ஒரு முறை செலுத்தப்பட்ட தமது பரிபூரணமான பலியினால் இயேசு கிறிஸ்து நமது இரட்சிப்புக்கான தேவதிட்டத்தை முற்றிலும் நிறைவாக்கிவிட்டார். இனிமேல் மனித பலியும், பூஜையும், அவதாரமும் தேவையில்லை. இயேசு கிறிஸ்து மீண்டும் வரப்போகிறார். மீண்டும் பலியாவதற்காக அல்ல; அவரை அண்டிக்கொண்ட அனைவருக்கும் நித்திய மீட்பை அளித்திட வரப்போகிறார்.

அவதாரங்கள் கோட்பாட்டை நம்பும் நண்பர் ஒருவருக்கு இயேசு கிறிஸ்துவின் ஒப்பற்ற மேன்மையை எப்படி விளக்கிட முடியும்?

எங்களுடைய தேவைகளையும், நித்திய மீட்பின் தேவையையும், ஒரே ஒருமுறை செலுத்தப்பட்ட உமது பரிபூரணமான பலியினால் முற்றிலும் நிறைவாக்கிவிட்ட இயேசு கிறிஸ்துவே, உமக்கு நன்றி. ஆமென்.

எபிரேயர் 10:1-10

"என்னைக்குறித்து எழுதியிருக்கிறபடியே..."

உம்மையே நோக்கிப்பார்த்து நான் முன்னேறிப்போக எனது மனதை நேர்வழிப்படுத்தும், ஆண்டவரே!

'நமது மீட்புக்கு இயேசு கிறிஸ்து மட்டுமே போதும்' என்றால், பழைய ஏற்பாடு நமக்குத் தேவையா? புதிய ஏற்பாடு மட்டுமே போதாதா? அல்லது யூத எழுத்தாளர்கள் எழுதிய பழைய ஏற்பாட்டுக்குப் பதிலாக, நமது நாட்டின் நமது பண்பாட்டிற்கு ஒத்ததாக எழுதப்பட்ட மறைநூல்களை நாம் பயன்படுத்தலாமா? சிக்கலான கேள்விகள்தான்!

இயேசு கிறிஸ்துவின் பரிகார பலி மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றால் மட்டுமே நமக்கு மனப்பூர்வமான மெய்யான சுத்திகரிப்பு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. பழைய ஏற்பாட்டு பலிகளும், சடங்காச்சாரங்களும் அவர் நமக்காக சம்பாதித்துள்ள சுத்திகரிப்புக்கு நிழலாக உள்ளன. தன்னைக்குறித்து தேவன் ஏற்கனவே பழைய ஏற்பாட்டில் கூறியுள்ளதையே இயேசு கிறிஸ்து நிறைவேற்றினார். இயேசு கிறிஸ்துதான் நமக்கு இரட்சிப்பையும், தேவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்ந்திட முறையான வழியையும் பெற்றுத்தந்தார்.

பழைய ஏற்பாடு, இயேசுவை குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கிறது. புதிய ஏற்பாடு அவர் நிறைவேற்றி முடித்திட்ட தீர்க்கதரிசன நிறைவேறுதலை அடுக்கு அடுக்காகக் காட்டுகிறது. சங்.40:6-8 உடன் ஒப்பிட்டு வசன.5-10ஐ மீண்டும் வாசியுங்கள். யோவான் ஸ்நானன், யோ.1:29-ல் இயேசுவைக் குறித்துச் சொல்வதையும் வாசியுங்கள். இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டின் நிறைவாய் இருக்கிறார்.

மனுக்குலம் அனைத்துக்கும் வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருப்பவர்தான் இயேசு. இயேசு கிறிஸ்துவிடம் தெளிவாக நம்மை வழிநடத்தும் பிற சமய நூல்கள் அப்படி ஒருவர் தேவை என்பதை மட்டுமே காட்டுகின்றன; 'அவர் யார்?' என்பதைத் தெளிவாகக் காட்டவில்லை. இன்று நாம் எதை பின்பற்றுகிறோம்? வழி, சத்தியம், ஜீவனாய் இருக்கின்ற இயேசு கிறிஸ்து மட்டுமே நம்மை பிதாவிடம் கொண்டு செல்ல முடியும். அவராலே அன்றி இரட்சிப்பு இல்லை. இப்போது முடிவெடுப்பாம். நாம் மண்ணென்று நினைவுகூறுவோம்.

ஆண்டவரே, இயேசுகிறிஸ்து தமது பரிபூரணத்தால் எங்களுக்குத் தரும் புது வாழ்வின் உண்மை நிலைமைக்காக உமக்கு நன்றி.

எபிரேயர் 10:11–18

கிறிஸ்து வெற்றி சிறந்தார்!

தரித்திரம் துன்பம் பாவத்தால் இக்கட்டடைந்த யாரையும் கண்ணோக்கும் மா கிருபையால்.

இயேசு கிறிஸ்து விண்ணகம் ஏறிப்போன நாளாக இன்றைய நாள் திருச்சபைகளால் அனுசரிக்கப்படுகிறது. கர்த்தர் உயிர்த்தெழுந்த ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்னர் முப்பத்தொன்பதாம் நாளில் இது நினைவு கூரப்படுகிறது. சங்.68:18ல் கூறப்பட்டுள்ள அபிஷேகம் பண்ணப்பட்ட அரசரின் வெற்றியை நிறைவேற்றுவதற்கு அடையாளமாக, இந்நாளில் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த உடலுடன் வெற்றி வேந்தராக விண்ணகம் போய்ச் சேர்ந்தார் என கருதப்படுகிறது. இந்நிகழ்வு அவரது பூவுலக ஊழியத்தின் நிறைவையும், விண்ணிலும் மண்ணிலும் அவருக்குள்ள அதிகாரத்தையும், முழு ஆளுகையையும் சுட்டிக்காட்டுகின்றது. இந்நிருபம் முதலாம் நூற்றாண்டின் யூத கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டது. யூத சமயத்துக்குத் திரும்பிவிடலாமா? என்ற தடுமாற்றத்தில் அவர்கள் இருந்தனர். எனவே, இந்நிருப ஆக்கியோன் இயேசு கிறிஸ்து, யூத சமய ஆசாரியர்களைவிட மேலானவர் என்று காட்டுகிறார்.

பரிபூரணமான சுத்திகரிப்புக்கு வாய்ப்பில்லையாதலால், யூத சமய ஆசாரியர்கள் தினமும் பலி செலுத்திவந்தனர். மாறாக, முற்றிலும் பரிபூரணமான பலியை ஒரே ஒருமுறை செலுத்திவிட்டதால், கிறிஸ்து மீண்டும் பலி செலுத்த வேண்டிய அவசியம் இல்லாமல் போயிற்று. (வச.18). தனது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலால் முழு வெற்றி பெற்ற கிறிஸ்து முற்றிலும் புதிய வாழ்க்கையை நமக்குத் தருகிறார் (வச.16). மீண்டும் நமது பாவங்கள் நினைக்கப்படுவதில்லை (வச.17). விண்ணகம் ஏறிப்போன இயேசு கிறிஸ்து, தனது மாசற்ற மானிட தன்மையையும் தெய்வீக வல்லமையையும் அதிகாரத்தையும் ஒருங்கிணைத்ததாக வெளிப்படுத்துகிறார்.

வச.11-ல் உள்ள 'நிற்பான்' என்ற சொல்லை வச.12ல் உள்ள 'உட்கார்ந்து' என்ற சொல்லுடன் ஒப்பிடவும். இதன் பலனாகத்தான், இனி பிற ஆசாரியர் போன்று இயேசு கிறிஸ்து பலி செலுத்தும்படி 'நிற்க' வேண்டிய அவசியம் இல்லை. நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டதால் வரும் மகிழ்ச்சியையும், வெற்றி சிறந்து பரத்துக்கேறிப்போன இயேசு கிறிஸ்து நமக்குத் தந்துள்ள புதுவாழ்க்கையையும் எப்படி அனுபவிக்கிறோம்?

ஆண்டவரே, நீர் தரும் பாவ மன்னிப்பை பெற்று புதிய வாழ்க்கையை பெற எங்களுக்கு உதவும். ஆமென்.

விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு சேரக்கடவோம்!

உம்மோடு நான் நெருக்கமாக இன்று வாழ்ந்திடும்படி என்னோடு பேசும், ஆண்டவரே!

சில நாட்களுக்கு முன்னர், ஓர் இளைஞனைச் சந்தித்தேன். "ஆண்டவரைப் பின்பற்றி வந்தேன். ஆனால் இப்போது..." என்று இழுத்தான். அவன், அன்றைய யூத கிறிஸ்தவர்களும் இத்தகைய ஆவிக்குரிய நிலைமையில்தான் இருந்தனர். முன்னர், கிறிஸ்துவுக்காகப் பாடுபடவும் அவர்கள் ஆயத்தமாக இருந்தனர் (வச.32-35). காலம் செல்லச் செல்ல அவரை விட்டு விலகி, யூத சமயத்துக்குத் திரும்பும் ஆபத்திற்கு வந்துவிட்டனர். இந்நிருப ஆக்கியோன் அவர்களுக்கு ஏற்ற ஆலோசனைகளைத் தருகிறார். 'கர் வாப்சி' (வீடு திரும்புதல்) நடத்தி கிறிஸ்தவர்களை மதம் மாற்ற முயற்சிக்கும் நம் காலத்துக்கும் இவை ஏற்ற ஆலோசனைகளே!

கிறிஸ்துவுக்குள் நமக்கு இருக்கும் உன்னத நிலைமை (வச.19-22) : தேவனை நாம் நெருங்கிச் சேர்ந்திடும் வண்ணம், திரையைக் கிழித்து வழியைக் காட்டுவது போன்று, இயேசுவின் உடல் 'கிழிக்கப்பட்டதால்' வழியைப் பெற்ற நாம் பாக்கியவான்கள். நமக்காகப் பரிந்துபேசும் இயேசு கிறிஸ்து இன்றும் தேவனின் சமுகத்தில் இருக்கிறார் (1 யோ.2:1,2). எனவே, நாம் பரிபூரண நிச்சயத்துடன் தேவ சமுகத்தில் தரித்து இருப்போமாக!

சரியான மறுமொழி தந்திடுவோம் (வச.23-25) : அலைகழிப்பட்டு அலைந்து திரியாமல், உண்மையுடன் கிறிஸ்துவையே பின்பற்றுவது நமது தலையாய கடமை. அடுத்ததாக, ஒருவருக்கொருவர் விசுவாசத்தைத் தூண்டிவிடும்படி ஒருவரையொருவர் அடிக்கடி சந்தித்து ஐக்கியம் கொள்ள வேண்டும்.

யூத கிறிஸ்தவர்களுக்கு வந்த கண்ணிகளும் உபத்திரவங்களும் நமக்கும் வரலாம். நமது விசுவாச பயணத்தில் நாம் பின்தங்கிடும்படி நம்மை நெருக்குவதும் சோதிப்பதும் எவை? இவைகளைக் குறித்து சற்று சிரத்தையுடன் சிந்தனை செய்யுங்கள். எவ்வித விலைக்கிரயம் கொடுக்க நேரிட்டாலும், ஆண்டவரையே உண்மையுடன் இறுதிவரைப் பின்பற்றிட அவரது ஒத்தாசை கேட்டு ஜெபியுங்கள். இன்றைய வேத பகுதியின் மூலம் இயேசு கிறிஸ்துவோடு நமக்குள்ள விசுவாசத்தின் அளவை நாம் விளங்கி கொள்ள முடிகிறது. என் விசுவாச அளவு எப்படி?

ஆண்டவரே, உம்மில் மட்டும்தான் உண்மையான பாதுகாப்பு இருக்கிறது; உம்மில்தான் நிலையான மகிழ்ச்சியும் எனக்கு உள்ளது; நான் ஒருபோதும் உம்மை விட்டு விலகாதிருக்க உதவிடும். ஆமென்.

எபிரேயர் 10:26–39

கோபாக்கினை!

ஆண்டவரே, என்னுடன் பேசும்; நான் கீழ்ப்படிய ஆவலாய் இருக்கிறேன்.

இன்று எத்தனை பேர் தேவ கோபாக்கினையைப் பற்றிய பிரசங்கங்கள் கேட்க விரும்புவோம்? தேவனின் அன்பு மற்றும் கருணை பற்றிய பிரசங்கங்களைத்தானே அதிகமாகக் கேட்டு வருகிறோம்! நித்திய வாழ்வு மற்றும் நித்திய சாவு பற்றி தேவன் நம்மிடம் கண்டிப்பாகப் பேசுவது இன்றும் அவசியம் அல்லவா! அவ்வண்ணம் அவர் பேசும்போது ஏற்ற மறுமொழி கொடுப்பது மிகவும் அவசியம் அல்லவா!

இன்றைய ஆக்கியோன் யூத கிறிஸ்தவர்களை ஆயரின் மனநிலையோடு அறிவுறுத்துகிறார். கிறிஸ்துவை விட்டு அவர்கள் விலகிப்போனால், மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று தெளிவாக எச்சரிக்கிறார். ஏனெனில், கிறிஸ்துவின் பிராயச்சித்த பலியினால் ஈகையாகத் தரப்படும் அளவிடமுடியாத நன்மைகளை அவர்கள் உதறித்தள்ளுவது பூவுலகிலும் பரலோகத்திலும் தேவ கோபாக்கினையை அவர்கள் அனுபவிக்கும்படித் தள்ளிவிடும்.

எனவே, அவர்களுடைய முந்தைய விசுவாச உறுதியை நினைப்பூட்டி கிறிஸ்துவை விட்டு விலகவேண்டாம் என வருந்திக்கேட்கிறார். ஏளனம், பொருட்சேதம், உபத்திரவம், உதாசீனம் போன்ற இக்கட்டுகளையெல்லாம் அவர்கள் தாண்டி வந்துள்ளனர். கிறிஸ்துவுக்குள் அவர்கள் உறுதியாக நிலைத்து நிற்பதே நன்மை தரும்.

இன்றைய உலகில் சிரியா, ஈராக், பாகிஸ்தான் மற்றும் வேறுசில நாடுகளில், பல கிறிஸ்தவ சகோதர, சகோதரிகள் மிகுந்த உபத்திரவத்துக்குள்ளாகி துன்புறுகின்றனர். இத்தகைய துன்பங்கள் நமக்கு நேரிடவில்லை என்பது உண்மைதான். எனினும் 'கர் வாப்சி' (வீடு திரும்புதல்) போன்ற பேரணிகளும், நேரிடையான தாக்குதல்களும் நம்மைப் பயமுறுத்துவது உண்மைதான். நாம் யாரானாலும் கிறிஸ்துவை விட்டு விலகிப் போனால், கொடிய விளைவுகளையே சந்திக்க நேரிடும். தேவனின் கோபாக்கினைக்கு விலகி ஓட நாம் எந்நாளும் விழிப்பாய் இருப்பது மிகவும் அவசியம். நாம் அப்படியாய் இருக்கின்றோமா?

பிதாவே, எங்கள் பாவங்களுக்காக மனம் கசந்து அழுது, மனந்திரும்பி உம்மோடு ஒப்புரவாக கிருபை தாரும். ஆமென்.

ஜெப ஜீவியம்

ஜெபம் கிறிஸ்தவ வாழ்வில் இன்றியமையாதது. ஜெபிக்கும் மனிதனே வெற்றியாளன்.

நியாயத்திற்காக (வச.1-5): நாம் வாழும் இந்த உலகத்திலே நீதி நிலை நிற்காமல் அநீதி வெல்வதை காணமுடிகிறது. அநேக வேளைகளில் நம்முடைய நீதி உதாசீனத்திற்கு ஆளாகும்போது எழும் ஏக்க குரலை தாவீதும் வெளிப்படுத்துகிறார். ஆனால் அதை தேவனிடத்தில் வெளிப்படுத்துகிறார். ஏனெனில் தேவன் ஒருவரே நீதியுள்ள நியாயாதிபதி என்றும் அவரிடத்திலிருந்து மட்டுமே நீதி வெளிப்படமுடியும் எனவும் தாவீது விசுவாசித்தார். ஆகவே அவருடைய நீதி வாழ்வில் வெளிப்பட வேண்டுகிறார். நாம் நம் நீதிக்காக யாரிடம் வேண்டுகிறோம்?

பாதுகாப்பிற்காக (வச.6-12): தன்னை சத்துருக்கள் எவ்வளவாய் நெருக்குகிறார்கள் என்பதை தேவனிடத்தில் தெரிவிக்கும் தாவீது தேவனுடைய பாதுகாப்பிற்காக வேண்டுகிறார். விரோதிகளிடமிருந்தும், ஒடுக்கும் துன்மார்க்கரிடமிருந்தும், பிராணப் பகைஞரிடமிருந்தும் தன்னை பாதுகாக்கும்படி ஜெபிக்கிறார். கண்மணியைப் போல காத்திடும் என்று உருக்கமாக வேண்டுகிறார். நம்மை விரோதிகள் நெருக்கும்போது யாரை நோக்கிப் பார்க்கிறோம்? பகைவரைப் பழிவாங்க அல்ல நம்மைப் பாதுகாக்க வேண்டுகிறோமா? அல்லது சுய பலத்தை சாருகிறோமா?

விடுதலைக்காக (வச.13-15): இறுதியாக தன்னைத் தேவன் தப்புவிக்கவும் தாவீது ஜெபிக்கிறார். தன் ஆத்துமாவை துன்மார்க்கரின் கைக்கும், உலக மனிதர்களின் கைக்கும் தப்புவித்து தன்னை விடுவிக்கும்படி வேண்டுகிறார். தன்னை விடுவிக்கத் தேவன் போதுமானவர் என அறிக்கை செய்வதோடு, அனைத்தையும் தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்தவராக தன் நம்பிக்கையை தான் நீதியில் நிலைத்திருப்பதின் மூலம் தேவனைத் தரிசிப்பேன் என அறிக்கை செய்கிறார். நாம் தேவனில் அவரது சாயலில் திருப்தியோடிருக்கிறோமா? அல்லது மனிதர்களால் அவர்கள் செய்யும் செயல்களால் திகைத்திருக்கிறோமா? ஜெப ஜீவியம் அது ஜெய ஜீவியம். ஏனெனில் அது தேவனையே நோக்கும், தேவனிடமே கேட்கும், தேவனால் ஜெயமும் பெறும்.

தேவனே, உம்முடைய நீதி, வல்லமை, விடுதலை என் வாழ்வில் வெளிப்பட என்னை உம்மிடம் ஒப்புக்கொடுக்கிறேன். கண்மணிபோல என்னைக் காத்திடும். ஆமென்.

நிலங்களில் வித்தியாசங்கள்

உணர்வுள்ள இருதயத்திற்கு கீழ்ப்படிதலே அர்ச்சனை.

முழுமுழுமாக இயேசு கடலோரத்தில் ஒரு படகிலே திரளான ஜனங்களுக்கு உபதேசம் பண்ண தொடங்குகிறார். இயேசு கிறிஸ்து மக்களுக்கு உவமைகள், சிறு கதைகள் மற்றும் நன்றாகத் தெரிந்த காரியங்கள் மூலமாகவும், ஆவிக்குரிய சத்தியத்தைப் போதித்து வந்தார். இந்த முறையான போதனை, கேட்பவர்களைச் சிந்திக்கத் தூண்டியது. இயேசு கிறிஸ்து தான் போதித்தபோது, அங்கு வந்த பெரிய கூட்டத்தினர் எப்படி வசனத்தை ஏற்றுக் கொண்டனர் என்று அவருக்கு நன்றாய்த் தெரிந்திருந்தது. ஆனால் அவர்களுக்கு இந்த நான்கு வகையான நிலங்களைப் பற்றிய உவமையை சொல்லுகிறார்.

இக்காலத்தைப் போல இயந்திரங்கள் இல்லாமல் விதைக்கிறவன் தன் சொந்த கைகளினால் விதைகளை அள்ளி தூவுவான். அந்த விதைகள் பல இடங்களில் விழுவதற்கு ஏதுவாகும். வழியருகே விழுந்த விதைகள் பறவைகள் பட்சித்துப் போட்டது. கற்பாறையில் விழுந்த விதைகள் வளர்ந்து வெயிலில் தீய்ந்து போனது. முள்ளுள்ள இடங்களில் விழுந்த விதைகள் வளர்ந்து முட்செடிகளால் நெருக்கிப் போடப்பட்டது.

நாம் எப்படி வசனத்தைக் கேட்கிறோம் என்று சிந்தித்துப் பார்ப்போம். நல்ல விளைச்சலைத் தரக்கூடியதாய் நன்கு பண்படுத்தப்பட்ட இருதயமாய் உள்ளதா? பணக் கழனம், ஐசுவரியம், உலகக் கவலைகள் நம்மை நெருக்குகிறதா?

நாம் வசனத்தைக் கேட்கும் போது ஏதோ இசையை ரசிப்பது போன்றோ, கதைக் கேட்பது போன்றோ இருக்கக் கூடாது. வசனங்களை விசுவாசித்து, உடனே மனதில் தீர்மானம் எடுக்க வேண்டும். நம்முடைய எண்ணங்கள் மாற்றப்பட வேண்டும். நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் கேட்ட சத்தியங்களைப் பயன்படுத்த வேண்டும். இவைகள் வார்த்தைகளிலிருந்து தேவனை அறிகிற அறிவினால் உணர வேண்டும். அவர் எவ்வளவு உண்மையுள்ளவர், எவ்வளவு நல்லவரென்று அறிய வேண்டும். ஒவ்வொரு நாளும் வசனங்களின் மூலமாக நம்மோடு என்ன பேசுகிறார் என கவனிக்க வேண்டும்.

ஆண்டவரே, உம்முடைய வசனங்கள் என் இருதயத்தில் கிரியை செய்யத்தக்கதாக என்னை மாற்றியருளும். ஆமென்.

நல்ல நிலமா? பண்படாத நிலமா?

> **தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.**

நேற்றைய பகுதியில் பேசிய நிலத்தின் உவமையை இன்னும் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சீஷர்கள் இயேசுவினிடத்தில் விளக்கம் கேட்கிறார்கள். இந்த உவமை போதிக்கிற, பிரசங்கிக்கிற, மற்றவர்களைப் வழி நடத்துகிற ஆவிக்குரிய விசுவாசிகளுக்கு உற்சாகம் கொடுப்பதாய் உள்ளது. விவசாயி நல்ல விதைகளைத்தான் விதைக்கிறான். ஆனால் எல்லா விதைகளும் நல்ல பலனைத் தரவில்லை. சில விதைகள் முளைக்கவில்லை. முளைத்தவைகளும் முதிர்ச்சிப் பெறவில்லை. இது போலத்தான் நமது ஆவிக்குரிய வாழ்க்கையும். தேவன் இருதயம் என்னும் நிலத்தில் நல்ல விதைகளையே தூவுகிறார். ஆனால் சில மனிதர்களால் தேவனுடைய சத்தியத்தை சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை. ஏனென்றால் அவர்கள் அதற்கு ஆயத்தமாக வில்லை.

சத்தியத்தை ஏற்றுக் கொண்டு அதின்படி நடந்து அதைத் தங்கள் வாழ்க்கையில் வெளிப்படுத்துகிறவர்களுக்குத்தான். தேவன் சத்தியத்தை வெளிப்படுத்துவார். நாம் தேவனுடைய வார்த்தையை சொல்லும் போது அநேகர் அதை உணர்ந்துக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் மனதை பரிசுத்தாவியானவர் திறக்க வேண்டுமென்று நாம் ஜெபிக்க வேண்டும். அதின் பலன் தேவன் கையிலிருக்கிறது.

வேத வசனங்களைக் கேட்கிறவர்கள் எந்த வழிகளில் அதை ஏற்றுக் கொள்கிறார்கள் என்பது அந்த சமயத்தில், அந்த மக்கள் கடந்து செல்கிற காலக்கட்டம், அவர்கள் தங்கள் மனதை எவ்வளவு திறந்து கொடுக்கிறார்கள் என்பதைப் பொறுத்தது. உலகக் கவலைகள், செல்வம், தங்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும் என்ற தவறான எண்ணம், பொருளாசை போன்றவைகள் மனதில் வேத வசனங்களை ஏற்றுக் கொள்ள விடுவதில்லை. கடின இருதயத்தில் சாத்தான் விதைளை முளைக்கவிடாதபடி எடுத்துக் கொண்டு போகிறான். இருதயம் என்கிறதான நம்முடைய சிந்தையை மாமிசம் தடுக்கிறது. நெருக்கமான இருதயத்தில் உலகம் அதன் பலனைத் தடுக்கிறது. நம்முடைய சிந்தை எப்படி இருக்கிறது? ஒரு நிமிடம் யோசித்து பார்ப்போம்.

ஆண்டவரே, என் இருதயத்தை பண்படுத்தப்பட்ட நிலமாக மாற்றி உம்முடைய வேத வசனங்களை ஏற்றுக் கொண்டு, அதன்படி வாழ பலன் கொடுக்க கிருபை செய்யும். ஆமென்.

பிரகாசிக்க செய்வேன்

ஆண்டவரே, உம்முடைய ஒளியை எங்களுடைய வாழ்க்கையில் பிரகாசிக்க எங்களுக்கு உதவி செய்யும்.

அநேக கிறிஸ்தவர்கள் மறைக்கப்பட்டவர்களாய் காணப்படுகிறார்கள். தங்களை கிறிஸ்தவர்கள் என்பதைக் காட்டிக் கொள்வதை விரும்புவதில்லை. விளக்கை வாங்கி பெட்டிக்குள் வைத்திருந்தால் பிரயோஜனப்படாது. விளக்கு ஒளியைக் கொடாவிட்டால் அதன் பிரயோஜனம் என்ன? நம் வாழ்க்கை தேவனை பிரதிபலிக்கிறதா? எது உங்களை மறைத்துக் கொண்டு இருக்கிறது? அசட்டை, வெறுப்பு, வெட்கம், இருதய கடினம், கீழ்ப்படியாமை ஆகியவைகள் நீங்கள் பிரகாசிக்கச் செய்யாதபடி தடுக்கும்.

இயேசுவின் சத்தியமாகிய விளக்கு நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவைகள் மறைந்திருக்கவில்லை. அவைகள் எல்லாவற்றையும் நாம் உணர்ந்து கொள்ள முடியாது. அவற்றை நம் வாழ்க்கையில் செயல்படுத்தும் போதுதான் அது நமக்கு நன்றாக விளங்கும்.

வச 25ல் யூதர்களைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கலாம் என்று ஒரு வேத அறிஞர் கருதுகிறார். இயேசுவை யூதர்களால் புரிந்துக் கொள்ள முடிய வில்லை. எனவே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த தேவனுடைய ஜனங்கள் என்ற சிலாக்கியத்தை இழந்து போவார்கள். அது போல ஒருவன் தேவனை ஏற்க மறுக்கும் போது, அவர்கள் மனக்கடினம் அவர்களுக்கிருக்கிற கொஞ்ச அறிவையும் அழித்துப் போடும்.

தேவன் அவரது அறுவடை சிறந்ததாய் இருக்கும் என்கிறார். நமது முயற்சி சிலரைத்தான் தொடுவதாயிருக்கலாம். ஆனால் தேவ வார்த்தை வல்லமை உள்ளது. நமது கண்கள் அறுவடையைத் தான் நோக்க வேண்டும். கெட்ட நிலமோ, களைகளையோ நாம் கண்டு உணர்ச்சியடைய வேண்டாம்.

கடுகு விதை எதைக் காட்டுகிறது. கிறிஸ்தவ ஜீவியம் சிறிய துவக்கமானாலும் அது உலக அளவிலான விசுவாசிகளின் கூட்டமாக பெரிதுமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. நாம் தனித்து நிற்கிறோம் என்று எண்ண வேண்டாம். உலகம் முழுவதிலும் அவரது உண்மையுள்ள சீஷர்கள் இருக்கிறார்கள். உன் வெளிச்சம் உன் வீட்டில், நீ வேலை செய்யும்படிக்கு இடங்களில் பிரகாசிக்கின்றதா?

ஆண்டவரே, என் வாழ்க்கை உம்மை வெளிப்படுத்துகிறதாய் அமைய கிருபை தாரும். ஆமென்.

மாற்கு 4:35–41

போவோம் வாருங்கள்

காகங்களை போஷித்து, காட்டு புஷ்பங்களை உடுத்துவிக்கிற ஆண்டவர் உங்களையும் நடத்த வல்லவராய் இருக்கிறார்.

பிரச்சனைகள் நம் வாழ்க்கையில் எழும்பிக் கொண்டே தான் இருக்கிறது. சீஷர்களுக்கு இளைப்பாறுதல் தேவைப்பட்டது. ஆனால் அவர்கள் பயங்கர புயலைச் சந்தித்தார்கள். கிறிஸ்தவ வாழ்க்கை கொந்தளிக்கிற கடலாய் இருக்கிறது. எனவே ஆண்டவருடைய பிள்ளைகளாகிய நாம் திட்டமாய் வரும் புயலுக்கு ஆயத்தமாயிருக்க வேண்டும். கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தாலும் ஜெபத்தாலும் செல்ல வேண்டும்.

கலிலேயா கடல், கடல் மட்டத்திற்கு 680அடி கீழே உள்ளது. சீஷர்களில் அநேகர் மீன் பிடிக்கும் தொழிலாளர்களாயிருந்தவர்கள். இந்தப் பெரிய ஏரியில் தங்கள் தொழிலை நடத்தியவர்கள். சீஷர்கள் இயேசுவோடு வாழ்ந்து வந்தவர்கள். ஆனால் இயேசுவின் வல்லமையை குறைவாக மதிப்பிட்டுவிட்டனர். இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திரத்திலே எத்தனை அதிசயங்களைக் கண்டார்கள். ஆனால் பிரச்சனைகள் ஏற்பட்டபோது எவ்வளவாய் தேவனை சந்தேகித்து முறுமுறுத்தனர் என்று காண்கிறோம் அல்லவா? சீஷர்கள் இன்னும் தேவனுடைய வல்லமையை முழுவதுமாய் புரிந்துக் கொள்ள வில்லை. நாமும் இந்த நிலையில் தான் இருக்கிறோம். யோபு சொன்னார், அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்று. அத்தி மரம் துளிர்விடாமற் போனாலும், நான் கர்த்ருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் என்று ஆபகூக் சொன்னார்.

நாமும் ஆண்டவர் நமக்கு பல நன்மைகள் செய்திருந்தாலும், நம் வாழ்வில் எழும் புயலுக்கு பயப்படுகிறோம். கிதியோனைப் போல கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன் என்று நாம் பல வேலைகளில் நினைக்கிறோம். நமது எதிர்காலத்தைக் குறித்த சந்தேகத்தையும், பயத்தையும் கொண்டு வருகிறான் சாத்தான். 1கொரி. 2:9 ன்படி தேவன் நமக்கு ஆயத்தம் பண்ணின கண் காணவுமில்லை. காது கேட்கவுமில்லை. எல்லாவற்றையும் தேவன் பார்த்துக் கொள்வார் என்ற விசுவாசத்தோடு ஓட்டத்தைத் தொடருவோம். சர்வ வல்லவரின் துணையோடு அக்கறைக்குப் போவோம். தேவனுடைய வல்லமையை மட்டுப்படுத்தும் நிலை உன்னிடத்தில் காணப்படுகிறதா?

இயேசுவே, சுடுங்காற்று போன்ற பிரச்சனைகளிலும் காற்றையும் கடலையும் அதட்டின தேவன் நம்மோடிருக்கிறார் என்ற நம்பிக்கையோடு வாழ உதவி செய்யும். ஆமென்.

அப்போஸ்தலர்

லூக்கா நற்செய்தி நூலை மருத்துவரான லூக்கா எழுதினார். இவர் யூதரல்லாதவர். அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகம் நற்செய்தி நூல்களையும் நிருபங்களையும் ஒன்றாக இணைக்கின்றது.

லூக்கா பவுலின் நண்பர். எனவே 1-12 அதிகாரங்களின் செய்திகளை பேதுரு, யோவான் போன்ற முக்கிய அப்போஸ்தலர்களிடமிருந்து கேட்டறிந்து எழுதியிருக்கக் கூடும். 13-28 அதிகாரங்களின் செய்திகளை நேரில் கண்டவர்களிடமிருந்து கேட்டு எழுதியிருக்கலாம்.16-28 அதிகாரங்களின் சில பகுதிகளில் "**அவர்கள்**" என்ற சொல்லுக்குப் பதில் "**நாங்கள்**" என்ற சொல் வருவதிலிருந்து அவரும் அந்நிகழ்ச்சியின்போது கூட இருந்தார் என அறிந்து கொள்ளலாம். எருசலேம், செசரியா மற்றும் அந்தியோகியா போன்ற திருச்சபைகளின் குறிப்புகளிலிருந்தும் இவர் நிகழ்ச்சிகளைத் தொகுத்திருக்கலாம்.

இப்புத்தகம் கிறிஸ்தவர்கள் துன்பத்திற்குள்ளான நாட்களில் எழுதப்பட்டது. நீரோ மன்னனின் கொடுமை (கி.பி.64), பவுலின் இறப்பு (கி.பி.58) எருசலேமின் அழிவு (கி.பி.70) ஆகிய செய்திகள் இல்லாததால் இவற்றிற்கு முன் ஏறக்குறைய கி.பி.62ல் எழுதப்பட்டிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

பூமியின் கடைசி பரியந்தம் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் (1:8) என்பது இதன் முக்கிய வசனங்களில் ஒன்று. இந்தக் கட்டளையை ஏற்றுக் கொண்டு உயிர்த்தெழுந்த ஆண்டவரின் செய்தியை பிறருக்கு அறிவிப்பவர்களைப் பற்றி இந்நூலில் எழுதப்பட்டுள்ளது. இதில் 1-12அதிகாரங்கள் பேதுருவின் ஊழியத்தையும், 12-18 அதிகாரங்கள் பவுலின் ஊழியத்தையும் பற்றி விரிவாக பேசுகின்றன. இப்புத்தகத்தை ஆறு பிரிவுகளாகப் பிரித்தால், ஒவ்வொரு பிரிவும் ஒரே விதமாக முடிவடைகின்றன. குறிப்பாக 6:7; 9:31; 12:24; 16:5; 19:20; 28:31 ஆகிய வசனங்களில் பெருக்கம், விருத்தி போன்ற வார்த்தைகளை நாம் காணலாம்.

1. **எருசலேமின் சாட்சிகள்** **1:1 – 8:4**
2. **கிறிஸ்துவுக்குள் திருச்சபையின் வாழ்வு** **8:5 – 12:28**
3. **சமுதாயத்தில் திருச்சபையின் வாழ்வு** **13 – 28**

மகிமையில் விண்ணேகுதல்!

> விண்ணரசே உம் அரசின் பண்புகளை கற்றுக்கொள்ள எங்களுக்குப் போதியும்.

உயிரோடெழுப்பப்பட்டவரும் அவரின் வல்லமையும் [வச.1-5]: முதல் இரு வசனங்களின் முக்கியத்துவம் என்ன? தாம் இம்மண்ணுலகில் ஊனுடலில் இருந்தபொழுது போதித்து பல செயல்களைச் செய்த வண்ணம் இயேசு கிறிஸ்து உயிரோடெழுப்பப்பட்ட பின்னும் தொடர்ந்து போதித்து செயலாற்றுகிறார். இன்று நாம் எவ்வாறு இயேசு கிறிஸ்துவின் போதனையைப் பெற்றுக்கொள்ள இயலும்? சீடரின் நம்பிக்கையை உறுதிப்படுத்தப் பல சாட்சிகள் தேவைப்பட்டன. நமது நம்பிக்கை வாழ்க்கையிலும் நமக்கு உறுதி அளிப்பவை எவை?

காணப்படாது மறைக்கப்படல் [வச.6-9]: இறைவனின் அரசைப் புரிந்துக்கொள்ள சீஷர்களுக்கு இயேசு பொறுமையாகப் போதிக்கிறார். நாமும் எவ்வாறு இயேசு கிறிஸ்துவின் அரசைப் புரிந்துகொள்ள தவறலாம்? தவறாக கற்றுக்கொண்டவற்றில் களைய வேண்டியவை எவை? ஆவியானவரின் வலிமை அனைத்து உலகின் நற்செய்திப்பணிக்கு இன்றியமையாதது. நாம் எவ்வாறு ஆவியானவரின் வலிமையை மட்டுமே முக்கியமாக வேண்டி அவ்வலிமையின் விளைவுகளை சரியான கண்ணோட்டத்தில் காண தவறலாம்?

இவ்வண்ணமே [வச.10,11]: இயேசு கிறிஸ்து தான் ஊனுடலில் இவ்வுலகில் இருந்தபொழுது தம் இரண்டாம் வருகை அனைவரும் காணும் வண்ணம் தவறாகப் புரிந்து கொள்ளதவாறு இருக்கும் என்று கூறியிருக்கிறார். இவ்வெற்றியின் வருகைக்கு நாம் எவ்வாறு ஆயத்தமாக இருக்க வேண்டும்? எவ்வாறு விழிப்போடு இருக்க வேண்டும்? இதற்கேற்ற வண்ணம் பேதுருவின் இரண்டாம் கடிதம் மூன்று பதினான்கில் நம் வாழ்க்கை எவ்வாறு இருக்க வேண்டும்? பாடல் கூறுவதுபோல இராஜா இராஜா சீக்கிரம் வருவார், சந்திக்க ஆயத்தமா? வருவேன் என்றவர் நிச்சயம் வருவார். இந்நம்பிக்கையை நாம் எவ்வாறு கொண்டிருக்கலாம். இதற்கு பிறரை எவ்வாறு வழிநடத்தலாம்? அவர் காட்டிய அன்பு, சமுதாயத்தில் இன்றும் போற்றப்படுகிறது. அப்படிப்பட்ட அன்பு நமக்குள் இருக்கின்தா?

> உயிரோடெழுப்பப்பட்டு, விண்ணுலகேறி மகிமை அடைந்த இயேசு கிறிஸ்துவே உம் வெற்றி வருகைக்கு காத்திருக்கும் எங்கள்மீது உம் கிருபையை அளவில்லாமல் தாரும், ஆமென்.

முன்னோக்கிச் செல்லுதல்!

அண்டசராசரத்தையும் ஆண்டு நடத்தும் இயேசு கிறிஸ்துவே, உம் பணியை உமது வழியில் செய்ய எங்களை வழிநடத்தும்.

ஒருமனப்பட்டு ஜெபத்தில் [வச.12-14]: சீடரின் சூழ்நிலையில் நாம் இருந்திருந்தால் நாம் என்ன செய்திருப்போம்? சீஷர்கள் ஒருமனப்பட்டு வேண்டுதலிலும் விண்ணப்பத்திலும் தரித்திருந்தனர். சீடர் ஒலிவமலையில் ...றியிருக்கவில்லை. காணக்கூடாத இறைவனைத் தேடி அலையவில்லை. இதன் காரணம் என்ன? ஒருக்கால் தங்களுடன் தங்கள் ஆண்டவர் இயேசு ...ந்து இருக்கிறார் என்ற நம்பிக்கை அவர்கள் மனதில் உறுதியாக ஆழப்பதிந்திருக்குமோ? உங்களைத் திக்கற்றோராக விடேன் என்ற வாக்கை உறுதியாக பற்றியிருக்கலாம். மேலும் ஒரு சில மக்கள் மட்டும் தனிப்பட்ட சிறப்புக்குழுவாக பிறரை ஒதுக்கி இருக்கவில்லை. அக்குழுவில் இயேசுவின் தாயும், பிற பெண்களும் இயேசுவின் உடன்பிறந்தோரும் இருந்தனர்.

உயிர்த்தெழுதலின் சாட்சி [வச.15-22]: தொடர்ந்து செய்ய வேண்டியவற்றைக் ...ணிப்பதில் பேதுரு முன்செல்கின்றார். முதலில் செய்ய வேண்டியது பன்னிரண்டு பேரில் ஏற்பட்ட இடைவெளி நிரப்பப்பட வேண்டும். ...எண்ணின் முக்கியத்துவம் என்ன? வேதத்தில் பிற இடங்களில் ...துபோல, இது ஆண்டவர் தெரிந்துகொண்ட இஸ்ரவேல் மக்களின் ...கோத்திரங்களைக் குறிக்கும். புதிய ஏற்பாட்டில் காணப்படும் தேவனின் ...ள புதிய இஸ்ரவேலர். வேதத்தைச் சார்ந்திருப்பதை நாம் கவனிப்பது ...இன்றியமையாமை. தெரிந்துகொள்ளப்பட வேண்டியவரின் தகுதி இயேசு கிறிஸ்து தங்களுடன் வாழ்ந்த காலமெல்லாம் அவர் போதித்த ...வற்றைக் கண்ட அவர்களுடன் இருந்த ஓர் ஆள். இதன் நோக்கம் - இயேசுவின் உயிர்த்தெழுதலின் சாட்சி.

ஆண்டவர் தெரிந்துகொள்ளுதல் [வச.23-26]: சீடர் பின்பற்றிய முறையைக் கவனிக்கவும். அக்கால வழக்கத்திற்கேற்ப சீட்டு போட்டனர் என்றாலும், ... மக்களின் இருதயங்களையும் அறிந்த இறைவனிடம் வேண்டினர். ... இறைவனின் பணிக்கும் பிற பொறுப்புகளுக்கும் தலைவர்களையும் ...பணியாளர்களையும் எவ்வாறு தெரிந்தெடுக்கின்றோம்? எத்தகைய ...தகுதிகளை நோக்குகிறோம்? இறைவனோடு இணைந்து செயல்படுகிறோமா?

ஆண்டவரே, உம் சத்திய ஆவியானவரால் எங்களை வழிநடத்தி, உம் திருவுளத் திட்டம் அனைத்திலும் நிறைவேற எங்களுக்கு உதவிபுரியும். ஆமென்.

புதிய படைப்பு!

படைப்பின் ஆண்டவரே உம் செயல்களைக் காணும்பொழுது அவற்றைப் புரிந்துகொள்ளும் அறிவை எங்களுக்கு தந்தருளும்.

வியக்கத்தகு விந்தை [வச.1-4]: பெந்தெகோஸ்து நாள் என்பது யூதரின் மூன்று முக்கியப் பண்டிகைகளில் பஸ்கா பண்டிகைக்குப் பின் ஐம்பதாவது நாள். ஏழு வாரங்களின் அறுப்பின் முதல் கனிகளை ஆண்டவருக்கு படைக்கும் பண்டிகை. இறைவன் இந்நாளைத் தம் புதிய படைப்பின் முதல் அறுப்பிற்குத் தெரிந்தெடுத்திருக்கிறார். காற்று, முழக்கம், அக்கினி இறைவனின் பிரசன்னத்திற்கும் செயலாற்றலுக்கும் அச்சடையாளமாக அங்கே காணப்படுகிறது. "ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே" என்பதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளுவது என்ன?

இறைவனின் விந்தை நம் மொழியில் [வச.5-13]: அக்கினிமயமான நாவுகள் குறிப்பன இக்கலிலேய மனிதர் உலகின் பல பாகங்களிலிருந்து அங்கு கூடிய மக்களின் மொழிகளில் பேசும் விந்தை. பேசப்பட்டவை யாவை? இது மிக முக்கியம். ஆவியானவரின் உந்துதலால் நாம் பேசுவன எவ்வாறு இருக்கின்றன? அவை தேவனின் மகத்துவங்களாக இருப்பதற்கு நாம் எவ்வாறு இணங்கி தேவனோடு ஒத்துழைக்க இயலும்? ஆதியாகமம் பதினொன்றாம் அதிகாரத்தில் பாபேலில் காணப்பட்ட மொழிக்குழப்பம் இறைவனின் புதிய படைப்பில் மாற்றி அமைக்கப்படுகிறது.

இதன் விளக்கம் [வச.14-21]: கேட்போரின் ஐயத்தை பேதுரு போக்குகிறார். யூதரின் நாளில் பகல் மூன்றாம் மணி என்பது காலை ஒன்பது மணி. மேலும் பேதுரு இவ்வாய்ப்பைப் பற்றிக்கொள்ளுகிறார். யோவேல் தீர்க்கர் கூறியது போல இறைவனின் ஆவியானவர் அனைவருக்கும் கொடுக்கப்படுகிறார் - ஆண்கள், பெண்கள், இளைஞர், முதியோர். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆவியானவர் ஒரு சிலருக்கு, ஒரு குறிப்பிட்ட பணிக்கு, ஒரு குறிப்பிட்ட கால அளவு கொடுக்கப்பட்டார். இருப்பினும் இயேசு கிறிஸ்து கூறியதுபோல ஆவியானவர் நம்பிக்கையுடையோர் அனைவர்மீதும் வந்து தங்கி இருக்கவும் அவர்களை ஆண்டவரின் பணியில் இயக்க ஏவி உந்துகிறார். ஆண்டவரின் நாள் என்பது தீர்க்கரால் உரைக்கப்பட்ட நியாயத்தீர்ப்பு நாள். அதில் ஆண்டவரின் விந்தைச் செயல்கள் நிகழ்வன.

ஆண்டவரே, உம்முடன் இணைந்து செயல்பட எங்களுக்கு உம் ஆவியானவரின் வல்லமையைக் கொடுக்க வேண்டுகிறோம். ஆமென்.

பரிசுத்தர்!

ஆண்டவரே உம்முடைய இரட்சிப்பின் திட்டத்தையும் இரட்சகரையும் நாங்கள் கண்டுகொள்ள எங்களுக்கு அருள் செய்யும்.

ஆனால் இறைவன் [வச.22-24]: கர்த்தரைத் தொழுது ...றிறவன் இரட்சிக்கப்படுவான் என்று கூறிய பேதுரு நசரேயனாகிய ...வின் வரலாற்றை வர்ணிக்கிறார். தேவன் அவர் மூலம் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்து அவரை ...படுத்தினார். நாம் இயேசு கிறிஸ்துவின் வரலாற்றைக் குறிப்பிட முயற்சி ...வோமாக. அதன் முக்கிய குறிப்பு என்னவாக இருக்கும்? எவ்வாறு நாம் ...வரின் செயல்பாட்டை மையமாக்கலாம்? பேதுரு ஆண்டவரின் ...னை மற்றும் முன்னறிவிப்பை முதன்மையாக்குகிறார். மனிதர் ... செய்யினும் நம் வாழ்விலும் முதன்மையாக்கப்பட வேண்டியது ...? நீங்கள் கொலை செய்தீர்கள் என்று இஸ்ரவேலரை நேரடியாகக் ... பேதுரு அஞ்சவில்லை. ஆனால் மீண்டும் பேதுருவின் கண்ணோட்டம் ...வனின்பால் திரும்புகிறது. தேவன் அவரை மரித்தோரிலிருந்து ...பினார். ஏன்? மரணம் இயேசுவைக் விழுங்க இயலவில்லை ஏன்?

...ன் **முன்னறிவிப்பு [வச.25-28]:** இஸ்ரவேலருக்குப் பேசும் பேதுரு ...களின் வேதமாகிய பழைய ஏற்பாட்டில் இருந்து அவர்களின் புகழ் பெற்ற ... தாவீதின் கூற்றிலிருந்தும் மேற்கோள் எடுத்து சாட்சியம் காட்டுகிறார். ... நற்செய்தி கூறும் பணியில் நாம் எவ்வாறு செய்கிறோம்? தாவீதின் ...யின் காரணம் என்ன? தாவீது தான் அசைக்கப்படுவதில்லை என்றும் ... மாம்சம் நம்பிக்கையோடு தங்கியிருக்கும் என்றும் ஏன் கூறுகிறார்? ... சிந்திப்போம். நம் களிப்பின் காரணம் என்ன? நாம் எதினால் ...அசைக்கப்படுவதில்லை என்று கூறலாம்? நாம் எவ்வாறு நம்பிக்கையோடு ...க்கலாம்? தாவீதின் நம்பிக்கை தன் ஆத்துமாவைக் ஆண்டவர் ...த்தில் விடார் என்பது எதிலிருந்து பிறக்கிறது? இயேசு கிறிஸ்துவாகிய ... பரிசுத்தரை அழிவைக் காணவொட்டாத ஆண்டவர் நம்மையும் ...த்தில் விடார் என்ற நம்பிக்கை எவ்வாறு கிட்டும்? இந்நம்பிக்கை ...கு உண்டா? என்று சிந்திப்போம். இதைப் பெற்றுக்கொள்ள சற்றே ...து முயற்சி செய்வோம். எல்லாம் வல்ல பரிசுத்த ஆவியானவர் தாமே ...கு உதவிசெய்வாராக.

ஆண்டவரே, நீர் ஒருவரே இரட்சகர் என்பதை உணர்ந்து அந்த இரட்சிப்பை அடைய எங்களுக்கு உதவும். ஆமென்.

உயர்த்தப்பட்டவர்

ஆண்டவரே உம் இரட்சிப்பின் திட்டத்தை நாங்கள் கண்டுணர்ந்து அதை எமக்கு உரித்தாக்கி வாழ எங்களுக்கு உதவும்.

தாவீதின் தீர்க்கதரிசனம் [வச.29-31]: அனைத்து யூதரும் தீர்க்க அனைவரும் கடவுளின் மேசியா, கிறிஸ்து தெரிந்தெடுக்கப்பட்டவர் வருவார், வந்து கடவுளின் இறையரசை நிலைநாட்டுவார் என்று முன்னுரைத்தனர் என்பதை யூதர்கள் அறிந்திருந்தனர். தாவீது இவ்வண்ணம் வரும் அரசருக்கு எதிர்நோக்கியிருந்தார். அவரின் நம்பிக்கை மேலும் ஒரு வாக்கினால் உறுதிப்படுத்தப்பட்டது - தாவீதின் அரியணை மீது இவ்வரசர் தாவீதின் வழித்தோன்றலாக இருப்பார். தாவீதின் இம்முன்னுரையின்படி இவ்வாறு இறப்பின் அழிவைக் காணாதவர் இயேசுவே என்ற முடிவை பேதுரு எடுத்துக்கூறுகிறார். நமது செய்தி எவ்வாறு இவ்வித உறுதியோடு வேதத்தில் இருக்க கேட்போருக்கு பாலம் இணைத்துப் பயனளிக்க இயலும்? கேட்போர் அறிந்திருப்பதில் இருந்து அவர்கள் அறியாதவற்றிற்கும் அவர்கள் அறியவேண்டியவற்றிற்கும் மென்மையாக புத்திக்கூர்மையுடன் அவர்களை வழிநடத்தி இறுதியில் பயனளிக்கும் முடிவிற்கு கொண்டுவர கடவுள்தாமே நமக்கு உதவிசெய்வாராக. நாம் என்ன கூற வேண்டும் என்று கடவுள் விரும்புகிறாரோ அதை எப்பொழுது எவ்வாறு கூற வேண்டும் என்பதற்கும் கடவுளின் அருள் தேவை.

இரட்சிப்பின் செயல்களின் விளக்கம் [வச.32-36]: இயேசுதான் மேசியா என்பதற்கு நாங்கள் சாட்சிகள் என்று பேதுரு மேலும் அச்சாரத்தைக் கொடுக்கிறார். இந்த இயேசு கிறிஸ்து உயிரோடெழுப்பப்பட்டு, விண்ணுலகிற்கு உயர்த்தப்பட்டுதாம் வாக்குகொடுத்த வண்ணம் தாம் பெற்ற ஆவியானவரைத் தம்மை நம்புவோருக்கு ஈந்தளிக்கின்றார். தாவீது விண்ணுலகிற்கு உயர்த்தப்பட்ட ஒருவரைத் தன் ஆண்டவர் என்று கூறுகிறார். ஆனால் தாவீது உயிரோடெழுப்பப்படவுமில்லை, விண்ணுலகிற்கு உயர்த்தப்படவுமில்லை. எனவே தாவீது முன்னுரைத்த வண்ணம் இந்த இயேசுவே அவ்வாறு உயிரோடெழுப்பப்பட்டு விண்ணுலகிற்கு ஏகியவர். அவரே ஆண்டவரும் இரட்சகரும். அவர்தான் அன்று அந்த மக்கள் காணும் நிகழ்ச்சியாகிய ஆவியானவரின் வெளிப்படையான வருகைக்குக் காரணர். இதை அறிவது இஸ்ரவேலர் அனைவரின் கடமை.

தேவனே, இயேசு கிறிஸ்துவை எங்கள் ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்ள எங்களுக்கு அருள்செய்யும். ஆமென்.

அப்போஸ்தலர் 2:37–47

தூய ஆவியானவர் வருகையின் விளைவு!

ஆண்டவரே நீர் செயலாற்றும்பொழுது கீழ்ப்படிந்து ஏற்ற விளைவைக் கொடுக்க எங்களுக்கு அருள்புரியும்.

திருச்சபை வளருகிறது (வச.37-42): தூய ஆவியானவரின் வருகை அவர் மக்களைப் பாவ உணர்வுக்குக் கொண்டுவருவதில் விளைகிறது. மனதில் குத்தப்பட்ட மக்கள் தக்க செயலைச் செய்ய ஆவலுடன் முயற்சி செய்து ஏற்ற காரியத்தைச் செய்வதில் ஈடுபடுகின்றனர். தூய ஆவியானவர் செயல்படும் இடத்தில் இதுவும் நாம் இன்று வாசிப்பதில் காண்பவையும் ஓயாது தொடர்கின்றன. பேதுருவிடம் மாறுத்தரத்தில் காணப்படும் ஐந்து காரியங்களைக் கவனிப்போம் - மனந்திரும்புதல், இயேசு கிறிஸ்துவின் பெயரில் பாவமன்னிப்புக்கென்று திருமுழுக்கு பெறுதல், தூய ஆவியானவரின் வரத்தைப் பெற்றுக்கொள்ளுதல், அனைவருக்கும் வாக்கு, நம்முடைய தேவனாகிய கர்த்தர் அழைக்கும் யாவருக்கும். நமது நற்செய்தியில் இவற்றை நாம் எவ்வாறு மையப்படுத்த இயலும்? சாட்சியில் இன்னும் அநேக வார்த்தைகள் உறுதிப்படுத்திப் பயன்படுத்தப்படலாம். சந்தோஷமாக ஏற்றுக்கொண்டவர்கள் திருமுழுக்கு பெற்றனர் என்பதைக் கவனிப்போம். எப்பொழுது எவருக்கு திருமுழுக்கு கொடுக்கலாம் என்பதை அறிய நாம் எவ்வாறு தூய ஆவியானவரின் செயல்பாட்டிற்கு உணர்வுள்ளவர்களாகவும் கீழ்ப்படிகிறவர்களாகவும் இருக்க இயலும்? வச.42ல் காணப்படும் நான்கு செயல்களை நாம் ஆழமாக சிந்திப்போம்.

அற்புதம் (வச.43-47): வச.43-ல் காணப்படும் இரண்டு காரியங்கள் நமது நற்செய்திப்பணியிலும் திருச்சபை நிலைநாட்டுதலிலும் எவ்வாறு காணக்கூடும்? வச.44-45ல் கூறப்படும் பகிர்ந்துகொள்ளும் மாதிரியைக் குறித்து பலமுறை பேசுகிறோம். அதை நாம் நடைமுறையில் கடைபிடிக்கிறோமா? 'ஒருமித்திருந்து', 'தேவையானதற்குத்தக்கதாக' என்பவை மிக முக்கியம். நமது விசுவாசக் கூட்டமைப்புகளில் எவ்வித பகிர்ந்துகொள்ளும் மாதிரிகளை நாம் செயல்படுத்த கடவுள் விரும்புகிறார்? திருச்சபையின் வாழ்க்கையில் 'ஒருமித்திருந்து' (வச.44), 'ஒருமனப்பட்டவர்களாக' (வசனம் 46) என்பவை மிக மிக இன்றியமையாமை. வச.46-47ல் காணப்படும் ஐந்து காரியங்களை ஆழமாக சிந்திப்போம். இவை இருக்கும்பொழுது தயவும் சபை வளர்ச்சியும் தொடர்வன. ஆண்டவர்தான் சபையில் சேர்க்கிறார்.

ஆண்டவரே உம்முடைய வசனத்தில் இருந்து எங்கள் விசுவாசக் கூட்டமைப்பிற்கு ஏற்ற மாதிரிகளை நாங்கள் கற்று செயல்பட எங்களுக்கு உதவும். ஆமென்.

தேவனைத் துதித்துக்கொண்டு!

ஆண்டவரே உம்முடைய வல்லச் செயல்களைக் கண்டு உம்மைத் துதிக்க எங்களுக்கு உதவும்.

அனைத்தும் ஆயத்தமாயிருக்கின்றன (வச.1-5): பெந்தெகோஸ்து அனுபவத்திற்குப் பின் இயேசு கிறிஸ்துவின் சீடர் எருசலேமில் இருந்து அனுதினமும் தேவாலயத்தில் தரித்திருந்தனர் (2:46). கடவுள் தெரிந்து கொள்ளும் இடத்தில் கடவுளை வணங்குவது நமக்கு எவ்வளவு முக்கியம்? வச.1-3ல் ஜெப வேளையாகிய ஒன்பதாம் மணி வேளையில் பேதுருவும் யோவானும் தேவாலயத்திற்குச் செல்லுதல், தன் தாயின் வயிற்றில் இருந்து சப்பாணியாகப் பிறந்த ஒருவன் அலங்கார வாசல் என்ற தேவாலய வாசலண்டை பிச்சை கேட்கும்படி சுமந்துகொண்டு வரப்படுதல். அவனுடைய வழக்கத்தின்படி பேதுரு, யோவானிடம் பிச்சை கேட்கிறான். வச.4ல் சம்பவத்தில் திருப்பம் ஏற்படுகிறது. "எங்களை நோக்கிப்பார்" என்று பேதுருவும் யோவானும் கூறியபொழுது வச.5ல் காண்பதுபோல் அவர்களிடம் ஏதாவது கிடைக்கும் என்று அவன் எண்ணியது இயற்கையே. ஆனால் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்று நிகழப்போகிறது.

ஆச்சரியமும் பிரமிப்பும் (வச.6-10): ஆங்கில வேதத்தில் வசனம் 6ல் 'ஆனால்' என்ற சொல்லுடன் தொடங்குகிறது. இச்சொல் மிக வலிமையானது, முக்கியமானது. இது ஒரு திருப்புமுனையைக் குறிக்கிறது. 'பொன் வெள்ளியும் இல்லை. உள்ளதை தருகிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எழுந்து நட. அவன் குதித்து ஓடி துதித்துச் சென்றான். இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே எழுந்து உடனே நட. பேதுரு செய்வதைக் கவனிப்போம். தேவையுள்ளோனை உற்று நோக்கினார். தேவையுள்ளோனைத் தங்களை நோக்கிப்பார்க்கக் கூறுகிறார். தேவையான நற்செய்தியைக் கூறுகிறார். தேவையுள்ளவனுடன் தொடர்பு கொண்டு, அவன் தேவைக்கேற்ப செயல்படுகிறார். 'உடனே' என்ற சொல்லைக் கவனிப்போமாக. நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நாம் எவ்வாறு தேவையுள்ளோருக்கு உதவ இயலும்? தேவையுள்ளோர் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில் நன்மையைப் பெறும்பொழுது அதற்கேற்ற மாறுத்தரம் என்ன? அதன் விளைவு என்னவாக இருக்க வேண்டும்? நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில் நாம் செய்யும் செயல்கள், அதைக் காணும் மக்கள் எல்லாரையும் எவ்வாறு பாதிக்கிறது?

ஆண்டவரே உம் செயல்களைக் கண்டு ஆச்சரியமும் பிரமிப்பும் அடையும்படி நாங்கள் முக்கியமானவற்றை மையப்படுத்த அருள்புரியும். ஆமென்.

நற்செய்தியினால் எதிர்கொள்ளப்படுதல்!

ஆண்டவரே எப்பொழுது எப்படி உம் நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என்று அறிந்துகொள்ள எங்களுக்கு உதவி செய்யும்.

பேதுரு வாய்ப்பைப் பற்றிக்கொள்ளுகிறார் (வச.11-16): பேதுரு யூத மக்களின் நம்பிக்கை, சமூக, கலாச்சார வரலாற்றின் தொடக்கத்தின் ஆணிவேரைக் குறிப்பிட்டு அதை இயேசு கிறிஸ்துவுடன் எவ்வாறு பிணைக்கின்றார் என்பதைக் கவனிப்போம். இரண்டு குறிப்புகள் முக்கியம்: இயேசு கிறிஸ்து கடவுளின் பிள்ளை, கடவுள் அவரை உயிரோடு எழுப்பியிருக்கிறார். யூதர்கள் ஜீவாதிபதியைக் கொலை செய்தார்கள் என்பதைக் கூறப் பேதுரு தயங்கவில்லை. கடவுளின் நற்செய்தியை நாம் கூறுவதில் முக்கிய குறிப்புகள் யாவை? எவ்வாறு நாம் நமது செய்தியைக் கேட்போரின் சூழ்நிலையுடன் அதை இணைத்து அவர்களைத் தீர்மானத்திற்கு நெருக்கி ஏவ இயலும்? பேதுரு வெறும் கட்டுக்கதைகளைக் கூறவில்லை. 'நாங்களே அதற்கு சாட்சிகள்' என்பது மிக முக்கியம். நாமும் எவ்வாறு நமது செய்திக்கு சாட்சிகளாக இருக்க இயலும்? இயேசு கிறிஸ்துவின் பெயரும் அப்பெயரின்மீது உள்ள நம்பிக்கையுமே சப்பாணிக்கு முழு நலனைக் கொடுத்திருக்கின்றன.

எனவே மனந்திரும்பவும் (வச.17-26): தங்கள் மேசியாவை யூதர்கள் அறியாமையினால் ஒப்புக்கொடுத்து கொலை செய்தார்கள் என்று தன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி கூறுகிறார் (லூக்.23:34). கடவுள் தம் தீர்க்கரின் மூலம் முன்னுரைத்தவற்றை நிறைவேற்றுவதையும் பேதுரு சுட்டிக்காட்டுகிறார். பேசுகின்ற, செயல்படுகின்ற தம் வாக்கை நிறைவேற்றுகின்ற கடவுளின்மீது நம் நம்பிக்கையை நாம் எவ்வாறு வைக்கலாம்? மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசன உரைகளைப் பேதுரு பட்டியலாக சுட்டிக்காட்டுகின்றார். மீண்டும் யூதரின் கோத்திரத் தலைவனாகிய ஆபிரகாமைக் குறித்தும் அவருக்கு கடவுள் அளித்த வாக்கையும் சுட்டிக்காட்டுகிறார். கேட்போரின் சமூக, கலாச்சார, நம்பிக்கை வரலாற்றில் இருந்து நாம் எவ்வாறு குறிப்புகளைக் கூறி அவர்கள் கடவுளின் நற்செய்திக்கு ஏற்ற மாறுத்தரத்தைக் கொடுக்க அவர்களை ஏவ இயலும்? பேதுரு யூதர் தங்கள் மேசியாவைக் கொன்றார்கள் என்று குற்றஞ்சாட்ட முயற்சி செய்யவில்லை; அவர்களுக்குக் கடவுளின் ஆசீர்வாதம் கிடைக்கும்படி கடவுள் இயேசு கிறிஸ்துவை அனுப்பினார் என்றும் கூறுகிறார்.

ஜீவாதிபதியே, உமக்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கவும், அதனால் பிறர் ஆசீர்வதிக்கப்படவும் எங்களுக்கு அருள்செய்யும். ஆமென்.

வேறொரு நாமம் இல்லை!

ஆண்டவரே இந்த நாளின் வேதப் பகுதியிலிருந்த நீர் கற்றுத் தரும் காரியங்களை என் வாழ்வில் கடைப்பிடிக்க உதவிடும்.

இயேசுவின் மீது கொண்ட நம்பிக்கைக்கு என்று சிறைப்பட்டோர் [வச.1-4]: ஆசாரியர், தேவாலய சேனைத்தலைவன் மற்றும் சதுசேயர் என்ற மதத்தலைவர் ஏன் பேதுருவையும் யோவானையும் சிறைப்பிடித்தனர்? சதுசேயர், பரிசேயரைப் போன்று அன்றி உயிர்த்தெழுதல் இல்லை என்று போதித்தனர். ஆகையால் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கூறி அறிவிக்கும் சீடர்மீது சதுசேயர் சினம்கொண்டனர். யூத மதத்தில் தேவாலயத்திற்கென சேனை இருந்தது. வசனம் 3-ற்கும் வசனம் 4-ற்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் கவனிப்போம். இரண்டு அப்போஸ்தலரும் சிறையிலடைக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் போதனையைக் கேட்ட பலர் இயேசு கிறிஸ்துவின்மீது நம்பிக்கை கொண்டனர். நமது அனுபவம் இதற்கு எவ்வாறு ஒத்திருக்கக்கூடும்? நமது நம்பிக்கையின் காரணமாக எதிர்ப்பும் துன்பமும் உச்சக்கட்டத்தில் இருப்பதுபோல தோன்றும்பொழுது, ஆண்டவரின் செயல்பாடும் உச்சக்கட்டத்தில் இருக்கும் காலங்களைக் குறித்து சிந்திப்போம்.

நம்பிக்கையின் விளக்கம் [வச.5-12]: மதத்தலைவர்கள் முன் பேதுரு தம் நம்பிக்கையை விளக்குகிறார். இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது தம்மைப் பின்பற்றியோருக்கு அவர்கள் அதிகாரிகள் முன் எடுத்துச் செல்லப்படும் பொழுது ஆவியானவரே அவர்கள் பேச வேண்டுவதைப் போதிப்பார் என்று உறுதிகொடுத்தார். இங்கு பேதுரு ஆவியானவரால் நிறைந்து தன் நம்பிக்கைக்கு விளக்கம் அளிக்கிறார். அது மூன்று பகுதிகளாகக் காணப் படுகிறது. பேதுரு மக்களிடம் பேசியபொழுது கூறியதுபோல யூதரால் கொலை செய்யப்பட்டு, ஆனால் கடவுளால் உயிரோடு எழுப்பப்பட்ட இயேசுவையே சுட்டிக்காட்டுகிறார். அதற்கு அவர் அஞ்சவில்லை. பிறவி சப்பாணி நலம் பெற்ற அற்புத செயல் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே யூத மதத் தலைவர்களால் தள்ளப்பட்ட மூலைக்கல் இயேசு கிறிஸ்துவே தலைக் கல்லாக கடவுளால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் நாமமே இரட்சிப்புக்கு என்று ஏற்படுத்தப்பட்டது. மனுக்குலத்தின் இரட்சிப்புக்கு வேறொரு நாமம் இல்லை. இது பெருமை பாராட்டுவதோ, அகந்தை கொள்ளுவதோ அல்ல, கடவுளின் நியமத்தை ஏற்றுக்கொள்ளுதல்.

ஆண்டவரே, இரட்சிக்கப்படும்படி இயேசு கிறிஸ்துவின் நாமமே அல்லாமல் வேறொரு நாமம் இல்லை என்று அனைவருக்கும் அஞ்சாது கூற எங்களுக்கு உதவும். ஆமென்.

தாவீதின் பாடல்

நம் காலை தள்ளாடவொட்டாமல் நம்மை பாதுகாக்கும் தேவன் நமக்குண்டு.

தாவீது சத்துருக்களை கர்த்தர் அழித்த பின்பு மீண்டும் அவன் இஸ்ரவேலின் அரசனாக அரியணையேற்றான். அப்போது அவன் பாடிய பாடலாக இச்சங்கீதம் கருதப்படுகிறது. வெற்றி பெற்ற பின் துதிபாடல் பாடுவது எளிது. ஆனால் தாவீது துன்பத்தின் மத்தியில் இருக்கும் போது பாடியதை நாம் அறிவோம். அவன் தன் பாடலில் எவற்றை நினைவு கூறுகிறான்?

கர்த்தர் இரட்சிக்கிறார் : தனக்கு வந்த ஆபத்துக்கள் கஷ்டங்கள் ஆகியவற்றின் போதும் வெள்ளம் வருவது போன்று பகைவர்கள் திரண்டு வந்து தன்னை வேட்டையாடிய போதும் மரணம் தனக்கு சமீபித்து வந்த போதும் காட்டிக் கொடுக்கப்படுதல் போன்ற துரோகச் செயல்கள் மத்தியிலும் தேவன் தன்னை இரட்சித்தார் என்பதை நினைவு கூருகிறான். மேலும் தன் நெருக்கத்தில் அவரை நோக்கிக் கூப்பிட்டபோது கர்த்தர் கேட்டார் என்பதையும் நினைத்து அவரில் அன்புக்கூறுவேன் என்கிறான்.

கர்த்தர் பயன்படுத்துகிறார் : தம்மை நோக்கிக் கூப்பிடும் தாவீதை விடுவிக்க கர்த்தர் பயன்படுத்திய சாதனங்களைப் பற்றி இங்கு காண்கிறோம். பூமியதிர்ச்சி, கல்மழை, மின்னல், வெள்ளம் ஆகியவைகளின் மூலம் தமது கோபத்தை வெளிப்படுத்தி, தாவீது அவன் சத்துருக்களிடமிருந்து காத்தார். இன்று இடுக்கண்களிலிருந்தும், ஆபத்துகளிலிருந்தும் நம்மை விடுவிக்க கர்த்தர் எவைகளைப் பயன்படுத்துகிறார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

கர்த்தர் பதிலளித்தார் : தாவீதின் மன்றாட்டுக்கு கர்த்தர் செவிகொடுத்து பதிலளித்ததின் காரணத்தை இவ்வசனங்களில் காண்கிறோம். 1. தன்னைப் பரிசுத்தமாய் காத்துக் கொண்டான் 2. கர்த்தருடைய கற்பனைகளின்படி நடந்தான். கர்த்தர் தாவீதோடிருந்து பதிலளித்து, அவனை ஒரு சிறந்த போர் வீரனாக மாற்றுகிறார். நாம் நம்பும் தேவன் மௌனமாயிருப்பவரல்ல. நம்முடைய நீதிக்கு ஏற்றவாறு பதிலளிக்கிறார். நம் துன்பங்களின் போது கர்த்தரை எப்படிப்பட்டவர் என்று அறிந்திருக்கிறோம்?

கர்த்தாவே அனுதினமும் உம்மை நான் நன்கு அறிந்து கொள்ள கிருபை தாரும். ஆமென்.

பகிரங்கமான அற்புதம்!

ஆண்டவரே உம்முடைய வேதவசனங்களைக் கொண்டு என்னை சுத்தப்படுத்தும்.

மனிதர் நமக்கு என்ன செய்ய இயலும்? (வச.13-17): கடவுளை எதிர்ப்போருக்கு, கடவுள்தான் அற்புதங்களைச் செய்கிறவர், மனிதரல்ல என்று கடவுள் காட்ட இங்கு வாய்ப்பு இருக்கிறது. நாம் இயேசுவுடன் இருந்தவர்கள் அல்லது இருப்பவர்கள் என்று பிறர் காணும்வண்ணம் நாம் எவ்வாறு வாழ இயலும்? வச.14லிருந்து நாம் கற்றுக்கொள்ளுவது என்ன? கடவுளை எதிர்ப்போர் நம்மிலும் நம்மைச் சுற்றியும் காணப்படும் கடவுளின் செயல்களை மறுக்க இயலாதவண்ணம் நமது சாட்சி எவ்வாறு இருக்க முடியும்? கடவுளை எதிர்ப்போர் புதிய அணுகுமுறைகளையும் திட்டங்களையும் தீட்ட வேண்டியது உள்ளது. வச.16ல் 'அதை நாம் இல்லையென்று சொல்லக்கூடாது' என்பதைக் கவனிப்போம். கடவுளின் மறுக்க இயலா முத்திரையையும் அத்தாட்சியையும் நமது வாழ்க்கையிலும் சாட்சியிலும் கடவுள் மட்டுமே வைத்து எதிர்ப்போரும் கூட அதை இல்லை என்று கூற இயலாத வண்ணம் கடவுள் உறுதிப்படுத்தக்கூடும். கடவுளின் நற்செய்தியை எதிர்ப்போர் எவ்வகையில் கடவுளின் நற்செய்தியை அடக்காத வண்ணம் செய்ய முயற்சி செய்யக்கூடும்?

மனிதர் தண்டிக்க வகையொன்றும் காணாதபொழுது (வச.18-22): வச.18ல் நிகழ்வது புதியது அல்ல. ஆனால் பேதுரு, யோவான் இருவரின் மறு உத்தரவைக் கவனிப்போம். அவர்கள் தங்களை எதிர்ப்போரையே மறு உத்தரவு கொடுக்க நெருக்குகின்றனர். வச.20 எவ்வாறு நமது அனுபவமாயிருக்கக் கூடும்? வச.21ஐக் கவனிப்போம். யூத மத ஆலோசனைச் சங்கம் அவர்களை தண்டிக்க வகை ஒன்றும் காணவில்லை. ஏன்? இரண்டு அடையாளம் கண்டுகொள்ள தவறக்கூடாத, மறுக்க இயலாத சாட்சிகளைக் கவனிப்போம் - எல்லாரும் தேவனை மகிமைப்படுத்தியது. நலம்பெற்ற மனிதன் நாற்பது வயதுக்கு மேற்பட்டவனாக, அவ்வளவு ஆண்டுகளுக்குப்பின் நலம்பெற்று அங்கு காணும்படி இருந்தது. நமது வாழ்க்கையும் பணியும் எவ்வாறு கடவுளுக்கு மகிமையைக் கொண்டுவர இயலும்? எதிர்ப்பு இருக்கும்பொழுதும் எல்லாரும் உமது அற்புத செயல்களைக் கண்டு உம்மைத் துதிக்கிறவர்களாய் இருக்கிறார்களா?

ஆண்டவரே, நாங்கள் சரியான வாழ்க்கை வாழ எங்களுக்கு உதவிசெய்யும். ஆமென்.

கரத்தை நீட்டி!

> உம்முடைய சீடரின் வாழ்விலிருந்து நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டியவற்றை எங்களுக்கு கற்றுத் தாரும்.

சிறைப்பட்ட சீடர் விடுதலையானபின் நிகழ்ந்து என்ன (வச.23-31): விடுதலையாக்கப்பட்ட பின் சீடர் தாங்களைச் சேர்ந்தவர்களிடம் வந்து நடந்தவற்றைக் கூறினர். அவர்கள் பயத்தினால் கூனிக்குறுகிப் போகவும் இல்லை. அச்சமுடன் ஒளிந்துகொள்ளவுமில்லை. அச்சுறுத்தும் ஓர் எதிர்ப்பிற்குப்பின் நாம் என்ன செய்கிறோம்? நாம் செய்திகளைப் பகிர்ந்துகொள்ளவும் ஜெபத்தினால் தாங்கப்படவும் எவ்வாறு நாம் நம்முடன் ஒன்றுபட்டு அக்கறையுடன் செயல்படும் ஒரு குழுவை அமைக்க இயலும்? சீடர் நிகழ்ந்தவற்றைக் கூறியபின் அவர்கள் அனைவரும் ஒருமனப்பட்டு தேவனை நோக்கி ஜெபம் பண்ணினார்கள். நாம் ஜெபம் என்னும் ஆயுதத்தை எவ்வாறு பயன்படுத்துகிறோம்?

அவர்கள் வேண்டுதலின் குறிப்புகளும் அவற்றின் மையக்கருத்தையும் நாம் கவனிப்போம். அவர்கள் தாங்கள் சிறைப்பட்டதைக் குறித்து புலம்பவில்லை. அவர்கள் கடவுள்மீதும் கிறிஸ்துவின்மீதும் மையப்படுத்துகிறார்கள். வச.24ல் அவர்கள் கடவுளை குறித்துக் கூறுவதிலிருந்து நாம் என்ன கற்றுக் கொள்ள இயலும்? அனைத்தையும் ஆண்டு நடத்தும் சர்வ வல்லவர் என்று நாம் கூறுகிறோம்; ஆனால் அதை எவ்வளவு நம் அன்றாட வாழ்க்கையில் நடைமுறையில் செயலில் காட்டுகிறோம்?

அனைத்தையும் படைத்து ஆண்டு நடத்தும் ஆண்டவர்தான் தம் அடியான் தாவீதின் மூலம் திருவுளம் பற்றியிருக்கிறார். கடவுளின் பண்புகள் அவரின் செயல்கள் இவற்றின் அனைத்து பகுதிகளையும் ஒருங்கிணைத்து நமது நம்பிக்கையை நாம் எவ்வாறு உறுதிப்படுத்த இயலும்? 28-வது வசனத்தில் கடவுளின் கரமும் ஆலோசனையும் முன்குறித்தபடி என்று மீண்டும் கடவுளின் திட்டத்தை உறுதிப்படுத்துகிறார்கள். நம்மை எதிர்ப்போர் நமக்கு விரோதமாக பொங்கி எழும்பொழுது இதை நாம் எவ்வாறு கடைப் பிடிக்க இயலும்? கடவுளுடைய பணியாளருக்கு தைரியத்திற்காகவும் இயேசு கிறிஸ்துவின் பெயரில் அடையாளங்கள், அற்புதங்கள், பிணியுற்றோர் நலம் பெறுதல் இவற்றின் மூலம் உறுதிப்படுத்துதற்காகவும் கேட்கின்றனர்.

அனைத்தையும் ஆண்டு நடத்தும் சர்வ வல்ல கடவுளே, உம்முடைய வார்த்தையைக் கூறி அறிவிக்க எங்களுக்கு அறிவையும் தைரியத்தையும் கொடுத்தருளும். ஆமென்.

பூரண கிருபை!

ஆண்டவரே எங்கள் வாழ்க்கைக்கு உரிய போதனைகளை நாங்கள் கற்றுக்கொள்ள எங்களுக்கு அருள் செய்யும்.

கூட்டு வாழ்க்கையும் சாட்சியும் : வச.32ல் காணும் விசுவாச கூட்டமைப்பின் ஐந்து பண்புகளைப் பட்டியலிடுவோம். இம்மாதிரியின் முக்கியப் பண்புகளை நாம் எவ்வாறு கடைபிடிக்க இயலும்? இவ்வாறு அனைத்தையும் பொதுவாக வைத்திருக்கும் மாதிரி இக்காலத்தில் நடைமுறையில் இயலுமா? மிக முக்கிய கருத்துகள், அவர்கள் அனைவரும் விசுவாசிகள், அவர்கள் திரளான கூட்டத்தார், அவர்களிடையே ஒற்றுமை இருந்தது, தனிப்பட்ட மக்கள் எவரும் எதையும் தன்னுடையது என்று கூறவில்லை. அனைத்தையும் பொதுவாக வைத்திருப்பது அவர்களுக்கு பிரச்சனையாக இருக்கவில்லை. வச.35 மிக முக்கியம். ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப பகிர்ந்து கொடுக்கப் பட்டது. ஒருவருக்கும் ஒன்றும் குறைவாயிருக்கவில்லை. வச.33ல் காணப்படுவதின் அடிப்படைக் காரணம் இத்தகைய ஒற்றுமையே. இரண்டு குறிப்புகள் மிக முக்கியம் - கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு அப்போஸ்தலர் பலமாக சாட்சி கொடுத்தனர். அவர்கள் எல்லோர்மீதும் பூரண கிருபை உண்டாயிருந்தது. நாம் நமது நடைமுறை வாழ்க்கையில் இத்தகைய ஒரே இருதயம், ஒரே மனது என்பதை எவ்வாறு செயலில் சாதித்து நாம் நம்பும் உயிரோடெழுப்பப்பட்ட இயேசு கிறிஸ்துவின் வல்லமையை உலகிற்குக் காண்பிக்க இயலும்? இத்திரள் கூட்ட விசுவாசிகள் தங்கள் ஒற்றுமையையும், எல்லாவற்றையும் தாங்கள் பொதுவாக வைத்திருந்ததையும், ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப பகிர்ந்து கொடுப்பதையும் குறித்துப் பெருமை பாராட்டவில்லை. அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து மிகுந்த பலமாக சாட்சி கொடுத்தார்கள். நமது சாட்சி எவ்வாறு மிகுந்த பலமுடையதாக இருக்க இயலும்? நமது சாட்சியைக் கேட்போர் நமது வாழ்க்கையிலும் வாழ்க்கை முறையிலும் அந்த சாட்சிக்கேற்ற அத்தாட்சியைக் காணவிரும்புகிறார்கள். தேடுகிறார்கள். விரிவான குறிப்புகளுடன் பர்னபா இங்கு ஏன் வருணிக்கப் படுகிறார்? தனக்குண்டானவை எல்லாவற்றையும் விற்று தேவை உள்ளோருக்குக் கொடுக்கும்படி இயேசு கிறிஸ்துவினால் கூறப்பட்ட ஒருவன் துக்கத்தோடு சென்றுவிட்டான். இயேசுவின் உரிமை கூறுதலுக்கு நமது மறுமொழி என்ன?

ஆண்டவரே, பகிர்ந்துகொள்ளும் கூறுகளைக் கற்று வாழ்க்கையில் செயல்படுத்த எங்களுக்கு உதவும். ஆமென்.

தேவனிடத்திலா?

> ஆண்டவரே உம்முடைய எச்சரிக்கை தரும் எடுத்துக்காட்டுகளில் இருந்து நாங்கள் கற்று வாழ எங்களுக்கு அருள்புரியும்.

மனுஷரிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய் சொல்லுதல் (வச.1-6): தாங்கள் சொத்தை விற்று அது அனைவருக்கும் பயன்படும்படி அப்போஸ்தலரிடம் கொடுப்பது. அப்பொழுது எருசலேம் விசுவாசிகளிடம் நிகழ்ந்த காரியம். அது ஒன்றும் புதியது அல்ல. ஆனால் அனனியாவும் சப்பீராளும் ஏன் அவ்வாறு கொடுப்பதை முழுமனதோடு செய்யாமல் அரைகுறையாக செய்தார்கள் என்பதை சிந்திப்போம். பேரும் புகழும் நம்மை நாமே உயர்த்திக்கொள்ள எவ்வாறு நம்மை உந்தித்தள்ள இயலும் என்று சிந்திப்போம். பேதுரு கூறுவது போல அந்நிலத்தை விற்கும் முன்னரும் விற்ற பின்னும் அதின் திரவியம் அவர்கள் வசத்தில் இருந்தது. ஒருவரும் (கடவுளும் கூட) அவர்கள் எவ்வளவுக் கொடுக்க வேண்டும் என்று கட்டளையிடவில்லை. ஒரு பகுதியை தாங்கள் வசம் வைத்துக்கொண்டு எஞ்சியதைக் கொடுத்ததை எவரும் குறைகூறவுமில்லை. பின் ஏன் அவர்கள் பொய் கூறினர்? வசனம் 3-ல் இதன் காரணத்தைக் காண்கிறோம். நம் வாழ்க்கையிலும் எவ்வாறு பொய்யும் மாய்மாலமும் காணப்படக் கூடும்? இவை அனைத்தும் எங்கு தோன்றுகின்றன? பிசாசு பொய்களின் தகப்பனாகக் காணப்படுகிறான். பிசாசு நம் இதயத்தை வாழ்க்கையை நிரப்பும் பொழுது நாம் மனிதரிடம் மட்டுமல்ல, கடவுளிடமே பொய்கூற ஏவப்படுகிறோம். ஆனால் கடவுளிடம் இருந்து எதையாவது நாம் மறைக்க இயலுமா? நமது செயல்கள் ஒருவேளை நேரடியாக கடவுளுக்கு எதிராக இருப்பது போன்று தோன்றாமல் இருக்கலாம். ஆனால் மறைமுகமாக, ஒளிவுமறைவாக நாம் எவ்வாறு மாய்மால, போலி வாழ்க்கை நடத்த இயலும்? எப்படியாயினும் எப்பொழுதும் பொய், புரட்டு, மாய்மாலம், ஏமாற்று இவை சாத்தான் நம் இதயத்தை நிரப்புகிறதா? ஆராய்ந்து பார்ப்போம் 1 பேதுரு 5:8,9.

கர்த்தரைச் சோதிக்க ஒருமனப்படுதல்(வச.7-11): இந்நிகழ்வில் துன்பத்தைக் கொடுக்கும் காரியம், அவ்விருவரும் கர்த்தரைச் சோதிக்க ஒருமனப்பட்டது தான். எப்பொழுதும் இவ்வாறு கடவுள் உடனுக்குடன் தண்டிப்பதை நாம் காண்பதில்லை. வேதம் சொல்லுகிறது வாசிக்க.2 பேதுரு 3:9. எனவே பொறுமை கொள்ளும் கடவுளுக்கு அஞ்சி வாழ்வோம்.

> கடவுளே, வாழ்வில் உமக்கு அஞ்சி நாங்கள் உண்மையாக இருக்க எங்களுக்கு உதவும். ஆமென்.

வாழ்வை அழிக்க இயலுமா?

கடவுளே உமது செயல்களுக்கு நாங்கள் கீழ்ப்படிய எங்களுக்கு உதவும்.

அடையாளங்களும் அற்புதங்களும் (வச.12-16): வச.12-14ல் காண்பவை அடையாளங்களும், அற்புதங்களும், ஒருமனப்பாடு, மேன்மை, திரளான விசுவாசிகள் சேர்க்கப்படல். இவை கடவுளின் மக்களின் கூட்டமைப்புகளில் எவ்வாறு காணப்படுகின்றன? பெரும்பாலும் பகட்டான காரியங்களே நம் கவனத்தை ஈர்த்து ஒருமனப்பாட்டைக் கவனிக்காது விட்டுவிடுகிறோம். நமது விசுவாசக் கூட்டமைப்புகளில் இவை அனைத்தும் எவ்வாறு சமநிலையில் காணப்படலாம்? விரிந்து செல்லும் பாதிப்பே நல்ல வளர்ச்சியின் அறிகுறியாகும்.

கர்த்தருடைய தூதன் (வச.17-21அ): அப்போஸ்தலரை அத்தலைவர்கள் சிறைப்படுத்தியதின் காரணம் வச.17ல் காணப்படுகிறது. சிறைப்படுத்தப்பட்ட அப்போஸ்தலர் வெறுமனே தூதனால் விடுவிக்கப்படவில்லை. அவர்களுக்கு ஒரு கடமை கொடுக்கப்பட்டது. நமது விடுதலை எவ்வாறு வாழ்வின் வார்த்தைகளை அறிவிக்க ஏவுகிறது? எவ்வாறு நாம் பாதுகாப்பை முக்கியப்படுத்தி, இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பதை தளர்த்திவிட இயலும்?

சிறையில் அப்போஸ்தலர் இல்லை (வச.21ஆ-26): சிறையில் ஒருவரும் இல்லை என்பதை அறிந்தவுடன் தலைவர்களின் நிலை எவ்வாறு காணப்பட்டது (வச.24-26). அப்போஸ்தலர் எவ்வாறு வாழ்ந்தனர், எதைச் செய்தனர் எத்தகைய செய்தியை அறிவித்தனர் என்று மக்கள் நன்கு அறிந்திருந்தனர். நமது வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளும் எவ்வாறு நாம் அறிவிக்கும் நற்செய்தியை அத்தாட்சி காட்டி உறுதிப்படுத்த இயலும்?

மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் (வச.27-32): முன்போலவே பேதுரு அஞ்சாது குற்றத்தை எடுத்துக்காட்டுகிறார். ஆனாலும் வசனம் 30, 31-ல் இதன் அடிப்படையைக் காண்கிறோம். கடவுள் ஏன் இயேசுவை உயிரோடெழுப்பி, உயர்த்தினார்? மனந்திரும்புதலுக்கும் பாவமன்னிப்பிற்கும் என்பதற்காகவே. நமது நற்செய்தி அறிவிப்பதில் நாம் இவற்றிற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம்?

ஆண்டவரே, நீர் செய்வதற்கு உண்மையுள்ள சாட்சிகளாக இருக்க எங்களுக்கு உதவி செய்யும். ஆமென்.

எவ்விதத்திலும் கிறிஸ்துவைப் பிரசங்கித்தல்!

ஆண்டவரே கடவுளின் நற்செய்திக்கு எதிர்ப்பு இருக்கும்பொழுது நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

...ம் [வச.33]: தலைவர்களின் எதிர்ப்பையும் நோக்கத்தையும் கவனிப் ...ம். இத்தகைய சூழ்நிலைகளில் இருப்போருக்காக ஜெபிப்போம்.

...ள்ள கமாலியேல் [வச.34-39]: கடவுள் நாமறியாத வகையில் ...படுகிறார். ஆலோசனைச் சங்கத்தின் உறுப்பினரான கமாலியேலின் ...மாகவும் கடவுள் செயல்படுகிறார். சிறைப்பட்ட யூதர் நாடு திரும்புதலுக்கு ...ரேஸைக் கடவுள் பயன்படுத்தினார் (எஸ்.1:1). கமாலியேல் நான்கு ...துகளைக் கூறுகிறார் - எச்சரிக்கையாயிருங்கள். இவ்வாறு தனிப்பட்ட ...ர் கிளர்ச்சியைக் கிளப்பி பின் அழிந்ததின் இரண்டு எடுத்துக்காட்டுகள். ...து கடவுளால் உண்டானது என்றால் இதை அழிக்க இயலாது. அப்பொழுது ... மதத்தலைவர்கள் கடவுளோடு போராடுகிறவர்களாவர். ஏற்ற வேளையில் ... ஆலோசனையைக் கொடுக்கும் தலைவரை நாம் எவ்வாறு பெறலாம்? ...ம் எவ்வாறு இத்தகைய தலைவர்களாக செயல்படலாம்?

...ப்பட்டும் விடுவிக்கப்படல் [வச.40]: ஆலோசனைச் சங்கம் ...லியேலின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டபொழுதும், அவர்கள் ...போஸ்தலரை அடித்து அச்சுறுத்தி இயேசுவைக் குறித்துப் பேசக்கூடாது ...று உத்தரவிடவும் தயங்கவில்லை. இத்தகைய மறைமுகமாக எதிர்ப்பை ... எவ்வாறு எதிர்கொள்ளலாம்? நாம் ஒருக்கால் சிறையில் அடைக்கப் ...விட்டாலும் நாம் ஆபத்து இன்றி இருக்கிறோம் என்று எண்ண இயலாது.

...வின் பெயருக்கு என்றும் துன்பத்தை ஏற்றுக்கொள்ள பாத்திரர் ...41,42]: இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி அடக்கப்பட இயலாது. இவ் ...ங்களின் முக்கிய கருத்துக்களைக் கவனிப்போம். நாம் கிறிஸ்துவுக்கு ...று துன்பப்படாவிட்டாலும் அவமானத்தை அடையலாம். அதை நாம் ...வாறு பெரும் பேறாக எண்ணலாம்? (எபி.12:2). அப்போஸ்தலர் தாங்கள் ... செய்யப்பட்ட இடத்திலேயே தலைவர்களின் ஆதிக்க மையத்திலேயே ...றைடம் போதித்தனர்.

ஆண்டவரே, உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ...ல்லமையால் என்னை நிரப்பும். ஆமென்.

கெம்பீர முழக்கம்!

நேர்த்தியான இடங்களில் எனக்கு பங்கு கிடைத்தது: ஆம் சிறப்பான சுதந்திரம் எனக்கு உண்டு.

தன்னுடைய அனைத்து வெற்றிக்கும் பின்னயத்தில் இருப்பது யார் என்றால் ஆண்டவரின் வல்லமை மாத்திரமே. தந்தையின் ஆடுகளை சிங்கத்தின் வாயிக்கு தப்புவித்தவர். கோலியாத்தை முறியடிக்க செய்தவர். சவுலின் கைக்கு நீங்கலாக்கி இரட்சித்தவர். வலிமை மிக்க இராணுவத்தை மேற்கொள்ள செய்தவர் நம்முடைய இரட்சண்ய கன்மலையாகிய தேவன்தான். தம்மை நம்பும் அனைவருக்கும் கேடகமாயிருக்கிறார். தான் அவரை நம்பினதினால்தான் தனக்கு வெற்றி கிடைத்தது என்று கூறுகிறார். எனவே அவரையன்றி வேறே தேவன் இல்லை என்று ஆணித்தரமாக கூறுகின்றார். நாம் கூட இவ்வண்ணமாக சொல்ல வேண்டுமென்றும் உறுதியாக நம் தேவனை அறிக்கையிட வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். அவர் எதிர்பார்ப்பை நாம் பூர்த்தி செய்வோமா?

அவர் தன்னுடைய வழிகளை நேர்த்தியாய் நடத்தி செல்கிறார். அவர் தன்னுடன் வரும்போது தன்னுடைய கால்கள் சிக்கிக்கொள்ளாதபடி தன்னுடைய வழிகளை பெரிதாக்குகிறார். தன்னுடைய எதிரிகளை தொடர்ந்து பிடித்து அவர்களை மடங்கடிக்கூடிய பெலனை தருவார். விழுதலுக்கு என்னை தப்புவித்தார். தேவன் இல்லாமல் தான் ஒன்றுமில்லை என்பது நமக்கு புரிகிறது. தன்னை விடுவித்த எல்லா நிலைகளையும் தாவீது நினைத்து பார்ப்பதாக இச்சங்கீதம் அமைகிறது.

இவ்வளவு மகத்தான காரியங்களை தன்னுடைய வாழ்க்கையில் செய்த தேவனுக்கு நன்றி செலுத்தும் வண்ணமாக அவருடைய நாமத்திற்கு சாங்கீதம் பாடுவேன் என்று தாவீது கூறுகிறார். அவர்தான் தன்னை விடுவிப்பவர் என்றும் உயர்ந்த ஸ்தலங்களில் தன்னை கொண்டுபோய் விடுகிறவர் என்றும் கூறி, அவருக்கு சங்கீதம் பாடுவதாக கூறுகிறார். இச்சங்கீதத்தின் ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால், இவைகள் எல்லாவற்றிலும் தாவீது தன்னை மிகைப்படுத்தி ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. நம்மை எப்படியெல்லாம் மிகைப்படுத்தி காட்டுகிறோம். தாவீதுக்கு தன்னை மிகைப்படுத்தி காட்டிக்கொள்ள வேண்டிய காரியங்கள் இருந்தாலும் அவர் அப்படி செய்யவில்லை.

ஆண்டவரே, நான் சிறுக நீர் பெருக என் வாழ்நாள் முழுவதும் உம்மை மகிமைப்படுத்தி வாழ கிருபை தாரும், ஆமென்.

கிரீடமான ரெபெக்காள்

ஆபிரகாமின் தேவனே! ஈசாக்கின் தேவனே! இன்றைக்கு நீர் எனக்கு காரியத்தை வாய்க்கச் செய்து எனக்கு தயவு செய்தருளும்.

குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்கு கிரீடமாயிருக்கிறாள் (நீதி. 12:4). ஆபிரகாம் தன் மகன் ஈசாக்குக்கு கிரீடமாகிய ரெபெக்காளை கண்டறிந்த விதம் மிகவும் நேர்த்தியாய் இன்றைய வேதப்பகுதியில் காணப்படுகிறது.

ஆபிரகாமின் தீர்மானம் : ஆபிரகாம், எலியேசரிடம் தன் மகனுக்குப் பெண் பார்க்கின்ற பொறுப்பினை ஒப்படைக்கிறார். ஆபிரகாம், ஈசாக்குக்கு தன்னுடைய சொந்த ஜனத்தில்தான் பெண் எடுக்க வேண்டும், கானானியப் பெண்ணை மணமகளாகத் தெரிவு செய்யக்கூடாது என்று தனது முதலாவது தீர்மானத்தைப் பகிர்ந்து கொள்கிறார். இப்படி கூறுவதற்கான காரணம் ஜாதி பற்றோ, கோத்திரப்பற்றோ இல்லை. மாறாக கானானியர் விக்கிரக ஆராதனைக்காரர்கள் என்பதே (லேவி. 7:3,4). இரண்டாவதாக, ஆபிரகாம் கர்த்தரின் வாக்குதத்தத்தை முழுவதுமாக விசுவாசித்ததால் (ஆதி. 24:7) தனது மகன் ஈசாக்கை தான் விட்டுவந்த தேசத்திற்கு அழைத்துச் செல்லவேண்டாம் என்று திட்டமாக கூறுகிறார். சரியான தேர்ந்தெடுப்புக்கு கர்த்தர் உதவுவார் என்பதையும் (24:7) காண்பித்துக் கொடுத்து ஆணையிட்டு அனுப்புகிறார்.

எலியேசரின் ஜெபம் : எலியேசர், "ஆபிரகாமின் தேவனாகிய கர்த்தாவே, ஆபிரகாமுக்கு தயை செய்தருளும்" (ஆதி. 24:12) என்று ஜெபிக்கிறார். தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர், ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறவர். எலியேசரின் ஜெபம் கேட்கப்பட்டு, ஈசாக்குக்கு கிரீடமாகிய ரெபெக்காளை மணப்பெண்ணாக தெரிவு செய்கிறார்.

கர்த்தரின் வழிநடத்துதல் : எலியேசர், கர்த்தரின் வழிநடத்துதலுக்காக ஜெபித்து முடிக்கும் முன்னே (ஆதி 24:15), தண்ணீர் குடத்தை தோளில் வைத்தவளாக, எலியேசர் கண்முன் வருகிறாள் மணப்பெண் ரெபெக்காள். கர்த்தர் குடிக்கத் தண்ணீர் கேட்ட எலியேசருக்கு மட்டுமல்ல, அவரது ஒட்டகங்களுக்கும் தண்ணீர் கொடுக்கிறாள். ஈசாக்குக்கு ஏற்ற [illegible] கண்டுகொண்டார் எலியேசர். வழிநடத்தும் வல்லதேவன் [illegible]துணையாய் நம்மோடிருக்க கலக்கம் ஏன்? தயக்கம் ஏன்?

பரலோக பிதாவே, ஈசாக்குக்கு ஏற்ற துணையை கொடுத்தவரே, எங்களது பிள்ளைகளுக்கும் ஏற்ற துணையைத்தாரும். ஆமென்.

சிறந்ததை தருபவர்

> தேவனின் தெரிந்தெடுப்புகள் எப்பொழுதுமே சரியானதாகவும் சிறப்பாகவும் அமையும்.

கர்த்தரால் பயன்படுத்தப்பட்ட எலியேசர்: நமது கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் பயன்படுத்துகிறார். உண்மையுள்ள மனிதனை தேவன் தேடுகிறார். உத்தம சாட்சியாக மாற்ற விரும்புகிறார். எலியேசர் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரம். எலியேசர் ஆபிரகாமுக்கு கிடைத்த மிகப்பெரிய ஆசீர்வாதம். எலியேசர் ஜெபிப்பவர் (24:12), துதிப்பவர் (24:48), தனது எஜமானனின் கட்டளையை அப்படியே நிறைவேற்றத்துடிப்பவர் (24:37-48), தன் வேலையில் ஜாக்கிரதையாய் இருப்பவர் (24:33), அழகுக்கு அழகு சேர்ப்பவர் (24:22,30), சீர் பெறுபவர் அல்ல, சீர் செய்பவர் (24:53).

ரெபெக்காள் அனுபவித்த சுதந்திரம் : பெண் என்பவள் அடிமை அல்ல. பெண் என்பவள் தாயாக, தாரமாக, மகளாக பல்வேறு கதாபாத்திரங்களில் ஜொலிப்பவள். கிறிஸ்துவுக்குள் ஆணென்றும், பெண்ணென்றும் இல்லை. அனைவரும் சமம். முழு சுதந்தரத்தை அனுபவிப்பவர்கள். அவரவர் தீர்மானங்களுக்கு அவரவர்களே பொறுப்பாளர்கள். சிகரத்துக்கோ அல்லது அகல பாதாளத்துக்கோ அழைத்துச் செல்லும் வல்லமை நமது தீர்மானங்களுக்கு உண்டு. ரெபெக்காளின் சகோதரர் தன் சகோதரியின் சுதந்திரத்தை மதித்து, அவளது வாய்பிறப்பைக் கேட்டு அவளை கோடாகோடியாக பெருக வாழ்த்தி அனுப்புகிறார்.

கர்த்தரோடு சஞ்சரிக்கும் ஈசாக்கு : தேவனோடு சஞ்சரித்த ஏனோக்கை அறிந்திருக்கிறோம். அந்தி, சந்தி, சாயங்கால வேளைகளில் ஜெபித்த தானியேல், தாவீது சரித்திரமானார்கள். நாம் ஆண்டவருக்கு முதல் இடம் தரும்போது, அவர் நமக்காக யாவையும் செய்கிறார். பகலும் இரவும் ஒன்றையொன்று சந்திக்கும் சந்தியா வேளையில், தேவனை சந்திக்க 'வெளியிலே' போயிருந்த ஈசாக்கு கர்த்தரை சந்தித்தார்; பின்பு கர்த்தர் தமக்கு மணமகளாக தரப்போகிற ரெபெக்காளையும் சந்தித்தார். தன் தாயாகிய சாராளுடைய கூடாரத்துக்கு அழைத்து கொண்டுபோய் கிறிஸ்தவ இல்லறத்தை ஆரம்பித்தார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்.

பிதாவே, எலியேசரைப் பயன்படுத்தினதுபோல எங்களையும் உம்முடைய நாமத்துக்கு மகிமையாகப் பயன்படுத்தும். ஆமென்.

ஆதியாகமம் 25:1-11; 19-34

திரளான சாட்சிகள்

கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது.

விசுவாசிகளின் தகப்பன் - ஆபிரகாம் : ஆபிரகாம் தனது 75வது வயதில் (ஆதி. 12:4) விசுவாச ஓட்டத்தை ஆரம்பித்து, தனது 175வது வயதில் தனது ஓட்டத்தை நிறைவு செய்கிறார். முழுமையாக 100 ஆண்டுகள் தேவனோடு வாழ்ந்த விசுவாச வீரர். தனது சரீரம் செத்துப்போன நிலையிலும், ஆபிரகாம் விசுவாசத்தில் பெலவீனமாயிருக்கவில்லை (ரோமர் 4:19). விசுவாச சோதனை வந்தபோதும் தனது ஒரேபேரான மைந்தனை பலியிட தயங்கவில்லை.

ஜெபிக்கும் ஈசாக்கு : ஈசாக்கு தியானிப்பவர் மாத்திரமல்ல (ஆதி.24:63) ஜெபிப்பவர். 40வது வயதில் இல்லற வாழ்க்கையை ஆரம்பித்து (ஆதி.25:20) தன்னுடைய 60வது வயதில் இரட்டைப் பிள்ளைகளுக்கு தகப்பன் ஆனார் (ஆதி.25:26).

கர்ப்பத்தில் விசாரிக்கும் ரெபெக்காள்: கர்ப்பத்துக்குள்ளாக தனது பிள்ளைகள் மோதிக்கொள்வதை உணர்ந்து அறிந்த ரெபெக்காள், தனது பிள்ளைகள் எப்படி இருப்பார்கள் என்று கர்த்தரிடம் விசாரித்தாள். தேவன், நடக்கப்போகிற சம்பவங்களை விவரிக்கின்றார். நாமும் நமது பிள்ளைகளுக்காக, அவர்கள் நல்வாழ்வுக்காக திறப்பில் நிற்போம்.

அசட்டைக்காரனான ஏசா : ஒருவேளை போஜனத்துக்காக தனது பிறப்புரிமையாகிய 'சேஷ்ட புத்திர பாகத்தை' விற்றுப்போட்ட ஏசாவின் அலட்சியப்போக்கு நமக்கு எச்சரிப்பாக அமைகிறது. பணத்திற்காகவும், பதவிகளுக்காகவும் நமது 'சுவிகார புத்திர பாக்கியமாகிய' பரலோக வாழ்வை இழந்து விடாதபடிக்கு எச்சரிக்கையாய் இருப்போம்.

குணசாலியான கூடாரவாசி யாக்கோபு : யாக்கோபு குணசாலியாகவும், கூடாரவாசியாகவும் வாழ்ந்தார் (வச.25:27). யாக்கோபு கூழ் சமைத்துக் கொண்டிருந்ததாக வாசிக்கிறோம். நாமும் குணசாலிகளாகவும் சமையலகத்தில் மாத்திரமல்ல, அடுப்படியிலும் உதவுகிறவர்களாக காணப்படுவோம். அலட்சியமாய் அல்ல, ஜாக்கிரதையாய் விசுவாசத்தை காத்துக் கொள்வோம்!

ஆண்டவரே, உம்மை நோக்கி எங்களுக்கு நியமித்திருக்கிற ஓட்டத்திலே நாங்கள் பொறுமையாக, முழுமையாக ஓட எங்களுக்கு கிருபை செய்யும். ஆமென்.

ஆசீர்வதிக்கும் தேவன்

உலகத்தின் முடிவு பரியந்தமும் சகல நாட்களிலும் நான் உங்களோடு இருப்பேன்.

கர்த்தர் யோசேப்போடு இருந்தார். அவன் காரியசித்தி உள்ளவனானான். கர்த்தர் தானியேலோடு இருந்தார். அவரின் காரியம் ஜெயமாய் இருந்தது. கர்த்தர் ஆபிரகாமோடு இருந்தார். ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பனாய் மாறினார். கர்த்தர் ஈசாக்கோடு இருந்தார். ஈசாக்கு பஞ்ச காலத்தில் விதை விதைத்ததை 100 மடங்கு ஆசீர்வதித்தார்.

கர்த்தர் வாக்குதத்தங்களின் தேவன் : ஆபிரகாம் தனி மனிதனாய் வாழ்ந்தபோது, ஆபிரகாமுக்கு மணலையும், நட்சத்திரங்களையும் காண்பித்து உன்னைப் பெருகப்பண்ணுவேன் என்று வாக்குதத்தம் பண்ணினார். 'எம்மட்டோ அம்மட்டும்' நான் தருவேன் (ஆதி. 13:16,17) என்று திருவுளம் அருளினார். ஆபிரகாம் காலத்திற்கு பிறகு கர்த்தர் ஈசாக்கோடு பேசி வாக்குதத்தத்தை உறுதிபடுத்தி, நினைவு கூறுகிறார். நான் உனக்கு சொன்னதை செய்யுமளவும் நான் உன்னை கைவிடமாட்டேன் என்று நம்மை கரம்பற்றி நடத்தும் கர்த்தர் நமக்கு உண்டு.

ஆசீர்வதிக்கும் தேவன் : ஆபிரகாமையும் ஈசாக்கையும் ஆசீர்வதித்தார். நம்மையும் ஆசீர்வதிக்கிறார். கர்த்தரை நம்பி நன்மை செய்யவும், வசனமாகிய விதையை விதைக்கவும் அழைக்கப்படுகிறோம். விளையச் செய்கிற கர்த்தர் விளைய செய்வார். நம்பிக்கையோடு... கண்ணீரோடு விதைப்போம்; கெம்பீரமாய் அறுவடை செய்வோம்.

ஈசாக்கு தடுமாறுகிறார் : ஆபிரகாம் எகிப்துக்கு போனதைப் போல ஈசாக்கு கேராருக்குப் போகிறான். நாம் எவ்வழியோ, அப்படியே நம் பிள்ளைகளும் என்பதனை நன்கு உணர்ந்து, சத்தியத்தில் நடக்க தீர்மானிப்போம். குடும்பமாக ஜெபிக்க மாத்திரமல்ல, குடும்ப நபர்களோடு பேசிவும், விளையாடவும், மகிழ்ந்திருக்கவும் தீர்மானிப்போம்.

ஈசாக்கு பலிபீடம் கட்டுகிறார்: ஈசாக்கும் கர்த்தருக்கென்று பலிபீடம் கட்டி கர்த்தரை தொழுதுகொண்டார் (ஆதி. 26:25). விசுவாசப்பயணம் செய்யும் விசுவாசிகளாகிய நாமும், குடும்ப ஜெபம், சபை கூடிவருதல் என்கிற பலிபீடங்களைக் கட்டி கர்த்தரை தொழுது கொள்ளுவோம்.

பரலோகப்பிதாவே, பலிபீடம் செப்பனிட்டு உம்மை ஆராதிக்க எங்களுக்கு உதவி செய்யும். ஆமென்.

மோதல்

> எனக்கும் உனக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதர, சகோதரிகள்.

ஈசாக்கு ஏசாவின் மேல் பட்சமாயிருந்தான். ரெபெக்காள் யாக்கோபின் மேல் பட்சமாயிருந்தாள். ஏசாவும் யாக்கோபும் கர்ப்பத்தில் மாத்திரம் அல்ல, கர்ப்பத்திற்கு வெளியிலும் போட்டியாளர்களாக வாழ்ந்தார்கள்.

ஏசாவை **ஆசீர்வதிக்க விரும்பும் ஈசாக்கு :** ஈசாக்கு தன் முதிர்வயதிலே கண்கள் இருளடைந்த நிலையிலே ஏசாவை அழைத்து, நான் உன்னை ஆசீர்வதிக்க விரும்புகிறேன் என்றார். இருபிள்ளைகளையும் அழைத்து ஆசீர்வதிக்க வேண்டிய தகப்பன், தனக்கு பிரியமாயிருந்த ஏசாவை ஆசீர்வதிக்க விரும்புகிறார்.

ரெபெக்காளின் **விருப்பம் :** நான் சபிக்கப்பட்டு போனாலும் பரவாயில்லை, நீ ஆசீர்வாதமாய் மாறவேண்டும் என்று யாக்கோபின் மேல் பட்சமாய் இருந்து செயல்படும் ரெபெக்காள். போஜன பதார்த்தம் இத்தனை சீக்கிரமாய் எப்படி என்ற கேள்விக்கு, உம்முடைய தேவனாகிய கர்த்தர் நேரிடப்பண்ணினார் என்று சமாளித்து 'ஆசீர்வாதமாய்' மாறிப்போன யாக்கோபு.

சகோதரர்கள்...**பகைவர்கள் :** யாக்கோபு என்னை இரண்டுதரம் மோசம் போக்கினான். என்னுடைய சேஷ்ட புத்திர பாகத்தையும், ஆசீர்வாதத்தையும் எடுத்துக்கொண்டான் (வச.27:36) என்று இழப்பின் வேதனை அலைபாய, ஏசா யாக்கோபை பகைத்தான்.

கர்த்தரின் **கிருபை :** பெற்றோரின் தவறான அணுகுமுறை பிள்ளைகளை பாதித்தது. ஆனால் பரம தகப்பனாகிய நம்முடைய பரலோக பிதா தனி மனிதனிலும், சரித்திரத்திலும் செயல்படுகிறவர். கர்த்தர் யாக்கோபிலே செயல்பட்டு மனமாற்றத்தை கட்டளையிட்டார். கர்த்தரின் கிருபை தவறான வழிமுறைகளை மன்னிக்கும், குடும்ப உறவுகளை சீர்செய்யும். கிறிஸ்துவின் அன்பும் கிருபையும் குடும்ப உறவுகளை இணைக்கும் பாலம் என்பதை உணர்ந்து கர்த்தரின் ஆளுகைக்கு நம்மை ஒப்புவிப்போம். நாம் யாருடைய பிள்ளைகளாய் வாழுகின்றோம் என்பதை சிந்தித்து பார்க்க அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவரே! எங்கள் சகோதர சகோதரிகளின் உறவுகளை சீர்படுத்தும். ஒப்புரவாக்கும் என்னிலும் எங்களிலும் செயல்படும். ஆமென்.

அநாதி தேவன்

யாக்கோபே, நீ பரதேசியல்ல; நீ பாக்கியவான். சர்வ வல்லமையுள்ள தேவன் உனக்கு அடைக்கலம். அவர் உன்னை ஆசீர்வதிப்பார்.

தாயின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்த யாக்கோபு, தன் சகோதரனாகிய ஏசாவின் வெறுப்பை சம்பாதித்து கொண்டார். ஏசாவினால் கொலை செய்யப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டார். தள்ளாடுகிற முழங்கால்களை திடப்படுத்தும் கர்த்தர் யாக்கோபை ஆசீர்வதிக்கிறார்.

யாக்கோபை காப்பாற்றும் தாய் : யாக்கோபை ஏசாவின் கைகளுக்கு மாத்திரமல்ல, விக்கிரக ஆராதனையிலிருந்தும் காப்பாற்ற ரெபெக்காள் செயல்படுகிறாள். ஏசாவின் கோபம் பற்றியெறிகிற தீயைப்போல காணப்பட்டதால், ஏசாவின் கைகளுக்கு விலகி ஓட வேண்டிய நிலை, ரெபெக்காள் தான் நேசிக்கும் யாக்கோபு 'நன்றாய்' வாழவேண்டும் என்று, தன் மகனை தன் சகோரனாகிய லாபானிடத்திற்கு அனுப்புகிறாள் (வச. 27:43).

யாக்கோபை ஆசீர்வதிக்கும் தகப்பன் : ஈசாக்கு யாக்கோபை அழைத்து நீ கானானியப் பெண்ணை திருமணம் செய்யக்கூடாது என்று ஆலோசனை கூறுகிறார் (லேவி.7:3,4). சர்வ வல்லமையுள்ள தேவன் உன்னை ஆசீர்வதித்து உன்னைப் பெருகப்பண்ணுவார் என்று கர்த்தரின் ஆசீர்வாதத்தோடு தன் மகனை அனுப்பி வைக்கிறார் ஈசாக்கு. ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர், இப்போது 'யாக்கோபின் தேவன்' என்கிற அற்புதநிலை (ஆதி.28:3,4) உருவாகிறது. கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது (சங்.100:5).

கர்த்தரின் பாதுகாப்பில் யாக்கோபு : தாயின் அரவணைப்பு, தந்தையின் பாதுகாப்பு என்கிற உன்னதமான நிலையில் வாழ்ந்துவந்த யாக்கோபு இப்போது தனியாக தனது வாழ்க்கைப் பயணத்தை துவங்க வேண்டும். "விசுவாசி அவன் என்றும் பதறான். அவன் நங்கூரம் இயேசு கிறிஸ்து" விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமின் வழியில், தற்போது யாக்கோபின் பயணம் தனிமையாக அல்ல, கர்த்தரோடு துவங்குகிறது. வாழ்வின் பாதை நீ அறிவாயா? வல்லவர்குன்னை நீ தருவாயா?

பரலோகப்பிதாவே, சர்வ வல்லமையுள்ள தேவனாக நீர் என்னோடு இருப்பதனால், மகிழ்வோடு விசுவாச வாழ்க்கை வாழ எனக்கு உதவிடும். ஆமென்.

தேவனை அறிதல்

தேவனுடைய படைப்புகளிலிருந்தும், வேதத்திலிருந்தும் இன்று தேவனைப் பற்றி நாம் கற்றுக்கொண்ட உண்மை என்ன?

மனிதன் தேவனை எதன் மூலம் அறிய முடியும் என்பது இங்கு விளக்கப்படுகிறது.

படைப்புகளின் மூலம் [வச.1-4]: ஆகாயமும், அதன் விரிவும் கர்த்தருடைய படைப்பு. அவைகள் தேவனுடைய படைப்பின் விந்தையை நமக்கு வெளிப்படுத்துகின்றன. மேலும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் போன்ற ஒளி கொடுக்கக் கூடிய படைப்புகள் தேவனுடைய மகிமையை எடுத்துரைக்கின்றன. அது வானமண்டலங்களின் இறுதி வரை செல்கிறது. தேவன் படைத்தவைகளை நாம் உற்று நோக்கும் போது தேவனையும், அவரது வல்லமையையும் அறிகிறோம்.

வேதத்தின் மூலம் [வச.5-11] : இயற்கை படைப்புகளின் விந்தைகளின் மூலமாக தேவனைப் பற்றி நாம் முழுமையாக அறிய முடியாது. தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய வேதம், தேவனை இன்னும் அறிய நமக்கு உதவுகிறது. அதன் தரம், மதிப்பு, செயல்பாடு, சுவை ஆகியவை எல்லா விதத்திலும் எல்லை கடந்து நிற்கிறது. இந்த இணையற்ற வேதம் நமக்குக் கிடைக்காவிட்டால் தேவன், பாவம், நித்திய வாழ்வு ஆகியவைகளைப் பற்றிய அறிவு இல்லாமல் பாவத்திலேயே மரிப்போம். தேவன் தந்த வேதத்திற்காக நன்றி கூறுவோம்.

பாவத்தை உணர்வதின் மூலம் [12-14] : துணிகரமான பாவங்கள் கடின இருதயமுடைய துன்மார்க்கரையும் பாதிக்கிறது. இப்படிப்பட்ட பாவங்கள் வெகுவிரைவில் பரவி, தேவனிடமிருந்து மனிதனைப் பிரித்து, பெரிய பிரிவை ஏற்படுத்துகிறது. இதன் விளைவாக மனிதன் தேவனை யும், அவர் சித்தத்தையும் அறிய முடியாதவனாய்ப் போகிறான். ஆகவே பாவங்கள் கண்களில் காணவொட்டாதிரும் என்றும், தனது வாயின் வார்த்தைகளும், இருதயத்தின் நினைவுகளும் பிரியமாயிருக்க வேண்டும் எனவும் விண்ணப்பிக்கிறான் தாவீது. பாவங்களை அறிக்கையிடாதவர்கள் கண் சொருகிப் போன குருடர்களாயிருக்கிறார்கள். நாம் எவ்விதம் இருக்கிறோம்?

தேவனே, அனுதினமும் உம்மை நான் ஆழ்ந்து அறிந்து கொண்டு வாழ கிருபை செய்யும்-ஆமென்.

உடன்படிக்கையின் தேவன்

உடன்படிக்கை என்பது இரண்டு வேறு தரப்பினர் ஒரு ஒப்பந்தத்துக்குள் வந்து இணைவது.

யாக்கோபு தன் சொப்பனத்தில் ஒரு ஏணி பூமியில் வைக்கப்பட்டு அதின் நுனி வானத்தை தொட்டது என்று காண்பார். அந்த ஏணியிலே தேவதூதர்கள் ஏறுகிறதையும் இறங்குகிறதையும் கண்டார். தேவனாகிய கர்த்தர் அதற்கு மேலாக நின்றிருந்தார். தேவன் யாக்கோபுக்கும் தனக்குமான ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார். யாக்கோபு தனது சொப்பனத்திலிருந்து விழித்தபோது தேவன் தன்னுடன் இருந்ததை உணர்ந்தும் அறியாதிருந்தான். யாக்கோபு எத்தனாய் இருந்ததினால் உடன்படிக்கையின் உண்மையான அர்த்தத்தை உணராதிருந்தான். ஆனால் இந்த சொப்பனத்திற்கு பிறகுதான் தேவன் யாக்கோபை இஸ்ரவேலாக மாற்றி, அவனுடைய சந்ததியினரை ஆசீர்வதிக்க போகிறார்.

யாக்கோபு புறப்பட்ட பெயர்செபாவிலிருந்து பெத்தேல் 60 மைல் தூரமாகும். நீண்ட தூர பிரயாணத்தின் மத்தியிலும், யாக்கோபுக்கு பெலனையும், சத்துவத்தையும் அருளினார். தாராளமான ஆசீர்வாதங்கள் அவன் கேட்காமலேயே, உடன்படிக்கையின் தேவன் அவனுக்கு அளித்தார். அவன் விண்ணப்பித்ததோ கொஞ்சம், ஆனால் அவர் அளித்ததோ எண்ணிமுடியாத அளவுக்கு ஏராளம்.

தேவன் எப்பொழுதும் நம்முடன் இருக்கிறார். அவர் எந்தவொரு சூழ்நிலையிலும் அவருடைய பிள்ளைகளை கைவிடுவதில்லை. சொப்பனத்தில் யாக்கோபு தேவன் தன்னுடன் இருந்ததை அறியாமலிருந்தது போல நாமும் பலவேளைகளில் தேவன் நம்முடனே இருப்பதை அறியாமல் இருக்கிறோம். யாக்கோபுடன் உடன்படிக்கை செய்த தேவன் நம்முடனும் உடன்படிக்கையை ஏற்படுத்த ஆவலாய் இருக்கிறார். நாம் பல நேரங்களில் இதுதான் முடிவு என்று நினைக்கிறோம். ஆனால் தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நம்மை அவருடைய சாயலின் மறுரூபம் ஆக்குவதற்காக இந்த புதிய உடன்படிக்கையை நம்முடன் ஏற்படுத்தினார். தேவனுடன் நம்முடைய உடன்படிக்கை போக்கும் வரத்துமாக உள்ளதா அல்லது நித்திய உடன்படிக்கையாய் உள்ளதா?

ஆண்டவரே, உம்மை மாத்திரம் தேட உதவிபுரியும். ஆமென்.

இல்லத்தின் தேவன்

நம்முடைய குடும்பத்தின் தலைவர் யார் என்பதை சிந்தித்துப் பார்த்து, இல்லத்தின் தலைவராக இயேசு இருந்தால் மட்டுமே, ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பமாக விளங்குவோம்.

...யாக்கோபு லாபானின் குமாரத்தியாகிய ராகேலைக் கண்டவுடன், கிணற்றின் ...யிலுள்ள கல்லைப் புரட்டினான். யாக்கோபு கூடாரங்களில் வாசம் ...வன். அவன் ஏசாவைப் போல் வெளிவெளிகளில் இருப்பவன் அல்ல. ...ன் தனது நீண்ட பிரயாணத்தின்போதும் தன்னுடைய குடும்பத்தினை ...ம் சந்திப்போமா என்ற நினைவுகளில் மூழ்கி இருந்தான். அவனுடைய ... குடும்பத்தினரை தேடும் முயற்சிகளில் இருக்கும்பொழுதுதான், தன் ...ன் மகளான ராகேலை சந்திக்கிறான். இதனால் அவன் உள்ளம் ...கிறது. இது கண்டவுடன் உண்டான நேசம் அல்ல, பாசத்திற்காக ...ங்கிய ஒரு மனிதனின் உள்ள ஆதங்கமே. இந்த ஆதங்கம், தனி ...வாய் அந்த கிணற்றின், மிகவும் பாரமுள்ள கல்லை புரட்டிப் போட ... உந்தியது.

...ம் என்பது தேவன் அருளிய ஒரு ஈவு. குடும்பத்தின் விலைமதிப்பிட ... உறவுகளை சர்வ சாதாரணமாக எண்ணாமல், அதை மதிக்க ...டும். ஒவ்வொரு நாளும் அந்த உறவுகளைப் பாதுகாக்கவும், ...க்கவும் வேண்டும். ஒரு குடும்பமே திருச்சபைக்கும் தேவனுடைய ...த்திற்கும் மத்திய அங்கமாக இருக்கிறது. இந்த குடும்பத்தின் ...களை சீர்குலைக்க சாத்தான் அனைத்து விதமான பிரச்சனைகளைக் ...டு வருவான்.

...ய காலகட்டத்தில் நாம் நம்முடைய பணத்தேவைகளுக்காகவும், ... நிமித்தமாகவும் வெவ்வேறு இடங்களில் கணவன் மனைவி என்று ... இடங்களில் வாழ வேண்டி வருகிறது. இதனால் குடும்பமாக ...ந்து ஜெபித்தலோ, தேவனுடைய திட்டங்களை சிந்திக்கவோ கால ... இல்லாமல் போய் விடுகின்றது. தேவனுடைய சித்தத்திற்கு ...மகொடுக்காமல், இருந்ததினால் பிரிந்த குடும்பங்களின் எண்ணிக்கை ... அளவில் பெருகி வருகிறது. இல்லத்தின் தலைவராம் இயேசு நமது ...வராய் இருந்தால்தான் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். ... நம்முடைய குடும்பம் சார்ந்த அனைத்து செயல்களையும் தேவனுடைய ...நடத்துதலுக்கு ஒப்புக்கொடுக்கத் தயாராய் இருக்கிறோமா?

...வரே, நீரே எங்கள் இல்லத்தின் தலைவராய் இருந்து வழி ...த்தும். ஆமென்.

ஊழியப் பாதையில்....

ஆண்டவரே, உமது பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதபடிக்கு என்னைக் காத்துக் கொள்ளும்.

யாக்கோபின் சந்ததியினர் பூமியின் துகள்களைப் போல ஏராளமானவர்களாக இருந்தனர். ஆதியாகமம் 28ஆம் அதிகாரத்தில் தேவன் பெத்தேலில் யாக்கோபிற்கு கொடுத்த வாக்குத்தத்தம் இதுவே. ஆனால் யாக்கோபு, தேவனுடைய திட்டங்களைக் குறித்து அறியவில்லை. பெத்தேலில் கண்ட சொப்பனத்தையும் கூட மறந்தவனாக காணப்பட்டான். ராகேலை மனைவியாக கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே அவனுக்கு மேலோங்கி இருந்தது. அதனால் லாபான் கூறின அனைத்து கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்தான். யாக்கோபு, தன் வாழ்நாள் முழுவதும் ஒரு போக்குவரத்துக்குரிதான உறவையே அனைவருடன் வைத்திருந்தான். அவனுடைய விருப்பங்கள் யாவும் நிறைவேற்றப்பட்டாலும், அதை அடைவதற்கு அவனுக்கு 20 ஆண்டுகள் தேவப்பட்டன.

சிங்காசனத்தில் வீற்றிருக்கும் தேவன், மிகப்பெரிய நோக்கங்களை திட்டமிட்டிருந்தாலும் யாக்கோபு அதனோடு ஒன்றிப்போகவில்லை. நாம் அவருடைய திட்டங்களை நம்முடைய வாழ்வில் செயல்படுத்த அவருடன் ஒன்று சார்ந்து இருக்கவேண்டும். நம் அனுதின வாழ்வின் பிரச்சனைகளான கடன் சுமையோ, பிள்ளைகளின் எதிர்காலத்தைக் குறித்த பயமோ, உறவுகளில் ஏற்படும் விரிசல்களைக் குறித்த கலக்கமோ, எதுவாக இருந்தாலும் அவை பெரியதாக தோன்றி, நம்மை சிலந்தி வலையைப் போல பின்னி, அழித்துவிடும் என்ற எண்ணம் நம்மை பலவீனப்படுத்தும். இந்த பலவீனமான நேரங்களில்தான், இராஜரீகம் செய்யும் கர்த்தருடைய திட்டங்களும், நோக்கங்களும் நம் வாழ்வில் நிறைவேற்றப்பட நாம் அனுமதிக்க வேண்டும். யாக்கோபை போல தேவனுடைய திட்டங்களை நாம் மறந்து விடாமல் அவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்போம்.

பல்வேறு பிரச்சினைகள் நம்மை சூழ இருந்தாலும், நித்தியத்திற்கு ஏதுவான உயரிய பார்வை நம்மிடம் இருக்குமானால் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரித்துக் கொள்ளும் பாத்திரவான்களாக நாம் மாறுவோம். நம்முடனான உறவை மேம்படுத்திக் கொள்ள, தேவாதி தேவன் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

தேவனே! எங்களுடைய தப்பிதங்களையும் தவறுகளையும் மன்னித்து, உம்முடன் ஒன்றி வாழ எங்களை தகுதிப்படுத்தும். ஆமென்.

ஆதியாகமம் 29:21–30:24

திருமண பந்தத்தை அளிப்பவர்

அன்பு, சந்தோஷம், சமாதானம், பரிசுத்தம் முதலியன நிறைந்த ஒரு குடும்பத்தை திருமணத்தின்மூலம் அமைத்துத் தருபவர் நமது தேவாதி தேவன் ஒருவரே!

மனிதன் தன்னுடைய தகப்பனையும் தாயையும் பிரிந்து மனைவியோடு இசைந்திருக்கக் கடவன். அவர்கள் இருவரும் ஒரே மாமிசமாய் இருப்பார்கள். தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்க கடவன். ஆரம்பம் முதலே ஒருவனுக்கு ஒருத்தி என்றிருந்தது. தேவனுக்கு முன்பாக இது பரிசுத்தமாக்கப்பட்ட ஒரு உறவு. நம்முடைய தேவனே பரிசுத்த மெய் விவாகத்தை ஏற்படுத்தியவர். திருமணம் என்பது படைத்தலின் ஒரு பகுதி.

பின்பு இதனுள் பாவம் நுழைந்தது. தேவனுடைய அனைத்து மதிப்பீடு களுக்கும் மாறுபாடாக நடக்க மனிதன் துணிந்தான். காலம் செல்ல செல்ல பல்வேறுவிதமான கலாச்சாரங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு, திருமணத்தின் அடிப்படை கட்டமைப்பு மாறிவிட்டன. மனிதர்கள் தங்களின் விருப்பத்திற் கேற்ப திருமண விதிகளை மாற்றிக்கொண்டனர். அநேக மனைவிகளை வைத்துக் கொள்வது பிற கலாச்சாரங்களில் ஏற்புடையதாக இருந்தாலும், அது தேவனின் பார்வைக்கு சரியானது அல்ல.

இந்த சம்பவத்தில், தேவன் திருமணத்திற்கென்று வைத்திருந்த அளவுகோல் முறிக்கப்பட்டது. தேவனுடைய இருதயமும் உடைந்தது. மனிதன் இந்த சட்டங்களின் வழி விலகியதால் மோசமான விளைவுகளை சந்திக்கிறான். இதிலிருந்தும் அவனைத் தப்புவிக்க தேவன் முன் வருகிறார். தேவன் யாக்கோபையும் அவன் இரு மனைவிகளையும், பணிவிடைக்காரிகளையும் ஆசீர்வதிக்கிறார். இதனால் அந்த உறவுகள் சரியானது என்று தேவன் அங்கீகரித்தார் என்ற அர்த்தமில்லை. அதிலும் அவருடைய உன்னதமான அன்பு வெளிப்படுகிறது.

நம்முடைய கீழ்ப்படியாமையிலும், தேவன் நம் மீது கரிசனை உள்ளவராய் இருக்கிறார். இதுதான் தேவனின் அன்பு. நாம் மனம் திரும்பி அவரிடம் வருவோம் என்ற எதிர்பார்ப்பில் தன்னுடைய அன்பை இவ்வாறு வெளிப் படுத்துகிறார். உண்மையான இந்த அன்பை ஏற்றுக்கொண்டு அவருடைய பிள்ளைகளாய் வாழ நாம் அழைக்கப்படுகிறோம்.

தேவனே, எல்லாக் காரியங்களிலும் உமக்கு கீழ்ப்படிந்திருக்க எனக்கு உதவிசெய்யும். ஆமென்.

ஆதியாகமம் 31:1–21

உயர்ந்த நோக்கங்கள்

காலங்கள் மாறினாலும் நம்முடைய வாழ்வில் தேவன் நமக்காக வைத்திருக்கும் உயர்ந்த நோக்கங்கள் என்றுமே மாறாது.

லாபான் உனக்கு செய்கிறதையெல்லாம் நான் கண்டேன் என்று கர்த்தர் யாக்கோபிடம் கூறினார். கர்த்தருடைய கரம் யாக்கோபின் மேல் இருந்தது. தேவனுடைய மேலான நோக்கங்களை யாக்கோபு உணரவில்லை.

லாபானுடன் தங்கியிருந்த தருணம் யாக்கோபிற்கு மிகுந்த வேதனையளித்த ஒரு காலம். தன்னுடைய மாமனாகிய லாபான் தன்னை ஏமாற்றுகிறான் என்று அவன் அறிவான். பதான் அராமில், யாக்கோபுக்கு அந்தந்த நாளுக்குரிய வேலைகளில் ஈடுபட்டிருந்தான். ஆனால் அவனுடைய ஆழ்மனதில் தன்னுடைய நிரந்தரமான இடம் இதுவல்ல என்பதை உணர்ந்தான். அவனுடைய எல்லா இடுக்கமான சூழ்நிலையிலும், தேவனுடைய வழி நடத்துதலை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

நாமும் கூட நம்முடைய கிறிஸ்தவ ஆவிக்குரிய பயணத்தில் தேவன் நம் தேவைகளை சந்தித்துவிட்டு, அவை நிறைவேறிவிட்டால் போதும் என்று எண்ணுகிறோம். இதுதான் நாம் தேவனுடன் வைத்திருக்கும் உறவு என்று திருப்தி அடைகிறோம். தேவன் நம்முடைய அன்றாட பிரச்சனைகளையும், கஷ்டங்களையும் தீர்த்துவிட்டால், மகிழ்ச்சியடைகிறோம். ஆனால், என் வழிகள் உன் வழிகளல்ல என்று அவர் வாக்கு பண்ணியதை மறந்து நமக்கு அவர் வைத்துள்ள உயரிய நோக்கங்கள் என்ன என்பதை சிந்திக்க தவறி விடுகிறோம். நமக்கான வாசல்களைத் திறந்து, நம் வாழ்வில் மேலான செயல்களை செய்ய தேவன் வல்லவராயிருக்கிறார் என்ற நம்பிக்கை கொள்வோம்.

எந்த சூழ்நிலையிலும், தேவன் மீதுள்ள நம்பிக்கையையும் விசுவாசத்தையும் விடாமல் அவரை உறுதியாய பற்றிக் கொள்ள வேண்டும். அன்றாட உலகப் பிரகாரமான காரியங்களைக் குறித்து மட்டும் கவலைக் கொள்வதை விட்டு, தேவன் நம்முடைய வாழ்க்கையில் செயல்படுத்த விரும்பும் காரியங்களை யும், உயரிய நோக்கங்களையும் ஏற்றுக் கொள்வதற்கு நம்மை நாமே தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட தகுதியை அவர் ஒருவரே நமக்கு தரமுடியும்.

தேவனே, உலகப்பிரகாரமான எங்களுடைய சிந்தனைகளை அகற்றி விட்டு, எங்களுடைய ஆவிக்குரிய கண்கள் உம்மை நோக்குவதற்கு அருள்புரியும். ஆமென்.

ஆளுகை செய்யும் தேவன்

வீணானவைகளுக்காக நாம் வாதாடாமல் நம்மை வல்லமையாக ஆளுகை செய்யும் தேவனை நம்பினால், எத்தகைய சூழ்நிலையிலும் நமக்கு வெற்றி நிச்சயம்.

யாக்கோபை அவனுடைய குடும்பத்தாருடன் திரும்பி போய் சேர வேண்டும் என்று தேவன் கூறினார். ஆதலால் யாக்கோபும் அவனுடைய மந்தைகளும் லாபானின் இடத்திலிருந்து புறப்பட்டனர். லாபான் எத்தகைய கேடான காரியத்தையும் தனக்கு உண்டாக்க வல்லவனாயிருந்தான் என்று யாக்கோபு அறிந்திருந்தான். இது எப்படி ஆகுமோ என்று அவர்களுடைய மனதில் கேள்வியிருந்தது.

ஆனால் தேவன் இந்த சூழ்நிலையில் லாபானிடம் யாக்கோபிடம் எதுவும் பேச வேண்டாம் என்று எச்சரித்தார் (வச.24). இதனால் சூழ்நிலை முழுவதுமாக மாறிவிட்டது. இதனால் லாபானுக்கு பயம் ஏற்பட்டது. லாபான் யாக்கோபிடம் பேசியபொழுது, அவனுக்கு யாக்கோபிடத்திலும் தேவனிடத்திலும் இருந்த பயம் தெளிவாகப் புரியும். முதலில் லாபானால் தனக்கு ஆபத்து ஏற்படும் என்று யாக்கோபு பயந்தான். தேவன் லாபானிடத்தில் பேசிய பின்பு, லாபான் பயந்தான் (வச.29). தேவன் சூழ்நிலையை எவ்வளவு அழகாக மாறிவிட்டார். இது யாக்கோபின் செயல் அல்ல. ஜீவனுள்ள தேவனின் செயல்.

நமக்கு விரோதமாக எந்த சூழ்நிலை வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் தேவன் அந்த பாதகமான சூழ்நிலைகளையும் மாற்ற வல்லவராய் இருக்கிறார். நாம் அவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுப்போமானால், சூழ்நிலைகளை சாதகமாக மாற்ற கூடிய வல்லமை அவருக்கு மாத்திரமே உண்டு. கடினமான சூழ்நிலைகள் இலகுவாக மாறும். சோர்வூட்டக்கூடிய சமயங்கள், சாதாரணமாக மாறிவிடும். இதுதான் நம்முடைய தேவனுடைய மகத்துவமான செயல். அச்செயல் நம் கண்களுக்கு ஆச்சரியத்ததை உண்டு பண்ணும். நம்மை ஆளுகை செய்து சூழ்நிலைகளையும் சந்தர்ப்பங்களையும் மாற்றுகிறவர் அவர் ஒருவரே!

நம்மை கலவரப்படுத்தும் எந்த சூழ்நிலையாக இருப்பினும் நாம் செய்ய வேண்டியது என்னவெனில் அவரைத் துதித்து மகிமைப்படுத்திக் கொண்டே இருப்பதுதான். நம்மை ஆளுகை செய்யும் தேவனை, எந்த சூழ்நிலையிலும் துதித்து மகிமைப்படுத்த தயாராய் இருக்கிறோமா?

என்னை ஆளும் தேவனே! உம்மில் மகிழ்ந்து களிகூற எனக்கு கிருபை புரியும். ஆமென்.

போருக்குப் போகும் முன்

விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும் கூடிய நம்முடைய ஆயத்தம் வெற்றியைத் தரும்.

போருக்குப் போகும் போதும், உபவாசித்து ஜெபிக்கும் போதும், ஆசாரியர்கள் அரசருக்காக வேண்டுதல் ஏறெடுப்பது வழக்கம். இந்தச் சங்கீதம் அரசன் போருக்குப் போகும்போது ஆசாரியர்களும், மக்களும் செய்த ஜெபமாக அமைந்துள்ளது.

ஆசாரியர்கள் செய்த ஜெபம் [வச.1-4] : ஆசாரியர்களது பணி ஆலயத்துக்கு அடுத்தது. போருக்குப் போகும் முன் அரசர்கள், ஆசாரியர்கள், தீர்க்கர்களிடம் தேவசித்தத்தைக் கேட்பார்கள். அப்போது அரசனை ஆசீர்வதித்து சொல்லப்படும் வார்த்தைகள் தான் இவை. ஆபத்து நாள் என்பது போர்க் காலத்தைக் குறிக்கும். ஏனெனில் பின்வரும் வசனங்களில் கொடி, இரட்சிப்பு என்ற வார்த்தைகள் இப்பொருளை உறுதிபடுத்துகின்றன. அரசனின் பக்திக்கடுத்த காரியங்கள் யாவையும் நினைவு கூரும்படி ஜெபிக்கின்றனர். நம் திருச்சபை தலைவர்களுக்காகவும், அவர்கள் சந்திக்கும் எல்லாவித பிரச்சனைகளுக்காகவும் ஜெபிக்க வேண்டும்.

மக்கள் தந்த நிச்சயம் [வச.6] : போருக்குச் செல்லும் அரசனை குடிமக்கள் வாழ்த்தி அனுப்புகிறார்கள். அப்போது அரசனின் வெற்றியையும், கர்த்தர் அரசனின் வேண்டுதலைக் கேட்பார் என்றும் கூறி வாழ்த்துகின்றனர். விசுவாசிகள் ஊழியர்களுக்காக வேண்டும்போது எதிர்மறையான வார்த்தைகளையல்ல நிச்சயத்தைத் தரக்கூடிய வார்த்தைகளையே கூற வேண்டும். மக்களின் ஆதரவு அரசனை ஊக்குவிப்பது போல் நம் ஜெபங்களும் தலைவர்களை ஊக்குவிக்கும்.

அரசன் கொண்ட நம்பிக்கை [வச.7-9] : அரசனின் உண்மை பலம் மக்கள் தொகையிலா, படைபலத்திலா அல்லது வேறு எதிலிருக்கும்? கர்த்தரை நம்பிக்கையாய் கொள்வதில்தான் அவனது உண்மை பலம் இருக்கிறது. தாவீதின் நம்பிக்கை படைபலத்தில் அல்ல, தேவன் மேலேயே இருப்பதைக் கூறுகிறான். மேலும் தேவ உதவி தனக்கிருப்பதால் வெற்றி உறுதி என நம்பிக்கைக் கொள்கிறான். நமக்குள்ளவைகளைக் கொண்டு மேன்மை பாராட்டுவதை விட கர்த்தரை உயர்த்துவது வெற்றியைத் தரும்.

தேவனே, எப்போதும் உம்மை உயர்த்தி வெற்றி பெற கிருபை செய்யும். ஆமென்.

இயேசுவின் வல்லமை

கிறிஸ்துவின் வல்லமை நமக்குள் கிரியை செய்ய நாம் அனுமதிக்கிறோமா?

லேகியோனின் தோற்றமும், குடியிருப்பும் [வச.3-5] :- கல்லறை என்பது செத்த மனித உடல்கள் இருக்கும் இடம். துர்நாற்றம் எடுக்கும் அந்த இடத்தில் அவன் வாசம் செய்தான். அவன் அசாதாரணமான பெலனையும் தன்னைதான் காயப்படுத்தி கொள்ளுவதையும் பார்க்க முடிகிறது. நாம் ஒரு கட்டப்பட்ட வீட்டில் வாழ்ந்தாலும், துர்நாற்றம் தரக்கூடிய பாவங்களான பகை, பொறாமை, களவு, முரட்டாட்டம் நம்மிடம் காணப்பட்டால் நம்முடைய வீடுகளும் கல்லறைகளாகவே மாறிவிடும்.

இயேசுவின் வல்லமை [வச.6-13] :- அசுத்த ஆவிகள் நிறைந்த லேகியோன், இயேசுவை தூரத்திலே கண்டபோது அவருடைய வல்லமையை உணர்ந்து, இயேசுவை உன்னதமான குமாரன் என்று பணிந்து கொள்கிறான். அசுத்த ஆவிகள் சரீரத்தை ஆட்கொள்வதில்லை, மாறாக ஒரு மனிதனின் ஆவி, ஆத்துமாவை கெடுக்கக்கூடியது. 3000 முதல் 6000 வரை அடங்கிய பிசாசுகள் சேர்ந்ததுதான் லேகியோன். இயேசு அந்த அசுத்த ஆவிகளை பன்றிகளுக்குள்ளே அனுப்பினார். அந்தப் பன்றிகள் கடலிலே அமிழ்ந்து மாண்டன. எத்தகைய ஒரு வல்லமை இயேசுவுக்கு! நாமும் இயேசுவின் வல்லமையை உணருவோம் என்றால் நம் வாழ்க்கையில் காணப்படும் பாவங்களும், சாபங்களும் இந்த பன்றிகள் மாண்டு போனதைப் போல மாண்டு, நாம் புதிய சிருஷ்டிகளாய் மாறுவோம்.

லேகியோனின் விடுதலையும் சாட்சியும் [வச.14-20] :- அசுத்த ஆவியிலிருந்து விடுதலை பெற்றவனாய், லேகியோன் வஸ்திரந்தரித்து உட்கார்ந்து புத்தி தெளிந்திருந்தான். யாருக்கும் அடங்காத வாழ்க்கை வாழ்ந்தவன் இயேசுவின் பாதத்தில் அமைதியாக உட்கார்ந்திருந்தான். அது மட்டுமல்லாமல் அவனுக்கு இயேசுவோடு இருக்க வாஞ்சை (வச.18). எத்தகைய ஒரு அதிசயமான மாற்றம்! ஆனால் இயேசு அவனை, நீ போய் நடந்தவற்றை அறிவி என்று கூறியதும், உடனே அதற்கு கீழ்ப்படிந்தான். அவன் போய் இயேசு தனக்கு செய்த எல்லாவற்றையும் பிரசித்தம் பண்ணத் தொடங்கினான். நாமும் இந்த கீழ்ப்படிதல் நம்முடைய வாழ்க்கையில் காணப்படுகிறதா என்று யோசித்து, இயேசுவைக் குறித்து நற்சாட்சியாய் பகருவோம்.

தேவனே, உம்முடைய வல்லமையை நாங்கள் உணர்ந்து உமக்கு கீழ்ப்படிந்து நற்சாட்சியாய் வாழ உதவி செய்யும். ஆமென்.

மாற்கு 5:21-34

யார்? யாருக்கு?

தேவனுடைய இராஜ்யத்தை முதலாவதாக தேடுகிறேனா?

தொட்டால் சுகம் [வச.21-24] :- ஜெப ஆலயத் தலைவனின் மகள் சாவின் விளிம்பில் காணப்படுவதால், அவள் சுகம் பெற வேண்டுமென்று அப்பெண்ணின் தந்தையாகிய யவீரு இயேசுவிடம் வருகிறான். இயேசுவை கண்டவுடன் அவர் பாதத்திலே விழுந்து, அவர் வந்து தன்னுடைய பிள்ளையை தொட்டால் அவளுக்கு சுகம் கிடைக்குமென்று மன்றாடுகிறான். இக்கூற்றுக்கு பதிலுரையாக இயேசு உடனடியாக அவனுடன் செல்கிறார். எல்லா மக்களும் சாவின் விளிம்பில் இருக்கும் பெண்ணை எப்படி உயிரோடு எழுப்பப் போகிறார் என்பதை கண்கூடாக பார்க்க வேண்டுமென்று திரளான கூட்டமாக பின் செல்கின்றனர்.

தொட்டதால் சுகம் [வச.25-34]:- திரளாக செல்கின்ற மக்கள் கூட்டத்தின் மத்தியில் ஒரு பெண் வருகிறாள். ஒரு வருடம் அல்ல இரண்டு வருடம் அல்ல 12 வருடமாக சுகம் கிடைக்காமல் இருந்த அப்பெண் இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டு வருகிறாள். மருத்துவர்களால் கைவிடப்பட்டு, எல்லாவற்றையும் செலவழித்தும், ஒரு சதவிகிதம் கூட சுகம் கிடைக்காமல் இருந்த அப்பெண்ணுக்கு மிஞ்சினது அதிக வருத்தம் மட்டுதான். இனியும் தன்னால் ஒன்று செய்ய முடியாது என்று நினைத்தவள் ஒரு முடிவெடுத்து செயல்படுகிறாள். எப்படியாவது இயேசுவின் உடையை தொட்டால் போதும், தனக்கு ஆரோக்கியம் கிடைத்துவிடும் என்று நம்பினாள். நம்பியவள் தாமதிக்காமல் உடனடியாக செயல்படுத்தினாள். இயேசுவின் உடையை அவள் தொட்டவுடன் தன் சரீரத்தில் அவளுடைய வருத்தம் முற்றிலும் நீங்கினதை உணர்கிறாள். இப்போது இயேசு தன்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை உணர்ந்தவராய் என்னை தொட்டது யார்? என்று கேட்டார். அவருக்கு பின்னாக வந்து உடையை தொட்ட அவள் இப்பொழுது அவருக்கு முன்பாக வந்து அவர் மூலம் தனக்கு கிடைத்த சுகத்தை எல்லா மக்கள் முன்பாக கூறுகிறாள். திரும்பி செல்லும் போது சமாதானம் என்கிற ஆசீர்வாதத்தை பெற்றவளாய் செல்கிறாள். அவர் என்னை தொடட்டும் என்று காத்திருக்கிறேனா? அல்லது அவரை தொட்டு சமாதானத்தை பெற்றுக் கொள்ளுகிறேனா?

தேவனே, நீரே சமாதான காரணர், அற்புதங்களின் நாயகர், உமக்கே நன்றி. ஆமென்.

பயப்படாதே

பாவம் என்கிறதான மரண தருவாயில் மூழ்கிக் கொண்டிருந்த நம்மை மீட்க இயேசு உலகில் வந்தார்.

நிலைமை :- நேற்றைய பகுதியில் சுகம் கிடைத்த பெண்ணைக் குறித்து பார்த்தோம். அப்பெண்ணுடன் இயேசு தொடர்ந்து பேசி கொண்டிருக்கிறார். யவீரு நினைத்திருக்கலாம், இப்பெண் தான் சுகம் பெற்றுவிட்டாளே, ஏன் இன்னும் இவர் அவளுடன் பேசிக் கொண்டிருக்கிறார் என்றும், என்னுடைய மகள் மரண அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறாளே, இவர் கொஞ்சம் சீக்கிரம் வந்தால் நலமாயிருக்குமே என்று. தேவனுடைய வேளை வரும் வரை நாம் காத்திருக்கிறோமா?

பொறுமை :- திடீரென்று சிலர் வந்து காலதாமதம் ஆகிவிட்டது, அவரை தொந்தரவு செய்ய வேண்டாம், உன் மகள் மரித்தாள் என்று கூறுகின்றனர். உள்ளம் உடைந்து போன நிலையில் இருக்கின்ற யவீருவைப் பார்த்து இயேசு, "பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு" என்று கூறுகிறார். நாமும் கூட பல வேளைகளில் இவ்வளவு காலமாகிவிட்டதே, என் வேண்டுதல் நிறை வேறவில்லையே என்று நினைக்கின்றோம். நம்மைப் பார்த்து ஆண்டவர் காத்திருங்கள், என்னிடத்தில் பொறுமையாயிருங்கள் என்று கூறுகிறார். ஏனென்றால் யோபுவின் பொறுமையை குறித்து கேள்விப்பட்ட நாம் முடிவிலே அவர் இரட்டிப்பான நன்மையைப் பெற்றுக் கொண்டதை வேதத்தில் வாசிக்கிறோமல்லவா!

பெருமை :- தன்னுடைய மூன்று சீடர்களோடு யவீருவின் வீட்டிற்கு வந்த இயேசு அழுது புலம்பிக் கொண்டிருக்கிறவர்களை வெளியே அனுப்புகிறார். இப்பெண் மரிக்கவில்லை, தூங்குகிறாள் என்றதற்கு அவரைப் பார்த்து சிரித்தார்கள். அவர்கள் சிரித்தால் சிரிக்கட்டும், நான் என்னை அனுப்பின என் பிதாவின் வேலையை முடிக்கவே வந்தேன், வந்திருக்கிறேன். அதனால் இவைகளைப் பற்றி எனக்கு கவலை இல்லை என்று, சிறு பெண்ணை உயிருடன் எழுப்புகிறார். இயேசு பெருமையை எதிர்பார்க்காதினால் இச்செயல் ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்று கூறுகிறார். மற்றவர்கள் வியப்படையும்படி, நாம் ஒரு செயலை செய்துவிட்டால் நமக்கு பெருமை வருகின்றதா அல்லது இவை அனைத்தும் கர்த்தரின் செயல் என்று கூறுகின்றோமா?

இயேசுவே, என் நிலைமை இன்னதென்று உணர்ந்து, பொறுமையுடனும் பெருமை இல்லாமலும் வாழ அருள் தாரும். ஆமென்.

ஜுன் 16
வியாழன்

மாற்கு 6:1-6

வியப்படைந்த இயேசு

> நம்முடைய வழிகளை கர்த்தரிடம் ஒப்புவித்து அவரை சார்ந்து வாழும்போது அவருடைய சமாதானம் நிறைவாய் நமக்கு கிடைக்கும்.

வெளிநாட்டுப் பயணமோ அல்லது உள்நாட்டுப் பயணமோ எதை மேற் கொண்டாலும் தன்னுடைய சொந்த ஊரில் தன்னுடைய வீட்டில் வந்தால்தான் மகிழ்ச்சி உண்டாகும். அது போல எல்லா கிராமங்களிலும் பட்டணங்களிலும் சுற்றித் திரிந்து தான் வளர்ந்த ஊருக்கு வருகிறார் இயேசு. தன்னுடன் தனது சீடர்களையும் அழைத்து வருகிறார். ஓய்வு நாளிலே ஆலயத்திலே போதிக்கத் தொடங்குகிறார். இயேசுவின் வார்த்தையை கேட்ட அநேகர் ஆச்சரியப்பட்டனர். அந்த வியப்பு ஏன் அடைந்தனர் என்றால் இயேசு ஒரு சாதாரண தச்சன் மகன். அவருடைய தாய் மரியாள். இவருடைய சகோதரர்கள் நம்முடன் இருக்கின்றார்கள். எனவே நம்மை விட இவன் ஒன்றும் பெரியவன் இல்லை என்று அவரைக் குறித்து கூறுகிறார்கள். நாமும் கூட மற்றவர்களை பற்றி இப்படி குறை கூறுகிறவர்களாக காணப்படுகிறோமா?

அவரைக் குறித்து கூறின காரியங்களை கேட்ட பொழுது கோபப்படாமல் மிகவும் நிதானமாக ஒரு மனிதன் எல்லா இடங்களிலும் சென்று மதிப்பையும், மரியாதையும் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் அவன் சொந்த வீட்டிலோ, ஊரிலோ அவன் அப்படிப்பட்ட மரியாதையும் மதிப்பையும் பெற முடியாது. பாவிகளாகிய நம்மை இரட்சித்து பரலோக இராஜ்ஜியத்திற்கு நம்மை சேர்க்க இவ்வுலகத்தில் வந்து, சிலுவை பாடுகளை ஏற்றுக் கொண்ட அவருக்கே இந்நிலை என்றால், நாம் எம்மாத்திரம்?

அவர்களுடைய விசுவாசக் குறைவினாலும், தாம் வளர்ந்த ஊருக்கு வந்துவிட்டதாலும் ஒரு சில அற்புதங்களை மட்டுமே அங்கு செய்கிறார். இதிலிருந்து இயேசு முழுமனதோடு அங்கே அற்புதங்களை செய்யாமல் சென்று விடுகிறார் என்பதை வச.5 நமக்கு தெளிவுபடுத்துகிறது. மேலும் அவர் அவர்களுடைய விசுவாசமில்லாமையை கண்டு ஆச்சரியப்படுகிறார். விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம். இயேசுவால் அதிசயங்களை, அற்புதங்களை செய்ய முடியும் என்று நாம் விசுவாசிக்கும் போது மட்டுமே தேவனுடைய மகிமையை காணமுடியும்.

இயேசுவே, அனைத்து ஆற்றலும் உம்மில் அடக்கி வைத்து எம்மை ஆண்டு கொள்ளும்படி அர்ப்பணிக்கிறேன். ஆமென்.

மாற்கு 6:7-13

சுவிசேஷத்தின் கொள்கைகள்

இயேசு கிறிஸ்து என் வாழ்க்கையின் வழியாக மகிமைப்படுகிறாரா?

இரண்டு இரண்டு பேராக ஊழியம் செய்யும்படி அனுப்புகிறார். 70 பேரை அனுப்பும் போதும் இரண்டு இரண்டு பேராக அனுப்பு இரண்டு இரண்டு பேராக அனுப்புவதின் நோக்கம் என்னவெனில் ...னிதனின் வேலையைவிட இரு மனிதர்களின் பெலன் அதிகமாக ... இரண்டு பேர் சேர்ந்து ஒரு வேலையை செய்யும் போது அதன் ... அதிகமாய் இருக்கும். ஒருவர் மற்றொருவரை உற்சாகப்படுத்தி வேலையை செய்ய முடியும்.

...நோக்கம் :- சீடர்கள் அனைவரும் மற்றவர்களையே ...ருக்கும்படி சொல்கிறார். உணவுக்கோ மற்ற தேவைகளுக்காகவோ ...ருக்கும்படி கூறுகிறார். ஏனெனில் மற்ற தேவைகளில் அவர்கள் ... சென்றுவிட்டால் ஊழியம் பாதிக்கப்படும். போதகர்களை சபை ...வதால் ஊழியம் சிறப்பாக நடைபெறுகிறது. நாம் ஊழியம் ...விட்டாலும் ஊழியர்களை தாங்குவோம்.

...விக்குவின் நோக்கம் :- கேட்பதற்கு யாருக்கு விருப்பம் இருக்கின்ற ... அவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்க வேண்டும். தேர்வு செய்து ...செய்தியை அறிவிக்க வேண்டும். ஏனெனில் விலையேறப் பெற்ற ...டவரின் வார்த்தைகளை விருப்பம் இல்லாதவரிடத்தில் கூறுவது ...களுக்கு முன் முத்துக்களை போடுவது போல் ஆகும். பவுல் ...டைய ஊழியத்தில் விருப்பமுள்ளவர்களிடம் மறுபடியும் நற் ...தியை அறிவிக்க விரும்பினார்.

...தின் நோக்கம் :- இங்கு மனந்திரும்புதல் பாடத்தின் நோக்கமாய் ...கிறது. யோவான் ஸ்நானன் முதல் இன்று வரையும் மனந்திரும்புதல் ...ுத்தப்படுகிறது. மனந்திரும்புதல் மாத்திரமல்ல பரலோக இராஜ்ஜியமும் ...ுத்தப்படுகிறது. பவுல் சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ...வசனத்தை போதி என்று கூறுகிறார் பவுல். இன்றைய காலக்கட்டத்தில் ...செய்தி என்பது இயேசுவைப் பற்றியா அல்லது நீ ஆசீர்வாதமாய் ...ப்பாய் என்பதைப் பற்றியா? நாம் எதை கேட்கிறோம்!

> **அன்புள்ள ஆண்டவரே! உம்முடைய இராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிக்கும் கருவியாக என்னை மாற்றும் ஆமென்.**

ஏரோதின் வாழ்க்கை முறை

> கர்த்தாவே உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி, அதில் நான் பிரியப்படுகிறேன்.

முறை தவறிய ஏரோது:- யூத நியாயப்பிரமாணத்திற்கு விரோதமான ஒரு செயலை செய்கின்றான் ஏரோது. தன் உடன்பிறந்த பிலிப்புவின் மனைவி ஏரோதியாளை தனக்கு மனைவியாக்கிக் கொள்கிறான். ஒருவனுக்கு ஒருத்தி என்பது உலக வழக்கு. இயேசுவும் தன் போதனையில் ஒரு பெண்ணை இச்சையோடு பார்த்தாலே விபச்சாரம் என்று கூறியிருக்கிறார். இப்படி இருக்கையில் ஏரோது மிகவும் இழிவான ஒரு செயலை செய்து முறை தவறி நடக்கிறான். இதற்கு ஏரோதியாளும் உடன்படுகிறாள். எதில் நான் முறை தவறி நடக்கின்றேன்?

மனச்சாட்சியை கொன்ற ஏரோது:- யோவான் ஸ்நானனை கொன்று போட வகை தேடிய ஏரோதியாளுக்கு சரியான சமயம் வாய்த்தது. ஏரோது தன் பிறந்த நாளை வெகு விமரிசையாக கொண்டாடி கொண்டிருக்கும் போது நடனம் பண்ணின பெண்ணிடத்தில், எதைக் கேட்டாலும் உனக்கு தருவேன் என்று கூறுகிறான். அப்பெண் தன் தாயின் உத்தரவின் பேரில் யோவானின் தலையைக் கேட்டுப் பெற்றுக் கொள்கிறாள். யோவான் பரிசுத்தமும் நீதியும் உள்ளவன் என்பது ஏரோதுக்கு தெரியும். இருப்பினும் தன் மனச்சாட்சியை விற்றுப் போட்ட ஆகாபைப் போல ஏரோதும் விற்றுப் போடுகிறான், ஒரு பெண்ணுக்காக.

பயந்த ஏரோது :- மனச்சாட்சிக்கு விரோதமாக யோவானை கொன்றவன் இயேசுவின் வல்லமையை பார்த்தவுடன் பயந்துவிடுகிறான். ஒரு வேளை நான் கொன்ற அந்த நீதிமான் தான் திரும்பவும் வந்துவிட்டானோ என்று கலங்குகிறான். இயேசு ஒரு தீர்க்கதரிசி, எலியா என்று மற்றவர்கள் கூறினாலும், அவன் மிகவும் பயந்தவனாய் இல்லை அவன் நான் கொன்ற யோவான் தான் என்று இரண்டு முறை கூறுகின்றான். யோவான் மரித்து இயேசுவிடம் சேர்ந்துவிட்டான். இயேசுவின் மரணம் மிகப்பெரிய மாற்றத்தை இவ்வுலகிற்கு கொண்டுவந்தது. உண்மை தெய்வம் இயேசு என்பது அனைவருக்கும் தெரிய வைத்தது. மரணம் எல்லோருக்கும் ஒரு நாள் சம்பவிக்கும். என் மரணம் ஆண்டவரின் பார்வையில் எப்படி இருக்கும்?

ஆண்டவரே, நல் மனசாட்சி உடையவனாய் (ளாய்) வாழ எனக்கு அருள் தாரும். ஆமென்.

போருக்குப் பின்

பெற்ற ஆசீர்வாதங்களுக்காக நாம் யாரைப் புகழுகிறோம்? ஏன்?

இந்தச் சங்கீதம் போரில் வெற்றி பெற்ற பிறகு பாடப்பட்டது. அரசனும், மக்களும் சேர்ந்து தேவனுக்கு நன்றி செலுத்துகின்றனர்.

கர்த்தர் தந்த வெற்றி [வச.1-6] : இராஜா தேவன் மேல் கொண்டிருந்த நம்பிக்கைக்குக் கிடைத்த பலன் போரில் வெற்றி (20:5). இந்தப் போரில் தேவன் இராஜாவைப் பாதுகாத்து, வெற்றியைக் கொடுத்தார். இதற்காக தேவனைத் துதிக்கிறான் தாவீது. ஆசாரியரும், மக்களும் தனது ஊக்கத்தினால்தான் வெற்றி பெற்றேன் என்று எண்ணாமல், தனது வெற்றிக்குக் காரணமான தேவனுடைய வல்லமை, இரட்சிப்பு, பிரசன்னம் ஆகியவற்றின்மீது களிகூருகிறான். வாழ்வில் நாம் வெற்றி பெற்ற பின், அதற்குக் காரணமாக நம் திறமைகளையா, போட்டத் திட்டங்களையா, அல்லது தேவ வல்லமையையா? எதை அதிகமாக நினைவுகூருகிறோம்?

கர்த்தர் செய்யும் காரியங்கள் [வச.7-12] : பகைவர்கள் இஸ்ரவேலரை அழிக்க எண்ணியதால் அவர்கள் தேவனுக்கும் பகைவர்களானார்கள். ஆகவே தேவன் எதிரிகள் மீது வெற்றி கொண்டு (வச.8), அவர்களையும் (வச.9), அவர்கள் சந்ததியையும் அழிக்கிறார் (வச.10). 'கை' என்பது வல்லமையைக் குறிக்கும். 'வலது கரம்' என்பது அதிக வல்லமையோடு செயல்படுவதைக் குறிக்கும். பகைவர்கள் ஒளிந்து கொண்டாலும் கர்த்தர் அவர்களைக் கண்டுபிடிப்பார். அவர்களது கனி என்பது அவர்களது சந்ததியைக் குறிக்கும். பகைவர்களது திட்டங்கள் ஒன்றும் வாய்க்காமல் போகச் செய்தார் கர்த்தர்.

கர்த்தருக்கே துதி [வச.13] : பெற்ற வெற்றிக்கு ராஜா தனது படை பலத்தையும், மக்கள் தாங்கள் அரசனின் திறமையையும் எண்ணாமல், கர்த்தரே வெற்றியைக் கொடுத்தார் என்று முழு தேசமும் இணைந்து கொண்டு அவரைத் துதிக்கிறது. இந்த மகிழ்ச்சியை ஒருவரோடொருவர் சேர்ந்து கொண்டு அவரைப் பாடி மகிமைப்படுத்துவது அவசியம். பிறர் திறமைகளைப் பெற்றால், பலரால் அதைப் பொறுத்துக் கொள்ள முடிய வில்லையே. ஏன்?

கர்த்தாவே, நீர் எனக்குத் தரும் வெற்றிகளுக்காக உம்மைத் துதிக்கிறேன். ஆமென்.

முதலீடு

> செங்கடலை பிளந்து வெட்டாந்தரையில் நடக்கச் செய்த அற்பு
> நம்மோடு என்றும் உண்டு.

கிறிஸ்துவின் பயிற்சி பட்டறையைப் பற்றி இங்கே பார்க்கிறோம். இங்கு கொள்கைகளையும், தத்துவங்களையும், அவர் போதிக்கவில்லை. மனித உறவையும், அவர்களின் குணாதிசயங்களின் மாறுதலும், ஆள்தத்துவத்தின் தெளிவைப் பற்றியும் இயேசு போதிக்கிறார்.

விசுவாசிக்கு ஓய்வு தேவை. ஆனால் தூக்கமாய் மாற கூடாது. அதிக ஓய்வு சாத்தானின் ஆய்வு கூடமாக மாறும். இதன் விளைவு (வச.36). அநேக நேரங்களில் நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்படியான தாலந்து களையும், வாய்ப்புகளையும் கொண்டிருந்தாலும், மற்றவர்களை குறித்து கரிசனையற்றவர்களாகவே வாழ்ந்துவிடுவோம்.

உன்னிடத்தில் உள்ளதை அவரிடம் ஒப்படை. அப்பொழுது வாழ்வின் அர்த்தத்தையும், அதன் பரிபூரணத்தையும் காண்பாய். 7 நாட்களில் முழு உலகத்தையும் தேவன் படைக்க கூடுமேயாகில் உன் வாழ்க்கையில் தேவன் பெரிய காரியங்களை செய்யக் கூடும். உன் படிப்பு, அறிவு, தாலந்து எல்லாவற்றையும் அவரிடம் ஒப்படை. அப்போது அதன் விரிவாக்கத்தை காண்பாய்.

இயேசு அண்ணாந்து பார்க்கிறார், நன்றி செலுத்துகிறார், பிட்கிறார், கொடுக்கிறார், போஷிக்கிறார் மீதி வரும் வரை. விதை பிட்கப்படும்போது அல்லது உடைப்படும்போது பயிர் வருகிறது. வானம் திறக்கப்படும் போது மழை பெய்கிறது. மூடப்பட்ட வாழ்க்கையில், ஆசீர்வாதம் இல்லை. கிறிஸ்து உன்னை பிட்க இடம் கொடுப்பாயா? புடமிடப்பபின் நான் சுத்த பொன்னாவேன் என்றான் தாவீது. நீ சுத்த பொன்னாக மாற விருப்பமா? அல்லது அசுத்த ஜடமாய் இருக்க ஆசையா?

கிறிஸ்துவின் ஆளுகையில் விரயம் கிடையாது. உன் சிறிய வருமானம், நேரம் தாலந்தை அவரில் முதலீடு செய். வட்டி மட்டுமல்லாமல் அது குட்டியும் போடும். எவ்வாறு என்பதல்ல, எங்கே என்பது முக்கியம்.

> பிதாவே, நீர் என்னில் தங்கி ஆளுகை செய்யும்படி உம்மை வேண்டிக் கொள்கிறேன். ஆமென்.

பயணம்

வார்த்தையினால் இந்த உலகத்தை படைத்தார். அன்று கேட்ட வார்த்தையை மறுபடியும் இன்றுதான் கேட்கிறது இயற்கை. ஆனால் கீழ்படிகிறதே! நாம் தினமும் கேட்கிறோம்.

கிறிஸ்துவின் பயிற்சி பட்டறையில் மற்றும் ஓர் அற்புத பாடம். நகைக்க ஒரு காலம்: அழ ஒரு காலம் என்று பிரசங்கியார் கூறுகிறார். பெரிய வெற்றி, பெரிய கூட்டம், பெரிய ஆசீர்வாதத்துக்கு, பின் பெரிய போராட்டமும் சோதனையும் வரும். இதை அறிந்த இயேசு இரு நிகழ்வுகளுக்கும் நடுவில் ஜெபிக்க செல்கிறார் (வச.46).

நமது ஆவிக்குரிய பெலத்தையும், பெலவீனத்தையும், நாம் நினைவில் கொள்வது நல்லது. ஜெபம் இல்லா ஊழியம் அட்டூழியமாக மாறும். இங்கு நாம் கற்றுக் கொள்ளும் பாடம், அ) எப்போதும் திரள் கூட்டத்தில் இருப்பது நல்லது அல்ல, ஆ) ஒவ்வொரு கூட்டத்துக்குப் பின்னும், ஜெபம் செய்வது நல்லது, இ) தேவையின் வேளையில் உதவிக் கரம் தருவது நல்லது, ஈ) இயேசுவின் பிரசன்னத்தைப் பெற்றுக் கொள்வதும், காத்துக் கொள்வதும் நல்லது, உ) இயேசுவின் வல்லமையை நினைத்து அதை நம்புவது நல்லது.

நாம் கிறிஸ்தவை அற்புத அடையாளங்களுக்காக மட்டும் பின்பற்றுகிறோமா? அல்லது சிலுவையின் அன்பை உணர்ந்து பின்பற்றுகிறோமா? அற்புத அடையாளங்களைப் பார்த்து அதற்காக பின்பற்றும் வேஷம் போட்டு வாழ்க்கை வாழ்ந்தால், நம் இருதயம் கடினப்பட்டு, அவர் நமக்கு ஆவேசமாக காணப்படுவார். சிலுவையை பார்த்து பின்பற்றுவோமேயாகில் (வச.56) சுகமடைவோம்.

அவரை எதற்காய், எவ்விதம் தொடுகிறாய்? இருக்கும் நிலையில் அவரிடம் வா, பாவியாக உருக்குலைந்து துன்மார்க்கத்தோடு விரும்பப்படாத வாழ்க்கையோடு வா. பயப்படாதே என்று 365 நாட்களும் சொல்லும் அவரிடம் வா. வாழ்க்கை என்ற குடும்ப படகில் அவரை ஏற்றிக் கொள். அவர் இல்லாமல் படகை எடுக்காதே. எதிர் காற்றும் அமரும், தென்றல் காற்று வீசும். என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வந்து தமது அருமையான கனிகளைப் புசிப்பீராக. பயணிக்காதே கிறிஸ்துவில்லாத படகிலே. அவர் மட்டுமே நம்மை அக்கறை சேர்க்க முடியும். நினைவில் கொள். மறந்து விடாதே!

ஆண்டவரே, எப்போதும் உமக்கு கீழ்படிந்து உமது பிள்ளையாய் வாழ அருள் தாரும், ஆமென்.

முன்னோர்களின் பாரம்பரியம்

பெலவீனம் நோவிலும், என்றும் என்னை நேசிக்கும் இயேசு தாங்கித் தேற்றுவார், பாதுகாக்க வருவார்.

கிறிஸ்துவின் பயிற்சி பட்டறையில் மற்றும் ஒரு மைல்கல் பாரம்பரியம், சடங்கு, முறை சார்ந்த சமய சடங்கு குறித்த போதனை, மதத்துக்கும், மக்களுக்குமான நிறைவை சொல்லும் பகுதி. ஒரு விண்ணப்பத்தாள் எவ்வளவு அழகாய் உள்ளது என்பதை காட்டிலும், அது எவ்விதம் அச்சிடப்பட்டுள்ளது, அதை எவ்விதம் பூர்த்தி செய்கிறோம் என்பதே முக்கியம். அநேக நேரங்களில் நமது ஆவிக்குரிய வெற்றிகளும் ஆசீர்வாதங்களும் கூட தேவனுடைய கற்பனைகளையும், கட்டளைகளையும் அறிந்தோ, அறியாமலோ மீறும்படி செய்கின்றன. கைகளையும், பாத்திரங்களையும் சுத்தமாக வைப்பது முக்கியம் தான். ஆனால் அவைகள் தேவனுடைய கட்டளைகளுக்கு மேலானது அல்ல. பெலவீனமானவைகளை முக்கியப்படுத்துவது மேன்மையாகாது.

தேவனுடைய பிரமாணங்களை காட்டிலும் மனிதனுடைய உபதேசங்கள் மேன்மையானவைகளை உலகுக்கு கொடா. மார்க்க உபதேசத்தின் மாய்மாலத்தையும் அவர்கள் தேவனுடைய கட்டளைகளை எப்படி வியர்த்தமாக்கினார்கள் என்பதையும் அறிந்து வெளிப்படுத்துகிறார். அசுத்த கைகளையல்ல, அசுத்த இருதயமே, பிரச்சனை. பாரம்பரியம் சொல்லிக் கொடுக்கும், மார்க்கம் கற்றுக் கொடுக்கும், சில வேளை பாரம்பரியம் பாரமாக மாறிவிடும். அப்பொழுது முழு இருதயத்துடன் அவரை ஆராதிக்காமல், உள்ளம் துவண்டு, உதடுகள் உலரும். அங்கே இருதயத்துக்கும் உதட்டுக்கும் தொடர்பு இல்லை.

சில வேளைகளில் பாரம்பரியம் தேவனுடைய வார்த்தையை செயல்பட முடியாமல், தேவனுடைய கட்டளைகளை மூடிவிடும். பாரம்பரியம் மனிதனால் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டது. கட்டளைகளோ, பிரமாணங்களோ தேவனால், அவரது சிருஷ்டிப்பின் மகுடத்துக்கு கொடுக்கப்பட்டது. பெற்றோருக்கு கீழ்ப்படிவதை காட்டிலும், மேலானது ஒன்றும் அல்ல, அதற்கு ஒன்றும் இணையாகாது. ஆயிரம் எதிரிகளை விட ஒரு போலி நண்பனால் ஆபத்து அதிகம்.

ஆண்டவரே, நான் பாரம்பரியங்களை பின்பற்றி வாழாமல் உம்முடைய கட்டளைகளை கடைப்பிடித்து வாழ உதவி செய்யும், ஆமென்.

மாற்கு 7:14–23

எவை நம்மை தீட்டுப்படுத்தும்?

> கழுகுக்கு செட்டையில் பெலன்; காண்டா மிருகத்துக்கு கொம்புகளில் பெலன்; ஆனால் கர்த்தர் நமக்கு தருவதோ உன்னத பெலன்.

கிறிஸ்துவின் பயிற்சி பட்டறையில் அடுத்த போதனை எப்படி தீட்டுப்படாமல் வாழலாம். நோயாளி ஒருவர் டாக்டரை சந்திக்கிறார். மருத்துவத்துக்குப் பின் வியாதி எப்படி வந்தது என்பதை சொல்கிறார். நோயாளி தன் தவறை உணர்ந்து, மீண்டும் அந்த தவறை செய்ய மாட்டேன் என கூறுகிறான். சில நாட்களுக்குப் பின், ஒரு நாள் மாலையில் கடை தெரு வழியாக வரும் நோயாளி தனக்கு எதிரே வரும் டாக்டரைப் பார்த்து தனது கைகளை பின் கொண்டு சென்றான். வாயை மூடிக் கொண்டான். டாக்டர் நலம் விசாரிக்கும் போது, அவன் பேச முடியாதவனாக தலையை மட்டும் எல்லா கேள்விகளுக்கும் அசைகிறான். நிலைமையை புரிந்து கொண்ட டாக்டர் மேலும் சில கேள்விகளை கேட்க, சிறிது நேரத்தில் அந்த மனிதனின் வாய், மூக்கு, காதில் இருந்து புகை வெளியேற ஆரம்பித்தது.

நாம் நமது கெட்ட பழக்க வழக்கங்களை மறைக்க முடியாது. அது நேரம் அமைக்கப்பட்ட அணுகுண்டு போல உன் வாழ்க்கையை நாசமாக்கிவிடும். எத்தனை உடைப்பட்ட குடும்பங்கள்? எத்தனை சிறைவாசகம்? எந்த சட்ட மாற்றங்களும் கருத்தரங்குகளும் இந்த பாவ வாழ்க்கையில் இருந்து விடுதலை தராது. கிறிஸ்துவின் சிலுவை மட்டுமே, இந்த அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை தரமுடியும்.

பாவத்தின் வளர்ச்சியை பாருங்கள். சுபாவத்தில் கரு கொண்டு சிந்தையில் வளர்ந்து (பொல்லாத எண்ணம்). பின்பு துன்மார்க்க கிரியையாய் பிறக்கிறது. நமது உள்ளான மனம் மாறாவிட்டால், வாழ்க்கையில் மணம் இருக்காது. பெரிய குற்றம் வெளியே தெரியும்.

அறியாதிருக்க விரும்பியும் மறைவாய் இருக்க முடியவில்லை. நன்மை ஆனது நமது குணத்திலும் பண்பிலும் இருப்பின் அது நிறைந்து வழிந்து மற்றவர்களுக்குச் செல்லும். நன்மை நம்மிடத்தில் இல்லாதிருந்தால் நாமும் அதை எதிர்பார்க்கக்கூடாது. அக்கம் பக்கம் பார்க்காதே, ஆசையாய் எதையும் தொடாதே! என்ற பாடல் வரிகள்மூலம் இயேசுவை மட்டுமே நோக்கிப் பார்ப்போம்.

ஆண்டவரே, என் சிந்தனை, பேச்சு, செயல் எல்லாவற்றிலும் உம்மை பிரதிபலிக்க கிருபை தாரும், ஆமென்.

ஜுன் 24
வெள்ளி

மாற்கு 7:24–30

தள்ளாதே

> மற்றவர்கள் மனம் மகிழ மன்னவனே நீ மரித்தாய்; மற்றவர்கள் மனம் நோக மதியிழந்து நான் இருந்தேன். இன்றே என்னை அர்ப்பணம் செய்கிறேன். ஏற்றுக்கொள்ளும் இறைவா என்னை.

கிறிஸ்துவின் பயிற்சி பட்டறையில் மீண்டும் ஒரு நாள் - புறம்பே தள்ளாதே யாரையும். இந்த தொழுவத்தில் எல்லா ஆடுகளும் வேண்டும் என்றார் இயேசு. மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்பார் கற்றவர்.

தேவனுக்கு முன்பாக நாம் எந்த அளவு நம்மை தாழ்த்துகிறோமோ அந்த அளவு அவர் நம்மை மனிதன் முன்பாக உயர்த்துவார். வார்த்தையில் அல்ல. இதயத்தில் உடைக்கப்படுதல். சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு.... நோக்கிப் பார்ப்பேன் (ஏசா.66:2). நொறுங்குண்டதும், நறுங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர் (சங்.51:17).

இந்த அந்நியப் பெண் தன் மகளுக்காக வேண்டினாள். இயேசு பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய் குட்டிகளுக்கு போடுகிறது நல்லதல்ல என்று கூறுகிறார். ஒருவேளை இப்படிப்பட்ட பதில் நமக்கு கிடைக்குமானால் நாம் என்ன செய்வோம்? ஒருவேளை திரும்பி போய் விடுவோம் அல்லது பேசாமல் இருந்திருப்போம். ஆனால் இந்த அந்நியப் பெண்ணின் பதில் நமக்கு சவாலாய் இருக்கிறது. அவள் உரிமையோடு கேட்கவில்லை; மாறாக கெஞ்சி நிற்கிறாள். தன் நிலையை எடுத்து கூறுகிறாள். ஏரேமியா சொல்வது போல், அவர் சமீபத்துக்கு மட்டுமல்ல, தூரத்துக்கும் தேவன். வியாதியுடைய மகளைப் பார்க்காமலேயே இயேசு சொல்கிறார் உன் விசுவாசத்தின்படி உனக்கு ஆகக்கடவது. நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனும் இவ்விதமாய் சுகம் பெற்றான். விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும். பெற்றோரே உங்கள் பிள்ளைகளுக்காய் தேவனிடம் இவ்விதம் போராடுகிறீர்களா? விசுவாசியே ஆத்துமாக்களுக்காய் இவ்விதம் போராடுகிறாயா? நாம் இவ்விதமான ஆவிக்குரிய யுத்தத்துக்காய் பயிற்சி எடுப்போமாக!

நாம் பார்க்காத, கேள்விப்படாத அநேக குடும்பங்கள், வியாதியஸ்தர்கள், முதியவர்கள், விதவைகள், ஒடுக்கப்பட்டோர், கைவிடப்பட்டோர் இன்னும் பலர் பிரச்சனையுடன் நம் ஜெபத்துக்காய் ஏங்குகிறார்கள். சிருஷ்டிகரின் பாதம் பணிவோம்.

ஆண்டவரே, மற்றவர்களுக்காய் பாரத்தோடு ஜெபிக்க எனக்கு உதவிடும். ஆமென்.

மாற்கு 7: 31–37

பேசினான்; பேசாதவன்

ஆ! ஒப்பில்லாத அழகே! ஆயிரம் நாவுகள் போதாதே உம்மை புகழ்ந்து பாட, நான் எம்மாத்திரம் இறைவா?

இத்தொடரின் இறுதியில், கிறிஸ்துவின் பயிற்சிப் பட்டறையில் நாம் படிப்பது இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்படல்.

இவன் பலவித பெலவீனம் கொண்டவன். பரிதாபமான நிலை. இயேசு அவனிடம் பேசவில்லை. தன் கரங்களால் செயல் புரிகிறார். கேட்க முடியா தவன், பேச முடியாதவன் அல்ல. அவன் வார்த்தைகளின் சத்தத்தையோ, உச்சரிப்பையோ கேட்காததினால், அவன் பேச முடியாமல் உள்ளான். சில வேளைகளில் இவ்விரண்டும் சேர்ந்தும் இருக்கும்.

பயன் உள்ள வார்த்தைகளை பேச உன் நாவையும், என் நாவையும் இயேசு தொட்டு, எப்பிராத்தா என்றால் எவ்வளவு நலமாய் இருக்கும். பேச வேண்டியதை பேசாமலும் செய்ய வேண்டியதை ஏற்ற நேரத்தில் செய்யாமல் போனதாலும் திருச்சபைக்கும், சமுதாயத்துக்கும், சங்கத்துக்கும் எவ்வளவு கஷ்டம் கொடுத்திருப்போம்.

ஏசாயாவின் வாயைத் தொட்டு உதடுகளை நெருப்பு தழலால் தொட்டார். (வச.6:5). இதோ என் வார்த்தையை உன் வாயில் வைக்கிறேன் என எரேமியாவிடம் கர்த்தர் கூறுகிறார் (வச.1:9).

இன்று நமது தேவை, தத்துவங்களோ, புதிய அனுபவங்களோ, கொள்கை களோ அல்ல. தேவனுடைய தொடுதலை பெற்றவர்களே. தேவனுடைய சத்தத்தை கேட்கக் கூடிய உரிய விருத்த சேதனம் பண்ணப்பட்ட செவிகள் தேவை. பல விநோத சத்தங்களுக்கு நாம் செவி சாய்ப்பதால், தேவனின் சத்தத்தை கேட்கமுடியவில்லை. கட்டுண்ட நாவுடன் நாம் தேவனை ஆராதிக்க முடியாது. எப்பிராத்தா என்ற சத்தம் நம் காதுகளில் தொனிக்கும் வரை நாம் பிரயோஜனமற்ற வாழ்க்கையே வாழ்வோம். தேவனின் தொடுதலுக்காய் அவரிடம் வேண்டி நிற்போம். ஒருவேளை இந்நாட்களில் ஆண்டவரின் நேரடியான தொடுதலை நாம் உணராவிட்டாலும் அவர் வார்த்தை நம்மை அநுதினமும் தொட்டுக் கொண்டுதான் இருக்கிறது. அவர் வார்த்தைக்கு செவி சாய்த்து, கீழ்ப்படிவோம்.

இயேசுவே, உமது வார்த்தையினால் எனக்கு உணர்வை தாரும், ஆமென்.

வேண்டுதலும் அழைப்பும்

நான் தேவ ஊழியர்களுக்காக ஜெபிக்கின்றேனா?

முற்பிதாக்களுக்கு உதவி செய்தீர்: சரீரத்தில் படும் வேதனைகள், ஆன்மீக வேதனைகளாக மாறுகின்றன. முற்பிதாக்களும் இப்படிப்பட்ட வேதனைகளினூடே சென்றபோது அவர்கள் உம்மை நம்பினதைப் போன்று நானும் நம்புகிறேன். ஆகவே அவர்களுக்கு செய்ததைப் போல தனக்கும் உதவி செய்ய தாவீது வேண்டுகிறான்.

பகைவர்கள் செய்ததைப் பாரும்: பகைவர்களைப் பற்றி அவர்கள் பாசான் தேசத்து எருதுகள், சிங்கம், நாய் என்று தாவீது கூறுகிறான். தாவீது நோயுற்று வலிமை இழந்து மரணத்தை நெருங்கியிருக்கும் நிலைமை, பகைவர்களின் அவமதிப்பு, சீர வேதனை , தனது உடைமைகள் பங்கிடப்படுதல் போன்ற பலவகையான துன்பத்தை அனுபவித்தாக கூறுகிறான்.

பிரச்சனைகளினின்று தப்புவியும்: தேவன் தன்னை விட்டுத் தூரமாயிருந்தால் தன்னை விடுவிக்க வாய்ப்பில்லை. ஆகவே தனக்கருகிலேயே இருக்க அழைக்கிறான். மேலும் அவர் விரைந்து வர வேண்டும் என்றும் வேண்டுகிறான்.

கர்த்தரைத் துதிக்க: கர்த்தரை ஏன் துதிக்க வேண்டுமென்று கூறுகிறான். தான் பட்ட உபத்திரவங்களை அற்பமாய் எண்ணவில்லை. தன்னை அருவருக்கவில்லை. தமது முகத்தை மறைக்காமல், தன்னை கண்ணோக்கினார். எனவே அவரை துதிக்க வேண்டும்.

கர்த்தரிடம் திரும்ப: கர்த்தர் இராஜரீகம் பண்ணுவதாலும் நம்முடைய ஆத்துமாவைக் காப்பதாலும் கர்த்தரிடம் திரும்பும்படி தாவீது நம்மை அழைக்கிறான்.

கர்த்தரையே சேவிக்க : தேவனிடத்திலிருந்து நன்மைகளைப் பெற்ற சந்ததியும் இனி வரப்போகும் சந்ததிகளும் தேவனைச் சேவிக்க வேண்டும். முற்பிதாக்களுக்கு தேவன் செய்த நன்மைகளுக்காக அவரை சேவிக்க வேண்டும். நாம் தேவனை சேவிக்கிறோம் என்றாலும் எப்படிப்பட்ட உள்ளத்தோடு சேவிக்கிறோம் என்பது முக்கியம்?

கர்த்தாவே ,எப்போதும், முழுமனதோடும் உம்மை சேவிக்க உதவி செய்யும், ஆமென்.

செயல்படும் வீரர்கள்

நம்முடைய சொந்த வேலை, பிள்ளைகள், பரீட்சை, கல்யாண விசேஷம் என்றால் அதிகாலையில் எழுந்து நம்மை ஆயத்தப்படுத்தி கொள்கிறோம். ஆண்டவரை தேடுவதற்கு?

பற்றிக் கொள் (வச.1-2):- எரிகோ பட்டணத்தை வீழ்த்திய இஸ்ரவேலர் ஆயி பட்டணத்தை வெற்றி பெற இயலாமல், படுதோல்வி அடைந்து சோர்ந்து இருந்தனர். யோசுவா தலைமை பொறுப்பை ஏற்கும்போது கொடுத்த வாக்குத்தத்தங்களை கர்த்தர் இங்கே நினைவுபடுத்துகிறார். துக்கத்துடனும், பயத்துடனும் இருந்த இஸ்ரவேலருக்கு பயப்படாமலும் கலங்காமலும் இரு என்ற வாக்கு கொடுக்கப்படுகிறது. உன் கையில் ஒப்புக் கொடுத்தேன் என்று உறுதியான வார்த்தை யோசுவாவும், ஜனங்களும் தைரியமாய் முன்னேறி செல்ல உறுதுணையாயிருந்தது.

திட்டமிடு (வச.3-9):- யுத்தம் செய்வதற்கு 30,000 யுத்த வீரர்களை அனுப்பி விடுகிறான். மேலும் யோசுவாவும், ஜனங்களும் பின்னாலே பதுங்கியிருந்து தாக்கும்படி ஆயத்தமாயிருக்க திட்டமிடுகிறான். அரைகுறை ஆயத்தம், சரியான திட்டமிடுதல் இல்லையென்றால் இவ்வுலகத்தின் பாடுகளிலும், துன்பங்களிலும் நாம் சிக்கிக் கொள்வோம். எனவே முழுமையான திட்டமிடுதல் அவசியம். யுத்தத்தின் நுணுக்கங்களை நமக்கு கற்றுக் கொடுக்க நம் ஆண்டவர் இருக்கிறார்.

செயல்படுத்து (வச.10-17):- வச.10ல் அதிகாலமே எழுந்திருந்து என்று துவங்குகின்றது. நமது ஆண்டவராகிய இயேசுவும் அதிகாலையில் இருட்டோடே எழுந்திருந்து வனாந்திதமான ஓர் இடத்திற்கு சென்று ஜெபித்தார் என்று வாசிக்கிறோம். ஒரு உண்மையான கிறிஸ்தவன் ஒரு நாளைக்கு குறைந்தது ஒரு மணி நேரமாவது ஜெபிக்க தன்னை பழக்கிக் கொள்ள வேண்டும். ஒரு ஊழியக்காரன் 3 மணி நேரம் ஜெபிக்க வேண்டும். இவைகளை நாம் கடைப்பிடிக்கிறோமா? ஒரு தலைவன் திட்டமிட்டுவிட்டேன் அவர்கள் செயல்படுவார்கள் என்று இருந்துவிடாமல், தானும் அவர்களோடு இணைந்து செயல்படுகிறான். உதட்டளவில் மாத்திரம் சொல்லாமல், சுறுசுறுப்பை செயலிலும் காட்டுகிறான். இன்று பலர் திட்டமிடுகிறார்கள், ஆனால் செயல்படுவதில்லை. செயல்படுகிறவர்கள் சோம்பேறிகளாய் இருக்க மாட்டார்கள். தேவ ஒத்தாசையோடு என் காரியங்களை திட்டமிட்டு செயல்படுத்துகிறேனா?

இயேசுவே, விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்ற உமது வாக்குத்தத்திற்காக உமக்கு நன்றி. ஆமென்.

திரும்புதலும், மனந்திரும்புதலும்

> **வேண்டாத பலவீனங்கள் ஆண்டவா முன் வைக்கின்றேன், மீண்டும் தலை தூக்காமல் மாண்டு மடியட்டும்.**

படி...கீழ்ப்படி (வச.17-20):- தேவனோடு கொண்டுள்ள ஐக்கியத்தில் தோல்விகளாகிய தடைக்கற்கள் ஏற்படலாம். ஆனால் அவை நமது விசுவாச் சுடரை அணைத்துவிட முடியாது. எங்கே கீழ்ப்படியத் தவறிவிட்டோமோ அங்கே நம் தவறை உணர்ந்து யோசுவாவைப் போல கர்த்தருடைய வார்த்தைக்குக் (வச.19) கீழ்ப்படிந்தால் வெற்றிக் கனியைப் புசித்து இன்பம் பெறலாம். 1 சா.14:45; மாற்கு 16:20 ஆகிய வசனங்களைத் தியானித்து, நமது வீழ்ச்சியை இனம் கண்டு, கர்த்தருடைய கிருபையின் கரங்களில் நம்மை ஒப்படைத்தால் நமது விசுவாச் சுடர் தூண்டப்பட்டு பிரகாசமடையுமன்றோ?

துன்மார்க்கரை சிதறப் பண்ணுகிற தேவன் (வச.21-25):- யோபு 5:12; ஏசா.40:23 போன்ற வேத வசனங்களை ஜெப நிலையில் தியானித்தால், ஆயி பட்டணத்து மனுஷர் விழுந்ததைப் போல (வச.25) நம் வாழ்விலும் சத்துருவினுடைய சத்துவங்களை விழப்பண்ணி பயங்கரமான பராக்கிர மசாலியாக நம்மோடு கூட இருந்து நம்மை வழிநடத்துகிற வல்லகர மாகிய இயேசுகிறிஸ்து நம்முடனே இருக்கையில் கலக்கம் இன்றி முன்னேறுவோம்.

திரும்பினால் ஜெயம் (வச.26-29):- கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்த யோசுவா ஆயி பட்டணத்தை சுட்டெரித்தான். ஆயியின் ராஜாவை ஒரு மரத்திலே தூக்கி போட்டுவித்தான். யோசுவா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்ததைப் போன்று நாமும் கீழ்ப்படிந்து, தேவனைப் பிரியப்படுத்த நம் தோல்வியான அனுபவத்திலிருந்து தேவனுக்கு நேராகத் திரும்பினால் மாண்பு பெறுவோமே! யோசுவா தேவையில்லாத காரியங்களை தூக்கி எறிந்தது போல நம் வாழ்வில் காணப்படும் தேவையில்லாத காரியங்களை தூக்கிப்போடுவோம். கன்மலை போன்ற உறுதியான பண்புகளும் (எபி. 12:1,2); திட அஸ்திபாரமும் (மத்.7:24,25); பரலோகக் குடும்பத்தின் அங்க மாகுதலும் (மத்.12:50) நம்மிடையே சுரந்து, ஜீவனுள்ள சாட்சிகளாய் வாழ்வோமா? 1 யோ.2:17ன்படி தேவனுக்குள் நிலைநிற்க கர்த்தர் தாமே நம்மைப் பெலப்படுத்துவாராக!

பிதாவே, கன்மலையான தேவன் நீர் என்னோடு இருக்கும் போது நான் கலங்காமல் முன்னேறிச் செல்வேன். ஆமென்.

ஆசீர்வாதங்களும், சாபங்களும்

**ஜீவனுள்ள நாட்களெல்லாம் நன்மை கிருபை தொடர்ந்திடவே,
வேத வசனம் கீழ்ப்படிவோம், தேவ சாயலாய் மாறிடுவோம்.**

பலிபீடமும் ஆசீர்வாதங்களும் (வச.30-32):- பலிபீடம் என்பது ஆராதனை செய்ய என்ற கருத்துடையது. இருதயப்பூர்வமான விசுவாசத்தோடும் அன்போடும் தேவனை உறுதியாய் பற்றிப் பிடித்துக் கொள்வதே தேவனுடைய ஆசீர்வாதத்தின் நிபந்தனையாம். தேவனுடைய உடன் படிக்கை உறவைக் காத்துக் கொள்வதும், பலிபீடம், பாவ நிவாரணம், கட்டளைகள் ஆகியவற்றில் தேவன் நமக்குத் தருகின்ற வாக்குத்தத்தங்கள் மீது விசுவாசம் குறையாதிருப்பதும், நம் வாழ்வில் மிக அவசியம் என்பதை உபாகமம் 29:18,19 மூலம் அறிய முடிகிறது. வேத வசனங்கள் பலிபீடம் கட்டுவதற்கான தேவனுடைய விதிமுறைகளை நமக்கு விளக்குகின்றன. தேவன் ஒருவரையே ஆராதிப்பதும், உண்மையும் தாழ்மையுமான இருதயமுடன் தேவனுக்கு முன் நிற்பதுமாகிய பலிபீடம் நம்மில் செப்பனிடப்படுமாயின், தேவாதி தேவனுடைய அளவில்லாத அன்பு, கிருபை, காருண்யம் இவ்வுலகிற்கான நன்மையிலும் நம்மை நிரப்புகிறவர் நம் தேவன் ஒருவர் மட்டுமே!

ஆசீர்வாதமா? சாபமா? (வச.33-35):- இஸ்ரவேலின் அனைத்து ஜனங்களும் கூடி நிற்க, யோசுவா நியாயப்பிரமாண புத்தகத்தில் சொல்லிய ஆசீர்வாதமும், சாபமும் நிறைந்த அனைத்து வார்த்தைகளையும் வாசித்தான். மோசே கட்டளையிட்ட அனைத்து வார்த்தைகளையும் கூடியிருந்த அனைவரும் கேட்டார்கள். வேத வசனங்களை வாசிப்பது மட்டுமன்றி, நமது இருதயமாகிய பலகையில் பதிக்கப்பட வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம் என்பதனை உபாகமம் 6 : 7ம் வசனம் வாசிக்கும்போது அறிந்து கொள்ளலாம். கடைசி நாட்களில் வேத வசன குறைவு ஏற்படும் சூழ்நிலை வரும். வேதம் கிடைக்காத நாட்கள் வரும். இன்று நம்முடைய கைகளில் வேதம் இருக்கிறது. இன்றே பயன்படுத்திக் கொள்வோம். தேவனுக்குப் பயப்படுகிற வாழ்வும், பாவம் செய்யாதபடிக்குத் தம்மைப் பற்றும் பயம் நம்மிடையே காணப்படவும் நம்மை கர்த்தருக்கே அர்ப்பணிப்போமாக! தேவ கட்டளைகளைக் கடைப்பிடித்தால் ஆசீர்வாதமும், மீறினால் சாபமும் வரும் என்பதை நினைவில் கொள்கிறோமா?

தேவனே, கால்களுக்குத் தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிற வேத வசனங்களை உண்மையாய் தியானிக்க உதவி புரியும். ஆமென்.

யோசுவா 9:1-26

தந்திரமும், சுதந்திரமும்

அணைத்தவரே உம்மில் பிழைத்திடவே, அவனியில் உமக்காய் உழைத்திடவே, அர்ப்பணிக்கின்றேன் இன்றே என்னை ஏற்றுக் கொள்ளும் என் இயேசுவே!

வருத்தம் (வச.1-14):- எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றி திரிகிறதற்கு சாத்தான் சோர்ந்து போவதே இல்லை. இந்த சாத்தானின் தந்திரங்களை ஜெயிக்க நீர் விருப்பமுடையவரா? அப்படியாயின் தேவனோடுள்ள ஐக்கியத்தில் விரிசல் ஏற்படாதவாறு ஜாக்கிரதையுடன் எச்சரிப்பாக விழித்திருந்து ஜெபம் செய்தலும், வேத வசனங்களை இரவும் பகலும் தியானித்தலும் தொடர்ந்து காணப்படுவது நம் வாழ்வில் அவசியம். சபையின் தலையாம் இயேசுவிடம் அன்பு கூர்ந்து சத்தியத்தைக் கைக் கொள்ளும் வேளையில் பிசாசின் தந்திரங்கள் ஒன்றும் நம்மில் பலிப்பதில்லை. ஜெயம் நமது சுதந்திரம். கவனம் சிதறாமல் ஆபத்து என்பதை யோசுவாவும் இஸ்ரவேல் தலைவர்களும் ஆலோசிக்காமல் எடுத்த தீர்மானத்தினால் தேவனற்ற மக்கள் அவர்கள் நடுவில் வாழும் சூழ்நிலை ஏற்பட்டது.

ஆணை :- வாழ்வுச் சிக்கல்களில் தேவனோடு ஆலோசித்த அறிவாளியாகிய யோசுவா, கிபியோனியரின் சூழ்ச்சிக்கு ஆளாகிறதையும், அதனால் ஏற்பட்ட பின்விளைவுகளையும் காணும்போது தேவனோடு நெருங்கிய தொடர்பு கொள்ளுகின்ற பிள்ளைகள் சத்துருவின் வஞ்சக வலையில் விழக் கூடிய அபாயம் உள்ளது என்ற எச்சரிப்பின் சத்தத்தைக் கேட்க முடிகிறது. எனவே மிகுந்த ஜாக்கிரதையுடன் சாத்தானின் அரண்களை நிர்மூலமாக்குகிற தேவ பெலத்தையே சார்ந்து கொள்வோம்.

சூழ்ச்சி:- யோசுவாவை சூழ்ச்சியயினால் வஞ்சித்த கிபியோனியர் சபிக்கப் பட்டவர்கள் (வச.23) என்று இழிவுப் படுத்தப்பட்டாலும் இஸ்ரவேலரால் கொல்லாதபடாதபடிக்குத் தப்புகின்றனர். மட்டுமன்றி அவர்கள் சபைக் குள்ளும் விறகு வெட்டுகிறவர்களாயும், தண்ணீர் எடுக்கிறவர்களாயும் ஆயினர். இந்த கிபியோனியர்களையும் அரவணைக்கிறவர், நேசிக்கிறவர் என்பதை கிபியோனிலே சாலமோனுக்குத் தரிசனமாகிறதின் மூலம் அறிய முடிகிறது. எனினும் பல நேரங்களில் இஸ்ரவேலருக்குப் பிரச்சனைகளை உருவாக்கி வந்தனர்.

ஆண்டவரே, சூழ்நிலை எதுவாயினும் உம்மை மட்டுமே சார்ந்து கொள்ள உதவி செய்யும். ஆமென்.

என்ன விந்தை!

மனிதனின் முயற்சி அற்ப பிரயோஜனம். ஆண்டவர் மாத்திரமே நம் வாழ்க்கையில் வெற்றியை தரும்.

பொறுப்புள்ள தலைவன் (வச.1-6):- யோசுவாவின் மூன்றாவது முற்றுகையை பற்றி இன்றைய வேதப் பகுதி கூறுகிறது. தோற்கடித்திருக்க வேண்டிய கிபியோனியரை தங்களோடு தங்க வைத்ததால், அவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் யோசுவாவுக்கு வந்துவிட்டது. அடிமைகளாய் இருக்கிற கிபியோனியர் யோசுவாவிடம் உரிமையோடு கேட்கிறார்கள். கிபியோனியர் அனைவரும் பயந்து இருந்தார்கள். எமோரியர் எங்களுக்கு விரோதமாய் கூடினார்கள் என்று புலம்பினார்கள். சீக்கிரமாய் எங்களிடம் வந்து, எங்களை இரட்சித்து, எங்களுக்கு துணையாக நில்லும் என்று கூறுகிறார்கள்.

உண்மையுள்ள தேவன் (7-11):- உடனடியாக யோசுவா தன்னோடு கூட யுத்த மனுஷர்களை அழைத்துக் கொண்டு போகிறான். கர்த்தர் யோசுவாவினிடத்தில் நீ அவர்களுக்குப் பயப்பட வேண்டாம். நீ அவர்களை மேற்கொள்வாய் என்று கூறினார். செயல் வீரனாய் இருந்த யோசுவா இரவு முழுவதும் நடந்தே அவர்களிடம் வந்து விடுகிறான். தேவன் வானத்திலிருந்து பெரிய கற்களை விழப் பண்ணினார். அதனால் அவர்கள் செத்தார்கள். பட்டயத்தால் மடிந்தவர்களை காட்டிலும் கல் மழையால் மடிந்தவர்கள் அதிகம். ஆண்டவருடைய காரியங்களில் யோசுவாவைப் போல நாம் துணிவாய், துரிதமாய், செயல் வீரர்களாய் செயல்படுகிறோமா?

கீழ்ப்படிந்த இயற்கை (வச.12-15):- யுத்தம் இன்னும் முடியவில்லை. அது முடிய வேண்டுமாயின் பகல் நேரம் அதிகரிக்கப்பட வேண்டும். ஒரு மனிதனின் சொல்லுக்கு இயற்கை கீழ்படிகிறது. யோசுவா சூரியனையும், சந்திரனையும் நிற்க சொல்கிறார். அவைகள் நிற்கிறது. ஆண்டவர் அப்படிப்பட்ட அதிகாரத்தை நமக்கு கொடுத்திருக்கிறார் (லூக்.10:19) கர்த்தர் அனுமதித்தால் சூரியனும், சந்திரனும் ஒரே நிலையாக தரித்து, ஒரு பகல் முழுவதும் நின்றது. இச்செயல் கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணினார் என்பதை தெளிவுபடுத்தியது. ஒரு மனிதனின் சொல் கேட்டு இயற்கையை கட்டுப்படுத்தினவர், நம் கூப்பிடுதலுக்கும் நிச்சயமாய் செவிக் கொடுப்பார் அல்லவா?

தேவனே, வல்லமையான இயற்கையும் உமது அதிகாரத்தின் அடிமை என்பதை நிரூபித்து காட்டியதற்கு உமக்கு நன்றி. ஆமென்.

முன்னறிவிக்கப்பட்ட வெற்றி

அஞ்சுக அஞ்சுக தேவனுக்கே; அஞ்சற்க மற்ற எவர் க்கும்.

உண்மையும் நன்மையும் (வச.1-9):- உண்மையாய் உத்தம இருதயத்தோடு நடக்கிற தமது பிள்ளைகளை அவர்களுக்கு விரோதமாய் எழும்புகிற சத்துருக்களின் கைகளிலிருந்து விடுவித்துப் பாதுகாக்கிறவர் என்பதை வச.1-3 மூலம் அறிய முடிகிறது. போர் தொடங்கும் முன்னரே வெற்றி வாக்களிக்கப்பட்டது. தேவன், போராட்டமான சூழ்நிலைகளை நாம் எதிர் கொள்வதற்கு முன்பே வாக்குத்தத்தங்களை நமக்கு கொடுக்க விரும்புகிறார். தேவன் கூறுவதை கவனித்து கேட்கும் மனதும், விசுவாசிக்கும் உள்ளமும் நமக்கு தேவை.

தேவனோடுள்ள நேர்மையும், பிரதிபலன்களும் (வச.10-15):- வேத வசனங்கள் உண்மையும் நேர்மையுமாய் நடந்த தேவ தூதர்களையும் அவர்கள் பெற்றுக் கொண்ட பலாபலன்களையும் நமக்குத் தெரிவிக்கின்றன. மட்டுமன்றி நம்மையும் இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை நேர்மையுடன் பின்பற்ற உந்துகின்றன. இயேசு கிறிஸ்துவை உண்மையாய் பின்பற்றினால், பலன் இல்லாமற் போகாது என்பதற்கு யோசுவா 11:15,20 ஆகிய வசனங்கள் அமைகின்றன.

தேவ எச்சரிப்பும் சமாதான நாட்களும் (வச.16-23):- ஒரு தனிநபரோ, சபையோ, குடும்பமோ, தேசமோ, கானானியரைப் போன்று அக்கிரமத்தில் மூழ்கினால், அன்னாரிடமிருந்து தேவ கிருபையும், தேவ இரக்கமும் விலக்கப்பட்டு அவர்கள் மீதுள்ள நியாயத்தீர்ப்பு தவிர்க்கப்பட முடியாததாகிவிடும். தேவ எச்சரிப்பை உதாசீனப்படுத்தாமல் அவர் ஒருவரையே அண்டிக் கொள்ளுகிற எவரும் தம் வாழ்நாளில் சமாதானத்தினால் ஆளப்படுவர் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. யுத்தம் ஓய்ந்ததினால் தேசம் அமைதலாயிருந்தது. வேத வசனங்களுக்கேற்ப நம் வாழ்வில் கீழ்ப்படிதலும், முழு அர்ப்பணிப்பும் நம்மில் காணப்படுமேயானால், தேவ சமாதானம் ஈவாக, தாரளமாக, பூரணமாக, நதிபோல நம்மில் புரண்டோடும். கர்த்தர் தாமே இப்படிப்பட்ட தேவ சமாதானத்தினால் நம்மை ஆளுகை செய்வாராக! அதற்கு நம்மை முழுமையாய் ஒப்புக் கொடுப்போம்.

தேவனே, உமது எச்சரிப்பின் சத்தத்துக்கு செவி சாய்க்க, உமது நன்மைகளை பரிபூரணமாக அனுபவிக்க எனக்கு கிருபை தாரும். ஆமென்.

கர்த்தர் என் மேய்ப்பர்

பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்கு பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.

தாவீது இளம் வாலிபனாயிருந்த போது ஆடுகளை மேய்த்தது அன்றைக்கு அவனுக்கு வேதனையான அனுபவமாக இருந்தது. கர்த்தரோடு நெருங்கி வாழ இவ்வனுபவங்கள் உதவின. கர்த்தரை மேய்ப்பராக வைத்துப் பாடிய இப்பாடலில் தாவீது கூறுவதென்ன?

வளருவதற்குக் கொடுக்கிறார் [வச.1,2] : புல்லுள்ள இடங்களில் மேய்ப்பதும், அமர்ந்த தண்ணீர்களண்டைக்கு அழைத்துச் சென்று தண்ணீரை அருந்தச் செய்வதும் ஆட்டின் சரீரத் தேவையைச் சந்திப்பதற்காக. இவைகளை மேய்ப்பன் கொடுப்பது ஆடு வளர வேண்டும் என்பதற்காக. ஆகாரமில்லாமல் வளர முடியாதல்லவா! இன்று கர்த்தர் நமக்குத் தரும் ஆசீர்வாதங்கள் யாவும் நாம் வளரவும், மற்றவர்களுக்குக் கொடுக்கவும் தான். கர்த்தர் இன்று நமக்குத் தந்துள்ள ஆசீர்வாதங்கள் எவை?

முன்னேறுவதற்குப் பாதுகாக்கிறார் [வச.3,4] : கர்த்தர் ஒரு மேய்ப்பராக தனக்குச் செய்ததை தாவீது கூறுகிறான். 1) அவர் என்னைத் தேற்றுகிறார். 2) நீதியின் பாதையில் நடத்துகிறார். 3) கர்த்தர் என்னோடு கூட இருக்கிறார். ஆகவே பயப்படேன் என்று உறுதிபடக் கூறுகிறான். கர்த்தரின் பாதுகாப்பு நமக்குக் கிடைக்கிறது என்பதற்காக நாம் துன்பத்தின் நடுவிலேயே தங்கிவிடலாமா? அதைக் கடந்து முன் செல்ல வேண்டும் என்பதற்காகத் தான். நாம் முன்னே செல்ல வேண்டியவர்கள்.

நீடித்து வாழ்வதற்கு ஆயத்தம் செய்கிறார் [வச.5,6] : மேய்ப்பன் ஆடுகளுக்காக ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, தலையை எண்ணெயால் அபிஷேகம் செய்வது (கனப்படுத்துதல்) ஏன்? நீடித்த நாட்களாய் ஆடு மேய்ப்பனோடு இருப்பதற்காகவே. அப்போது தான் நம் பாத்திரம் நிரம்பி வழியும் என்ற நம்பிக்கை தாவீதுக்கு இருந்ததால் தான் "நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்" என்று கூறுகிறான். ஞானம் பந்தியை ஆயத்தப்படுத்தியதும், தகப்பன் தன் இளைய மகனுக்காக பந்தியை ஆயத்தப் படுத்தியதும் இதே நோக்கத்தில் தான்.

பிதாவே, நீர் என் மேய்ப்பராயிருந்து என்னை வழிநடத்தி, ஆசீர்வதிப்பதற்காக உம்மைத் துதிக்கிறேன். ஆமென்.

யோசுவா 14:6–15

விசுவாச வீரன் காலேப்

> நான் மண்ணில் பாடும் ஏழையான துதியை ஏற்றுக் கொள்ளுமேன்;
> நான் விண்ணில் தூ தருக்கொப்பான பிற்பாடு நன்றாய் பாடுவேன்.

முழுமையான அர்ப்பணம் [வச.6-10]:- எண்.13:30;32:11 ஆகிய வசனங்கள் உத்தம இருதயத்தோடும், விசுவாச உள்ளத்தோடும் கர்த்தரைப் பின் பற்றுகிற நற்குணமுடைய காலேப்பை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன. கானான் தேசத்தை நம்மால் சுதந்தரிக்க முடியும் என்கிற விசுவாசம் பூரண அர்ப்பணிப்பில் தொடங்குகிறது. 40 வயதாயிருக்கும்போது மோசேயின் வார்த்தையின்படியே தேசத்தை வேவுபார்க்க காதேஸ்பர்னெயாவிலிருந்து அனுப்பினபோது, காலேபுடன் வந்த சகோதரர் ஜனத்தின் இருதயத்தை கரையப்பண்ணினார்கள். ஆனால் நானோ உள்ளதை உள்ளதின்படியே கூறினேன். மேலும் நான் என் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினேன் என்று கூறுகிறான்.

அதற்கு மோசே காலேபை நோக்கி ' நீ தேவனாகிய கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினாய் என்று சாட்சி கொடுத்ததும் அல்லாமல், உன் கால் மிதித்த தேசம் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் என்றைக்கும் சொந்தமாயிருக்கும்' என்று கூறினார். காலேபை போன்று நான் உண்மையும் உத்தமமாய் உம்மை பின்பற்றினேன் ஆண்டவரே என்று என்னால் கூறமுடியுமா?

முதுமையிலும் கனி தரும் வாழ்வு [வச.11-15]:- காலேப் முதுமையில் கனி தந்து, புஷ்டியும் பசுமையுமாயிருந்தவர் என்பதை வச.10,14 தெளிவுப்படுத்து கின்றன. 40 வயதில் இருந்த அதே பெலன் இன்றும் எனக்கு இருக்கிறது என்று காலேப் கூறுகிறார். ஆண்டவரோடு சரியான உறவு வைத்திருந்தால் நாமும் இவ்வாறு கூறமுடியும். நிற்குமிடம் சரியாக இருக்கும் வரை கனி தரும் விருட்சத்துக்கு வயது இடையூறு அல்ல என்பது வெட்ட வெளிச்சமன்றோ! 88 வயதான எனக்கு மோசேயின் வார்த்தையின்படியே மலைநாட்டை தரும்படி யோசுவாவினிடத்தில் கேட்டு, பெற்றும் கொள்கிறார். அவர் உண்மையாய் வாழ்ந்ததினால் தைரியமாய் தனது உரிமையை நிலை நாட்டுகிறார். விசுவாசம் என்பது தைரியத்தைக் கூட்டி வழங்குகிற (2 பேதுரு. 1:5) ஒரு கனி என்பதை விசுவாச வீரன் காலேப் துணிவுடன் எபிரோனைச் சுதந்தரித்தலில் விளங்கிக் கொள்ள முடிகிறதன்றோ!

ஆண்டவரே, விசுவாச வீரர்களின் பட்டியலில் நானும் இடம்பெற என்னை உமக்குத் தருகிறேன் ஆண்டவரே. ஆமென்.

அனுகூலமான அடைக்கலம்

எதிர்காற்று வீச எதிர்ப்போரும் பேச, என்னைக் காக்கும் புகலிடமே உம்மைத் துதிக்கிறேன்.

அடைக்கலப் பட்டணங்கள் (வச.1-6):- தற்செயலாய் அல்லது எதிர்பாராத விதமாய் கொலை நிகழ்ந்தால் யார் கொலை செய்தாரோ அவர் கொல்லப் படக்கூடாது. மாறாக அவர் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். எப்படியெனில் மோசேயிடம் கர்த்தர் கற்பித்த பிரகாரமாக அடைக்கலப் பட்டணங்களை ஏற்படுத்த வேண்டும். கொலை செய்யப்பட்டவரை பழிவாங்கு தலுக்குத் தப்புவிக்க வேண்டும். இதற்காகவே அடைக்கலப் பட்டணங்கள் ஏற்படுத்தப்பட்டன. கொலை செய்தவன் ஏதாவது ஒரு பட்டணத்திற்கு வந்தவுடன் மூப்பர்களின் காதுகளில் தொனிக்கும்படி தன்னுடைய காரியத்தை சொல்ல வேண்டும். அதன் பின்பே அவன் பட்டணத்திற்குள் சேர்க்கப்படுவான். கொலை செய்தவன் நிரபராதி என நிரூபிக்கப்பட்டால், பிரதான ஆசாரியர் மரிக்கும் வரை அவன் கவலை யின்றித் தங்கியிருக்கலாம். பிரதான ஆசாரியரது காலத்திற்குப் பின்பு பட்டணத்திற்கே வந்து வாழலாம். இவ்வடைக்கலப் பட்டணத்தின் பாதுகாப்பு இஸ்ரவேலருக்கு மட்டுமல்ல; இஸ்ரவேலில் தங்கியிருக்கும் அந்நியருக்கும் பொருந்தும்.

புதிய அடைக்கலப் பட்டணங்கள் (வச.7-9):- நப்தலின் மலைத் தேசத்தில் பல புதிய அடைக்கலப் பட்டணங்களை ஏற்படுத்தினார்கள். இப்பட்டணங்கள் இஸ்ரவேலருக்கும், பரதேசிகளுக்கும் குறிக்கப்பட்ட பட்டணங்களாக விளங்கின. உலகின் அனைத்து ஆதாரங்களும் தடைபட்டாலும், நம் அடைக்கலமானவர் நம் ஆயுட்காலம் முழுவதுக்கும் தேவையான அனைத்தையும் வழங்கப் போதுமானவராய் இருக்கிறார். இவரில் அடைக்கலம் கொள்ள, தயக்கம் ஏனோ? இந்த அடைக்கலமானவருக்குள் நமது அடைக்கலம் இருக்கும் வரை, சாத்தானின் சத்துவங்கள் சூழ்ந்தாலும் பயம் தேவையில்லை. ஏனெனில் நமது ஜீவ வாசலாம், இயேசுவைத் தாண்டி அவைகள் நம்மை நெருங்க முடியாது (சங். 91:9,10). இனியும் அவநம்பிக்கை வேண்டாமே! அடைக்கலமானவரை விசுவாசிப்போர் பாக்கியவான்கள்! பாக்கியவதிகள்! நாமும் விசுவாசித்து அடைக்கல நாதர் இயேசுவிடம் அடைக்கலம் புகுவோம், வாரீர்!

கன்மலையாம் இயேசு கிறிஸ்தவே எனக்கு அடைக்கலமாக இருப்பதற்காக உமக்கு நன்றி. ஆமென்.

வெற்றியின் பலம் தேவ சமூகப் பழக்கமே

> **சுயபுத்தியில் சாய்ந்திடாமல், முழு உள்ளத்தோடு உம்மை நம்பிடுவோம்; வாழ்வின் பாதை காட்டிடுவார்.**

கவனமாயிருந்தால் சுகவனமே (வச.1-6):- யுத்தம் ஓய்ந்து இளைப்பாறின நேரத்தில் வயது சென்ற யோசுவா இஸ்ரவேலின் அனைத்து தலைவர், மூப்பர்களிடம் எனக்கு வயதாகிவிட்டது. இப்போதும் நீங்கள் அனைவரும் நான் சொல்வதைக் கவனமாக கேளுங்கள். கர்த்தர் உங்களுக்கு செய்த மகத்தான காரியங்களைப் பாருங்கள். இப்போது நீங்கள் நியாயப் பிரமாணத்தில் உள்ளதை விட்டு வலது இடது புறம் சாயாமல் அதனை கைக்கொண்டு நடப்பதற்கு உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள் என்று கூறினார். கர்த்தருடைய கட்டளைகளைக் கைக் கொள்ளுவதில் கவனமும், விழிப்புணர்வும் அவசியம் என்பதை இப்பகுதியில் (யோசுவா 23:1-6) இஸ்ரவேலருக்கு யோசுவா கூறுவதை அறிய முடிகிறது. அவருடைய கட்டளைகளை நாம் காத்து நடந்தால் நமக்கு பாக்கியம் கிடைக்கும். உபா. 28:1ல் கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய் செவிக் கொடுக்க வேண்டும். கேட்பது எளிது. ஆனால் கேட்பவைகளை உண்மையாய் கேட்டு, அதன்படி நடந்தால் மட்டுமே நாம் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள முடியும்.

அன்பும் அர்ப்பணிப்பும் (வச.7-11):- நம்முடைய கர்த்தர் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறார். எனவே கர்த்தருக்கு பிரியமில்லாத அந்நிய தேவர்களை வணங்கவோ, அவைகளை நினைக்கவோ கூடாது என்று கட்டளையிடுகிறார். மேலும் அந்நிய மக்களிடம் சம்பந்தம் கலக்கவும் கூடாது என்று கூறினார். கர்த்தர் உங்களுக்காக பலத்த ஜாதிகளை துரத்தியிருக்கிறார். உங்களில் ஒருவன் ஆயிரம் பேரை துரத்தக் கூடிய தைரியத்தைக் கொடுத்திருக்கிறார். எனவே, கர்த்தர் நம்மிடத்தில் அன்பு கூருவது போன்று நாமும் அவரிடத்தில் அன்புகூரவும், அவரையே தொடர்ந்து பற்றிக் கொள்ளவும், விழிப்புடன் காணப்பட வேண்டும் என்ற யோசுவாவின் உபதேசம் நம்மிலே புத்தெழுச்சியை ஏற்படுத்துகிறது அல்லவா? கர்த்தரை நேசிப்போம். இருளின் அந்தகார உலகில் நீதியின் சூரியனாம் இயேசுவின் வெளிச்சக் கதிர்களைப் பாய்ச்சுவோம், கர்த்தரின் பெலனை பெற்றிடுவோம்.

இயேசுவே, முழு உள்ளத்தோடு உம்மை ஆராதிக்கவும், துதிக்கவும் உதவி புரியும். ஆமென்.

யோசுவா 23:12–16

தீய நட்பு, கூடா நட்பு

> நேசிக்கிறேன் உம்மைத் தானே, நினைவெல்லாம் நீர் தானய்யா,
> துதி பாடி மகிழ்ந்திருப்பேன், உயிருள்ள நாளெல்லாம்.

ஆவிக்குரிய பலம் (வச.12-14):- யோசுவாவின் வார்த்தைகள் தொடர்கின்றது. யோசுவா ஜனங்களை நோக்கி நீங்கள் கர்த்தரை விட்டு பின்வாங்கி, அந்நிய மக்களிடம் சம்பந்தம் கலந்தால், கர்த்தர் இந்த ஜாதிகளை துரத்தி விடமாட்டார். மாறாக இந்த தேசத்திலிருந்து அழிந்து போகுமட்டும் அவர்கள் உங்களுக்கு கண்ணிகளாக, வலைகளாக, சவுக்குகளாக மற்றும் முள்ளுகளாக மாறுவார்கள். உங்கள் தேவன் உங்களுக்கு சொன்ன ஒரு வார்த்தையும் தவறிபோகவில்லை. எனவே அவைகளை விட்டு விலகாமலிருங்கள். தேவனற்ற மக்களிடமிருந்து பிரிந்து வாழ வேண்டும் என்ற உபதேசம் இக்காலத்துக்கும் பொருந்தும். பொல்லாதவர்களின் நடுவிலிருந்து பிரிந்து, உலக கவர்ச்சிகளைப் பயன்படுத்தி உண்மைக் கிறிஸ்தவனிலுள்ள தேவனுடைய ஜீவனை அழிக்கும்படி தொடர்ந்து முயற்சிக்கிற சாத்தானுக்கு எதிர்த்து நின்று, கர்த்தருக்குப் பிரியமாய் ஜீவித்தால், ஆவிக்குரிய பலத்தை பெறுவது நிச்சயம். என் வாழ்வில் இருக்கக்கூடிய கண்ணி, வலை, சவுக்கு மற்றும் முள் எவைகள்?

தேவ எச்சரிப்பு (வச.15-16):- இந்த வாக்குத்தத்தங்கள் அனைத்தும் நிபந்தனைக்கு உட்பட்டவை. இன்று நம்மில் அநேகர் தேவ ஆசீர்வாதங்களை வாஞ்சிக்கிறோம். ஆனால் உடன்படிக்கையின் நிபந்தனைகளைக் கைக்கொள்ள மறுக்கிறோம். யோசுவாவின் சொற்கள் மிகவும் சம நிலைப் படுத்தப்பட்ட கருத்துக்களாம். தேவ ஆசீர்வாதத்தை வாஞ்சிக்கிற ஜனங்கள் தேவனுக்கு ஏற்புடையோராக வாழாவிடில் சாபங்கள் நுழைந்துவிடும் என்பதை யோசுவா எடுத்துக் கூறுகிறார். கிறிஸ்தவ வாழ்வை பாவங்களுடனும் கலந்து வாழலாம் என்று நினைத்தால், நேர்மையற்ற வாழ்வில் கழித்தல்களும் உண்டு என்ற தேவ எச்சரிப்பை மனதில் கொண்டவர்களாய், பரிசுத்தத்தை தேவ பயத்துடனே பூரணமாக்கினால் உடன்படிக்கையின் தேவன் தமது அளவற்ற கிருபையினால் நம்மைச் சூழ்ந்து கொள்ளுவார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தேவன் எதிர்க்கின்ற காரியங்களை நாமும் எதிர்த்தால்தான் தேவனுடைய பிள்ளை என்கிற உரிமையை பெற முடியும்.

ஆண்டவரே, உமக்குப் பிரியமில்லாத, நீர் வெறுக்கிற காரியங்களை நான் செய்யாதபடி பாதுகாத்திடும். ஆமென்.

யோசுவா 24:1-13

மறவாதீர்கள்

என்னுடைய பிறந்த நாளையோ, திருமண நாளையோ மறப்பதில்லை.

துவக்கத்தை மறவாதீர்கள் [வச.1-6]:- யோசுவாவின் உரை தொடர்கிறது. இஸ்ரவேலின் கோத்திரங்களையெல்லாம் சீகேமிலே கூடி வரப் பண்ணி கர்த்தர் சொல்லுகிற காரியங்களை அவர்களுக்கு தெரிவித்தான். இஸ்ரவேலரே உங்களை பெரிய ஜாதியாக்கும்படி கர்த்தர் எகிப்திலிருந்து அழைத்து வந்து வனாந்திர வழியாக நடத்தி கானானை அடையச் செய்தார். கானானை வந்தடைந்தவுடன் துவக்க நாட்களை இஸ்ரவேலர்கள் மறக்கக் கூடாது என யோசுவா நினைவுப்படுத்துகிறார். நம் ஆண்டவரின் நினைவு எப்பொழுதுமே நம்மை ஆசீர்வதிப்பதிலேயே இருக்கின்றது. எத்தனை பாக்கியம் பெற்ற ஜனங்கள் நாம்.

வெற்றியை மறவாதீர்கள் [வச.7-9]:- இஸ்ரவேலர்கள் போர் செய்யும் திறமை பெற்றவர்கள் அல்ல. இருப்பினும் அனைத்து யுத்தங்களிலும் ஜனங்களை முறியடித்தார்கள். இதற்குக் காரணம் அவர்களுக்காக கர்த்தர் யுத்தம் செய்தார். இயற்கை அழிவுகளை வரச் செய்து இஸ்ரவேலருக்கு வெற்றியை கொடுத்தார். எப்படியெனில் எகிப்தியரின் மேல் சமுத்திரத்தை புரளச் செய்தும், எமோரியரை உங்கள் முகத்தினின்றும் அழித்துப் போட்டார். இவையனைத்தும் அவர்களது முயற்சியால் கிடைத்த வெற்றி யல்ல. எனவே பெற்ற வெற்றியை மறவாதிருக்க கூறுகிறார். நமது ஆண்டவர் நம்மை எப்போதும் வெற்றியின் பாதையில்தான் நடத்தி செல்வார்.

ஆசீர்வாதத்தை மறவாதீர்கள் [வச.10-13]:- உங்களை சபிக்கும்படி பிலேயாமை அழைத்தனர். ஆனால் அவன் உங்களை ஆசீர்வதித்து சென்றான். இன்னும் அநேக ஜாதிகள் உங்களை முறியடிக்க வந்தனர். ஆனால் அவர்கள் உங்களுக்கு முன்பாக முறியடிக்கப்பட்டார்கள். நீங்களோ ஆசீர்வாதத்தைப் பெற்றீர்கள். நீங்கள் பண்படுத்துவதுமில்லை, கட்டவுமில்லை. ஆயினும் இப்போது நீங்கள் குடியிருக்கிறீர்கள். எனவே பெற்ற ஆசீர்வாதத்தை மறவாதீர்கள். நாமும் நமது வாழ்வில் அநேக ஆசீர்வாதங்களை பெற்றிருக்கிறோம். அவைகளை நினைத்து இறைவனுக்கு நன்றி கூறுகிறோமா? அல்லது மறந்துவிட்டோமா?

ஆண்டவரே, எங்கள் வாழ்க்கையில் வரும் அனைத்து ஆசீர்வாதத்துக்கும் நீர் ஒருவரே காரணம். ஆமென்.

யோசுவா 24:14–33

கர்த்தரையே சேவிப்போம்

வருடத்திற்கு 365 நாட்களிலும் இரவும் பகலும் மாறி மாறி வருகின்றது. மாறாமல் இருப்பவர் நம் இயேசு ஒருவரே!

முற்றுப் புள்ளி [வச.14-28]:- சாண் ஏறி முழம் சறுக்குவது போல பலருடைய ஆவிக்குரிய வாழ்க்கையும் அமைகிறது. மூன்று நாள் எழுப்புதல் கூட்டங்களுக்கு சென்றுவிட்டு வந்தவுடன் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஆண்டவரோடு அதிக நேரம் செலவிடுகிறார்கள். பிறகு எவ்வளவு அனலுள்ளவர்களாய் இருந்தார்களோ அவை கொஞ்சம் கொஞ்சம் குறைந்து, முழுவதுமாக துண்டிக்கப்பட்டு விடுகிறது. ஆனால் ஆண்டவர் நம்மிடம் எதிர்ப்பார்ப்பது நிரந்தரமான உறவைதான். இஸ்ரவேலர் வனாந்திரத்திலே ஆண்டவரை துதிப்பதும் முறுமுறுத்தலும் மாறி மாறி நடந்து கொண்டே இருந்தது. மதில் மேல் நிற்கும் பூனையைப் போல் இஸ்ரவேலர் இருப்பதினால் யோசுவா நீங்கள் யாரை வணங்கப் போகிறீர்கள் என்று கேட்கிறார். அதற்கு இன்று எனக்கு வாக்கு கொடுங்கள். அப்போது இஸ்ரவேலர்கள் கர்த்தர் தங்களுக்கு செய்த அற்புதங்களை நினைவுகூர்ந்து, கர்த்தரை விட்டு விலகுகிற செயல் எங்களுக்கு தூரமாயிருப்பதாக என்று கூறினார்கள். கர்த்தர் எப்படிப்பட்டவர் என்பதை இஸ்ரவேலர் இப்போது நன்கு உணர்ந்து கொண்டார்கள். பின்பு யோசுவா ஜனங்களோடே உடன்படிக்கை பண்ணினான்.

முடிவுகள் [வச.29-33]:- யோசுவா மற்றும் எலேயாசின் முடிவுகள் இப்பகுதியில் வாசிக்கிறோம். மோசேக்குப் பிறகு கர்த்தருடைய ஊழியக்காரன் என்று அழைக்கப்பட்டான் யோசுவா. இஸ்ரவேல் ஜனங்களை மோசேக்குப் பிறகு ஜாக்கிரதையாய் வழி நடத்தி வந்தான். கர்த்தரை மாத்திரமே சேவிக்கும்படி வாக்குப் பண்ணவும் வைத்தான். பூரண வயதுள்ளவனாய் மரித்தான். ஆரோனின் குமாரனாகிய எலேயாசரும் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஆசாரியப் பணிகளை செய்தான். எலேயாசரைப் பற்றி அதிகம் அறிந்து கொள்ள முடியாவிட்டாலும், அவரது மரணம் வேதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது எத்தனை ஆச்சரியம்! ஒருவரது துவக்கத்தைக் காட்டிலும் முடிவு சிறப்பாக அமைய வேண்டும். தேவ பணியை முடிப்பதிலும், ஜனங்களுக்கு முன்மாதிரியை ஏற்படுத்தியதிலும் யோசுவா முன்மாதிரியாக இருந்தான்.

ஆண்டவரே, உம்மை முழுமனதோடு சேவித்து உம் இராஜ்ஜியத்திற்கும் சுதந்தரவாளியாக மாற கிருபை செய்யும். ஆமென்.

யார் இந்த மகிமையின் ராஜா?

> உயர்ந்தவர், தாழ்ந்தவரைக் குறித்து கரிசனை கொள்வது கடினமான காரியமா?

உலகப்பிரகாரமான பராக்கிரமுள்ள ராஜா சாதாரண மனிதனால் அணுகக் கூடாதவனாக இருப்பான். அவன் தன்னுடைய நலன், மேன்மை பராக்கிரமத்தைக் குறித்தே சிந்திப்பான் (1சாமு.8:11-17). சாதாரண மனிதன் பாடுகள், வேதனைகளுக்கு தூரமானவனாயிருப்பான். அவன் தன் நாட்டிலுள்ள உண்மையும், உத்தமுமான குடிமகனை அடையாளம் காண்பதில்லை. இங்கு சங்கீதக்காரன் குறிப்பிடும் ராஜா பெரியவரும், பராக்கிரமமுள்ளவருமான கர்த்தர். பூமியும், அதிலுள்ளவைகளும் அவருக்கு சொந்தமானது. ஜீவனும், பராக்கிரமமுள்ள கர்த்தர் உலகப் பிரகாரமான ராஜாவைப் போலல்லாமல், தன் சிந்தனை சொல் செயலில் பரிசுத்தமாயிருந்து, கர்த்தருக்கு மாத்திரம் உண்மையாயிருந்து, முழு இருதயத்தோடு தேடுகிறவர்கள் அணுகக்கூடியவர்தான் இந்த மகிமை யின் ராஜா (சங்.145:18). இந்த மேன்மையுள்ள கர்த்தர், தன்னை உண்மையாக நோக்கிக் கூப்பிடுகிறவர்களை அறிந்திருப்பது மாத்திரமல்ல யாரும் எதிர்பாராத வகையில் ஆசீர்வதிக்கவும் செய்கிறார். மேலும் இந்த பராக்கிரமமுள்ள ராஜா வெற்றியுடன் கோட்டைக்குள் நுழையும் பயங்கரமான காட்சியை விவரிக்கிறார். இந்த ராஜா வலுக்கட்டாயமாக கதவைத் திறந்து உள்ளே நுழையவில்லை. மாறாக வெற்றி வாகை சூடி திரும்பி வரும் மன்னனை வரவேற்கும் வண்ணம் கதவுகள் திறக்கப்படுகின்றன. எல்லாம் மகிமையின் ராஜாவுக்கு சொந்தமாயிருந்தாலும் எவருடைய உள்ளத்திலும் வலுக்கட்டாயமாக பிரவேசிப்பதில்லை. ஆனால் ஒரு மனிதனின் உள்ளத்தில் அவர் வர வேண்டுமாயனால் அவன் திறந்து அவரை வரவேற்கும் வரை அவர் காத்துக்கொண்டிருக்கிறார்.

இவ்வுலகின் தலைவர்கள் அணுகக் கூடாதவர்களாகவும், தங்களுக்கு சேவை கொள்ளுகிறவர்களாகவும் இருக்கும் நிலையில், இங்கே பராக்கிர மும் ஜீவனுமுள்ள தேவன் பரிசுத்தமும், தாழ்மையுமுள்ளவர்கள் அணுகக் கூடியவர்களாகவும் அவர்களை ஆசீர்வதிக்க காத்துக் கொண்டிருக்கிற வருமாயிருக்கிறார். நம்முடைய ஆன்மீக மற்றும் உலக தேவைகளை சந்திக்க இந்த பராக்கிரமுள்ள கடவுளை நாம் கொண்டிருப்பது எத்தனை பாக்கியம்!

ஆண்டவரே, தேவையின் மத்தியில் இருப்பவர்க்கு உம்மைப்போல் அணுகக் கூடியவனாயிருக்கும்படி உதவியருளும். ஆமென்.

சமூகப் பிரச்சனைக்கு சமூக தீர்வு

> பிரச்சனைக்கு ஆவிக்குரிய தீர்வைக் காண்பதுவே ஆவிக்குரிய மனிதர்களின் அடையாளம்.

பெந்தேகொஸ்தே நாளில் ஆவியானவர் ஊற்றப்பட்டு, விசுவாசிகளின் வாழ்வில் நிரந்தரமாகத் தங்கி செயல்பட ஆரம்பிக்கிறார். திருச்சபை வளரும் போது பிரச்சனைகளும் சேர்ந்தே வளருகின்றன. இன்றைய திருமறைப் பகுதியில் அதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

ஆரம்பத் தொல்லை (வச.1):- திருச்சபையிலுள்ள விதவைகளைப் பராமரிப்பது திருச்சபையின் பொறுப்பாக கூறப்பட்டது. கிரேக்க மொழி பேசும் யூத விதவைகள் சரியாக கவனிக்கப்படவில்லை என்பது குற்றச்சாட்டு. ஆதித் திருச்சபையின் தலைவர்களில் பெரும்பாலானோர் எபிரெய மொழி பேசும் யூதர்கள். இந்தக் குற்றச்சாட்டு இவர்கள் மீதே சாற்றப்படுகிறது. இப்படிப்பட்ட பிரச்சனைகளை இன்றைய திருச்சபை எப்படிக் கண்ணோக்கும்? இதை தீர்க்க வேண்டிய ஒரு பிரச்சனையாகக் கருதாமல், பதிலுக்கு கிரேக்க மொழி பேசும் யூதர்கள்மீது வீணான பழியை சுமத்த முயற்சிக்கலாம் அல்லது மொழியின் அடிப்படையில் பிரச்சனையை வளர்த்து விடலாம். வளரும் குழந்தையின் வயதிற்கேற்ப நோய்கள் ஏற்படுவது இயல்பு. அன்றைய திருச்சபையின் அணுகுமுறை நமக்கு நல்ல முன்மாதிரியை வைத்திருக்கிறது.

ஆவிக்குரியத் தீர்வு (வச.2-7):- பிரச்சனை பூகம்பமாவதற்கு முன் அதனுடைய மூலக் காரணத்தை ஆவியானவரின் துணையோடு கண்டறிந்தார்கள். அவர்கள் மாம்சப் பிரகாரமாகச் சிந்தித்து முடிவுக்கு வராமல் சீடர்களை வரவழைத்து ஆலோசித்தனர். திருவசனத்தைப் போதிக்க ஏற்படுத்தப்பட்டவர்களே விதவைகளைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டதுதான் பிரச்சனைக்குக் காரணம். தூய ஆவியானவரால் ஆளுகை செய்யப்படுகிறவர்களின் சிந்தனைகளும் செயல்களும் ஆவிக்குரியதாகவே இருக்கும். எனவே நிர்வாகப் பணியை மேற்கொள்ள தனிக் குழுவை ஏற்படுத்தினர். திருமறையைப் போதிக்கும் பணிக்கு ஏற்ற தகுதியுடையவர்களையே தேர்ந்தெடுத்தனர். ஆனால் அவர்களோ ஆவிக்குரிய பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததுதான் அதைவிட மேலானது. எவ்வளவு எளிதாகக் குழப்பமின்றி நல்ல தீர்வை எடுத்தனர்.

ஆண்டவரே, எதிர்கொள்ளும் பிரச்சனைகளை ஆவிக்குரிய பிரகாரமாகக் கண்ணோக்கவும் ஆவியானவரின் துணையோடு ஆவிக்குரிய தீர்வைக் காணவும் உதவும். ஆமென்.

முதல் இரத்தச் சாட்சியின் வெற்றி ஊழியம்

> **மெய்யான விடுதலை பெற்றவர்கள் விடுதலை நாயகனை நன்கு அறிவார்கள்.**

திருச்சபையின் விதவைகளின் நலனைக் கண்காணிக்க ஏற்படுத்தப்பட்ட குழுவில் ஒருவர்தான் ஸ்தேவான். அவரிடத்திலே காணப்பட்ட அபிரிதமான ஞானம் மற்றும் வல்லமை எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது. அவருடைய ஊழியத்தில் பொறாமை கொண்ட யூதர்களில் சிலர் அவரை எதிர்த்தனர். யூத சமயத்தைக் கட்டிக்காப்பதில் கண்ணும் கருத்துமாயிருந்த அவர்கள் ஸ்தேவானின் போதனைகளை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை.

வாதத்தால் வெல்ல முயற்சி [வச.8-10]:- பழைய உடன்படிக்கையை பற்றி பிடித்துக் கொண்டிருக்கும் யூதருக்கும், புதிய உடன்படிக்கையின் மையமான ஆண்டவராகிற இயேசு கிறிஸ்துவை பின்பற்றின கூட்டத்தாருக்கும் இடையே இருந்து வந்த பகை இப்போது தலை தூக்க ஆரம்பித்தது. ஸ்தேவான் செய்த அற்புதங்களையும் அடையாளங்களையும் கண்ட லிபர்த்தினர். அவரோடு தர்க்கம் செய்தனர். ஆனால் ஸ்தேவானுடைய ஞானம் நிறைந்த எதிர்வாதத்தினால் அவர்கள் ஈடு கொடுக்க முடியாமல் தோற்றுப் போயினர். ஸ்தேவானிடம் உண்மை இருந்தது. உண்மையைத் தோற்கடிக்க முடியுமா?

பொய் சாட்சியால் வெல்ல முயற்சி [வச.11-15]:- தோல்வியுற்ற லிபர்த்தினர், இப்போது இரகசியமாகப் போராட சில யுக்திகளைக் கையாளுகின்றனர். அவருக்கு எதிராகப் பொய்ச் சாட்சிகளையும் ஏற்படுத்துகின்றனர். ஆலயம் மற்றும் நியாயப் பிரமாணத்தைக் குறித்து ஸ்தேவான் இழிவாகப் பேசியதாக அவர்மேல் பொய்க் குற்றம் சாட்டினர். இவைகளை கண்டு ஸ்தேவான் மருளவில்லை. ஏனெனில் அவருக்குள் இருப்பவர் உலகத்தை வென்றவர். நியாயம் விசாரிக்கும் பொறுப்பில் இருந்த ஆலோசனைச் சங்கத்தார் பொய் மழையின் மத்தியில் ஸ்தேவானுடைய முகம் தேவ தூதன் போலப் பிரகாசிக்கக் கண்டார்கள். ஆனால் அவர்களோ ஸ்தேவான் கிறிஸ்துவில் மெய்யான விடுதலை பெற்றவர் என்னும் உண்மையை அறிய விரும்பவில்லை. தூய ஆவியானவரால் நிரப்பப்பட்ட ஒரு மனிதனை எந்த யுக்தியால் வெல்ல முடியும்?

> **ஆண்டவரே, நான் எப்போதும் தூய ஆவியானவரால் நிரப்பப்பட்டு இருக்கவும், எதிர்த்து வரும் எந்த யுக்திக்கும் மருளாது இருக்கவும் அருள் தாரும். ஆமென்.**

நிலம் தந்த அடையாளம்

> **உண்மை தவறுகிறவர்களையும் ஆண்டவர் பராமரித்துப் பாதுகாக்கத் தவறுவதில்லை.**

இந்த தாவீதின் சங்கீதம் ஒவ்வொரு மனிதனின் அன்றாட வாழ்வில் ஏற்படும் ஏக்கப்பெருமூச்சோடு ஆரம்பித்து, ஆண்டவரைச் சார்ந்துகொள்வதினால் ஏற்படும் துதியின் சந்தோஷத்தோடு நிறைவடைகிறது. ஒவ்வொரு நாளின் ஆவிக்குரிய போராட்டத்தை வெளிப்படுத்துகிறதாயும் இருக்கிறது.

துக்கிப்பு (வச.1,2): எதுவரைக்கும் என்ற ஒரு மிகப்பெரிய கேள்வியோடு இந்தச் சங்கீதம் ஆரம்பிக்கிறது. என் வாழ்வில் சத்துருவினால் எனக்கு நேரிடும் சம்பவங்கள், என்னைச் சுற்றிலும் எனக்கு எதிராக நடக்கும் நிகழ்வுகள் தேவன் என்னை மறந்திருக்கிறாரா அல்லது எனக்கு மறைந்திருக்கிறாரா என்று என் இருதயத்தில் நித்தமும் சஞ்சலத்தையும், ஆத்துமாவிலே குழப்பத்தையும் ஏற்படுத்துகின்றன. இது எதுவரைக்கும்? என நான்குமுறை இக்கேள்வியை எழுப்புகிறார். பாவம் நம் வாழ்வில் இத்தகைய தடுமாற்றத்தைக் கொண்டுவருகிறதா? இப்போராட்டம் எதுவரைக்கும் என்கிற சலிப்பு நமக்குள் ஏற்படுகிறதா?

ஜெபிப்பு (வச.3,4): சலிப்பிற்கான காரணத்தை ஜெபத்தோடு ஆராய்ந்து ஆண்டவரிடம் அறிக்கை செய்கிறார். பகைவர்கள் தன்னை மேற்கொள்ளாதபடிக்கும், தன்னுடைய வீழ்ச்சியிலே களிகூறாதபடிக்கும் என்னை நோக்கிப்பாரும், என் வேண்டுதலுக்குச் செவிகொடும், மரண நித்திரைக்கு என்னை விலக்கும்படி என் கண்களை தெளிவாக்கும் என்று ஆண்டவருடைய உதவிக்காக ஜெபிக்கிறார். பாவம் நம்மை மேற்கொள்ளாதபடி நாமும் அனுதினமும் ஜெபிக்கிறோமா?

துதிப்பு (வச.5,6): ண்டவரிடம் அனுதினமும் ஜெபிப்பதினால் அவரது கிருபையின்மேல் நம்பிக்கையும், அவருடைய இரட்சிப்பினால் வரும் களிகூறுதலும், அவர் செய்த நன்மையினால் ஏற்படும் துதியின் நிறைவும் தனக்கு ஏற்படுவதாக குறிப்பிடுகிறார். எனவே பாவத்தினால் சோர்ந்து போகாமல், தாவீதைப் போல் அவரைச் சார்ந்து, நம்பிக்கையுடன் வாழ்ந்து, துதியினால் நிறைந்து அவரைச் சேவிப்போம். துக்கம் துதியாக மாறும் ஆண்டவரால், அவரிடம் ஜெபிப்பதால்

ஆண்டவரே நாங்கள் பாவத்தினால் பெலனற்று போகாதபடி உம் கிருபையினால் எங்களைப் பெலப்படுத்தும், நிலைநிறுத்தும். ஆமென்.

தலைமைத்துவமும் விடுதலை வாய்ப்பும்

அழுத்தும் பாவச்சுமையானது நம்மை அடிமையாக்கி விட்டபின் உணர்வற்றவர்களாக்கி விடுகிறது.

யோசேப்பின் ஞானத்தால் எகிப்தில் குடிபுகுந்ததால் பஞ்சத்துக்குத் தப்பி னார்கள். யோசேப்பை அறியாத ஒரு அரசனால் இஸ்ரவேலர் கடும் துன்பத்துக்குள்ளாயினர். அவர்களை மீண்டும் தங்களது சொந்த நிலத்துக்கு கொண்டு வர ஆண்டவர் திட்டமிட்டார். இந்த மகத்தான திட்டத்திலும் இஸ்ரவேலர் எவ்வளவாய் ஆண்டவரை சோதித்தனர்.

மோசே இயல்பான தலைவர் [வச.17-29]:- அரண்மனையில் வளர்க்கப்பட்ட மோசேயிடம் ஒரு தலைவனுக்குத் தேவையான அத்தனை பண்புகளும் திறமைகளும் காணப்பட்டன. எகிப்தில் அவர்கள் உபத்திரவப்படுவதை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இஸ்ரவேலனோடு சண்டையிட்டுக் கொண்டிருந்த எகிப்தியனைக் கொன்று போட்டார். தான் எகிப்தியனைக் கொன்றதை அவர்கள் கண்டுப்பிடித்ததை அறிந்த மோசே அவ்விடத்தை விட்டு ஓடினார். தமது மக்கள் எகிப்தில் அனுபவிக்கும் கொடுமைகளிலிருந்து விடுவிக்க மோசே தேவனால் அனுப்பப்பட்டவர் என ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்பினார். ஆனால் அவர்களோ எகிப்தின் அடிமைத்தனத்தைப் பொருட்படுத்தாது வாழ்ந்து கொண்டிருந்தனர்.

மோசே ஆண்டவர் தேர்ந்தெடுத்த தலைவர் [வச.30-34]:- மோசேயிடம் காணப்பட்ட தலைமைத்துவப் பண்புகளை ஆண்டவர் அறிந்திருந்தார். நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னரே அவருக்குத் தமது மீட்பின் திட்டத்தைக் கூறுகிறார். தமது மக்களின் பாடுகளைக் கண்டு ஆண்டவர் அமைதியா யிருக்கவில்லை. அவர்களை மீட்பதற்கு ஏற்ற ஒரு தலைவனாக மோசேயை நியமிக்கிறார். மகத்தான அம்மீட்பின் பணிப்பொறுப்பை மிகுந்த தயக்கத்துடனேயே மோசே ஏற்றுக்கொள்கிறார். ஆனால் அதற்கு இடையூராக வந்திருக்கும் அடிமைத்தன வாழ்வை ஒரு பாரமாக எண்ணாமல் வாழ்ந்து கொண்டிருப்பதையே ஸ்தேவான் சுட்டிக் காட்டுகிறார். பாவச்சுமையின் அழுத்தத்தால் ஆண்டவருடைய பிள்ளைகள் என்னும் உரிமை வாழ்வின் மேன்மையை இழந்துவிட வாய்ப்புண்டு. எச்சரிக்கையுடன் வாழ்ந்து ஆண்டவர் அருளும் விடுதலையை ஏற்றுக் கொள்ளுகிறோமா?

ஆண்டவரே, என் பாவச்சுமைகளை நீர் ஏற்றுக் கொண்டீர் என்கிற விடுதலை உணர்வுடன் நிறைவாழ்வு வாழ உதவும். ஆமென்.

படைப்பையே பணிந்த அவலம்

உம்மைப் போல் ஆக்கும் இயேசுவே; என்னை உம்மைப் போல் ஆக்கும்.

நாம் தேவனோடு வாழ்வதற்கு நம்மில் எத்தகைய தகுதிகள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்த பார்ப்பது அவசியம். இந்த தாவீதின் சங்கீதம் அத்தகைய பகுப்பாய்வு செய்வதற்கு நமக்கு உதவுகிறது.

தேவனிடத்தில் உண்மை [வச.1-2]: முதலாவதாக தேவனோடு தங்கவும், வாசம்பண்ணவும், நாம் தேவனோடு உள்ள உறவிலே உண்மையாய் இருப்பது மிகவும் அவசியம். அதற்கு நடத்தையில் உத்தமமும் (சங்.18:21-26) செய்கையில் நீதியும், வாக்கில் சத்தியமும் நிறைந்திருக்க வேண்டும். நமது கால்கள் உத்தமத்தில் நடக்கிறதா? கரங்கள் நீதியை செய்கிறதா? உதடுகள் உண்மையை பேசுகிறதா?

தோழனிடத்தில் உண்மை [வச.3] : தேவனோடு உள்ள சீரான உறவே நம் அன்றாட வாழ்விலும் நாம் எடுக்கும் தீர்மானங்களிலும், நம் தெரிந்தெடுப்புகளிலும் பிரதிபலிக்கிறது. எனவே தேவனிடத்தில் உண்மையாய் இருப்பவன் சகமனிதனிடத்திலும் உண்மையுடையவனாக இருப்பான். எப்படியெனில் பிறரைக் குறித்து தீமையானவற்றை பேசாதவனாகவும், தீமை செய்யாதவனாகவும், பிறருக்கு ஏற்படும் நிந்தையில் களிகூறாதவனே தேவனுக்கு ஏற்புடையவன். நாம் தேவனுடைய காரியத்தில் உண்மையாய் இருப்போமென்றால், பிறருடைய காரியத்திலும் உண்மையாய் வாழ எதிர்பார்க்கப்படுகிறோம்.

தோற்றத்திலும் உண்மை (வச.4,5): நாம் தேவனுக்குப் பிரியமில்லாத செயல்களைச் செய்வோரோடு எவ்விதத்திலும் தொடர்பு அற்றவர்களாய், அத்தகைய செயல்களுக்கு அந்நியராய் வாழவும், சொல் தவறாதவர்களாகவும், அந்தரங்க வாழ்வின் பரிசுத்தத்தை அன்றாட வாழ்வில் வெளியரங்கமாய் வெளிப்படுத்தவும், எல்லாவற்றிலும், எல்லா நிலையினும் உண்மையாய் வாழ அழைக்கப்படுகிறோம். இவ்வாறு வாழ்பவனே என்றென்றும் அசைக்கப்படுவதில்லை. உள்ளொன்றும், புறமொன்றுமாய் வாழ்பவனல்ல, உண்மையாய் வாழ்பவனே உத்தமன்.

ஆண்டவரே உம்முடையதில் உண்மையாய் வாழ எனக்குக் கற்றுத்தாரும், அதினால் உம்மோடு என்றென்றுமாய் வாழ வழிசெய்யும், அசைாய வாழ்வை ஈந்தருளும். ஆமென்.

உபத்திரவத்தின் மத்தியில் இயேசுவின் ஆட்சி

கோதுமை மணியாக மண்ணில் விழுந்து சாக ஆயத்தமுள்ளவர்கள் தேவை. அப்படிப்பட்டவர்களால் திருச்சபை வளரும்.

இஸ்ரவேலரிடத்தில் உண்மையின்மை, கீழ்ப்படியாமை மற்றும் விக்கிரக வழிபாடு போன்றவைகள் மலிந்திருந்தன. இவைகளையெல்லாம் ஸ்தேவான் சொல்லச்சொல்லக் கேட்டுக் கொண்டிருந்த யூதர்களின் கோபம் அதிகரித்தது. தீர்ப்புச் சொல்ல வேண்டிய அதிகாரிகள் வாயைத் திறக்கும் முன்னரே கூடியிருந்தவர்கள் ஸ்தேவான் மீது முர்க்கத்துடன் கல்லெறிய ஆரம்பித்தனர்.

இயேசுவின் சாயல் (வச.7:54-8:1):- ஸ்தேவானின் மரணம் வீணாக வில்லை. அவரைத் துன்பப்படுத்தினவர்கள் கிறிஸ்துவை அவரிலே காண முடிந்தது. சத்தியத்தைச் சத்தியமாய் எடுத்துரைக்கும் போது அந்த சத்தியத்தைப் புறக்கணிப்பவர்கள் எரிச்சலைடைவது உறுதி. அளவு கடந்த கோபத்தோடு அவர்கள் ஸ்தேவான் மீது கல்லெறிகின்றனர். ஸ்தேவான் ஆண்டவராகிய இயேசு தம் அருகில் இருப்பதையும் தேவனுடைய மகிமையையும் கண்டார். அவர் தூய ஆவியானவரால் நிரப்பப்பட்டவராகையால் அப்படிப்பட்ட கொடூர தண்டனையை அநியாயமாய் அனுபவிக்கும்போது பொறுமையோடே சகித்தார். தம்மைத் துன்புறுத்தினவர்களை மன்னிக்கும்படி ஆண்டவரிடத்தில் வேண்டுகிறார். எத்தனை பெரிய அன்பு. மன்னிக்கும் இயல்பு தூய ஆவியானவரால் நிரப்பப் பட்டிருப்பவர்களின் வாழ்வில் மட்டுமே காணப்படும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் தாம் சிலுவையில் அறையப்பட்டபோது தம்மைத் துன்புறுத்தியவர்களை மன்னித்தாரே!

திருச்சபை வளர்ச்சி (வச.8:2-8):- ஸ்தேவானின் மரணம் திருச்சபை வளர்ச்சிக்கு ஆணிவேராய் இருந்தது. சவுல் இன்னும் துணிவுடனே கிறிஸ்தவர்களை துன்புறுத்துகிறார். அதே நேரத்தில் திருச்சபையும் வளர்ந்து பெருக ஆரம்பித்தது. திருச்சபையின் பாடுகளே திருச்சபை வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்திருக்கின்றன. பிலிப்பு என்னும் தேவ மனிதன் செய்த அற்புதங்கள் மற்றும் அடையாளங்கள் மூலமாக திரளான மக்கள் நற்செய்தியைக் கேட்கக் கூடிவந்தனர். கிறிஸ்துவின் நற்செய்தியை தவிர வேறு எதினால் மகிழ்ச்சி உண்டாகும்?

ஆண்டவரே, உமக்கு சாட்சியாக வாழவும், தேவையானால் உமக்கு சாட்சியாக மரிக்கவும் என்னைப் பெலப்படுத்தும். ஆமென்.

தேவ கிருபைக்கு தகுதி பெறு

> தகுதியற்றவர்க்கு ஒருவரும் தயவு பாராட்டுவதில்லை.

தன்னுடைய பாடுகளின் நேரத்தில் கடவுள் தமது கிருபையை அளிக்க சங்கீதக்காரன் ஜெபிக்கிறார்.

பாதுகாக்கும் கடவுள் : பகைவர் தன்னைத் தொடருவதால் சங்கீதக்காரன் மிகுந்த வியாகுலத்தோடு காணப்படுகிறார். அவர்களால் தன் உயிருக்கு ஆபத்து என அஞ்சுகிறார். ஆனாலும் தன்னை நம்புகிற தம் பிள்ளைகளை கைவிடாமல் காக்கிறவர் தேவன் என விசுவாசிக்கிறார். சாதாரண மனிதன் தன் பகைவனின் மரணத்தை விரும்புவான். ஆனால் இங்கு சங்கீதக்காரன், தான் கடவுளின் வழியில் நடக்க அவர் தம் வழியை வெளிப்படுத்தவும், பகைவரின் வலையிலிருந்து தன்னை காக்கவும் வேண்டுகிறார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் இருந்தால் பகைவரின் வலையிலிருந்து கடவுள் நம்மைக் காப்பார் எனும் நிச்சயம் நமக்கு உண்டா?

உண்மையுள்ள கடவுள் : தம்மை தேடுகிறவர்களுக்கு தம் கிருபையை அளிக்க கர்த்தர் உண்மையுள்ளவராயிருக்கிறார். பாவிகள் மனந்திரும்ப தம் உடன்படிக்கையின் அன்பை நினைவு கூர்ந்து அவர்களுக்கு தம் வழியை போதிக்கிறார். தமக்கு பயந்து தன்னைத் தாழ்த்துகிறவர்களை வழி நடத்துகிறார். கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்க உண்மையுள்ளவராக இருப்பதால், அவர் அருளும் நன்மையை வாழ்க்கை முழுவதும் பெற, கிடைக்கும் எந்த வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நீதியுள்ள கடவுள் : இந்த உண்மையுள்ள கடவுள், அவர் சித்தப்படி நடப்பவரை நடத்தும் விஷயத்திலும் பாரபட்சமற்றவராயிருக்கிறார். அவர் பாவியை ஆசீர்வதிக்க அவனிடம் மனந்திரும்புதலையும், பாவ அறிக்கையையும் எதிர்பார்க்கிறார். கடவுளின் இந்த எதிர்பார்ப்பை அறிந்த சங்கீதக்காரன், தன் இளவயதின் பாவங்களுக்காக பாவ மன்னிப்பைக் கோருகிறார். கடவுளின் ஆசீர்வாதம் பெற மனிதனின் பாவமே தடையாயிருக்கிறது (ஏசாயா 59:2). எனவே, கடவுள் தம் கிருபையை அளிக்கும்படி, தன் பாவங்களை அறிக்கை செய்து கடவுளோடு ஒப்புரவாக விரும்புகிறார். கடவுளுடைய கிருபையைப் பெற இதுவே நம் அனுபவமாகவும் இருக்க வேண்டும்.

ஆண்டவரே, உம் கிருபையைப் பெற தகுதி உள்ளவனாக(ளாக) உம்மிடம் வர அருள்தாரும். ஆமென்.

ஜெப ஜீவியம்

தங்களுடைய புகழுக்காக ஆவியானவரின் வரங்களை பயன்படுத்துவோரைக் குறித்து விழிப்புணர்வு பெற வேண்டும்.

திருச்சபை வளர்ந்து பெருக ஆரம்பித்ததைக் குறித்து நேற்று தியானித்தோம். திருச்சபை வளரும்போது வளர்ச்சியை மட்டுப்படுத்த முயலும் சவால்களும் இணைந்தே வளருகின்றன. அவைகளை எப்படி அப்போஸ்தலர்கள் சந்தித்து மேற்கொண்டனர்.

ஓர் எழுப்புதல் [வச.9-17]:- மந்திரவாதி தன் மந்திர சக்தியால் ஒரு கூட்ட மக்களைத் தன் பக்கமாகக் கவர்ந்திழுக்கிறான். அவனைக் கடவுளுக்கு இணையான சக்தியாகக் கருதி ஒரு பெருங்கூட்டம் அவனைப் பின் பற்றுகிறது. அதே கூட்டத்தில் சிலர் பிலிப்புவின் செய்தியைக் கேட்டு விசுவாசித்து திருமுழுக்குப் பெறுகிறார்கள். மந்திரவாதியாகிய சீமோனும் விசுவாசித்து திருமுழுக்குப் பெறுகிறான். பிலிப்பு செல்லுமிடமெல்லாம் உடன் செல்லுகிறான். சமாரியாவிலும் பிலிப்புவின் ஊழியங்களால் மக்கள் விசுவாசித்து திருமுழுக்குப் பெறுவதைக் கேள்விப்பட்ட அப்போஸ்தலர் அவர்களும் தூய ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளும்படி ஜெபித்தார்கள். சமாரியர்களும் தூய ஆவியானவரின் அருளைப் பெற்றுக் கொண்டனர் (யோவேல் 2:28).

ஒரு சவால் [வச.18-25]:- இதைக் கண்ட சீமோன் அப்போஸ்தலர்களைப் போன்று தானும் கை வைத்து ஜெபித்தால் ஆவியானவர் அருளப்பட வேண்டும் என ஆசைப்பட்டான். தகுதிக்கு மிஞ்சிய பேராவல். பணத்தைக் கொடுத்து அந்த வல்லமையைப் பெற்றுக் கொள்ள நினைக்கிறான். திரு முழுக்கு மற்றும் ஆவியானவரைப் பற்றி அவன் தெரிந்து கொண்டதென்ன? தனக்குப் புகழும் பொருளும் தந்த மந்திர சக்தியை முடக்கி வைத்து ஒரு விசுவாசியாக வலம் வர சீமோனால் இயலவில்லை. பிரபலங்கள் அநகர் சத்தியத்தை அறிந்தும் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கு காரணம் புகழை இழந்துவிடுவோம் என்கிற அச்சமே. சீமோனின் விருப்பத்தைக் கேட்ட பேதுரு. அவனுடைய நோக்கத்தை அறிந்து அவனைக் கடிந்து கொள்கிறார். உண்மையான மன மாற்றத்துக்கு நேராக நம்மை வழி நடத்தும் ஆண்டவராகிய இயேசுவை நோக்கி பொறுமையோடு ஓடி ஜீவ கிரீடத்தை பெற்றுக்கொள்வோம்.

ஆண்டவரே, தூய ஆவியானவரைப் பெற்றுக் கொண்டுள்ள நான் அவர் விரும்புகிறபடி ஊழியம் செய்ய என்னை அர்ப்பணிக்கிறேன். ஆமென்.

மந்திரியின் மனமாற்றம்

> **ஆவியானவரின் வழி நடத்துதலுக்கு உணர்வுள்ளவர்களாய் இருக்கும்போது உயர் பதவியில் இருப்பவர்களையும் இரட்சிப்புக்குள் வழிநடத்த முடியும்.**

இன்றைய பகுதியில் தனது பதவியின் நிமித்தமாக புகழ்பெற்ற மந்திரி ஒருவர் ஆண்டவரைப் பற்றிய நற்செய்தியின் உண்மையைத் தாழ்மையுடன் ஏற்றுக் கொள்வதைக் காண்கிறோம். ஆதித் திருச்சபையில் அப்போஸ்தலருடைய ஊழியங்களில் நற்செய்தியின் உண்மையை அறியும்படி தூய ஆவியானவர் கிரியை செய்தார்.

மதி நிறைந்த மந்திரி (வச.25-35):- எத்தியோப்பிய மந்திரியை சந்திக்கும்படி ஆவியானவர் பிலிப்புவின் உள்ளத்தில் ஏவுகிறார். திருநங்கையான அந்த மந்திரி தன்னுடைய இரதத்தில் அமர்ந்து ஏசாயா தீர்க்கரின் நூலை வாசித்துக் கொண்டிருந்தார். மெய்யான தேவனை அறியும் ஆர்வம் அவருக்குள் இருந்ததை நாம் உணர முடிகிறது. உயர் பதவியிலிருக்கும் அநேகர் உண்மையை அறிந்து கொள்ள ஆவலுள்ளவர்களாயிருந்தாலும் அதை வெளிப்படுத்த அவர்களுடைய சூழ்நிலை வாய்ப்பளிப்பதில்லை. பக்தியும், புத்தியும் நிறைந்த அவரை பிலிப்பு சந்திக்கிறார். தேவனை அறியாமலேயே எருசலேமுக்கு வந்து தொழுது கொண்டிருந்த அவர் இனிமேல் மெய்யான தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள முடியும். வாஞ்சையுள்ள அவர் உயர் அதிகாரிகளுக்காக நாம் ஜெபிக்கவும், அவர்களுக்கு சத்தியத்தைச் சொல்லவும், நேர்மையான முயற்சிகளை எடுக்கும் போது பிலிப்புவைப் போல நம்மையும் ஆவியானவர் பயன்படுத்த முடியும்.

மகிழ்வுடன் திரும்பிய மந்திரி (வச.36-40):- பிலிப்பு அந்த மந்திரிக்கு அவர் வாசித்த (ஏசா.53:7,8) பகுதியை புரியும்படி விளக்குகிறார். ஏசாயா தீர்க்கன் சுட்டிக் காட்டிய ஆண்டவர் இயேசுவையும் அவருக்கு அறிமுகப் படுத்துகிறார். மந்திரியின் உள்ளம் திறக்கப்படுகிறது. தண்ணீரைக் கண்டதும் திருமுழுக்குப் பெற்றுக் கொள்கிறார். இது தூய ஆவியானவரின் கிரியை என்பதை உறுதிப்படுத்த திருமுழுக்கு கொடுத்தவுடன் அவ்விடத்திலிருந்து பிலிப்பு மறைந்துவிடுகிறார். இந்நிகழ்வுக்குப் பின் மந்திரி மகிழ்ச்சியுடன் திரும்புகிறார். ஆவியானவரின் உதவியுடன் உயர் பதவியில் இருப்பவர்களையும் இரட்சிப்புக்குள் வழி நடத்த முடியும்.

ஆண்டவரே, தூய ஆவியானவரின் வழி நடத்துதலுக்கு என்னை அர்ப்பணித்து தேவையுள்ளவர்களுக்கு உம்மை அறிவிக்க என்னை ஆயத்தப்படுத்தும். ஆமென்.

பாடுபடுத்தினவனே பாடுபட ஆயத்தம்

ஆவியானவர் என்னிலும் கிரியை செய்ய என் முழு இருதயத்தோடும் ஆண்டவரை தேட முயற்சிக்கின்றேன்.

ஒருபக்கம் எழுப்புதல் தொடர்கிறது! மறுபக்கம் யூத மத வெறியர்கள் முட்டுக்கட்டை போட முயற்சிக்கின்றனர். அதில் முக்கியமானவன் சவுல். தமஸ்குவில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதற்காகச் சென்று கொண்டிருந்த போது ஓர் அற்புதம் நிகழ்கிறது.

பாடுபடுத்தியவருடன் பரமனின் சந்திப்பு (வச.1-9):- சத்தியத்தைத் தன் மத வைராக்கியத்தினால் எத்தனை நாட்கள் தான் கட்டிப் போட முடியும்? கிறிஸ்துவின் அடியவர்களைத் துன்பப்படுத்தினது, கிறிஸ்துவையே துன்பப் படுத்துவதற்குச் சமம் என்பதை புரிய வைக்கிறார். ஆண்டவரின் எதிர்பாராத இந்தத் தரிசனம் சவுலுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்தது. தான் நம்பி வந்த யூத சமயக் கொள்கைகளே உயர்ந்தது என்று எண்ணிக் கொண்டிருந்த அவருக்கு, ஆண்டவராகிய இயேசுவே வழி என்பதை ஆண்டவர் உணர்த்துகிறார். இச்சந்திப்பின் விளைவாக சவுல் இயேசுவே ஆண்டவர் என்பதை அறிக்கையிட்டு, அவரிடம் தன்னை முற்றிலும் அர்ப்பணிக்கிறார். அதிக அறிவும் வைராக்கியமும் உடைய ஒருவரை தூய ஆவியானவர் சந்திக்கும் விதத்தை கவனியுங்கள்.

பாடுபட பரமனின் அழைப்பு (வச.10-19அ):- மார்க்கம் தப்பி நடந்த சவுல் இப்போது சத்திய மார்க்கத்துக்கு அநேகரைச் சேர்க்கத் தன்னை அர்ப்பணிக்கிறார். அதே நேரத்தில் ஆவியானவர் மூலம் சவுலைக் குறித்துக் கேள்விப்பட்ட அனனியா முதலில் சவுலைச் சந்திக்கத் தயங்குகிறார். ஆனால் ஆண்டவர் புறஜாதியாருக்கும், ராஜாக்களுக்கும் சவுல் மூலமாகத் தான் செய்ய நினைத்த ஊழியங்களைக் குறித்தும், அதற்காக சவுல் அனுபவிக்க வேண்டிய பாடுகளைக் குறித்தும் அனனியாவுக்கு வெளிப்படுத்துகிறார். ஆவியானவரின் நடத்துதலின்படி சவுல் தமஸ்கு பட்டணத்தில் அனனியா என்னும் இயேசுவின் அடியவரைச் சந்திக்கிறார். ஆண்டவரைச் சந்தித்த போது இழந்த பார்வையை அனனியா மூலம் திரும்பப் பெறுகிறார். அனனியா மூலம் சவுல் திருமுழுக்குப் பெற்றுக் கொள்கிறார். ஊழியத்திற்கென்று தன்னை திடப்படுத்திக் கொள்கிறார். என்னே, அற்புதமான தலைகீழ் மாற்றம்!

ஆண்டவரே, ஆவியானவரின் கிரியைக்கு என்னை நான் விட்டுக் கொடுக்கவும் அவருக்காகப் பாடுபடவும் என்னை அர்ப்பணிக்க உதவும். ஆமென்.

சவுலின் ஊழியமும் சபை பெருகுதலும்

தான் வெறுத்த சத்தியத்தையே விரும்பிப் போதிக்கிற அனுபவமே உண்மையான ஞானத்தின் அறிகுறி.

சபையைத் துன்புறுத்தப் புறப்பட்டவர் இப்போது சபையைக் கட்ட புறப்படுகிறார். தான் பெற்ற கல்வியைப் பயன்படுத்தி கிறிஸ்துவே ஆண்டவர் என்பதை எல்லாத் தரத்தினருக்கும் அறிவுப் பூர்வமாக நிரூபித்துக் காட்டினார். இதனால் எதிர்ப்பையும் நட்பையும் சம்பாதித்தார்.

எதிர்ப்பும் நட்பும் (வச.19ஆ-27):- யூத சமய வைராக்கியத்துடன் சபையைத் துன்புறுத்தின போது சவுலுக்கு நண்பர்களாயிருந்தவர்கள் இப்போது எதிரிகளாகவும், எதிரிகளாக சவுலை நினைத்தவர்கள் நண்பர்களாகவும் மாறினர். இதுவே நற்செய்தியின் வல்லமையும் அடையாளமுமாகும். சவுலின் மாற்றத்தையும் ஊழியத்தையும் பொறுத்துக் கொள்ள முடியாத யூதர்களில் சிலர் அவரைக் கொல்ல வேண்டுமென்று திரிந்தனர். ஆனால் சில யூதர்கள் அவருடைய ஊழியத்தால் மனமாற்றமடைந்தனர். யூதர்களுடைய கொலை முயற்சியைக் கேள்விப்பட்ட சீடர்களில் சிலர் அவரைப் பாதுகாப்பான இடத்தில் வைத்தனர். அவருடைய மாற்றத்தை பர்னபா போன்ற சிலரே புரிந்து கொண்டு அவருக்கு பாதுகாப்பளித்தனர். சவுலைப் போன்றவர்களுக்கு ஐக்கியம் கொடுக்கவும், அப்படிப்பட்டவர்களை ஏற்றுக் கொள்ளவும் இன்றைய திருச்சபை ஆயத்தமா?

பிரசங்கமும் பக்தி விருத்தியும் :- பர்பனாவின் ஒத்தாசையால் சவுல் பல இடங்களிலும் தைரியமாக ஊழியம் செய்தார். கிரேக்கர் மத்தியிலும் யூதர்கள் மத்தியிலும் கிறிஸ்துவைக் குறித்து மிகுந்த தைரியமாகப் பிரசங்கித்தார். அவருடய ஊழியத்தின் விளைவாக திருச்சபைகளில் சமாதானம் உண்டானது. சபையார் கர்த்தருக்குப் பயப்படும் பயத்திலும் பக்தி விருத்தியிலும் பெருகினர். கல்வி ஞானத்தில் தலை சிறந்து விளங்கும் ஒரு மனிதன் தன்னை ஆண்டவருக்கு அர்ப்பணிக்கும்போது சபைகளில் வியக்கத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த முடியும். பவுலைப் போன்ற அறிஞர்கள் அநேகர் இன்றும் திருச்சபைக்கு வெளியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய அறிவை ஆக்கப்பூர்வமான விதத்தில் பயன்படுத்த வேண்டும். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

ஆண்டவரே, அனைவருக்கும் உம்முடைய அன்பைச் சொல்ல எனக்குத் தேவையான ஞானத்தைத் தாரும். ஆமென்.

பேதுருவின் அற்புத ஊழியம்

அற்புதங்கள் மேலானவையே, ஆனால் ஆத்தும இரட்சிப்பு அதை விட உன்னதமானது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் என்னும் இந்நூலை, தூய ஆவியானவரின் நடபடிகள் என்றும் சில தேவ மனிதர்கள் குறிப்பிடுகின்றனர். இன்றைய திருமறை பகுதியில் மூத்த அப்போஸ்தலராகிய தூய பேதுரு மூலமாக தூய ஆவியானவர் செய்த மகத்துவமான செயல்களைக் காண்கிறோம். அதே ஆவியானவர் இன்றைக்கும் செயல்படுகிறார்.

விளம்பரமில்லாத தெய்வீக சுகம் [வச.32-35]:- அப்போஸ்தலனாகிய பேதுரு, ஒவ்வொரு சபையாக சந்தித்து உற்சாகப்படுத்திவருகிறார். லித்தாவில் ஐனேயா என்னும் திமிர்வாத நோயினால் பாதிக்கப்பட்டிருந்த மனிதனைக் குணப்படுத்துகிறார். இந்த அற்புதத்தைக் கண்டதும் லித்தாவிலும், சரோனிலும் உள்ள அநேகர் கர்த்தரிடத்தில் திரும்பினார்கள். இதுவே ஆவியானவரின் மகத்துவமுள்ள செயல்பாடு. ஆனால் இந்நூலின் ஆசிரியர் லூக்கா அற்புதத்தை மிகைப்படுத்தவில்லை. பேதுரு மூலமாக கர்த்தர் பக்கமாகத் திருப்பட்டவர்களைக் குறித்தே எழுதுகிறர். பேதுருவும் தெய்வீக சுகம் நிகழ்ந்ததை விளம்பரப்படுத்தவில்லை.

விளம்பரமில்லாத அற்புதம் [வச.36-43] :- சாதாரண சரீரக் குறைபாடுகளை ஜெபத்தின் மூலமாகக் குணமாக்குவதைக் கேள்விப்பட்டாலே நாம் மிகுந்த ஆச்சரியப்படுகிறோம். இங்கு இறந்து போன தபித்தாளை பேதுரு உயிரோடு எழுப்பியிருக்கிறார். பேதுருவுக்கே எவ்வளவு பெருமையாயிருந்திருக்கும். ஆனால் அவர் அந்த அற்புதத்தை தன்னுடைய வாழ்நாள் சாதனையாக நினைக்கவில்லை. இதைப் பற்றி வேறு எங்கும் கூறவும் இல்லை. அப்படி அவர் நினைத்திருந்தால் வச.42ல், அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள் என்று கூறப்பட்டபடி நடந்திருக்காது. யோப்பா பட்டணத்திலுள்ள மக்கள் விளம்பரப்படுத்தியிருக்கக் கூடும் (வச.42). ஆனால் கேள்விப்பட்ட மக்கள் கர்த்தரை விசுவாசித்தார்கள். அற்புதங்களுக்காகப் பேதுருவைத் தேடினதாக திருமறை கூறவில்லை. அற்புதங்களுக்கு மேன்மையான இடத்தைக் கொடுக்கிற ஊழியம், மக்களை கர்த்தரண்டை வழி நடத்தும் பணிக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஏன்?

ஆண்டவரே, இரட்சிப்பின் பணியில் தீவிரப்பட தேவையான பெலனையும் என் ஊழியத்துக்குத் தேவையான ஆவிக்குரிய வரங்களையும் எனக்குத் தாரும். ஆமென்.

தரிசனமும் கரிசனையும்

வேற்றுமையை நம்மிலிருந்து களைந்து ஒற்றுமைக்கு பாடுபடுவோம்.

தூய ஆவியானவர் செயல்படாதபடி சில முட்டுக் கட்டைகள் அப்போஸ்தல ருடைய நாட்களிலும் இருந்தன. திருச்சபைக்கு வெளியில் இருந்த பிரச்சனை களை அவர்கள் எளிதில் மேற்கொண்டனர். ஆனால் சபைக்குள்ளும் குறிப்பாக அப்போஸ்தலருக்குள்ளே சில தடைகள் இருந்ததை ஆவியானவர் சுட்டிக் காட்டினார். அவற்றை நீக்க ஆவியானவர் உதவுகிறதை இன்றைய தியானத்தில் காண்போம்.

தரிசனம் பெற்ற கொர்நேலியு (வச.1-8):- அப்போஸ்தலனாகிய பேதுருவின் ஊழியங்களால் திரளான மக்கள் இரட்சிப்பின் அனுபவத்துக்குள்ளாக நடத்தப்பட்டனர். ஆனால் யூதரல்லாதவர்கள் மத்தியில் ஆண்டவருடைய பணியைச் செய்ய யாரும் முன் வரவில்லை. யூதரல்லாதவரிலும் கொர்நேலி யுவைப் போன்று தேவ பக்தி நிறைந்தவர்களும், ஆண்டவருக்குப் பயந்தவர்களும் வாழ்ந்தனர். ஆண்டவர் கொர்நேலிவுக்குத் தரிசனமாகி அவருடைய பக்தியையும் நற்செயல்களையும் அங்கீகரிக்கிறார். பேதுருவைச் சந்திப்பதற்காக கொர்நேலியுவை யோப்பா பட்டணத்துக்குப் ஆட்களை அனுப்பும்படி ஏவுகிறார். கீழ்ப்படிந்த கொர்நேலியு தன் பணியாட் களில் பக்தியுள்ள சிலரை யோப்பா பட்டணத்திற்கு அனுப்புகிறார். உண்மையுள்ளவர்களிடத்திலேயே ஆண்டவர் மகத்தான பணிகளை ஒப்புவிக்கிறார்.

தரிசனம் பெற்ற பேதுரு (வச.9-23):- பெரிய பணியை ஆண்டவர் கொர்நேலியு மூலமாகச் செயல்படுத்தப் போகிறார் என்பதை அப்போஸ்தல ருக்கு வெளிப்படுத்த விரும்பினார். எனவே யூதரல்லாதவரைச் சந்திப்பதில் தயக்கம் காட்டினவருமான பேதுருவைத் தேர்ந்தெடுக்கிறார். பேதுரு ஜெபித்துக் கொண்டிருக்கும்போது யூதர்கள் அருவறுக்கிற விலங்குகளின் இறைச்சியைக் காண்பித்து அதை உண்ணும்படி ஆண்டவர் வலியுறுத்து கிறார். மூன்று முறை வந்த அக்காட்சி மறைந்ததும் அவர் தங்கியிருந்த வாசலில் கொர்நேலியுவின் ஆட்கள் வந்து நிற்கிறார்கள். புறஜாதியாரை குறித்த ஆண்டவரின் கரிசனை நமக்கு உண்டா? சிந்திப்போம்!

ஆண்டவரே, ஜாதி, மொழி, இன வேறுபாடு கருதாமல் உம்முடைய அருட்பணியை செய்வதற்கு என்னுடைய இருதயத்தைப் பக்குவப் படுத்தும். ஆமென்.

பிரித்தெடுக்கப்பட்டவர்கள்

நீதியினை விசாரித்து நியாயம் செய்திட, வேதத்தை ஆராய்ந்து படிக்க வேண்டும்.

பிரித்தெடுக்கப்பட்ட எதுவும், அது பிரித்தெடுக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும். இங்கு சங்கீதக்காரன், தான் கடவுளுக்காக பிரித்தெடுக்கப்பட்டவர் என்ற நிலையில் துன்மார்க்கருடன் அழிந்தவிடாதபடி தன் ஜீவனைக் காக்க கடவுளுடைய இரக்கத்தை நாடுகிறார் தாவீது.

பரிசுத்தும் நிலை நிறுத்துல் : தான், பிற தெய்வங்களை நாடாமல் கர்த்தரை மாத்திரம் பற்றிக்கொண்டு அவர் வழிகளில் நடக்க தன் ஆவி, ஆத்துமா, சரீரம் எல்லாவற்றையும் ஒருமுகப்படுத்தியிருக்கும் வகையில், தன் பரிசுத்தத்தை நிலைநிறுத்த விரும்புகிறார் சங்கீதக்காரன். துன்மார்க்கரோடும், அக்கிரமக்காரரோடும் சேராத வகையில் அவனுடைய பரிசுத்த வாழ்வு இன்னும் அதிகமாக உறுதிபடுத்தப்படுகிறது. இப்படிப்பட்ட பரிசுத்த வாழ்வின் உறுதி, கடவுளுடைய காரியங்களுக்காக பிரித்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசியிடமும் எதிர்பார்க்கப்படுகிறது.

சாட்சி நிலைநிறுத்துல் : சங்கீதக்காரனின் பரிசுத்த வாழ்வு, அவர் கடவுளை அவருடைய ஆலயத்தில் உண்மையாக தொழுது அவருக்கு உரிய மகிமையையும், கனத்தையும் செலுத்த ஏவுகிறது. தான் ஆண்டவருடைய ஆலயத்தில் அவருடைய மகிமையைக் காண்பது மாத்திரமல்ல, அவருடைய மகிமையையும், வல்லமையுள்ள செயல்களை அனைவருக்கும் அறிவித்து அவர்களும் இந்த வல்லமையுள்ள ஆண்டவரை அறியச் செய்வது தனக்குக் கிடைத்த சிலாக்கியம் என்கிறார். உன் இருதயத்தின் வாஞ்சையை நிறைவேற்றும் இந்த ஜீவனுள்ள தேவனை சாட்சியாக அறிவிக்க நீ எடுக்கும் பிரயாசம் என்ன?

விடுவிக்க வேண்டுதல் : துன்மார்க்கருக்குள் தன் பரிசுத்தத்தை நிலைநிறுத்தி, ஆண்டவரை சாட்சியாக அறிவிக்க விரும்பும் தன்னுடைய வாஞ்சையையும் வெளிப்படுத்திய சங்கீதக்காரன், அவரை வாழ் நாள் முழுவதும் இடறாமல் மகிமைப்படுத்த தன்னை விடுவிக்க வேண்டுகிறார். நம்முடைய பாவ வாழ்விலும் நம்மை விடுவிக்க ஒருவர் வேண்டுமானால் அவர் இயேசு கிறிஸ்து மட்டுமே!

ஆண்டவரே, என்னை உண்மையுள்ளவனாக(ளாக) காத்துக் கொண்டு உம்மை உயர்த்த கிருபை தாரும். ஆமென்.

ஏசாயா

ஆமோத்சின் மகனாகிய ஏசாயாவின் தீர்க்கதரிசனங்களும், செயல்களும் அடங்கிய இந்நூலுக்கு இப்பெயர் பொருத்தமே. **யெஷயாகூ** என்பது எபிரெயச் சொல். இதில் **யாகூ** என்பது பின்பகுதி **யாவே** (யெகோவா) என்னும் சொல்லிலிருந்து உருவானது. ஏசாயா என்றால் **யெகோவாவின் இரட்சிப்பு** என்று பொருள்படும். கி.மு.742 - 701 வரை அவர் வாழ்ந்தார் என்று கூறப்படுகிறது.

யூத மக்கள் தங்கள் பாவங்களினால் பாபிலோன் சிறையிருப்பில் இருந்தனர். எருசலேம் கொள்ளையிடப்பட்டு, யூதா பாழடைந்திருந்தது. சிறைப்பட்டோர் மீண்டும் சீயோனுக்கு வருவர். விரைவில் ஆலயம் அஸ்திபாரமிடப்படும். பாபிலோன் தோல்வியுறும். எருசலேம் மீட்கப்படும். இதுவே இத்தீர்க்கதரிசனத்தின் மையக் கருத்துகளாகும். இப்புத்தகத்தை மூன்று ஏசாயாக்கள் எழுதினர் என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. இதன் கருத்துக்கள், காலம், மொழிநடை முதலியவற்றில் காணப்படும் வேற்றுமைகள் காரணமாக இந்நூலை ஒரு தொகுப்பு என்று கூறுவது பொருந்தும். அதிகாரம் 1-39; 40-55; 56-66 ஆகிய பகுதிகள் வெவ்வேறு நபர்களது தீர்க்கதரிசன உரைகள் என்று சொல்லப்படுகிறது.

ஏசாயா தீர்க்கதரிசனப் புத்தகம் கிறிஸ்துவுக்கு முன்பே நூல் வடிவம் பெற்றிருந்தது. இதனால் வேதாகமம் ஒரே ஆவியானவரால் ஆக்கம் பெற்று அவராலேயே பாதுகாக்கப்பட்டும் வந்துள்ளது என்பதை நாம் அறியலாம்.

1. **எருசலேமின் சாட்சிகள்** **1 – 39 அதிகாரம்**

   தேவனுடைய தன்மை, ஆண்டவரோடு மக்களுக்கும், உலகத்துக்கும் இருக்க வேண்டிய உறவு முதலின குறித்து விளக்குகிறார்.

2. **கிறிஸ்துவுக்குள் திருச்சபையின் வாழ்வு** **40 – 55 அதிகாரம்**

   ஆறுதலின் தீர்க்கன் எனப்படுகிற இரண்டாம் ஏசாயா, சிறையிருப்பில் உள்ள மக்களுக்குக் ஆறுதல் மொழிகளையும் நீதியைக் காட்டிலும் கிருபை ஆகியவற்றையும் வலியுறுத்துகிறார்.

3. **சமுதாயத்தில் திருச்சபையின் வாழ்வு** **56 – 66 அதிகாரம்**

   மீட்படைந்த சமுதாயத்தின் புதுப்பிரச்சனைகள் கூறப்படுகின்றன. சமய வழிபாடுகளில் குறைகள், சமய ஒழுக்க முறைகளின் தவறுகள் போன்றவை விளக்கப்படுகின்றன.

தெய்வீக உறவில் நிலைத்திருத்தல்

> **அனுதினமும் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து வேதத்திலுள்ள அதிசயங்களைக் காணும்படி தியானிக்கிறேனா?**

நானே திராட்சைச் செடி; நீங்கள் கொடிகள் .... (யோவான் 15:5)

ஏதேன் தோட்டத்தில் தேவனோடு மகிழ்ச்சியாய் உறவாடிய ஆதாம், ஏவாள் சாத்தானின் வஞ்சக வலைக்குள் விழுந்துவிட்டதின் விளைவு , தேவனோடு முகமுகமாய் உறவாட முடியாதபடி பாவம் தடையாயிற்று. அந்நாள் முதல் பலி செலுத்துவதின்மூலம் பாவ நிவிர்த்தி பெற்றனர். தேவன் பலத்த கையி னாலும், ஓங்கிய புயத்தினாலும் இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத் திலிருந்து மீட்டு, அவர்களை வழி நடத்திச் சென்றபோதிலும் அவர்கள் தேவனை மறந்து சோரம் போனதை வேதத்தின் வாயிலாக அறிகிறோம். ஏசாயா தீர்க்கன் வீண் மத சடங்குகளை மட்டும் அனுசரித்து உள்ளான மனுஷனில் எந்தவித மாற்றமுமின்றி வாழும் யூத ஜனங்களை தேவன் வெறுக்கின்ற பரிதபிக்கப்பட்ட வாழ்வைக் கடிந்துரைக்கிறார்.

உண்மையான இரட்சிப்பின் அனுபவத்தைப் பெறாமல், வெளியரங்கமாய் திருச்சபையின் அனைத்து ஆவிக்குரிய ஆராதனைகளிலும் முதன்மையாய் நின்று கலந்து கொள்ளுவோமானால், நமக்கும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள யூத ஜனத்துக்கும் எந்த ஒரு வித்தியாசமுமில்லை. இயேசு கிறிஸ்துவில் நாம் கொடிகளாய் நிலைத்திருப்போமானால் மட்டுமே தேவனுக்குப் பிரிய மான கனியுள்ள வாழ்க்கை வாழ முடியும்.

வேதத்துக்குச் செவிக்கொடுத்தல் - வாசிக்க, சங்கீதம் 1:2. தெய்வீக உறவில் நிலைத்திருக்க வேத வசனங்களை அனுதினமும் தியானித்து அதை ஆவியானவரின் உதவியோடு கடைப்பிடிக்கும் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளுதல் அவசியம்.

நற்கிரியை செய்தல் - வீண் பண்டிகை ஆசரிப்பையும், காணிக்கையையும், கிரியையில்லாத ஜெபத்தையும் தேவன் அருவருக்கிறார். ஒடுக்கப்பட்ட வர்கள், திக்கற்றவர்கள், விதவைகள் படும் உபத்திரவங்களை உணர்ந்து, அவர்களுக்கு நன்மை செய்து, கிறிஸ்துவின் அன்பை பிரதிபலித்து, தெய்வீக உறவில் நிலைத்திருக்கும் வாழ்வை பெறமுடியும்.

> **ஆண்டவரே, உண்மையான இரட்சிப்பின் அனுபவத்தை பெற்று, உமது அன்பைப் பிரதிபலிக்க அநுகிரகம் செய்யும். ஆமென்.**

ஏசாயா 1:21–31

தெய்வீக உறவில் பின்வாங்குதல்

என் நேரம், திறமைகளை தேவ நாம மகிமைக்கென்று பிரதானமாய் செலவிடுகிறேனா?

....எனக்குப் பிரியமானவர்களே விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள் (1கொரி. 10:14)

தெய்வீக உறவில் பின்வாங்கிப் போகுதலுக்கு முக்கிய காராணமாயிருப்பது விக்கிரகாராதனை. சொரூபங்களை வணங்குவதுதான் விக்கிரகாராதனை என்று எண்ணுவோமானால் அது தவறு. ஆண்டவருக்கு முதன்மை இடம் கொடுக்காது மற்ற எந்த உறவுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது ஆண்டவர் விரும்பாத விக்கிரகாராதனையாகும். பண ஆசை எல்லாத் தீங்குக்கும் வேராயிருக்கிறது(1தீமோ.6:10) என்று வேதத்தில் கூறியபடி பரிதானம் வாங்குதல், திக்கற்ற பிள்ளைகள், விதவைகளின் நியாயத்தை விசாரியாது இருத்தல் போன்ற பாவங்கள் தெய்வீக உறவுக்குத் தடைகற்களாய் விளங்குகிறது. தெய்வீக உறவில் பின்வாங்கும் ஒருவரின் நிலை, இலை உதிர்ந்த கர்வாலி மரத்தைப் போலவும், தண்ணீரில்லாத தோப்பைப் போலவும், நீதி, நியாயம், உண்மை காணப்படாத ஒரு நிலையை வேசியின் நிலையோடு ஒப்பிடுகிறார்.

தேவன் தமது ஜனங்கள் தம்முடன் நல்லுறவு கொள்ள வேண்டும் என்று வாஞ்சிக்கிறபடியால், பின்மாற்றம் ஏற்படும்போது, சில சமயம் உபத்திரவத்தின் குகையிலே நம்மை வழிநடத்தி மறுபடியும் அவருடன் உறவைப் புதுப்பிக்க வழிவகுக்கின்றார். தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனை சிட்சிப்பதைப் போல, பொன்னை களிம்பு நீக்கி சுத்தப் பொன்னாக மாறும்வரை புடமிடுவதுபோல சுயம் என்னும் களிம்பு நீங்கும் வரை தேவன் பற்பல உபத்திரவங்களின் வழியாக நடத்திச் செல்லுகிறார். நான் உபத்திரவப்பட்டது நல்லது அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொண்டேன் என்று தாவீது கூறுவதுபோல நாம் நெருக்கமான வேதனை மிகுந்த சூழ்நிலைகளின் ஊடாய் நடந்து சென்றாலும் அவர் எனக்கு துணையாக நிற்கிறார் என்ற எண்ணம் எப்போதும் உள்ளத்தில் நிறைவாக இருக்க வேண்டும். நாம் இயேசுவின் சாயலைப் பெறுவதற்கு அது ஏதுவாகும் என்பதை உணர்ந்து, உபத்திரவங்களிலும் தேவனைத் துதிக்க அழைக்கப்படுகிறோம்.

தேவனே எனது சுயத்தை சாம்பலாக்கி உம்முடைய பிரதான கட்டளைக்குக் கீழ்படிந்து ஒடுக்கப்படுகிறவர்களுக்கு நியாயம் செய்ய என்னை புடமிட்டு இயேசுவின் சாயலாக மாற்றும் ஆமென்.

கர்த்தரின் நித்திய அரசாட்சி

எனது ஜெப வாழ்வு எப்படியுள்ளது? வேத வசன தியானத்தைக் குறைய பண்ணுகிறேனா?

தெய்வீக உறவில் பின்வாங்காது நிலைத்திருத்தலை வலியுறுத்துகிற ஏசாயா தீர்க்கன் இப்பகுதியில் அதன் பலனாகிய நித்திய மகிழ்ச்சி அனுபவிக்கும் புதிய எருசலேமை விவரிக்கிறார். பரிசுத்த வேதாகமம் தேவனின் வியக்கத்தகு படைப்பாகிய இப்பிரபஞ்சத்தில் ஆரம்பித்து, அவரது மகிமையின் படைப்பாகிய புதிய வானம், புதிய பூமியில் முடிவடைகிறது.

பாவ வாழ்க்கையை முற்றிலும் விட்டு விட்டு, கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு அனுபவிக்கிறவர்களுக்கு மட்டுமே அந்த பாக்கியமான நித்திய வாழ்வு கிடைக்கும். தெய்வீக உறவிலே நிலைத்திருக்கும்போது தேவ பிரசன்னம், வேத வசனம், தெய்வீக சமாதானம் ஆகிய ஆசீர்வாதங்களை நாம் இம்மைக்குரிய வாழ்வில் நிழலாட்டமாய் பெற்ற போதிலும் மறுமைக்குரிய வாழ்வில் நித்திய நித்தியமாக அனுபவிப்போம்.

தேவ பிரசன்னம் : தேவ சமூகத்தில் துதிகளை ஏறெடுக்கும்போது, நாம் தேவ பிரசன்னத்தை உணர முடியும். கெர்ச்சிக்கிற சிங்கம்போல, எவனை விழுங்கலாமோவென்று வகை தேடி சுற்றித் திரிகிற பிசாசானவன் நாம் தேவ பிரசன்னத்தை உணரமுடியாதபடி நம் ஜெப ஜீவியத்திற்குத் தடைகளைக் கொண்டு வருவதைக் குறித்து நாம் ஜாக்கிரதையாய் விழித்திருத்தல் வேண்டும்.

வேத வசனம் : ஜீவன் தரும் வார்த்தைகள் நமது கரங்களில் கொடுக்கப் பட்டிருப்பது, தேவன் தந்த ஈவுகளுள் ஒன்று. கர்த்தருடைய வேதத்தைத் தியானிக்கும்போது ஆவியானவர் தமது வழிகளை நமக்குப் போதித்து செம்மையான வழியில் நம்மை நடத்துகின்றார்.

தேவ சமாதானம் : ஜெபத்திலே தேவ பிரசன்னத்தை உணர்ந்து வேத வசனங்களை வாழ்க்கையின் அனுபவமாக்கிக் கொள்ளும்போது, எந்த சூழ்நிலையினும் தெய்வீக சமாதானம் நம்மை சூழ்ந்து கொள்ளுவதை நாம் உணரலாம். ஆபகூக் 3:17,18 வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனுபவத்தை நாம் பெற்றுக் கொள்வோம்.

ஆண்டவரே மறுமைக்குரிய வாழ்வில் நித்திய ஜீவனைப் பெறுவதற்கு நான் பாத்திரமாய் நடக்க அருள்புரியும். ஆமென்.

ஏசாயா 2:6–22

மாறாத தெய்வீக அன்பு

கிறிஸ்துவைப் போல தேவனுக்கு முதலிடம் கொடுத்து வாழ்கிறேனா?

அசீரியர்கள் பெலிஸ்தியர்களின் விக்கிரகங்களை வணங்கி, மாறாத கர்த்தரை மறந்து ஐசுவரியம், உலகப் பொருட்கள், அதிகாரம் போன்றவை களுக்கு பிரதானமான இடம் கொடுத்து வாழ்ந்த யூதர்களுக்கு ஏசாயா கர்த்தருடைய பெரிதும், பயங்கரமுமான நாளைக் குறித்து விவரிக்கிறார். கர்த்தரின் நாளிலே, பூமியைத் தத்தளிக்கப் பண்ண கர்த்தர் எழும்பும் வேளையிலே, எல்லாம் தாழ்த்தப்படும். கர்த்தர் ஒருவரே அந்நாளில் உயர்ந்திருப்பார் என்றும், நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள் என்றும் கூறி இவ்வதிகாரத்தை முடிக்கிறார். தெய்வீக உறவில் நிலைத்திருப்பதற்குத் தடையாக காணப்படுகிற இரண்டு பாவங்களை இப்பகுதியில் காண்கிறோம்.

விக்கிரக ஆராதனை : ஜீவத் தண்ணீர் ஊற்றாகிய கர்த்தரை விட்டு தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள் என்று எரேமியா தீர்க்கன் மூலமாய் வேதனையோடு உரைத்த கர்த்தர் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிற தமது தேசத்தைக் கண்ணுற்று வேதனைப்படுகிறார். தேவனுக்குப் பிரதானமான இடம் கொடுக்காது, வேறு எந்த நபரோ அல்லது பொருளோ ஆகியவைகளின்மீது ஆண்டவருக்கும் மேலான இடம் அளிப்பதே கர்த்தருக்கு பிரியமில்லாத விக்கிரகாரதனை. நாம் தெய்வீக உறவிலே நிலைத்திருக்கும்போது மட்டுமே இத்தகைய விக்கிரகாராதனையை விட்டு விலகி கர்த்தருக்கு பிரியமான வாழ்வு வாழ முடியும்.

மேட்டிமை: தான் கட்டின மகா பெரிய பாபிலோனைக் குறித்து மேன்மை பாராட்டிய நேபுகாத்நேச்சார் மிருகங்களோடே சஞ்சரிக்கக்கூடிய இழிவான நிலைக்கு தள்ளப்பட்டதை நாம் அறிவோம். பெருமை, மனமேட்டிமை போன்ற துர்க்குணங்களை தேவன் வெறுக்கிறார். கர்த்தருடைய நாளிலே அவருடைய பயங்கரத்திற்கும், மகிமை பிரதாபத்திற்கும் விலகி ஓடாமல், தேவனுக்கு பயந்து மனத்தாழ்மையோடு கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாய் வாழ்ந்து, ஆகாயத்தில் கர்த்தரோடு எடுத்துக்கொள்ளப்படும் பாக்கியத்தைப் பெறுவோமாக!

ஆண்டரே, அழிந்துபோகும் உலக ஆடம்பரம், சிற்றின்பங்களை வெறுத்து, மாறாத நித்திய ஜீவனாய் இருக்கிற உமக்கு முதலிடம் கொடுத்து வாழ எனக்கு அருள்புரியும். ஆமென்.

தேவ நீதி உணர்ந்து வாழ்தல்

ஒடுக்கப்படுகிற மக்களின் உபத்திரவத்திலே என் பங்கு என்ன? சிறுமைப்பட்டவர்களின் மீது சிந்தை, கரிசனை காணப்படுகிறதா?

தலைமை பொறுப்பு கிடைக்கப் பெற்றவர்களும், தேவனால் ஆசீர்வதிக்கப் பட்டு செல்வம் பெற்றவர்களும் தங்கள் ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து கொள்ள தேவனால் எதிர்பார்க்கப்படுகிறார்கள். பிறர் தேவைகளை உணராது, தம்மை தாமே விலையுயர்ந்த ஆடைகளாலும் ஆபரணங்களாலும் அலங்கரித்துக் கொள்ளும் பெண்களுக்கு எதிரான தீர்ப்பையும் இப்பகுதி யில் வாசிக்கின்றோம். உலக மக்களை போல பரிதானம் வாங்கி சிறுமைப் பட்டவர்களை ஒடுக்கியும், சிறுமைப்பட்டவர்களின் தேவைகளை உணராது ஆடம்பர வாழ்க்கை வாழும் மக்களையும் தேவன் நியாயந்தீர்க்க வருகிறார்.

சிறுமைப்பட்டவர்களின் மீது கரிசனை: அதிகாரங்கள் யாவும் தேவனால் அருளப்பட்டிருக்கின்றபடியால், உயர் ஸ்தானங்களில் இருக்கும் தலைமை பொறுப்பில் இருப்பவர்கள், உலகத்தோடு சாராது, கறைபடியாது தங்கள் கரங்களைக் காத்துக்கொள்ளவும், சிறுமைப்பட்டவர்கள்மீது கரிசனை கொண்டு அவர்களுக்கு நியாயஞ் செய்ய வேண்டுமென்று தேவன் எதிர் பார்க்கிறார். யாக்கோபு 1:27ன் படி "திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறை படாதபடித் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது".

சிறுமைப்பட்டவர்கள் மீது சிந்தை: சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான் என்று சங்கீதம் 41 ல் வாசிக்கின்றோம். சுயத்தை மையமாக வைத்து, தம்மைச் சுற்றியுள்ள ஒடுக்கப்பட்ட, சிறுமைப்பட்டவர்களின்மீது சிந்தையின்றி வாழும் மக்களுக்கு எதிரான தீர்ப்பு கூறப்பட்டுள்ளது. 1பேது.3:4ல் "அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்கார மாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது" என்று கூறப்பட்டுள்ளதை நினைவில் கொள்ளுவோமாக!

ஆண்டவரே, சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்கள் மற்றும் புறக்கணிக்க பட்டவர்களுக்கு நன்மை செய்து வாழ உதவி புரியும். ஆமென்.

மீட்பின் மாட்சிமை

துன்பம் நிறைந்த இவ்வனாந்திர வாழ்க்கையிலே கூடாரமாக விளங்கும் இயேசுவை மட்டும் பற்றிக் கொண்டிருக்கின்றேனா?

"கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. "(எபே.2:8). யூத ஜனங்கள் கற்பனைகளை விட்டு விலகி கர்த்தரை மறந்து, விக்கிரகங்களைச் சேவித்து இஷ்டப்படி வாழ்ந்தபோது தீர்க்கர்கள்மூலம் தேவன் அவர்களை எச்சரித்தபோது, அவர்கள் பாவ உணர்வு பெற்று தங்களைத் தாழ்த்தியபோது அவர்களுக்கு மன்னிப்பு வழங்கியதை பழைய ஏற்பாட்டு புத்தகங்களில் வாசிக்கின்றோம். பிதா தம் ஜனங்களுக்காய் பரிதபித்து, அவர்கள் இலவசமாய் மீட்பைப் பெறும்படி தமது ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பி நமக்கு விடுதலை அருளினார். இப்பகுதியில் மேசியாவை "கர்த்தரின் கிளை" என்று ஏசாயா குறிப்பிடுகிறார். சகரியா 6:12ல் "....இதோ ஒரு புருஷன், அவருடைய நாமம் கிளை எனப்படும் ...." என்று வாசிக்கின்றோம். இயேசு கிறிஸ்து தம்மை பற்பல பாடுகளுக்கு ஒப்புவித்து, சிலுவை மரணத்தில் சிந்தின இரத்தத்தினிமித்தம் நமக்குப் பாவ மன்னிப்பு உண்டாயிற்று. அந்த மீட்பைப் பெற்றவர்கள் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயதீர்ப்பைக் குறித்தும் உலகத்தை கண்டித்து உணர்த்தும் பரிசுத்த ஆவியானவராகிய தேற்றரவாளனால் வழி நடத்தப்படும்போது தெய்வீக உறவிலே நிலைத்து பரிசுத்தமான வாழ்க்கை வாழ முடியும். இந்த தெய்வீக உறவில் நிலைத்திருப்பதற்கு நமக்கு இயேசு கூடாரமாயிருந்து நம்மை பாதுகாப்பது நமக்குக் கிடைத்த சிலாக்கியமல்லவா?

நிழல் : பாடுகளின் வழியாகச் செல்லும்போது மட்டுமே நிழல் தரும் மரமாகிய இயேசுவிடம் சென்று இளைப்பாறுதலைப் பெறலாம் (மத். 11:28ல்). "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் " என்றாரே.

அடைக்கலம் : ஆபத்துக்காலத்தில் நமக்கு அடைக்கலமாகவும் மறைவிடமாகவும் இருந்து நம்மைப் பாதுகாக்கும் தேவனாக இருக்கின்றபடியால் நாம் கலங்கத்தேவையில்லை.

ஆண்டவரே மீட்பின் மாட்சிமையை அனுபவித்த நான் வேதனையில் மூழ்கி தவிக்கும் மக்களுக்கு அன்பின் நற்செய்தியை அறிவித்து உம்மண்டை நடத்த அருள் தாரும். ஆமென்.

பிரசன்னத்தில் பாதுகாப்பு

> *கள்ள நாவு, பட்சபாதம் பாராமல் என்றுமே இயேசுவுக்குள் நியாயமாய் நிற்க நாம் அழைக்கப்படுகிறோம்.*

தன்னுடைய பாதுகாப்புக்காக பிரயாசப்படாத எந்த ஜீவராசியும் இவ்வுலகில் இல்லை. எப்போதும் பகைஞரால் சூழப்பட்டிருக்கும் சங்கீதக்காரன், கடவுளின் பிரசன்னத்தில் மாத்திரமே பாதுகாவல் உண்டு என உணர்ந்து அதை நாடுகிறான்.

கர்த்தரில் முழு நம்பிக்கை (வச.1-3) : கடவுள் ஒளியாக இருப்பதால் இருள் சூழும்போது தன்னைக் காப்பார் என்றும் பகைவரை எதிர்க்க பெலன் தந்து அவர்கள் கலக்கமடையும் வண்ணம் அழிவுக்கேதுவான தோல்வியை அவர்களுக்குக் கொடுப்பார் என்றும் கர்த்தரில் பூரண நம்பிக்கை கொள்கிறார். பராக்கிரமுள்ள கர்த்தர் தன்னோடிருப்பதால் பயமின்மையையும், அவர் தரும் பாதுகாவலாலும் பெலத்தாலும் வெற்றியைப் பெறுவோம் எனும் நம்பிக்கையையும் கொண்டிருக்கிறார் சங்கீதக்காரன். ஆண்டவர் மீது நம்பிக்கை கொள்ளும் யாவருக்கும் இது உண்மையாக சம்பவிக்கும்.

கர்த்தரின் ஆலயத்தில் புகலிடம் (வச.4-6) : ஆண்டவரின் ஆலயம் அவருடைய வல்லமையுள்ள பிரசன்னத்தால் பாதுகாவலைத் தருவது மாத்திரமல்ல. அவர் அளிக்கும் நன்மையை எண்ணி துதியின் பலிகளினால் அவரை மகிமைப்படுத்தி அவரோடு ஐக்கியம் கொள்ளும் ஸ்தலமாகவும் இருக்கிறது. அவர் சமூகத்தை நாடும் வாஞ்சை உண்டா?

கர்த்தரின் சித்தத்திற்கு அர்ப்பணித்தல் (வச.7-12) : நம் விண்ணப்பங்களை அவர் சமூகத்தில் கொண்டு போக கடவுள் எதிர்பார்க்கிறார். கடவுள் தன்னை பகைவர்கையினின்று விடுவிக்க வேண்டினாலும், அவர் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து அவர் வழிகளை போதிக்க வேண்டுகிறார்.

கடவுளுடைய நன்மைக்கு காத்திரு (வச.13,14) : கர்த்தர் பேரில் நம்பிக்கை கொள்வது பாராட்டத்தக்க ஆன்மீக பயிற்சியாயிருந்தாலும், அவருடைய அளவிலா ஆசீர்வாதம் பெற அவருடைய காலத்திற்கும் நேரத்திற்கும் காத்திருப்பது மிக அவசியம். ஆண்டவரை மகிமைப்படுத்த இப்படிப்பட்ட ஆன்மீகப் பயிற்சிகள் நம்மில் ஒரு அங்கமாகட்டும்.

ஆண்டவரே, உம் வல்லமையுள்ள பிரசன்னத்தில் பாதுகாவலைப் பெறவும், உம்முடைய காலத்திற்கும் நேரத்திற்கும் காத்திருந்து செயலாற்றவும் அருள்தாரும். ஆமென்.

எபிரேயர் 11:1–19

நம்புவதற்கு வாய்ப்பில்லாவிடினும் விசுவாசித்தல்

எனது அனுதின வாழ்க்கைப் போராட்டங்களை மேற்கொள்ளும்படி வலிமையையும் தெளிந்த குறிக்கோளையும் பெற்றுக்கொள்வதற்கு உம்மிடம் வருகிறேன், ஆண்டவரே!

மலையேறும் எவரும் மலையுச்சியை அடைந்ததும் இதுவரை அவர்களுக்கு மறைவாக இருந்த மலையின் அடுத்த பக்கத்திலிருக்கும் அழகிய காட்சிகளை திடீரென காணும்போது பேருவகை அடைவர். பழைய ஏற்பாட்டில் பேர் பெற்ற மக்களையும் அவர்களது விசுவாச சாதனைகளையும் பற்றிப்படிக்கும்போது யூத கிறிஸ்தவர்களும் இவ்வித உணர்வை அடையவே இந்நிருப ஆக்கியோன் விரும்புகிறார்.

அத்தகைய பெரியோர்களடைந்த புகழ்ச்சிக்குக் காரணமான விசுவாசம் என்னதென்று வச.1.2ல் விளக்குகிறார். சாத்தியமே இல்லாததையும், கண்ணுக்கும் புத்திக்கும் புலப்படாததையும் நிச்சயமாகப் பெறுவோம் என்கிற உறுதிப்பாடுதான் விசுவாசம். எனவே, கண்டு நம்புகிறவர்களாக அல்ல - விசுவாச உறுதியுடன் காணாமலேயே விசுவாசித்து வாழ்பவர்களாக பழைய ஏற்பாட்டின் இம்மனிதர் இருந்தனர்.

ஆபேல், ஏனோக்கு மற்றும் நோவா குறித்து விளக்கத்தை தருகின்ற ஆக்கியோன், ஆபிரகாம் மற்றும் சாராள் பற்றி எழுதும்போது, தேவனின் வாக்குத்தத்தங்கள் நிறைவேற எவ்வண்ணம் அவர்கள் பொறுமையுடன் காத்திருந்தனர் என விரிவாக விளக்குகிறார். அவர்களைப் போன்றே யூத கிறிஸ்தவர்களும், தாங்கள் எதிர்நோக்கி இருக்கும் முறையில்லாத மற்றும் எதிர்ப்புகள் மிகுந்த சூழ்நிலைகளில் விசுவாசத்துடன் தேவனைப் பின்பற்றும் படி அறிவுறுத்துகிறார்.

நம்மைப் பாதிக்கக் கூடிய சவால்கள் யாவை? ஆண்டவர் மீதுள்ள நம்பிக்கையில் தளர்ந்துவிடவும், தொடர்ந்து அவரைப் பின்பற்றாமல் சோர்ந்துவிடவும் நம்மை நெருக்குவது யாவை? அவை ஒவ்வொன்றையும் மேற்கொள்ள ஆண்டவரின் முகத்தையே தேடுவோம். 'மலையுச்சியைப்' போய்ச் சேரும்வரை நமக்கும் எதுவும் புலப்படாமல் போகலாம். எனினும் ஆண்டவரின் வாக்குத்தத்தங்களை நம்பி, பொறுமையுடன் விசுவாசப் பயணத்தைத் தொடர்ந்து மேற்கொள்வோம். இதனால், நாம் வாஞ்சிக்கும் உன்னத நிலையைப் போய்ச் சேர்ந்து விடுவோம்.

ஆண்டவரே, என்னையும் சமாதான கருவியாகப் பயன்படுத்தும். ஆமென்.

அடிச்சுவடுகள்

> **ஆண்டவரே, நீர் என்னோடு இருப்பதை இன்று நான் பிரதிபலிக்க வேண்டுமே! உமது வசனத்தால் என்னை உருவாக்கும்.**

மிகவும் பழக்கமான பழைய ஏற்பாட்டிலுள்ள பெயர்களை வாசிக்கும்போது ஞாயிறு பள்ளிக்கு மீண்டும் வந்துவிட்டோமோ என்கிற எண்ணம் வருகிறது. இத்தகைய புத்துணர்வுதான், இந்நிருபத்தை முதன்முதலாக வாசித்த யூத கிறிஸ்தவர்களுக்கும் வந்திருக்கும். பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்கள் விட்டுப்போன 'அடிச்சுவடுகளை' அவர்கள் பின்பற்றிட தயங்கியதுதான் அவர்களுடைய பிரச்சனை. யூத சமயச் சடங்காச்சாரங்களைக் கைக் கொண்டதால் அல்ல, தங்களுடைய விசுவாச வாழ்க்கையினால்தான் பழைய ஏற்பாடு பக்தர்கள் தேவனே பாராட்டும்படியான மேன்மையைப் பெற்றனர் என அறிவுறுத்துகிறார் ஆக்கியோன்.

முற்பிதாக்கள் தங்களுடைய பின் சந்ததியினருக்கு தேவன் செய்யப் போவதைக் 'காணும்' கண்களுடன் வாழ்ந்தனர். மேலும், மோசே இவ் வுலகத்தின் சிற்றின்பங்களும், செல்வங்களும் குப்பையென்று உதறித் தள்ளினார். இஸ்ரவேல் மக்களுக்கான தேவனின் திட்டங்கள் நிறைவேறிட விசுவாசத்தினால் துணிவாக செயல்பட்டார். தனது மேன்மைக்காக வாழ்வதை ஒதுக்கிவிட்டு தனது மக்களின் நன்மைக்காக வாழ்ந்திட விசுவாசத்தினால் தன்னையே தேவனிடம் ஒப்புவித்துவிட்டார்.

பல்வேறு அற்புதங்களையும் வல்ல செயல்களையும் மோசே மற்றும் யோசுவாவின் நாட்களில் தேவன் செய்திட அவர் அவர்களிடம் எதிர்பார்த்தது, விசுவாசம்தான். இதனால், அவரது மேலான அதிகாரமும், ஆளுகையும் அனைவருக்கும் வெளிப்படையாயின. தேவனுடைய மக்களுள் ஒருத்தியாக ராகாப் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்குக் காரணம், தேவன்மீது அவள் வைத்திருந்த விசுவாசமே.பழைய ஏற்பாட்டு மக்கள் செயல்பட்டதுபோன்று, தேவன் மீதுள்ள விசுவாசத்தினால் நாமும் துணிந்து செயல்பட வேண்டும். இதன் வழியாக, நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்படி நமக்காகத் தன்னையே பரிபூரணமான பலியாகத்தந்த தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நாம் மகிமைப்படுத்துவோம். இன்று நாம் விசுவாசத்துடன் செயல்பட வேண்டிய சூழ்நிலைகள் எவை? ஆண்டவரின் துணையுடன் துணிந்து செயல்படுவோமாக!

> **ஆண்டவரே, வேதாகமத்தின் விசுவாச வீரர்களின் "அடிச்சுவடுகளைப்" பின்பற்றிட இன்று எனக்கு உதவிசெய்திடும். ஆமென்.**

எபிரேயர் 11:32–40

மாபெரும் இரட்சிப்பு!

விவேகத்துடனும் விசுவாசத்துடனும் இன்று நான் வாழ்ந்திடும்படி உமது வார்த்தையால் எனது மனதைக் கூர்மையாக்கிடும், ஆண்டவரே!

சமீபத்தில் ஓராயிரம் இந்திய ரூபாய் நாணயம் ஒன்றின் படத்தைப் பார்த்தேன். அதனுடைய பணமதிப்பு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால், அதனுடைய இரு பக்கங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் சரியாக அமைந்திருக்க வேண்டும். இரண்டு பக்கங்களும் ஒன்றுக்கொன்று வேறு பட்டுக் காணப்படுகின்றன. எனினும் அவை இரண்டும் ஒருங்கிணைந்து ஒரே நாணயமாக ஏற்றுக் கொள்ளப்படுவதால் முழு பண மதிப்பையும் பெறுகிறது. இன்றைய வேத பகுதி விசுவாசம் இருவேறுபட்ட முறைகளில் செயல்படுத்தப்படுகிறது என்பதை விளக்குகிறது.

வேதனை, இழப்பு, துன்பம், ஏமாற்றம் போன்ற வாழ்க்கையின் பொதுவான அனுபவங்கள் கிறிஸ்தவர்களைத் தீண்டாமல் விட்டுவைப்பதில்லை. எல்லா மனிதரும் அனுபவிப்பவைதான் நமக்கும் நேரிடுகின்றன. எனவே, விசுவாசத்தால் வெற்றி பெற்ற கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் மற்றும் பிற பழைய ஏற்பாட்டு வீரர்களைப் போன்று அல்லாமல், நாம் துயரங்கள் - ஏன் சாவையும் விசுவாசத்துடன் சந்திக்க வேண்டியது நேரிடலாம் (வச.35-38).

வச.39,40ஐ மீண்டும் வாசியுங்கள். தேவன் தமது மக்களுக்கு வாக்கு அருளியுள்ள கிறிஸ்து இயேசுவின் வழியாக மட்டுமே கிடைக்கக் கூடிய இரட்சிப்பின் நிறைவேறுதலை உரிமைப் போராக தேவன் நமக்குத் தருகிறார் என்று ஆக்கியோன் விவரிக்கிறார். பழைய ஏற்பாட்டின் மாபெரும் ஆடவரும், பெண்டிரும் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுடன் சேர்ந்தே இதைப் பெறுகிறார்கள் என்றும், அதற்கு முந்தியல்ல என்றும் கூறுகிறார். இதுபற்றி வில்லியம் பார்க்ளே எனும் வேதாகம அறிஞர் இவ்விதம் கூறுகிறார். "அவர்களும் நாமும் இணைகிற காலம் வருகிறதற்கு முன்னர், தேவனுடைய மகிமையின் முழுமையும் வெளிப்படாதவாறு அவர் அனைத்தையும் அமைத்துவிட்டார்".

இத்தகைய மாபெரும் இரட்சிப்பைப் பெற்றுள்ள நாம் நன்றியறிதலுடனும் நல்விசுவாசத்துடனும் வாழ வேண்டியது மிகவும் அவசியம்.

ஆண்டவரே, இத்தகைய மாபெரும் இரட்சிப்பை விசுவாசத்தால் உம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளவும், உமக்கு உண்மையாக வாழ்ந் திடவும் அருள்கூரும். ஆமென்.

துயரத்தின் வழியாக சிட்சிக்கப்படுதல்

ஆண்டவரே, இரட்சிக்கப்பட்டு ஏற்றமுறையில் வாழ்ந்திடும்படி உமது வசனம் என்னை வழிநடத்தட்டும்.

பயிற்சியும் சிட்சையும் நாம் இன்னும் சிறப்பாக வாழவும், மேலான சாதனைகளைச் சாதித்திடவும் பக்குவப்படுத்திவிடுகின்றன. யூத கிறிஸ்தவர்களும் தேவனின் சிட்சைக்குட்பட்டு இருப்பதாக இந்நிருப ஆக்கியோன் கூறுகிறார். இன்னும், இரத்தம் சிந்தும்படியான கொடிய உபத்திரவங்கள் அவர்களைத் தீண்டிடவில்லையெனினும், தங்கள் சுய மக்களால் புறக்கணிக்கப்படவும், ஏளனம் செய்யப்படவும் சமுதாய புறக்கணிப்பை அவர்கள் அனுபவித்து வந்தனர்.

இயேசுவை நோக்கிப் பாருங்கள் (வச.1-4) : வாழ்க்கை ஓட்டத்தில் நம்மை உற்சாகப்படுத்த மேகம் போன்ற திரளான சாட்சிகள் பலர் நம்மைச் சூழ்ந்து இருக்கின்றனர். எனினும், அவர்களுள் எவரும் இயேசுவைப் போன்று குறைவற்ற நிறைவான முன்மாதிரியாக இல்லை. பாடுபட்ட இயேசு உயிர்த்தெழுந்து சாவையும் வெற்றி சிறந்தார். இப்போது அனைத்து அதிகாரத்துக்கும் ஆளுகைக்கும் உரியவராக அரியணையில் வீற்றிருக்கிறார். அவரைப் பின்பற்றும் அனைவரும் அவரைப்போன்று எல்லா சோதனைகளையும் வேதனைகளையும் மேற்கொள்ளும் ஆற்றல் பெறுகிறார்கள்.

தேவனின் சிட்சையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுங்கள் (வச.5-11) : தேவன் நமது பரம தந்தை; எப்பொழுதும் நமக்கு நன்மையானதையே தர அவர் விரும்புகிறார். துன்பங்கள் வழியே நாம் செல்ல நேரிட்டாலும், அவர் நம்மை தீமைக்குட்பட விடமாட்டார். சிட்சையின் பாதை, நம்மைச் சிறந்த தேவ பிள்ளைகளாக இறுதியில் மாறச் செய்துவிடும்.

பெலவீனங்களை மேற்கொள்ள முயற்சி எடுங்கள் (வச.12,13) : விசுவாச பாதையில் நாம் வெற்றி சிறந்திட தேவையான ஆற்றல் நமக்குக் கொடுக்கப்படும் என்பதில் ஐயமில்லை. உங்கள் துயர் எதுவானாலும், அதை ஆண்டவரிடம் ஒப்படைத்து விடுங்கள். அவரது சிட்சை என்றும் நமது நன்மைக்காகவே! உமது பாடுகளையும் நிறைவான வெற்றியையும் தியானிக்கிறேன்.

தேவனே, உமது பாடுகளையும் வெற்றியையும் தியானிக்கிறேன். எனது வாழ்க்கையை வெற்றியாய் முடிக்க போதுமான ஆற்றலைத் தாரும், ஆமென்.

எபிரேயர் 12:14-29

தேவனின் கிருபையை இழந்துவிடாதீர்கள்!

ஆண்டவரே, தவறான முடிவுகளுக்கு என்னை விலக்கிக் காத்து சரியான வாழ்க்கை முறையைப் பின்பற்ற உமது வசனத்தால் என்னை வழிநடத்தும்.

இந்நிருபத்தின் உட்கருத்தும், ஆக்கியோன் யூத கிறிஸ்தவர்களிடம் வருந்தி வேண்டிக்கொள்வதும் அவருக்கு மட்டுமல்ல, யூத கிறிஸ்தவர்களுக்கும் முக்கியமானவை. இப்பூவுலகுக்கும், விண்ணுலகுக்கும் உரிய வாழ்வு (அல்லது சாவு) பற்றிய எச்சரிப்புகளை ஆறு முறைகள் இந்நிருபத்தில் அவர் எழுதியுள்ளார் (2:1-4; 3:7-19; 4:1-13; 5:11-6 :18; 10:22-31; 12:14-17, 22-25). இறுதி எச்சரிப்பு இன்றைய வேத பகுதியில் உள்ளது. தொடக்கத்தில் தேவகுமாரன் இயேசு வழியாக, தேவன் தந்துள்ள முழுமையான வெளிப்பாடு பற்றி எழுதத் தொடங்கி, இறுதியில் எவ்வண்ணம் எளிய முறைகளில் இவர் மீதுள்ள நமது விசுவாசத்தை நாம் வெளிப்படுத்த முடியும் என்று விளக்குகிறார்.

கிறிஸ்துவின் மீதுள்ள நமது விசுவாசத்தை, நாம் வாழும் முறையினால், நமது வீட்டில் தொடங்க வேண்டும். உபசரித்தல் மற்றும் சகோதர அன்பு (வச.1,2) போன்றவற்றை இதற்கு ஏற்ற வழிமுறைகளாக நாம் பயன்படுத்த வேண்டும். குடும்ப வாழ்வில் சீரிய பாலியல் ஒழுக்க நெறியைக் கைக்கொள்வது, நமது விசுவாசத்தின் அடுத்த அடையாளம் (வச.4). நாம் பணத்தை கையாளும் முறை, நமது விசுவாசம் ஆண்டவர் மீதா அல்லது உலக பொருட்கள் மீதா என்பதை வெளிப்படுத்துகிறது (வச.5,6). தொடர்ந்து சபை வாழ்க்கையைக் குறித்து ஆக்கியோன் எழுதும்போது, விசுவாச வாழ்க்கையிலும், ஊழியத்திலும் உத்தமமாய் இருக்கும் தலைவர்களின் நல் வாழ்க்கை முறையைப் பின்பற்றும்படி அறிவுறுத்துகிறார் (வச.7). இன்று நாம் தவிர்த்துவிட வேண்டிய தவறான போதனைகள் மற்றும் வீணான சடங்காச்சாரங்கள் எவை (வச.9,10)? ஓர் உண்மை கிறிஸ்தவன் ஆண்டவருக்காகப் பாடுபட ஆயத்தமாய் இருப்பான் (வச.11-14). தேவைகளுடன் நெருக்கத்தில் இருப்பவர்களோடு தனக்குள்ளதைப் பகிர்ந்து கொள்ள தயங்கமாட்டான் (வச.15,16). இறுதியாக, சபையின் மூப்பர்களுக்குக் கீழ்ப்படிவதின் அவசியமும் (வச.17), வாக்குமாறாத தேவன் தமது மக்களை சீர்ப்படுத்தி எல்லா நற்செயல்களையும் செய்வதால் அவரது திருச்சித்தத்தை நிறைவேற்றுபவர்களாக நிலைநிறுத்துவார் என்ற நிச்சயமும் (வச.21) கூறப்பட்டுள்ளன. நமக்கும் இது அவசியம்தானே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, நானும் உமது சிலுவைப் பாடுகளில் என்னை 'இணைத்துக் கொள்ள எனக்கு பெலன்தாரும். ஆமென்.

விசுவாசத்தின் எளிய வெளிப்பாடுகள்

ஆண்டவரே உமது சாயலில் நான் மாறும்படி உமது வசனத்தால் என்னுடைய மனதையும், ஆத்துமாவையும் போஷித்தருளும்.

பிறருடன் ஏதோ ஒன்றைப் பற்றி பேசவோ, எழுதவோ தொடங்கும் போது நன்றாகவே ஆரம்பிக்கிறோம். எனினும், அதை எப்படி முடிப்பது என்று தெரியாமல் சில வேளைகளில் திணறிப் போகிறோம். ஆனால் எபிரெயர் நிருபத்தை நல்ல முறையில் தொடங்கிய ஆக்கியோன் வெற்றிகரமாக அதை முடிக்கிறார். தொடக்கத்தில் தேவ குமாரன் இயேசு வழியாக, தேவன் தந்துள்ள முழுமையான வெளிப்பாடு பற்றி எழுதத் தொடங்கி, இறுதியில் எவ்வண்ணம் எளிய முறைகளில் இவர் மீதுள்ள நமது விசுவாசத்தை நாம் வெளிப்படுத்த முடியும் என்று விளக்குகிறார்.

கிறிஸ்துவின் மீதுள்ள நமது விசுவாசத்தை நாம் வாழும் முறையினால், நமது வீட்டில் தொடங்க வேண்டும். உபசரித்தல் மற்றும் சகோதர அன்பு (வச.1,2) போன்றவற்றை இதற்கு ஏற்ற வழிமுறைகளாக நாம் பயன்படுத்த வேண்டும். குடும்ப வாழ்வில் சீரிய பாலியல் ஒழுக்க நெறியைக் கைக் கொள்வது, நமது விசுவாசத்தின் அடுத்த அடையாளம் (வச.4). நாம் பணத்தை கையாளும் முறை, நமது விசவாசம் ஆண்டவர் மீதா அல்லது உலகின் பொருட்கள் மீதா என்பதை வெளிப்படுத்துகிறது (வச.5,6).

தொடர்ந்து சபை வாழ்க்கையைக் குறித்து ஆக்கியோன் எழுதும் போது, விசுவாச வாழ்க்கையிலும், ஊழியத்திலும், உத்தமமாய் இருக்கும் தலைவர் களின் நல்வாழ்க்கை முறையைப் பின்பற்றும்படி அறிவுறுத்துகிறார் (வச.7). இன்று நாம் தவிர்த்துவிட வேண்டிய தவறான போதனைகள் மற்றும் வீணான சடங்காச்சாரங்கள் எவை (வச.9,10)? ஓர் உண்மை கிறிஸ்தவன் ஆண்டவருக்காய் பாடுபட ஆயத்தமாய் இருப்பான் (வச.11-14). தேவைகளுடன் நெருக்கத்தில் இருப்பவர்களோடு தனக்குள்ளதைப் பகிர்ந்து கொள்ள தயங்கமாட்டான் (வச.15,16). இறுதியாக சபையின் மூப்பர்களுக்குக் கீழ்ப்படிவதின் அவசியமும் (வச.17), வாக்கு மாறாத தேவன், நமது மக்களை சீர்ப்படுத்தி, எல்லா நற்செயல்களையும் செய்வதால் அவரது திருச்சித்தத்தை நிறைவேற்றுபவர்களாக நிலைநிறுத்துவார் என்ற நிச்சயமும் (வச.21) கூறப்பட்டுள்ளது. யூத கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல நமக்கும் இது அவசியம் தானே!

ஆண்டவரே, என்னை ஒரு பொருட்டாக நினைத்து இம்மட்டும் என் வாழ்வில் செய்து வந்த நன்மைகளுக்காக உமக்கு நன்றி, ஆமென்.

ஜெப ஜீவியம்

ஏற்ற காலத்தில் கர்த்தர் நம்மை உயர்த்தும்படி அவருடைய பலத்தக் கைக்குள் நாம் இருக்க வேண்டும்.

கடவுளில் வைக்கும் உறுதியான நம்பிக்கை வாழ்வின் மகா பயங்கரத்தையும் மேற்கொள்ள உதவும். இங்கு சங்கீதக்காரன் மரணத்திற்கேதுவான அச்சுறுத்தும் ஆபத்திலிருந்து தன்னை விடுவிக்க ஜெபிக்கிறார். தாவீது கன்மலையாகிய கர்த்தர் என்று அழைப்பதிலிருந்து, கன்மலையானது மிகவும் உறுதியானது என்பது விளங்குகிறது. அப்படிப்பட்ட கன்மலையை போன்ற கர்த்தர் மாத்திரமே தன்னை விடுவிக்க முடியும் என்று கூப்பிடுகிறார். இந்த சங்கீதத்தின் இறுதியில் கர்த்தர் தன் ஜெபத்தைக் கேட்டபடியால் சந்தோஷத்தில் களிக்கிறார்.

ஆபத்து (வச.3-5): வெகு அருகில் உள்ள பயங்கரமான ஆபத்து ஒன்றிலிருந்து தன்னை விடுவிக்க சங்கீதக்காரன் கடவுளிடம் ஜெபிக்கிறார். அண்மையில் நிகழப்போகிற ஆபத்து என்பது அவர் ஆண்டவரிடம் முறையிடும் விதத்திலிருந்து விளங்குகிறது. அவருடைய பகைவர்கள் கடவுளையும், பிறரையும் பொருட்டாக எண்ணாததால் அவர்கள் இரக்கமின்றி தண்டிக்கப்பட வேண்டுமென்றும், தானும் தன்னைச் சார்ந்த நீதியுள்ளவர்களும், காக்கப்பட வேண்டும் எனவும் சங்கீதக்காரன் கருதுகிறார். கடவுள் நல் மேய்ப்பராக இருப்பதால் (வச.8-9) அவருடைய தயவு தன் மீதும், தன்னை சார்ந்தவர் மீதும் இருக்கும் என சங்கீதக்காரன் நம்பிக்கை கொள்கிறார். கடவுளின் தயவு எனக்கு உண்டு எனும் நம்பிக்கை உனக்கு உண்டா?

துதி (வச.5,6): தன்னுடைய ஜெபம் கேட்கப்பட வேண்டும் என மிகுந்த ஆதங்கத்தோடும், மனமுறிவோடும் ஜெபித்த சங்கீதக்காரன் இப்போது தன் ஜெபம் கேட்கப்பட்டபடியால் துள்ளும் மகிழ்ச்சியுடன் ஆண்டவரைத் துதிக்கிறார். நமது ஆண்டவர் கற்பித்த வண்ணம் (மத்.21:22). நம்முடைய ஜெபம் கேட்கப்படும் எனும் நம்பிக்கையுடன் ஜெபிக்கவில்லையென்றால் கடவுளின் நிறைவான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள இயலாது. நம்முடைய ஜெபம் கேட்கப்படும் என்ற நம்பிக்கையோடு எத்தனை முறை ஜெபித்திருக்கிறோம், நம்முடைய ஜெபம் கேட்கப்பட்டதற்காக எத்தனை முறை ஆண்டவரைத் துதித்திருக்கிறோம்?

ஆண்டவரே, என் ஜெபம் கேட்கப்படும் என்கிற நம்பிக்கையோடு உம்மை நோக்கிப் பார்க்க எனக்கு கிருபை தாரும். ஆமென்.

நியாயாதிபதிகள்

யோசுவா நூலிற்கு நேர் எதிர்மறையானது நியாயாதிபதிகள் புத்தகம் ஆகும். யோசுவாவில் கீழ்ப்படிதலுள்ள மக்கள் ஆண்டவரின் வல்லமையை நம்பி நாட்டைக் கைப்பற்றினர். ஆனால் நியாயாதிபதிகளில் கீழ்ப்படியாத, விக்கிரகத்தை வணங்கிய இஸ்ரவேலர்கள் தேவனுக்கு எதிராக கலகம் பண்ணியதால் அடிக்கடி தோற்றுப் போயினர்.

ஏழு முறை பாவத்திலிருந்து மீட்கப்பட்ட இஸ்ரவேலர் எப்படி ஆண்டவர் உடைய வழிகளைத் தள்ளிவிட்டு 'அவரவர்' தம்தம் சொந்த வழிகளைத் தெரிந்து கொண்டார்கள் என்பதை இந்நூல் காட்டுகிறது. 400 ஆண்டுகளில், ஆண்டவர் பலமுறை பகைவர்களிடமிருந்து அவர்களைப் பாதுகாக்க இரட்சகர்களை எழுப்புகிறார். அவர்கள் மக்களை ஆண்டவரிடம் திருப்புகின்றார்கள். எனவே நியாயாதிபதிகளின் புத்தகத்திற்குத் **"தோல்வியின் புத்தகம்"** என்ற பெயர் பொருத்தமாக அமையும்.

இப்புத்தகத்தை எழுதியவர் யாரென்று சரியாகத் தெரியாவிட்டாலும் சாமுவேல் அல்லது அவரது மாணவத் தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. 18:31; 20:27 ஆகிய வசனங்களிலிருந்து உடன் படிக்கைப் பெட்டி சீலோவாவிலிருந்து மாற்றப்பட்ட பின்தான் இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது என்று அறியலாம். எபூசியர்கள் இந்நாள் வரை நம்முடனிருக்கிறார்கள் என்று 1:21ல் கூறியிருப்பது கி.மு.1004க்கு முன்பு இது எழுதப்பட்டிருக்கலாம் என்பதைக் காட்டுகிறது. தாவீது அரசன் எபூசியர்களைத் துரத்தி விட்டான் (2 சாமு.5:5-9). எனவே கி.மு.1043 - 1004க்குள் எழுதப்பட்டிருக்கலாம். இதிலுள்ள நிகழ்ச்சிகள் கி.மு.1350-1045 வரையுள்ளது.

இஸ்ரவேலை 17 நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துள்ளனர். அவர்களில் சிலர் போர் வீரர்களாகவும் (கிதியோன், நத்தானியேல்) ஆசாரியர்களாகவும் (ஏலி), தீர்க்கதரிசிகளாகவும் (சாமுவேல்) இருந்து இருக்கின்றனர். இவை கிறிஸ்துவின் மூன்று பண்புகளை வெளிப்படுத்துகிறது. இவர் தீர்க்கதரிசி, ஆசாரியர், அரசர் ஆவார்.

1. இஸ்ரவேலின் வீழ்ச்சி	**1:1 – 3:4**
2. இஸ்ரவேலரின் விடுதலை	**3:5 – 16:31**
3. இஸ்ரவேலரின் பாவம்	**17 – 21வரை**

நியாயாதிபதிகள் 2:6-23

மறக்கும் மனிதன் - மாறாத தேவன்

தேவனைத் தேடுவது நமக்கு ஒரு தொடர் அனுபவம். அது நம்முடைய வாழ்வில் மட்டுமன்றி, நம்முடைய சந்ததியினரின் வாழ்க்கையிலும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

நூனின் குமாரனாகிய யோசுவா தன்னுடைய 110 வயதில் மரணத்தை சந்திக்கிறான். இஸ்ரவேல் மக்கள் வனாந்திர யாத்திரையில் கர்த்தருடைய வழிநடத்துதலையும், அவர் செய்த பெரிய காரியங்களையும் கண்டார்கள். யோசுவாவைப் போன்று கர்த்தரையே சேவிப்போம் என்று உடன்படிக்கை செய்தனர். ஆனால் அவனுக்குப் பின் வந்த சந்ததி தேவனை முற்றிலும் விட்டுவிட்டனர். தேவனை அறியாத பிள்ளைகள் அந்த சந்ததியில் தோன்றக் காரணம் என்ன? பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு தேவனைப் பற்றிய அறிவைப் போதிக்க தவறியதால் தானே!

பொல்லாத இஸ்ரவேலரை, பகைவர் கையினின்று மீட்க நியாயாதிபதிகளை கர்த்தர் எழுப்பினார். இது இஸ்ரவேலர் மீதுள்ள கர்த்தருடைய மனதுருக்கத்தையே காட்டுகிறது. நியாயாதிபதிகள் இருக்கும் காலம் வரையிலும் மக்கள் தேவனை தேடி வந்தார்கள். நியாயாதிபதிகளின் காலத்திற்கு பிற்பாடு மறுபடியும் கர்த்தரை மறந்து விடுவார்கள். இப்படி கர்த்தரை கோபப்படுத்திக் கொண்டே இருந்தார்கள். எனவே கர்த்தர் அவர்களினிமித்தம் துக்கமடைந்தார். மனதுருக்கம் உடைய ஆண்டவரை நான் எவ்விதம் கோபப் படுத்துகிறேன்? அவருடைய மனதுருக்கம் நம்முடைய வாழ்விலும் வெளிப் படுகிறது. நாம் தேவனுக்குப் பிரியமில்லாதவர்களாய் இருந்தாலும், தேவன் நமக்கு நன்மை செய்கிறார்.

பிதாக்களுக்கு கற்பித்த என் உடன்படிக்கைகளை மீறி நடந்தீர்கள். எனவே என் சொல்லை கேளாதே போன படியாலும், தேவனை இந்த சந்ததியினர் முற்றிலும் விலக்கியதாலும், அவர்களை தேவன் மனமடிவாக்கினார். பகைவர்களிடம் ஜனங்களை விட்டுவிடுகிறார். வசனம் 22-ல் அவர்களைக் கொண்டு இஸ்ரவேலை சோதிப்பதற்காக அப்படிச் செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆதலால் தேவன் நம்மை பரிசோதிக்கும்போது, யோபு பொறுமையுடன் இருந்தது போல், நாமும் எதற்காக தேவன் சோதனைகளை அனுமதிக்கிறார் என்று எண்ணிப் பார்ப்பதோடு தேவனின் வேளைக்காக காத்திருப்போம். இவையனைத்தும் நன்மைக்கே என்ற உணர்வோடு இருப்போம்.

ஆண்டவரே! உம்மை உண்மையாய் சேவிக்கவும், சோதனைகள் வரும் பொழுது அதை பொறுமையுடன் தாங்கவும் அருள்புரியும். ஆமென்.

நம்பிக்கையூட்டும் வார்த்தைகள்

> நம்முடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையும் மற்றவர்களுக்கு ஊக்கம் தருவதாகவும் ஆசீர்வாதமானதாகவும் இருக்க வேண்டும்.

கானானியரின் ராஜா தன் சேனாதிபதியாகிய சிசெராவைக் கொண்டு இஸ்ரவேலரைக் கொடுமையாக யுத்தம் பண்ணு என்று கட்டளையிட்டார். அவர்களை அவன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றும் வாக்குக் கொடுத்தார். இஸ்ரவேலுக்குள்ளே ஈட்டியாகிலும் கேடயமாகிலும் இல்லை. ஆனால் சிசெராவிடம் 900 இருப்பு ரதங்கள் இருந்தன. அதனால் பாராக்கால் தேவன் கொடுத்த வாக்கை நம்பமுடியவில்லை. தேவ கட்டளைக்கு கீழ்ப்படிய பயந்தான். தெபொராளோ 900 இருப்பு ரதங்களைவிட தேவன் பெரியவர் என்று விசுவாசித்தாள். பாராக்குடன் தாபோர் மலைக்குச் சென்றாள். தன் துணையின்றி யுத்தம் செய்ய அனுப்பினாள். தேவன் அவன் ஜெயம் பெறுவதற்காக சூழ்நிலையை உருவாக்கி ஜெயம் தந்தார். விசுவாச பட்டியலில் பாராக் இடம்பெற காரணமாக அமைந்தவள் தெபொராள்.

சூழ்நிலையைக் கண்டு பயந்து வாழும் மக்களிடையே தேவனை விசுவாசித்து ஜெயம் பெறச் செய்யும் தெபொராக்கள் இன்று தேவை. முதலாவது, பிரச்சனையைவிட தேவன் பெரியவர் என்ற விசுவாசம் நமக்குத் தேவை. இந்த விசுவாசம் சோர்ந்துபோய் இருக்கும் மக்களின் விசுவாசத்தை தட்டி எழுப்பும்.

சவுலிடம் தாவீது கர்த்தர் தன்னுடன் இருந்து செய்த செயல்களைக் கூறினான். கோலியாத்தைக் கண்டு பயந்த சவுலை, கோலியாத்தைவிட தேவன் பெரியவர் என்று நம்பச் செய்தான். தப்பிப் பிழைப்போம் என்ற நம்பிக்கையை இழந்திருந்த கப்பல் பயணிகளிடம் தன்னோடு பேசின தேவனின் வார்த்தைகளைக் கூறி திடப்படுத்தினான் பவுல். நம்முடைய வார்த்தைகள் மற்றவர்களை தேவனுடைய வல்லமையை விசுவாசிக்கச் செய்கிறதா? அல்லது அவர்கள் பயப்படும் காரியம் உண்மைதான் என்று பயமுறுத்துகிறதாக அமைகிறதா? விசுவாச வார்த்தைகளே நம்முடைய பயத்தை நீக்கும் ஆயுதமாகும். நம்முடைய விசுவாசத்தை வளர்க்கக்கூடிய வார்த்தைகளையே அனைவருக்கும் பிரயோஜனம் உண்டாக பேசக்கூடியவர்களாக நம்மை தேவன் மாற்றும்படி கேட்போம்.

தேவனே! விசுவாச வார்த்தைகள் எப்பொழுதும் பேசத்தக்கதாய் என்னை மாற்றும்படி என்னை அர்ப்பணிக்கிறேன், ஆமென்.

நியாயாதிபதிகள் 6:1-24

நம்மோடிருக்கும் தேவன்

சிறுமைப்பட்ட காலங்களின் சூழலில், அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்யும் தேவனுடைய சர்வ வல்லமையை எண்ணிப் போற்றுவோம்.

இஸ்ரவேலர் மீதியானியரால் மிகவும் ஒடுக்கப்பட்டனர். தங்கள் விளைச்சலின் பலனை அனுபவிக்க முடியாதபடி விளைச்சல் அனைத்தையும் மீதியானியர் கொள்ளையிட்டு சென்றனர். இச்சூழலில் கர்த்தரின் தூதன் கிதியோனைப் பார்த்து "பராக்கிரமசாலியே, கர்த்தர் உன்னோடு இருக்கிறார்" என்றார். ஒரு எளிய குடும்பத்தில் எல்லாரிலும் சிறியவனாக தன்னை நினைத்துக் கொண்டிருந்த கிதியோனால் தன்னை பராக்கிரமசாலி என்று அழைத்ததை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அது மாத்திரமல்ல, கர்த்தர் தங்களோடு இருந்தால் வாழ்க்கை எப்படி கடினமாகவும் கசப்பாகவும் இருக்கும் என்பது அவனது கேள்வி. பலமற்ற தன்னைக் கொண்டு எப்படி மீதியானியரை ஒரே மனுஷனை முறியடிப்பதுபோல முறியடிக்கச் செய்ய முடியும் என்பதை அவனால் கிரகிக்க முடியவில்லை.

தேவன் தமது திட்டங்களை செயல்படுத்த தெரிந்து கொள்ளும் மனிதர்கள் மிகவும் வித்தியாசமானவர்களே. 1கொரி.1:27-29-ன் படி ஞானிகளை வெட்கப் படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார். பலமுள்ளவர்களை வெட்கப்படுத்தும்படி பலவீனமானவை களைத் தெரிந்துகொண்டார். சிறுவயது முதல் யுத்தவீரனாக இருந்த கோலியாத்தை வீழ்த்த தேவன் தெரிந்து கொண்டது யுத்தத்தில் சற்றும் பழக்கமில்லாத தாவீது என்னும் மேய்ப்பனையே. ஒரே பிரசங்கத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் இரட்சிக்கப்படத்தக்கதாய் வேத வசனங்களைப் பிரசங்கிக்க தேவன் தெரிந்துகொண்டது பேதையும், படிப்பறி வில்லாதவருமான பேதுருவையே (அப். 4:13).

நாமும் என்னிலே எந்தவிதமான திறமையும் இல்லை என்ற தாழ்வு மனப்பான்மையுடன் ஒதுங்கி வாழ்கிறோமா? தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்ய நமக்கிருக்கிற பெலன் போதுமானது. தேவன் சாதாரண மனிதர்களைக் கொண்டே அசாதாரணமான காரியங்களைச் செய்வார். நான் உன்னோடு இருப்பேன் என்று கிதியோனுடன் சொன்ன தேவன் நம்மோடு இருந்து நம்மைக் கொண்டும் பெரிய காரியங்களைச் செய்வார்.

பிதாவே, எனக்குள்ளாய் இருக்கும் தாழ்வு மனப்பான்மையை அகற்றும். ஆமென்.

தடுமாற்றம்

> நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிற விசுவாசம், நம்முடைய வாழ்வில் காணப்படுகிறதா என்று சீர்தூக்கி பார்ப்போம்.

“உமது கோபம் என்மேல் மூளாதிருப்பதாக” நியா. 6:39 கிதியோனால் தன்னைத் கொண்டு மீதியானியரை ஒரு மனுஷனை முறியடிப்பதுபோல முறியடிப்பேன் என்று தேவன் கூறியதை நம்பமுடியவில்லை. தன்னோடு பேசினவர் தேவன் என்பதை உறுதிசெய்ய, தான் காணிக்கை கொண்டு வருமட்டும் அவ்விடம் விட்டு போகக்கூடாது வேண்டிக்கொண்டான். அதன்படி தேவன் செய்தார். ஆவியானவர் அவன்மேல் இறங்கி அவனைப் பெலப்படுத்தியபோதிலும் தன்னை மீதியானியரை முறியடிப்பார் என்பதை உறுதிசெய்ய தோலில் பனி பெய்யவேண்டும்; அதனைச் சுற்றிய பூமியில் பனி பெய்யக்கூடாது என்று வேண்டினான். அதன்படி தேவன் செய்தார். மூன்றாம்முறை தோலைச் சுற்றிமட்டும் பனி பெய்யவேண்டும் என்று கேட்டான். அதன்படியும் செய்தார். கிதியோனால் தன்னைக் கொண்டு தேவன் மீதியானியரை முறியடிப்பார் என்பதை முழுமையாக நம்பமுடியவில்லை. ஆனால் தேவன் கோபப்படாமல் எத்தனை முறை கேட்டாலும் தனக்கு பதில் தருவார் என்று அறிந்திருந்தான்.

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதக்காரியம். ஆனால் விசுவாசிக்கக் கூடாதபடிக்கு தடுமாறும்போது நம்முடைய பெலவீனத்தை ஆண்டவரிடம் கூறும்போது கோபப்படாமல் பொறுமையாக நம்முடன் இடைப்படுகிறார். இயேசுவின் காயங்களைத் தொட்டுப்பார்த்தால்தான் விசுவாசிப்பேன் என்று கூறிய தோமாவை தொட்டுப்பார்க்க சொன்னார். பேதுருவின் விசுவாசம் ஒழிந்து போகாதபடி ஜெபித்தார். அசுத்த ஆவியினால் அலைக்கழிக்கப்பட்ட மகனை இயேசுவிடம் கொண்டு வந்த தந்தையிடம் என்னால் சுகமாக்க முடியும் என்று விசுவாசிக்கிறாயா என்று கேட்டார். விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, ஆனாலும் என் அவிசுவாசம் நீங்க உதவிச் செய்யும் என்று கண்ணீருடன் சத்தமிட்டான்.

நாமும் இயேசுவின் வல்லமையை விசுவாசிக்கமுடியாமல் தடுமாறுகிறோமா? நம் அவிசுவாசம் நீங்க இயேசுவின் உதவியை நாடுவோம். தேவ சமூகத்தில் என் பிரச்சனையை நீக்கும் என்று மன்றாடுவதைவிட என் அவிசுவாசத்தை நீக்கும் என்று கதறுவோம்.

ஆண்டவரே! என் அவிசுவாசத்தை நீக்கும். ஆமென்.

திடப்படுத்தும் தேவன்

> சரியான முடிவு எடுக்க திணறுகிற பொழுது நமக்கு தெளிவான சிந்தனையையும், பெலத்தையும் கொடுத்து வழிநடத்த சர்வ வல்லவர் துணை நிற்கிறார் என்று நம்ப வேண்டும்.

“உன் கைகள் திடப்படும்” நியா. 7:11 மீதியானியரும் அமெலேக்கியரும் சகல கிழக்கத்திய புத்திரரும் திரளாய் இஸ்ரவேலருக்கு எதிராக பாளயமிறங்கினார்கள். அவர்களோடு யுத்தம் பண்ண கிதியோனோடு சென்றவர்கள் 34,000 பேர்கள். ஜெயம் இஸ்ரவேலருக்குத்தான் என்பது கர்த்தர் கொடுத்த வாக்கு. ஆனால் வெற்றிக்குப்பின், இது கர்த்தரால் வந்த வெற்றி என்று அவரை மகிமைப்படுத்தாமல் தாங்கள் கையே இரட்சித்தது என்று கர்த்தருக்கு விரோதமாகி விடுவார்கள் என்று எண்ணி கர்த்தர் அவர்கள் எண்ணிக்கையை குறைக்க செய்தார். பயமும் திகிலும் உள்ளவர்களாய் சென்ற 20,000 பேரை திரும்பி போகச்செய்தார். மீதியானவர்களில் 300 பேரை தெரிந்துக்கொண்டார். திரளான பகைவரை எதிர்க்க இந்த சிறிய எண்ணிக்கை கிதியோனுக்குள்ளாக பயத்தையும் திகிலையும் உண்டாக்கி இருக்கலாம். கர்த்தர் அவனுக்குள்ளாக இருந்த பயத்தை நீக்க பகைவரின் பாளயத்திற்கு கிதியோனை தனியாக அல்ல, அவன் வேலைக்காரரோடு அனுப்பினார். அவர்கள் பேசுவதை கேட்கச் செய்து அவன் பயத்தை நீக்கி திடப்படுத்தினார்.

பயமும் திகிலும் உள்ள ஒருவனைக் கொண்டு கர்த்தர் பெரிய காரியங்களை செய்ய முடியாது. கோலியாத்தைக் குறித்து சற்றேனும் பயமில்லாத தாவீதைக் கொண்டு இஸ்ரவேலருக்கு ஜெயத்தை கட்டளையிட்டார். கர்மேல் பர்வதத்தில் பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கு பயப்படாத எலியாவைக் கொண்டே கர்த்தரே தேவன் என்று நிரூபித்தார்.

நமது வாழ்க்கையில் பயத்திற்கு இடம் கொடுக்கும்போது, நமது விசுவாசம் குறைந்து சோர்வு நம்மை ஆட்கொள்ளலாம். நான் பயப்படுகிற நாளில் உம்மையே நம்புவேன் என்ற சங்கீதக்காரனின் அனுபவம் நமக்கு தேவை. நமது பயத்தைக் குறித்து கர்த்தரிடம் சொல்லுவோம். பயத்தை நீக்கும் தேவன் நம்மை திடப்படுத்தி எத்தனை பெரிய சவாலையும் எதிர்கொண்டு ஜெயிக்க பெலன் தருவார். நம்முடைய நன்றி பலிகளை அவருக்கு ஏறெடுத்து, அவர் ஒருவரையே மகிமைப்படுத்துவோம். பயம், தேவன் நம்மை பயன்படுத்த ஒரு பெரும் தடைக்கல் ஆகும்.

ஆண்டவரே! என் பயத்தை நீக்கி என்னை தி ப்படுத்தும். ஆமென்.

யுத்தம் செய்யும் தேவன்

நம்முடைய வாழ்வின் எந்த ஒரு சூழ்நிலையிலும் கர்த்தர் நமக்காக யுத்தம் செய்வார் என்ற திட நம்பிக்கையுடன் இருப்பது மிக அவசியம்.

"கர்த்தரின் பட்டயம் கிதியோனின் பட்டயம்" நியா. 7:20 திரளான மீதியானியரையும் அமெலேக்கியரையும் எதிர்த்து போரிட கிதியோன் அழைத்து சென்றது 300 பேர் மட்டுமே. கர்த்தர் செயல்படுவார், அவர் நமக்காக யுத்தம் செய்வார் என்ற நம்பிக்கையில், போருக்கான எந்த ஆயுதமும் எடுத்து செல்லாமல், வெறும் பானையையும், தீவட்டியையும், எக்காளத்தையும் எடுத்து சென்று வெற்றிப் பெற்றனர். நாமும் கூட நம்மையோ, நம்முடைய பலமாக உள்ளவர்களையோ நம்பாமல் கர்த்தரையே சார்ந்து வெற்றி பெறுவோம்.

கர்த்தர் எங்களுடன் இருந்தால் முற்பிதாக்கள் விவரித்து சொன்ன அற்புதங்கள் ஏன் நடக்கவில்லை என்ற கேள்வியுடன் இருந்த கிதியோன், இப்பொழுது கர்த்தர் தங்களுடன் இருந்து அவர்களுக்கு செய்த அற்புதங்களை எங்களுக்கும் செய்வார் என்று நம்பினான். கர்த்தர் என் ஆயுதமாக இருப்பதால் வேறெந்த ஆயுதமும் தேவையில்லை என்று விசுவாசித்தான். யோசுவாவின் நாட்களில் ஜனங்கள் எக்காளம் ஊதி ஆர்ப்பரிக்கும்போது பகைவர் முறிந்தோடிப்போனார்கள். இப்பொழுது பானையை உடைத்து தீவட்டியையும் கையில் ஏந்தி, எக்காளம் ஊதி "கர்த்தரின் பட்டயம் கிதியோனின் பட்டயம்" என்று ஆர்ப்பரிக்க கர்த்தர் பகைவரை முறிந்தோடச் செய்தார்.

இன்றும் நம் பிரச்சனையைத் தீர்க்க யார் எனக்கு உதவுவார்கள் என்ற ஏக்கத்துடன் இருக்கிறோமா? அல்லது என் பிரச்சனை மிகவும் பெரியது என்று சோர்ந்துபோய் இருக்கிறோமா? கர்த்தர் நம் ஆயுதமாக, பரிகாரியாக இருக்கும்போது நாம் பயப்பட வேண்டியதில்லை. கர்த்தரே என் ஆயுதம் என்று ஆர்ப்பரிக்கும்போது கர்த்தர் நமக்காக யுத்தம் செய்வார். இது நம் கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கும். ஜெயம் நமதே! கர்த்தரே என் பட்டயம் என்று விசுவாசிக்கிறவர்கள் எத்தகைய சவாலையும் பயமின்றி எதிர்கொள்வார்கள். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனால் திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் என்றவர் நமக்குண்டு. எனவே தைரியமாய் முன்னேறி செல்வோம்.

ஆண்டவரே! நீரே என் பட்டயம் என்று ஆர்ப்பரிக்க என்னை திடப்படுத்தும். ஆமென்.

நம்முடைய ஆண்டவர்

> மனுஷருடைய மாயத்தை கர்த்தர் அறிவார்; அக்கிரமத்தை அவர் கண்டும் கவனியாதிருப்பாரோ?

ஜீவனுள்ள தேவனின் பயங்கரமான மேன்மை அவருடைய படைப்பில் வெளிப்படுகிறது. இது மற்றவர் கூற்றாய் அறியப்படுவது அல்ல. மாறாக தனிப்பட்ட முறையில் உணரப்பட வேண்டும். வானிலும், பூவிலும் உள்ளவர் கள் மகிமைபடுத்தி தொழுது கொள்ளும் பராக்கிரமுள்ள கர்த்தரைக் குறித்த தன்னுடைய அனுபவத்தை சாங்கீதக்காரன் இங்கு குறிப்பிடுகிறார்.

வானோரின் தேவன் [வச.1,2]: வானதூதர்கள் ஜீவனுள்ள தேவனின் வல்லமையையும், மேன்மையையும் உணர்ந்தவர்களாக அவருக்கு உரிய மேன்மையையும், மகிமையையும் செலுத்த இங்கு அழைப்பு விடப் படுகிறது. இந்த வானோர் ஆண்டவரை அளவிலாத பயபக்தியுடனும், பரிசுத்தத்துடனும் தொழுதல் வேண்டும். ஆண்டவருடைய பயங்கரமான மேன்மையை உங்கள் சிந்தையில் கொண்டு வர முடிகிறதா?

இயற்கையின் தேவன் [வச.3-10]: ஆண்டவருடைய அழகான படைப்பாகிய இயற்கைக்கு இப்போது சங்கீதக்காரன் வருகிறார். வியக்கத்தக்க வல்லமை யோடு செயல்படும் இயற்கை, ஜீவனுள்ள தேவனின் வல்லமையையும், மகிமையையும் வெளிப்படுத்துகிறது. அவருக்கே உரிய கனமும், மகிமை யும் செலுத்தப்பட வேண்டும். வானத்து நட்சத்திரங்களும், மரம் செடி கொடி களும் வெளிப்படுத்தும் வியக்கத்தக்க அழகைப் பார்த்து எத்தனை முறை ஆச்சரியத்தில் வியந்திருக்கிறோம். அச்சமயங்களில் இத்தனை வியத்தகு படைப்பை உருவாக்கிய கடவுளுக்கு மகிமையை செலுத்த முன் வந்துள் ளோமா?

அனைத்து மக்களின் ஆண்டவர் [வச.11]: இத்தனை வியக்கத்தக்க அழகுடன் மிக கவனமாக ஒவ்வொன்றையும் இவ்வுலகில் படைத்த ஆண்டவர், அவை களை ஆள எல்லா படைப்புக்கும் மேலான மனிதனை அவர் ஆசீர்வதிக்கத் தவறவில்லை. இயற்கையை அனுபவித்து மகிழும் அனைத்து மக்களும் இந்த படைப்பின் கடவுளை மகிமைப்படுத்தி சமாதானத்தால் நிறையப் பெற அழைக்கப்பட்டுள்ளனர். நமக்கு கடவுள் கொடுத்த இயற்கையை அழிக்க விடாமல் பாதுகாக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவரே, படைப்பின்மூலம் சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் அருளுவதற்காக உம்மை துதிக்கிறோம், ஆமென்.

ஆளுகை கர்த்தருடையது!

நம் வாழ்வில் நடக்கும் அனைத்து செயல்களையும் நம்மை அரசாட்சி செய்யும் கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுப்போம்.

கர்த்தரே உங்களை ஆளுவாராக. நியா. 8:23. மீதியானியர் தலையெடுக்கக் கூடாதபடி அவர்களிடம் இருந்து தங்களை கிதியோன் மீட்டதாக இஸ்ரவேலர் கருதினர். ஆகையால் கிதியோனும் அவன் குமாரனும் அவன் பேரனும் தங்களை ஆளும்படி அவனிடம் வேண்டினார்கள். பயம் நிறைந்த தன்னை பராக்கிரமசாலியாக உருவாக்கியவர் கர்த்தர் என்பதை கிதியோன் அறிந்திருந்தான். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள். என் ஜனங்கள் என்று சொந்தம் பாராட்டப்பட்டவர்கள். எனவே கர்த்தரே அவர்களை ஆளவேண்டும் என்ற சரியான ஒரு முடிவை எடுத்தான். இன்று நம்மை யார் ஆண்டுக் கொண்டு இருக்கிறார்கள்? நமக்கு பிரியமானவர்களா? அல்லது எது நம்மை ஆளுகிறது? நம்முடைய சுயம், தன்னலம், கோபம், பொறாமை, எரிச்சல், அன்பின்மை போன்ற இவைகளா?

இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தில் இருந்து கானானுக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பை பெற்ற மோசேயும், கானானை இஸ்ரவேல் ஜனங்களுக்கு பங்கிட்டுகொடுக்கும் பொறுப்பைப் பெற்ற யோசுவாவும், கர்த்தருடைய ஆளுகைக்கு உட்பட்டு அவரது ஆலோசனையின்படியே நடந்துகொண்டனர். சாமுவேல் தீர்க்கதரிசியின் காலத்தில் தங்களை ஆள ராஜா வேண்டும் என்று ஜனங்கள் கேட்டபோது கர்த்தர் ஜனங்கள் தன்னை தள்ளிவிட்டார்கள் என்று மிகவும் விசனப்பட்டார்.

நாமும் தேவ சித்தம் இல்லாத எந்த தலைமைத்துவ பதவியையும் பொறுப்பையும் அடைய பிரயாசப்படக்கூடாது. பொறுப்புகள் கொடுக்கப்படும் போது நமது சுயம் மேலோங்காது, கர்த்தருக்கு அடிமையாக வாழ நம்மை அர்ப்பணித்து தேவ நாமம் மகிமைப்பட செயல்பட வேண்டும் கர்த்தரே ஆளுகை செய்வார், நாம் அவர் பயன்படுத்தும் கருவிகள் என்பதை மறந்துவிடக்கூடாது. எந்த இழிவான ஆதாயத்தையும் விரும்பாமல் எந்த பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் தேவனுக்காக செய்யும்போது நிச்சயமாகவே தேவன் நம்மை ஆசீர்வதிப்பார். தேவனுக்கு நான் அடிமை என்று அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையில் மாத்திரமே தேவன் ஆளுகை செய்யமுடியும்.

பிதாவே, நீர் தரும் பொறுப்புகளை நீர் விரும்பும் வழியில் நிறைவேற்ற உதவி செய்யும். ஆமென்.

பெற்றோரின் பொறுப்பு

தேவனுடைய திட்டம் வெளிப்படும் விதமாக, பெற்றோர்கள் தங்களுக்கு பிறக்கப்போகும் பிள்ளைகளை அர்ப்பணித்து வளர்த்தல் அவசியம்.

பெலிஸ்தரின் கைகளுக்கு இஸ்ரவேல் மக்களை நீங்கலாக்க சிம்சோனின் மூலம் தன்னுடைய திட்டத்தை நிறைவேற்ற, தேவன் மனோவாவின் குடும்பத்தை தெரிந்தெடுத்தார். தன்னுடைய திட்டங்களுக்கு, தேவன் நம்மை பயன்படுத்த தேர்ந்தெடுப்பது எவ்வளவு பெரிய பாக்கியம்? மனோவாவும், மலடியாயிருந்த அவன் மனைவியும், தங்களைத் தெரிந்தெடுத்ததினால் தேவ திட்டத்தை சிம்சோனின் மூலம் நிறைவேற்ற அவர்களும் தயாராய் இருந்தனர்.

பிள்ளை இல்லாத நிலையில் இருந்த மனோவாவுக்கும் அவன் மனைவிக்கும் தேவ தூதன் தரிசனம் கொடுத்து, ஒரு குமாரனை பெறுவீர்கள், அவனை எப்படியெல்லாம் வளர்க்க வேண்டும் என்பதை தெள்ள தெளிவாக கூறுகிறார்.

முதலில் மனோவாவின் மனைவியிடம்தான் கர்த்தருடைய தூதனானவர் சிம்சோனைப் பற்றி வெளிப்படுத்துகிறார். இரண்டாம் முறை தூதன் வந்தபொழுது, கணவனை அழைத்து வந்தாள். இதில் மனோவாவின் மனைவி, பிள்ளை வளர்ப்பு என்பது கணவன் மனைவி இரண்டு பேர்களின் பொறுப்பு என்பதை நமக்கு உணர்த்துகிறாள்.

மனைவியிடமிருந்து மட்டுமல்லாமல், நேரிடையாக தேவனிடமிருந்து பிள்ளையை வளர்க்க வேண்டிய முறையை அறிந்துகொள்ள வேண்டும் என்ற மனோவாவின் விருப்பத்தை, இங்கு நாம் காணமுடிகிறது. ஒரு தகப்பனாய் ஆர்வமுடன் கேட்டதினால்தான் முன் அறிவிக்கப்பட்டு பிறந்தான் சிம்சோன். தகப்பனாக தன்னுடைய பொறுப்பை உணர்ந்து, தேவ திட்டத்திற்கு தன்னை அர்ப்பணிக்கும் ஆர்வம் அவனிடத்தில் காணப்பட்டது.

பெற்றோர்களாக, மனோவாவுக்கும் அவன் மனைவிக்கும் இருந்த ஜெபம் (வச.8மு), பிள்ளையை வளர்க்க அவர்கள் காட்டின ஆர்வம் (வச.8பி), தேவதூதனை முகமுகமாக தரிசித்தாலும், அவர் சித்தத்தை நிறைவேற்றும் வரை தங்களுக்கு எந்த ஆபத்தும் அணுகாது என்ற திடநம்பிக்கை (வச.23), பொறுப்பு ஆகியவை காணப்பட்டது. நம்முடைய வாழ்விலும் பெற்றோர்களாக பிள்ளைகளை வளர்க்க இவையாவும் காணப்படுகிறதா?

தேவனே! எங்களுடைய பிள்ளைகளை, உம்முடைய திட்டத்தை நிறைவேற்றும் விதமாக வளர்ப்பதற்கு எங்களுக்கு உதவி செய்யும். ஆமென்.

கண்களின் இச்சை

கண்களின் இச்சை வாழ்க்கையை கறைப்படுத்திவிடும்.

சிம்சோன் பெலிஸ்தியரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணை திம்னாத்தில் கண்டான். அவள் அவன் கண்களுக்குப் பிரியமானவளாகக் காணப் பட்டதால், தன் பெற்றோரின் அனுமதியைக் கேட்டான். பெற்றோர் தடுத்தும், அவளைக் கொள்ள வேண்டும் என்று கூறினான். இரண்டாவது முறை பெற்றோருடன் அவளைப் பார்க்கச் சென்றான். அந்தப் பெண்ணோடு பேசினான்; அவள் அவன் கண்களுக்குப் பிரியமானவளாக காணப்பட்டாள். இப்படி ஆரம்பமான அவர்களது திருமண வாழ்க்கை 7 நாட்கள் மட்டுமே நீடித்தது. உண்மையான அன்பு அவளிடம் இல்லை. நயவஞ்சகமான அந்த பெண் சிம்சோனனிடம் தினமும் அழுது, அலட்டிக் கொண்டதால், சிம்சோன் வாலிபருக்கு போட்ட விடுகதையின் பதிலை அவளிடம் கூறினான். அவள் அதை வாலிபருக்கு வெளிப்படுத்தினாள். சிம்சோன் தோல்வியினால் தன் மனைவியோடும் வாழும் வாழ்வை இழந்தான்.

கண்களுக்குப் பிரியம் என்பதன் அடிப்படையில் அமையும் திருமண வாழ்க்கை பெரும்பாலும் தோல்வியில் முடிகிறது. தேவனுக்குப் பிரியமானது என்று அவர் சித்தம் அறிந்து நடைபெறும் திருமணங்களில் மகிழ்ச்சி, சமாதானம் காணப்படும். திருமண வாழ்க்கை மட்டுமன்றி கண்களுக்குப் பிரியம் என்று தேர்ந்தெடுப்பவை பாவத்திற்கும், தோல்விக்கும் வழி வகுக்கிறது. தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, பார்வைக்கு செழிப்பாக காணப்பட்ட சோதோமை லோத்து தெரிந்து கொண்டான். பாவம் நிறைந்த அப்பட்டணம் தேவனால் அழிக்கப்பட்ட போது எல்லா உடைமைகளையும் இழந்தான். ஏதேன் தோட்டத்தில் தேவன் விலக்கின விருட்சத்தின் கனி ஏவாளின் பார்வைக்கு இன்பம் தருவதாக தோன்றியது. அதை புசித்ததினால், ஏதேன் வாழ்வை இழந்தாள்.

கண்களின் இச்சை தேவனால் உண்டானதல்ல; அது உலகத்தால் உண் டானது (1யோ.2:16). அது நம்மை பாவ வாழ்க்கைக்கு வழி நடத்தும். யோபு வைப் போல நம் கண்களோடு உடன்படிக்கை செய்வோம் (யோபு 31:1). அப்பொழுது தான் உலகத்தின் கண்ணிகளுக்கு நாம் தப்பிக் கொள்ளமுடியும். கண் தெளிவாயிருந்தால் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும் (மத்.6:22).

ஆண்டவரே, என் வாழ்க்கை கறையாகாதபடி கண்களின் இச்சைக்கு என்னைத் தப்புவியும். ஆமென்.

நியாயாதிபதிகள் 15:1–20

இரங்கும் தேவன்

இருதயத்தின் அங்கலாய்ப்பு, விசுவாசத்தோடு தேவனை நோக்கி கூப்பிடும் சத்தமாக மாறட்டும்.

சிம்சோன் கழுதையின் தாடை எலும்பினால் 1000 பெலிஸ்தியரைக் கொன்று குவித்தான். அதன் பின் அவனுக்கு மரணத்துக்கு ஏதுவான மிகுந்த தாகம் உண்டானது. லேகியின் பள்ளத்தாக்கிலே குடிக்க அவனுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. ஆனால் அங்கே தன் கூப்பிடுதலுக்கு இரங்கும் ஜீவனுள்ள தேவன் இருக்கிறார் என்ற விசுவாசம் அவனுக்கு இருந்தது. கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான். கர்த்தர் லேகியிலுள்ள பள்ளத்தை அவனுக்காக பிளக்கப்பண்ணி தண்ணீர் ஓடிவரச் செய்தார். அவன் குடித்து உயிர் பிழைத்தான்.

நெருக்கத்திலே கூப்பிடும்போது அவர் நம் சத்தத்தைக் கேட்டு விசாலத்திலே நம்மை வைக்கிறார். உண்மையாய் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் தேவன் சமீபமாயிருக்கிறார். எரிகோவுக்கு போகிற வழியிலே குருடனாகிய பர்த்திமேயு உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். இயேசு அவ்வழியே கடந்துச் செல்கிறார் என்பதை அறிந்தவுடன் தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று தன்னை அதட்டியவர்களையும் பொருட்படுத்தாமல் அதிகமாய் சத்தமிட்டான். அவன் சத்தத்தில் தேவனால் நிச்சயமாக தன்னை பார்வையடைய செய்ய முடியும் என்ற விசுவாசம் இருந்தது. அந்த சத்தத்தைத் தாண்டி இயேசுவால் செல்ல முடியவில்லை. இயேசு அவனுடைய கூப்பிடுதலுக்கு இரங்கி, அவனை பார்வையடையச் செய்தார்.

ஆம்! இயேசு ஒருபோதும் நம் அங்கலாய்ப்பின் சத்தத்தைக் கடந்து செல்ல மாட்டார். என் சத்தம் அவரைக் கடந்துச் செல்லவிடாது; பதில் செய்யாமல் அவரால் செல்ல முடியாது என்ற விசுவாசத்துடன் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து எழும்பும் சத்தம், அவர் கரத்திலிருந்து நமக்கு அற்புதத்தை பெற்றுத் தரும். கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுக்கு ஆகாரம் கொடுக்கும் தேவன் அவர். பறவைகளைவிட அவர் பார்வையில் நாம் விசேஷித்தவர்கள்; கட்டுண்டவர்களின் பெருமூச்சைக் கேட்க வானத்திலிருந்து பூமியின்மேல் கண்ணோக்கமாகும் தேவன் அவர் (சங்.101:19); விசுவாசத்தோடு கூப்பிடுவோம்; கர்த்தர் நிச்சயமாகவே நமக்கு இரங்குவார்.

கர்த்தாவே, நீர் என் சத்தத்திற்கு பதில் கொடுக்கும் தேவனாக இருக்கிறபடியால் நன்றி. ஆமென்.

நியாயாதிபதிகள் 16:1–22

கர்த்தர் இல்லாத வாழ்வு

பரிசுத்த ஆவியின் நிறைவைப்பெற்ற நாம், பரிசுத்தத்தை காத்துக் கொள்ள வேண்டும்.

தாயின் கருவில் உருவாகும் முன்பே சிம்சோனை தேவன் தனக்கென்று நசரேயனாக தெரிந்து கொண்டார். அவனது தலையில் சவரகன் கத்திபடக் கூடாது என்பது தேவனின் கட்டளை. அவன் ஆசீர்வதிக்கப்பட்ட பிள்ளையாக வளர்ந்தான். சிம்சோன் சவாலை மேற்கொள்ள வேண்டிய நேரங்களில் எல்லாம் தேவ ஆவியானவர் பலமாக அவன்மேல் இறங்கினார். அந்த பலத்தால் சிங்கத்தை ஆட்டைப்போல கிழித்தான். பலமான கயிறுகளால் கட்டப்பட்ட நிலையில் நெருப்புப்பட்ட நூல்போல் அதை அறுத்து தன்னை விடுவித்துக் கொண்டான். ஒரு கழுதையின் தடை எலும்பினால் 1000 பெலிஸ்தியரைக் கொன்றான்.

தேவ பெலத்தால் அசாதரணமானக் காரியங்களைச் செய்த சிம்சோனுக்குள் பெண்களுடன் தகாத உறவு கொள்ளும் பெலவீனம் இருந்தது. தெலீலாளின் மடியில் தூங்குவதை விரும்பினான். தன் உயிருக்கு ஆபத்து என்று அறிந்தும் அவள் உறவை துண்டித்துக் கொள்ள முடியவில்லை. சாகத்தக்கதான மனசலிப்பு ஏற்பட்டபோது தேவ இரகசியத்தை வெளிப்படுத்தினான். அவனுடைய தலையில் சவரகன் கத்திபடகூடாது என்ற கட்டளையை மீறி அவன் தலைமுடி சிரைக்கப்பட்டது. தேவன் தன்னைவிட்டு விலகியதையும் தன் பெலன் போய்விட்டதையும் அறியாதிருந்தான் (வசனம் 20). தேவன் இல்லாத வாழ்வு தோல்வியே என்பதை அப்பொழுதுதான் கண்டறிந்தான்.

தேவனது திட்டம் நிறைவேற நம்மைப் பயன்படுத்த நமக்குள் ஒரு பரிசுத்த வாழ்வு அவசியம். இச்சைக்கு இடம் கொடுத்தால் நமது முடிவு பரிதாபமாகிவிடும். பண ஆசைக்கு இடம் கொடுத்த யூதாஸ் தற்கொலை செய்து மரித்தான். கேயாசி குஷ்டரோகியானான். பெண் ஆசைக்கு இடம் கொடுத்த சாலமோன் ராஜ்ய பாரம் இரண்டாக பிரிந்தது. சிம்சோன் கண்களை இழந்து சிறைக் கைதியானான். நமது பெலன் கர்த்தர் நம்முடன் இருக்கும் வரை தான் என்பதை உணர்ந்து தேவ ஒத்தாசையுடன் நம் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்வோம். கர்த்தர் இல்லாத வாழ்விலே தோல்வி, வேதனை, துக்கம் என்று அனைத்துமே வரும். கர்த்தர் என் வாழ்விலே இருக்கிறாரா?

ஆண்டவரே, பாவத்துக்கு இடம் கொடாமல் உமக்கு முதலிடம் கொடுக்க எனக்கு உதவி செய்யும். ஆமென்.

எனது இலக்கு

தேவ திட்டத்தை நம் வாழ்வில் உணர்ந்து, பக்தி, பரிசுத்தம், விசுவாசம் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

சிறைச்சாலையில் குருடனாக மாவாட்டவும், பெலிஸ்தருக்கு வேடிக்கை காட்டவும் தேவன் சிம்சோனை தெரிந்துக் கொள்ளவில்லை. பெலிஸ்தரிடம் இருந்து இஸ்ரவேலரை இரட்சிக்க எழுப்பப்பட்ட இரட்சகன் சிம்சோன். 20 வருடங்கள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான் (வச.31). அவனைக் குறித்த பயம் பெலிஸ்தருக்குள் இருந்தது. தேவனது திட்டத்தை அறிந்தும் அவரது ஆளுகைக்கு உட்படாமல் தனது பார்வைக்குப் பிரியமான வழியையே தெரிந்துக் கொண்டான். தனது பலத்தை இழந்தான்; கண்களை இழந்தான்; நியாயாதிபதியாக இரட்சகனாக வாழ வேண்டிய சிம்சோன் கோமாளியாக பெலிஸ்தருக்கு வேடிக்கைக் காட்டும் சிறைக் கைதியாக வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டான். பெலிஸ்தரோடே சேர்ந்து தன் உயிரையும் மாய்த்துக் கொண்ட தற்கொலை படை வீரனாக தன் வாழ்வை முடித்தான்.

தேவனது சித்தத்தை நாம் விரும்பும் வழியில் நிறைவேற்ற முடியாது. இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை. உமது சித்தப்படியே எனக்கு ஆகக் கடவது என்று மரியாளைப் போல அர்ப்பணிக்கும் வாழ்வு தேவை. தனக்கு லாபமாயிருந்தவைகளை நஷ்டமும் குப்பையுமாக எண்ணிய பவுலின் அனுபவம் தேவை. எதற்காக பிடிக்கப்பட்டேனோ அதை பிடித்துக் கொள்ளும் படி ஆசையாய் தொடர்கிறேன் என்ற பவுலின் வேகம் தேவை. பேதுருவைப் போல உம்மை நான் நேசிக்கிறேன் என்று முதல் அன்பை இயேசுவுக்குக் கொடுக்கும் அர்ப்பணம் தேவை.

தேவன் என் கையில் ஒரு பொறுப்பைக் கொடுத்திருக்கிறார் அல்லது ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார் என்று கூறும் நாம் அவர் நியமித்த பாதையில் அவருக்குப் பிரியமானவர்களாக வாழ்கிறோமா? தேவ திட்டத்தை விட்டு ஆதாம், ஏவாளை விலகச் செய்த பிசாசின் தந்திரங்களுக்கு இடங் கொடுக்காமல் தேவனது ஆளுகைக்கு நம்மை அர்ப்பணிப்போம். தேவ நாமம் நம் மூலமாக மகிமைப்படும். தேவ சித்தத்தை நாம் விரும்பும் வழியில் நிறைவேற்ற முடியாது. தேவ சித்தத்தை அவர் சித்தப்படிதான் நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் தேவன் மகிழ்ச்சியடைவார்.

ஆண்டவரே, என்னை குறித்ததான உமது திட்டத்தை நிறைவேற்றுவதே என் இலக்காக இருக்க உதவி செய்யும். ஆமென்.

துக்கம் சந்தோஷமாக மாறும்

> ***அதிகாலையின் மகனாகிய விடி வெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே! இது ஏன் நடந்தது?***

சுகம் [வச.1-7] : தாவீது கடவுளை நம்பி அவரை சார்ந்திருந்த வரையில் எல்லாம் நலமாகவே நடந்தன. கடவுள் அவர் ஜெபத்தை கேட்டார், இருதயத்தின் வாஞ்சையை நிறைவேற்றினார், வியாகுல நேரத்தில் பகைவரிடமிருந்து தப்புவித்தார். இன்னும் எத்தனையோ நன்மைகளை அருளினார். ஆனால் எப்போது ஆடம்பரமும், பெருமையும் அவனை ஆட்கொண்டதோ அதினிமித்தம் ஆண்டவரை அவன் துக்கப்படுத்தினான் (வசனம் 6). இப்படிப்பட்ட மனப்பான்மை நம்முடைய பிள்ளைகளிடம் இருப்பதை ஆண்டவர் பொறுப்பதில்லை. தம்முடைய கோபத்தில் ஆண்டவர் தாவீதுக்கு தம் பிரசன்னத்தை மறைக்கிறார் (வச.7பி). அவன் தன்னுடைய பெலத்தை சார்ந்து கடவுளின்றி தனித்து இயங்க முடியாது என்பதை அவனுக்கு உணர்த்த விரும்புகிறார். தாவீதைப் போன்ற மனப்பான்மை கொண்ட ஒவ்வொருவருடைய நிலையும் இதுதான். ஆனால் இங்கு ஆண்டவருடைய கோபம் நீடிக்கவில்லை. அவர் கிருபையாக இரங்கி தாவீதின் ஜெபத்தைக் கேட்டு அவனை சுகப்படுத்துகிறார். அவருடைய கோபம் ஒரு நிமிஷம் மாத்திரமே. பிழையுணர்ந்த உள்ளத்தோடு மீண்டும் அவரிடம் செல்லும்போது அவருடைய கிருபை வழிந்தோடும்.

வியாகுலம் [வச.8,9] : கடவுளிடமிருந்து ஒரு இமைப்பொழுது மறைக்கப் பட்டதைக் கூட தாவீதினால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. கடவுளால் கைவிடப்பட்ட நிலையில் ஆதங்கத்துடன் ஆண்டவருடன் தர்க்கம் செய்கிறார் தாவீது. அந்நிலையில் ஆண்டவருடைய நன்மையையும், மேன்மையையும் குறித்து சாட்சியாக அறிவிக்க முடியாது என்கிறார். அவருடைய உள்ளார்வம் ஆண்டவரை மகிமைப்படுத்துவதே. எனவே, ஆண்டவரை மகிமைப்படுத்தி கடவுள் தன்னை சுகப்படுத்த வேண்டுகிறார்.

பாடல் [வச.11,12] : கடவுள் தன்னை சுகப்படுத்தியவுடன் தன் இருதயத்தை உயர்த்தி ஆண்டவருக்கு தன் நன்றியையும் துதியையும் மிகுந்த மகிழ்வுடன் தாவீது ஏறெடுக்கிறார். இந்த ஜீவனுள்ள தேவன் நம் துக்கத்தையும் சந்தோஷமாக மாற்றுவார். நன்மை பெற்ற நாம் தவறாமல் நம் நன்றியையும், துதியையும் ஆண்டவருக்கு செலுத்த வேண்டும்.

ஆண்டவரே, உமது கிருபைக்கு உட்பட்டு சுகம் பெறவும், உமக்கு நன்றியுள்ளவனாக(ளாக) இருக்கவும் அருள்தாரும். ஆமென்.

மாற்கு 8:1–13

காரணமும், நிபந்தனையும்

> **பல நாட்களாய் நாம் ஜெபித்தும் நடைபெறாத சில காரியங்களை குறித்து நாம் யோசிக்கும்போது ஏன் என்ற கேள்விதான் முதலில் நமக்கு வரும்.**

இரு காரணங்கள் : இந்த அற்புதம் நடைபெற இருகாரணங்கள் உண்டு. ஒன்று மக்களின் தேவை. அடுத்தது ஆண்டவரின் மனதுருக்கம். மக்களின் தேவையை உணர்ந்த ஆண்டவர் நமது தேவைகளையும் அறிந்திருக்கிறார். இயேசு கிறிஸ்துவே ஜெபத்தைப் பற்றிய போதனையில் சொன்னார். ''உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்வதற்கு முன்னமே, உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்'' (மத்.6:8).

மேலும் அவர் நமது தேவையை உணர்ந்து நமக்காக மனதுருகும், பரிதபிக்கும், அனுதாபப்படும் ஆண்டவராய் இருக்கிறார். நமது தேவையை தானே அறிந்து, நமக்காக மனதுருகி, நம் தேவையை சந்திக்க விரும்பும் ஆண்டவர் இருப்பதனால் வாழ்க்கையை தைரியமாக எதிர்கொள்ளுவோம்.

இரு கேள்விகள் : இப்பகுதியில் இருக்கேள்விகள் (வச.4,5) எழுப்பப்படுகின்றன. **சீஷரின் கேள்வி:** இந்த வனாந்தரத்தில் ஒருவன் எங்கேயிருந்து அப்பங்களைக் கொண்டுவந்து இத்தனை மக்களை திருப்தியாக்க முடியும்? (வச.4) இது அவிசுவாசத்தின் வெளிப்பாடு. **இயேசு கிறிஸ்துவின் கேள்வி:** 'உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு?' (வச.5) இருப்பதை ஆண்டவரிடத்தில் கொடுத்தால் இயலும், முடியும், சாத்தியமாகும் என்ற நம்பிக்கையைத் தரும் கேள்வி.

இரு கட்டளைகள் : இயேசு ஜனங்களைப் பந்தியிருக்கக் கட்டளையிட்டார். அப்பத்தையும் மீனையும் ஆசீர்வதித்து, பிட்டு ஜனங்களுக்கு பரிமாறும்படி சீஷர்களுக்கு கட்டளையிட்டார் (வச.7) இரு குழுவினருக்கும் கட்டளை. அற்புதம் நடைபெற, ஆசீர்வாதம் பெற நாம் ஆண்டவரின் கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டும்.

நமக்கு கேள்வி : என் தேவையை உணர்ந்து இரக்கத்துடன் செயலாற்றும் அற்புதத்தின் ஆண்டவர் என்னோடிருக்கிறார் என்று உணர்கிறேனா? அவர் வார்த்தைக்கு கீழ்ப்படிய அர்ப்பணிக்கிறேனா? எதை நான் செய்கிறேன்? அவர் எதிர்பார்க்கும் கீழ்படிதல் என்னில் வருமா?

அற்புத தேவனே, உமது பிரசன்னத்தை உணர்ந்து, என் வாழ்வில் அற்புதங்களை செய்வீர் என்ற நம்பிக்கையுடன் எதிர்கொள்ள சக்தியருளும். ஆமென்.

மாற்கு 8:14–21

எச்சரிப்பு

கப்பலை நடுக்கடலில் நிறுத்துவதற்கு நங்கூரம் தேவைப்படுகிறது. நமது நங்கூரம் யார்?

விடுவிக்கும் கடவுள் : முதலில் இயேசு, பரிசேயர், ஏரோது – இவர்களின் புளித்த மாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்றார். திருமறையின் பின்னணியில் புளித்த மா என்பது தீமைக்கு அடையாளமாக, தீய உபதேசத்திற்கு உருவகமாக பயன்படுத்தப்படுகிறது. பரிசேயரின் புளித்த மா அவர்களின் கொள்கையான ஆசாரம் சடங்காச்சாரம் இவற்றிற்கு அடையாளமாகவும், ஏரோதின் புளித்தமா பதவி, செல்வம் இவற்றிற்காக உலகத்துடன் ஒத்துப்போகும் மனப்பான்மையை சுட்டிக் காட்டுகிறது. இன்றும் நம்மில் அநேகர் ஆண்டவரை விட ஆச்சாரத்திற்கும், சர்வ வல்லவரைவிட சடங்காச்சாரங்களுக்கும் முதலிடம் தந்து வாழ்ந்து கொண்டிருந்தால் நம்மிடம் பரிசேயரின் புளித்தமா காணப்படுகிறது.

தன்னல உணர்வோடு சில ஆதாயங்களுக்காக, நாம் உலகத்திற்கு ஒத்த வேஷந்தரித்து நடந்தால் ஏரோதின் புளித்தமா நம்மிடம் உள்ளது. எனவே இயேசுவின் எச்சரிப்பு அன்று சீஷருக்கு கொடுக்கப்பட்டாலும், இன்று நமக்கு ஆண்டவரிடமிருந்து வரும் எச்சரிப்பு புளித்த மாவைக் குறித்து கவனமாயிரு, எச்சரிக்கையாயிரு என்பதை எடுத்துக் கூறுகிறது.

உணர்த்தும் ஆண்டவர் (வச.17-21) : இந்தப் பகுதியில் நமதாண்டவர் தன் சீஷர்களிடம் ஏழு கேள்விகளை எழுப்புகிறார். இதற்கு காரணம் வில்லில் அம்பைத் தொடுத்து எய்வதுபோல் வினாக்களை தொடுத்து சீஷர் மனதைத் துளைக்கிறார். இப்படி 9 கேள்விகளை கணையாக தொடுத்ததின் காரணம் அவர்களை உணர்த்த, மந்த நிலைமையை, மழுங்கிப்போன மனசாட்சியை உணர்வற்ற உள்ளத்தை தட்டி எழுப்ப இந்த கேள்விக் கணைகள். உணராமல், புரியாமல் இருப்பவரை உணர்வடையச் செய்யும் ஆண்டவரின் முயற்சி. நம் வாழ்விலும் பல நேரங்களில் கேள்விகளை ஆண்டவர் எழுப்பி, நம் மனசாட்சியுடன் பேசுவதை உணர்ந்திருக்கிறோம். அதற்கு நமது பதில் என்ன? ஆண்டவரின் எச்சரிப்பை அசட்டை செய்கிறேனா? உணர்வூட்டும் ஆண்டவர் முயற்சியை அறிந்து உணர்வடைகிறேனா? நான் எந்த நிலையில் இருக்கிறேன்?

உமது பிரசன்னத்தை இந்நாளில் உணர்ந்து, என் வாழ்வில் இன்று அற்புதங்களை செய்வீர் என்ற நம்பிக்கையுடன் இத்தினத்தை எதிர் கொள்ள சக்தியருளும். ஆமென்.

மாற்கு 8:22–26

தொடப்படுதல்

ஆண்டவரே, உம்மை உமது வேதத்தின் வழியாய் நான் பார்க்க கிருபை தாரும். ஆமென்.

விழிகள் திறக்கப்படுதல் : பெத்சாயிதாவில், பார்க்கும் தன்மை இழந்தவனாய் இருந்தவனுக்கு சரீரப்பிரகாரமான தேவை அவனுடைய பார்வை. இதை அறிந்த மக்கள் அவனை இயேசுவிடம் அழைத்து வந்தனர். இயேசு அவனை ஊருக்கு வெளியே அழைத்துச் சென்றார். இயேசுவிடம் தனிமையில் அவன் இருக்கிறான். இயேசுவுடன் தனிமை அனுபவம் நமக்குத் தேவை. அங்கே அவன் விழிகளில் உமிழ்ந்து, அவன்மேல் தன் கைகளை வைத்தார். அப்போது அவன் மனிதர்களை நடமாடும் மரங்களாகப் பார்த்தான். தெளிவான பார்வை இல்லை. இயேசு மீண்டும் அவன் கண்களின்மேல் தமது கைகளை வைத்தபோது, அவன் நலமடைந்து முழுப்பார்வை பெற்றான். உமிழ்நீருக்குப் பதிலாக தன் உதிரத்தை நமக்காக கொடுத்த ஆண்டவர் நாம் ஆன்மீக நலம் பெற விரும்புகிறார்.

மனக்கண்கள் ஒளியடைதல் : இந்த அற்புதம் படிப்படியாக நிறைவேற்றப்பட்ட அற்புதம். இதனுடைய உட்பொருள் என்னவென்று பார்க்கும்போது, சீஷர்கள் அற்புதங்களை கண்ட பிறகும் ஆவிக்குரிய குருடர்களாக, சரியாக புரிந்துக் கொள்ளும் சக்தியற்றவர்களாய் இருப்பதை இயேசு சில கேள்விகளை எழுப்பி கடிந்துக் கொள்வது. இதற்கு முந்தைய பகுதியிலே (வச.17-21) இன்னுமா உணராமலும், புரியாமலுமிருக்கிறீர்கள்? உங்கள் உள்ளம் மழுங்கியா போயிற்று? கண்களிருந்தும் நீங்கள் காண்பதில்லையா? என்று வினாக்களை தொடுத்தார். அவர்களும் இந்த பெத்சாயிதா குருடனைப் போல் ஆன்மீகக் குருடர்களாயிருக்கிறார்களென்பதை சுட்டிக்காட்டும் அற்புதம். அவர்கள் கண்கள் படிப்படியாக திறக்கப்பட வேண்டியதின் அவசியத்தை உணர்த்தும் அற்புதம். இதற்கடுத்த பகுதி (வச.27-29) அதே சீஷர்களிடம் நீங்கள் என்னை யார் என்று சொல்கிறீர்கள்? என்று வினவியபோது, பேதுரு நீர் கிறிஸ்து, மேசியா என்றான். நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து (மத்.116) என்ற அறிக்கை இப்போது அவன் ஆன்மீகக் கண்கள் முழுமையாய் திறக்கப்பட்டு இயேசுவைத் தெளிவாக யார் என அறிந்தான் என்பதை பார்க்கிறோம். மனக்கண்கள் ஒளியடைந்தால் தான் இயேசு யார் என்பதை தெளிவாக அறிய முடியும்.

ஆண்டவரே, நீர் உம்முடைய வேதத்தின் வழியாய் என் உள்ளத்தில் பேசியதற்காய் உமக்கு நன்றி. ஆமென்.

என்ன எதிர்ப்பார்க்கிறார்?

இயேசுவை பின்பற்ற விரும்புவோரிடம் அவர் என்ன எதிர்பார்க்கிறார்?

இயேசு யார்? [வச.27-30] : மக்கள் தன்னை யார் என்று சொல்லுகிறார்கள் என்ற கேள்விக்கு சிலர் யோவான் ஸ்நானகன், சிலர் எலியா, வேறு சிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்ற விடை கிடைத்தது. யோவான் ஸ்நானகன் அருளுரையின் மூலம் மக்களால் அறிப்பட்டவன். எலியா தன் ஜெபத்தினால், தீர்க்கதரிசிகள் முன்னுரைப்பதினாலும், தைரியமாய் சத்தியத்தை எடுத்துரைப்பதினாலும் அறிப்பட்டவர்கள். இயேசு யோவான் ஸ்நானகனைப் போல் வல்லமையான அருளுரைஞர். எலியாவைப் போல் பிதாவிடம் மன்றாடும் ஜெப வீரர். தீர்க்கதரிசியைப் போல் பின்னால் நடப்பதை முன்னுரைப்பது மட்டுமன்றி சத்தியத்தை யாருக்கும் அஞ்சாமல் எடுத்துரைக்கும் துணிச்சலுள்ளவர். பின்னர் இயேசு கேட்ட கேள்வி : 'நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?' தனிப்பட்ட விதத்தில் இயேசு எனக்கு யார்? அவருக்கும் எனக்கும் என்ன உறவு? நான் அவரை என் அனுபவத்தில் எப்படி அறிந்திருக்கிறேன்? பாவத்திலிருந்து என்னை இரட்சித்த இரட்சகராக, அக்கிரமத்தினின்று மீட்டுக் கொண்ட மீட்பராக நான் அறிக்கையிடக்கூடிய அனுபவம் உண்டா என ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அவர் எதற்காக வந்தார்? [வச.31-33] : அவர் தான் பாடுபட்டு ஆகாதவரென்று தள்ளப்பட்டு, கொல்லப்பட்டு பின் மூன்றாம் நாளைக்குப்பின் உயிர்த்தெழவும் வேண்டுமென முன்னறிவிக்கிறார்? மற்ற மனிதர்கள் வாழ்வதற்காகப் பிறந்தவர்கள். இவர் ஒருவர்தான் சாகப்பிறந்தவர். அது மட்டுமல்ல, தனது சாவினால் மரணத்தால் மனுக்குலம் வாழ்வு பெற, நிலையான வாழ்வைப் பெற்றுக்கொள்ள பிறந்தவர். அவர் பணிவிடை கொள்ள வராமல் பணிவிடை செய்யவும் தமது உயிரையே மீட்கும் பொருளாய் தரவும் வந்தவர்.

அவர் எதிர்பார்ப்பு [வச.8:33-9:1] : தம்மை பின்பற்ற விரும்புவோரிடம் ஆண்டவர் இயேசுவின் எதிர்பார்ப்பு தன்னை பின்பற்றவிரும்புகிறவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னை பின்பற்ற வேண்டும் என அவர் எதிர்பார்ப்பை நிறைவேற்ற நாம் நம்மை வெறுக்கவும், அவரவர் தம் தம் சிலுவை எடுக்கவும் ஆயத்தமா?

ஆண்டவரே, நீர் எனக்கு முன்மாதிரியாய் இருந்ததுபோல நானும் உம்மை முன்மாதிரிகளை பின்பற்றி வாழ எனக்கு உதவிடும், ஆமென்.

மறுரூப மாட்சி,

> அழகுமில்லை சௌந்தரியமும் இல்லை; சிலுவையில் இரத்தம் சிந்தி தொங்கினார் உனக்காக!

இயேசு அடைந்த மாட்சி (வச.2,3): இயேசு தன் மூன்று சீஷர்களுக்கு முன்பு மறுரூபம், மாற்றுருவாக்கம் அடைந்தார். இது கூட்டுப்புழு வண்ணத்துப் பூச்சியாக மாறுதல்போல் அடைகின்ற மாற்றம். மேலும் உள்ளிருந்து வரும் ஒன்றினால் ஏற்படும் வெளிப்புறத் தோற்றத்தில் மாற்றம். எனவே இது ஆள் தன்மையில் உண்டாகும் மாற்றுருவாக்கம். அதுமட்டுமல்ல அவர் ஆடை உறைந்த மழையைப்போல வெண்மையாய் பிரகாசித்தது. இது அவரின் பாவமற்ற தன்மைக்கு, மாசு மருவற்ற தன்மைக்கு அடையாளம். மேலும் உயிர்த்தெழுதலுக்குப்பின் இயேசு தரவிருக்கும் திருக்காட்சியின் முன் ருசியாக அமைந்தது.

சீஷர் கண்ட காட்சி (வச.4-6): இப்படி இயேசு அடைந்த மாற்றுருவாக்கத்துடன் பழைய ஏற்பாட்டு பக்தர் மோசேயும், எலியாவும் இயேசுவுடன் உரை யாடிக் கொண்டிருப்பதையும் சீஷர்கள் கண்டார்கள். மரித்த மாமனிதன் மோசேயும் (உபா.34:5,6), உயிருடன் எடுத்துக்கொள்ளப்பட்ட எலியாவும் (2இராஜா.2:11) காட்சி கண்கொள்ளாக்காட்சியன்றோ. மரித்து, உயிர்தெழப்போகும் விசுவாசி களின் பிரதிநிதியாக மோசேயும், இயேசுவின் 2ஆம் வருகையின்போது அதுவரை உயிரோடிருந்து எடுத்துக் கொள்ளப்படப்போகும் விசுவாசிகளின் பிரதிநிதியாக எலியாவும் காட்சி தந்தனர் போலும். (1 தெச. 4:14-17)

பிதா கொடுத்த சாட்சி (வச.7-9): மேகத்திலிருந்து உண்டான பிதாவின் குரல், இவர் என்னுடைய நேசகுமாரன்: இவருக்கு செவி கொடுங்கள் என்று ஒலித்தது. பிதாவினால் ஏற்கெனவே தன் ஒரே பேரான குமாரனைக் குறித்து திருமுழுக்கின்போது (மாற்கு 1:11) ஒலித்த குரல் அன்று இயேசுவை யாரென்று வெளிப்படுத்தியது. இப்போது நாம் செய்யவேண்டிய கடமையை உணர்த்தும் குரல் "இவருக்கு செவி கொடுங்கள்". இதன்பொருள் 'இவர் சத்தம் கேட்டு, சித்தம் செய்யுங்கள்' என்பதே. நமது கண்கள் திறக்கப்பட்டு திருக்காட்சியாக இயேசு அடைந்த மாட்சியைக் காண்போம். பிதாவானவர் கொடுக்கும் சாட்சியைக் கேட்க நமது செவிகள் திறக்கப்பட்டு அவர் சித்தம் செய்ய நமது உள்ளம் இயேசுவின் பக்கம் திருப்பப்படட்டும்.

ஆண்டவரே, என் ஜெபம் கேட்கப்படும் என்கிற நம்பிக்கையோடு உம்மை நோக்கிப் பார்க்க எனக்கு கிருபை தாரும். ஆமென்.

கிறிஸ்தவ வாழ்வில் விசுவாசம்

நம்முடைய விசுவாசம் எப்படிப்பட்டது? அது வளருவதற்கு நாம் என்ன செய்கிறோம்?

கிறிஸ்தவ வாழ்வில் விசுவாசம் என்பது மிக முக்கியமானது. இது நாள்தோறும் வளர்ந்து பெருக வேண்டும்.

கடிந்து கொள்ளப்பட்ட விசுவாசம் :- பேதுரு, யாக்கோபு, யோவானைப் போல் மற்ற 9 சீஷர்களையும் மறுரூபமலைக்கு ஏன் இயேசு அழைத்துச் செல்லவில்லை என்பதற்கு வச.19 பதில் தருகிறது. மற்றவர்களது கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாததையும், தங்களிடம் வந்த பிசாசு பிடித்திருந்தவனைச் சுகமாக்க முடியாததையும் சீஷர்களது விசுவாசக் குறைவையும் காட்டுகிறது. கிறிஸ்துவின் சீஷன் என்றால் அவரைப் போலிருக்க, வாழ, செயல்பட வேண்டும் என்று இவ்வுலகம் எதிர் பார்க்கிறது. நமது விசுவாசமின்மை நாம் செய்ய வேண்டிய ஊழியத்தைப் பாதிக்கிறது.

ஊக்கப்படுத்தப்பட்ட விசுவாசம் :- சீஷர்களது விசுவாசம் இன்மையைக் கடிந்து கொண்ட இயேசு, இந்தத் தகப்பனின் விசுவாசக் குறைவை நீக்க ஊக்கப்படுத்தினார். இவனிடம் விசுவாசமும், சந்தேகமும் ஒன்று சேர்ந்திருக்க இயேசு கண்டார். தன் மகனுக்குச் சுகத்தைப் பெறலாம் என்று விசுவாசித்து வந்தவன், சீஷர்களது செயல்களினாலும், வாதம் செய்த வேதபாரகர்களினாலும் சந்தேகத்திற்குள்ளானான். மனிதர்கள் நம் விசு வாசத்தை தளரச் செய்தாலும், கர்த்தர் நம் விசுவாசத்தைப் பெருகச் செய் கிறார்.

பெற வேண்டிய விசுவாசம் :- ஏன் எங்களால் கூடாமற் போயிற்று என்று சீஷர்கள் எழுப்பிய வினாவுக்கு இயேசுவின் பதிலை வச.30ல் காண்கிறோம். சில அசுத்த ஆவிகளை எளிதில் விரட்டி விட லாம். வேறு சில அசுத்த ஆவிகள் சக்தி வாய்ந்தவை. இதனை விரட்டுவதற்குச் சிறப்பான வல்லமை நமக்குத் தேவை. இதனை ஜெபத்தின் மூலமாகவும், கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தாலும் பெறுகிறோம். சிறு விசுவாசமுள்ள ஜெபம் பெரியவை களைச் சாதிக்க உதவுகிறது. நம்முடைய ஜெப வாழ்வு எப்படி இருக்கிறது?

தேவனே, என் அவிசுவாசத்தை நீக்கி, விசுவாசத்தை வர்த்திக்கச் செய்தருளும். ஆமென்.

அசைக்கமுடியாத நம்பிக்கை

நாம் கடவுளிடம் வைக்கும் பூரணமான நம்பிக்கையால் அவரை மகிமைப்படுத்துகிறோம்.

தனக்கு விரோதமாக எழும்புவோரிடமிருந்தும், தான் கடந்து போகும் வேதனையிலிருந்தும் தன்னை விடுவிக்க ஆதங்கத்தோடு தாவீது ஆண்டவரிடம் கேட்கிறார். கடவுள் தன்னை விடுவித்தபோது அவர் தன் நன்றியை தெரிவிக்கிறார்.

இருளான சூழ்நிலை: தாவீது அரசன் கடினமான சூழ்நிலைக்குள் கடந்து போகிறார். அவர் யாராலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எப்பக்கம் திரும்பினாலும் மக்கள் அவரை இகழ்ச்சியுடன் பார்க்கின்றனர். தான் கைவிடப்பட்டது போலவும் தனித்து விடப்பட்டது போலவும் உணருகிறார். அவர் துயரத்தை பகிர்ந்து கொள்ள ஒருவருமில்லை. இப்படிப்பட்ட இருளான சூழ்நிலை சில சமயம் நம் வாழ்விலும் ஏற்படலாம். ஆனால் இப்படிப்பட்ட சூழலை நாம் எவ்விதம் சந்திக்கிறோம்? பரிகாரம் தேடி யாரை நோக்கிப் பார்க்கிறோம். யாரை நம்புகிறோம்?

கடவுளிடம் தஞ்சம் : நாம் நம்பின மக்கள் நம்மை கைவிடும் போது, மீளமுடியாத இடத்திற்கு சென்று விட்டோம் என யோசிக்கிறோம். தான் எதிர்பார்க்கும் தஞ்சமும், விடுதலையும் பெற ஆண்டவர் ஒருவரே நம்பக்கூடியவரும் அணுக வேண்டியவரும் என அறிந்திருந்தார். இந்நிலையில் தன்னை பகைவரின் கைக்கும், தன்னை இகழ்வோர் நிமித்தம் ஏற்படும் வியாகுலத்தினின்றும் விடுவிக்க ஆண்டவரிடம் விண்ணப்பிக்கிறார். கர்த்தர் தாவீதின் நம்பிக்கையை மதித்து அவர் எதிர்பார்த்த வண்ணம் விடுவிக்கிறார். தாவீதைப் போல் சரியான நபரையே அணுகியிருக்கிறோம் என உணர்ந்திருக்கிறாயா?

விடுதலையின் விளைவு : கடவுளால் விடுவிக்கப்பட்ட பின்பு தான் பெற்ற ஆசீர்வாதத்தின் இரகசியத்தை தன்னுள் அடைத்து வைக்க விரும்பவில்லை தாவீது. கடவுளின் ஆசீர்வாதம் பெற அவரை நம்பிக்கையுடன் அணுக வேண்டும் என மற்றவர்களையும் அறிவுறுத்துகிறார். நம்முடைய வேதனையும், துக்கமும் சில சமயம் மற்றவர்கள் ஆசீர்வாதம் பெற கருவிகளாக இருக்க முடியும் என்பதை மறக்க வேண்டாம்.

ஆண்டவரே, உம்மை நம்புவதன் மூலம் உம்முடைய ஆசீர்வாதத்திற்கு உரியவனாயிருக்கவும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கவும் உதவியருளும். ஆமென்.

உத்திரவாதம்

> உடன்படிக்கையை கைக்கொள்வதும் அதை மீறுவதும் நாம் தேவனுடன் கொண்டிருக்கும் நல்லுறவைப் பொறுத்தது.

யாக்கோபும், லாபானும் : யாக்கோபு தன் மாமனாகிய லாபானை விட்டு பிரிந்து போகும் தருணத்தில், லாபான் யாக்கோபிடம் தன் பிள்ளைகளின் எதிர் காலத்திற்கு உத்திரவாதம் கேட்கிறான். இதற்கு அடையாளமாக இருவரும் ஒரு கல்லினை தூணாக நிறுத்தி, கற்குவியல் உண்டாக்கி அதன்மேல் போஜனம் பண்ணினார்கள். பின்பு லாபான் நாம் போஜனம் பண்ணின இந்த கற்குவியல் எனக்கும் உனக்கும் சாட்சி. இப்போதும் நம்முடனே ஒருவரும் இல்லை. எனவே இவற்றிற்கு தேவனே சாட்சி என்றான். தன் பிள்ளைகளை விட்டு வேறு திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்றும், இதற்கும் தேவனே உனக்கும் எனக்கும் சாட்சி என்றான். இந்த பிரிவு நிரந்தரமானது என்று உணர்ந்த லாபான், யாக்கோபுடன் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ள முன்வந்தான். தான் யாக்கோபுக்கு அவ்வபோது செய்த தீமைகளை நினைத்து, யாக்கோபு திரும்பவுமாக வந்து தன்னை பழிவாங்கக்கூடாது என்ற பயத்தினாலும் இந்த உடன்படிக்கையை லாபான் யாக்கோபுடன் ஏற்படுத்திக்கொண்டான்.

லாபானின் பிரிவு : மேலும் லாபான் தீங்கு செய்யும்படி நான் உன்னிடத் திற்கோ நீ என்னிடத்திற்கோ வராதபடி இந்த தூண் சாட்சி. இதை மீறி னால் நம் முற்பிதாக்களின் தேவன் உனக்கும் எனக்கும் நடுவாக நின்று நியாயந்தீர்ப்பாராக என்று யாக்கோபிடம் கூறினான். அதிகாலமே எழுந்திருந்து தன் பிள்ளைகளை முத்தம் செய்து ஆசீர்வதித்து, பின்பு புறபட்டு தன்னுடைய இடத்துக்கு திரும்பினான் லாபான். உலகபிரகாரமான வாழ்க்கையில் உடன்படிக்கை போடுவது என்பது எளிது. ஆனால் போட்ட உடன்படிக்கையில் நிலைநிற்பது கடினம். நாமும் கூட புதுவருடத்தில் ஆண்டவருடன், ஆண்டவரே நான் இதைசெய்யமாட்டேன், இப்படி இருப்பேன் என்று கூறுகிறோம். ஆண்டவர் நம்மிடம் எந்த உடன்படிக்கையையும் எதிர்பார்க்கவில்லை. நாமே உடன்படிக்கையும் செய்கிறோம், நாமே அதை விட்டுவிடுகிறோம். ஆனால் தேவனோ நீதி உள்ளவராய் இருந்து, நம்மில் அன்பு கூர்ந்து தமது கற்பனைகளை கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆயிரம் தலைமுறை மட்டும் உடன்படிக்கையையும், தயவையும் காக்கிறவராய் இருக்கிறார் (உபா. 7:6). இவற்றை சிந்திப்போம்! செயல்படுவோம்!

> ஆண்டவரே உம்முடைய உடன்படிக்கையில் நிலைத்து நிற்கும் பிள்ளையாய் இருக்க உதவிசெய்யும். ஆமென்.

ஆதியாகமம் 32:1–21

போராட்டம்

நான் பயப்படும் நாளிலே கர்த்தரை நம்பிடுவேன்; என் கோட்டையும் அரணுமாயிருக்கிற அவரையே நம்பிடுவேன்.

சமரசம் செய்துகொள்ள விரும்புகிறவர்கள் முதலில் தூது அனுப்பியும், பின் வெகுமானங்களை அனுப்பியும் கோபத்தை தணிக்க முயற்சி செய்வார்கள். இங்கும் தன் சகோதரன் மனநிலையை அறிந்து கொள்ள யாக்கோபும் வெகுமானங்களை அனுப்பி வைக்கிறான். யாக்கோபு எடுத்த முயற்சிகள் அவனுக்கு நன்மையாய் முடிந்ததா அல்லது வீணாய் போயிற்றா?

இருபது வருடங்கள் கடந்து வந்தாலும், ஏசா தனித்து வராமல் 400 பேருடன் எதிர் கொண்டு வருகிறான் என்று கேள்விப்பட்டவுடன் யாக்கோபு மிகவும் கலித்து பயப்படுகிறான் (வச.7). மிகவும் பயந்ததினால் கர்த்தருக்கு முன்பாக தன்னை தாழ்த்தி வேண்டுகிறான். தன் சகோதரனுக்கு வெகுமதிகளை அனுப்பி வைக்கிறான். தனக்குண்டான மக்கள் அனைவரையும், தன்னுடைய சம்பத்துக்களையும் ஆற்றை கடக்கப்பண்ணுகிறான். எதிர்பாரா சம்பவங்களை எளிதில் வெற்றி கொள்ளும் மன தைரியம் நமக்கு வேண்டும்.

தன் மனதை தைரியப்படுத்திக்கொண்டு வேலைக்காரர்களிடம் ஏசாவுக்கு வெகுமதிகளை கொடுக்கிறான். வச.14,15ல் கொடுத்தனுப்பின வெகுமதிகளின் பட்டியலை வாசிக்கமுடியும். வேலைக்காரரிடம் தன் சகோதரன் இவைகள் யாருக்கு என்று கேட்டால், இவையனைத்தும் என் ஆண்டவனாகிய உமக்கே என்று கூறுங்கள் என்றும் கூறுகிறான். எப்படியோ ஏசாவின் கைக்கு தான் தப்பிக்க வேண்டும் என்று நினைத்தே செயல்படுகிறான்.

லாபானிடமிருந்து யாக்கோபை காப்பாற்றிய தேவன் ஏசாவிடமிருந்தும் தன்னை பாதுகாப்பார் என்ற நம்பிக்கை இல்லாமல் தன்னுடன் வந்த மந்தையை இரண்டாக பிரிக்கிறான். பிலிப்பியர் 4:6ன்படி ஒன்றைக் குறித்தும் கவலைப்படாமல் நம்முடைய விண்ணப்பங்களை தேவனுக்கு ஜெபத்தின்மூலம் தெரியப்படுத்துவும். ஏசாவை காட்டிலும் பெரியவர் அவருடனே இருக்கிறார் என்பதில் அவனுக்கு நிச்சயமில்லை. யாக்கோபு சூழ்நிலையை மாத்திரமே பார்க்கிறான். நாம் சூழ்நிலைகளை கண்டு செயல்படுகிறோமா அல்லது சூழ்நிலையை காட்டிலும் பெரியவர் நம்முடன் இருக்கிறார் என்று தைரியம் கொள்ளுகிறோமா?

தேவனே, உலகத்தில் இருப்பவனிலும் எங்களில் இருப்பவர் பெரியவர் நீரே. ஆமென்.

இஸ்ரவேல்

என் இன்ப துன்ப நேரம், நான் உம்மைப் போற்றுவேன்; நான் நம்பிடும் நேசர், இயேசுவே என்றும் என்னை நடத்திடுவார்.

வெகுமதிகளை கொடுத்தனுப்பிய பின் பாளயத்திலே இராத்தங்கினான். பயம் அவனை விரட்டியது. எனவே இராத்திரியில் தன் குடும்பத்தினரை ஆற்றை கடக்க பண்ணினான். இப்பொழுது பயமுள்ளவனாயும், தனிமையாயும் நின்றான். ஒரு தேவ புருஷன் விடியுமளவும் அவனிடம் போராடினார். தேவ புருஷனிடம் போராடுவது என்பது எளிதான காரியமல்ல. ஆனால் யாக்கோபு போராடினான். ஏன் இந்த போராட்டம். அனைத்து விதமான ஆசீர்வாதங்களையும் பெற்ற யாக்கோபுக்கு பயம், தனிமை வாட்டியது. என்ன செய்வது என்று நினைத்தான். எனவே தேவ புருஷனிடம் நீர் என்னை ஆசீர்வதித்தால் ஒழிய உம்மை போகவிடமாட்டேன் என்று கூறினான்.

தேவ புருஷன் உன் பேர் என்ன என்று கேட்க, என் பெயர் யாக்கோபு என்றும், தான் ஒரு எத்தன் என்றும் முழு மனதாய் ஒப்புக்கொண்டான். யாக்கோபு தன்னுடன் போராடியவரின் பெயரைத் தெரிந்துக் கொள்ள மிகுந்த ஆர்வம் உடையவனாய் இருந்தான் (வச.32:29). ஆனால் தேவ தூதனோ யாக்கோபிடம் கேள்வி எழுப்பினது மட்டுமல்லாமல் அவனை ஆசீர்வதிக்கிறார். தன் தவறின் நிமித்தம் அவன் அடைந்த பயத்தினை, தனிமையை அறிந்த தேவ புருஷன் நீ இஸ்ரவேல் என்று அழைக்கப்படுவாய் என்று கூறி, நீ தேவனோடும் மனுஷரோடும் போராடி மேற்கொண்டாய் என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தார். நம்முடைய வாழ்க்கையிலும் பல்வேறு விதமான இடுக்கமான சூழல்களை நாம் சந்திக்கும்போது தேவனோடு போராடுவது போல இருக்கும். யாக்கோபுக்கு ஏற்பட்ட தொடை சந்து சுளுக்குப்போல நமக்கும் சில கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டாலும் இறுதியில் யாக்கோபை ஆசீர்வதித்தைப் போல நம்மையும் ஆசீர்வதிப்பார். அன்றைய நாளில் தேவ தூதர்கள் மூலம் ஆண்டவர் பேசினார். ஆனால் இப்போது வேத வசனங்கள் மூலம் நம்முடன் பேசுகிறார். வேதத்தை தியானிக்கும்போது வேத வசனங்கள் மூலம் ஆண்டவர் நம்முடைய தவறுகளை நமக்கு சுட்டிக்காட்டுகின்றார். நாம் உணர்த்தப்பட்டவர்களாய் தவறுகளை ஆண்டவரிடம் முழுவதுமாக ஒத்துக் கொள்ளுகிறோமா?

ஆண்டவரே, நீர் உணர்த்தும்போது என் தவறுகளை அறிக்கையிட்டு உம்முடைய மன்னிப்பை பெற அருள்தாரும். ஆமென்.

நமக்கு ஒரு முன்மாதிரி

நாம் வாழும் இந்த கிறிஸ்தவ வாழ்க்கை பிறருக்கு முன்மாதிரியாய் உள்ளதா?

சகோதரனை ஏற்றுக்கொண்டான் [வச.1-7] : ஒரு சிலர் மற்றவர்கள் இழைக்கும் தீங்கை தங்களுடைய வாழ்நாள் முழுவதும் மறக்காமல் இருப்பார்கள். ஆனால் யாக்கோபைக் கண்டவுடன் எதிர்கொண்டு ஓடி வந்து தன் சகோதரனை கட்டி அணைத்து முத்தம் செய்கிறான். இங்கு மன்னிப்புக்கு இடம் இல்லாதபடி செய்துவிடுகிறான். எத்தனை அருமையான அன்பு! புதிய ஏற்பாட்டில் காணாமற்போன சகோதரன் திரும்பி வந்தவுடன் மூத்த சகோதரன் அவனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் ஏசா இதற்கு விதி விலக்காகவும், நல்ல ஒரு முன் மாதிரியாகவும் நமக்கு காணப்படுகிறார். நமக்கு பிறர் செய்த தீமைகளை அன்றே மறப்பதற்கு முயற்சி செய்வோம்.

வெகுமதிகளை ஏற்றுக்கொண்டான் [வச.8-11]: தனக்கு உள்ளதே போதுமென்று வாழ கற்றுக்கொண்டான் ஏசா. எனவே யாக்கோபு வெகுமதிகளை கொடுக்கும்போது தேவன் தன்னையும் ஆசீர்வாதமாக வைத்திருப்பதாக கூறி மறுக்கின்றான். பின்பு வற்புறுத்தலின் பேரில் ஏற்றுக்கொள்கிறான். இதியலம் நமக்கு ஒரு முன்மாதிரியாய் விளங்குகிறான் ஏசா. பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது என்கிறது திருமறை.

வார்த்தைகளை ஏற்றுக்கொண்டான் [வச.12-20]: யாக்கோபை வெறுத்தவன்; இப்பொழுது ஏற்றுக்கொண்டான். யாக்கோபின் வார்த்தைகளை கேட்டு கொலை செய்ய நினைத்தவன், இப்போது மாறிவிட்டான். எவ்வித மனக் கசப்புமின்றி யாக்கோபின் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு திரும்பி செல்கிறான். தேவாதி தேவனே இந்த மாற்றங்களை ஏசாவின் மனதில் உண்டாக்கியவர். மாற்றங்கள் நம்மிடத்தல் உருவாகுவதற்கு ஏசாவைப் போல நாமும் அனுமதித்தால்தான் அனைவருடனும் சமாதான உறவைத் தொடர முடியும். யாக்கோபுக்கும், தன்னுடைய மனதில் தான் செய்த தவறுகளுக்கு தேவன் தன்னை ஏசா மூலம் தண்டிக்க அதிகாரம் உள்ளதென்று சிந்தித்திருப்பான். ஆனால் ஏசாவின் மன்னிப்பும் அவன் யாக்கோபை ஏற்றுக் கொண்ட விதமும் உறவுகளிலுள்ள சமாதானத்தின் உன்னதத்தை கற்றுக் கொடுக்கிறது. கிறிஸ்து வாழ்வில் ஒருவரையொருவர் மதித்து நடப்பதும் சமாதான உறவு கொள்ளுவதுமே சிறந்தது.

கர்த்தாவே என்னிலுள்ள ஜென்ம சுபாவம் மாறி, உமக்குப் பிரியமாய் நடக்க உதவி செய்யும். ஆமென்.

ஆதியாகமம் 35:1–15

சுத்திகரித்தான், ஆசீர்வாதத்தை சுதந்தரித்தான்

> என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி என் பாவமற என்னைச் சுத்திகரியும்.

யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவிற்கு தப்பி ஓடினபோது தேவன் அவனுக்கு தரிசனமாகி அவனை திடப்படுத்தினார். அதனால் அந்த இடத்திற்கு பெத்தேல் (தேவனுடைய வீடு) என்று பெயரிட்டான். (ஆதி. 28:18,19).

தேவன் யாக்கோபை மறுபடியும் அழைத்து பெத்தேலுக்கு போகவும் அங்கு ஒரு பலிபீடத்தை உண்டாக்கவும் கட்டளையிட்டார். அதை செய்ய தீர்மானித்த யாக்கோபு தன்னை பாதுகாத்து வழிநடத்திய தேவன் எப்படிப்பட்டவர் என்பதை அறிந்திருந்தான். ஆகவே அவன் தன் வீட்டாரையும் அவர்களோடிருந்தவர்களையும் நோக்கி அவர்களை சுத்தம் பண்ணிக் கொள்ள சொன்னான். அவர்களும் தாங்களிடத்தில் உள்ள அந்நிய தெய்வங்களை விலக்கி தங்களை சுத்தம்பண்ணிக் கொண்டார்கள். யாக்கோபு தேவனுக்கு கீழ்ப்படிந்து தன்னை சுத்திகரித்தது மட்டுமல்லாமல், தேவனுக்கு கொடுக்கவேண்டிய கனத்தையும் கொடுத்தான்.

ஒருவேளை நாம் வெளியரங்கமாய் சுத்தமுள்ளவர்கள் போல காணப்படலாம். ஆனால் நம்முடைய தேவன் இருதயத்தை பார்க்கிறவர். நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்காமல், வேறு காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்போமாயின் அதுவும் விக்கிரக ஆராதனையை மேற்கொள்வதற்கு சமமாகும். நமக்குள் ஏமாற்றுதல், பொறாமை, கோபம், பெருமை போன்ற அசுத்தங்கள் இருக்குமானால் யாக்கோபைப் போல நாமும் நம்மை சுத்திகரிப்போம்.

தேவன் மறுபடியும் யாக்கோபுக்கு தரிசனமாகி அவனை ஆசீர்வதிக்கிறார். யாக்கோபுக்கு அவர் தன்னை "சர்வ வல்லமையுள்ள தேவன்" என்றே வெளிப்படுத்துகிறார். ஈசாக்கும் யாக்கோபை சர்வவல்லமையுள்ள தேவனுடைய நாமத்தினாலேயே ஆசீர்வதிக்கிறான் (ஆதி. 28:3). ஆபிரகாமுக்கும் யாக்கோபுக்கும் கொடுத்த வாக்குத்தத்தத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படி தேவன் யாக்கோபை ஆசீர்வதித்தார். நம்முடைய பாவங்களை உணர்ந்தால் தான் அவருடைய இராஜ்யத்தில் பங்கு பெற முடியும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, நானும் உமது சிலுவைப் பாடுகளில் என்னை இணைத்துக் கொள்ள எனக்கு பெலன்தாரும். ஆமென்.

செப்டம்பர் 3

சனி

ஆதியாகமம் 35:16–29

ஒழுக்கமின்மை

பாவிகளில் பிரதான பாவியாகிய என்மேல் கிருபை பொழிந்து, இன்றைய வேதப்பகுதியை சரியாய் தியானிக்க உதவிடும்.

ராகேலின் மரணம் : யாக்கோபு பெத்தேலை விட்டு புறப்பட்டு எப்பிராத்தாவுக்கு வருகிற வேளையில் ராகேல் பென்யமீனை பெற்றாள். தன்னுடைய மரணத் தருவாயில் பிள்ளைப்பெற்று, மரணமடைந்ததால் அவருடைய குடும்பத்தினர் அவளை அங்கேயே அடக்கம் பண்ணினார்கள்.

ரூபனின் ஒழுக்கமின்மை : யாக்கோபின் மறுமனையாட்டிகள் இரண்டு பேர். மறுமனையாட்டிகளாக இருந்தாலும் அவர்களும் தாய் ஸ்தானத்தில் உள்ளவர்கள் தான். குடும்பத்திற்கு வழிகாட்டியாக முன்மாதிரியாக தாய்க்கு தலை மகனாய் இருக்க வேண்டியவன் தன் தாயுடனே தகாத உறவு வைத்துக் கொண்டான். இதனால் தனக்குப்பின் இருக்கும் தன் சகோதரர்களும் இப்படிப்பட்ட காரியங்களை செய்வார்களே என்று கொஞ்சமும் யோசிக்காமல் செய்துவிடுகிறான். யாக்கோபும் இக்காரியத்தை கேள்வி பட்டான். உடனடியாக எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என்று நாம் நினைக்கலாம். ஆனால் தன் மரண தருவாயில் பிள்ளைகளை ஆசீர்வதிக்க அழைக்கின்றான்.முதலாவது ரூபனை அழைத்து அவன் மேன்மை அடையமாட்டான் என்றும், தன் தகப்பனுடைய மஞ்சத்தை ஒழுங்கீனம் செய்தான் என்றும் சொல்கிறான். நான் செய்த காரியம் யாருக்கும் தெரியாது என்றும் அல்லது தான் செய்தது தவறாக இருந்தாலும் என்னுடைய தந்தை அதைப்பற்றி கேட்கவில்லை என்றும் ரூபன் நினைத்திருக்கலாம். பாவச் செயலை ஒருவரும் ஒருநாளும் மறைக்க முடியாது. என்றாவது ஒருநாள் அது நம்மை அழித்துவிடும். இங்கு ரூபன் செய்த தவறு அவனுடைய ஆசீர்வாதத்தை தடுத்துவிடுகிறது.

நம்மில் அநேகர் யாருக்கும் தெரியாமல் தவறு செய்கிறோம். கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் நல்லோரையும் தீயோரையும் நோக்கி பார்க்கிறது என்பதை மறந்து விடுகிறோம் (நீதி.15:3). முன்னாளில் அவன் செய்த பாவம், சேஷ்ட புத்திரனாய் இருந்தாலும் பின்னாளில் அவனுக்கு கிடைக்க வேண்டிய செங்கோல் யூதா கோத்திரத்துக்கும், ஆசாரியப் பணி லேவி கோத்திரத்துக்கும் சென்று விடுகிறது. ரூபனின் வாழ்க்கை நமக்கு மிகப்பெரிய எச்சரிக்கையாகும். விழிப்பாய் இருப்போம்!

ஆண்டவரே, நீர் எச்சரிக்கும்போது உணர்வடைந்து என்னுடைய தவறுகளை திருத்திக் கொள்ள உதவி செய்யும். ஆமென்.

யார் பாக்கியவான்?

> மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகும்.

நம்முடைய நித்திய ஆசீர்வாதத்திற்கு நாம் தவிர்க்க முடியாத ஆன்மீக பயிற்சி மனந்திரும்புதல் ஆகும்.

எது ஆசீர்வாதம்? : நம் ஆசீர்வாதம் நம்முடைய உலகப் பிரகாரமான பொருட்களைப் பொறுத்ததல்ல, மாறாக நம் பாவங்கள் மன்னிக்கப்பட்டு ஆண்டவரில் தரித்திருப்பதைப் பொறுத்ததாகும். கடவுள் ஒரு பாவியை ஆசீர்வதிக்க அவன் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்க வேண்டும். நாம் பெறும் ஆசீர்வாதம் கடவுள் தரும் மகிழ்ச்சியும், சமாதானமுமே. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதினிமித்தம் கிடைக்கும் மகிழ்ச்சிக்கு வேறு எந்த மகிழ்ச்சியும் ஈடல்ல. இந்த மகிழ்ச்சியைப் பெற்றிருக்கிறாயா?

பாவத்தை மறைப்பது : ஒரு மனிதன் செய்யும் அதிபயங்கரமான காரியம், தன் பாவத்தை மறைப்பதே. அந்த பாவத்தின் விளைவு நித்திய மரணம். பாவம் நம்மை கடவுளுக்கு தூரமாக்கி இம்மை மற்றும் மறுமைக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற தடையாயிருக்கிறது. தாவீது தன்னுடைய பாவங்களால் அலைக்கழிக்கப்பட்டபோது இந்த உண்மையை அவர் உணர்ந்திருக்க வேண்டும். தன்னுடைய பாவத்திலிருந்து வெளிவர கடவுள் தாவீதை உணர்த்துகிறார் (வச.4). மேலும் தாமதிக்காமல் தன் பாவங்களை அறிக்கை செய்து கடவுளுடன் தன் ஐக்கியத்தை திரும்பப் பெற தாவீது விரைகிறார் (நீதி.28:13). கடவுள் அருளும் மகிழ்ச்சியால் நிறைய மற்றவர்களும் இந்த அனுபவத்திற்குள் வர தாவீது விரும்புகிறார் (வச.6).

கடவுளின் வழிநடத்துதல் : நாம் கடவுளுடைய பிள்ளைகளானவுடன், நம்மை மென்மையாக தம்முடைய ஆலோசனைகளினால் கடவுள் நிறைக்கிறார். மிருகங்களை நடத்துவது போல் அல்ல. நாம் இடறாமல் (வச.8) சரியான பாதையில் சென்று அவருக்கு சாட்சி பகரும் வண்ணம் நடத்துகிறார். கடவுளின் மென்மையான நடத்துதலை உணர முடிகிறதா? அவருடைய ஆலோசனைகளை நாம் கவனித்து நடக்கிறோமா? அவர் விரும்பும் வாழ்க்கையை வாழ்கிறேனா? இந்த நிமிடமே யோசித்து பார்த்து தீர்மானம் செய்து ஆண்டவரின் பிள்ளையாய் வாழ்வோம்.

ஆண்டவரே, பாவத்தைத் தவிர்த்து உம்முடன் தொடர்ந்து ஐக்கியம் கொண்டிருக்க உதவியருளும். ஆமென்.

ஆபகூக் 1:1–11

சந்தேகங்களைத் தீர்க்கும் தேவன்

உங்களுக்குப் பிரியமானவர்கள் உங்களுக்குப் பிடிக்காத காரியத்தை செய்தால் என்ன செய்வீர்கள்?

நாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பின்னர் நமக்கு பிரச்சனைகள் வராது என்று நினைக்கிறீர்களா? இல்லை புதிய வகையான பிரச்சனைகள் தோன்றுகிறது. என் தேவன் என் ஜெபத்துக்கும் செவி கொடுக்கிறதில்லை. தேவனுக்காக உண்மையாய் உழைக்கையில் ஏன் தீமையான காரியங் களை சந்திக்கிறேன். இந்தக் கேள்விகள் உங்கள் உள்ளத்தில் எழும்பு கிறதா? கிறிஸ்தவர்கள் பல பிரச்சனைகளை எதிர்பார்க்கத் தான் வேண்டும். ஆபகூக் யூதாவில் நடக்கிற காரியங்களைப் பார்த்து சோர்ந்து போனார். ஆனால் வேறு யாரையும் நாடாது தன் பிரச்சனைகளைத் தேவனிடத்தில் கொண்டு சென்றார்.

ஆபகூக்கின் கேள்விகள்: ஏன் தேவன் அக்கறையற்றவராய் காணப் படுகிறார் என்பதே. யோசியா ராஜா காலத்தில் நடந்த சமய சீர்திருத்தங் களை மக்கள் மறந்துவிட்டனர். அவனுக்குப் பின் வந்த யோயாக்கீம் மக்களை அழிவின் பாதையில் நடத்தி வந்தான். ஆபகூக் பயன்படுத்திய வார்த்தைகளாகிய கொடுமை, அக்கிரமம், தீவினை, கொள்ளை ஆகிய வற்றைப் பார்க்கும்போது, அந்த காலம் தொல்லை நிறைந்ததும் ஆபத்து நிறைந்ததுமாயிருந்தது என்று தெரிகிறது. தேவன் ஏதாவது செய்ய வேண்டும் என்று ஆபகூக் எதிர்பார்த்தார். தலைவர்கள் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியவில்லை. நியாயம் எடுபட்டுப் போனது.

தேவன் ஆபகூக்கு அளிக்கும் பதில், தேசத்தினிடையே கிரியை செய்து கொண்டுதான் இருக்கிறேன். தேவன் ஆச்சரியமான, நம்பக் கூடாத, கேள்விப்படாதக் காரியங்களைச் செய்வார். தேவன் யூதர்களைத் தண்டிக்கத் தேவனற்ற பாபிலோனியர்களை பயன்படுத்தத் திட்டம் வைத்திருக்கிறார். அவர்களுடைய படைகளைப் பற்றி விவரிக்கிறார். அவர்களை தேவனால் மாத்திரமே தடுக்க முடியும். ஆனால் தேவன் தானே அவர்களை எழுப்பிவிடுகிறார். தேவன் ஜனங்களிடம் பொறுமையோடு காத்திருந்து பிரயோஜனமற்று போயிற்று என்று தன் கிரியையைத் தொடங்குகிறார். தேவன் உன் காரியங்களில் ஒன்றும் செய்யாது சும்மாயிருக்கிறார் என்று நினைக்கிறாயா?

ஆண்டவரே, உமக்காக பொறுமையோடு காத்திருக்க உதவி செய்யும். ஆமென்.

தேவனுக்குத் தெரியப்படுத்துவோம்

> நீங்கள் எப்போதாவது ஆண்டவரை அறியாதவர்கள் சந்தோஷமாய் இருக்கிறார்கள், எனக்கு மட்டும் ஏன் இந்த போராட்டம் என சிந்தித்தது உண்டா?

யூத ஜனங்களின் அக்கிரமம் பெருகினதால், கர்த்தர் அவர்களை புறஜாதிகளான பாபிலோனியர்களின் கையில் ஒப்புக் கொடுத்தார். என்ன தான் யூத மக்கள் கர்த்தருக்குப் பிரியமில்லாமல் நடந்தாலும், இப்படிப்பட்ட துன்மார்க்கமான பாபிலோனியர்களின் கையில் கர்த்தர் ஏன் அவர்களை ஒப்புக் கொடுத்தார்.

தேவனாயிருக்கிற எங்கள் கர்த்தர், எங்களை சாகவிட மாட்டார் என்று ஆபகூக் ஆரம்பித்தாலும், பாபிலோனியர்களின் கொடுமையால், பரிசுத்தரும் தீமையைப் பார்க்கமாட்டாத சுத்த கண்ணனாகிய கர்த்தர், துன்மார்க்கன் தன்னைப் பார்க்கிலும் நீதிமானை விழுங்கும் போது மௌனமாயிருக்கிறதென்ன? அவர்களை அதிகாரியில்லாத உயிரினங்களுக்கு சமானமாக்குகிறதென்ன? என்று புலம்புகிறார். யூத ஜனங்கள் பாபிலோனியர்களைப் பார்க்கிலும் நீதிமான்கள் என்கிறார். ஆபகூக் தனது ஜனங்களுக்கு நேரிட்ட கொடுமைகளையும், மனிதர்களிடத்தில் சொல்லி புலம்பாமல், தன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உரிமையோடு தன் ஏக்கத்தை தெரிவிக்கிறார்.

நம் வாழ்விலும், பல போராட்டங்களும், பிரச்சனைகளும், ஏற்படலாம். துன்மார்க்கர் செழித்திருக்கிறதைக் கண்டு சோர்ந்து போய் இருக்கலாம். தாவீது, எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் அநேகர் என்று சொன்னது போல நமது வாழ்விலும் காணப்படலாம். ஆனால் எதைக் கண்டும் கலங்கி மனிதர்களிடத்தில் புலம்பாமல், நம்முடைய பிரச்சனைகள் எல்லாவற்றையும் குறித்து தேவனுக்கு தெரியப்படுத்துவோம்.

பாபிலோனியர்கள் தங்களுடைய கருவிகளை (வலைகளை) போற்றி அதற்கு பலியிட்டு தூபங்காட்டுகிறதை வச.16ல் வாசிக்கிறோம். ஆபகூக் தான் ஆராதிக்கிற கர்த்தர் அநியாயத்தை நோக்கிக் கொண்டிருக்கமாட்டாதவர் என்பதை நன்கு அறிந்ததினால் கர்த்தர் தங்களை இப்படிப்பட்ட ஜாதியினிடத்திலிருந்து தப்புவிப்பார் என்று காத்திருந்தார். நாமும் காத்திருந்து பலனடைவோம்.

> ஆண்டவரே, உமக்காய் காத்திருந்து பெலனைப் பெற்றுக் கொள்ள உதவி செய்யும். ஆமென்.

ஆபகூக் 2:2–20

தேவன் பேசுகிறார்

ஆண்டவர், எனது வாழ்க்கையில் ஏன் இன்னும் இதைச் செய்யவில்லை என்று எதைக் குறித்தாவது நீங்கள் சிந்தித்தது உண்டா?

ஆபகூக்கின் அனுபவம், சங்கீதக்காரன் ஆசாப்புடையது போல காணப் படுகிறது என்பதை சங்கீதம்75ல் காணலாம். ஆகாப் பொல்லாதவர்களை செழிக்கிறதும், நீதிமான்கள் துன்பப்படுவதும் ஏன் என்கிறார். அதே போல ஆபகூக் தேவனிடத்தில் கேட்டு பதிலுக்குக் காத்திருக்கிறார்.

ஆபகூக்குக்கு தரிசனம் கொடுக்கப்படுகிறது. இவைகளை மக்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது தான் தேவனின் நோக்கம். காவல்காரனின் முக்கிய வேலை மக்களுக்கு வரும் ஆபத்தைக் குறித்து எச்சரிப்பது. நாமும் வரும் தண்டனைக்கு மக்களைத் தப்புவிக்க அவர்களோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். நாம் அப்படி செய்யாவிட்டால் அந்த இரத்தப் பழி நம் தலைமேல் இருக்கும்.

பாபிலோனியர்கள் பெருமைக்காரர்களாயிருந்தார்கள். தேவன் அருவருக்கிற வற்றை அவர்கள் விரும்பினார்கள். எதுவும் அவர்களைத் திருப்தியாக்காது. பாபிலோனியர்கள் பல நாடுகளை அழித்து, செல்வத்தைப் பெருக்கி இன்னும் திருப்தியடையாது எழும்பினார்கள். பேராசை, இச்சை, மக்களை ஏமாற்றி பிழைத்தல், குடி, கொடுமை, விக்கிரக ஆராதனை போன்ற பாவத்தை அவர்கள் செய்தார்கள். பிற்காலத்தில் பாபிலோனியர்கள் மேதிய பெர்சியர்களால் அழிக்கப்பட்டனர்.

இதற்கு மாறாக நீதிமான் விசுவாசத்தால் பிழைப்பான் என்று கூறப்படுகிறது. இது ஆண்டவருடைய பிள்ளைகளை உற்சாகப்படுத்துகிறது. பூமி கர்த்த ருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். இப்பொழுது கொடுமையால் நிரம்பியிருக்கிறது என்று கூறுகிறார்.

உண்மையான யூதர்களுக்கு தேவன் அடைக்கலமும் பெலனுமாயிருப்பார். வரப்போகும் தேவனுடைய இராஜ்ஜியத்தை நினைப்பூட்டுகிறார். தேவன் நீதியுள்ளவர். அவனவன் கிரியைக்குத் தக்கதாக பலனளிக்கிறவர். இன்னும் கொஞ்ச காலத்திலே வரப்போகிறார். நான் சந்திக்க ஆயத்தமா?

ஆண்டவரே, வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும். ஆமென்.

மகிழ்ச்சியாயிருப்பேன்

> **பவுல் எந்த சூழ்நிலையும் இயேசுவின் அன்பை விட்டு தன்னை பிரிக்க முடியாது என்கிறார்.**

ஆபகூக் மிகவும் சோர்வுற்று தாழ்ந்த நிலையில் இருந்ததை முதல் அதிகாரத்தில் கண்டோம். பின்பு அவர் உயர ஏறி காவலில் நின்று தேவனுடைய பதிலுக்காக காத்திருந்தார். தேவனுடைய வார்த்தையையும், அவரது மகிமையையும் கண்டபோது உயர்ந்த கன்மலையில் துள்ளும் மானைப் போலானார்.

ஆபகூக் தேவனுடைய திட்டத்தை ஏற்றுக் கொண்டார். தேவனுடைய சித்தம் நிறைவேற வேண்டும் என்றும், அதே நேரத்தில் இரக்கம் காண்பிக்க வேண்டுமென்றும் கெஞ்சுகிறார்.

தேவனை தரிசித்த ஆபகூக் பரிசுத்தர் என அவரை அழைக்கிறார். ஐந்தாம் வசனத்தில், எகிப்தில் தேவன் காண்பித்த வல்லமை, மகிமையை நினைவு கூருகிறார். தேவன் நின்று சத்துருக்களைப் பார்க்கிறார். தேவன் இஸ்ரவேலர்களோடு சென்றதால் எகிப்துக்கும் கானானுக்கும் இடையிலுள்ள நாடுகளான கூஷான், மீதியான், இஸ்ரவேலர்கள் வருகையைக் கண்டு நடுங்கினர். பத்தாம் வசனத்தில் தேவன் செங்கடலை பிரித்ததையும், யோர்தானை பிரித்ததையும் கூறுகிறது. பதினோராம் வசனம் யோசுவா வாழ்க்கையில் நடந்த அற்புதத்தை விளக்குகிறது. பதிமூன்றாம் வசனத்தில் பாபிலோன், மேதிய பெர்சிய இராஜ்ஜியத்தால் வீழ்த்தப்படும் என்பதைத் தீர்க்கதரிசனமாக கூறுகிறது.

ஆபகூக் தேவனுடைய நீதியுள்ள செயலை உணர்ந்து நான் தேவனுக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் என்கிறார். அவருக்காகக் காத்திருப்பேன். என்ன நேரிட்டாலும் அவர் நன்மை செய்கிறவர். அவர் நீதியுள்ளவர், அவர் சித்தம் நடக்கட்டும் என்று மகிழ்ச்சியால் பாடுகிறார்.

இப்பொழுது உன் வாழ்க்கையில் எந்த வகையான நெருக்கங்களிலிருந்தாலும் தேவன் உங்களை நடத்துவார் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறதா? சற்று அமைதியாக அமர்ந்து யோசித்து பார்.

ஆண்டவரே, எந்தச் சூழ்நிலையிலும் நீர் எனக்காக யாவையும் செய்து முடிப்பீர் என்ற விசுவாசத்தோடு உம்மை பற்றிக் கொள்ள உதவி செய்யும். ஆமென்.

பகைமை

நீங்கள் எப்பொழுதாவது உங்களைப் போல பிறரையும் நேசிக்க முயற்சி செய்ததுண்டா?

அநேக நாடுகளில் உள்நாட்டுப் போர் ஏற்படுவதைக் காண்கிறோம். சகோதரர்கள் ஒருவரையொருவர் கொன்று குவிக்கிறார்கள். நீண்ட நாள் பகைமை முற்றி போராக மாறுகிறது. ஏசா, யாக்கோபு இரட்டைச் சகோதரர்கள். யாக்கோபு சேஷ்டபுத்திர பாகத்தையும் ஆசீர்வாதத்தையும் தந்திரமாய்ப் பெற்றான். ஏசா சேஷ்டபுத்திர பாகத்தை அலட்சியம் பண்ணினான். தேவன் யாக்கோபைத் தெரிந்து கொண்டார். ஏசா ஏதோம் தேசத்தை அமைத்தான். இடையில் சகோதரர்கள் சமாதானம் செய்துக் கொண்டாலும், அது சில காலங்களே நிலைத்தது. இவர்கள் சந்ததியாரிடையே பகைமை தொடர்ந்து வளர்ந்தது.

தேவன் ஒபதியாவுக்கு ஒரு தரிசனத்தைக் கொடுத்து, யூதாவுக்கு விரோதமாக கைகொடுக்கும் அந்த நாட்டோடு உடன்படிக்கை பண்ணின நான்கு நாடுகளுக்குள் என்ன நடக்கும் என்பதைக் காண்பித்தார். ஏதோம் தண்டிக்கப் பட்டு அதனுடைய உடைமைகளையெல்லாம் எடுத்துக் கொள்ளப்படும் என்றார். ஒன்று அவர்களிடம் பெருமை காணப்பட்டது. கன்மலை வெடிப் பில், உயர்ந்த ஸ்தானத்தில் அமைக்கப்பட்ட தங்கள் நாட்டைக் குறித்து பெருமை கொண்டனர். இரண்டு செல்வத்தைக் குறித்த நம்பிக்கை. முக்கிய வியாபார மார்க்கத்தில் ஏதோம் அமைந்திருந்ததால் திரண்ட செல்வத்தைப் பெற்றிருந்தனர். அவைகளையெல்லாம் கொள்ளையடிக்கப்படும் என்று தேவன் கூறினார். மூன்றாவதாக இஸ்ரவேலர்களை அழிக்க நண்பர்களை சேர்த்து வைத்திருந்தனர். தேவன் அந்த உடன்படிக்கையை முறித்துப் போடுவேன் என்கிறார். நான்காவது ஏதோமின் ஞானம். கீழகத்தியர்கள் ஞானத்தில் சிறந்த விளங்கினர்.

ஏதோமியர்கள், யூதர்களை சத்துருக்கள் தாக்கியபோது சந்தோஷப்பட்டார்கள். தப்பியோடிய யூதர்களைப் பிடித்து எதிரிகள் கையில் கொடுத்தனர். பெலிஸ்தியர்களும், அரபியர்களும் எருசலேமைத் தாக்கியபோது இந்த நிகழ்ச்சி நடந்திருக்கலாம் என வேத அறிஞர்கள் கருதுகின்றனர். சிறிதாக தோன்றிய கசப்பு, பின்பு கலக்கத்தை உண்டாக்கியது.

ஆண்டவரே, எல்லாரையும் நேசிக்கத்தக்க தெய்வ அன்பை என் உள்ளத்திலே ஊற்றும். ஆமென்.

தேவனுடைய இராஜ்ஜியம்

இந்த உலகம் நித்தியமானதும் நிரந்தரமானதும் அல்ல என்பதை நாம் நினைவில் கொள்வோம்.

கர்த்தருடைய நாள் என்பது பொல்லாத தேசங்களின் மீது தன் கோபத்தை ஊற்றி அவர்களை தண்டிக்கும் நாளையும் கடைசி நாட்களில் நடக்கும் நியாயத் தீர்ப்பையும், தன் இராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பதையும் குறிக்கும்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு உண்மையும் நீதியுமானது. இரத்தத்தைச் சிந்தியவர்கள் இரத்தத்தையே குடிக்க வேண்டியது வரும் (வெளி.16:5,6). ஒவ்வொருவரும் அவர்கள் செய்தபடியே அவர்களுக்கு நடக்கும்.

தேவன் யூதா மக்களுக்கு மூன்று வாக்குத்தத்தங்களைக் கொடுக்கிறார். தன் மக்களை சிறையிருப்பிலிருந்து திருப்புவார். கடைசி நாட்களில் அவர்களை மீட்டு தன் இராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார். யாக்கோபு என்பது இங்கு தென் இராஜ்ஜியத்தையும், யோசேப்பு என்பது வட இராஜ்ஜியத்தையும் குறிக்கும். கடைசி நாட்களில் இரண்டும் ஒன்றுபட்டு மேசியாவின் இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படும்.

இஸ்ரவேலர்கள் தாங்கள் இழந்தப் பகுதிகளைத் ஏதோமியர், பெலிஸ்தியர், சமாரியர்களிடமிருந்து மீட்டுக் கொள்வார்கள். இஸ்ரவேலர்கள் தாங்கள் பகுதிகளை மீட்டுக் கொள்வார்கள் என்பது நம்பப்படாத ஒன்று. ஆனால் 1948ல் இஸ்ரவேல் நாடு அப்பகுதிகளில் ஸ்தாபிக்கப்பட்டது. ஒரு நாள் மேசியாவை சந்திப்பார்கள், விசுவாசித்து அவருடைய இராஜ்ஜியத்தை ஏற்றுக் கொள்வார்கள்.

ஆண்டவர் சீயோனிலிருந்து ஆட்சி செய்வார். எல்லா தேசமும் அவரிடம் ஓடி வருவார்கள். இந்த உலகம் தேவனுடைய இராஜ்ஜியமாக மாறும். அவர் என்றென்றைக்கும் அரசாளுவார். எல்லா முழங்கால்களும் அவருக்கு முன்பாக முடங்கும், எல்லா நாவுகளும் அவரே ஆண்டவர் என்று அறிக்கையிடும் நாள் வருகிறது. நாம் இந்த அநித்தியமான உலகத்தில் வாழும் நாட்கள் கொஞ்சமே! நித்தியமான அவருடைய இராஜ்ஜியத்தை சுதந்தரித்துக் கொள்ள முயற்சி செய்வோம்.

ஆண்டவரே, உம்முடைய இராஜ்ஜியத்திற்காய் காத்திருக்கிறேன். நான் என்னை ஆயத்தம் செய்ய உதவி புரியும். ஆமென்.

துதிக்குப் பாத்திரர்

> ஒரு மனிதனின் பிரதான கடமை தன்னை உருவாக்கியவரை அறிவதும், தன் வார்த்தையினாலும் நடக்கையினாலும் அவரை மகிமைப்படுத்துவதே ஆகும்.

கடவுளை **துதிப்பது ஏன்? :** கடவுளைத் துதிக்கும் முன்பு அதற்கான காரணத்தை அறிவது நல்லது. கடவுள் துதிக்குப் பாத்திரராக இருப்பதால் நாம் அவரைத் துதிக்கிறோம். எந்த விதத்தில் அவர் துதிக்குப் பாத்திரர்? பொதுவாக ஆதாரமான காரியத்தை ஒருவர் செய்தால் அவரை மேன்மைப்படுத்துவோம். ஜீவனுள்ள தம்முடைய வல்லமையை அவருடைய வல்லமையுள்ள வார்த்தையால் ஆராய முடியாத அழகால் நிறைந்து படைத்ததிலிருந்து வெளிப்படுகிறது. ஆகவே அவர் துதிக்கு பாத்திரராக இருக்கிறார். அவருடைய மாறாத அன்பு, அவரை நேசியாதவர்கட்கும் செலுத்தப்படுகிறபடியால் அவர் துதிக்கப்படத்தக்கவர். அவர் பாரபட்சமின்றி நியாயம் தீர்ப்பதால் அவர் துதிக்கப்படத்தக்கவர். இந்த ஜீவனுள்ள தேவனை துதிக்கிறவர்களோடு நாமும் இருக்க வேண்டும்.

கடவுளை **போற்றுவது ஏன்? :** படைக்கப்பட்ட இந்த உலகத்தை சீராக்கி தன் மகத்துவமான வல்லமையை விளங்கப்பண்ணியதால் அவர் போற்றுதற்குரியவர். அவருடைய படைப்பை சிதைக்க நினைக்கும் மனிதனின் திட்டங்களை அவர் முறியடிக்கிறார். வானத்திலோ, பூமியிலோ எந்த வல்லமையும் ஆண்டவருடைய திட்டத்தை எதிர்க்க முடியாது. எல்லா தலைமுறைகளிலும் உள்ள தமது மக்கள் மூலம் தமது திட்டத்தை நிறைவேற்றி கொள்கிறார். தம் திட்டத்தை செயலாற்ற கடவுள் தெரிந்து கொண்ட மக்கள் பாக்கியவான்கள். இந்த பாக்கியமுள்ள மக்களில் நீ இருக்கிறாயா?

கடவுளை ஏன் நம்ப வேண்டும்? : அவருடைய மாறாத அன்பில் நம்பிக்கை கொள்ளுகிறவர்கள் பேரில் ஆண்டவர் அக்கறை கொள்கிறார். மனிதர்கள் தங்களை வல்லமையுடையவர்கள் என காண்பித்துக் கொண்டாலும் அடுத்தவருடைய துன்பத்தினின்று அவரை காப்பாற்ற இயலாது. ஆனால் ஆண்டவர் அப்படி அல்லாமல் தம்முடைய வல்லமையால் அவருடைய பிள்ளைகளை அவர்களுடைய எல்லா இக்கட்டுகளுக்கும் விலக்கிக்காக்கிறார். இந்த ஜீவனுள்ள கடவுளை துதிப்பதும், போற்றுவதும், நம்புவதும் நமக்கு கிடைத்த சிலாக்கியமாகும்.

ஆண்டவரே, எப்போதும் உம்மில் நம்பிக்கை வைத்து உம்மைத் துதிக்கவும் ஆராதிக்கவும் அருள்தாரும். ஆமென்.

உடன்படிக்கையில் உறுதி

கிறிஸ்துவோடு எனக்குள்ள உடன்படிக்கை எப்படியுள்ளது?

பெத்லகேமிலே பஞ்சம் உண்டானபடியால் எலிமெலேக்கு தனது மனைவி நகோமி, தன் இரண்டு குமாரர்களுடன் மோவாப் தேசத்திற்கு சென்று விடுகின்றான். அங்கு நகோமி தனது கணவன் மற்றும் பிள்ளைகளை இழந்து விடுகின்றாள். எனவே தனது மருமகள்களை நீங்கள் தாய்வீட்டிற்கு சென்றுவிடுங்கள் என்று கூறுகிறாள். ஓர்பாள் சென்றுவிடுகிறாள். ரூத்தோ நகோமியை பற்றிக்கொள்கிறாள். இந்த மூன்று பெண்களும் தங்கள் உடன் படிக்கையில் எவ்வளவு உறுதியாய் இருந்தார்கள் என்பதைச் சிந்திப்போம்.

உடன்படிக்கையில் பிணக்கம்: நகோமி சர்வ வல்லமையுள்ள தேவனை சிறுபிராயம் முதல் அறிந்திருந்த போதிலும் தனது வாழ்வில் இழப்புகளை எதிர்கொண்ட சூழ்நிலையில் கர்த்தருடைய கை தனக்கு விரோதமாய் இருக்கிறதாக எண்ணுகிறாள். இந்த தவறான மனப்பாங்கு இருந்தபடியால் தேவனோடுள்ள உடன்படிக்கையில் ஒரு பிணக்கம் காணப்படுகிறதைப் பார்க்கிறோம். எந்த சூழ்நிலையும் கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்ற நிச்சயம் நமக்கு உண்டா?

உடன்படிக்கையில் உறுதியின்மை: ஓர்பாள் முதலில் நகோமியிடம் அவளது ஜனத்தண்டைக்கே வருவோம் என்று ரூத்துடன் இணைந்து உறுதியுடன் கூறிய போதிலும், பிற்பாடு அவள் தன் நிலையை முன்னிலைப்படுத்திய படியால் தன் மாமியை விட்டு போனாள். அவளது உடன் படிக்கையில் உறுதியின்மையைக் காண்கிறோம்.

உடன்படிக்கையில் உறுதி: ரூத் தனது நிலையை முன்னிலைப்படுத்தாது தனது கணவரையும், இரண்டு குமாரர்களையும் இழந்து தவிக்கின்ற நகோமியின் நிலையைப் பார்த்து உறுதியுடன் மரணமேயன்றி வேறொன்றும் தன் மாமியை விட்டு பிரிக்காது என்று மன உறுதியுடன் கூறுகிறாள். இதுவே கர்த்தரின் பார்வையில் பிரியமாயிருந்தபடியால் அவள் தாவீது ராஜாவின் பெரிய பாட்டியும் இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் இடம் பெறும் பாக்கியத்தையும் பெற்றாள்.

ஆண்டவரே கிறிஸ்துவிடம் எனக்கிருக்கும் உடன்படிக்கையில் எந்த சூழ்நிலையிலும் உறுதியாய் நிற்க பெலன் தாரும். ஆமென்.

ரூத் 1:19–2:13

வழிநடத்துதலும் பாதுகாப்பும்

உண்மை, மனத்தாழ்மை, விசுவாசம் போன்ற நற்குணங்கள் என்னில் காணப்படுகின்றனவா?

தனது நாட்டிற்குத் திரும்பிய நகோமியின் கண்ணோட்டமும் அந்நிய தேசத்திற்கு வந்த ரூத்தின் கண்ணோட்டமும் எதிர்மறையாகத் தோன்றுகிறது. நகோமி சர்வ வல்லவர் தனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டபடியால் தன்னை மாராள் என்று அழைக்கவும், கர்த்தர் தன்னை சிலேசப்படுத்தியதாகவும் கூறி ஆண்டவர் செய்த நன்மைகளை நினைவு கூற தவறிவிடுகிறாள். ரூத் தன் வாழ்வில் ஏற்பட்ட பேரிழப்பை நினைவுகூராமல் கர்த்தரையே நம்பியிருந்தபடியால் இப்புதிய சூழ்நிலையிலே அவளிடம் எல்லோராலும் பாராட்டப்படும் கீழ்ப்படிதல், உண்மை, தாழ்மை போன்ற குணாதிசயங்கள் வெளிப்படுவதை காண்கிறோம்.

உண்மை: வயது சென்ற தனது மாமியாருக்கும் தனக்கும் வேண்டிய ஆகாரத்தைத் தேடி, வயல்வெளியில் அறுக்கிறவர்கள் பிறகே கதிர் பொறுக்கிய அவளது பொறுப்புணர்ச்சியையும், உண்மையையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

மனத்தாழ்மை: போவாசுடைய கண்களில் தயை கிடைத்ததை அறிந்ததும் அவள் தரையிலே முகங்குப்புற விழுந்து, போவாஸை வணங்கியது அவளது மனத்தாழ்மையைக் காட்டுகிறது. தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கும் தேவன் ரூத் தன்னைத் தாழ்த்தினபடியால் அவளை மேன்மைப் படுத்தினார்.

விசுவாசம்: ரூத் அந்நிய தேசத்திற்குத் தன் மாமியுடன் வந்ததற்குக் காரணம் அவள் சர்வவல்ல தேவன்மீது வைத்த விசுவாசம். "நீ விசுவாசித்தால் தேவ மகிமையைக் காண்பாய்" என்ற வேத வாக்கின்படி ரூத் தேவ பாதுகாப்பையும் தேவ நடத்துதலையும் முழுமையாகப் பெற்றாள். 2:12ல் போவாஸ் ரூத்தை வாழ்த்தியது அவள் வாழ்வில் நிறைவு பெறுவதைப் பார்க்கின்றோம். நாம் தேவனை நமது அடைக்கலமாகவும், மறைவிடமாக நம்பி வரும்போது அவர் நம் செய்கைக்குத்தக்க பலனை கட்டளையிடுவதுமல்லாமல் நிறைவான பலனை அளிப்பதும் உறுதி.

ஆண்டவரே, தாழ்வு காலங்களில் தேவ சித்தத்திற்கு என்னை முற்றிலும் ஒப்புவித்து வாழ எனக்கு உதவி செய்தருளும், ஆமென்.

தேவ திட்டத்தை உணருதல்

எனது வாழ்க்கையை தேவ சித்தத்திற்கென்று முழுமையாக ஒப்புவித்து வாழ்கின்றேனா?

ஒவ்வொரு மனிதனுக்கும் தேவன் ஒரு திட்டமும் ஒரு நோக்கமும் வைத்திருக்கிறார் என்பதை உணர்ந்தாலே தேவ சித்தத்திற்கு நம்மை முழுமையாக ஒப்புவித்து, எந்த சூழ்நிலையும் தெய்வீக உறவில் விரிசல் ஏற்படுத்தாது வாழ உதவும். ரூத் போவாசுடைய வயலிலே கதிர் பொறுக்கச் சென்றதோ, போவாஸ் ரூத்தை தன்னுடைய வயலிலே சந்தித்த நிகழ்ச்சிகள் எதுவுமே தற்செயலாக நடந்ததோ அல்லது மனித சூழ்ச்சியோ அல்ல. தேவன் தமது மீட்பின் திட்டத்திலே தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தவர்களை பயன்படுத்தினார் என்பதுதான் உண்மை. ரூத் தன்னை தேவ திட்டத்திற்கு ஒப்புவித்து, உண்மையுடனும், தாழ்மையுடனும் நடந்து கொண்டபடியால் தேவபாதுகாப்பு, தேவ போஷிப்பு அவளுக்குக் கிடைக்கப்பெற்றது.

தேவ பாதுகாப்பு : நகோமிக்கு நெருங்கின உறவின் முறையானும் அவர்களை ஆதரிக்கிற சுதந்தரவாளிகளில் ஒருவனுமான போவாசின் வயலுக்கே தமது அநாதி திட்டத்தின்படி அழைத்துச் சென்ற சர்வ வல்ல தேவன், இளம் விதவையாகிய ரூத்திற்கு பாதுகாப்பை அளித்தார். போவாஸ் தன் வேலைக்காரரிடம் ரூத்தை எந்தவிதத்திலும் புண்படுத்தவோ, அதட்டவோ வேண்டாம் என்று கட்டளையிட்டான். "கர்த்தர் உன்னை எல்லாத் தீங்கிற்கும் விலக்கிக் காப்பார்" என்ற வாக்கின்படி அவருடைய திட்டத்திற்குத் தம்மை ஒப்புவித்த பிள்ளைகளுக்கு பாதுகாப்பளிக்கிறார்.

தேவ போஷிப்பு : போவாஸ் தனது வேலைக்காரரிடம் ரூத் பொறுக்கி கொள்ளும்படி அவளுக்காக அரிகளில் சிலதைச் சிந்தவிடும்படி கட்டளையிட்டான். ரூத் பொறுக்கின கதிர் ரூத்திற்கும் நகோமிக்கும் திருப்தியாகச் சாப்பிடுமளவு கிடைத்தது தேவ போஷிப்பு அல்லவா? தேவ திட்டத்தின்படி நமது வாழ்க்கையை ஒப்புவித்து தேவ சித்தத்திற்குத் தங்களை முழுமையாக அர்ப்பணித்தவர்களை தேவன் பாதுகாப்பது மட்டுமல்லாமல் திருப்தியாகப் போஷிக்கிறார். ஆவிக்குரிய மன்னாவாகிய வேத வசனங்களின்மூலம் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்க கற்றுக்கொடுக்கிறார்.

ஆண்டவரே, நான் எனது விருப்பு வெறுப்புகளைத் தள்ளி உமது திட்டத்தின்படி என் வாழ்க்கை அமைய அருள்புரியும் ஆமென்.

ரூத் 3:1–18

கீழ்ப்படிதலின் அவசியம்

எந்த வழியை தெரிந்தெடுப்பது என்று கலங்கும் வேளையிலே தேவ சித்தத்திற்கு என்னை ஒப்புக் கொடுக்கிறேனா?

கீழ்ப்படிவோம், தேவ சித்தம் செய்வோம் என்ற அருமையான பாடல் ஒன்று உண்டு. வெற்றியுள்ள வாழ்க்கை வாழ முதல்படி கீழ்ப்படிதல். இயேசு கிறிஸ்து சிலுவையின் மரண பரியந்தம் தன் பிதாவுக்குக் கீழ்ப்படிந்த படியால், தேவன் அவரை உயர்த்தி எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைத் தந்தருளினார். ரூத் தனது மாமி தனது சுகவாழ்வுக்காக கூறிய அறிவுரையின்படி முற்றிலும் கீழ்ப்படிந்தாள். நகோமி கற்பித்த காரியம் இஸ்ரவேலில் ஒரு சமுதாய வழக்கமாக இருந்தது. ரூத் தன்னை தேவ சித்தத்திற்கு ஒப்புவித்து முழுமையாக கீழ்ப்படிந்ததின் நிமித்தமாக தேவன் தமது மீட்பின் திட்டத்திலே ஒரு மோவாபிய பெண்ணிற்கு ஒரு முக்கிய பங்கு கிடைத்தது.

அவர் நம் **சிருஷ்டிகர்;** நாம் சிருஷ்டிகள்; தேவன் குயவன்; நாம் இருக்கின்ற படியால் நாம் அவர் சித்தத்திற்கு ஒப்புவித்து கீழ்ப்படிதல் வேண்டும்.

அவர் நம் **தகப்பன்;** நாம் அவர் பிள்ளைகள்; 'தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்' (சங். 103:15) தாயும், தகப்பனும் கைவிட்டாலும், கைவிடாத தேவன் நம் வாழ்க்கையில் நமக்குச் சிறந்தது என்ன என்பதை அறிந்திருக்கிறபடியால் நாம் தேவ சித்தத்திற்கு நம்மை ஒப்புவித்து அவருக்குக் கீழ்ப்படிதல் அவசியம்.

அவர் நம் **மேய்ப்பன்;** நாம் அவர் ஆடுகள்; நல்ல மேய்ப்பனாகிய இயேசு ஆடுகளாகிய நம்மை அனுதினமும் புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர்களண்டையில் நடத்திச் சென்று எதிராளியாகிய பிசாசானவனின் கண்ணிகளிலிருந்து நம்மைப் பாதுகாக்கின்றபடியால், நாம் தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிதல் அவசியம்.பலியைப் அல்ல கீழ்ப்படிதலை விரும்புகிற தேவன், ரூத் தன்னை தேவ சித்தத்திற்கு முழுமையாக ஒப்புவித்து, கீழ்ப்படிந்தபடியினால் அவளை மேன்மைப்படுத்தினார்.

ஆண்டவரே, உமது சித்தம் மட்டுமே என் வாழ்வில் நிறைவேற உதவி செய்யும். ஆமென்.

பாராட்டுக்கள்!

> தேவனின் உன்னதமான திட்டம் என் வாழ்வில் நிறைவேற வாழ்கிறேனா?

போவாஸ் தேவனால் பாராட்டப்படக்கூடிய நற்குணங்களைப் பெற்றிருந்தபடியால் தேவன், மோவாப் தேசத்திலிருந்து ஓர் அழகான நற்குணசாலியான ரூத்தை அழைத்து வந்து அவன் வயல்களிலே சந்திக்கும்படி செய்து, அந்த இரு உள்ளங்களையும் இணைத்து தன் மீட்பின் திட்டத்திலே அவர்களை பயன்படுத்தினார். கடவுளின் இருதயத்திற்கு ஏற்றவனாக வாழ்ந்த தாவீது ராஜாவும், பாவ மனுக்குலத்தை மீட்க இவ்வுலகிற்கு தேவன் அனுப்பிய இயேசு கிறிஸ்துவும் அவர்கள் சந்ததியில் வரும் பாக்கியத்தைத் தந்தார்.

நற்குணம் : போவாசின் சிந்தனை, வார்த்தை, செயல்பாடு மூன்றிலும் உடன்பாடு இருந்தபடியால் அவனிடத்தில் நற்குணம் வெளிப்பட்டது. அவனது தகப்பன் சல்மான்; தாய் ராகாப் என்பதை அறிவோம். இந்த ராகாப் எரிகோவை வேவு பார்க்க வந்த இஸ்ரவேலரைத் தப்புவித்ததையும் அவளது விசுவாச அறிக்கையையும் 'உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்' (யோசுவா 2:11) அறிகிறோம். அவள் தனது குமாரனை கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்திலே வளர்த்தாள். போவாஸ் தனது வேலைக்காரர் ரூத் மற்றும் சுதந்திரவாளியாகிய உறவினன் ஆகியோரோடு பேசினபோது அவன் பேச்சில் காணப்பட்ட பரிவு, உண்மை, தாழ்மை போன்ற நற்குணங்கள் வெளிப்படுகிறது.

தயவு : ரூத்தைக் குறித்து கேள்விப்பட்டு, அவள் மீது இரக்கம் பாராட்டுகிறான். தன் வேலைக்காரரிடம் அவளுக்கு எந்த இடையூறும் செய்ய வேண்டாம் என்றும், அவள் பொறுக்கிக் கொள்ள ஏதுவாக அரிகளிலே சிலதை சிந்த விடுமாறும் கட்டளையிடுகிறான். நகோமியின் கையிலே நிலத்தை மீட்டுக்கொண்டதுமல்லாமல் ரூத்தை தனக்கு மனைவியாக்கியும் கொண்டான். ரூத்தின் வாழ்க்கையை மாற்றிய தேவன் நீதிமானாயிருந்த போவாசையும், தன் சொந்த நாட்டைவிட்டு தன் மாமியுடன் வந்த ரூத்தையும் இணைத்து தன் ஒரே பேரான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் வம்ச வரலாற்றிலே இடம் பெற செய்த அவருடைய உன்னதமான திட்டத்திற்கு இணை ஏதும் உண்டோ?

தேவனே இவ்வாழ்விலே நீர் எனக்குக் கொடுத்திருக்கும் வாழ்வை உமது வழிநடத்தலின்படி நிறைவேற்ற உதவிடும், ஆமென்.

ரூத் 4:13–22

செய்கைக்குத்தக்க பலன்

தன்னலமற்ற குணம், அன்பு, உழைப்பு, பணிவு, தயவு, நற்குணம், பெருந்தன்மை, உண்மை போன்ற பண்புகள் என்னிடம் காணப்படு கின்றதா?

துவக்கத்தில் தன்னை மாராள் என்று அழைக்கும்படியாக கூறிய நகோமியை முடிவிலே அயல்வீட்டுக்காரர்கள் வாழ்த்துவதை காண்கிறோம். ஏழு குமாரரைப் பார்க்கிலும் அருமையாயிருந்த தன் மருமகள் பெற்ற குழந்தையை எடுத்து அதை வளர்க்கிற தாயானாள் என்று நகோமியை வாழ்த்துகின்றனர்.

நகோமி: தன் மருமக்கள் சுகமாய் வாழவேண்டும் என்ற தன்னலமற்ற எண்ணம், கர்த்தரின் பார்வையில் பிரியமாயிருந்தபடியால் ஏழு குமாரரைப் பார்க்கிலும் அருமையான மருமகளின் ஆதரவைக் கொடுத்து அவள் குடும்பத்தின் சுதந்திரவாளி அற்றுப் போகாதபடிக்கு தயை செய்தார். ரூத் போவாசுக்குப் பிறந்த குழந்தை ஓபேத் அவள் ஆத்துமாவுக்கு ஆறுதலுமாக அவள் முதிர்வயதிலே அவளை ஆதரிக்கிறவனுமாயிருந்தான் என்ற பேறு பெற்றாள்.

ரூத் : தன் நிலையை முன்னிலைப் படுத்தாது, தன் மாமியின் நிலைக்கு முக்கியத்துவம் கொடுத்து தன் தாய் வீட்டை விட்டு தன் மாமியுடன் அந்நிய நாட்டிற்குச் சென்ற ரூத்தின் தன்னலமற்ற செயலும் சர்வ வல்ல தேவனில் விசுவாசம் வைத்து, தேவ சித்தத்திற்கு தன்னை அர்ப்பணித்ததின் விளைவாக புது வாழ்வு பெற்று, தாவீது ராஜாவின் பெரிய பாட்டியாகவும் உலக இரட்சகராம் இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றிலும் இடம் பெற்றது அவள் செய்கைக்குத் தக்க பலன் என்பதை அறியலாம்.

போவாஸ்: போவாஸ் நீதிமானாயிருந்து உண்மையோடும், உத்தமத்தோடும் வாழ்ந்து, ஏழைகளுக்கும் பரிவு காட்டி தான் செய்ய வேண்டிய கடமையை நீதியின்படி செய்யத்தக்க வேளையிலே செய்து கர்த்தருக்குப் பிரியமாய் வாழ்ந்தபடியால், கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் இடம் பெற்று, தன் செய்கைக்குத் தக்க பலனை அடைந்ததைக் காண்கிறோம். நல்ல வழியும், கெட்ட வழியும் நமக்கு முன்பாக இருக்கிறது. இதில் எந்த வழியை நாம் தேர்ந்தெடுத்து செல்ல போகிறோம்? நாம் செல்லும் பாதைக்கு வழிகாட்டி யார்?

ஆண்டவரே நான் என்னை முழுமையாய் உம் சித்தத்திற்கு ஒப்புவித்து ஜீவிக்க என்னைப் பயன்படுத்தியருளும். ஆமென்.

நம்பிக்கையும் துதியும்

உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.

மனச்சோர்வும், நம்பிக்கையும் இழந்த எந்த நேரத்திலாவது ஆண்டவரைத் துதிக்க யோசித்ததுண்டா? மனச்சோர்வின் நேரத்திலும் ஆண்டவரைத் துதித்து மகிமைப்படுத்த தாவீது தவறவில்லை. நாம் எப்படி? தாவீது அரசன் ஆண்டவரைத் துதிக்க காரணம் என்ன?

ஆச்சரியமான விடுதலை : சவுல் தாவீதைக் கொல்லும்படி துரத்திக் கொண்டிருப்பதால் தாவீதின் உயிருக்கு ஆபத்து. ஒருவிதமான பயம் தன்னை ஆட்கொண்டிருந்தாலும் தன்னை திடப்படுத்திக் கொண்டு அந்த கடினமான சூழ்நிலையை மேற்கொள்ளும்படியான பெலனுக்காக கடவுளை நோக்கிப் பார்க்கிறார் (வச.4). நம் வாழ்விலும் இப்படிப்பட்ட கடினமான சூழ்நிலை வருவது உண்டு. நாம் கடந்துபோகும் பயமான சூழ்நிலையிலிருந்து விடுபட தாவீதைப்போல் கடவுளுடைய பிரசன்னத்தை நாட வேண்டும் (வச.5). தாவீது பிரச்சனைகளால் சூழப்பட்ட சமயங்களிலும் (வச.6,9) அவர் தொடர்ந்து கடவுளையே சார்ந்திருக்கிறார். கடவுளும் உண்மையுள்ளவராகவே இருந்து, தாவீதை அவருடைய எல்லா பிரச்சனை களிலிருந்தும் விடுவிக்கிறார். இவ்வுலகில் பிரச்சனை இல்லாதவர் ஒருவரும் இல்லை. தங்களுடைய சுய பெலத்தையும் ஞானத்தையும் சார்ந்திருக் கிறவர்கள் தங்கள் பிரச்சனைகளை மேற்கொள்ள முடியாமல் தோல்வியைத் தழுவுகின்றனர். பிரச்சனைகளை மேற்கொள்ளும் எளிய வழி பூரணமாக கடவுளை சார்ந்திருக்கும் தாவீதின் வழிதான். இவ்வழியை பயன்படுத்திப் பார்த்து விடுதலையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

விடுதலையின் விளைவு : தான் வேண்டியபடி விடுவிக்கப்பட்ட தாவீது அரசன் கடவுளைத் தொழுது, மகிமைப்படுத்துவதோடு, மற்றவர்களும் அவரை அறிந்து அவருக்கு பயந்த (வச.8,9) நீதியுள்ளவர்களாக (வச.17,19) தீமைக்கு விலகி (வச.13,14,16) ஆசீர்வாதமான வாழ்வுக்கு நன்மை செய்ய அழைக்கிறார். இது கடைபிடிக்கக் கூடாததொன்றல்ல. தாவீது நம்மைப் போலொருவனாயிருந்து கடைபிடிக்கக் கூடுமென்றால் நம்மால் ஏன் முடியாது?

ஆண்டவரே, எல்லா சூழ்நிலைகளிலும் உம்மை நம்பவும், துதிக்கவும் அருள் தாரும். ஆமென்.

மாற்கு 9:30-41

தன்னலமற்ற தாழ்மை

தன்னலமற்ற தாழ்மை; இயேசு தன்னுடைய தாழ்மையை சிலுவை மரணம் மூலம் வெளிப்படுத்தினார். எத்தகைய தன்னலமற்ற அன்பு!!!

யார் பெரியவன் [வச.32-34]:- இயேசு தங்களுடன் இல்லாத நேரத்தில், சீஷர்கள் தங்களுக்குள்ளே யார் பெரியவன் என்று விவாதித்துக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் என்ன பேசிக் கொண்டிருந்தனர் என்று இயேசு அவர்களை விசாரித்தவுடன்தான் தங்களுடைய அறியாமையை உணர்ந் தார்கள். தங்களுடைய போதகர், எப்பொழுதும் நித்திய வாழ்வைப் பற்றி யும், மீட்பைக் குறித்தும் போதனை செய்பவராக இருக்கும் பட்சத்தில் தாங்களோ தங்களுடைய சுய விருப்பங்களைக் குறித்து சிந்திக்கிறோம் என்று புரிந்து கொண்டார்கள். நாமும் கூட பல நேரங்களில் பணம், பதவி, சொத்து போன்ற உலகப் பிரகாரமான காரியங்களைக் குறித்து கவலைப் பட்டு, மீட்பையும், நித்திய வாழ்வையும் மறந்துவிடுகிறோம்.

தன்னலமற்ற தாழ்மை [வச.35-37]:- தன்னுடைய சீஷர்கள் சேவை பெறுவதற்காக அல்ல, சேவை புரிய வேண்டும் என்று இயேசு கிறிஸ்து விரும்பினார். தன்னலமற்ற சேவையை செய்வதற்கு தாழ்மை மிகவும் அவசியம். எனவே இயேசுவே தன்னுடைய சீடர்களுக்கு இதனை செய்து காட்டினார். இயேசு தன்னுடைய கைகளால் சீஷர்களின் பாதங்களைக் கழுவி (யோ.13:1-17) தாழ்மையை உறுதிப்படுத்தினார். நம்முடைய மீறுதல் களுக்காக கல்வாரியில் தன்னுடைய இரத்தத்தைச் சிந்தி மரணப் பரியந்தம் தம்மைத் தாழ்த்தினார் (ஏசா.53). இம்மையில் தாழ்மையான தன்னலமற்ற வாழ்வு மறுமையில் உயர்வைத் தரும். தாழ்மையின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கு இயேசு ஒரு சிறுபிள்ளையை மாதிரியாக கூறுகிறார்.

வெகுமதி [வச.41]:- நம்முடைய மீட்பர் அவருடைய நாமத்தினிமித்தம், ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தாலும் அதன் பலனை அடையாமல் போவதில்லை என்று வாக்குறுதியளிக்கிறார். நாம் அவருடைய இராஜ்ஜியத்தை பூமியில் கட்டும் பணியாளர்களாக மாறுவோம். இம்மையில் நாம் செய்யும் தேவ பணிகளுக்கு மறுமையில் அவருடைய இராஜ்ஜியத்தில் நித்திய சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளும் பாக்கியமும், நன்மையும் இருக்கிறது என்ற நிச்சயத்துடன் இருப்போம்.

இயேசுவே, இம்மையில் உள்ள சிறியோர் மத்தியில் தன்னலமற்ற ஊழியம் செய்ய என்னைத் தகுதிபடுத்தும். ஆமென்.

மாற்கு 9:42-50

எச்சரிப்பின் சத்தம்

ஒருவன் தன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?

உலகப்பிரகாரமான சோதனைகளையும், பலவீனங்களையும் நன்கு அறிந்திருந்தாலும், இயேசு கிறிஸ்து அந்த எச்சரிப்பின் வார்த்தைகளைக் கூறியதற்கு முக்கிய காரணம், "பாவம் செய்வதை விட, இறப்பதே மேல்" என்பதை நமக்கு உணர்த்துவதற்கே. பாவம் செய்தவர்களுக்கு தண்டனை நிச்சயம் என்றும், அவர்கள் நரகத்திலே தள்ளப்படுவார்கள் (வெளி.20:15) என்பதும் வேதம் கூறும் உண்மை.

கைகள் [வச.43] :- கர்த்தருடைய வழிகளிலிருந்து நாம் விலகிப் போவதற்கு நம்முடன் இருக்கும் சில உறவுகள் வழிகாட்டுமென்றால் நாம் அந்த வகையான உறவுகளைத் துண்டிப்பது மிகவும் அவசியமானதாகும். நாம் நம்முடைய கைகளால் செய்யும் எந்தப் பணியிலும் நமக்கு உலகப் பிரகாரமான நன்மைகள் கிடைக்கும் என்றாலும் தேவனுடைய நோக்கத்துக்கு விரோதமாக நாம் அதைத் தியாகம் செய்வதற்குத் தயாராய் இருக்க வேண்டும்.

கால்கள் [வச.45] :- லோத்துவைப் போல சூழ்நிலைகளால் கவரப்பட்டு, நம்முடைய கால்கள் சோதோம் கொமோரா பின் விளைவுகளைப் பற்றி சிந்திக்காமல் அழிவை நோக்கிச் செல்கிறதா என்று சிந்திப்போம். செல்வ சம்பத்துகளைப் பின்பற்றி அவைகளில் நடவாமல், நம்முடைய பாதங்களை சுத்தமாக்கி, நம்முடைய பாதைகளை செவ்வைப்படுத்துவோம் (எபி.12:13).

கண்கள் [வச.47] :- தன்னுடைய ஊழியனின் மனைவியைக் கண்களால் தாவீது கண்டான் (2சாமு.11:2). இச்சைக்குள் விழுந்தான். ஏவாள் பழத்தைப் பார்த்தாள் (ஆதி.3:6) அதைப் புசித்ததினால் இந்த உலகத்திற்கு மரணம் வந்தது. பலவிதமான பாவ வழிகளுக்கு நம்மை அழைத்துச் செல்ல, நம் கண்கள் பிரதானமாக இருக்கிறது.

உப்பின் பலன் [வச.49,50] :- நாம் அனைவரும் தேவனால் உப்பிடப்பட்டிருக்கிறோம். இந்த உலகத்தில் அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தவும் அவரைப் புகழவும், நாம் உப்பாக அவரால் பயன்படுத்தப்படுகிறோம்.

தேவனே, உம்முடைய எச்சரிப்பின் சத்தத்தைக் கேட்க, என்னுடைய செவியைத் திறந்து, பாவங்களிலிருந்து எம்மைக் காத்தருளும். ஆமென்.

மாற்கு 10:1–16

விவாகமும் விவாகரத்தும்

தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்.

பரிசேயர்களின் நோக்கம் [வச.2-4]:- இயேசுவை சோதிக்கவே, பரிசேயர்கள் விவாகரத்தைக் குறித்து அவரிடம் கேள்வி எழுப்பினார்கள். அங்கு சூழ்ந்திருக்கும் மக்களிடையேயும், குடும்பங்களிலும் இயேசுவை ஒரு தவறான நபராக நிரூபித்துக் காட்ட வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. ஆனால் இயேசுவோ அவர்களுக்கு, திருமணம் என்பது இரண்டு நபர்களை ஒன்று சேர்ப்பது (ஆதி.2:21) என்று பதில் கொடுத்தார்.

இயேசுவின் பதில் [வச.5-9]:- தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காது இருக்கக்கடவன் (வச.9). திருமண பந்தம் தோல்வியுறுகிறது என்றால் அதற்கு காரணம் பாவம். பாவம் தேவனுடைய சித்தம் அல்லவே. தங்களுடைய இச்சையைத் தீர்த்துக் கொள்ள விவாகரத்தை நாடுபவர்களை தேவன் எதிர்க்கிறார் என்பது நமக்கு வச.10-12 விளக்குகிறது.

எபேசியர் 5:23-32ல் பவுல் கிறிஸ்துவுக்கும் ஆலயத்துக்கும் உள்ள உன்னத உறவைப் பற்றி விவரிக்கிறார். கிறிஸ்து எப்பொழுதும் நம்முடைய பாவங்களை மன்னித்து, மீட்டு நம்மை தூய்மையாக்குகிறார். நாம் கிறிஸ்துவுடன் வைத்துள்ள உறவு எப்பொழுதும் பிரிக்கமுடியாத முப்புரி நூல் போல இருக்க வேண்டும். கிறிஸ்து ஆலயமாகிய நம்மை மன்னிக்க எப்பொழுதும் தயாராய் இருக்கும் பொழுது, நாமும் நம்முடைய சகதுணையின் தவறை மன்னித்து அவர்களை ஏற்றுக் கொண்டு அவர்களோடு இருக்கும் உறவை மேம்படுத்திக் கொள்ள முயற்சிப்போம்!

இயேசுவும் சிறுபிள்ளைகளும் [வச.13-16]:- தேவனுடைய இராஜ்ஜியத்தை எப்படி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கு இயேசு சிறுபிள்ளைகளை உதாரணமாக பயன்படுத்துகிறார். சிறுபிள்ளைகளுக்கு நேர்மை, தாழ்மை மற்றும் நம்பிக்கை போன்ற மிகச் சிறந்த குணங்கள் உண்டு. நாமும் அதே போல அவருடைய மகத்துவத்தை உணர்ந்தவர்களாய், எல்லா சூழ்நிலைகளிலும் அவர் மீது நம்பிக்கையும் விசுவாசமும் வைத்து நித்திய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்வோம்.

கர்த்தாவே, நாங்கள் ஒருவருக்கொருவர் மன்னித்து எங்களுடைய உறவுகளை சீர்படுத்திக் கொள்ள உதவியருளும். ஆமென்.

மாற்கு 10:17-31

மீட்பின் வழி

> பாவத்தைக் குறித்தான அறிவே, ஒருவரின் மீட்புக்கான முதல் படி. அதனை தேவனுடைய சுத்த கிருபையினால் மட்டுமே பெற முடியும்.

வாலிபனான ஐசுவரியவானின் வேண்டுதல் [வச.16,17]:- இயேசுவைப் பார்த்தவுடன் அந்த வாலிபன் ஓடி வந்து முழங்கால்படியிட்டான். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாய் இருந்தாலும், அவன் இயேசுவைப் பணிந்து கொண்ட விதம் அவனுடைய தாழ்மையைக் காட்டுகிறது. அவன் இயேசுவிடம் மிகுந்த மரியாதையும் மதிப்பும் வைத்ததாலேயே அவரை நல்ல போதகர் என்று அழைக்கிறான். நித்திய வாழ்வை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்ற வாஞ்சை அவனிடத்தில் காணப்பட்டது.

இயேசுவின் பதில் [வச.18,19,21]:- நல்லவனாக இருப்பதும், நன்மைகளை செய்வதும், பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதும் கிறிஸ்துவுடனான ஒரு வெளியரங்கமான உறவிலே இருப்பதை வெளிப்படுத்துகிறது என்பதை தெளிவாக அந்த வாலிபனுக்கு இயேசு உணர்த்துகிறார். மீட்பைக் குறித்து அவனுடைய ஆசையை அறிந்து அவனை நேசித்த இயேசு தன்னுடைய சீஷனாய் இருக்க அழைப்பு விடுத்து, அவனுடைய குறையையும் சுட்டிக் காட்டுகிறார்.

தவறான தீர்மானம் [வச.22]:- எல்லா ஆஸ்தியையும் விற்று தரித்திரருக்கு கொடுக்க வேண்டும் என்று இயேசு கூறியதைக் கேட்டவுடன், அவன் துக்கம் அடைந்தவனாய் கடந்து விடுகிறான். மீட்பின் மீதும், நித்திய வாழ்வின் மீதும் அவனுக்கு இருந்த வாஞ்சையைவிட உலகப் பிரகாரமான ஆஸ்திகளின் மேல் அவனுக்கு அதிக நாட்டம் இருந்தது. அதுவே அவனை இயேசுவைப் பின் பற்ற விடாமல் தடுத்தது.

மீட்பின் வழி [வச.24-30]:- ஐசுவரியவான் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பது எத்தனை கடுமையானது என்று இயேசு விவரிக்கிறார். மனிதனுடைய முயற்சிகளால் அது சாத்தியமாகாது. அவருடைய பெரிதான கிருபையும் அவர் மேல் நாம் வைக்கும் அளவு கடந்த அன்புமே நாம் நித்திய வாழ்வை அடைவதற்கான வழியாகும். நாம் அவரை முழு இருதயத்துடன் பின்பற்றுவோமானால், ஆவிக்குரிய சந்தோஷத்தை நூறு மடங்கு பெறுவோம்.

கர்த்தரவே, உலகப் பிரகாரமான கட்டுகளை உடைத்து மீட்பின் வழியைத் தெரிந்தெடுத்து உம்முடைய இராஜ்ஜியத்திற்குள் நுழைய தகுதிப் படுத்தும். ஆமென்.

மாற்கு 10:32–45

ஊழியத் தலைமைத்துவம்

> பிறருக்கான தன்னலமற்றத் தியாகத்தை செய்பவரே தலைமை பண்பை அடைய முடியும்

இயேசுவின் கணிப்பு: இயேசு தான் அனுபவிக்கப்போகும் பாடுகளையும் சிலுவையில் அறைய தன்னைத் தானே ஒப்புக் கொடுக்கப் போவதையும் முன்பே அறிந்திருந்தார். அவர் எருசலேமுக்கு செல்வதின் ஆர்வம் வச.32ல் சீஷர்களுக்கு முன் நடந்துச் சென்றதில் தெரிகிறது. தான் வாரினால் அடிக்கப்படுவதும், துப்பப்படுவதும், துன்பப்படுத்தப்படுவதும் குறித்து இயேசு தெளிவாக கணிக்கிறார். இந்தப் பாடுகளும் சிலுவை மரணமும் மகிமை யாக மாற்றப்படும் என்பதையும் அறிந்திருந்தார்.

சீஷர்களின் வாஞ்சை: இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல், நித்திய வாழ்வு, மீட்பு இவை எல்லாவற்றையும் குறித்து, சீஷர்கள் கேட்டா லும் அதை அவர்கள் உணராமல் தங்கள் சுய இலாபத்தின்மேல் நோக்கமா யிருந்தார்கள். யாக்கோபும், யோவானும் அவருடன் வலது இடது பாரிசத்தில் அமர்வதற்கு வாஞ்சையாய் இருந்தார்கள். அதற்கு இயேசு அவருடைய மகிமையில் பங்கேற்க விரும்புகிறவர்கள், பாடுகளை அனுபவிப்பதும் அவசியமாயிருக்கிறது என்று உணர்த்துகிறார்.

இயேசுவின் பதில்: உங்களில் யார் முதன்மையாக இருக்க விரும்புகிறானோ அவன் எல்லோருக்கும் ஊழியக்காரானாயிருக்கக் கடவன் என்ற வசனம் நமக்கு தலைமைத்துவத்தை விளக்குகிறது. சிலுவை மரணத்தின்மூலம் இயேசு ஒரு கடைநிலை ஊழியனாய் (பணியாளனாய்) மாறி தன்னுடைய வாழ்வை தியாகம் செய்து, நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை மீட்டுக் கொண்டு ஊழியத் தலைமைத்துவத்தின் மகத்துவத்தை நிரூபித்தார்.

ஊழியத் தலைமைத்துவம்: வெளி 3:21ன்படி சிலுவையின் மூலமாய் ஜெயம் கொள்ளுகிறவன் அருள் பெறுவான். யாக்கோபும் யோவானும் ஆரம்பத் தில் அந்த மகிமைக்கு அவர்கள் (அறியாமையால்) வாஞ்சித்தாலும், இயேசு வின் சிலுவை மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் கண்ட பின்பு அவர்கள் உண்மையான உத்தமமான ஊழியக்காரர்களாக அவருடைய பாடுகளையும் அனுபவித்ததால், பணியினை செய்து சிங்காசனத்தில் அவருடன் அமரும் மகிமையைப் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

அன்பின் பரலோகப் பிதாவே, உம்முடைய ஊழியப் பணியினைத் தொடர்ந்து செய்ய எனக்கு உதவியருளும். உம்முடைய நாமம் மட்டுமே மகிமைப்பட வேண்டும். ஆமென்.

செப்டம்பர் 24
சனி

மாற்கு 10:46–52

விசுவாசமும் விடாமுயற்சியும்

பெரிய காரியங்களை செய்து முடிப்பதற்கு விசுவாசமும், விடா முயற்சியும் மிகவும் அவசியமாய் இருக்கிறது.

பர்திமேயுவின் விடா முயற்சி [வச.46-48]:- இயேசுவை நோக்கி, பர்திமேயு தன்னை சுகமாக்கும்படி அவன் கூக்குரலிட்ட பொழுது, கூட்டத்தார் அவனை அதட்டினார்கள். ஆனால் அவன் இன்னும் அதிக சத்தமாய் கூப்பிட்டான். இயேசுவால்தான் தன்னை சரீரப் பிரகாரமாகவும், ஆவிக்குரிய வாழ்விலும் சுகத்தைத் தந்து குணமாக்க முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை இருந்ததால், இயேசுவை நோக்கி அதிக சத்தமாய்க் கூப்பிட்டான். ஒரு பிச்சைக்காரனாக தன் வாழ்வைத் தொடங்கியவனின் பயணம் இயேசுவை பின்பற்றுகிறவனாக முடிகிறது. எத்தகைய ஒரு மாற்றம்? இயேசு அவனைக் கூப்பிட்டவுடன் மிகுந்த நம்பிக்கையுடன் தன்னுடைய மேல் வஸ்திரத்தை உதறிவிட்டு போனான். தேவனுடைய குமாரன் தன்னுடைய பொருளாதார வாழ்வினையும், சரீர சுகவீனத்திலும் மாற்ற வல்லவர் என்று உணர்ந்திருந்தான். இயேசு நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டதற்கு, எனக்கு பார்வை வேண்டும் என்று வெளிப்படையாக அறிவித்தான். இயேசுவை தாவீதின் குமாரன் என்று அழைத்ததினால் அவரே மேசியா என்று உணர்ந்திருந்தான். அவனுடைய விசுவாசமும், விடா முயற்சியும் இயேசுவை நிற்கச் செய்து, அவனுடைய வேண்டுதலை நிறைவேறச் செய்தது.

பர்திமேயுவின் நன்றியுணர்வு [வச.52]:- இயேசு, நீ போகலாம் உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்று கூறியவுடன் அவன் பார்வை அடைந்தான். கிறிஸ்துவின் மீதிருந்த அவனுடைய விசுவாசம் அவனைப் பார்வையடையச் செய்தது. நாம் இயேசுவிடம் ஆவிக்குரிய சுகம் பெறுவதற்கு மட்டும் செல்லாமல், பர்திமேயு போல அவரைத் தொடர்ந்து சென்று கனப்படுத்த வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படுமானால் இயேசுவின் பின்னே தொடர்ந்து செல்ல நம்மை உந்துதல் செய்யும். தான் சுகமடைவதற்கு முன் விடாமுயற்சியையும், விசுவாசத்தையும் காண்பித்த பர்திமேயு, இயேசுவைப் பின்தொடர்ந்ததன் மூலம் அவனுடைய நன்றியுணர்வைப் பறைச் சாற்றின. நம்மிடமும் இந்த குண நலன்கள் காணப்படுகிறதா? என்று சிந்தித்துப் பார்ப்போம்.

இயேசுவே, ஆவிக்குரிய வாழ்வில் எங்களை குணப்படுத்தி உண்மையும் உத்தமுமாய் உம்மைத் தொடர அருள்புரியும். ஆமென்.

பழி வாங்க விண்ணப்பம்

> பழி வாங்குதல் எனக்குரியது; நான் பதிற் செய்வேன் என்பது நமது ஆண்டவர் வார்த்தை.

பழிக்குப் பழி என்பது மக்களின் பொதுவான எண்ணம். தீமைக்கு நன்மை என்பது இயேசு கிறிஸ்துவின் வழி. நன்மை செய்திருந்தும் தனக்கு விரோதமாக மக்கள் எழும்பியபோதும், தவறாக பேசியபோதும் தன் ஆவியில் கலங்கினவராக தாவீது நிற்கிறார். தன்னை விடுவிக்கவும், தன் வியாகுலத்தைப் போக்கவும் அவர் கடவுளிடம் வேண்டுகிறார்.

தவறான மனப்பான்மை : தாவீது அரசன் ஒருவரிடமும் சண்டை போட விரும்பியதில்லை. சவுலைக் கொல்ல தனக்கு வாய்ப்பு கிட்டியபோதும் அவனைக் கொல்லவில்லை (1சாமு.24:8-13). ஆனால் மக்கள் எழும்பி அவரை வீழ்த்த நினைக்கின்றனர். தீமையாக அவருக்கு விரோதமாக பேசுகிறார்கள். ஆனால் தாவீது, தனக்கு விரோதமாக மக்கள் எழும்பி தீமை செய்தாலும் அவர்கட்கு நன்மையே செய்வார். அவர்கள் சுகவீனப்பட்டால் அவர்கள் சுகத்திற்காக உபவாசித்து ஜெபிப்பார் (வச.12-13). தன் குடும்பத்தினராக அவர்களை பாவிப்பார் (வச.14). அவர்களுடைய பொல்லாத மனப் போக்கை கண்டபோது தன் ஆவியில் நொறுங்கிப்போகிறார். இச்சூழ்நிலையை தாங்கமுடியாத நிலையில் கடவுளிடம், தன்னை பாதுகாக்கவும், தனக்கு விரோதமாக எழும்புகிறவர்களை பழிவாங்கவும் வேண்டுகிறார். இப்படிப்பட்ட சூழ்நிலை நம்முடைய வாழ்விலும் ஏற்படலாம். ஆனால் இந்த சூழலை எப்படி எதிர் கொள்கிறோம்? நமக்கு விரோதமாக மக்கள் எழும்பும்போது, அவர்களை தண்டிக்க வேண்டுமென தாவீதைப் போல ஜெபிப்பது சரியா? பகைவரின் தண்டனையை விரும்புகிற தாவீதின் மனப்பான்மை தவறானது.

சரியான மனப்பான்மை : தாவீதின் சரியான மனப்பான்மை, அவருடைய விரோதிகள் தீமை செய்தபோது இயேசு கிறிஸ்துவின் வழியில் நன்மை செய்ததும் (மத்.5:43-48), அவர்களுடைய நலனுக்காக ஆரம்பத்தில் பரிதபித்ததுமே. ஆனால் தாவீது இப்போது தன் சிறந்த பண்பை விட்டவராக ஒரு சாதாரண மனிதனைப் போல செயலாற்றுகிறார். நாம் கடவுளின் பிள்ளைகளாக, தன்னை சிலுவையில் அறைந்தவர்கட்காக ஜெபித்த இயேசு கிறிஸ்துவைப் போல் அன்பை வெளிப்படுத்த வேண்டும்.

ஆண்டவரே, நான் உம்முடையவன் என்பதை ஒவ்வொருவரையும் நேசித்து வெளிப்படுத்த உதவியருளும். ஆமென்.

தேவனோடுள்ள ஐக்கியம்

பாவரோடும் சமாதானமாகவும் ஐக்கியமாகவும் வாழ்கிறேனா?

முதல் நூற்றாண்டு திருச்சபை சந்தித்தது எல்லாம் தனிமை, துன்பம், இரத்த சாட்சியாக மரிக்க வேண்டிய சூழ்நிலை. இப்படிப்பட்ட சூழ்நிலையின் மத்தியிலும் அவர்கள் மகிழ்ந்திருந்தது தேவ கிருபை. அம்மகிழ்ச்சி நிறைவு அடைய வேண்டுமென்பதே ஆக்கியோனின் ஆவல்.

வார்த்தையின் ஐக்கியம் [வச.1-4] :- அப்போஸ்தலனாகிய யோவான் ஜீவ வார்த்தை வெளிப்படுத்தப்பட்டதாகக் கண்டு, அதை அனுபவித்ததை விளக்குகிறார். ஆதியிலே இருந்த அந்த வார்த்தை, மாம்சமாகி (யோ.1:1). உண்மையான மனிதனாகவும், உண்மையான தேவனாகவும் வெளிப்பட்டார். அதைக் குறித்து சாட்சி பகர்ந்ததோடு (வச.1:3) மட்டுமல்லாது அவரோடு ஐக்கியம் கொண்டதையும் வெளிப்படுத்துகிறார். இந்த வெளிப்பட்ட வார்த்தையை அறிந்து நாம் சாட்சி பகருகிறோமோ? ஐக்கியம் கொண்டுள்ளோமா?

ஒளியில் ஐக்கியம் [வச.5-7] :- தேவன் ஒளியாயிருக்கிறார். இருளில் நாம் நடக்கிறவர்களாயிருந்தால் ஒளியாயிருக்கிற தேவனோடு ஐக்கியம் கொள்ள முடியாது. ஒளி என்பது உண்மை, பரிசுத்தம், நல்நடத்தை ஆகியவற்றை குறிப்பிடுகிறது. இருளில் நடப்பது இதற்கு எதிர்மறையானது. ஒளியையும் இருளையும் ஒன்றாக இணைக்க இயலாது. தேவனோடு ஐக்கியம் கொள்ள தேவன் எதிர்பார்ப்பதை ஆதி.17:1ல் ஆபிரகாமிற்குக் கூறியுள்ளார். நம்மிடமும் இதையே எதிர் பார்க்கிறார்.

பாவத்தை விட்டு பரமனிடம் ஐக்கியம் [வச.8-10] :- அன்றைய நாட்களில் பரவலாக இருந்த போதனை தவறு என்பதை யோவான் வலியுறுத்துகிறார். நமக்குப் பாவமில்லை என்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். பாவமில்லையென்பது பாவம் செய்வதை விட தவறானதாகும். நாம் நம்முடைய பாவங்களை ஒத்துக் கொண்டு அறிக்கையிட்டு விட்டுவிட முன் வரும் போது நமக்கு மன்னிப்பை அருளி நம்மை சுத்திகரித்தும், தம்மோடு ஐக்கியப்படுத்துவதற்கு நம் தேவன் தயை நிறைந்தவராவார். தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொண்டு தேவனோடு ஒளியில் நடக்கிறேனா?

தேவனே, பாவத்தை விட்டு உம்மை ஏற்றுக் கொண்டு நித்திய இராஜ்ஜியத்தின் பங்காளியாய் மாற உதவியருளும். ஆமென்.

தேவனை சார்ந்திருத்தல்

உண்மையும் அன்பும் தேவனைப் பற்றிய அறிவை வளர்க்கும்.

பரிந்து பேசுகிற கிறிஸ்து [வச.1-2] :- தேவனை அறிந்திருக்கிறோம் என்பதும் அவருக்கு கீழ்ப்படிவோம் என்பதும் ஒரே அனுபவத்தின் இரண்டு அர்த்தங்கள் ஆகும். அவரை அறிந்திருப்பது நமது வாழ்வில் காணப்பட வேண்டும். நமது செயலின் அளவைக் கொண்டுதான் அவர்மீது நாம் வைத்துள்ள அன்பை கணிக்க முடியும். நாம் பாவத்தை அறிக்கையிட்டு, தேவனைச் சார்ந்து நடக்கும் போது நமக்காக பரிதபித்து, நமக்கா பிதாவினிடம் பரிந்து பேசுகிற கிறிஸ்து இருக்கிறார்.

கற்பனைகளுக்கு கீழ்ப்படிதல் [வச.3-11] :- தேவனிடத்தில் நாம் அன்பு செலுத்துகிறோமென்பதை எப்படி அறிந்து கொள்ளலாம்? அவருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிவதினால் தானே. அவரது கற்பனைகளுக்கு கீழ்ப்படியும்போது பரலோகத்தை பூவுலகில் அனுபவிக்க ஆரம்பிக்கிறோம். ஆவியின் கனி (கலா.5:21-23) நம்மிடத்தில் காணப்படுகிறது. சகோதரர் களோடும், உடன் விசுவாசிகளோடும் வெறுப்பையும், பகைமையும் வெளிப்படுத்துகிறவன் இருளிலே நடக்கிறான். தேவனுக்கும் அத்தகைய மனிதனுக்கும் ஐக்கியம் இருக்க முடியாது. பவுல் அப்போஸ்தலன் கூறியுள்ளபடி ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் (கொரி.5:17). கற்பனைகளுக்கு கீழ்ப்படியாதவன் பொய்யன் (1யோ.2:4) என்று கூறகிறார். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது தேவனோடும், மனிதனோடும் நிலையான ஐக்கியம் உடையதாய்க் காணப்பட வேண்டும். நம் செயல்கள் அவருக்கு மகிமைக் கொண்டு வரத்தக்கதாய் இருத்தல் வேண்டும்.

ஆவிக்குரிய வாழ்வின் நிலை [வச.12-14] :- பிள்ளைகளே, பிதாக்களே, வாலிபரே என்னும் வார்த்தைகள் ஆவிக்குரிய வாழ்க்கையின் நிலைகளைக் குறிக்கிறது. பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிலை, தேவனை அறிந்திருக்கும் நிலை, பொல்லாங்கனை ஜெயித்த நிலை. மீண்டும் இதனை எடுத்துரைத்து இந்நிலைகளை உறுதிப்படுத்தி ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர ஊக்குவிக்கிறார். கிறிஸ்துவினுடைய பரிந்து பேசுதலுக்குப் பாத்திரனாய் கற்பனைகளைக் கடைப்பிடிக்கிறவனாய் உள்ளேனா?

தேவனே, அனுதினமும் புது சிருஷ்டியாய் வாழ்ந்து ஆவிக்குரிய வாழ்வில் வளர அருள் புரியும். ஆமென்.

1 யோவான் 2:15–27

நித்திய ஜீவன்

> வருகையில் வெட்கப்படாமலிருக்க வேண்டுமானால் இம்மையில் அவரில் நிலைத்திருக்க வேண்டும்.

கிறிஸ்தவர்களும் உலகமும் (வச.15-17) :- உலகமும் அதின் ஆசை இச்சைகளும் மனித இதயத்தைத் தேவனிடமிருந்து திசை திருப்புகிறது. உலக ஆசைகள் அதிகமாகும்போது தேவனோடுள்ள அன்பு தணிந்து ஐக்கியம் குறைகிறது. மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகியவை இருதயத்தின் மாறுபட்ட சிந்தனைகளினாலும், ஆசைகளினாலும், புகழ், பெருமை ஆகியவற்றைத் தேடுவதினாலும் உண்டாகுகிறது. இங்கே ஜீவனத்தின் பெருமை என்பது நம்மைக் குறித்து பெருமையாய் எண்ணுவது ஆகும். இவை சீக்கிரத்தில் அழிந்துவிடும். ஆனால் தேவனுடைய அன்பு நிலையானது. கிறிஸ்துவை உடையவர்கள் அதில் நிலைத்திருப்பர்.

கிறிஸ்தவர்களும் அந்திகிறிஸ்துவும் (வச.18-27) :- இயேசுவை கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவர்கள் பொய்யர் என யோவான் கூறுகிறார். உண்மையான கிறிஸ்தவர்கள் தேவனுடைய கிருபையால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள். தேவ ஆவியால் நிரப்பப்பட்டு ஆவியின் வரங்களையும் பெற்றவர்கள். பிதாவையும் அவனுடைய குமாரனையும் மறுதலிக்கிறவன் அந்திக்கிறிஸ்து. கிறிஸ்துவினுடைய தலைமைத்துவத்தையும் பிதாவோடு உள்ள ஐக்கியத்தையும் ஏற்றுக் கொள்ளாதவர்களுக்காக ஜெபிக்க வேண்டியது கிறிஸ்தவனின் கடமை. நாம் அனைவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கத்தினர்களாக கடைசி நாட்களில் ஆவியானவரின் ஒத்தாசையோடு நிறைந்திருந்தால் நித்திய ஜீவனைப் பெற முடியும். ஒவ்வொரு விசுவாசியும் சத்தியத்தில் நிலைத்திருக்கும்போது சத்தியத்திற்கு புறம்பான போதனைகளை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மாறாக விசுவாசிகள் கிறிஸ்துவில் நிலைத்திருப்பார்கள். தங்கள் வாழ்க்கையில் நீதியை நடப்பிப்பார்கள். மாறுபட்ட கருத்துக்கள் தேவ ஐக்கியத்தை விட்டு நம்மைப் பிரிக்காதபடி அது காத்துக் கொள்ளும். நமக்குள் இருக்கும் கிறிஸ்துவின் சத்தியம் நம்மை பாவத்தினின்று வேறுபடுத்தி தேவ குமாரனோடு நம்மை இணைக்கும். உலகமும், கடைசிக் கால மாறுபட்ட போதனைகளும் நமக்கு உகந்ததா?

இயேசுவே, உலகத்தின் இச்சைகளுக்கும், அந்திக் கிறிஸ்துவின் வழிகளுக்கும் என்னை விலக்கி காத்தருளும். ஆமென்.

வியப்படைந்த இயேசு

நான் தேவனுடைய பிள்ளை என்ற உண்மையை மறக்கக் கூடாது.

தேவனுடைய பிள்ளைகள் [வச.2:28-3:3] :- இப்பகுதியில் நாம் தேவனோடு ஐக்கியம் கொள்ளவும், தேவனுடைய பிள்ளைகள் என அழைக்கப்படவும் நம்மில் காணப்படவேண்டிய குணநலன்களை அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிட்டுள்ளார். தேவனுடைய பிள்ளைகளாக வாழ அழைக்கப்பட்ட சிலாக்கியத்தை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. தேவன் நம்மை அழைத்தவர். அவருடைய பிள்ளைகளாயிருப்பதற்கு அவரில் நிலைத்திருக்க வேண்டும். அவருடைய பிள்ளைகள் யாரென்று யோ.1:12ல் காண்கிறோம். அவரில் விசுவாசம் வைத்து அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நாமும் பரிசுத்தராயிருத்தல் வேண்டும் (வச.3:3). ஒருவன் மறுபடியும் பிறந்து விசுவாசத்தினால் தேவனுடைய குடும்பத்தின் அங்கமாக மாற்றப்படுகிறான் (கலா.3:26). ஆயத்தப்பட வேண்டியது மட்டுமல்ல, நம்மைப் பரிசுத்தமாகவும் காத்துக்கொள்ளவும் வேண்டும்.

தேவனுடைய நீதியைக் கடைப்பிடித்தல் [வச.4-10] :- பாவஞ் செய்து அதில் வாழ்பவன் நிமித்தமாக நியாயப்பிரமாணத்தை மனிதன் மீறுகிறான். தேவன் நீதி செய்கிறவராயிருப்பதினால், பரிசுத்தமில்லாமல் நீதியை கடைப்பிடிக்காமல் அவரோடு வாழ இயலாது. பாவத்தோடும் பரிசுத்தமில்லாமலும் நாம் அவரைத் தரிசிக்க இயலாது. அவர் பாவமற்ற பரிசுத்தர். பாவஞ்செய்கிறவன் சாத்தானுக்கு அடிமையாயிருக்கிறான். சாத்தானை ஜெயிக்க தேவ குமாரன் வெளிப்பட்டார் (வச.3:8). தேவனால் பிறப்பது என்பது ஆவியின் வல்லமையினால் புதுப்பிக்கப்படுவது. இவ்விதமாகப் புதுப்பிக்கப்பட்ட மனிதன் மறுபடியும் பிறப்பதற்கு முன் போன்று பாவஞ்செய்ய இயலாது. அவனுக்குள் இருக்கும் வெளிச்சம் பாவத்தின் கொடிய தன்மையை அவனுக்குக் காட்டுகிறது. நீதியை செய்வதும், தன் சகோதரனிடத்தில் அன்பு கூருவதும் தேவனால் பிறந்தவனுக்கு அடையாளம் (வச.3:10) என்று யோவான் கூறுகிறார். வாழ்க்கையில் பரிசுத்தமும், நீதியும் சகோதரனிடத்தில் அன்பு செலுத்துவதும் என்னில் காணப்படுகிறதா?

தேவனே, உம்முடைய பரிசுத்தத்தை உட்கொண்டு உமது பிள்ளையாய் வாழ எனக்கு உதவி செய்யும். ஆமென்.

I யோவான் 3:11-24

பொல்லாங்கானது தீமையா? தேவ அன்பா?

> சொல்வது ஒன்று செய்வதோ மற்றொன்று: நம் கள்ளத்தனம் மாறுவது என்று?

பொல்லாங்கனால் உண்டான தீங்கு [வச.11-13] :- நீதியும் சகோதர அன்பும் தேவ பிள்ளைகளின் அடையாளமாகும். பிறரிடம் அன்பு செலுத்த வேண்டியது ஒரு கிறிஸ்தவனின் கடமை ஆகும் (ரோ.13:8). ஆனால் பொல்லாங்கன் மனதை ஆட்கொள்ளும்போது காயீன் செய்த பொல்லாத செயலுக்கு நேராக மனிதன் தூண்டப்படுகிறான். நமக்குள் சகோதர அன்பு காணப்படவில்லை எனில் நாம் பாவத்திற்கு அடிமைகளாய் இருக்கிறோம். நாம் கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருக்கும்போது உலகம் நம்மைப் பகைக்கலாம் (வச.13). தீமை எப்போதும் நன்மைக்கெதிராகச் செயல்படுகிறது.

தேவனால் உண்டான அன்பு [வச.14-22] :- அன்பினால் நடத்தப்படுவதும், அன்பு செலுத்துவதும் ஒரு கிறிஸ்தவனின் குணநலன். தேவ அன்பு ஒரு விசுவாசியின் உள்ளத்தில் ஊற்றப்படுகிறது (ரோ.5:4). இந்த ஊற்றப்பட்ட அன்பு அதை மற்றவரிடம் காட்ட விசுவாசியை ஊக்குவிக்கிறது. சகோதரரிடம் அன்பு செலுத்துவதின் வாயிலாக நமது இதயத்தில் அமைதி காணப்படுகிறது. சத்தியத்திற்குரியவர்களென்று அறியவும் உதவுகிறது (வச.19). நாம் தேவனால் அறியப்படுகிறோம் (வச.20). இது நம்மை தேவனிடத்தில் தைரியம் கொள்ளவும், கற்பனைகளைக் கைக்கொண்டு பிரியமானவைகளைச் செய்யும்போது விண்ணப்பங்களுக்கு பதில் பெற்றுக் கொள்ளவும் அன்பு நம்மை தகுதிப்படுத்துகிறது (வச.22).

தேவனுடைய கட்டளை [வச.23,24] :- நான் கிறிஸ்துவைப் பார்த்து "நீர் என்னை எவ்வளவு நேசிக்கிறீர்?" என்றேன். அவர் "இவ்வளவு என்று தன் கரங்களை நீட்டி ஜீவனை விட்டார். ஆம் அன்பு தியாகத்தில் வெளிப்பட்டாக வேண்டும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கவும்(வச.23), (யோ.6:29) ஒருவரிலொருவர் அன்பு செலுத்தவும் வேண்டும் என்பதை யோவான் நமக்கு தேவ கட்டளையாக கூறுகிறார் (யோ.13:34,35). தேவ ஆவியானவர் நமக்குள் மாற்றத்தை ஏற்படுத்துகிறார். சாத்தானின் அடிமைத்தனத்தின்று நாம் தேவ வல்லமைக்குள் மாற்றப்படுகிறோம்.

தேவனே, உமது அன்பினால் நிரப்பப்பட்டு உம்மில் நிலைத்திருக்கக் கிருபையருளும். ஆமென்.

ஆவிகளைப் பகுத்தறிதல்

> வேதத்திலே விலைமதியாத முத்துக்களுண்டு; தினந்தோறும் அம்முத்துகளை பார்த்தால் நாமும் முத்தாக மாறுவோம்.

வஞ்சக ஆவி :- அப்போஸ்தலனாகிய யோவான் கள்ள போதகர்களைக் குறித்து விசுவாசிகளை எச்சரிக்கிறார். இது இன்றைய காலத்திற்கும் பொருத்தமுடையதாகக் காணப்படுகிறது. அத்தகையவர்களை இனம் கண்டு கொள்ள வேண்டியது விசுவாசிகளின் பொறுப்பு. கள்ளப் போதகர்கள் விரைவில் பெருந்திரளான மக்களை தாங்கள் பக்கம் இழுக்கின்றனர். அவர்களில் காணப்படுவது சத்திய ஆவியா அல்லது வஞ்சக ஆவியா? மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் அந்திக்கிறிஸ்துவின் ஆவியே. பாவத்தின் பிடியிலிருந்து நம்மை மீட்டு நித்திய ஜீவனை நமக்குத் தர மாம்சத்தில் வெளிப்பட்டார் இயேசுகிறிஸ்து என்பதை அறிக்கையிடாதவர்கள் வஞ்சக ஆவியுடைய கள்ள போதகர்களாயிருக்கிறார்கள். அவர்கள் உலகத்துக்குரியவர்கள். அழிவுக்கேதுவான கள்ளப் போதகங்களை நாம் கேட்டு அழிவின் பாதைக்கு வழிநடத்தப்படாமல் நம் கரங்களில் கொடுக்கப்பட்ட விலைமதிப்பில்லாத வேத வார்த்தைகளை தினமும் வாசித்து, அதன்படி நடந்து தேவ நாமத்தை மகிமைப்படுத்துவோம்!

சத்திய ஆவி :- தேவனுடைய ஆவி அவருக்கு நேராகவும் நித்திய ஜீவனுக்கு நேராகவும் நம்மை வழி நடத்துகிறது. இப்படிப்பட்ட சத்திய ஆவியானவரை உடையவன் பரிசுத்த ஆவியின் நிறைவோடு பரிசுத்தமாய் வாழுகிறான். சத்திய ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்துவார். மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைப் பண்ணுவது தேவனுடைய ஆவியாகும். அத்தகையவர்கள் உலக மக்களிலிருந்து வேறுபட்டு தேவனால் தனியாக்கப்பட்டு உலகத்தை ஜெயிக்க முடியும். வல்லமையுடைய தேவன் அம்மக்களில் வாசம் செய்கிறார். அத்தகையவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு செவி சாய்த்து நித்திய வாழ்வுக்கென்று தங்களை ஆயத்தப் படுத்துகிறார்கள். ஆவியானவரின் ஒத்தாசையோடு தங்களை அன்பினால் நிறைத்து கறை திரையற்றவர்களாக காத்துக் கொள்ள முனைகிறார்கள். தேவன் அவர்களுக்கு வெற்றியை வாக்குப் பண்ணியுள்ளார். சத்திய ஆவியானவரை அறிய, செய்ய வேண்டியது என்ன?

தேவனே, சத்திய ஆவியானவரை அறிந்து உலகத்தால் கறைபடாதபடி காத்துக் கொள்ள பெலன் தாரும். ஆமென்.

பாதுகாவலுக்கான ஜெபம்

நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்; அவ... கிருபை என்றுமுள்ளது.

மனிதன் தன் இருதயத்தை கடவுளுக்கு அடைக்கும்போது, கடவுளுக்கும் சக மனிதனுக்கும் விரோதமான தன் துன்மார்க்கத்தை அறியாதிருக்கிறான்.

கடவுளல்லாதவர்களின் துன்மார்க்கம் : எந்த நீதிமானும் தன்னை தேவனுக்கு முன்பாக நீதிமானென்று காண்பிக்கமாட்டான். ஆனால் துன்மார்க்கனோ தன் வாழ்வில் கடவுளுக்கு இடங்கொடாமல், பெருமை கொண்டு தன்னை நீதிமானாகக் கருதுகிறான். அவன் கடவுளை அல்லாமல் தன்னை உயர்த்த விரும்புகிறான். அவன் நீதிமானுக்கு விரோதமாக செயல்பட விரும்புகிறான். அவன் சிந்தையை கடவுளுடைய வார்த்தையை தியானிக்க பயன்படுத்துகிறான். கடவுள் இப்படிப்பட்ட மக்களை இவ்வுலகில் அனுமதிக்கிறார். நாம் அவர்களைப்போல் இராதபடி எச்சரிக்கையாகவும், அவர்களுக்காக ஜெபித்து, அவர்களும் ஆண்டவருடைய அன்புக்குள் வர செய்யவுமே, கடவுளின் எதிர்ப்பார்ப்பை செயல்படுத்துவோமா?

கடவுளின் நன்மை : தம்முடைய நன்மையை தம் பிள்ளைகட்கு மாத்திரம் என வரையறுத்து வைப்பதில்லை. தன்னுடைய மாறாத அன்பினால் தன் படைப்பு அனைத்தையும் தன் பாதுகாவலில் வைத்துக் கொள்கிறார். கடவுளுடையவர்களையும், கடவுளற்றவர்களையும் பாரபட்சமின்றி போஷிக்கிறார். அவருடைய அன்பையும், இறையாண்மையையும் ஏற்று கொண்டு அவரை அணுகுகிற யாவருக்கும் நன்மையை அருளுகிறார். அவரே வாழ்வின் ஊற்றாக இருப்பதால் மனிதன் அவரிடம் மாத்திரமே வாழ்வைப் பெறமுடியும்.

பாதுகாக்க ஜெபம் : சங்கீதக்காரன், தான் கடவுளை அறிந்தவன் என்ற உரிமையோடு தனக்கு விரோதமாக எழும்புகிறவர்களிடமிருந்து தன்னைப் பாதுகாக்க வேண்டுகிறார். கடவுள் அங்கீகரிக்கும் வண்ணம் நம் ஜெபங்கள் ஏறெடுக்கப்படுமானால், கடவுள் நம் ஜெபங்களைக் கேட்க ஆவலுள்ளவராக இருக்கிறார். கடவுள் அங்கீகரிக்கும் வண்ணம் நம் ஜெபம் அமைந்திருக்கிறதா?

ஆண்டவரே, உம் அன்பைக்குறித்த உணர்வுள்ளவனாயிருக்கவும், நீர் விரும்புகிறபடி உம் நன்மையை நாடவும் அருள்தாரும். ஆமேன்.

தேவ அன்பும் நாமும்

நாம் எவற்றின் மீது, யார் மீது அதிக அன்பு கூறுகிறோம்? ஏன்?

தேவ அன்பின் நோக்கம் (வச.7-10) :- அன்பு என்ற வார்த்தையோடு தொடர்புடைய வார்த்தைகள் 10 முறைக்கும் குறையாமல் வருகின்றன. தேவனுடைய ஆவியானது அன்பின் ஆவியாகும். யோவான் தேவனை ஆவியாகவும் (யோ.4:24), வெளிச்சமாகவும் (1யோ.5:5), அன்பாகவும் (வச.4:16) குறிப்பிட்டுள்ளார். அன்பு என்ற வார்த்தை மறுபடியும் மறுபடியுமாக இந்நிருபத்தில் எழுதப்பட்டுள்ளது. தேவன் தம்மிடத்தில் அன்பு வைத்து, பாவத்திலிருந்து நம்மை மீட்கும்படியாகத் தம்முடைய குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பினார் (4:10). நீதிய வாழ்விற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக்க இந்த அன்பு வெளிப்பட்டது (4:9). கல்வாரியில் காண்பிக்கப்பட்ட தேவ அன்பானது மனிதனின் பாவத்தினின்று அவனை மீட்க திட்டத்தையும் வழியையும் கொண்டுள்ளது.

தேவ அன்பின் விளைவு (வச.11-16) :- தேவ அன்பு நம்மில் செயல்படும் போது தேவன் நமக்குள் வாசம் பண்ணுகிறார் என்பதை மற்றவர்கள் காண முடியும். அதோடல்லாமல் நம் சகோதரர்கள் மேல் அன்பு செலுத்த நம்மை வழி நடத்துகிறது. தேவன் மேலுள்ள அன்பும் மனிதன் மேலுள்ள வெறுப்பும் ஒருங்கிணைந்து காணப்பட முடியாது. நமக்குள் நிலைத்திருக்கும் அன்பானது பூரணப்படும் (வச.12). தேவனுடைய ஆவியினாலே அவர் நமக்குள் நிலைத்திருப்பதை நாம் அறிந்து கொள்ள முடியும் 9வச.13). இந்த அன்பை அறிந்தும் விசுவாசித்தும் வாழுகிறான்.

தேவ அன்பின் தன்மை (வச.17-21) :- பூரண அன்பு இரட்சிப்பை உறுதிப் படுத்துகிறது. அதன் வாயிலாக நியாயத்தீர்ப்பு நாளிலே நாம் நிற்க தைரியம் பெறுகிறோம் (வச.17). அன்பு பூரணப்படும்போது பயம் புறம்பே தள்ளப்படுகிறது (வச.18). நாமும் தேவனிடத்தில் அன்பு கூருகிறோம் (வச.19). பூரண அன்பு தன் சகோதரனிடத்தில் அன்பு கூறச் செய்கிறது (வச.21). பவுல் அப்போஸ்தலனும் அன்பின் சிறப்பைப் பற்றி 1 கொரிந்தியர் 13ம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவம் எப்படியோ அப்படி அன்பு இல்லாத வாழ்க்கையும் இருக்கிறது. தேவன் தம் குமாரனை அனுப்பியது இந்த அன்பிற்கு அடையாளம்.

தேவனே, நீர் காண்பித்த அன்பிற்குப் பாத்திரனாய்க் காணப்பட உதவி அருளும். ஆமென்.

விசுவாசமும் வெற்றியும்

கர்த்தர் நம் வழிகாட்டியானால் நாம் வழி தவறி போகமாட்டோம்.

விசுவாசிகளின் உன்னதத் தன்மை [வச.1-3] :- அன்பு, விசுவாசம், வெற்றி என்பவற்றைக் குறித்து அப்போஸ்தலர் எழுதுகிறார். இயேசுவை கிறிஸ்து என்று விசுவாசிக்கிறவர் மறுபிறப்பின் அனுபவத்தைப் பெற்ற விசுவாசி ஆகிறான். (வச.1). இந்த விசுவாசி ஆவியானவரின் துணையோடு கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதற்கு நேராக நடத்தப்படுகிறான். சங்கீதம் 119:32ல் சங்கீதக்காரன் இதனைக் குறிப்பிடுகிறான். இதுவே தேவனிடத்தில் அன்பு கூறுவதாகும் (வச.3). தேவன் விசுவாசிக்கு பரிசுத்த ஆவியானவரைத் தந்து அவரது அன்பின் வாயிலாக அவனை மறுஉருவப்படுத்துகிறார். தேவனை நேசிக்கிறோம் என்பதை வாயளவில் சொல்வதைவிட செயலில் காட்ட வேண்டும்.

விசுவாசிகளின் வெற்றி [வச.4-9] :- விசுவாசியானவன் தேவனால் பிறக்கும் போது வெற்றியை ருசிபார்க்கிறான் (வச.4). பரிசுத்த ஆவியானவர் அவனுக்குள் வாசம் செய்து அவனைப் பலப்படுத்துகிறார். பொய்மையிலிருந்தும், பகை, விரோதம், தேவ பயமில்லாமையிலிருந்தும் அவன் வெற்றி பெறுகிறான். இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று முழுமையாக நம்புகிறான். தேவனும் தமது குமாரனைக் குறித்து சாட்சி கொடுக்கிறார். இந்த சாட்சியை விட்டு விலகக் கூடிய போதகங்களைப் பின்பற்ற வேண்டாமென்று யோவான் எச்சரிக்கிறார். உலகத்தின் மேல் வெற்றி என்பது இரட்சிப்பின் நம்பிக்கை. இதற்கு இரண்டு நிலை உண்டு. 1) விசுவாசத்தால் பாவத்திலிருந்து தேவனுக்கு நேராகத் திரும்புவது. 2) கிறிஸ்தவ வாழ்க்கையில் அனுதினமும் முன்னேறுதல்.

விசுவாசத்தின் உறுதி [வச.10-12] :- தேவனுடைய குமாரனை ஏற்றுக் கொண்ட விசுவாசிக்கு தேவன் உன்னத நிலையை வாக்குப்பண்ணுகிறார். விசுவாசத்தினால் தேவனை அண்டிச் சேரும் விசுவாசிக்கு நித்திய ஜீவனை வாக்களிக்கிறார். நித்திய ஜீவன் தேவனிடமிருந்து நமக்குக் கிடைக்கும் வெகுமதி (வச.11). விசுவாசியாக ஜெபத்துடன் வாழ்கிறேனா? கடமைக்காக வாழ்கிறேனா?

தேவனே, நீர் தரும் வெகுமதியைப் பெற்றுக் கொள்ள என்னைத் தகுதிப்படுத்தும். ஆமென்.

1 யோவான் 5:13-21

தேவனால் பிறந்தவன்

பிரிவினைகளும் வேற்று உபதேசங்களும் நிறைந்திருக்கும் நம் திருச்சபைக்கு நாம் செய்ய வேண்டியது என்ன?

தேவனை நேசிப்பதும் பிறரை நேசிப்பதும் மட்டுமல்லாது நாம் கடைபிடிக்க வேண்டிய வேறு சிலவற்றை பற்றியும் யோவான் கூறுகிறார்.

விசுவாசியின் ஜெபம் [வச.13-17] :- இந்த நிருபம் எழுதப்பட்ட நோக்கத்தை யோவான் தொகுத்துரைக்கிறார். ஜெபிப்பதற்கான ஒரு வழிகாட்டி இப்பகுதியில் தரப்பட்டுள்ளது. ஜெபத்திற்கும் சில நிபந்தனைகள் உண்டு. தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்க வேண்டும் (வச.14). தேவன் நமது ஜெபத்தைக் கேட்கிறாரென்று அறிந்து ஜெபித்தல் வேண்டும்(வச.15). ஜெபம் என்பது நம்முடைய விருப்பத்திற்கு தேவனை இணங்கச் செய்வது அல்ல, மாறாக அவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுத்தல் ஆகும். பாவஞ் செய்கிற சகோதரனது மீட்புக்காக ஜெபிப்பது நமது கடமையாகும். செம்மையானவர்களின் ஜெபம் கர்த்தருக்குப் பிரியம் என்றும், நீதிமான்களின் ஜெபத்தைக் கர்த்தர் கேட்கிறார் என்றும் சாலமோன் ஞானி எழுதியுள்ளார் (நீதிமொழிகள் 15:8,29). ஜெபத்தைக் கேட்கிற நம்முடைய தேவனிடத்திற்கு மாம்சமான யாவரும் வருவார்கள் (சங்கீதம் 65:2).

விசுவாசியின் உரிமை [வச.18-20] :- விசுவாசிகளாகி தேவனுக்குள் நிலைத்திருப்பவர்களுக்கு சில உரிமைகள் உண்டு. தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான் (வச.18; 3:69). அவர்களை கிறிஸ்து பாதுகாத்து சாத்தானுடைய சூழ்ச்சிகளினின்று விடுவிக்கிறார். அத்தகையவர்கள் தேவனால் உண்டாக்கப்பட்டவர்கள் (வச.19). அவர்களுக்கும் உலக மக்களுக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. அவர்கள் தேவனோடு சேர்ந்து வாழ்வார்கள். உலகம் பாவத்திற்குள்ளாகக் கிடக்கிறது. தேவ குமாரன் உலகில் வந்து விசுவாசிகளுக்கு புத்தியைத் தந்திருக்கிறார் (வச.20). உண்மையான அறிவு நித்திய தேவனை அறியும் அறிவு ஆகும்.

விசுவாசிகளுக்கு எச்சரிக்கை [வச.21] :- இவ்வளவு உரிமைகள் வாக்குப் பண்ணப்பட்டிருக்கிற நாம் விக்கிரகங்களுக்கு விலகி, காத்துக் கொள்ளும் படியான எச்சரிப்பு தரப்படுகிறது. தேவனுக்குத் தரவேண்டிய இடத்தையும் மகிமையையும் எதற்கு தந்தாலும் அது விக்கிரகம் தான்.

தேவனே, விக்கிரகங்களுக்கு என் வாழ்வில் இடங்கொடாதபடிக்கு என்னைக் காத்தருளும். ஆமென்.

நிலைத்திருத்தல்

> **கர்த்தருக்கு முன் தாழ்த்துவது மனிதர்களுக்கு முன் நம்மை உயர்த்தும்.**

ஆதித் திருச்சபையில் ஊர் விட்டு ஊர் பிரயாணம் செய்யும் ஊழியர்கள் பலர் இருந்தனர். இவர்களைப் போலவே கள்ளப்போதகர்களும் ஊர்கள் தோறும் சென்று தவறான உபதேசத்தைப் பரப்பினதால் இக்கடிதம் எழுத நேரிட்டது.

கற்பனைகளில் நிலைத்திருத்தல் [வச.1-6] :- கிறிஸ்துவாகிய சத்தியமே சுவிசேஷத்தின் அடிப்படை. அந்த சத்தியத்தில் நிலைத்திருக்க வேண்டுமானால் கற்பனைகளைப் பின்பற்றி அதில் நிலைத்திருத்தல் வேண்டும். அவ்வாறு நிலைத்திருந்த அம்மாளுக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் இந்நிருபம் எழுதப்பட்டுள்ளது. கற்பனைகளின்படி நடப்பதே அன்பு (வச.6) என்று யோவான் கூறுகிறார். குடும்பங்களை ஊக்குவித்து தேவ அன்பிலும், கடமையிலும் வளர உற்சாகப்படுத்துதல் வேண்டும். பிள்ளைகளும் பெற்றோருடைய வாழ்க்கையைப் பின்பற்றி, சுவிசேஷத்தில் நிலைத்து வளர வேண்டும். நாம் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் போது நித்திய ஜீவனுக்கு நேராக நடத்தப்படுகிறோம்.

கள்ளப் போதகங்களுக்கு நிலைத்திராதிருத்தல் [வச.7-13] :- வஞ்சக ஆவியினால் நிறையப்பட்ட கள்ளப் போதகர்கள் மாம்சத்தில் வந்த இயேசுவை அறிக்கைப் பண்ணாமல் அவரை ஏற்றுக் கொள்ளாமல், தேவ இராஜ்ஜியத்தின் மகிமையை குறைக்க முயற்சிக்கின்றனர். அத்தகைய போதகங்களுக்குச் செவி சாய்க்காமல் சத்திய ஆவியில் வாழும்படி யோவான் எச்சரிக்கிறார். அப்போதுதான் பூரண பலனைப் பெறமுடியும். (வச.8). கிறிஸ்துவினுடைய போதனைகளில் நிலைத்து இராதவன் கிறிஸ்துவின் உடையவனல்ல. கிறிஸ்துவின் போதனைகளில் நிலைத்திருப்பவன் கிறிஸ்துவோடும், பிதாவோடும் இணைக்கப்பட்டிருப்பான். இயேசுவை தேவனுடைய குமாரனென்றும், நமது இரட்சிப்புக்காக இரத்தம் சிந்தினார் என்றும் போதிக்காத அனைவரும் கள்ளப் போதகர்கள். அன்று அப்போஸ்தலரின் நாட்களில் மட்டுமன்றி இன்றும் அத்தகையவர்கள் மக்களை வஞ்சிக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் வேத வசனங்களை அறிந்து பகுத்தறியும் தேவ ஆவியை பெற்று வெற்றி வாழ்க்கை வாழ்தல் வேண்டும். போதனைகள் வசனத்தின் அடிப்படையில் காணப்படுகிறதா?

> **தகப்பனே, பலவித போதனைகளால் இழுப்புண்டு போகாமல் உமது கற்பனைகளில் நிலைத்திருக்க உதவி புரியும்.**

புகழ்ச்சிக்குரியவரா? பின்பற்றக்கூடியவரா?

கிறிஸ்துவின் பிள்ளைகளான நமக்கு சுயநலம் தலைதூக்கக் கூடாது.

யோவான் எழுதிய நிருபங்களில் இது தனி நபருக்கு எழுதப்பட்ட நிருபமாகும். அப்போஸ்தலனாகிய யோவான் மூன்று நபர்களை நம்முன் நிறுத்துகிறார்.

புகழ்ச்சிக்குரிய காயு [வச.1-8] :- அப்போஸ்தலன் காயுவுக்காக வேண்டுதல் செய்கிறார் (வச.2) காயு தந்திரத்தில் நடந்து கொண்டதையும், அவருடைய உண்மையையும் அறிந்து மகிழ்ச்சியடைகிறார். பிற சகோதரர்களிடத்தில் அவர் காண்பிக்கும் உபசரணையையும், விருந்தோம்பலையும் குறித்து பெருமிதம் அடைகிறார். அவரது செயல்களுக்காக அவரை ஊக்குவித்து ஊழியர்களையும், போதகர்களையும் அரவணைத்துக் கொள்ளும்படி எழுதுகிறார் (வச.8).

கண்டனத்துக்குரிய தியோத்திரேப்பு [வச.9-11] :- காயுவுக்கு எதிர் மாறான செயல்களில் ஈடுபட்ட தியோத்திரேப்பு ஊழியர்களை ஏற்றுக் கொள்ளவில்லை (வச.9). தன்னலத்தோடும், கர்வத்தோடும், அதிகார ஆர்வத்தோடும் செயல்பட்டான். தான் நற்செயல்களை செய்யாதது மட்டுமறி ஏனையோரையும் தடை செய்தான் (வச.10). நற்கிரியைகளைச் செய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான். தீயச் செயல்களைச் செய்கிறவர்களுக்கும், தேவனுக்கும் தொடர்பு இல்லை (வச.11). தேவனோடு நெருங்கின தொடர்பு வைத்துள்ளது போன்று காண்பித்து சபைகளில் முதன்மையான இடத்தைத் தேடுகிறார்கள்.

பின்பற்றக்கூடிய தேமேத்திரியு [வச.12-14] :- இவன் பவுலை எதிர்த்தவன். கொல்லன் வேலையைச் செய்தவன். ஊழியருக்கு எதிராக செயல்பட்டவன். ஆனால் இப்போது மனம் மாறிவிட்டான். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் தேவ அன்பில் நிறைந்து பிறரிடம் அன்பு காட்டி, ஆதரவு அளித்து சாட்சியாகக் காணப்படுகிறார்கள். அனைவராலும் நற்சாட்சி பெற்று சத்தியத்தில் வாழ்ந்து தேவனில் நிலைத்திருக்கிறார்கள். இவற்றை தேதேம்திரியுவின் வாழ்வில் யோவான் கண்டதினால் அவரும் சாட்சி கொடுக்கிறார் (வச.12). மூவரின் குணங்களில் எது என் வாழ்வில் பிரதிபலிக்கிறது?

தேவனே, மனிதர் மத்தியிலும், உம்மிடமும் நற்சாட்சி உடையவனாய் வாழ அருள்புரியும். ஆமென்.

விசுவாசத்திற்கான போராட்டம்

> முறுமுறுக்கவும் வேண்டுதலை ஏறெடுக்கவும் காட்டும் தீவிரமும் ஆர்வமும் தேவனைத் துதிப்பதிலும் இருக்க வேண்டும்.

விசுவாசத்திற்கெதிரான போதகர்கள் [வச.1-16] :- யூதா இந்நிருபத்தை இரு வகையானவர்களுக்கு எழுதுகிறார். தேவனால் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் (வச.2). இயேசு கிறிஸ்துவினாலே காக்கப்பட்டு அழைக்கப்பட்டவர்கள், விசுவாசத்திற்கெதிராக இவர்களைத் தைரியமாய் போராட அழைக்கிறார் ஏனெனில் தேவனுடைய கிருபையை காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டி ஆண்டவராகிய தேவனையும் அவரது குமாரனையும் மறுதலிக்கிறவர்கள் சபைக்குள் பிரவேசித்துள்ளார்கள்.

இத்தகைய தேவனற்றவர்களுக்கு நிச்சயம் நியாயத் தீர்ப்பு உண்டென்று கூறி மூன்று பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளை நினைவூட்டுகிறார்.1) காயீன், 2) பிலேயாம், 3) கோரா (வச.11) இப்போதகர்களை விளக்க 6 உருவங்களைக் கூறுகிறார் (வச.12,13). மந்தைகளைப் பற்றி அக்கறையற்ற மேய்ப்பவர்கள் வேத உண்மைக்கு தூரமான வெளிப்பாடுகளைப் பெற்று உள்ளோம் என விவரிக்கின்றனர். இவர்களுடைய பலன் காரிருள் என்று யூதா கூறுகிறார். வச.16ல் அவர்களது குணநலன்களை விவரிக்கிறது.

விசுவாசத்தைக் காத்துக் கொள்ள வழிமுறைகள் [வச.17-23] :- அழைக்கப் பட்டவர்கள் விசுவாசத்தைப் பற்றிக் கொண்டு உறுதியாய் நிலைத்து திரும்பும் படியும், பரிசுத்த ஆவிக்குள் வேண்டுதல் செய்து, தேவனுடைய அன்பிலே தங்களைக் காத்துக் கொள்ளவும் வேண்டுமென்றும் கூறுகிறார். எல்லா வற்றிற்கும் மேலாக இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெற்று மற்றவர்களுக்கும் இரக்கம் பாராட்ட வேண்டும். இன்றும் இத்தகைய போதகர்களை நாம் இனம் கண்டு கொண்டு தேவனோடுள்ள ஐக்கியத்தில் ஆவியானவரின் துணையோடு வாழ்ந்து நித்திய ஜீவனுக்கு நம்மைத் தகுதிப்படுத்த தேவன் அருள்புரிவாராக.

தேவனுக்குப் புகழ்ச்சி [வச.24,25] :- நம்மை வழுவாதபடி காக்க வல்லவர். மாசற்றவர்களாய் அவர் சந்நதியில் நிறுத்த வல்லவர். அவருக்குள்ள மகிமை நாம் செலுத்த வேண்டியது நமது கடமை. இன்றைய போதனைகள் பாவத்தைக் கண்டித்துணர்த்துவதாய் உள்ளதா?

தேவனே, கடைசி பரியந்தமும் சத்தியத்தில் நிலைநிற்க கிருபையருளும். ஆமென்.

உண்மையாயிரு

> கடவுளுடைய பிள்ளைகளாகிய நாம் எல்லா சூழ்நிலைகளிலும் உண்மையாயிருக்க வேண்டும்.

துன்மார்க்கர் தழைத்திருப்பதைப் பார்த்து நாம் சோர்ந்து போக அவசியமில்லை. கர்த்தர் நமது திட்டப்படி எல்லா காரியங்களையும் நமது வாழ்க்கையிலே அதினதின் வேளையிலே நேர்த்தியாய் செய்து முடிப்பார்.

எரிச்சல் கொள்ளாதே [வச.1-11]: உலகத்தின் மேலும் அதன் பொருட்களின் மேலும் ஆசை கொள்பவர்கள் தன்னலமாக நடந்து கொள்கிறார்கள். கர்த்தர் பரலோகத்தில் இருந்து அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். தேவன் உத்தமனை வெறுக்கிறதுமில்லை, பொல்லாதவர்களுக்கு கைக் கொடுக்கிறதுமில்லை (யோபு 8:20). வாழ்வு காலத்தில் நன்மையை அனுபவி, தாழ்வு காலத்தில் சிந்தனை செய்து பொறுமையாயிரு. நாளை என்ன நடக்கும் என்பதை நாம் அறியோமே (யோபு 7:14).

நல் முடிவு இல்லை [வச.12-20] : பணப்பிரியன் பணத்தினால் திருப்தி அடைவதில்லை. அவன் மரிக்கும்போது அவற்றில் ஒன்றையும் தன் கையில் எடுத்துச் செல்ல முடியாது என்பதை உணராதிருக்கிறான். இதை நாம் ஐசுவரியவான் லாசரு உவமையிலே காணலாம். கர்த்தருக்குப் பயப்படுவதினால் மட்டுமே மனிதன் தீமையை விட்டு விலக முடியும் (நீதி.16:6; சங்.62:10).

சோர்ந்து போகாதே [வச.21-31] : தீமை செய்வதைக் கர்த்தர் எதிர்க்கிறார். நம்மிடத்தில் இருப்பதெல்லாம் கர்த்தர் நமக்கு ஈவாக தந்ததாகும். தேவையுள்ளவர்களுக்கு உதவுவது நமக்கு மகிழ்ச்சியளிப்பது மட்டுமல்லாது மற்றவர்கள்மேல் பொறாமை கொள்வதையும் தவறான வழியில் பணத்தை சம்பாதிப்பதையும் தவிர்க்க உதவும்.

நீதிமானைக் காக்கிறார் [வச.32-40] : கர்த்தர் நியாயத்தீர்ப்பு நாளிலே அவனவன் செய்கைக்குத் தக்கதாக பலன் கொடுப்பார். துன்மார்க்கர் நியாயத்தீர்ப்பில் நிலை நிற்பதில்லை. நீதிமான்கள் நித்திய இராஜ்ஜியத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள் (சங்.62:12). கோபமும் எரிச்சலும் தவறான பாதைக்கு வழி நடத்தும். நீதிமானுக்கு கர்த்தர் பூரண சமாதானத்தை தருகிறார்.

ஆண்டவரே, எல்லாச் சூழ்நிலைகளிலும் நன்மை செய்ய எனக்கு உதவி செய்யும் ஆமென்.

ஆதியாகமம் 37: 1 –11

இளமைக் காலம்

கடந்த காலங்களில் வேதனைகளைக் கடந்து வந்திருப்பீர்கள்.ஆனால் கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கும் வேளை இது!

யோசேப்பின் வரலாற்றில் துவங்கி, இஸ்ரவேலர்கள் கானான் தேசத்திலிருந்து எகிப்து தேசத்தில் குடியேறியது வரை இந்த அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. இன்றைய தியானப் பகுதியில் யோசேப்பின் இளமைக் காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை நாம் வாசிக்கிறோம்.

யோசேப்பை நேசித்த யாக்கோபு [வச.1-4]:- யாக்கோபு முதிர் வயதாயிருக்கையில் யோசேப்பு பிறந்ததினாலும், அவன் தாய் ராகேலை அதிகமாய் நேசித்ததாலும், தன் சகோதரர்களது தீய செயல்களை தந்தையிடம் கூறியதாலும் அவனிடம் அதிக அன்பு காட்டினார். அதன் அடையாளமாக அவனுக்கு ஒரு அழகிய பல வர்ண அங்கியைக் கொடுத்தார். பெற்றோர்களாகிய நாம் பிள்ளைகளிடத்தில் பாரபட்சம் காட்டாமல் இருக்க வேண்டும். ஏனெனில் அதுவே யாக்கோபின் குடும்பத்தில் சகோதரர்களிடையே பகை உருவாக்கியது.

சகோதரர்களால் பகைக்கப்பட்ட யோசேப்பு [வச.5]:- யாக்கோபு யோசேப்பிடம் காட்டிய பாரபட்சம் சகோதரர்களிடையே வெறுப்பை ஏற்படுத்தியது. எனவே யோசேப்பைப் பகைத்தார்கள். அவன்மேல் பொறாமை கொண்டார்கள். அவனது கனவுகள் இன்னும் அதிகமாய் அவனைப் பகைக்கச் செய்தது. தாங்களை விட வயதில் குறைந்தவன், பெரியவனாவதா என்று பொறாமை கொண்டனர். இதன் விளைவு கொடியது. இதற்குக் காயீன், ஆபேல் சகோதரர்களது வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு.

சொப்பனங்களைக் கண்ட யோசேப்பு [வச.6-11]:- எதிர்காலத்தில் யோசேப்புக்கு ஆண்டவர் வைத்திருக்கும் திட்டங்களை கனவுகள் மூலம் வெளிப்படுத்தினார். ஒவ்வொரு செய்தியும் மிக நிச்சயமானது என்பது இரண்டு கனவுகளின் மூலம் யோசேப்புக்கு உறுதிப்படுத்தப்பட்டது.சகோதரர்களும், யாக்கோபும் அவனுடைய கனவுகளை தவறாக எடுத்துக் கொண்டார்கள். எதிர்காலத்தைக் குறித்துக் கர்த்தர் வெளிப்படுத்தினால், அதைப் பிறருக்குச் சொல்வதில் நாம் ஞானமாய் நடக்க வேண்டும்.

அன்புள்ள பரம தகப்பனே, நான் என் வாழ்க்கையில் உமது திட்டங்களை அறிந்துகொள்ள எனக்கு உதவி செய்யும். ஆமென்.

பொறாமை

தேவன் தமது திட்டங்களைத் தமது பிள்ளைகளுக்கு எவ்விதத்தில் எல்லாம் வெளிப்படுத்துகிறார்?

யோசேப்பின் சகோதரர்கள் அவன் மேலிருந்த வெறுப்பினால் அவனைக் கொல்லவும் அவர்கள் தயங்கவில்லை என்பதை இன்று வாசிக்கிறோம்.

அனுப்பப்பட்ட யோசேப்பு (வச.12-17):- தன்னுடைய சகோதரர்கள் பகைமையோடு செயல்பட்டாலும், தகப்பனின் சொல்லைக் கேட்டு அவர்களைச் சந்திக்கப் புறப்பட்டுச் சென்றான். என்னை விரோதிக்கிறவர்கள் என்ற பகைமை உணர்வோடு யோசேப்பு செயல்படாமல், தந்தையின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து சென்றான். பாவம் நிறைந்த இவ்வுலகிற்குத் தேவன் தம்முடைய குமாரனாம் இயேசுவை அனுப்பியபோது, அவரும் இவ்வுலகத்தை வெறுக்காமால் பிதாவுக்குக் கீழ்ப்படிந்து வந்தாரல்லவா!

விற்ற சகோதரர்கள் (வச.18-30): தங்களது சுக செய்தியைத் தெரிந்து கொள்ள அனுப்பப்பட்ட யோசேப்பைக் கொன்று போட, அவன் தூரத்தில் வரும் போதே திட்டமிட்டார்கள். ஆனால் யோசேப்பைப் பற்றிய தேவ திட்டம் வேறாக இருந்தது. ரூபனையும், யூதாவையும் தேவன் பயன்படுத்தினார். யோசேப்பை இருபது வெள்ளிக்காசுக்கு விற்றனர். யோசேப்பைப் போல் இயேசுவும் புறக்கணிக்கப்பட்டாரல்லவா! நாம் குற்றமற்றவர்களாய் இருக்கையில் பிறரால் குற்றவாளிகளாய்த் தீர்க்கப்படலாம். யோசேப்பு, கிறிஸ்து, தானியேல் ஆகியோரைப் போன்று பாடுகளைச் சகிக்க அழைக்கப்படுகிறோம்.

ஏமாற்றப்பட்ட யாக்கோபு (வச.31-36):- யாக்கோபு தன் சகோதரனையும், பின் தகப்பனையும் ஏமாற்றினான். இப்போது அவனது பிள்ளைகள் யோசேப்பின் பலவர்ண அங்கியைக் கழற்றி, அதை ஒரு வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்திலே தோய்த்து, ஒரு கொடிய விலங்கு அவனைக் கொன்றது என்று யாக்கோபை ஏமாற்றினார்கள். அவன் அதைப் பார்த்து உண்மையென நம்பி, கதறியழுதான். பல நாள் அவனுக்காகத் துக்கம் கொண்டாடினான். தன் பிள்ளைகள் தன்னை ஏமாற்றுகிறார்கள் என்பதை அவன் அறிந்து கொள்ளவில்லை. பாவம் தொடர்ந்து பிடிக்கும் என்பதால் பிறரை ஏமாற்றி வாழ வேண்டாம்.

அன்பின் பரலோகப் பிதாவே, பொறாமைக்கு என் வாழ்வில் இடம் அளித்து விடாதபடி என்னைக் காத்தருளும். ஆமென்.

உயர்வுக்குக் காரணம்

> **நாம் செய்யும் உதவியும், நம்முடைய வார்த்தைகளும் உறவுகளை வளர்க்கக் கூடியதாக அமைய என்ன செய்ய வேண்டும்?**

யூதாவின் செயலுக்கும் யோசேப்பின் செயலுக்கும் எத்தனை வேறுபாடு! யோசேப்பைக் கர்த்தர் உயர்த்தியதின் காரணம் என்ன?

கர்த்தரோடு இருந்தான் [வச.1-6]:- கர்த்தர் யோசேப்போடு இருந்தார் என்ற வார்த்தை இப்பகுதியில் 3 முறை வருகிறது. (வச.2,21,23) கர்த்தர் அவனோடிருந்ததால் 1) அவன் காரியசித்தியுள்ளவனாய் இருந்தான். 2) அவன் செய்வதெல்லாம் வாய்த்தது. 3) அவனிமித்தம் அவனோடு தொடர்புடைய யாவரும் ஆசீர்வதிக்கப்பட்டனர் (வச.5). 4) அவனோடு சம்பந்தப்பட்டவர்களின் செல்வமும், பொருட்களும் ஆசீர்வதிக்கப்பட்டன. 5) மற்றவர்களின் தயவு அவனுக்குக் கிடைத்தது (வச.21) கர்த்தர் நம்மோடு இருப்பது போல நாம் கர்த்தரோடு இருப்பது முக்கியம்.

பொல்லாப்புக்கு விலகினான் [வச.7-18]:- போத்திபாரின் மனைவி யோசேப்பைத் தவறு செய்ய அனுதினமும் தொந்தரவு செய்தாள் (வச.10). "உன் வாலிபப் பருவத்தில் உன் சிருஷ்டிகரை நினை" என்ற உணர்வு அவனுக்குள் இருந்ததால் யோசேப்பு சோதனைக்கு இடங்கொடாமல், நிதானமாக பதில் சொன்னான் (வச.9). இத்தகைய தவறான உறவு மனிதனுக்கு எதிரான குற்றம் மட்டுமல்ல. தேவனுக்கு எதிரானது என்பதைச் சுட்டிக்காட்டினான். சோதனை வருவது பாவமல்ல. ஆனால் அதற்கு இடம் கொடுப்பதே பாவம்.

பாடுகளைச் சகித்தான் [வச.19-23] :- யோசேப்பின்மீது அபாண்டமாக பழியைச் சுமத்திவிட்டாள் போத்திபாரின் மனைவி. தவறு செய்யாதவன் சிறைச்சாலையில் தள்ளப்பட்டான். ஆனாலும் யோசேப்பு யாரையும் கடிந்து கொள்ளவோ, குற்றப்படுத்தவோ, வெறுப்பைக் காட்டவோ இல்லை. அத்தனையும் பொறுமையோடு சகித்தான். சிறைச்சாலையில் தனக்குக் கொடுக்கப்பட்ட பணிகளை நேர்மையாகச் செய்ததால் சிறை அதிகாரிகளின் கண்களில் தயை கிடைத்தது. அநியாயமாய் நாம் தண்டிக்கப்படும் போதும், நமது பணிகளைச் சிறப்பாகச் செய்தால் கர்த்தர் நிச்சயம் நம்மை உயர்த்துகிறார்!

தேவனே, நீர் என்னோடு இருப்பதைப் போல நான் உம்மோடு இருக்க உதவி செய்யும். ஆமென்.

சிறைச்சாலை

மகிமை நிறைந்த இராஜாவாகிய தேவனை எவ்வாறெல்லாம் நாம் புகழ்கிறோம்?

அந்நாட்களில் கனவுகள் மூலம் தமது திட்டத்தை மக்களுக்கு விளக்கிய தேவன் இன்று தமது திட்டத்தை வேத வசனத்தின் மூலமாக திட்டவட்டமாய்த் தெரிவிக்கிறார்.

கரிசனையாயிருந்தான் (வச.1-8):- தேவன் நம் மீது கரிசனையாயிருப்பது போல நாமும் பிறர் மீது கரிசனையுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். யோசேப்பு தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கைதிகளிடம் உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருப்பது என்ன என்று கரிசனையுடன் விசாரித்தான். நாமும் நாம் சந்திக்கிற ஒவ்வொருவருடைய சுக துக்கங்களை விசாரித்து அவர்கள் மேல் கரிசனையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். அப்படி விசாரிப்பது அவர்களுக்கு ஆறுதலைத் தரும்.

கனவுகளை விளக்கினான் (வச.9-13,15-21):- அரசனுக்குப் பழரசங்கள் கொடுப்பவனும், அதைத் தயாரிப்பவனும் அரசனுடைய உணவுகளில் யாரும் விஷம் கலந்து விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இவர்கள் செய்த ஒரு குற்றத்திற்காக யோசேப்பு இருந்த சிறையில் வைக்கப்பட்டனர். இருவருமே கனவைக் கண்டு கலங்கின போது யோசேப்பு அவர்கள் கனவுகளுக்கு அர்த்தம் சொன்னான். அதன்படியே நடந்தது. அப்போது யோசேப்பு தன்னையல்ல, தேவனையே மகிமைப்படுத்தினான் (வச.8). நம் திறமையை வெளிப்படுத்தும்போது நாம் யாரை மகிமைப்படுத்துகிறோம்?

மனிதனிடம் உதவி கேட்டான் (வச.14,22,23):- சிக்கலான சூழ்நிலைகளின் போது நம் தேவைகளை மனிதர்களிடம் சொல்லும் முன் தேவனிடம் சொல்ல வேண்டும். யோசேப்போ பானபாத்திரக்காரனிடம், "நீ வாழ்வடைந்திருக்கும்போது 1) என்னை நினைத்துக்கொள். 2) என் மேல் தயவு வை. 3) பார்வோனிடம் அறிவித்து என்னை விடுதலை செய்" (வச.14) எனக் கேட்டான். ஆனால் அவன் மறந்து விட்டான். மனிதர்களது நிலை இதுதான். ஆனால் தேவன் மறக்கவில்லை.

நல்ல பிதாவே, எல்லா வேளைகளிலும் உம்மையே நம்பி என் வாழ்க்கையை நடத்த அருள் தாரும். ஆமென்.

ஆதியாகமம் 41:1-16

நானல்ல எல்லாம் கர்த்தரே!

மனிதர்கள் என்னதான் முயற்சித்தாலும், கர்த்தர் நமக்கென்று வைத்திருக்கும் ஆசீர்வாதங்களைப் பறித்துக் கொள்ள முடியாது.

யோசேப்புக்கு விடிவு காலம் வரவில்லை. தேவனுடைய நேரத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

எதிர்காலத்தைத் தெரிவித்த தேவன் [வச.1-8]:- தேவன் தம் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல மற்றவர்களுக்கும் எதிர்காலத்தைப் பற்றிக் காட்டுகிறார்.(பு) எகிப்தில் அடுத்த 14 வருடங்களில் தாம் செய்யப் போவதைப் பார்வோனுக்கு வெளிப்படுத்தினார். அது நிச்சயம் நடக்கும் என்று உறுதிப்படுத்த அதை இரண்டு முறை காண்பித்தார். கர்த்தர் நமது தேசத்தின் மீது பிரியம் வைத்திருக்கிறார். அதனால்தான் தோமாவை இந்தியாவுக்கு அனுப்பித் தமிழ்நாட்டிலேயே இரத்தம் சிந்தி மரிக்கச் செய்தார். நம் மீது கர்த்தர் பிரியம் கொண்டுள்ளார் என்பதை எவ்வாறு அறிகிறோம்?

நினைவுகூர்ந்த பானபாத்திரக்காரன் [வச.9-14]:- பானபத்திரக்காரன் இரண்டு ஆண்டுகளாக யோசேப்பை மறந்துவிட்டான். அரசனின் கனவுக்கு அர்த்தத்தைச் சொல்ல ஒருவருமில்லை என்ற சூழ்நிலை ஏற்பட்ட போது அவன் 1) தன் தவறை நினைவு கூர்ந்தான். 2) ஒருவன் தன் கனவிற்கு அர்த்தம் சொன்னதையும், அது நிறைவேறியதையும் நினைவு கூர்ந்தான். 3) அரசனிடம் அறிவித்தான். இந்தச் சூழ்நிலை யோசேப்பை உயர்த்துவதற்கு தேவனால் திட்டமிடப்பட்டதாகும்.

தேவனை மகிமைப்படுத்திய யோசேப்பு [வச.15-]:- யோசேப்பு தனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் தேவனை மகிமைப்படுத்த தவறவில்லை. வச.16ல் நானல்ல, தேவனே என்றான். பார்வோனுக்குக் கனவின் அர்த்தத்தை சொன்னதோடு மட்டுமல்லாமல், அதற்கு அவன் செய்ய வேண்டியவைகளையும் கூறினான். மட்டுமல்லாமல் என்னை நியமித்தால் என்று தன்னை முன்னிலைப்படுத்தாமல் விவேகமும் ஞானமுமுள்ள ஒருவனை அதிகாரியாக நியமித்து, விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கை வாங்கி, பத்திரப்படுத்தக் கூறினான் (வச.33,34). தன்னை உயர்த்திக் காட்டுவதற்குப் பலர் சமயம் தேடிக்கொண்டிருக்கும் காலங்களில் நாம் எந்தவித முன் மாதிரியைக் காட்டுகிறோம்?

கர்த்தாவே, உம் வேளை வரும் வரை யோசேப்பைப் போன்று நான் காத்திருக்க பெலன் தாரும். ஆமென்.

ஆதியாகமம் 41:17–45

நம்முடைய ஆண்டவர்

> நமக்கு வரும் போராட்டங்களில் நாம் உறுதியோடு இருக்கிறோம் எனில், நாம் பெறப்போகும் ஆசீர்வாதங்களும் உறுதி.

காத்திருப்பின் நாட்கள் யோசேப்பின் வாழ்வில் முடிந்தது. தேவனுடைய வேளை வந்தது. அடிமையாய் இருந்த இடத்தில் அதிகாரியாய் உயர்த்தப் பட்டான். அப்போது...

சாட்சி பகரப்பட்டான்: தேவ ஆவியைப் பெற்றவன் உன்னைப் போல் விவேகமும், ஞானமும் பெற்றவன் வேறொருவனும் இல்லை என்று (வச.39) பார்வோன் யோசேப்பைப் பற்றி சாட்சி பகர்ந்தான்.(ய)கொஞ்ச நேரத்துக்கு முன் அடிமையாயிருந்தவன். இப்போது அரசனால் பாராட்டப் படுகிறான். ஏனெனில் கர்த்தர் யோசேப்போடே இருந்தார். தேவனுடைய வேளைக்குக் காத்திருந்தான். வேளை வந்தபோது யோசேப்பு பெற்ற முதல் நன்மை புகழாரம்.

பரிசளிக்கப்பட்டான்: யோசேப்பிடம் தேவ ஆவியும் வல்லமையும் உண்டு என்று கண்ட பார்வோன் அவனை எகிப்து முழுவதற்கும் அதிகாரியாக்கி, பரிசுகள் அளித்தான். யாவரும் அவனை வணங்கும்படி செய்தான். (ெ) பூமியின் செழுமையைக் கொடுப்பவன் என்று அர்த்தம் கொள்ளும் "சாப்நாத்பன்னேயா" என்ற பெயரை பார்வோன் யோசேப்புக்குச் சூட்டி னான். 1) எபிரெயர்கள் ஆடு மேய்ப்பவர்கள் ஆதலால் எகிப்தியருக்கு அவரு வருப்பானவர்கள். ஆகவே புதுப்பெயர் அந்த வெறுப்பைத் தவிர்க்கும். 2) அது எகிப்திய பெயராய் இருப்பதால் அவர்களுக்கு உச்சரிக்க எளிதா யிருக்கும் 3) ஆசாரியனின் மகளைக் கொடுத்ததின் மூலம் அவன் எகிப்திய னாகவே காட்சியளித்தான்.ஆண்டவரின் வேளை வரும்போது அடிமையும் அரசனாவான். ஆகவே அவர் வேளைக்காக காத்திருப்போம்.

பலுகிப் பெருகினான்: புதிய சூழ்நிலையில் புதிய குடும்பத்துடன் கர்த்தரைப் பணிந்து கொள்ளும் பாக்கியத்தை யோசேப்பு பெற்றான். தன் தகப்பனின் குடும்பத்தை முற்றிலும் தேவன் மறக்கச் செய்தார் என்று சொல்லி முதற் குமாரனுக்கு மனாசே என்றும்.பலுகப் பண்ணினார் என்ற பொருளில் தன் மகன் இளையவனுக்கு எப்பிராயீம் என்றும் பெயரிட்டு மகிழ்ந்தான்.

ஆண்டவரே நான் உமது மகிமையை இன்று காணும்படி எனது விசுவாசத்தை வளரச் செய்யும் ஆமென்.

பாவிகளை நேசிக்கிற தேவன்

பாவம் செய்கிறவன் எவனும் பாவத்துக்க அடிமையாய் இருக்கிறான்.

சமாதானத்தை இழக்கச் செய்யும் (வச.1-8): சோதோம் கொமோராவின் பாவம் மிகவும் கொடியதாயிருந்தபடியினால், அந்தப் பட்டணத்தை தேவன் அழிக்க தமது தூதனை அனுப்பினார். இன்று நம்மை பாவத்திலிருந்து விடுவிக்க ஒருவர் உண்டு. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களை நீக்கி நம்மை சுத்தகரிக்கும்.

துரத்தி விடப்பட்ட பாவி (வச.9-14) : தாவீது தனது தவறான நடத்தையினால் தேவன் தன்னை தண்டிக்கிறார் என்று புலம்புகிறான். தாவீது ஆண்டவருக்கு முன்பாக தனது தவற்றை ஒத்துக் கொண்டு தன்னை மிகுதியாக தண்டிக்காதபடி வேண்டுதல் செய்கிறான். புதிய ஏற்பாட்டில் கெட்ட குமாரன் உவமையிலே அவன் தனது ஆஸ்தியின் பங்கைப் பெற்றுக் கொண்டு தூரதேசத்துக்குப் போகிறான். அவனது பணம் செலவானதும் அவனது நண்பர்கள் அவனைத் தனித்து விட்டுச் செல்கின்றனர். அப்பொழுது அவன் புத்தி தெளிகிறான். பாவ வாழ்க்கை தேவனையும் மனிதனையும் பிரிக்கிறது. தனித்து விடப்பட்ட பாவிக்கு புகலிடம் இயேசு கிறிஸ்து மட்டுமே.

நம்பிக்கை இயேசு கிறிஸ்து (வச.15-22) : தாவீது சவுலின் இடத்தில் தெரிந்து கொள்ளப்பட்ட அரசனாவார். ஆனால் அவன் அந்தப் பதவியை பெறும் முன்பு பலவிதமான சூழ்நிலைகளையும், நெருக்கடிகளையும் கடந்து செல்ல வேண்டியதிருந்தது. அந்தச் சூழ்நிலையிலே தாவீது கூறியது, "கர்த்தர் என் வெளிச்சமும், என் இரட்சிப்புமானவர். நான் யாருக்கும் பயப்படேன். எனக்கு விரோதமாக ஒரு பாளையம் இறங்கினாலும் நான் பயப்படேன். என் மேல் ஒரு யுத்தமே வந்தாலும், நான் கர்த்தர் பேரில் நம்பிக்கையாயிருக்கிறேன்" என்பதாகும்.

கர்த்தர் தாவீதை சத்துருக்களின் கைகளுக்கு மீட்டு அவனை உயர்த்தினார். அவனுடைய நம்பிக்கை வீண் போகவில்லை. விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். (சங்கீதம் 27: 52:8) நாம் கர்த்தருடைய வேளைக்காக பொறுமையாய்க் காத்திருக்கும் போது ஏற்ற வேளையிலே அவர் நம்மை உயர்த்துவார்.

தேவனே நீர் என்னை உயர்த்தும் வரை நான் காத்திருக்க உதவி செய்யும் ஆமென்.

கனவுகள் நிறைவானது

சகோதர உறவு நம்மில் பெருக நாம் என்ன செய்ய வேண்டும்? இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறோம்?

தேவ வார்த்தை [வச.1-5] - முந்தின அதிகாரத்தில் கர்த்தர் பார்வோனுக்குக் கனவின் மூலம் சொல்லிய செய்தி இப்போது நிறைவேறுகிறது. கொடிய பஞ்சம் கானானிலும் நிலவியது. எகிப்திலே தானியம் இருக்கிறது என்று அறிந்த யாக்கோபு தன் மகன்களை எகிப்துக்கு அனுப்புகிறான். பஞ்சகாலத்தில் தேவைகள் எங்கிருந்து சந்திக்கப்பட முடியும் என்பதை அறிந்த யாக்கோபு, அங்கு தன் மகன்களை அனுப்பினான். எகிப்திற்குப் போய் எப்படி வாங்குவது என்று சோம்பலாயிராமல் செயல்பட வைத்தான். இயேசு நம் தேவைகளைச் சந்திக்கிறார். நாம்தான் அவரிடம் சென்று ஆசீர்வாதம் பெற வேண்டும்.

யோசேப்பின் கனவு [வச.6-17] - எகிப்துக்குத் தானியம் வாங்க வந்த பத்து சகோதரர்களும் அதிபதியாயிருந்த யோசேப்புக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து பணிந்தார்கள். தான் கண்ட கனவை யோசேப்பு கூறியபோது சகோதரர்களால் ஏளனம் செய்யப்பட்டான், யாக்கோபால் கடிந்து கொள்ளப் பட்டான். ஆனால் அவனது கனவுகள் நிஜமாயின. யோசேப்பை விட்டுப் பிரிந்து 22 வருடங்கள் ஆகிவிட்டன. அவன் தோற்றமும், பேசிய மொழியும் முற்றிலும் வேறுவிதமாயிருந்ததால் அவர்களால் யோசேப்பைக் கண்டு கொள்ள முடியவில்லை. ஆனால் யோசேப்பு அவர்களை அறிந்திருந்தும், தான் யாரென்று தெரிவிக்கவில்லை. அவனது கனவுகள் இப்போது நிறை வேறிவிட்டன.

ரூபனின் வார்த்தை நிறைவேறியது [வச.18-24]:- உங்களில் ஒருவனைப் பிணைக் கைதியாக வைத்துவிட்டு மற்றவர்கள் பென்யமீனை அழைத்து வந்தால்தான் நீங்கள் சொல்வது உண்மை என்று தெரியவரும் என்று யோசேப்பு சொன்னதும், அவனுக்குச் செய்த கொடுமை நினைவுக்கு வந்தது. அவன் நம்மிடம் கெஞ்சிக் கேட்டும், நாம் காப்பாற்றாததால் அவனது இரத்தப் பழி நம்மிடத்தில் வாங்கப்படுகிறது என்று புலம்பினார்கள். தான் அப்போது சொன்ன வார்த்தையைச் சுட்டிக்காட்டி, நான் சொல்லவில்லையா என்று ரூபன் கூறினான். நம் வார்த்தைகள் நிறைவேறாமல் போகலாம். ஆனால் தேவனுடைய வார்த்தை கால தாமதமானலும் நிச்சயம் நிறைவேறும்.

கர்த்தாவே, மாறாத வல்லமையுள்ள உமது வார்த்தைகளுக்காக உம்மைத் துதிக்கிறேன். ஆமென்.

பாவம் பொல்லாதது

தங்கள் பிள்ளைகளது பாவச் செயல்களைப் பெருமையாகச் சில பெற்றோர்கள் எண்ணுவதேன்?

பாவம் தொடர்ந்தது (வச.25-32): முன்பு நாம் செய்த பாவங்கள் நம்மை எப்படிப்பட்ட சூழ்நிலைக்குள் தள்ளும் என்பதை இப்பகுதியில் காண்கிறோம். யோசேப்பின் சகோதரர்கள் முதலாவது ஒற்றர்கள் என்று குற்றம் சாட்டப் பட்டார்கள். பின்பு அவர்கள் உண்மையைப் பேசவில்லையென்று எண்ணப் பட்டார்கள். இப்போது பணத்தைத் திருடிவிட்டார்கள் என்ற திருட்டுப் பட்டமும் கொடுக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டது. அவர்கள் சோர்வடைந்து, யோசேப்புக்குச் செய்த துரோகம் நம்மைத் துரத்துகிறது என்று எண்ணினார்கள். மேலும் தேவன் நமக்கு இப்படிச் செய்ததென்ன என்று தேவனைக் குற்றப்படுத்தினார்கள். நம்முடைய தவறுகளினால் ஏற்படும் விளைவுகளுக்குத் தேவனைக் குற்றப்படுத்துவது சரியல்ல.

பயம் ஏற்பட்டது (வச.33-35): தவறு செய்கிறவர்களுக்கு, தாம் கண்டு பிடிக்கப்பட்டு விடுவோமோ என்ற பயம் ஏற்படும். யோசேப்பின் சகோதரர்கள் தங்களுடைய பயத்தில் தேவன்மேல் பழிபோட பார்த்தார்கள்; பயந்தார்கள் (வச.28). அனைவருடைய சாக்குகளிலுமிருந்த பணத்தைக் கண்டு (வச.35) இதனால் தன் பிள்ளைகள் எகிப்தில் அடிமையாக்கப்பட்டு விடுவார் களோ என்று யாக்கோபு பயந்திருப்பான். எப்படியிருந்தாலும் இந்நிகழ்ச்சி யின் மூலம் அவர்கள் செய்த குற்றம் நினைவுறுத்தப்பட்டது. நம் தவறான செயல்களுக்கு ஆண்டவரிடம் மன்னிப்பு பெற்றால் குற்ற உணர்வு நம்மைத் தாக்காது.

புலம்பச் செய்தது (வச.36-38): நானும் உன் தாயாரும் உன்னை வணங்க வருவோமோ என்று கடிந்துகொண்டு, யோசேப்பின் கனவை அற்பமாய் எண்ணியவன், அவனையும், சிமியோனையும், பென்யமீனையும் எண்ணி, என்னைப் பிள்ளையற்றவனாக்குகிறீர்கள் என யாக்கோபு புலம்பி னான். ரூபன் உத்தரவாதம் கொடுத்தும் என் நரை மயிரைச் சஞ்சலத் தோடே பாதாளத்தில் இறங்கப் பண்ணுவீர்கள் என்று புலம்பினான். பிள்ளை களுக்கிடையே சமாதானத்தை வளர்க்க வேண்டியவன் பாரபட்சத்தைக் காட்டி பகைமையை வளர்த்து விட்டானே!

கர்த்தாவே, என் பாவங்களினால் ஏற்பட்ட சாபங்களை நீக்கி என்னை ஆசீர்வாதமுள்ளவனா(ளா)க மாற்றும். ஆமென்.

யூதாவின் செயல்

அவ்வப்போது நமக்குத் தண்டனைகள் கிடைப்பது, நித்திய தண்டனையிலிருந்து நம்மை விடுவிக்கவே!

யூதாவின் அக்கறை (வச.1-7): எகிப்துக்குச் செல்ல யாக்கோபு கூறியதும், யோசேப்பு சொன்னதை யூதா நினைவுகூர்ந்து, அதை நிறை வேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தான்.(ய) முன்பு அவன் இருந் ததை விட இப்போது மாறியிருந்தான்.

யூதாவின் உத்தரவாதம் (வச.8-10): யாக்கோபின் மனவேதனைகளுக்கு ஏற்றவாறு அவனுக்கு நம்பிக்கை உண்டாகும் வண்ணம் பேசினான்.(எ) நான் அவனுக்கு உத்தர வாதம் பண்ணுவேன் என்றும், தவறினால் தன் இரு பிள்ளைகளையும் கொன்று போடும் என்றும் யாக்கோபிடம் கூறினான்.

யாக்கோபின் சம்மதம் (வச.11-15): பென்யமீனை அனுப்புவதற்கு முதலில் யாக்கோபு சம்மதிக்கவில்லை. யூதா தன் தகப்பனிடம் கேட்டபோது அவனை அனுப்ப சம்மதித்தான்.

அறிவித்த சகோதரர்கள் (வச.16-22): இளைய குமாரன் தன் தந்தையிடம் வந்தவுடன், தான் செய்த தவறுகளை அறிக்கை செய்தது போல் யோசேப்பின் விசாரணைக்காரனைக் கண்டதும், அவர்களாகவே தங்களுக்கு நேர்ந்த தவறை உண்மையாய் அறிவித்தார்கள்.

தேவனை மகிமைப்படுத்திய எகிப்தியன் (வச.23-24): யோசேப்பின் சகோதரர்கள் பயந்து நிற்கையில், வீட்டு விசாரணைக்காரன் அவர்களைப் பார்த்து பயப்படாதிருங்கள் எங்கள் எகிப்திய கடவுள் உங்களுக்கு அதைத் தந்திருக்கிறார் என்று சொல்லாமல், உங்கள் தேவன் என்று கூறித் தேவனை மகிமைப்படுத்தினான். இதன் மூலம் யோசேப்பின் தேவனை அவன் அறிந்து வைத்திருந்தான் என அறிகிறோம். யோசேப்பு தன் தகப்பனுடைய சுக செய்தியை மிகவும் கரிசனையோடு விசாரித்தான் (வச.27). பென்யமீனைப் பார்த்து தேவன் உனக்குக் கிருபை செய்வார் என்று ஆசீர்வதித்தான். காலங்களானாலும் சகோதரர் மேலுள்ள யோசேப்பின் அன்பு மாறவில்லை. ஆனால் நம்முடைய அன்பு....?

ஆண்டவரே, உம்மையும், உம் அன்பையும் அறிந்திருக்கிற நான் அனைவரிடமும் அன்பு காட்ட பெலன் தாரும். ஆமென்.

மனநிலை

> நாம் சோதிக்கப்படும்போது, பெரும்பாலும் பிறரையே குற்றப்படுத்து கிறோம் ஏன்?

யோசேப்பின் சகோதரர்களுக்கு கடினமான நேரம் தொடர்ந்தது. இப் பகுதியில் வரும் நிகழ்ச்சி ஏன் நடைபெற்றது?

சகோதரர்களது மனந்திரும்புதலை அறிய : சகோதரர்களுக்குத் திருடர்கள் என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. சகோதரர்களுக்குள் வெறுப் புணர்ச்சி நீங்கி விட்டதா என்பதை அறியவும், யோசேப்பை இரக்கமில் லாமல் குழியில் தள்ளினார்களோ அதேபோல் பென்யமீனுக்கும் செய்வார் களோ என்பதை அறிவதற்குமே யோசேப்பு இந்தச் சோதனையைத் தன் சகோதரர்களுக்குக் கொடுத்தான்.

சகோதரர்களின் அன்பை அறிய: பென்யமீன் மீது அபாண்ட பழியைச் சுமத்தினால் அவனது சகோதரர்கள் அவனை விட்டு விட்டுத் தாங்கள் தப்பித் துக் கொள்ள முயற்சிப்பார்களா அல்லது அவனைத் தப்புவிக்க முயற்சிப்பார் களா என்று அறிய விரும்பினான்.

சகோதரர்களின் மனநிலையை அறிய: தாங்கள் நிரபராதிகள் என்ற உண் மையை அவர்களால் நிரூபிக்க முடியவில்லை. கையும் களவுமாய்ப் பிடிக்கப்பட்டார்கள். ஆகவே தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு தாங்களுடைய ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தி னார்கள்.

யாக்கோபைச் சமாதானப்படுத்த தான் அவருக்குக் கொடுத்த உத்தரவாதத் தைப் பற்றி யூதா யோசேப்பிடம் கூறினான். பென்யமீனுக்காக தான் அடிமை யாயிருக்க உத்தரவாதம் அளித் தான்.

யூதா மன்றாடினான்: இதுவரை நடந்த நிகழ்வுகளைக் கூட்டியோ, குறைத்தோ கூறாமல் உள்ளதை உள்ளபடியே யூதா கூறியது ஒரு அறிக்கையைக் கொடுப்பதைப் போலிருக்கிறது. தன் தகப்பனின் வயோதிப நிலையையும், அவர் பிரியமாயிருக்கும் பென்யமீனைப் பற்றியும் கூறினான். யாக்கோபைச் சமாதானப்படுத்ததான் அவருக்குக் கொடுத்த உத்தரவாதத்தைப் பற்றி யூதா யோசேப்பிடம் கூறினான். பென்யமீனுக்காக தான் அடிமையாயிருக்க உத்தரவாதம் அளித்தான்.

அன்பின் தேவனே, என் கஷ்ட காலங்களிலும் உம் அன்பை வெளிப் படுத்தும் பண்பை எனக்குத் தாரும். ஆமென்.

ஆதியாகமம் 45:1–28

மன்னிப்பு

பரிபூரண ஆசீர்வாதம் என்பது கிறிஸ்துவிடம் மட்டுமே உள்ளது. இதைப் பலர் அறிந்திருந்தாலும் நம்புவதில்லை. ஏன்?

யோசேப்பு தன்னை வெளிப்படுத்தினான் (வச.1-3): எல்லாமே புரியாத புதிராயிருக்கிறதே என்று திகைத்துக் கொண்டிருந்த சகோதரர்களுக்கு யோசேப்பு தான் யார் என்பதைத் தெரிவிக்கிறான். எகிப்திற்குச் சென்ற வியாபாரிகளிடம் நீங்கள் விற்றுப்போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான் என்றான். இதைக் கேட்ட சகோதரர்கள் பயந்து, நடுங்கித் திகைத்து செய்வதறியாது செயலற்றுப் போயினர்.

மன்னிப்பைப் பெற்றனர் (வச.4-8): சகோதரர்களது துரோகத்தை யோசேப்பு பெரிதுபடுத்தவில்லை. மாறாக தனது செழிப்பை அவர்களோடு பகிர்ந்து கொண்டான். பழி வாங்கும் எண்ணம் அவனுக்கில்லை. யோசேப்பைப் போன்று ஐக்கியத்தையும், கூட்டு வாழ்க்கையையும் விரும்புகிறவர்கள் இன்று மிகவும் குறைவு. தன் தகப்பனும், சகோதரர்களும், அவர்களது குடும்பத்தினரும் தன்னோடு வந்து வாழலாம் என யோசேப்பு அழைப்பு விடுத்தான்.

வாக்குறுதியைப் பெற்றனர் (வச.15-20): யோசேப்பின் சகோதரர்கள் வந்தார்கள் என்று அறிந்த பார்வோன் சந்தோஷம் அடைந்தான் (வச.16). எகிப்தின் நன்மையைத் தருவேன்; தேசத்தின் செழுமையைப் புசிப்பீர் கள் என்று வாக்கு கொடுத்தான் (வச.18). தேவன் ஒரு மனிதனைப் பயன்படுத்தும் போது அவன் மட்டுமல்ல அவனைச் சார்ந்த யாவரும் உயர்த்தப்பட்டனர்.

ஆசீர்வாதங்களைக் கொடுத்த யோசேப்பு (வச.21-28): இவர்களுக்குப் போய் நன்மைகளைச் செய்வதா என்ற எண்ணம் யோசேப்புக்குச் சிறிதளவும் இல்லை. பார்வோனின் கட்டளைப்படி கொடுத்தான். யோசேப்பு பீறுண்டு போனான் என்ற வார்த்தைகளால் யாக்கோபைக் கலங்கச் செய்த அதே சகோதரர்கள்தான் இப்போது "யோசேப்பு உயிருடன் இருக்கிறான்" (வச.26) என்று 22 வருடங்கள் கழித்து இந்த உண்மையைத் தெரிவித்தார்கள். நாம் பேசும் வார்த்தைகள் மற்றவர்களை உயிரடையச் செய்கின்றனவா?

கர்த்தாவே, நான் உம்மால் ஆசீர்வதிக்கப்படும்போது, மற்றவர்களை மறவாதிருக்க அருள்தாரும். ஆமென்.

சந்திப்பு

தங்கள் பொறுப்புகளில் பலர் சுயநலவாதிகளாய் நடந்துகொள்வது ஏன்?

தேவ நடத்துதலைப் பெற்ற யாக்கோபு [வச.1-7]: யோசேப்பு உயிருடன் இருக்கிறான் என்று கேள்விப்பட்டவுடன் மகனைப் பார்க்க உடனே எகிப்துக்கு ஓடிப்போகவில்லை. மாறாக தன் முன்னோர்களின் இடமாகிய பெயர் செபாவிற்குச் சென்று கர்த்தருக்குப் பலி செலுத்தினான். முதலாவது தேவனுக்கு நன்றி சொன்னான். அப்போது கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி, யாக்கோபுக்கு 4 வாக்குத்தத்தங்களைக் கொடுத்தார் (வச.3,4). இன்று நமக்கும் இதே வாக்குத்தத்தங்களைத் தருகிறார். மனந்தளராமல் இந்த வாக்குத்தத்தங்களை உறுதியாய் பற்றிக் கொள்வோம்.

எகிப்துக்குப் புறப்பட்ட குடும்பத்தினர் [வச.8-27]: தன் பிரிய மகனாகிய யோசேப்பைச் சந்திக்க யாக்கோபும், அவனுடைய குடும்பத்தார் யாவரும் வந்தனர். வச.26ல் குறிப்பிட்ட 66 பேர் என்பது யாக்கோபு யோசேப்பு மனாசே, எப்பிராயீம் என்பவர்கள் சேர்க்கப்படாதது. வச.27ல் இவர்களையும் சேர்த்து எழுபதுபேர் என்று குறிப்பிடப்படுகிறது. அப். 7:14ல் குறிப்பிட்ட 75பேர் என்பதில் மனாசே, எப்பிராயீம் என்பவர்களின் 5 பிள்ளைகளும் அடங்குவர். இந்த எண்ணிக்கை விபரங்களில் பெண்கள் சேர்க்கப்படவில்லை. எண்ணிக்கைகளில் எந்தக் குழப்பமும் இல்லாதிருப்பது வேதத்தின் துல்லியத்தையும் மகத்துவத்தையும் நமக்கு உணர்த்துகிறது.

தந்தையைச் சந்தித்த யோசேப்பு [வச.28-34]: யாரைத் தன் வாழ்க்கையில் இனி ஒருபோதும் காணப் போவதில்லை என்று எண்ணினானோ அந்த யோசேப்பை உயிரோடு மாத்திரமல்ல, உயர்ந்த நிலையில் பார்த்ததும் யாக்கோபின் மனம் எப்படி இருந்திருக்கும்! யோசேப்பும் அதே மன நிலையில் தான் இருந்திருப்பான். இந்தச் சந்திப்பு ஏற்படுத்திய மகிழ்ச்சி இளையகுமாரன் தன் தகப்பனிடம் திரும்பி வந்தபோது இருந்திருக்கும். பலவித போராட்டங்களையும், பாடுகளையும் கடந்து வந்தவர்கள் மகிழ்ச்சியடையும் நாள் நெருங்கி வருகிறது.

இயேசுவே, உமது பாடுகளால் எனக்குக் கிடைக்கும் மேன்மைகளுக்காக நன்றி கூறுகிறேன். ஆமென்.

நிலையற்ற வாழ்க்கை

> மனிதனுடைய வாழ்க்கை நிலையற்ற வாழ்க்கையாகும். இந்த உலகமும், மனிதனுக்கு நிரந்தர இருப்பிடமல்ல.

அநுதியானது [வச.1-3]: வாழ்க்கையில் கஷ்டங்கள் வரும் போது பலரும் ஆண்டவரை தூஷிப்பதைக் காண்கிறோம். நாம் பேசுகிற வார்த்தைகளை திரும்பப் பெற முடியாது. எனவே ஞானமாக நமது வாயைத் திறக்க வேண்டும். இன்று தங்களது நாவுகளால் பேசி அனைத்தையும் சாதித்து விடலாம் என்று எண்ணுகிற காலத்தில் வாழுகிறோம் நாம் (சங்.12:4).

தாவீது தான் பாவஞ்செய்யாதபடி தன் நாவை அடக்கி, அதினால் ஆண்டவரிடத்தில் விண்ணப்பம் செய்வேன் என்று குறிப்பிடுகிறான். நீதிமானுடைய வாய் ஞானத்தை உரைத்து அவனுடைய வாய் நியாயத்தைப் பேசும் என்பது போல் தனது இக்கட்டு நேரங்களில் தாவீது நாவினால் தேவனை துதித்து அவர் நாமம் மட்டும் மகிமைப்படும்படியாய் கெம்பீரித்துப் பாடுகிறான் (சங்.51:14).

வாக்குத்தத்தம் [வச.5,6] : நிலையற்ற நமது வாழ்விலே நாம் எவ்வளவு நாள் வாழ்வோம் என்று நமக்குத் தெரியாது. ஆனால் மனிதன் விருதாவாக சஞ்சலப்பட்டு ஆஸ்தியைச் சேர்க்கிறான். யார் அதை அனுபவிப்பதற்காக அவன் அதை சேர்த்து வைக்கிறான் என்பதை அவன் அறியான். எனவே நாம் தேவனிடத்தில் ஒன்றே ஒன்றைக் கேட்கலாம். ஆண்டவரே, நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி எங்கள் நாட்கள் எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும். காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில் கண்ணீர் விட ஏதுவாகும் (சங்கீதம் 90).

மீட்பு [வச.7-13] : எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான். எனவே நம்மிடத்திலே காணப்படுகிற அக்கிரமத்தையும் பாவத்தையும் மீறுதல்களையும் கர்த்தருக்கு முன்பாக அறிக்கையிடுவது அவசியம். அப்பொழுது அவர் நம்முடைய மீறுதல்கள் நீங்க நம்மை சுத்திகரிப்பார். நம்முடைய பாவங்களை கார் மேகத்தைப் போல அகற்றிவிடுவார். நாம் அவருடைய கிருபையினால் மீட்கப்படுவோம். பாவமன்னிப்பில்லாமல் இரட்சிப்பில்லை.

ஆண்டவரே, உமது கிருபையின்படி என்னுடைய மீறுதல்கள் நீங்க என்னை சுத்திகரியும். ஆமென்.

முன்மாதிரியான வாழ்வு

நமது வார்த்தைகளை விட நமது வாழ்க்கை அதிக சத்தமாக பேசும்.

உன்னதமான குணங்கள் (வச.1-4): பவுல் தனது இரண்டாவது மிஷனரி பயணத்தின் போது மக்கெதோனியா தேசத்தின் தலைநகரான தெசலோனிக்கே பட்டணத்தில் குறுகிய காலம் தங்கி அங்கே சபையை நாட்டினார். (அப். 17:1-10). உபத்திரவத்தின் மத்தியில் உருவான சபை. அந்த திருச்சபையாரை கிறிஸ்துவுக்குள் உற்சாகப்படுத்தும்படி பவுல், சில்வானா மற்றும் தீமோத்தேயுவுடன் சேர்ந்து இந்த கடிதத்தை கொரிந்து பட்டணத்திலிருந்து எழுதி அனுப்பினார். அந்த சபையாருக்காக பவுல் தேவனை நோக்கி வேண்டிக் கொள்ளும்போது அவர்களுடைய மூன்று முக்கிமான குணாதிசயங்களை நினைவு கூறுகிறார். 1. அவர்களுடைய விசுவாசத்தின் கிரியை. 2. அன்பின் பிரயாசம். 3. நம்பிக்கையின் பொறுமை.

சுவிசேஷத்தின் வல்லமை (வச.5-7): தெசலோனிக்கே சபையாருக்கு தேவனுடைய வார்த்தை, பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்ததினால் பலத்த விளைவுகளை உண்டாக்கியது. அதோடு கூட சுவிசேஷத்தை, உபத்திரவத்தின் மத்தியிலும் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி யோடு ஏற்றுக் கொண்டுள்ளனர். சுவிசேஷம் வாழ்வை மாற்றக் கூடியது. கஷ்டத்தின் மத்தியிலும் மகிழ்ச்சியைத் தருகிறது. உலகத்தைப் பின்பற்றாமல் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிற உண்மை சீடர்களாக மாற்றுகிறது. தேவனுடைய வார்த்தையானது நமது வாழ்க்கையை மாற்றுவது மட்டுமன்றி மற்றவர்களையும் அதன் மூலம் சந்திக்கிறது. நமது வாழ்க்கை மற்றவர்களுக்கு முன்மாதிரியான வாழ்வாகிறது.

விசுவாச அறிக்கை (வச.8-10): தெசலோனிக்கே சபையாரின் விசுவாச வாழ்க்கையானது, மற்றப் பட்டணங்களில் சுவிசேஷம் பரவ முக்கியக் காரண மானது. கிறிஸ்தவ விசுவாசம் சுலபமாகப் பரவக்கூடியத் தன்மையுள்ளது. தெசலோனிக்கே சபையிலிருந்து சுவிசேஷம் "தொனித்தது" போல நமது சபைகளிலிருந்தும் அந்த சுவிசேஷ தொனி தொனிக்கிறதா? இந்திய தேசத்திலுள்ள கோடிக்கணக்கான மக்கள், நமது வார்த்தையாலும், வாழ்க்கையாலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை காண நாம் வாழ்கிறோமா?

தேவனே, உம்மை அறிகிற அறிவில் வளரவும், என் விசுவாச வாழ்க்கையின் மூலம் மற்றவர்களுக்கு உம்மை அறிவிக்கவும் எனக்கு பெலன் தாரும். ஆமென்.

1 தெசலோனிக்கேயர் 2:1–16

ஊழியரின் முன்மாதிரி

> அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்த வருடையப் புண்ணியங்களை அறிவிக்க அழைக்கப்பட்ட நாம் சரியான குணாதிசயங்களைப் பெற்றிருத்தல் அவசியம்.

எங்களது உள்நோக்கம் (வச.1-4): பிலிப்பி பட்டணத்தில் பலப்பாடுகளைச் சந்தித்தப்பின், பவுலும் அவருடைய உடன் ஊழியர்களும் தெசலோனிக்கே பட்டணத்திற்குச் சென்றனர். சில வாரங்களே தங்கி, தேவனுடையப் பணியை நிறைவேற்றினர் (அப்.17:18). அங்கு சபை உருவானது. அவர் களுடைய உள்நோக்கத்தில் ஒரு தெளிவைக் காணமுடிகிறது. தேவனுக்கு பிரியமுண்டாகச் செய்யவும், ஒரு பொறுப்புணர்வோடு அதை நிறை வேற்றவுமே விரும்பினர். தேவனுடைய அருட்பணியில் ஈடுபடுகிற நமது உள்நோக்கம் எப்படிப்பட்டதாய் உள்ளது? பெருமைக்காக அல்லது வேறு ஆதாயங்களுக்காக ஈடுபடுகிறோமா?

எங்களது செயல்பாடுகள் (வச.5-8): பவுலின் விரோதிகள் சிலர், அவர் பணம் பரிப்பதற்காகத்தான் பிரசங்கிப்பதாகப் பொய்ச் சொன்னார்கள். அந்த காலங்களில், தங்கள் சுய லாபத்திற்காகவே பிரசங்கித்த போலி பிரசங்கியார்கள் அநேகர் இருந்தனர். ஆனால் பவுல் தைரியமாக அவர்களுக்கு பதிலடி கொடுக்கிறார். ஊழியத்தின் நிமித்தம் தங்கள் ஜீவனையும் இழக்க விருப்பமுள்ளவர்களாகவும், தாயைப் போல மேலான அன்பு உள்ளம் கொண்டவர்களாக செயல்பட்டனர்.

உங்களை குறித்தான எண்ணம் (வச.9-12): சகோதர, சகோதரிகளே! என அன்பாய் அழைக்கிற பவுல், இந்த நான்கு வசனங்களில் ஆறுமுறை 'உங்கள்' என்ற வார்த்தையை உபயோகிக்கிறார். "நான்", "என்", "எனது" என்று எண்ணி வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்வதே உண்மையான தாழ்மையாகும்.

தேவவசனத்தின் வல்லமை (வச.13-16): தேவவசனத்தை விசுவாசித்து அதை ஏற்றுக் கொள்ளுகிறவர்களுடைய வாழ்க்கை மறுமலர்ச்சி அடைகிறது. உபத்திரவங்கள், கஷ்டங்கள் வந்தாலும் அதை பொருட்படுத்தாது நல்ல நிலத்தில் விழுந்த விதையைபோல பலன் தரக்கூடியவர்களாகின்றனர். தேவன் எனக்கு கொடுத்திருக்கிற பணியை உண்மையான மனதோடு தேவனை பிரியப்படுத்துவதற்காக செய்கிறேனா?

தேவனே, நீர் என்னை "உண்மையும், உத்தமுமான ஊழியக்காரனே" என்று அழைக்கப்படக்கூடிய பாக்கியத்தைத் தாரும். ஆமென்.

மற்றவர்களை மகிழ்விப்பவர்கள்

மற்றவர்களை மகிழ்விப்பது இயேசு கிறிஸ்துவை அறிந்த நமது கடமையாகும்.

திருச்சபையின் உற்சாகம் (வச.2:17-20): விரோதிகளின் நிமித்தம் பவுல் தெசலோனிக்கேயரை விட்டு பிரிந்திருந்தார். ஆனால் அவர்களுடைய நினைவாகவே அவர் இருந்திருக்கிறார். அவர்களைக் குறித்து பவுல் சொல்லும்போது, இம்மையிலும் மறுமையிலும் நீங்கள் எங்களுக்கு கிரீடத்தை போன்றவர்கள் என்கிறார். சபையார், ஊழியர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தனர். இது ஓர் ஆவிக்குரிய அனுபவமாகும். சாத்தான் கிறிஸ்தவ ஐக்கியத்தில் எதிர்த்து நின்று, தேவனுடைய மக்களின் மத்தியில் பிளவையும், குறைவையும் உண்டாக்கக்கூடியவன். அன்பில் குறைவை உண்டாக்குபவன். மகிழ்ச்சிக்குப் பதிலாக கோபத்தையும் பிரிவினையையும் உண்டாக்குவதில் பிசாசானவன் மும்முரமாய் இருக்கிறான். நமது ஐக்கியத்தில் மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறோமா? வருத்தத்தைக் கொடுக்கிறோமா?

தீமோத்தேயுவின் உன்னத பணி (வச.3:1-5): சபையாரின் பேரில் பவுல் அதிக அன்பு கொண்டதின் நிமித்தம், இனியும் பொறுத்திருக்கக் கூடாமல் எப்படியாவது அவர்களை உற்சாகப்படுத்த தீவிரமாக உள்ளார். ஒரு திட்டமான நோக்கத்திற்காக தீமோத்தேயுவை அவர்களிடம் அனுப்புகிறார். 1. சபையாரை இயேசு கிறிஸ்துவுக்குள் திடப்படுத்தவும், 2. அவர்களுடைய விசுவாசத்தில் உறுதியாயிருக்க அவர்களுக்கு புத்தி சொல்லவும், 3. இந்த சபையாருக்காக பவுலும், அவரது உடன் ஊழியர்களும் எடுத்த முயற்சிகள் வீணாகாமல் இருக்கவும், 4. அவர்களை பிசாசானவன் சோதனைக்கு உட்படுத்தாமல் இருக்கவும், மற்றும் 5. உபத்திரவத்தின் மத்தியிலும் விசுவாச வாழ்க்கையில் அவர்கள் எப்படியிருக்கிறார்கள் என்ற செய்தியைப் பெற்று வரவும் தீமோத்தேயுவை பவுல் அனுப்புகிறார்.

மற்றவர்களின் நலனில் அக்கறைக் காட்டக் கூடிய தன்மை நம்மிடம் உண்டா? அதற்காக நாம் என்ன முயற்சி எடுக்கிறோம்? எனது விசுவாசத்தின் நிமித்தம் கடைசியாக யாரை சந்தோஷப்படுத்தியிருக்கிறேன்? கிறிஸ்துவுக்காக பாடுப்பட்டதின் நிமித்தம் மகிழ்ந்து களிகூறுகிறோமா?

ஆண்டவரே, நான் சுயநலவாதியாய் வாழாமல் மற்றவர்களை மகிழ்விக்க கிருபை பாராட்டும். ஆமென்.

வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை

> ஜீவாற்றில் ஓடும் தண்ணீரால் என் ஆத்மத் தாகம் தீர்ப்பார்; மெய் மன்னாவாம் தம் வார்த்தையால் நல் மேய்ச்சல் எனக்கீவார்.

உன்னத விசுவாசமும், அன்பும் (வச.6-8): தீமோத்தேயு தெசலோனிக்கேயா விலிருந்து திரும்பி வந்து அவர்களது விசுவாசத்தையும், அன்பையும் பற்றிய நற்செய்தியை பவுலுக்கு தெரிவித்தான். அந்தச் செய்தி பவுலுக்கும் அவரது உடன் ஊழியர்களுக்கும் மிகுந்த ஆறுதலைத் தந்தது. இதே போலதான் தீத்துவும் கொரிந்து சபையாரைக் குறித்ததான அறிக்கையைக் கொண்டு வந்தபோது பவுல் மிகுந்த ஆறுதல் அடைந்தார் (2 கொரி. 7:6,7). நமது விசுவாசமும் அன்பும் மற்றவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கக் கூடியதாய் இருக்கிறதா?

மிகுந்த விருப்பமும், ஏக்கமும் (வச.9-11): பவுலுக்கு திருச்சபையாரின் ஆவிக்குரிய வாழ்க்கையில் காணப்பட வேண்டிய முன்னேற்றத்தின் மேல் உள்ள விருப்பத்தையும் ஏக்கத்தையும் இங்கு காண்கிறோம். அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறார். தெசலோகின்கேயரின் விசுவாசத்தின் குறைகளை நிறைவாக்கவும், அவர்களை கர்த்தருக்குள் உறுதிப்படுத்தவும் மிகுந்த வாஞ்சையுள்ளவராய் ஜெபத்தோடு காத்திருப்பதைக் காணலாம்.

பரிசுத்தமும், பிழையற்ற வாழ்வும் (வச.12-13): பரிசுத்தம் என்பது சரியான உறவுகளில் காணப்பட வேண்டிய தன்மையாகும். பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கையே பரிசுத்த வாழ்வின் அர்த்தமாகும். ஆனால் ஒருவரிடத்தில் ஒருவர் உண்மையான அன்பில் நிலைத்திருக்க வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். இந்நாட்களில் பரிசுத்தமில்லாமை என்பது தனிப்பட்ட வாழ்வில் ஒரு பிரச்சனையாக இருந்தாலும், அது அதிகமாக ஐக்கியத்திலும் திருச்சபையின் வாழ்க்கையிலும் குடும்பங்களிலும் பிரச்சனையை உண்டாக்கக் கூடியதாய் இருக்கிறதை பார்க்கிறோம். விசுவாசிகளாகிய நாம் இவ்வுலகில் பரிசுத்ததிற்கும் அன்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்து வாழ வேண்டும். பரிசுத்தமான வாழ்க்கை வாழ நமக்கு ஏக்கம் உண்டா? நாம் மற்றவர்களோடு உள்ள உறவில் எப்படி இருக்கிறோம்? வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு மிகவும் தேவையானது என்ன என்பதை வேதம் கூறுகிறது. அதை மனதில் கொண்டு, நித்தியமான வாழ்விற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறோமா?

பரிசுத்த தேவனே, உத்தமமாய் முன் செல்ல, உதவி செய்தருளும். ஆமென்.

1 தெசலோனிக்கேயர் 4:1-12

தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை

நமது வாழ்க்கைக்கு ஒரே ஒரு நோக்கம்தான் இருக்க வேண்டும். அது நம்மைப்படைத்த தேவனைப் பிரியப்படுத்துவதும், மகிமைப் படுத்துவதுமே.

தேறுகின்ற வாழ்க்கை (வச.1-2): கிறிஸ்தவ வாழ்வு என்பது ஒரே நிலையில் இருக்கக்கூடியத் தன்மைபெற்றதல்ல. நீதிமான்களானபின் நாம் பரிசுத்தமாகுதலில் முன்னேற வேண்டும். "நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி" நடந்துகொள் என பவுல் தீமோத்தேயுவுக்கு கூறுகிறார் (1 தீமோ.4:15). தேறுகின்ற வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமானவை: தேவவசனம், கிறிஸ்தவ ஐக்கியம் மற்றும் தேவனுடைய கிருபை. நம்மில் அக்கறைக் கொள்கிற விசுவாசிகள் இருப்பார்களானால், அது நமக்கு கிடைத்த பாக்கியம். நாம் பெற்றிருக்கிற கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து, பயபக்தியோடு வாழும்போது கிறிஸ்தவ வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் காணலாம்.

பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை (வச.3-7): பவுலின் நாட்களில் கிரேக்கர்கள் பாலுறவுப் பாவங்களை ஒரு பொருட்டாகவே எண்ணவில்லை. எனவே தெசலோனிக்கேயரைச் சேர்ந்த இந்த புதிய கிரேக்க விசுவாசிகள், வேசி மார்க்கத்திற்கு விலகியிருக்கும்படிக்கு பவுல் எச்சரிப்புக் கொடுக்கிறார். இந்த கணினி காலத்தில் வாழ்கிற வாலிபர்கள் பெரியவர்கள் யாவரும் பலவிதமான பொறியமைப்பு கருவிகள் மூலம் பரிசுத்த வாழ்க்கைக்கு சவால்களை சந்திக்கின்றனர். தெளிந்த புத்தியோடும், ஞானமாயும் வாழ நாம் அழைக்கப்படுகிறோம். நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்த தேவன் நம்மோடு இருப்பதால் நமது சரீரங்களை பரிசுத்தமாக காத்துக் கொள்ள வேண்டும்.

அன்பில் பெருகுகிற வாழ்க்கை (வச.9-12): சகோதர சிநேகத்தைக் குறித்து வேதம் அதிகம் பேசுகிறது. நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லோரும் அறிந்து கொள்வார்கள் என இயேசு கிறிஸ்து கூறினார் (யோ.13:35). கடிதத்தின் துவக்கத்தில் அவர்களது அன்பின் பிரயாசத்தை மிகவும் புகழ்ந்து பேசினாலும், மற்றவர்களை நேசிப்பதில் வளர வேண்டும் என்கிறார். அன்பை தவறான முறையில் புரிந்து கொள்ளுகிற இந்த நாட்களில் விசுவாசிகளாகிய நாம் எவ்வாறு உண்மையான தேவனுடைய அன்பை பகிர்ந்து கொள்ளுகிறோம்?

பரலோகப்பிதாவே, உம்மை பிரியப்படுத்தக் கூடிய வாழ்வில் முன்னேற உமது கிருபையைத் தாரும். ஆமென்.

1 தெசலோனிக்கேயர் 4:13-18

கிறிஸ்துவின் வருகையில் நம்பிக்கை

இயேசுவானவர் மறுபடியும் திரும்பி வருவார் என்பதே கிறிஸ்தவ விசுவாசத்தில் நமக்கு இருக்கிற மகிமையான நம்பிக்கை.

நித்திய வாழ்வு (வச.13,14): தெசலோனிக்கேயர்கள் தாங்கள் சாகும் முன்பே கிறிஸ்து திரும்ப வந்துவிடுவார் என்று எண்ணிக்கொண்டனர். ஆனால் அதே காலத்தில் சில தெசலோனிக்கே கிறிஸ்தவர்கள் மரித்துவிட்டனர். ஆகவே, அவர்களுக்குள்ளே ஒரே குழப்பம். மரித்தவர்களுக்கு என்னவாயிருக்கும் என்று யோசித்துக் கலங்கினர். இந்த பகுதியில் பவுல் அவர்களது கேள்விகளுக்கு பதில் தருகிறார். இயேசுவானவர் உயிர்த்தெழுதலே நமது நம்பிக்கையின் ஆதாரமாகும் (1 கொரி.15:12-18). மரணம் என்பது ஒரு நபரின் முடிவல்ல. நித்திய வாழ்வு ஒரு விசுவாசிக்கு கிடைத்த பாக்கியம். ஒரு விசுவாசி மரணமடையும் போது தேவனிடம் செல்கிறார் என்பது நமது விசுவாசம்.

கிறிஸ்துவின் வருகை (வச.15-17): கர்த்தருடைய வார்த்தையான பழைய ஏற்பாட்டிலே, கிறிஸ்துவின் வருகையைக் குறித்து அதிகம் படிக்கிறோம். நமது ஆண்டவராகிய இயேசுவும் தாம் திரும்பி வரப்போவதைக் குறித்துப் பேசினார் (மத்தேயு 24; மாற்கு 13 பார்க்கவும்). உலக ரட்சகராக இவ்வுலகிற்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வந்த நமது ஆண்டவர் மறுபடியும் நியாயாதிபதியாக திரும்ப வருவார் (எபிரேயர் 9:28). உயிரோடிருக்கிற விசுவாசிகளாகிய நாம் ஆண்டவருடைய வருகைக்காக எப்பொழுதும் காத்திருக்க வேண்டும். மரித்த விசுவாசிகளும் தேவனைச் சந்திக்க எழுப்பப்படுவார்கள். எனவே நமது மரணமோ அல்லது கிறிஸ்துவின் வருகையோ எது முந்தி நடைபெற்றாலும் கர்த்தருடனேகூட நித்திய நித்தியமாக வாழப்போகிறோம். கர்த்தரை சந்திக்க ஆயத்தப்படுவோம் மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துவோம்.

உற்சாகமான வார்த்தை (வச.18): தெசலோனிக்கே சபையார் மரித்த விசுவாசிகளைக் குறித்து கவலைப்பட்டதினால் பவுல் இந்த வார்த்தைகளினாலே போதித்துப் புத்தி சொல்லுகிறார். கிறிஸ்தவ போதனைகளில் இந்த வார்த்தைகளினால் கிறிஸ்துவின் வருகையை குறித்தும் கடைசிக்காலச் சம்பவங்களைக் குறித்தும் போதித்துப் புத்திச்சொல்லுவது நல்லது. நமது ஆண்டவர் திரும்பவரும்போது நம்மை என்னச் செய்துக் கொண்டிருக்கிறவர்களாகக் காண்பார்?

ஆண்டவரே, நித்தியத்தை மனதில் கொண்டு, என் அனுதின வாழ்வை நடத்த உதவியருளும். ஆமென்.

வாழ்வு நிலை

வாழ்க்கையில் அனுதினமும் தேவனுடைய ஒத்தாசை அவசியம் என்பதை உணர்ந்து வாழ்வோம்.

வழி நடத்தும் [வச.1-5]: தாவீது தேவன் தனக்கு கடந்த காலங்களிலே கிருபையாக செய்த நன்மைகளுக்காக நன்றி செலுத்துகிறான். கர்த்தர் நம்முடைய வாழ்க்கையிலே அநேக நன்மைகளைச் செய்திருக்கிறார். அவர் தமது வசனத்தைத் தந்து நம்மை செம்மையான பாதையிலே வழி நடத்துகிறார். கர்த்தரையும் அவருடைய வசனத்தையும் நம்புகிறவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்வான். அவன் வழி நித்திய வழியாயிருக்கும்.

மற்றவர்களுக்கும் அறிவி [வச.6-10] : கர்த்தர் நமது காணிக்கைகளை விரும்புகிறவரல்ல. அவர் விரும்புவதெல்லாம் நொறுங்குண்ட இதயம் மட்டுமே. கர்த்தருக்கு முழுவதுமாக ஒப்புக்கொடுக்கும்போது அவர் நமக்கு பூரண சமாதானத்தை தருகிறார். நாம் பெற்றுக் கொண்ட அந்த இரட்சிபை நாம் மற்றவர்களுக்கு அறிவிக்கும்போது தேவனுடைய ஒளி அவர்களுக்குள்ளும் பிரகாசிக்கும். கர்த்தர் நமக்குச் சகாயத்தை செய்து நமது இக்கட்டிலிருந்து நம்மை மீட்டு இரட்சிப்பார் (சங்.70:1-5; 40:10).

நன்மையும் குறைவுபடாது [வச.11-17] : மனிதனை தேவன் நினைத்துப் பார்ப்பதற்கு அவன் எம்மாத்திரம்? நாம் நன்மை செய்ததினால் அவருக்கு இலாபமென்ன? நாம் தீமை செய்வதினால் அவருக்கு நஷ்டம் ஏற்படுமோ? இல்லையே. ஆனால் அதிகாலையில் கர்த்தரைத் தேடுபவர்கள் கண்டடைவார்கள். அவரிடத்தில் அழிவில்லாத நித்திய ஜீவன் உண்டு. அவர் தம்முடைய பிள்ளைகளை ஆபத்துக்கு விலக்கி மீட்டு, அவர்கள் மீண்டும் இடறிவிழாதபடி பாதுகாக்கிறார். அவர்களுக்கு இவ்வுலக ஆசீர்வாதங்களைக் கட்டளையிடுகிறார். அவர்களுடைய வீடு சந்தோஷத்தினாலும், மகிழ்ச்சியினாலும் நிறைந்திருக்கும். கர்த்தர் இம்மையிலே பல நன்மைகளைத் தருவதோடு மட்டுமல்லாமல் நித்திய ஜீவனையும் நமக்குத் தந்து, நம்மை பரலோகவாசிகளாக மாற்றுகிறார் (சங்.34:10). கர்த்தர் கிருபையாக இரங்கி நமக்குக் கொடுத்த நன்மைகளுக்காக அவருக்கு நன்றி செலுத்துகிறோமா?

கர்த்தாவே, எதிராளியாகிய சாத்தானின் சூழ்ச்சிகளுக்கு விலக்கிக் காத்து உம்முடைய இராஜ்ஜியத்தை சேரும்படி வழி நடத்தும். ஆமென்.

விழித்திருப்போம்!

> கர்த்தருடைய நாளைச் சந்திக்க ஆயத்தமாவோம்; விழிப்புடன் தெளிந்த புத்தியுடன் சக விசுவாசிகளோடு சேர்ந்து விசுவாச வாழ்க்கையில் வளருவோம்.

வெளிச்சத்தில் நடக்கிறவர்கள் [வச.1-5]: கிறிஸ்துவின் வருகையைக் குறித்து பேசின பவுல், அது எப்பொழுது நடக்கும் எனக் குறிப்பிடும்போது திருடன் மற்றும் கர்ப்பவதியான ஸ்திரீகளை உதாரணமாக கூறுகிறார். கர்த்தருடைய நாள் திடீரென வரும் என்று குறிப்பிடுகிறார். எப்பொழுதும் ஆயத்தமாய் விழிப்புடன் இருக்க அழைக்கப்படுகிறோம். எனவே இருட்டின் பிள்ளைகளாய் இராமல், வெளிச்சத்தில் நடக்கிறவர்களாய் இருக்கவேண்டும். அதன் அர்த்தம் என்னவென்றால் இயேசு கிறிஸ்துவை உள்ளத்தில் ஏற்றுக் கொண்டவர்களாய், தேவனுடைய பிள்ளைகளாய் இருக்க வேண்டும் (யோ.1:9-12). தேவன் ஒளியாயிருக்கிறார் வெளிச்சத்தின் கிரியைகள் நம்மிடம் காணப்படுகிறதா?

தெளிந்த புத்தியுள்ளவர்கள் [வச.6-8]: பாவத்தில் வாழ்பவர்களைப் பவுல், தூங்குகிறவர்களுக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். தெளிந்த புத்தி நம்மை பாவமான காரியங்களுக்கும்,தேவனுக்கு பிரியமான பரிசுத்தமான காரியங்களுக்கும் உள்ள வித்தியாசத்தையும் திட்டமாக காண்பிக்கும். ஆவிக்குரிய வாழ்வில் தூங்குகிறவர்களை, நீ குளிருமல்ல, அனலுமல்ல என தேவன் கூறுகிறார் (வெளி. 3 : 14-16). விசுவாசம், அன்பு என்ற மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கை என்னும் தலைச்சீராவையும் அணிந்து கொண்டவர்களாக விழிப்புடன், தெளிந்த புத்தியுடன் நமது கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்துவோம்.

ஒருவரையொருவர் தேற்றுகிறவர்கள் [வச.9-11]: தேவன் நமது வாழ்வில் இயேசு கிறிஸ்து மூலமாய் வைத்திருக்கின்ற திட்டத்தையும், இயேசுவானவர் தமது விலையேறப் பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டுக் கொண்டதையும் பவுல் உறுதியாய்க் கூறி, ஒருவரையொருவர் தேற்றுங்கள் என குறிப்பிடுகின்றார். நம்மோடு படிக்கிற அல்லது வேலைச்செய்கிற அல்லது வசிக்கிற மற்றவர்கள் பக்தி விருத்திக்காக நாம் இதுவரை என்ன செய்துள்ளோம்? ஆத்துமாக்கள் பேரில் வாஞ்சை வைத்திராமல் சோம்பலாய் காலங்கழித்தோர் அந்நாளில் துக்கிப்பார் நிர்ப்பந்தராய்.

ஆண்டவரே, எனது கிறிஸ்தவ வாழ்வை ஏனோ தானோ என கழித்து விடாமல், விழிப்புடன் வாழ கிருபை தாரும். ஆமென்.

விசுவாசிகளுக்கான புத்திமதிகள்

> உத்தமமாய் முன் செல்ல உதவி செய்யும் யேகோவா; ஊக்கமதைக் கைவிடாமல் காத்துக் கொள்ள உதவும்.

மதிப்பும், மரியாதையும் [வச.12,13]: பவுல் திருச்சபையின் தலைவர்களைப் பற்றி விவரித்துக் கூறிவிட்டு தெசலோனிக்கேயர், அவர்களை மதிக்க வேண்டும் என கற்பிக்கிறார். நம்மை நடத்தினவர்கள், நமக்கு மேய்ப்பராய் இருக்கிறவர்களுக்கு தர வேண்டிய மதிப்பையும், மரியாதையையும் கொடுக்க வேண்டும். ஒருவேளை அவர்கள் சொல்லிவிட்ட அல்லது செய்த ஒன்றைக் குறித்து மாற்றுக் கருத்து இருக்குமானால் அவர்களை நேரில் சந்திப்பது மிகவும் நல்லது. முதிர்ச்சியற்ற நிலையில் இதை அணுகும்போது தவறாய் விமர்சிக்கவும், வீண் வதந்திகளைப் பரப்பவும் நேரிடும். அது பிரிவினையை உண்டாக்கி, சமாதானக் குலைச்சலை ஏற்படுத்தும்.

எப்பொழுதும் எல்லாவற்றிலும் [வச.14-22]: தேவனுக்கு முன்பாக எப்பொழுதும் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரம் செய்யுங்கள் என்று பவுல் கூறுகிறார். அது தேவனுக்குப் பிரியமான காரியமாகும். நாம் செய்ய வேண்டிய காரியங்கள் எவை என பவுல் பட்டியலிட்டு காட்டியுள்ளார். எப்பொழுதும் எல்லாவற்றிலும் கவனமாயிருப்போமானால் நாம் மிகவும் சந்தோஷமான வாழ்க்கை தேவனுக்கு முன்பாகவும் மற்றவர்களுக்கு முன்பாகவும் வாழமுடியும்.

உண்மையும், பரிசுத்தமும் [வச.23-28]: நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். அவர் பொய் சொல்லுகிறவரோ அல்லது மனம் மாறுகிறவரோ அல்ல. அவர் நமது ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் பரிசுத்தப்படுத்துகிறார். நித்தியத்திலே அவரோடு கூட இருக்க நமக்கு கிருபைச் செய்துள்ளார். கறை, திரை அற்றவர்களாக குற்றம் அற்றவர்களாக அவர் முன் நம்மை நிறுத்த சமாதானத்தின் தேவன் அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்டுக் கொண்டுள்ளார். சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தும் பரிசுத்த ஆவியானவர் தமது திரு வசனத்தின் மூலம் நம்மை காக்கின்றார். பரிசுத்த ஜனமாக சமுதாயமாக நாம் வாழ தேவன் விரும்புகின்றார். மேலான, உன்னதமான வாழ்க்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிற நாம் நமது அனுதின வாழ்க்கையில் எப்படி செயல்படுகிறோம்?

> ஆண்டவரே, எனது விசுவாச வாழ்க்கையில் வைராக்கியம், உம்மைப் பிரியப்படுத்தவும் உதவியருளும். ஆமென்.

உபத்திரவத்திலும் வெற்றி

> **சகல பரிசுத்தவான்களும் தேவனுடைய இராஜ்ஜியத்தினிமித்தம் பாடு அநுபவித்து வெற்றிச் சிறந்தவர்கள். அவர்களைப் பின்பற்ற நாம் ஆயத்தமா?**

பாடுகளின் மத்தியிலும் சாட்சி [வச.1-5]: இந்த இரண்டாம் நிருபத்தைப் பவுல் தெசலோனிக்கே சபையாருக்கு கொரிந்து பட்டணத்திலிருந்து எழுதியுள்ளார். அவர்களைக் குறித்து கேள்விப்பட்ட செய்திகளுக்காக தேவனைத் துதிக்கிறார். அவர்களுக்காக கருத்தாய் ஜெபிக்கிறார். இதை முதலாம் அதிகாரத்தில் படிக்கின்றோம். அவர்களை குறித்து மற்ற சபையாரிடம் மேன்மை யாக பேசுகிறார். நமது விசுவாசம், அன்பு அப்படிப்பட்ட சாட்சியைக் கொடுக்க முடியுமா? நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் என இயேசு கிறிஸ்து கூறினார் (மத்.5:10-12). சகல துன்பங்களிலும் உபத்திரவங் களிலும் பொறுமையைக் காண்பிக்க தேவனுடைய ஒத்தாசை தேவை.

நீதியுள்ள தீர்ப்பு [வச.6-10]: ஜீவனுள்ள தேவன் நம்மைக் காண்கிறவர் நமக்கு இளைப்பாறுதலை பிரதிபலனாக கொடுப்பவர். உபத்திரவப்படுத்து கிறவர்களுக்கும் தக்க பலனைத் தருவார். அவர் நீதியுள்ள நியாயாதிபதி. இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக் கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன் என பவுல் கூறுகிறார் (ரோ.8:18). கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள் (2 பே.4:13) என பேதுரு உற்சாகப்படுத்துகிறார்.

இயேசு கிறிஸ்துவின் கிருபை [வச.11,12]: நாம் நிற்பதும் நிர்மூலமாகாதிருப்பதும் தேவகிருபையே. நம்மை அழைத்த தேவன் அவருடைய அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நாம் வாழவும் அவருடைய நாமத்தை நமது வாழ்வின் மூலம் மகிமைப்படுத்தவும், அவருடைய சித்தத்தைப் பரிபூரணமாய் நிறைவேற்றவும்தக்கதாக அவருடைய கிருபையை அதிகமாய் தருகிறார். நம்முடைய பெலத்தோடு நமது விசுவாச வாழ்க்கையை நடத்தாமல், தேவனுடைய கிருபையைச் சார்ந்து வாழக்கடவோம். உபத்திரவங்களை சந்திக்கிற சக விசுவாசிகளுக்காக ஜெபிப்போம். அவர்களையும் கர்த்தருடைய வார்த்தையினால் உற்சாகப்படுத்துவோம். பாடுகளையும், உபத்திரவங் களையும் எந்த மனப்பக்குவத்தோடு சந்திக்கிறேன்?

ஆண்டவரே, எங்களது தேசத்திலும் அகில உலகத்திலும் உமது நாமத்தினிமித்தம் துன்பப்படுகிறவர்களுக்காக வேண்டுகிறேன். ஆமென்.

கர்த்தரின் வருகை

> **இயேசு கிறிஸ்துவின் வருகைக்காய் ஆவலாய் காத்திருப்பவனே உண்மைக் கிறிஸ்தவன். எந்த நேரமும் வர இருக்கிற கிறிஸ்துவை எதிர்பார்த்து வாழ்பவன் உத்தம கிறிஸ்தவன்.**

எச்சரிக்கையாயிருங்கள் [வச.1-4]: கிறிஸ்து உடனடியாக வரப்போகிறார் என்று அவர்கள் நினைத்துக் கொண்டனர். ஆனால் இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்டு மோசம் போக வேண்டாமென பவுல் எச்சரிக்கிறார். பவுலின் நாட்களில் கள்ளப் போதகர்கள் அநேகர் இருந்தனர். அவர்கள் புதிய விசுவாசிகளைக் கலங்கப்பண்ணினர். சபையார் இப்படிப்பட்ட போதகர்கள் சொல்வதைக் கேட்டு குழம்பிப் போயிருந்தனர். விசுவாச துரோகத்தை ஏற்படுத்தக் கூடிய அந்தி கிறிஸ்து தேவனுடைய வார்த்தைக்கு எதிர்த்து நிற்கிறவனும் தன்னை உயர்த்துகிறவனும், தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனுமாய் இருப்பான். நாம் எச்சரிப்பாய் இருக்க வேண்டும்.

சத்தியத்தை நேசியுங்கள் [வச.9-12]: கடைசி காலங்களில் உண்மைக்கு விரோதமானக் காரியங்கள் அதிகரிக்கும்; பொய்யான அற்புதங்கள் நடைபெறும். உண்மையான அன்பு தணிந்துப்போம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் கர்த்தரின் வருகைக்காய் காத்திருக்கிற நாம் சத்தியத்தை நேசிக்க வேண்டும். பொய்யான வாழ்க்கையை மேற்கொண்டுள்ளவர்களை இனம் கண்டுக்கொண்டு அவர்களை விட்டுவிலகி தேவனுடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுப்போம்.

நிலைத்திருங்கள் [வச.13-17]: 'சகோதரனே' எனப் பலமுறை அழைத்த பவுல், இங்கு 'கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே' என அவர்களை அன்பாய் அழைக்கிறார். நாம் அன்பில் நிலைத்திருக்க வேண்டும். தேவன் நம்மைத் தெரிந்துக் கொண்டிருக்கிறார். நாம் நிலைத்திருக்க வேண்டுமானால் நாம் வேதத்தின் உபதேசங்களைக் கைக்கொண்டிருக்க வேண்டும். பாவத்தை வெறுத்து, வேதத்தை நேசித்து பரிசுத்த ஆவியானவரின் துணையோடு கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும். கொடியானது செடியில் நிலைத்திருப்பதுபோல நாம் கிறிஸ்துவில் நிலைத்திருந்து கனிக்கொடுப்போமாக (யோ.15:1-11படிக்கவும்). இவ்வுலகத்தின் ஈர்ப்புகள் நிமித்தம் கர்த்தரின் வருகையை மறந்து கடமைக்காக ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்கிறேனா?

கர்த்தாவே, உமது வருகைக்கு ஆயத்தப்படவும் மற்றவர்களை ஆயத்தப்படுத்தவும் உதவி செய்தருளும். ஆமென்.

மகத்துவமுள்ள தேவன்

> உம்மை அறிவதே நித்திய ஜீவன். உம்மை சேவிப்பதே மெய் சுயாதீனம்.

தேவனுடைய வார்த்தை (வச.1,2): தெசலோனிக்கே பட்டணத்திற்குப் பவுலும் அவரது சக ஊழியர்களும் கர்த்தருடைய வசனத்தை எடுத்துச் சென்றனர் (அப்.17:1-10). அது மிகுந்த பலனைத் தந்தது. அவர்கள் விசுவாசித்து ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் அவர்கள் மற்றவர்களுக்கும் சாட்சியாக மாறினர். இப்பொழுது பவுல் இந்த சுவிசேஷமானது அறிவிக்கப்படாத மற்ற இடங்களிலும் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்ற துடிப்போடு அவர்களை ஜெபிக்க வேண்டுகிறார்.

தேவனுடைய குணாதிசயங்கள் (வச.3): 'கர்த்தரோ' என பவுல் குறிப்பிடுகின்றார். நமது தேவனை தனிப்பட்டவிதத்தில் நாம் எவ்வாறு அறிந்திருக்கிறோம்? இது மிகவும் அவசியமானதாகும். தாவீது தேவனைக் குறித்ததான அறிவைப் பல சங்கீதங்களில் குறிப்பிட்டுள்ளார். அதில் சிலவற்றை பார்க்கவும் (சங்.18:1,2; 23:1; 91:2 பார்க்கவும்). நமது கர்த்தர் உண்மையுள்ளவர்: நம்மை தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுபவர். நம்மை பெலப்படுத்துகிறவர். வேத வசனத்தின் மூலம் தனிப்பட்ட விதமாக, குடும்பமாக, கிறிஸ்தவ ஐக்கியமாக தேவனை அறிந்துக்கொள்வோம்.

தேவனுடைய ஆசீர்வாதம் (வச.4,5): உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை மட்டும் தேவனிடத்திலிருந்து எதிர்பார்ப்போமானால் நாம் மிகவும் பரிதபிக்கப்படத்தக்கவர்கள் ஆவோம். கர்த்தர் உங்கள் இருதயங்களை தேவனைப் பற்றும் அன்பிற்கும், கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக என பவுல் எழுதுகிறார். ஆவிக்குரிய பிரகாரமாக தேவன் நம்மை ஆசீர்வதிக்க வேண்டும். முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்: அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடக்கொடுக்கப்படும் என இயேசு கிறிஸ்து கூறினார் (மத்6:33). ஆசீர்வாதங்களையல்ல அதை அள்ளித்தருகிற ஆண்டவரைப் பற்றிக் கொள்ளுவோம். "நீர் மாத்ரம்போதும், நீர் மாத்ரம்போதும் நீர் மாத்ரம்போதும் எனக்கு". என்று அழகாக பாடினால் மட்டும் போதாது. பாடலின் கருத்தை உணர்ந்து வாழ வேண்டும்.

இப்படிப்பட்ட மகத்துவமான தேவனாகிய உம்மை அறிவது எனக்கு கிடைத்த பாக்கியம். அதற்காக உம்மைத் துதிக்கிறேன் ஆண்டவரே! ஆமென்.

கண்ணியமான வாழ்க்கை

> கடமையை உணர்ந்து கட்டுப்பாட்டோடு கண்ணியமான வாழ்க்கையை ஓர் கட்டமைப்புடன் வாழ்வது ஒவ்வொரு விசுவாசியின் மேல் விழுந்த கடமையாகும்.

நேர்த்தியான நடக்கை [வச.6-9]: பவுல் தெசலோனிக்கே சபையாருக்கு தனது மற்றும் அவரது சக ஊழியர்களின் வாழ்க்கையை முன்மாதிரியாக வைத்து (1 தெச.2:1-12 பார்க்கவும்) அவர்கள் ஒரு நேர்த்தியான வாழ்க்கையை வாழும்படி அழைக்கிறார். "நீ யார் என்பது, நீ என்ன செய்கிறாய் என்பதை விட மிகமுக்கியமானது" என்று ஒரு தேவ பக்தன் கூறுகிறார். எனவே எனது நடத்தை சீரானதாக இருக்க இன்று நான் என்ன செய்யவேண்டும் என யோசிப்போம்.

வேலைக்கு முக்கியத்துவம் [வச.10-12]: இயேசு கிறிஸ்து திரும்ப சீக்கிரம் வந்துவிடுவார் என்ற எண்ணத்துடன் ஒரு சில விசுவாசிகள் வேலையே செய்யாமற் போய்விட்டனர். வேலைச் செய்ய மனதில்லாமல் இருந்தால் சாப்பிடவும் கூடாது என்று பவுல் அவர்களை எச்சரிக்கிறார். நான் என்ன செய்வது என்றே தெரியாத சோம்பேறிகளாய் இருந்தால் சாத்தான் நமக்கு வேலை கண்டுபிடித்துக் கொடுத்துவிடுவான். நமது மனங்கள் எப்பொழுதும் சுறுசுறுப்பாய் இயங்குபவை. நாம் எந்த நன்மையையும் செய்யாமல் சும்மா இருந்தால் விரைவிலேயே தீமை செய்வதில் மும்முரமாகிவிடுவோம். எனவே தேவன் நமக்கு கொடுத்துள்ள வேலையில் உண்மையும் உற்சாகமுமாய் செயல்பட வேண்டும். சோம்பேறியாய் இருக்கக்கூடாது.

சோர்ந்து போகாத வாழ்க்கை [வச.13-18]: நன்மை செய்வதில் சோர்ந்துப் போகாதிருங்கள் என பவுல் கலாத்தியா சபையாருக்கு (கலா.6:9 பார்க்கவும்) சொன்னதையே இங்கும் குறிப்பிடுகிறார். சுயநலத்துடன் நமது வாழ்க்கையையே பார்த்துக் கொண்டு இருப்போமானால் சோர்ந்துப் போவோம். ஆனால் மற்றவர்களுடைய வாழ்க்கையின் நலனுக்காக செயல்பட வேண்டும். அவனவன் தனக்கானவைகளை அல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக (பிலி.2:4) என பவுல் கூறுகிறார். அதுவே கிறிஸ்துவின் சிந்தையாகும். பரிசுத்த ஆவியானவரின் கனிகள் (கலா.5:22,23) நமது உறவுகளில் காணப்படும்போது உற்சாகமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வோம். தேவன் எதிர்பார்க்கிற அளவிற்கு எனது கிறிஸ்தவ வாழ்க்கை இருக்கிறதா? ஆராய்ந்துப் பார்ப்போம்.

ஆண்டவரே, படைப்பின் மகுடமாகிய நான் பொறுப்போடு என்னோடு படைக்கப்பட்ட உயிரினங்களை பாதுகாக்க அருள் தாரும். ஆமென்.

ஏழைக்கு இரங்குகிறவன்

சிறுமைப்பட்டவர்களை உதாசீனம் பண்ணுவதையும், கஷ்டப்படுத்துவதையும் நாம் காண்கிறோம்.

கர்த்தர் பாதுகாக்கிறார் [வச.1-3]: ஒருவன் ஏழையாயிருக்கிறான் என்பதினால் அவனை அலட்சியப்படுத்துவது அவனை உருவாக்கின தேவனை அலட்சியப்படுத்துவதற்குச் சமம். அவனுக்குள்ளும் தேவன் தந்த ஆத்துமா ஒன்று உண்டு என்பதை உணர வேண்டும். தேவன் கிருபையினால் தனி நபர்களை ஆசீர்வதிக்கிறார். அவர் நமக்குத் தந்த ஆசீர்வாதத்திலிருந்து தேவை உள்ளோருக்கு உதவி செய்வது நமது கடையாகும். அதை நாம் நிறைவேற்றும்போது அவர் நம்மைத் தீங்குக்கு விலக்கிவிட்டு, நமக்கு அடைக்கலம் தருகிறார். ஏற்ற வேளையிலே நம்மை உயர்த்துவார்.

கர்த்தர் குணமாக்குகிறார் [வச.4-10] : நம்முடைய தேவன் மனதுருக்கமுள்ள தேவன். இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே மனிதனாய் வாழ்ந்த நாட்களிலே ஏழைகளுக்கும், பாவிகளுக்கும், சிநேகிதர்களாக சுற்றித் திரிந்தார். சிறுமைப்பட்டவர்களை கர்த்தர் நேசித்து அவர்களை ஆசீர்வதிக்கிறார். அவர்களுடைய உபத்திரவங்களை நீக்கி அவர்கள் வியாதிகள் நீங்க சொஸ்தமாக்குகிறார். தாவீதினிடத்தில் நன்மை பெற்றவர்களும், அவனை தூஷிக்கின்றனர். அவர்கள் நன்மைக்கு பதிலாய் தீமைகளைச் செய்கிறார்கள். யோபுவின் வாழ்க்கையிலும் இப்படி நடந்தது.

கர்த்தர் பிரியமாயிருக்கிறார் [வச.11-13] : தாவீதின் நீதியுள்ள நடத்தையினிமித்தம் தேவன் அவனை எல்லா தீங்குக்கும் விலக்கி இரட்சித்து இஸ்ரவேலின் மேல் இராஜாவாக அபிஷேகம் செய்கிறார். தாவீதினுடைய நேர்மையான நடத்தையும் தேவனுடைய சித்தத்துக்கு முழுவதுமாக ஒப்புக் கொடுத்து தேவனை சார்ந்து வாழ்ந்த வாழ்க்கையுமே அவனது வெற்றிக்குக் காரணமாயிருந்தது. அவனுடைய கஷ்டங்கள், துன்பங்கள், வியாதிகள், தனிமையாக விடப்பட்ட நிலைமை, எதிராளிகளின் விரோதம், அனைத்துமே அவனுக்கு பயிற்சிக்களமாயிருந்தது. அவனை புடமிட்டு ஒரு பெரிய தேவனுடையத் திட்டத்திற்கு அவனை ஆயத்தப்படுத்தியது. கஷ்ட துன்ப நேரங்களில் கர்த்தர் கடந்து வந்த காலத்தில் செய்த நன்மைகளை நினைத்து அவருக்கு நன்றி செலுத்து.

ஆண்டவரே, நாங்கள் இந்த உலகிலே உண்மையாய் வாழ உதவி செய்து எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும். ஆமென்.

130 வயதிலும் ஓர் ஆரம்பம்!

உங்கள் சொந்த நாட்டை அல்லது ஊரை விட்டு வேறு இடத்திற்கு குடிபெயர்ந்த அனுபவம் உங்களுக்கு இருக்கிறதா?

கானானிலிருந்து எகிப்திற்கு பிரயாணப்பட்டு வந்த தன் தகப்பனையும் குடும்பத்தினரையும் பார்வோனிடம் யோசேப்பு அறிமுகம் செய்யும்போது யாக்கோபு தன் வாழ்க்கையைக் குறித்து என்ன சிந்தித்திருப்பார்?

ஆண்டவரின் வழி நடத்துதல் : தன் 130-வது வயதில் சொந்த இடத்தை விட்டு வேறு தேசத்திற்கு இடம் பெயர்வது என்பது யாக்கோபுக்கு குழப்பத்தையும் பயத்தையும் உண்டாக்கியது. மேய்ப்பர்கள் எகிப்தியருக்கு அருவருப்பானவர்கள் (ஆதி.46:34) என்ற எகிப்தின் சமுதாய நிலையை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஒருபுறம் (வச.2,6). மகனால்தான் செழிப்பான பகுதியில் குடியிருக்கும் வாய்ப்பு தகப்பனுக்குக் கிடைத்தது என்ற சங்கடமான உண்மை மறுபுறம். இதன் மத்தியில், தன் வாழ்க்கை 'கொஞ்சமும், சஞ்சலமுள்ளதுமாயிருக்கிறது' (வச.9) என்று யாக்கோபு பார்வோனிடம் கூறுவது, அவருடைய வாழ்வின் கசப்பான அனுபவங்களை நினைவுபடுத்துவதாக அமைகிறது. சூழ்நிலை எப்படியாயினும், யாக்கோபு பெயர்செபாவிலிருந்து புறப்படும் முன் ஆண்டவர் தன்னுடைய பிரசன்னத்தையும் வழிநடத்துதலையும் அவருக்கு வாக்குப்பண்ணியது (ஆதி.46:1-4) யாக்கோபுடைய புதிய ஆரம்பத்திற்கான அடித்தளமாக இருந்திருக்க வேண்டும்.

வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல் : படைபலம் மிக்க அடைக்கலம் கொடுத்த எகிப்தின் மன்னனான பார்வோனை பஞ்சம் பிழைக்க வந்த யாக்கோபு இரண்டு முறை ஆசீர்வதிப்பது (வசனம் 7,10) விநோதமான செயலாகத் தெரியலாம். இது வெறும் அறிமுக வாழ்த்து அல்ல. யாக்கோபின் குடும்பத்தினர் எகிப்தின் நன்மைகளை அனுபவிக்க பார்வோன் அனுமதிப்பது அவர்களை ஆசீர்வதிக்கும் செயலாக நாம் கருதினால், அதன் தொடர்ச்சியாக யாக்கோபு கொடுக்கும் ஆசீர்வாதம் 'உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை நான் ஆசீர்வதிப்பேன்' என ஆண்டவர் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையின் ஒரு பகுதியாகவே காணப்பட வேண்டும். யாக்கோபு எகிப்திலே சஞ்சரித்ததில் அந்த வாக்குத்தத்தத்தின் ஒரு பகுதி நிறைவேறுகிறது.

ஆண்டவரே, என் வாழ்வின் எல்லா நிலைகளிலும் நீர் என்னோடு இருப்பதற்காக நன்றி கூறுகிறேன், ஆமென்.

இரட்சகரின் நிழல்

வாழ்க்கையில் சோதனை வரலாம்... வரும்! ஆனால், சோதனையே வாழ்வாகிப்போனால் வாழ்வது எப்படி என்று அங்கலாய்க்கும் மக்களுக்கு உங்கள் பதில் என்னவாக இருக்கும்?

நாட்டைக் காக்கும் ஞானம் [வச.13-26]: பஞ்சத்தின் கொடுமையில் மக்கள் தவிக்கும்போது ஆட்சியிலிருக்கும் யோசேப்பு சந்தர்ப்பவாதியாக மாறி மக்களின் சொத்தை அபகரிக்கவில்லை.

சூழ்நிலையை சற்று கூர்ந்து கவனித்தால் சில உண்மைகள் நமக்குப் புரியும்: (1) உயிர் வாழ்வதற்காக தங்கள் பணம், ஆடுமாடுகள், நிலம் மற்றும் தங்கள் கையின் பிரயாசத்தையும் பார்வோனுக்குச் சொந்தமாக்கிவிடுவது, மக்கள் தாமாகவே முன்வந்து எடுத்த முடிவு. (2) யோசேப்பு அதிகாரத்தில் இருந்தும் சொத்தை விற்க எவரையும் கட்டாயப்படுத்தியதாகவோ அல்லது தானியத்தின் விலையை உயர்த்தியதாகவோ வேதத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. (3) மக்கள் எல்லாவற்றையும் பார்வோனுக்குக் கொடுத்திருந்தாலும் அடுத்த அறுவடைக்கு தயாராகும்படி விதைத் தானியம் கேட்பது பஞ்சம் முடிவுக்கு வரும் என்ற யோசேப்பின் வார்த்தையை அவர்கள் விசுவாசித்தார்கள் என்பதையே காட்டுகிறது. (4) நலத்திட்டம் என்ற பெயரில் இலவசங்களை வாரி வழங்காமல், மக்களின் உழைப்பை முக்கியப்படுத்தி, மிகக் குறைந்த வரியையே பார்வோனுக்குக் கொடுக்கச் செய்ததன் மூலம் மக்களின் கண்ணியத்தைக் காப்பாற்றினார். (5) எல்லாவற்றிற்கும் மேலாக, மக்களே அவரிடம் 'நீர் எங்கள் பிராணனைக் காப்பாற்றினீர்' (வசனம் 25) என்று சாட்சி பகர்ந்தார்கள். கர்த்தர் யோசேப்புக்கு நிர்வாக ஞானத்தைக் கொடுத்து ஆசீர்வதித்ததால் மக்கள் யோசேப்பை ஒரு இரட்சகராகவே கண்டார்கள்.

தந்தையின் மீதான பாசம் [வச.27-31]: மரித்தபின் தன்னைத் தன் பிதாக்களோடு அடக்கம் செய்யுமாறு யாக்கோபு கேட்பது தன் மக்கள் எகிப்திலிருந்து ஆண்டவர் வாக்குப்பண்ணின தேசத்திற்குத் திரும்பச் செல்வார்கள் என்ற விசுவாசத்தைக் காட்டுகிறது. யோசேப்பும் அதை நிறைவேற்ற ஆணையிட்டுக்கொடுக்கிறார். தன் செயல்கள் எல்லாவற்றிலும் இயேசு இரட்சகரின் நிழலாய் யோசேப்பு காணப்படுவது போல நாமும் வாழ வாஞ்சிக்கிறோமா?

தேவைகளை சந்தித்து, சோதனைகளை மேற்கொள்ள பெலன் ஈந்து, நம் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, பரம கானானுக்கு நம்மை வழிநடத்தும் ஆண்டவருக்கு நன்றி சொல்லுவோம். ஆமென்.

ஆதியாகமம் 48:1–22

கடந்து வந்த பாதைகளை எண்ணி...

இளம் வயதில் நீங்கள் அதிக பெருமிதம் அல்லது சோகம் கொள்ளும் விதத்தில் உங்கள் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வு எது? அவைகளைக் குறித்து இப்போது என்ன நினைக்கிறீர்கள்?

சர்வ வல்லமையுள்ள தேவன் : மரணத்தின் விளிம்பில் இருக்கும் யாக்கோபு தன்னைக் காணவந்த மகன் யோசேப்பிடம் தன் வாழ்க்கையின் அனுபவங்களிலிருந்து இரண்டு நிகழ்வுகளை முக்கியப்படுத்துகிறார். (1) ஏசாவின் ஆசீர்வாதங்களை ஏமாற்றிப் பெற்றுக்கொண்டு ஓடிப்போகும் சூழ்நிலையில் லூஸ் (பெத்தேல்) எனும் இடத்தில் கர்த்தர் அவனுக்குக் கிருபை செய்ததை நினைக்கிறார் (ஆதி. 28:13-15). (2) வாக்குத்தத்தத்தின் தேசத்திற்கு திரும்பும் சூழ்நிலையில் பெத்லகேமிற்கு அருகே தன் அன்பு மனைவி ராகேல், யோசேப்பின் தாய், மரித்துப்போனதை நினைக்கிறார் (35:16-20). இவ்விரண்டு நிகழ்வுகளுக்கு மத்தியில் யாக்கோபு தன் மாமன் லாபான் வீட்டில் கழிந்த 20 வருடங்களில் அவனுக்கு நேர்ந்த ஏமாற்றங்கள், துயரங்கள், பிரிவுகள் எல்லாம் அவன் மனதில் நிச்சயமாய் ஒரு கணம் தோன்றி மறைந்திருக்கும். கடந்து வந்த பாதைகள் கரடுமுரடானதாக இருந்தாலும், அவைகளினூடே தன்னை வழிநடத்திய ஆண்டவர் **'சர்வ வல்லமையுள்ள தேவன்'** (வசனம் 3) என்று யோசேப்புக்கு தெளிவுபடுத்துகிறார்.

தலைமுறைகளை ஆசீர்வதிக்கும் தேவன் : இந்த நினைவுகளோடு, தன் பிதாக்களாகிய ஆபிரகாமும் ஈசாக்கும் வழிபட்ட ஆண்டவரும், தன் வாழ்நாளெல்லாம் தன்னை ஆதரித்து, தீமைகளிலிருந்து தப்புவித்த தேவனுடைய நாமத்தினாலே யோசேப்பையும், அவன் பிள்ளைகளான மனாசே எப்பிராயீம் ஆகியோரையும் ஆசீர்வதிக்கிறார் (வசனம் 15,16). பேரப்பிள்ளைகள் இருவரையும் தன் மகன்களான ரூபன், சிமியோன் ஆகியோருக்கு இணையாக பாவித்து, அவர்களுக்குச் சேரவேண்டிய சொத்துக்கள் அவர்கள் வம்சமாகும்படி வாக்குப்பண்ணுகிறார். எப்பிராயீமை யாக்கோபு முதன்மைப்படுத்துவதின்மூலம் அவர்கள் பிற்காலத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு திரும்பும்போது ஆண்டவரின் இராஜரீகத் திட்டம் எவ்வாறு நிறைவேறும் என்பதை முன்னுரைக்கிறார். இளையவனை ஆண்டவர் தெரிந்துகொள்வது யோசேப்புக்கு ஒன்றும் புதிய அனுபவம் அல்லவே!

கடந்துபோன நாட்களில் ஆண்டவர் நம்மை அதிசயமாய் நடத்திய விதங்களை எண்ணி அவரைத் துதிப்போம். ஆமென்.

ஆசீர்வாதத்திற்கு பாத்திரவான்கள்

முன்னோர்களிடம் அல்லது பெரியவர்களிடம் ஆசி பெற்றிருக்கிறீர்களா? அவர்கள் கூறியதில் ஏதாவது ஒன்று உங்கள் வாழ்க்கையில் நடைபெற்றதா?

யாக்கோபின் பிள்ளைகள் கடந்த காலங்களில் வாழ்ந்த விதம் யாக்கோபின் ஆசீர்வாதத்திலும் முன்னறிவிப்பிலும் பெரும்பங்கு வகித்தது. இது அவர்களுடைய எதிர்காலத்திலும் நிறைவேறியது.

தீங்குக்கு வழி செய்வோர் : மூத்த மகன் ரூபன் தவறான நடத்தையால் (ஆதி.35:22) சேஷ்டபுத்திரபாகத்தை இழந்தான். மூர்க்க குணமுடைய சிமியோன், லேவி ஆகியோர் வம்சம் பலம் பெற்று அதிக தீமை செய்யாத படிக்கு இஸ்ரவேலருக்குள்ளே சிதறிப்போவார்கள். கடல் வணிகம் செய்த செபுலோன் வம்சத்தாரின் சீதோன் பகுதியில் பிற்காலத்தில் பாகால் வழிபாடு ஆரம்பமாகியது: அது ஆகாப் ராஜாவால் இஸ்ரவேலுக்கும் கொண்டு வரப்பட்டது (1இராஜா.16:31-33). 'கூலி' (அ) 'வெகுமானம்' என அர்த்தமுடைய இசக்கார் வழிவந்தவர்கள் மற்றவர்களுக்கு தங்களை அடிமைப்படுத்திக்கொள்வார்கள். நியாயம் விசாரிக்க திறமையுடைய தாண் வம்சத்தார் விக்கிரக வழிபாட்டில் வீழந்தார்கள் (நியா.18; 1இராஜா. 12:29-30).

மேன்மைக்கும் கிறிஸ்துவின் செயல்பாடுகளுக்கு மாதிரிகள் : காத் வம்சம் எதிரிகளை மடங்கடிப்பதிலும், ஆசேர் வம்சம் உணவுத் துறையில் சிறந்தவர்களாயும், நப்தலி வம்சம் நல்வார்த்தைகளை வசனிப்பவர்கள் ஆகவும் இருந்து இஸ்ரவேலுக்கு மேன்மையைக் கொண்டுவருவார்கள். யூதாவின் வம்சத்தில் இஸ்ரவேலை ஆளும் தாவீதின் இராஜ்யபாரம் தோன்றும்; பிற்காலத்தில் இந்த ஆவிக்குரிய தேவ ஆளுகை 'தாவீதின் குமாரனான' இயேசு கிறிஸ்துவில் நிறைவேறும். யோசேப்பின் வம்சம் சர்வ வல்லவரின் ஆசீர்வாதத்தோடு ஜெயமாய் வாழ்ந்து மக்களுக்கு அரணாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். பென்யமீன் கோத்திரத்தார் போர்வீரர்களாயிருந்து பாதுகாப்பார்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை உன்னதங்களிலே ஆசீர்வதித்திருக்கிற தேவனுக்கு முன்பாக நாம் எப்படி வாழுகிறோம்? நம் தலைமுறைகள் ஆண்டவரின் நாமத்துக்கு மகிமையைக் கொண்டுவருகிற மக்களாக உருவாக ஜெபத்தோடு செயல்படுகிறோமா?

நாம் வாழும் வாழ்க்கை நம்மை மாத்திரமல்ல, நம் தலைமுறைகளையும் பாதிக்கிறது என்பதை உணர்ந்து ஆண்டவருக்கு மகிமையாய் வாழுவோம். ஆமென்.

நிலையான நம்பிக்கை

> ஒரு தாளில் உங்கள் வயதை எழுதுங்கள்; நீங்கள் வாழ்ந்து முடித்துள்ள இத்தனை வருட வாழ்வின் சுருக்கத்தை அல்லது சாராம்சத்தை 20 அல்லது 30 வார்த்தைகளில் எழுத முயற்சியுங்கள்.

வேத புஸ்தகம் நித்திய ஜீவனைப் பற்றிய புஸ்தகம். இதில் மனிதர்களின் மரணத்தைப் பற்றி குறைவாகவே வாசிக்கிறோம். ஆபிரகாம், ஈசாக்கு, யோசேப்பு ஆகியோர் மரணத்தைப்பற்றி மிகச் சுருக்கமாகக் குறிப்பிடும் வேதாகமம், யாக்கோபின் மரணத்தை ஏறக்குறைய 72 வசனங்களில் விவரிப்பது ஒரு மேன்மையான காரியம் (ஆதி. 47-50).

எங்கு செல்வது - சொந்த நாட்டிற்கா, நித்திய வீட்டிற்கா? : தன்னைக் கானான் தேசத்திலே அடக்கம் செய்ய வேண்டும் என யாக்கோபு கூறியதன் மூலம் தன் முற்பிதாக்களுக்கும் தனக்கும் ஆண்டவர் அருளிய வாக்குத்தத்தத்தின் மேலுள்ள விசுவாசத்தை வெளிப்படுத்துகிறார். அந்த வாக்குத்தத்தம் உண்மையாக நிறைவேறும் என்பதற்கு சாட்சியாக மேசியா பிறக்கப்போகும் தேசத்திலே, நித்திய வீட்டை எதிர்நோக்கும் விதத்தில், தன்னுடைய அடக்கம் இருக்கவேண்டும் என விரும்புகிறார். அவ்வாறே, குடும்பத்தின் மக்களும் எகிப்தின் அதிகாரிகளும் பெருந்திரளாய் சென்று நாடே வியக்கும் அளவில் கானானில் அடக்கம் செய்தனர். என்ன ஒரு சாட்சி!

எது முக்கியம் - என் விருப்பமா, தேவ சித்தமா? : யாக்கோபு (எத்தன்), இஸ்ரவேல் (தேவனோடு போராடுகிறவன்) என இரண்டு பெயர்களுக்குரிய மனிதனின் வாழ்க்கை ஒரு தொடர் போராட்டமாகவே இருந்தது. (இஸ்ரவேல் இன்றும் போராட்டக்களம்தானே!) தன் அதீத தன்னம்பிக்கையின் விளைவாக அவன் அநேக தோல்விகளை சந்தித்து இருந்தாலும், தேவனுடைய நிலையான ஆசீர்வாதத்தின்மேல் வாஞ்சை கொண்டிருந்த விசுவாச வீரனாக இருந்தான். தன் விருப்பங்களையெல்லாம் தேவ சித்தத்திற்கு அவன் ஒப்புக்கொடுத்தபோது அவன் பலவீனம்கூட பலமாய் மாறியது. கருவறை முதல் கல்லறைவரை பாவத்தோடு போராடுகிறோம். இப்போராட்டத்தின் மத்தியில் நாம் மாம்சத்தில் நம்பிக்கை வைக்காமல் ஆண்டவரையே விசுவாசித்து வாழ பரிசுத்த ஆவியானவரின் உதவியை நாடுகிறோமா?

கர்த்தாவே, 'என் சித்தம் அல்ல, உம் சித்தமே' (லூக்கா 22:42) என்ற ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மாதிரியை நான் என் வாழ்விலும் சாவிலும் பின்பற்ற தேவனே எனக்கு பெலன் தாரும். ஆமென்.

விசுவாச வாழ்வின் மரபு

உங்கள் வீட்டில் உங்கள் முன்னோர் விட்டுச்சென்ற பொருட்கள் ஏதாகிலும் இருக்கின்றனவா? அவைகள் உங்களுக்கும் உங்கள் முன்னோருக்கும் உள்ள தொடர்பை எவ்வாறு தெரிவிக்கிறது?

முழுமையான மன்னிப்பு : யாக்கோபு இறந்தபிறகு, ஆட்சி பீடத்திலிருக்கும் தங்கள் சகோதரன் பழிவாங்க நினைத்து தங்களைக் கொன்று போடுவானோ என யோசேப்பின் சகோதரர்கள் பயப்படுகிறார்கள். சில வேளைகளில் மன்னிப்பதை விட அந்த மன்னிப்பை ஏற்றுக் கொள்வது தான் கடினமாக இருக்கிறது. ஆனால், ஆச்சரியப்படத்தக்க விதமாய், யோசேப்பு அவர்களின் துரோகத்தை மன்னித்ததோடு, அவர்களைத் தொடர்ந்து பராமரிக்கவும் உறுதியளித்து, அன்பாய்ப் பேசினான் (வச.20-21). இதுவே முழுமையான மன்னிப்புக்கு அடையாளம். நாம் தகுதி அற்றவர்களாக இருந்தாலும் கர்த்தர் கிருபையாய் நம்மை ஏற்றுக் கொள்கிறார் என்ற உண்மையை யோசேப்பின் செயலில் காண்கிறோம். கல்வாரியில் சிந்தப்பட்ட இரட்சகரின் பரிசுத்த இரத்தத்தில் நம் பாவங்கள் கழுவப்பட்டு நாம் இரட்சிப்படைந்திருக்கிறோம் என்பது உண்மையானால், நாமும் மற்றவர்களை மன்னிக்க முன்வரவேண்டும்.

நன்மைக்கேதுவான தீமை : சகோதரர்களின் துரோகம், போத்திபார் மனைவியின் தவறான குற்றச்சாட்டு, தவறே செய்யாமல் சிறைவாசம், பானபாத்திரக்காரனின் புறக்கணிப்பு, ஏழு ஆண்டுகளாக வாட்டி வதைத்த பஞ்சம் போன்ற தீங்குகளின் மத்தியிலும் நன்மையைக் காணச்செய்ய கர்த்தர் வல்லவராயிருக்கிறார் என்பதே யோசேப்பின் வாழ்வின் அனுபவமாயிருந்தது. நம் வாழ்வின் சோதனையான நேரங்களில் ஆண்டவரின் சித்தம் என்ன என சிந்திக்கிறோமா?

உண்மையாகும் வாக்குத்தத்தம் : யோசேப்பு மரிக்கும்போது, தன் தகப்பனின் விசுவாசத்தில் உறுதியாக இருந்து, எகிப்தில் இருந்து அவர்கள் சந்ததியினர் கானானுக்குச் செல்லும் நாள் வரும்போது தன் எலும்புகளையும் கொண்டுசெல்ல வேண்டும் என ஆணையிடுவித்துக் கொண்டான். இதன் மூலம், தேவன் வாக்குப்பண்ணியதை நிச்சயம் நிறைவேற்றுவார் என்ற உறுதியான விசுவாசத்தை பின் சந்ததிக்கு யோசேப்பு வைத்துச் செல்கிறார். நாம் நம் பிள்ளைகளுக்கு வாழ்வின் மரபாக எதை வைத்துவிட்டுப் போவோம்?

ஆண்டவரே, என் விசுவாச வாழ்க்கையின் மூலம் என் பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்படும்படியாக விசுவாசத்தில் உறுதியாக நான் வளரவும் அவர்களை வளர்க்கவும் உதவி தாரும். ஆமென்.

முதலாவது தேவனைத் தேடு

நமக்கு வரும் துன்பங்களில் நாம் ஜெபிக்காவிட்டால் நாமே அத்துன்பங்களை பன்படங்காக்குகிறோம்.

கர்த்தரை நம்புங்கள் : தாவீது வாழ்கையிலே ஆண்டவரைத் தேடுவதும், அவரைத் துதிப்பதும் ஒரு தினசரி அனுபவமாக இருந்தது. நாம் கர்த்தரை நம்பி வாழும்போது கர்த்தர் அனுமதிக்காத ஒன்றும் நமது வாழ்க்கையில் வராது என்று எண்ணி இன்னும் அதிகமாக ஆண்டவரிடத்தில் கிட்டி சேர வேண்டும்.

ஆண்டவரை நினை : வாழ்க்கையிலே வியாதிகள் துன்பாங்கள் இழப்புகள் ஏற்படும் போது மனம் தோய்ந்து போகிறது. யோனா தீர்க்கதரிசி ஆண்டவருடைய சித்தத்துக்கு மாறாக செயல்படுகிறான். மீனின் வயிற்றிலிருந்து தேவனாகிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம் செய்தான். தேவன் அவன் சத்தத்தைக் கேட்கிறார்.

கைவிடாத தேவன் : இக்கட்டான சூழ்நிலைகளிலும் கர்த்தரின் வல்லமையும், அவருடைய மகத்துவத்தையும் தாவீது அறிந்திருந்தான். ஆனாலும் தனது நிலைமையைக் காணும் மற்றவர்கள் தன்னுடைய தேவனாகிய கர்த்தரைப் பழித்துவிடக்கூடாதே என்று கவலைப்பட்டான்.

நமக்காக வழக்காடுவார் : நாம் கர்த்தருக்குப் பிரியமாக நடந்து செல்லும் போது நாம் சந்திக்க நேரிடும் அனைத்து காரியங்களிலும் கர்த்தர் நமக்காக அரணாயிருப்பார். எதிரிகளிடமிருந்து நம்மைக் காப்பார். நீதிமானுக்கும், துன்மார்க்கனுக்கும் வித்தியாசம் காண்பிப்பார்.

நீதியின் பாதை : கர்த்தருடைய வசனத்தைக் கேட்டால் மட்டும் போதாது. அவைகளை நமது இதயத்திலே பதித்து வைக்க வேண்டும். அப்பொழுது நாம் கர்த்தரின் பார்வைக்கு உண்மையானவர்களாகக் காணப்படுவோம்.

வேளைக்காக காத்திரு : நாம் தேவனுக்குப் பிரியமாக வாழுபவர்களாக இருந்தாலும் துன்பம் வரும் வேளையில் தேவனைத் துதித்துப்பாடி பொறுமையாய் சகிக்கும் போது தேவன் எல்லாத் துன்பங்களையும் நீக்கி இரட்சிப்பார். தேவன் தம்முடைய பிள்ளைகளை ஒரு போதும் கைவிடார். தேவன் தமது பிள்ளைகளைக் காப்பார் என்பதை நீ அறிந்திருக்கிறாயா?

ஆண்டவரே, நான் உம்முடைய வசனத்தின்படி என் இருதயத்தைக் காத்துக் கொள்ளவும், இந்த உலகத்தை மேற்கொள்ளவும் உதவி செய்யும். ஆமென்.

மாற்கு 11:12–19

அத்தியும் பத்தியும்

நாதா ஜீவன் சுகம் தந்தீர் நாடி வந்த மாந்தர்க்கு; இன்றும் ஜீவன் சுகம் ஈவீர் நோயால் வாடுவோர்க்கு.

அத்திமரத்தினருகில் இயேசு [வச.12-14] : இயேசு அத்தி மரத்தினருகில் வரும்போது பசியைப் போக்க கனியைத் தேடினார். அத்திப்பழ காலமாயிராதபடியினால் இலைகளையன்றி கனி இல்லாதிருந்தது. எனவே அதனை சபித்தார். அத்தி மரத்தில் இலைகள் மட்டுமன்றி கிளைகள், தண்டு, அடிமரம், வேர்கள் ஆகிய யாவும் இருந்தன. இக்கால சபை பிரிவுகள், நிறுவனங்கள் பலவற்றில் பணம், மக்கள் பலம், செல்வாக்கு ஆகியவை காணப்படுகின்றன. ஆனால் ஆவியின் கனிகள் இல்லை. புதிய ஆத்துமாக்களை கிறிஸ்துவிடம் சேர்க்கும் பணியும் இல்லை. உதடுகளின் பலியாகிய நன்றியரிவிப்பும் இல்லை. ஆவியின் கனிகள் இல்லாத கிறிஸ்தவ வாழ்வு சாபத்திற்குரியது. நாம் சபிக்கப்பட்ட அத்திமரத்தைப் போல் இல்லாமல் கனிக்கொடுப்பவர்களாக மாறுவோம்.

ஆலயத்தில் இயேசு [வச.15-17] : எருசலேம் தேவாலயம் வியாபார ஸ்தலமாக மாறியிருந்த அநீதியை இயேசு கண்டு கோபமடைந்தது சரியே. இக்காலத்தில் வாழும் கிறிஸ்தவர்களுக்கு கர்த்தரின் கண்டிப்பு நிச்சயம் தேவைப்படுகிறது. திருச்சபை ஊழியம், ஊழிய நிறுவனங்கள் இன்று வியாபார மயமாக்கப்பட்டு வருகின்றன. தம்மை அவமதித்தவர்கள் மீதும் சிலுவையில் அறைய காரணமாயிருந்தவர்கள் மீதும் இயேசு கோபமடையாமல் ஆலயத்தை தவறாக பயன்படுத்தியதைக் கண்டு கோபமடைந்தார். நாம் கோபப்படுவது தவறல்ல. ஆனால் எதற்கு கோபப்படுகிறோம் என்பது முக்கியம்.

ஆசாரிகள் மத்தியில் இயேசு [வச.18,19] : தேவாலயத்தின் மக்களை ஏமாற்றும் வணிகத்தை இயேசு நியாயமாய் கண்டித்தாலும் அவருடைய அதிகாரமுள்ள வார்த்தைகளை கண்டும் இயேசுவைக் கொலை செய்வதற்கு வகை தேடினர். இயேசுவானவரின் போதனைகளும் கண்டிப்பான நடவடிக்கைகளும் தொழுகைக்கு வந்த மக்களுக்கு வியப்பையும் வேதபாரகர்களுக்கும் பிரதான ஆசாரியனாகிய காய்பாவுக்கும் கோபத்தை உண்டாக்கியது. சிட்சையை ஏற்றுக்கொள்கிறவன் தேவனுடைய புத்திரர் என்பது வேத உண்மை.

ஆண்டவரே, உம் மீதுள்ள நம்பிக்கை பெருக உதவி செய்யும். ஆமென்.

விசுவாச தொனி

ஆதியில் இருளை அகற்றி ஒளியை படைத்த நீர், உம் சுவிசேஷத்தை கேளாத தேசத்தை கண்ணோக்கி கர்த்தாவே, பிரகாசிப்பீர்.

விசுவாசமுள்ளவர்களாயிருங்கள் (வச.22): இயேசு சபித்த அத்தி மரம் பட்டுப்போனதை பேதுரு இயேசுவிடம் கூறியபோது, விசுவாசத்துடன் கூறும் சொற்களுக்கு உள்ள ஆற்றலை இயேசு விளக்கினார். நாம் கூறுவது நடக்கும் என்று முற்றிலும் நம்பவும் எதிர்பார்க்கவும் வேண்டும். நாம் ஜெபிக்கும்போதும் முழு விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும். மத்.21:22 படி விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளை கேட்பீர்களோ அவைகளை பெறுவீர்கள் என்று நாம் முழுமையான விசுவாசத்தோடு நம் விண்ணப்பங்களை அவரிடம் கேட்கும்போது நிச்சயம் பதிலுண்டு.

விசுவாச வார்த்தைகளை பேசுங்கள் (வச.23,24): நாம் சந்திக்கும் பிரச்சனைகள் மலையைப் போல நம்மை கலங்க வைத்தாலும் இயேசுவின் நாமத்தினாலே விசுவாசத்துடன் ஜெபிக்கும்போது நிச்சயமாக அற்புதங்களை காண்போம். விசுவாசத்தின் அளவு அல்ல, விசுவாசத்தின் தரம்தான் முக்கியம். விசுவாசம் வேத வசனத்தை படித்து அதன்படி நடப்பதினால் வரும்.

மன்னியுங்கள் (வச.25,26): நமது ஜெபங்கள் கேட்கப்படுவதற்கு முக்கிய மான ஒரு நிபந்தனை உண்டு. எல்லோருக்கும் மன்னிப்பு கிடைப்பதில்லை. மற்றவர்களுக்கு மன்னிக்கிறவர்களுக்கும் தங்கள் பாவங்களை மறைக் காமல் தேவனிடம் அறிக்கையிட்டு, விட்டுவிடுகிறவர்களின் ஜெபங்களுக்கு மட்டுமே மன்னிப்பு உண்டு. நமது தவறுகள் யாவற்றையும் தேவன் நமக்கு மன்னிப்பது போல நாமும் பிறருடைய தவறுகளை மன்னிப்போம். தென் பகுதியின் கிராம சபை ஒன்றில் மரியான் உபதேசியாரிடம் முக்கியஸ்தர் ஒருவர் மனஸ்தாபம் கொண்டதினால் கர்த்தருடைய பந்தி நடக்கிற அன்று அவர் கலந்துக்கொள்ளவில்லை. எனவே மரியான் அவர்கள், முக்கயஸ்தர் வீட்டிற்கு சென்று கர்த்தரின் பந்திக்கு அவரை வரும்படி கண்ணீரோடு அழைத்தார். இந்த நிகழ்ச்சியின்போது உபதேசியார் “கர்த்தரின் பந்தியில் வா சகோதரா கர்த்தரின் பந்தியில் வா” என்ற பாடலை பாடினார்.

பிதாவே, இவர்களுக்கு மன்னியும் என்று கூற என்னை தகுதிப்படுத்தும்.

மாற்கு 11:27-33

தர்க்கம் செய்தவர்கள்

> **வாழ்க்கையில் ஒளி ஏற்றப்பட்டது பிறருக்கு ஒளியாக வாழவே!**

இயேசு எருசலேம் தேவாலயத்திற்கு வந்திருந்தபோது ஆலயத்தை பராமரித்து வந்த யூதத் தலைவர்கள் விவாதத்தில் ஈடுபட்டனர். 12 வயதில் யூதத் தலைவர்களோடு விவாதித்த இயேசு 33வது வயதிலும் விவாதத்தை சந்தித்தார்.

இயேசுவின் அதிகாரம் [வச.27-28]: இயேசுவின் வாழ்க்கையிலிருந்த பரிசுத்தம், அவர் செய்த அற்புதங்கள், அவர் சொற்களில் இருந்த அதிகாரம், அவரிடம் கேட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் இவை யாவற்றையும் தெரிந்தவர்கள், இந்த அதிகாரம் இயேசுவுக்கு எப்படி வந்தது என்று கேட்க வேண்டிய அவசியம் இல்லை. இருப்பினும் இந்த யூத தலைவர்கள் இயேசுவை மேசியா என்று நன்கு தெரிந்திருந்தும் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். இயேசு தேவாலயத்தில் அநியாயமாக நடந்த வணிகத்தைக் கண்டித்து அதில் ஈடுபட்டவர்களை துரத்தியபோது, அங்கிருந்த வணிகர்கள், மக்கள், ஆலயப் பணியாளர்கள், தலைவர்கள் இயேசுவை தடுத்து நிறுத்தவில்லை. அதற்கு பதிலாக இவற்றை செய்ய இயேசுவுக்கு அதிகாரம் கொடுத்தவர் யார் என்றே கேள்வி எழுப்பினர்.

யோவான் ஸ்நானனின் ஊழிய அதிகாரம் [வச.30-33]: பிதாவாகிய தேவனே இயேசுவுக்கு இந்த அதிகாரத்தை கொடுத்துள்ளார் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தினர் (யோ.3:2). யோவான் ஸ்நானகனை பற்றியும் அவர்களுக்கு நன்கு தெரியும். ஆனால் உண்மையைக் கூற அவர்களுக்கு விருப்பம் இல்லை. இதனால் இயேசுவும் அவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க மறுத்துவிட்டார். இந்த யூதத் தலைவர்கள் தங்களுக்கு தெரியாது என்று கூறியது பொய்யாகும். இக்கால சூழ்நிலையில் தலைவர்கள் பொய்யுரைப்பதும் சூழ்நிலைக்கேற்றவாறு பேசுவதும் வேதனைக்குரியது. ஜென்ம சுபாவமுள்ள மனுஷன் தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான் (1 கொரி. 2:14) என்று வேதம் நமக்கு விளக்குகிறது. நம்முடைய ஜென்ம சுபாவமான தவறுகள் நம்மைவிட்டு விலக்குவதற்கு ஆண்டவரின் உதவியை அணுகுவோம்.

இயேசுவே துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலிருக்க எனக்கு உதவி செய்யும்.

பொல்லாப்பு

பிதாவே நீர் எதிர்பார்க்கும் வாழ்வை நான் வாழ்கிறேனா?

இயேசுவானவர் யூதத் தலைவர்களின் குணாதிசயங்களை திராட்ச தோட்ட உவமையின் மூலமாக உணர்த்தி காட்டினார். ஆனால் அவர்களுக்குள் மனந்திரும்புதல் உண்டாகாமல் இயேசுவை கொலை செய்ய திட்டமிட்டார்கள்.

பிதாவின் எதிர்பார்ப்பு (வச.1-2):- திராட்ச தோட்டத்தை உண்டாக்கி குத்தகைக்காரரிடத்தில் ஒப்புவித்து தோட்டத்தின் பலனை பெற்றுக் கொள்ள ஊழியர்களை, தனது குமாரனை அனுப்பிய போது அவர்களை அடித்தார்கள், கொன்றார்கள். திராட்ச தோட்டத்தை உண்டாக்கியவர் பிதாவாகவும், திராட்ச தோட்டம் யூதர்களாகவும், குத்தகைதாரர் யூத தலைவர்களாகவும், ஊழியர்கள் தீர்க்கதரிசிகளாகவும், குமாரன் இயேசு கிறிஸ்துவாகவும் குறிக்கப்படுகிறார்கள். நம்மை உண்டாக்கிய கர்த்தர் நம்மிடத்திலிருந்து நல்ல கனிகளை எதிர்பார்க்கின்றார் (ஏசா. 5:4) நாம் அதிக கனிகளை, மிகுதியான கனிகளை கொடுக்கும்படி நம்மை ஆசீர்வதிக்கிறார் (யோ. 15:2,5).

யூதத் தலைவர்களின் பொல்லாப்பு (வச.3-8):- மத்தேயு 23ஆம் அதிகாரத்தில் யூதத் தலைவர்களின் பொல்லாப்புகளையும், நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்திற்கும் நடுவே நீங்கள் கொலை செய்த சகரியாவின் இரத்தத்தையும் சிந்தியிருக்கிறீர்கள். குமாரனாகிய இயேசுவையும் கொலை செய்யப் போகிறார்கள் என்பதையும் உணர்த்திக் காட்டினார். மனிதர்களின் சுபாவங்களைக் கண்டு கர்த்தர் மனஸ்தாபப் பட்டார் என ஆதி.6:6ல் வாசிக்கிறோம்

பவுலின் நியாயத்தீர்ப்பு (வச.9-12):- திராட்ச தோட்ட எஜமான் குத்தகைக்காரர்களாகிய யூதர்களிடமிருந்து இரட்சிப்பை புறஜாதிகளுக்கு ஒப்புவிப்பதை காண்கிறோம் (12:10). நீங்கள் தள்ளியிருக்கிற மூலைக் கல்லாகிய இயேசுவே இரட்சகர் என்பதை உணர்த்தி காண்பித்தார். அவராலேயன்றி (கிறிஸ்துவாலேயன்றி) வேறு ஒருவராலும் இரட்சிப்பு இல்லை (அப். 4:12) என்பதை உணர்ந்து கொள்வோம்.

இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப் படுவீர்கள் என் வார்த்தையின்படி குடும்பமாக எங்களையும் இரட்சியும் கர்த்தாவே!

நவம்பர் 18
வெள்ளி

மாற்கு 12:13-17

வரி

> எல்லாரையும் பகைக்காது எல்லாரிடமும் அன்பு பாராட்ட வேண்டும்.

யூத தலைவர்கள் இயேசுவை வார்த்தையில் குற்றம் காண பரிசேயர் மற்று ஏரோதியரிலும் சிலரை அனுப்பினார்கள். ரோம இராயனுக்கு வரி செலுத்துவதை குறித்து விவாதத்தை ஏற்படுத்தி அவரின் உத்தரவை கேட்டு ஆச்சரியமடைந்தார்கள்.

பரிசேயர்களின் வஞ்சகம் [வச.13]: நாம் வாழும் வாழ்க்கையில் நல்லவர்களை போன்று நடித்து நம்மை ஏமாற்றுகிறவர்கள் உண்டு. ஆவியானவரின் உதவியால் இப்படிப்பட்டவர்களை அடையாளம் கண்டுக்கொள்வது அவசியமாகும். நமக்கு முன்பாக நம்மை புகழுகிறவர்களைக் குறித்து கவனமாயிருப்போமாக. இயேசுவைக் குறித்து இவர்கள் கூறிய யாவும் உண்மைதான். இந்த உண்மையை அவர்கள் அறிந்திருந்தாலும் இயேசுவை ஏற்றுக்கொள்ளவோ அவருக்கு கீழ்ப்படியவோ அவரை பின்பற்றவோ அவர்களுக்கு விருப்பமில்லை. இயேசுவானவர் ஏரோதின் புளித்த மா, பரிசேயருடைய புளித்த மாவைக் குறித்தும் (புளித்த மா - மாய்மாலமான வாழ்வு, பொல்லாப்பு) எச்சரிக்கையாயிருங்கள் என போதித்தபடியால் இவர்களும் இயேசுவை எதிர்த்தார்கள்.

இராயனுக்கு வரி செலுத்துதல்: அக்காலத்தில் நில வரி, வருமான வரி மற்றும் 14 வயதிற்கு மேற்பட்ட மனிதர்கள் ஒவ்வொருவரும் வரி செலுத்துவது கட்டளையாயிருந்தது. இதனை மனதில் வைத்துக்கொண்டு பரிசேயரும் ஏரோதியரும் இயேசுவினிடத்தில் வந்து ரோம பேரரசுக்கு வரி கொடுக்கலாமா, கொடுக்கக்கூடாதா என்ற கேள்வியை வைத்தார்கள். இராயனுக்கு வரி கொடுப்பது நியாயம் என்று கூறினால் யூதர்கள் யாவரும் இயேசுவை துரோகியாக கருதுவார்கள். நியாயமல்ல என்று கூறினால் மரணத் தண்டனையை வாங்கித் தரலாம் என்று ஆலோசித்தார்கள். எப்படி பதில் அளித்தாலும் சிக்கல் உண்டாக்கும் வகையில் கேள்வியைக் கேட்டனர். ஆனால் இயேசுவோ மிகுந்த ஞானமாக பதிலளிக்கிறார். வச. 25ன் படி நாமும் ஆலயங்களுக்கு தசம பாகம் செலுத்துவதோடு மட்டுமல்லாமல் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய நியாயமான வரிகளையும் செலுத்துவதற்கு நாம் தயங்கக்கூடாது.

கர்த்தாவே, ஞானமுள்ள இருதயத்தை எனக்கு தந்தருளும்.

மாற்கு 12:18–27

மரித்தோரின் உயிர்த்தெழுதல்

கிறிஸ்து எழுந்திராவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; 1 கொரிந்தியர் 15:17.

அந்நாட்களில் யூதர்களில் ஒவ்வொரு பிரிவினரும் இயேசுவினிடத்தில் தாங்கள் நம்பிக்கையை வெளிப்படுத்தியபோது வேதத்திலுள்ள சரியான உபதேசத்தை அவர்களுக்கு விளக்கிக் காண்பித்தார். சதுசேயர்கள் தாங்கள் நம்பிக்கையை வெளிப்படுத்தி தர்க்கம் செய்தபோது இயேசு தகுந்த வார்த்தையினால் விளக்கி காண்பித்தார்.

சதுசேயர்[வச.18]: இவர்கள் தாவீதின் காலத்தில் பிரதான ஆசாரியராயிருந்த சாதோக்கின் வழிவந்தவர்களும் (2 சாமு.8;17) எருசலேமில் ஆசாரியர்கள், பிரதான ஆசாரியராக பணியாற்றி வந்தனர். மோசேயின் கற்பனைகளை கடைப்பிடித்து வந்தார்கள். யோவான் ஸ்நானன் மனந்திரும்புதலை குறித்து பிரசங்கித்துக் கொண்டிருந்த போது, விரியன் பாம்புக் குட்டிகளே என பிரசங்கித்தார் (மத்.3:7). பலவிதமான நம்பிக்கை பெருகி வருகிற இக் காலங்களில் நாம் இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர்ச்சியடைய வேண்டும் (2 பே.3:17).

சதுசேயரின் நம்பிக்கை [வச.19-23]: மரித்தோரின் உயிர்த்தெழுதல், தேவ தூதர்கள் மற்றும் ஆவி பற்றிய நம்பிக்கை இல்லாதவர்களாய் (அப்.23:8) இயேசுவினிடத்தில் வந்து, ஒரு மனிதன் ஒரு பெண்ணை திருமணம் செய்து குழந்தையில்லாமல் மரித்துப் போனான். எனவே அக்குடும்பத்தில் அது போல புத்திர சந்தானமில்லாமல் அவளும் ஏழு பேரை திருமணம் செய்து மரித்துப் போனாள். உயிர்த்தெழுதலில் அவள் இவ்வேழுபேரில் யாருக்கு மனைவியாயிருப்பாள்? என கேள்வி எழுப்பினார்கள்.

இயேசுவின் மறுமொழி [வச.24-27]: மரித்தோர் உயிர்த்தெழும்போது அவர்கள் விண்ணகத் தூதரைப்போல் இருப்பார்கள். அவர்கள் உலக வாழ்வு அறியார்கள். நான் மரித்தோருக்கு தேவனாயிராமல் ஜீவனுள்ளோருக்கு தேவனாயிருக்கிறேன் என்றும், பின்னும் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மரித்தும் பரலோகிலிருப்பதாக மத்.8:17ல் வாசிக்கிறோம். சதுசேயர் நியாயப் பிரமாணத்தை சரியாக அறியாமல் தவறான அர்த்தம் கொள்வதை உணர்த்தினார். நாமும் மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்படுவோம் (1 கொரி. 15:20-23).

கர்த்தாவே, நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழும்ப கிருபை தாரும்.

சங்கீதம் 44

யுத்தம் செய்கிற கர்த்தர்

கர்த்தர் நம் பக்கத்திலிருந்தால் நிச்சயம் நாம் பயப்படத் தேவை இல்லை

துதி செய் : நம்முடைய வாழ்க்கையிலே கர்த்தர் கிருபையாய் செய்த நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் நாம் பெரிதாக எண்ணுவதில்லை. ஏதோ அவைகள் தானாகவே கிடைத்தவைகள் என நினைத்திருக்கிறோம். ஆண்டவரை துதிக்க மறந்துவிடுகிறோம். தாவீது தனக்கு ஆயிரம் நாவுகள் இருந்தாலும் ஆண்டவரின் கிருபைகளையும் மேன்மைகளையும் துதித்துப் பாட முடியாது என கூறுகின்றான்.

நமக்கு வெற்றி : சவுல் ஆண்டவரால் அபிஷேகிக்கப்பட்ட ராஜா. அவன் நிலைவரப்பட்ட போது ஆண்டவர் தனக்கு செய்த நன்மைகளையும் தனக்கு கொடுத்த வெற்றிகளையும் பெரிதாக கொள்ளாது தனது பெலத்தினால், படைகளின் பெலத்தினால் கிடைத்த வெற்றி என பெருமை கொள்ளுகிறான். கர்த்தருடைய ஆவி அவனிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டு அவன் பல தோல்விகளை சந்திக்க நேரிடுகிறது. இந்த பகுதியிலே தாவீது தனது தாழ்வின் நேரத்திலும் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கவில்லை. அவருடைய வழிகளை விட்டு விலகவுமில்லை. கர்த்தரை மறுக்கவில்லை.

கர்த்தர் துணையாயிருக்கிறார் : இஸ்ரவேல் மக்களை தேவன் நாற்பது வருடங்கள் வனாந்திர வழியாய் நடத்தினார். கர்த்தர் அவர்களை பார்வோன் கையினின்று மீட்டு வழியில் கடந்து வந்த பாதையில் அநேக இராஜாக்களின் கையினின்று பாதுகாத்து கானானுக்கு நேராக வழி நடத்தினார். ஆனால் இஸ்ரவேலரோ கர்த்தர் செய்த உதவிகளை பெரிதாக கொள்ளாது முறுமுறுத்தனர். நிர்விசாரமாக நடந்து கொண்டனர். கர்த்தரின் கைகள் அவர்களை விட்டு விலகியிருக்கும்போது பெரிய தோல்விகளைக் கண்டனர். மீண்டுமாக கர்த்தரை நோக்கி தங்கள் தப்பிதங்களை உதவிக்காக அறிக்கையிட்ட போது கர்த்தர் மீண்டுமாக அவர்களுக்கு துணையாயிருந்ததாக காண்கிறோம். ஆண்டவருக்கு முன்பாக தனது பாவ நிலைமையை உணர்ந்து அறிக்கையிடுகிற யாவருக்கும் கர்த்தர் துணையாயிருக்கிறார். நம் தேவன் பராக்கிரமுள்ளவர் என்பதை நீ அறிவாயா?

ஆண்டவரே, நாங்கள் உண்மையாய் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறோம். எங்களை பாதுகாத்து வழிநடத்தும். ஆமென்.

அன்பே பிரதானம்

விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது.

அன்புக்கு அடிப்பணியாதோர் ஒருவருமிலர் என்ற வாக்கின்படி மனிதன் பலவித அன்புக்கு அடிப்பணிந்து சிக்குண்டிருக்கிறான். அவர்களை மீட்டெடுக்க அன்பின் உருவாக உலகில் வந்தவரை வேதபாரகன் ஒருவன் சந்திக்கிறான்.

வேதபாரகன் கேள்வி (வச.28): வேதபாரகர்கள் இஸ்ரவேலரின் சட்ட அறிஞர்கள். நீண்ட கால பயிற்சிக்கு பின் ரபீ என அழைக்கப்படுகின்றனர். வேதத்தை நகலெடுப்பதும், ஜெப ஆலயங்களில் போதிப்பதும், இளைஞருக்கு கல்வி கற்று கொடுப்பதும் இவர்களின் பணியாகும். அவர்களில் ஒரு வேத பாரகன் இயேசுவினிடத்தில் கற்பனைகளில் முதன்மையானது எது? என கேள்வி கேட்டான்.

இயேசுவின் பதில் (வச.29-31): இயேசுவைச் சோதிக்கும்படி கேள்வி கேட்ட போதிலும் வேத அறிவும், உணர்ந்து கொள்ளும் திறனும், உண்மையை ஏற்றுக்கொண்டு பாராட்டும் பண்பும் இம்மனிதனிடத்தில் இருந்தது. கர்த்தரிடத்தில் மோசே பெற்றுக் கொண்ட கற்பனை 603 என வில்லியம் பார்க்லே எழுதுகிறார். இயேசு, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பெலத்தோடும் அன்பு கூருவாயாக (உபா.6:4,5). இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பதே என்றார்.

நீ தூரமானவனல்ல (வச.32-34): வேதபாரகர்கள் நீர் சொன்னது சத்தியம். பலிகளைப் பார்க்கிலும், தேவனிடத்திலும் பிறனிடத்திலும் அன்பு கூறுவது முக்கியமாயிருக்கிறது (1 சாமு. 15:22; ஓசியா 6:6) என்றான். இயேசு பிரதியுத்தரமாக நீ தேவனுடைய இராஜ்யத்திற்கு சமீபமாக இருக்கிறாய் என்பதை உணரச் செய்தார். அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது என்று யோவானும், (1 யோ.4:7) நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயத்தில் ஊற்றப்பட்டிருக்கிறது என்று பவுலும் (ரோ. 5:5ல்) எழுதி வைத்திருக்கிறார்.

இயேசுவே, சிலுவையில் நீர் கொடுத்த உமது தியாகமான அன்பை உணரச் செய்யும்.

மாற்கு 12:35–40

வேதபாரகர்களின் பொல்லாப்பு

இயேசு வேதபாரகர்களின் தவறான உபதேசங்களையும், தவறான வழிகளையும் கண்டித்து மக்கள் எச்சரிக்கையாயிருக்க உணர்த்தினார்.

வேதபாரகரின் தவறான உபதேசம் (வச.35-37): வேதபாரகர்கள் கிறிஸ்துவை தாவீதின் குமாரன் என்று அழைத்தார்கள். நான் உம்முடைய சத்துருக்களை உமக்கு பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என் வலது பாரிசத்திலே உட்காருமென்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார் என்று தாவீது கூறியிருக்கிறார். கிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்தவர். தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட இராஜா என வேதம் கூறும் போது, வேதபாரகர்கள் கிறிஸ்துவின் மகிமையை மட்டுப்படுத்தினார்கள். வேதத்தை அறிந்திருந்த வேதபாரகர்கள், கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக் கொள்ள தவறிவிட்டார்கள்.

வேத பாரகரின் தவறான வாழ்வு (வச.38-40): வேதபாரகர்கள் நீண்ட அங்கிகளைத் தரித்துக்கொண்டு, பார்வைக்கு நீண்ட ஜெபம் செய்து, ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனம் பெற்று, தற்புகழ்ச்சிகளை நாடுகிறவர்களாயிருந்தனர். மேலும் விதவைகளின் வீடுகளை பிடுங்கி, பார்வைக்கு நீண்ட ஜெபம் செய்கிறீர்கள் என இயேசு கண்டித்தார். எனவே இயேசுவானவர், இவர்கள் ஆட்டுத் தோலை போர்த்துக் கொண்டு பட்சிக்கிற ஓநாய்களைப் போல் இருப்பார்கள் (மத்.7:15) என மக்களை எச்சரித்தார். நம்மை மற்றவர்கள் கவனித்தாலும் கவனிக்காவிட்டாலும் தேவனுக்காக வாழ்வோமாக. அவர் நம்மை எப்போதும் காண்கிறார்.

வேதபாரகரின் ஆக்கினை(வச.40): இப்படிப் பட்ட வேதபாரகர்கள் அதிக தண்டனைக்கு உள்ளாவார்கள் என இயேசு கூறினார். கி.பி.70ஆம் ஆண்டில் ரோமர்களால் எருசலேம் தேவாலயம் சுட்டெரிக்கப்பட்டு இவர்களும் மரணத்தை தழுவினதாக சரித்திரம் நமக்கு கூறுகிறது. மனுஷனுக்கு செம்மையாய் தோன்றுகிற வழி உண்டு. முடிவிலோ அது சாவுக்கு நடத்தும் பாதையாகிவிடும் என நீதிமொழிகள் 14:12 கூறுகிறது. எனவே இப்படிப்பட்ட எச்சரிப்பின் சத்தத்தை கேட்டவர்களாய் நாம் நம்முடைய வாழ்விலே வேதபாரகரைப் போல வெளியான பார்வைக்கு எதையும் செய்யாமல் தேவனுடைய பார்வையில் எப்போதும் இருக்கும் வண்ணம் மனத் தாழ்மையாய் நடந்து தேவனை மகிமைப்படுத்துவோம்.

பிதாவே, உமது செம்மையான வழியில் என்னை நடத்தும். ஆமென்.

மாற்கு 12:41–44

கேள்! கவனி! செய்!

தந்தேன் என்னை இயேசுவே, இந்நேரமே உமக்கே! உந்தனுக்கே ஊழியம் செய்ய என்னைத் தாங்கியருளும்.

இயேசு ஆலயத்திற்குள் வருகிற ஒவ்வொரு மனிதரின் நினைவுகளையும் செயல்களையும் கவனிக்கிறார். இயேசு காணிக்கைப் பெட்டியினருகில் நின்று ஏழை விதவையின் காணிக்கையை மேன்மைப்படுத்தினார்.

ஐசுவரியவான்களின் காணிக்கை (வச.41): எருசலேம் தேவாலயத்திற்கு வந்திருந்த அநேகர் குறிப்பாக ஐசுவரியவான்கள் அதிகமாக கர்த்தருக்கு காணிக்கை செலுத்தினதை இயேசுவானவர் கவனித்தார். கர்த்தருடைய ஆலயங்கள் கட்டப்படவும், கர்த்தருடைய ஊழியங்கள் சிறப்பாக நடை பெறுவதற்கும் நாம் காணிக்கைகளை கொடுக்க வேண்டும். கர்த்தருடைய ஆலயத்திற்கு வெறுங்கையோடே வராமல் தன் தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கையை கொண்டு வரக்கடவன்(உபா.15:17) என்றும், உங்கள் தசமபாகங்களை அலயத்திற்கு கொண்டு வாருங்கள். அதினால் நான் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனா என்று கர்த்தர் சொல்லுகிறார் (மல்கி.3:10).

ஏழை விதவையின் காணிக்கை (வச.42,43): இயேசு, ஒரு ஏழை விதவை 1 துட்டுக்கு சரியான 2 காசை காணிக்கை பெட்டியில் போட்டதை கவனித்து சீடர்களிடத்தில் இவளே அதிகம் செலுத்தினாள். தன் ஜீவனுக்குண்டான எல்லாவற்றையும் போட்டுவிட்டாள் என்று மேன்மைப்படுத்தினார். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் (லூக்.6:38) என வேதம் கூறுகிறது.

ஏழை விதவையின் தியாகம் (வச.44): ஆலயத்திலுள்ளவர்கள் தங்கள் செல்வத்திலிருந்து ஒரு பகுதியை செலுத்தினார்கள். இந்த விதவையோ அனைத்தும் கிறிஸ்துவுக்கே, எந்தன் அனைத்தும் அர்ப்பணமே என்ற பாடலுக்கு சாட்சியானாள். கொரிந்து சபையார் தங்கள் திராணிக்கு தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் செலுத்தி நமக்கு மாதிரியானார்கள் (2 கொரி.8:2). நாம் எந்த அளவினால் அளந்து காணிக்கை கொடுக்கிறோம்? ஏனெனில் நம்முடைய தேவன் ஐசுவரிய சம்பண்ணர். நாம் அவருக்கு கொடுக்கும் காணிக்கை எப்படிப்பட்டது?

கர்த்தாவே, ஆபேலையும், அவன் காணிக்கைகளையும் அங்கீகரித்து போல, என்னையும் என் காணிக்கைகளையும் அங்கீகரியும். ஆமென்.

மாற்கு 13:1–13

உலகின் அழிவுகள்

நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்.

தேவாலயத்தின் அழிவு (வச.1-4):- வரலாற்று சிறப்புமிக்க எருசலேம் தேவாலயத்தை 46 ஆண்டுகளாக மகா ஏரோது கட்டி முடித்தார் (யோ.2:20). இதனுடைய சில கற்கள் 30அடி நீளமும், 12அடி அகலமும் கொண்டவை. ஆனாலும் இவைகள் ஒரு கல்லின் மேல் ஒரு கல் இராதபடிக்கு இடிக்கப் பட்டு போகும் என இயேசு கூறினார் (லூக்.19:41-44). இயேசு மரித்து 40 ஆண்டுகள் கழித்து ரோம அரசனாகிய தீத்து இராயனால் ஆலயம் இடிக்கப்பட்டு இன்று வரை கட்டப்படாமல் இருக்கிறது. நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள். ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவர்களை தேவன் கெடுப்பார் என வேதம் நம்மை எச்சரிக்கிறது (1 கொ. 3:16-17).

இயற்கையினால் அழிவு (வச.5-8):- யுத்தங்களின் செய்திகள், பூமி அதிர்வுகள், பஞ்சங்கள், கலகங்கள், ஒருவருக்கு விரோதமாக மற்றொருவர் மற்றும் இராஜ்யத்திற்கு விரோதமாக இராஜ்யம் எழும்பி அழிவுகள் ஏற்படுவதை காண்பீர்கள் என்று இயேசு கூறினார். சமீபத்தில் நேபாள தேசத்தில் நில அதிர்வுகள் காரணமாக தேசத்தின் பூகோள அமைப்பு மாறியிருப்பதாகவும், இமய மலை 3செ.மீ வடகிழக்கு பகுதியில் விலகியிருப்பதாக செய்தித்தாள் கூறுகிறது. நாமும் எல்லா அழிவுக்கும் தப்ப கர்த்தரை நோக்கி ஜெபிக்க வேண்டுமென வேதம் கூறுகிறது.

ஊழியர்களுக்கு ஆபத்து (வச.9-13):- சகல மக்களும் இயேசுவானவரின் வார்த்தைகளை அறிவிக்கும்போது பாடுபடுவார்கள். அச்சமயம் பேச வேண்டிய வார்த்தைகளை பரிசுத்த ஆவியானவர் தருவார். பவுலுக்கு செல்லுகிற இடங்களிலெல்லாம் பாடுகள் இருந்தது (அப். 20:23). ஆனாலும் பவுல் போராடினேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன், நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது (2 தீமோ. 4:7,8). நாம் அநேக உபத்திரவங்களின் வழியாக தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டியதாயிருக்கிறது. (அப். 14:22). உலகத்தில் உபத்தரவங்கள் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன் என்கிறார் இயேசு கிறிஸ்து.

தேவனே! என்னை எல்லா அழிவிற்கும் விலக்கிக் காத்தருளும்.

வருங்கால உபத்திரவங்கள்

> நெருப்பிலே போடப்பட்ட புல் சாம்பலாகிறது. ஆனால் நெருப்பில் போடப்பட்ட பொன் ஜொலிக்கிறது.

பூமியில் இயற்கை மாற்றத்தினால் மனிதர்கள் உபத்திரவத்துக்கு உள்ளாவார்கள் என்றும், இறுதி நாட்களில் இன்னும் அதிகமான உபத்திரவங்களை கிறிஸ்தவர்கள் சந்திக்க நேரிடும் என்பதையும் இப்பகுதியில் வாசிக்கிறோம்.

பாழாக்கும் அருவருப்பு [வச.14-20]:- பாழாக்குகிறவன் தேவாலயத்தின் நடுவிலிருப்பதை தானியேலின் புத்தகத்தில் வாசிக்கிறோம் (தானி. 9:27). ஏற்கனவே கி.மு.168ல் அந்தியோகு எபபேனஸ் ஆலயத்தில் பன்றியை பலியிட்டு பாழாக்கினபோது மக்கபேயர் எதிர்த்து போராடி வெற்றியடைந்ததையும், கி.பி.70ல் தீத்து இராயன் ஆலயத்தில் சிலையை நிறுவி பாழாக்கினதையும் அறிந்திருக்கிறோம். 2தெச.2:4ல் அந்திகிறிஸ்து தேவாலயத்தில் அமர்ந்து தன்னை தேவனாக வெளிப்படுத்துவதை வாசிக்கிறோம். இப்படிப்பட்ட பொல்லாத காலங்களில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் நாம் கர்த்தரை சார்ந்து கொள்வோமாக (தானி. 3:17,18).

கள்ள கிறிஸ்துவின் வருகை [வச.21-23]:- கள்ள கிறிஸ்துவாக, கள்ள தீர்க்கதரிசியாக சாத்தானின் வல்லமையினால் நிரப்பப்பட்டு தெரிந்து கொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள் (2தெச.2:9,10;வெளி.13:11-18). பிதாவையும், குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திகிறிஸ்து (1யோ.2:22) என்றும், மாம்சத்தில் வந்த இயேசுவை அறிக்கைப்பண்ணாத எவனும் அந்திகிறிஸ்துவின் ஆவியாயிருக்கிறான் எனவும் (2 யோ. 7; 1 யோ.4:3) எழுதப்பட்டிருக்கிறது. ஜாக்கிரதையாயிருப்போம்.

இயேசுவின் இறுதி வருகை [வச.24-27]:- பல உபத்திரவங்களுக்குப் பின்பு சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியை கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் பூமியிலே விழுந்து கொண்டிருக்கும்போது மனுஷக்குமாரன் பூமியெங்கும் தமது தூதரை அனுப்பி தெரிந்து கொள்ளப்பட்டவர்களை கூட்டி சேர்ப்பார். இயேசு வருகையில் பங்கு பெற ஆயத்தமாவோம், பிறரையும் ஆயத்தப்படுத்ததுவோம்.

எல்லா உபத்திரவங்களையும் தாண்டி உமக்கு முன்பாக நிற்க தகுதிப்படுத்தியருளும் கர்த்தாவே, ஆமென். (லூக்கா 2:36)

மாற்கு 13:28-37

ஆயத்தப்படு

> அரசியல் தலைவரை சந்திக்கத் துடிக்கும் தொண்டர்கள், விடுமுறைக்குப் பிறகு பெற்றோரை சந்திக்கச் செல்லும் பிள்ளைகள், அன்பு விசுவாசியே நீ யாரைச் சந்திக்க விரும்புகிறாய்.

இறுதியாக இயேசு சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன்றும் இந்த சந்ததியில் நிறைவேறுவதையும், தொடர்ந்து அவருடைய சீடர்களும் அனைத்து பரிசுத்தவான்களும் அவரது வருகையில் சந்திக்கும்படி ஆயத்தப்பட கூறினார்.

நிறைவேறும் வார்த்தைகள் [வச.28-31]:- மாற்கு 13ம் அதிகாரத்திலுள்ள (4-27) இறுதி சம்பவங்களனைத்தையும் இயேசு அறிவித்து, வானமும் பூமியும் அழிந்து போகும், என் வார்த்தைகளோ அழிந்து போவதில்லை (வச.31). நிச்சயமாக நிறைவேறும் என்பதை முன்னறிவித்தார். இன்று அவருடைய வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதோரை இப்படி கூறுகிறது வேதம், "என்னைத் தள்ளி என் வசனங்களை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந் தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனை கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் (யோ. 12:48)" என்று.

நிறைவேறுகிற பணியின் பலன் [வச.32-34]:- இவ்வுலகில் தேவனுடைய கண்களுக்கு கர்த்தர் பல பொறுப்புள்ள உத்தியோகங்களையும், ஊழியங்களையும், அதிகாரங்களையும் கொடுத்திருக்கிறார். அவரவர் கணக்கொப்புவிக்கும்படியான நேரம் வருகிறது. ஆயத்தமாயிருக்கும்படி அழைக்கப்படுகிறோம். இதோ சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது. (வெளி. 22:12)

இறுதி எச்சரிப்பு [வச.35-37]:- விழித்திருங்கள், ஜெபம் பண்ணுங்கள், எச்சரிக்கையாயிருங்கள் என்பதே இயேசுவின் இறுதி வார்த்தைகள். சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல் கூவும் நேரத்திலோ எஜமான் வரும்போது தூங்குகிறவர்களாயிராதபடி விழித்திருங்கள். தூங்குகிறவர்கள் ஆயத்தமில்லாதவர்கள், கைவிடப்படுவார்கள் (மத். 25:11,12). இனி சம்பவிக்கப்போகிற எல்லாவற்றிற்கும் நீங்கள் தப்பி மனுஷக் குமாரனுக்கு முன்பாக நீங்கள் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் (லூக்கா 21:36).

பிதாவே முடிவு பரியந்தம் நிலைத்திருக்கவும், உம்மை முகமுகமாய் சந்திக்கவும் கிருபை தாரும். ஆமென்.

கர்த்தருடைய ஆளுகை நித்தியமானது

நம் தேவன் பராக்கிரமுள்ளவர் என்பதை நீ அறிவாயா?

நீதியை விரும்புகிறவர் [வச.1-7]: கர்த்தர் நீதியை விரும்புகிறவர். எனவே சவுலின் கீழ்ப்படியாமையை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. சவுல் இஸ்ரவேல் கோத்திரத்தில் சிறிய கோத்திரமான பென்யமீன் கோத்திரத் தான் கர்த்தர் அவனை தெரிந்து கொண்டு இராஜாவாக அபிஷேகம் பண்ணினார். அவனோ தேவனுடைய கட்டளைகளைக் கைகொள்ளாமற் போனார். அதினிமித்தம் சவுல் இராஜ்ய பாரத்தை இழந்து போனான். கர்த்தர் அவனுடைய ஸ்தானத்தில் தாவீதை இராஜாவாக எற்படுத்தினார்.

இராஜ்யத்தின் பிள்ளைகள் [வச.10-12] : இராஜாவின் அரண்மனையிலே இராஜாவின் மனைவியானவள் இராஜாவாலும், சபைமக்கள் அனைவ ராலும் மதிக்கப்படத்தக்கவள். ஆனால் அவள இராஜகுமாரியாய்த் தெரிந்து கொள்ளப்பட்ட நாளிலே, தனது தகப்பன் வீட்டையும், உற்றார் உறவின ரையும் விட்டுச் செல்ல வேண்டியதாயிற்று. அநத படியே சாராள் ஆபிரகாமை கணவனாக ஏற்றுக் கொண்ட போது, தனது தகப்பன் வீட்டை விட்டுப் பிரிந்து வந்து ஆபிரகாமுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள். இயேசு நமது மணவாளன், நாமும் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட மணவாட்டிகள், யாவையும் விட்டு கர்த்தருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். அப்பொழுது அவர் நம்மேல் பிரியமாயிருப்பதோடு நமதண்டை சேர்த்துக் கொள்வார்.

நம்மை ஆசீர்வதிப்பார் [வச.13-17] : கர்த்தர் தாவீதின் சந்ததியை ஆசீர்வதித் தார். அது மட்டுமல்லாது உத்தமர்களை கர்த்தர் நேசிக்கிறவர். அவர் அநாதி திட்டத்தின்படி தமது ஒரே குமாரனை இவ்வுலகுக்கு அனுப்பி, அவரது இரத்தத்தினால் நம்முடைய பாவங்களைக் கழுவி நம்மை இராஜாக் களும் ஆசாரியர்களுமாக்கினார். கர்த்தருடைய நாமம் பூமி யெங்கும் பிரஸ்தாபப்படுத்தப்பட்டு அனைவரும் கர்த்தருடைய நாமத்தை துதிப்பார்கள். கர்த்தருடைய நாளிலே நாமும் அவரோடு சேர்ந்து ஆளுகை செய்வோம், அவருடைய இராஜ்யம் நித்தியமானது. நம்முடைய தேவன் நீதியுள்ளவரும், பரிசுத்தருமாயிருக்கிறதினால் நாமும் நீதியோடும் பரிசுத்தத் தோடும் வாழ வேண்டும்.

கர்த்தாவே எங்கள் ஈசோப்பினால் சுத்திகரித்து உம்முடைய சொந்த ஜனமாக ஏற்றுக் கொள்ளும். ஆமென்.

அன்பும் கட்டுப்பாடும்

உடல் அழகைப் பற்றி நாம் என்ன நினைக்கிறோம்?

இப்புத்தகத்தின் ஆரம்ப வரி சாலமோன் இதன் ஆசிரியர் என்று காட்டுகிறது. பாட்டு என்ற சொல் இதன் இலக்கிய நடைபற்றி கூறுகிறது. இது பாடும்படியாக எழுதப்பட்டப் பாட்டு ஆகும். ஆதிகாலத்தில் ஏழு நாட்கள் நடைபெறும் திருமண விழாவின்போது பாடும்படியாக எழுதப்பட்ட பாட்டாக இது இருக்கலாம். (ஆதி.29:27; நியா.14:12).

ஒரு ஆணும் ஒரு பெண்ணும் இதன் முக்கிய கதாபாத்திரங்கள். அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் வைத்துள்ள நேசத்தைப் பாட்டாகப் பாடுகின்றனர். "என் நேசர்" என்கிற சொல்லைப் பெண்ணும், "என் பிரியமே" என்ற சொல்லை ஆணும் பலமுறை இங்கே பயன்படுத்துகின்றனர். சிறு குழுவாக உள்ள பெண்களை எருசலேமின் குமாரத்திகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது (2:7; 3:5,10,11; 5:8,16;8:4). அவர்கள் கேள்விகள் கேட்கும்போது, அவைகள் சாலமோனுக்கும் அப்பெண்ணுக்கும் நடக்கவிருக்கும் திருமண நிச்சயம், திருமணம் மற்றும் குடும்ப வாழ்வு ஆகிய முக்கிய நிகழ்வுகளை சுட்டிக் காட்டுபவையாக அமைந்துள்ளன.

ஆடு மேய்க்கும் அப்பெண் ஆடு மேய்ப்பதிலும் திராட்சத் தோட்டத்தைப் பராமரிப்பதிலும் வெயிலில் பணி செய்வதிலும் தன் நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கிறாள். இருவரது நேசத்தின் ஆரம்ப நிலையை இங்கு காண்கிறோம். ஒருவர் மீது ஒருவர் ஈர்க்கப்பட்டு ஒருவரை ஒருவர் புகழ்ந்து பாடும் பாட்டை இங்கு பார்க்கிறோம். இப்படிப்பட்ட ஈர்ப்பும் ஒருவரோடொருவர் இணைய வாஞ்சிப்பதும் கடவுள் நமக்கு தந்தருளிய ஈவாகும். "பெண்களுக்குள் பேரழகியே" என்று அவன் அவளை வர்ணிக்கிறான் (வசனம் 5:9; 6:1). பார்ப்பவர் கண்களில்தான் அழகு தெரியும் என்பதையும் அவள்மீது கொண்டிருக்கும் அளவு கடந்த அன்பை கவிதை நயத்தோடு வெளிப்படுத்துவதையும் குறிப்பிடுகிறது. இந்த பகுதியில் ஆணும் பெண்ணும் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுவது, ஆண்களும் பெண்களும் திருமணத்திற்குப் பின் இணைவதற்குரிய தருணம் வரும்வரை கட்டுப்பாட்டோடு இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இந்நாட்களில் வாழும் மனிதர்கள் கட்டுப்பாட்டோடு இருக்கின்றனரா?

ஆண்டவரே, உமது படைப்பாகிய எங்களை நாங்களே ஏற்று அங்கீகரிக்கும் மனதைத் தாரும். ஆமென்.

பற்றிக் கொண்டவள்

என்னை நேசிக்கும் கடவுள் என்னுடையவர் என்று சொல்ல முடியுமா?

சூலமித்தியாள் தனது நேசரைப் பற்றி பிரமிப்படைகிறாள். அவளுடைய ஏக்கம் அவள் கானும் கனவிலும் தொடர்கிறது. தனது நேசரின் குணங்களை உருவகப்படுத்தி மகிழ்கிறாள். மலைகள் மற்றும் குன்றுகள் போன்ற தடைகளையும் தாண்டி தன்னைத் காண தன் நேசர் வருவார் என்று நம்புகிறாள் (2:8). தனக்கும் தன் நேசருக்கும் உள்ள உறவானது திராட்சைத் தோட்டத்தில் பூக்கள் மலர்வது போன்றது என்று பாடுகிறாள். "என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள்" (வச.12:16) என்று பாடுவதின் மூலம் தன் திட நம்பிக்கையை வெளிப்படுத்துகிறாள். தன் நேசர் என்று கூறுவதில் அவள் தன்னுடைய உரிமையை நிலை நாட்டுகிறாள் என்பது தெளிவாகின்றது. தன்னுடைய தோழிகளிடத்தில் தன் நேசரை தேடும்படி கூறும் அவள், கடைசியாக தன்னுடைய நேசர் வந்ததும் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறாள். நாம் கூட பலவேளைகளில் ஆண்டவர் என்னை விட்டு போய்விட்டார் என்று நினைத்து கண்ணீர் வடிக்கிறோம். அவர் என்னை கலங்க வைத்தார் என்று புலம்புகிறோம். வேதம் சொல்லுகிறது அவர் ஒருநாளும் நம்மை விட்டு விலகவும் மாட்டார், நம்மை கைவிடவும் மாட்டார் என்று.

கர்த்தரால் மீட்கப்பட்ட மணவாட்டி சபையாகிய நாம் கடவுளுடைய வார்த்தையாகிய சத்திய வேதத்தை ஆழமாக தியானிக்கும்போது மண வாளனாகிய இயேசு கிறிஸ்துவின் குணாதிசயங்களை புரிந்து கொள்ள முடியும். தேவன் இஸ்ரவேல் மக்களிடத்திலும் மற்ற மக்களிடத்திலும் செய்த செயல்களின்மூலம் தமது குணாதிசயங்களையும் சித்தத்தையும் வெளிப் படுத்தியிருக்கிறார். நாம் தேவனுடைய சத்தத்தை வேத வார்த்தையின் மூலம் கேட்டு கீழ்ப்படிய மனதுள்ளவர்களானால், பரிசுத்த ஆவியானவர் வேத வசனத்தை நமக்கு விளக்குவார். "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங்கீதம் 1:2). மேலும் அவள் தன் நேசரை அவள் தாயின் வீட்டில் வந்துவிடும்வரை பற்றிக்கொண்டாள். நாம் இவளைப்போல இயேசு கிறிஸ்துவை பற்றிக் கொள்ளுகிறோமா?

ஆண்டவரே, உமக்கே முழுமையாக என்னை ஒப்புக்கொடுக்க உதவி செய்யும். ஆமென்.

விதிமுறைகள்

என் உணர்ச்சிகள் என் கட்டுப்பாட்டில் உள்ளனவா? உணர்ச்சிப் பெருக்கினால் நான் எப்பொழுதாவது வரம்பு மீறியிருக்கிறேனா?

தன்னை புகழ்ந்து பாடும் பெண்ணுக்கு மாறுத்தரமாக அவன் (சாலமோன்) அவளின் உடல் அழகை வர்ணிக்கிறான். அவள்மேல் தான் கொண்டுள்ள அன்பின் எண்ணங்களைத் தடையின்றி மனபூர்வமாக வெளிப்படுத்துகிறான். அவள் தன்மீது வைத்துள்ள தீவிரமான நேசத்திற்குப் பிரதியுத்திரமாக அவனும் அவள்மீது தீராத அன்பு கொண்டிருக்கிறான். அவர்கள் இப்படி ஒருவர் மீது ஒருவர் கொண்டிருக்கும் ஆழமான நேசத்தினால் வெளிப்படும் பாட்டுதான் இந்த பாட்டுக்களின் பாட்டு. வாலிப ஆண்களும், இளம் பெண்களும் தங்களுடைய வாலிப் பருவத்தில் ஏற்படும் இப்படிப்பட்ட உணர்ச்சி பூர்வமான எண்ணங்களைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். இக்கால ஆண்களோ, பெண்களோ தங்களை உறவு முறைகளில் கட்டுபாடு வைத்திருக்கின்றார்களா? நீதி. 31:10 முதல் 31 வரையுள்ள வேத பகுதியில் பெண் எப்படிப்பட்டவளாக இருக்கவேண்டும் என்று அறிந்து கொள்வது நல்லது. சங்கீதம் 1 ஐ படிப்பதன்மூலம் ஒவ்வொரு ஆணும் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் தெரிந்துக் கொள்ளவேண்டும்.

நீதி. 31:10 முதல் 31 வரையுள்ள வேத பகுதியில் விவரிக்கப்படும் பெண் இக்காலத்தில் இருப்பாளா என்ற கேள்வி எழலாம். ஆண்களும் சங்கீதம் 1 ல் கூறப்பட்டுள்ளபடி இருப்பார்களா என்ற கேள்வியும் எழலாம். ஆண்களும் சரி, பெண்களும் சரி, இவ்வேத பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள குணாதிசயங்களோடு பெரும்பாலும் இருப்பதில்லை. ஆண்களும் பெண்களும் ஒருவரோடொருவர் உண்மையான நேசத்தோடும் பாசத்தோடும் தங்கள் திருமண வாழ்வை ஆரம்பித்து நடத்தும்போது, அவர்களது திருமண உறவு குதூகலமான மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும். அப்படிப்பட்ட குடும்ப வாழ்வில் ஈடுபடுவோர் கிறிஸ்துவுக்கு சாட்சியாகவும் மற்றவர்களுக்கு உதவுபவர்களாகவும் இருக்கமுடியும். ஒருவருக்கொருவர் நன்றாக புரிந்துக்கொண்டு, விட்டுக் கொடுத்து வாழ்தலே தேவனுக்கு பிரியமான குடும்பமாக இருக்க முடியும். இப்படிப்பட்ட தேவனுக்கு பிரியமான வாழ்க்கையை நாம் வாழ்ந்து தேவனின் நாமத்தை மகிமைப்படுத்துவோம்.

ஆண்டவரே, மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்ப என் உணர்ச்சிகளும் மாறிவரும் சூழ்நிலையிலும் மாறாத உம்மைச் சார்ந்து வாழ உதவி செய்யும். ஆமென்.

யாருக்காக வாழ்கிறேன்?

ஜீவாற்றில் ஓடும் தண்ணீரால் என் ஆத்ம தாகம் தீர்ப்பார்; மெய் மன்னாவாம் தம் வார்த்தையால் நல் மேய்ச்சல் எனக்கீவார்.

சூலமித்தியாள் தன் நேசரைப் புகழ்ந்து பாடுகிறாள். தான் அவனுக்கு விரும்பத் தகுந்த பெண்ணாக இருப்பதைப் போலவே, அவனும் தனக்கு முற்றிலும் விரும்பத்தக்க மனிதனாக அவள் கருதுகிறாள் (4:1-7). "என் நேசர்" என்று திரும்பத் திரும்ப (10 முறை) அழைத்து அவள் அவன்மேல் வைத்திருக்கிற தீவிரமான அன்பைக் காட்டுகிறாள். சாலமோனும் சூலமித்தியாளும் தங்களுடைய நேசிப்பின் நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டும் வண்ணம் சூலமித்தியாளும் தோழியர் கூட்டத்தின் (எருசலேமின் குமாரத்திகள் என்று அழைக்கப்படுவோர்) கேள்விகள் அமைந்திருக்கின்றன. அவள் அவனை மிகுந்த கருத்தாய் தேடுகிறாள்! முடிவில் கண்டுபிடிக்கிறாள். அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அதீதமாய் விரும்பி அன்புவயப்படுகின்றனர்.

மணவாட்டியாகிய சபையாகிய நாம் அனைவரும் கர்த்தரால் மீட்கப்பட்ட வர்கள். ஆகையால் நாம் ஆண்டவரின் மகிமைக்கென்று வாழ வேண்டும். மனிதனுடைய வாழ்நாளின் குறிக்கோளே ஆண்டவரை மகிமைப் படுத்துவதும், அவரை என்றைக்கும் மகிழ்ந்து அனுபவிப்பதும்தான் என்று வெஸ்மின்ஸ்டரின் ஞான உபதேசம் தொடங்குகிறது. இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன். இவர்கள் என் துதியை சொல்லி வருவார்கள் என்று நம்முடைய வேதமும் கூறுகிறது. எனவே தேவன் விரும்புவது எல்லாம் நாம் அவரை சேவிக்க வேண்டும் என்பதே.

பாவம் செய்து, தேவ மகிமையற்றவர்களாக வாழ்ந்த மனுக்குலத்தை மீட்க இயேசுவானவர் அனுபவித்த பாடுகளை ஏசாயா தீர்க்கன், (ஏசாயா 53) நாம் பார்ப்பதற்கேற்ற அமைப்போ அவருக்கில்லை. நாம் விரும்பத் தக்க தோற்றமும் அவருக்கில்லை. அவர் இகழப்பட்டார், மனிதரால் புறக்கணிக்கப் பட்டார், அவர் இழிவுப்படுத்தப்பட்டார், அவரை நாம் மதிக்கவில்லை என்று தீர்க்கதரிசனமாய் விவரிக்கிறார். உலகப் பிரகாரமான பாவியான ஒரு மனிதனுக்கு இயேசு கிறிஸ்து வசீகரமாகத் தோன்றமாட்டார். ஆயினும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டியாயிருப்பதால் என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள் (16:3) என்றுதான் கூறுவார்.

ஆண்டவரே, உம் பிரசன்னத்திலே ஆனந்தக் களிப்பு உண்டு என்பதை அனுபவிக்க உதவி செய்யும். ஆமென்.

உன்னதப்பாட்டு 6:4-7:9

இவள் யாரோ?

என் வாழ்க்கை முறையில் உலக நெறியைப் பின்பற்றுகிறேனா? அல்லது தேவ நெறியைப் பின்பற்றுகிறேனா?

சாலமோன் சூலமித்தியாளை வர்ணனை செய்து பாடுவது தொடர்கிறது. இவ்வேத பகுதியில் இரண்டு பட்டணங்களைக் குறிப்பிட்டது மிகவும் சுவாரசியமானது. எருசலேம் தலைநகரமாகவும், சாலமோனின் விலையுயர்ந்த மாளிகைகள் நிறைந்த பட்டணமாகவும் இருந்தது. திர்சா பட்டணம் ஆதியிலே கானானியரின் பட்டணமாக இருந்தது. பின்னர் இஸ்ரவேலின் இராஜாவான யெரோபெயாம் அதைக் கைப்பற்றினான்.

மேலும், இப்பகுதியில் சாலமோனின் அரண்மனையின் அந்தப்புர வாழ்க்கை பற்றிய குறிப்பும் உள்ளது. மனைவிகளாக 60 பெண்களும், மறுமனையாட்டிகளாக 80 பெண்களும் எண்ணிறந்த இளம் பெண்களும் அங்கிருந்தனர் (6:8). இஸ்ரவேலின் ராஜா பல மனைவியரைக் கொள்ளலாகாது என்ற நியாயப்பிரமாணத்தின் கட்டளைக்கு (உபா. 17:17) முற்றிலும் மாறாக சாலமோன் செயல்பட்டதை இங்கு பார்க்கிறோம். சாலமோன் இந்தப் பெண்கள் அனைவரையும் விட்டுவிட்டு, சூலமித்தியாளை விரும்புகிறான்.

சூலமித்தியாள் என்ற இந்தப் பெண்ணின் பெயர் 6:13ல் கொடுக்கப்பட்டுள்ளது. எர்மோன் மலையில் தென் கிழக்கு சரிவில் இஸ்ரவேல் சமபூமியில் சூனேம் (சூலேம்) என்ற இடம் உள்ளது. இந்தப் பெண் அந்த சூலேம் இடத்தைச் சேர்ந்தவளாக இருக்கலாம். சாலமோன் சூலமித்தியாளை விரும்பி வர்ணித்து அழைக்கிறார். இதைபோலவே நம் ஆண்டவர் நமக்காக தன்னுயிர் கொடுத்து, மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்து, பிதாவினிடத்தில் நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கின்ற நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பாவம் செய்து தேவ மகிமையை இழந்து இருக்கின்ற நம்மை அவரிடத்தில் அன்பாய் இரு கரம் நீட்டி அழைக்கின்றார். இத்தருணத்தில், இயேசு கிறிஸ்து தன் சீஷரிடத்தில் சொன்னதை நினைவு கூறுவோம். "நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்" (யோவான் 14:3). மணவாட்டியாகிய நாம் மணவாளனான கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கென்று ஆயத்தமாகக் காத்திருப்போம்.

ஆண்டவரே, நித்தியமில்லாத இவ்வுலக வாழ்க்கையில் தேவ நெறியுடன் கட்டுப்பாடாக நடந்து கொள்ள பெலன் தாரும். ஆமென்.

கிறிஸ்துவின் அன்பு

இயேசு கிறிஸ்துவின் அன்பை என் அனுதின வாழ்வில் ருசிக்கிறேனா?

ஏக்கத்தோடு காத்திருந்த நாட்களின் முடிவில், பிரியமானவளின் காதலை விழிக்கப்பண்ணாமலும் தட்டி எழுப்பாமலும் இருக்கும்படியாக எருசலேமின் குமாரத்திகளுக்குச் சொன்னாள் சூலமித்தியாள் (8:4). இப்பொழுது திருமணத்தை நோக்கி முன்னேற வேண்டிய நேரமாயிற்று. உண்மை அன்பைப்பற்றி விளக்க சாலமோன் மூன்று உருவகங்களைப் பயன்படுத்துகிறான். 1. **முத்திரை** : நேசருக்ககே சொந்தம், 2. **நெருப்பு** : அன்பின் வலிமை, 3. **ஆஸ்தி** : அன்பின் மதிப்பு.

இவ்வாறு சாலமோனுக்கும் சூலமித்தியாளுக்கும் உள்ள உறவிலே ஒரு புதிய நிலை உருவாகி பாட்டு முடிகிறது. நெடுநாள் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும், விரும்பினது வரும்போதோ அது ஜீவ விருட்சம் போல் இருக்கும் என்கிற வேத வசனத்தின்படி, காத்திருந்த இவர்கள் இருவரும் தற்போது காத்திருந்த நாட்கள் முடிவடைந்து திருமணத்தில் ஒன்றாக இணைந்து அதை நிறைவு செய்து மகிழ்கின்றனர். நீரானது நெருப்பை அணைத்து விடும், ஆனால் உண்மையான அன்பை எதுவும் தடுக்க முடியாது. பவுல் சொல்லுகிறார், "கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?" (ரோமர் 8:36).

"என் நேசரே", தீவிரியும் (8:14) என்ற சூலமித்தியாளின் கூக்குரல், கிறிஸ்து மகிமையோடு தம் இரண்டாம் வருகையில் வருவதற்காக மணவாட்டியான சபையானது ஏக்கத்தோடு காத்திருப்பதைப் பிரதிபலிக்கிறது. யோவானும் "கர்த்தராகிய இயேசுவே வாரும்" என்று அழைக்கிறார். (வெளி. 22:20). சபையானது சீக்கிரமாக வாரும் என அழைக்கும்போது, தேவன் குறித்த நேரத்திற்கு முன்னர் வரும்படி வற்புறுத்தாமல், இது சபையின் ஆவலையும் விருப்பத்தையும் காட்டுகிறது. கந்தவர்க்கங்களின் மலைகள் என்பது இனிவரும் நாட்கள் முழுவதும் காணப்படும் நிறைவான மகிழ்ச்சியையும் குதூகலத்தையும் குறிக்கிறது. ஆண்டவரின் வருகை சமீபமாயிருக்கிறது. கடைசி நாட்களில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வரும்போது நாம் விழித்திருந்து ஆயத்தத்தோடு காத்திருப்போமானல் அவருடைய இராஜ்யத்திலே பங்கடைவோம்.

ஆண்டவரே, எங்கள் வாழ்வில் எல்லாவற்றையும் நன்மைக்கேதுவாக நடத்துவீர் என்பதை திட்டமாக அறிந்து தேவ வழியில் நடக்க உதவி புரியும். ஆமென்.

நம்மை ஆசீர்வதிப்பார்

நம்முடைய தேவன் நீதியுள்ளவரும் பரிசுத்தமுள்ளவர். நாமும் நீதியோடும் பரிசுத்தத்தோடும் வாழ்வோம்.

சீயோன் என்பது கர்த்தருடைய பட்டணம். கர்த்தர் அங்கிருந்து இவ்வுலகம் முழுவதையும் ஆளுகை செய்கிறார். இவ்வுலகத்திலுள்ள யாவரும் கர்த்தரை ஸ்தோத்தரிப்பதற்காக அங்கு செல்வார்கள். கர்த்தர் நமக்குப் பயப் படுகிற ஜனத்தை சீயோனிலிருந்து ஆசீர்வதிப்பார்.

பாதுகாக்கிறார் [வச.1-7]: மனுஷர் பூமியிலே பெருகத் தொடங்கியபோது அக்கிரமும் பெருகிற்று. அவனுடைய இருதய நினைவுகளும் மிகவும் பொல்லாததாயிருந்தது. நீதிமானும், உத்தமனுமாய் இருந்த நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. நோவாவையும் அவன் குடும்பத்தையும் ஜலப்பிரளயத்தில் அழியாதபடி பாதுகாத்தார். நாம் கர்த்தருக்குப் பயந்து நடக்கும்போது கர்த்தர் நம்மை பாதுகாப்பார்.

சமாதானம் தருகிறார் [வச.8,9] : சவுல் பொறாமையினால் மூன்று முறை தாவீதைக் கொன்று போட முயற்சி செய்தான். அவனுடைய நாட்களில் யுத்தம் நடந்து கொண்டேயிருந்தது. சமாதானமே இல்லை. கடைசியில் அவனும் அவனது மூன்று குமாரர்களும் போரில் கொல்லப்படுகின்றனர். கர்த்தர் தாவீதை யூதாவின் மேல் இராஜாவாக்கினார். பின்பு சமஸ்த இஸ்ரவேலின் மேலும் இராஜாவாக்கினார். கர்த்தர் தாவீதின் மூலம் இஸ்ரவேல் மக்கள் அனைவருக்கும் சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதித்தார்.

கர்த்தரின் மகத்துவம் [வச.10,11]: தாவீதின் நாட்களில் அநேக யுத்தங்களைச் செய்து வெற்றி எருசலேம் இஸ்ரவேலரின் கோட்டையாயிருந்தது. அங்கு ஒரு தேவாலயம் கட்டப்பட்டு, சகல ஜாதிகளும் அங்கு வந்து கர்த்தரை ஆராதித்தனர். கர்த்தருடைய நாமம் சகல ஜாதிகளிலும் போற்றப்பட்டது. கடைசி நாட்களில் கர்த்தரின் ஆலயம் பர்வதங்களின் உச்சியிலே ஸ்தாபிக்கப்பட்டு, சகல ஜனங்களும் கர்த்தரின் நாமம் பெரியது என்று உரக்கச் சத்தமிட்டுக் கூறுவார்கள். உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் கர்த்தர் அவர்களோடு இருப்பார். நீ கர்த்தருக்குப் பயந்து நடந்து கர்த்தரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்.

ஆண்டவரே, உம்முடைய சமாதானத்தை எங்களுக்குத் தந்து எங்களை உம்முடைய பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளும். ஆமென்.

கடவுளின் எச்சரிப்பு

இந்தப் பகுதியில் வரும் நியாயத்தீர்ப்பின் செய்தியை எத்தனை பேர் விரும்புவார்களோ? இத்தகைய செய்தியும் நமக்குத் தேவை.

யூதாவின் ராஜாவாகிய யோசியா கடவுளின் மக்களை சரி செய்வதற்கு முன்பாக, செப்பனியா கடவுளின் எச்சரிப்பின் செய்தியை யூத மக்களுக்கு கூறுகிறார்.

எச்சரிப்புக்கு காரணம் [வச.1-9]: யோசியாவுக்கு முன் ஆட்சி செய்த ஆமோன் மற்றும் மனாசே செய்த பாகால் வணக்கம் அதிகம் பரவி இருந்தது. ராஜாவாகிய மனாசேயும், அவன் மகனாகிய ஆமோனும் யூதாவை ஆட்சி செய்யும் பொழுது கடவுளுக்கு விரோதமாக யூத மக்களை பாவம் செய்ய வைத்தார்கள். கடவுளுக்கு அருவருப்பான சிலை வழிபாடு, சூரியன், சந்திரன், நட்சத்திரங்களை வணங்க வைத்தார்கள். அந்நிய தேவர்களுக்கு ஆராதனை செய்ய ஆசாரியர்களை ஏற்படுத்தினார்கள். இதனால் கர்த்தர் யூத மக்களுக்கு எற்படும் தண்டனையை எச்சரிப்பாக செப்பனியா கூறுகிறார்.

பெரிய ஆபத்துக்கு காரணம் [வச.10-13]: மீன் வாசல் (வசனம் 10) என்பது எருசலேமின் வடக்கு பகுதியில் அமைந்துள்ளது. இதன் வழியாகத் தான் நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு உள்ளே நுழைந்தான். மக்தேஷ் (வசனம் 11) என்பது எருசலேமின் மையப்பகுதியில் அமைந்துள்ள இடம். இங்கே வியாபாரங்கள், பல தொழில் அமைப்புகளிலிருந்து வணிகம் சிறப்பாக நடைப்பெற்று வந்த இடம். ஆகையினால் பதைரப்பட்ட கலாச்சாரங்கள், பாகாலின் சிலை வணக்கங்கள் உள்ளே நுழைந்தன. இதனால் கடவுள் செப்பனியாவைக் கொண்டு யூதா, எருசலேமுக்கு வரப்போகும் தண்டனையையும் அதற்கான காரணத்தையும் கூறுகிறார்.

தவறான மற்றும் கடவுள் பயமற்ற தலைமைத்துவத்தினால் கடவுளின் மக்கள் கடவுளின் வார்த்தையிலிருந்து வழிவிலக செய்தார்கள். மக்களும் தவறான மற்றும் கடவுள் பயமற்ற தலைமைத்துவத்தை பின்பற்றினார்கள். செப்பனியா கடவுளின் வார்த்தையை எச்சரிப்பாகவும், தைரியமாகவும், பயப்படாமலும் அறிவித்தார். கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது. இந்த நாளைச் சந்திக்க நம் அயத்தம் எந்த அளவில் இருக்கிறது?

அன்பின் ஆண்டவரே, உம்முடைய எச்சரிப்பின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து வாழ எனக்கு உதவி செய்யும். ஆமென்.

செப்பனியா 1:14-2:3

சோதித்து பாருங்கள்

உலகம் கொடுக்கும் வெற்றி நம்மை ஒருபோதும் நித்திய வாழ்வுக்கு தகுதிப்படுத்தாது.

கடவுள் ஏறக்குறை இருபது ஆண்டுகள் அமைதிக்கு பின்பு மீண்டும் செப்பனியாவைக் கொண்டு யூத மக்களோடு பேசுகிறார்.

உணர்வற்ற உள்ளம் கர்த்தருடைய பெரிய நாள் சமீபித்திருக்கிறது (வசனம் 14) அந்த நாளில் தண்டிக்கப்படுவீர்கள் என்று கூறும்பொழுது, யூத மக்கள் இது நமக்குரிய தண்டனை அல்ல புற இனத்திற்கு ஏற்படும் ஆபத்தைக் கூறுகிறார் என்று தவறாக புரிந்துக் கொண்டார்கள். இங்கே கூறப்படும் தண்டனைகள் நமக்காக கூறப்படுகிறது என்பதனை உணர்ந்துக் கொள்ளாமல் போனார்கள். ஆனால் அந்த நாள் அவர்களுக்குகே நியாயத்தீர்ப்பின் நாளாகும் என செப்பனியா எச்சரிக்கிறார். இந்த எச்சரிப்பினால் தொடப்பட்ட யூத மக்கள் யோசியா அரசனின் சமய சீர்திருத்த நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்கு பெற்றனர். இத்தகைய எச்சரிப்பு நமக்கு மிக அவசியம்.

உணர்வடைய வாய்ப்பு கடவுளுடைய தண்டனையிலிருந்து நாம் எவ்வாறு தப்பித்துக் கொள்ளலாம். முதலாவது நாம் எப்பொழுது மனம் திரும்ப வேண்டும் என்பதனை வசனம் 1லும், எப்படி அதை செய்ய வேண்டும் என்பதனை வசனம் 2லும், கடவுளின் இரக்கத்தை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்பதனை வசனம் 3லும் கூறப்பட்டுள்ளது. கர்த்தருடைய கோபம், தண்டனை ஆகியவை இருந்தாலும் அவருடைய கிருபை வெளிப்படுகிறது. விசுவாசத்தோடும், தாழ்மையோடும் கர்த்தரிடத்தில் மனந்திரும்புகிற யாவரும் தண்டனையிலிருந்து தப்ப முடியும். இவ்வழைப்பு சீர்கெட்டப் போன யூதர்களுக்கு மட்டுமல்லாது, அனைத்து தேசங்களுக்கும் செப்பனியா தீர்க்கன் மூலம் கூறப்படுகிறது. எப்போது மனந்திரும்ப வேண்டும்? எப்படி மனந்திரும்ப வேண்டும்? போன்ற கேள்விகளுக்கு பதிலை நாம் காணலாம்.

இன்றும் கடவுளின் இரக்கம் மாறாதது. கர்த்தரையும் அவருடைய நீதியையும் உண்மையாய், மனத்தாழ்மையுடன் தேடும்பொழுது, அவரிடம் திரும்ப வரும்பொழுது அவருடைய இரக்கத்தை பெற்றுக் கொள்ளலாம். தாழ்மையுள்ளவர்களுக்கு கர்த்தர் இரக்கம் செய்கிறவர்.

பரம பிதாவே என்னுடைய உண்மையான நிலைமையை சோதித்து உணர்ந்து உமக்கு பிரியமாக வாழ அர்ப்பணிக்கிறேன். ஆமென்.

மாறாதவர்

கர்த்தரால் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட சந்ததி கர்த்தரை விட்டு விலகிபோனாலும் கர்த்தர் மாறாதவராய் இருக்கிறார்.

உதவி (வச.4-7): பாவம் செய்பவர்கள் யூத மக்களாயினும் தண்டனை உண்டு. தேவனுக்கு பிரியமான ஜனம் என்று சொல்லப்படும் இஸ்ரவேல் மக்கள் பாவம் செய்த போது தேவன் அவர்களை தண்டித்தார்.எனவே பாவியை தள்ளாமல், பாவத்தை வெறுக்கிற தேவன், பாவம் செய்கிற யாராயினும் அவர்களை தண்டிப்பார். இவ்வசனங்களில் இஸ்ரவேலரின் பகைவர்களுக்கு தேவ தண்டனை வருகிறது. பெலிஸ்தர்கள்மீது நகரங்கள்மீது தேவன் வழங்கப் போகிற நியாயத்தீர்ப்பு கூறப்பட்டுள்ளது. பெலிஸ்தியர்கள் கர்த்தரால் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மக்களை துன்புறுத்தினார்கள், யூத மக்களும் கர்த்தரின் வாக்குத்தத்தை மறந்து தங்கள் இஷ்டபடி வாழ்ந்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் கர்த்தர் ஆபிரகாமுக்கு செய்த வாக்குத்தத்தை நினைவு கூர்ந்து அவர்களுடைய சிறையிருப்பை மாற்றுகிறார்.

வெற்றி (வச.8-11): மோவாப் மீது கிழக்குக் பகுதியில் வாழ்ந்த மோவாபியர் மற்றும் அம்மோனியர்மீது தேவ தண்டனை வருகிறது. தம்முடைய ஜனத்திற்கு விரோதமாக செயல்பட்ட மோவாபியர்மீது கர்த்தருடைய கோபம் வருகிறது. அவர்களுடைய நிலம் கொமாராவைப் போலும், காஞ்சொறி படரும் இடமாகவும், உப்பு பள்ளமும், என்றைக்கும் பாழாயிருக்கும். மேலும் அந்த ஜனங்களை கொள்ளையிடுவார்கள் என்று கர்த்தர் கூறுகிறார். இதனை அவர் சாதாரணமாக கூறவில்லை. அவருடைய ஜீவனை முன்வைத்து சொல்கிறார். அவருக்கு பிரியமாய் நடந்து கொள்ளும் யாவரையும் அவர்கள் எதிரிகள் கையிலிருந்து பாதுகாக்கிறவர். கர்த்தருக்கும், கர்த்தரின் மக்களுக்கும் விரோதமாக தங்களை மேன்மைப்படுத்தின மோவாப் மற்றும் அம்மோன் புத்திரர்களுக்கு (வசனம் 10) எதிராக கர்த்தர் தன்னுடைய வாக்குத்தத்தத்தின்படி யூத மக்களை எதிரிகளிடமிருந்து விடுதலை கொடுக்கிறார்.

கர்த்தரும், கர்த்தரின் வாக்குத்தத்தங்கள் எந்த சூழ்நிலையிலும் மாறாதது. சுவாசமுள்ள மனிதர்கள் மாறிப்போவார்கள். ஆனால் கர்த்தர் மாறாதவர். அவரில் பற்றுதலாய் இருப்பதே நலம்.

மாறாத ஆண்டவரே உம்முடைய வாக்குத்தத்தங்களை நம்பிக்கையாக வைத்து வாழ உதவி செய்யும். ஆமென்.

வார்த்தை

> "கர்த்தரின் வார்த்தை சகல அதிகாரத்தோடும், கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலத்தை உள்ளடக்கி என்றென்றும் நிறைவேறக் கூடியது".

தீர்க்கதரிசனம் [வச.12-13மு]: தெற்கே வாழ்ந்த எத்தியோப்பியருக்கும், வடகிழக்கு பகுதியில் வாழ்ந்த அசீரியர் மீதும் கர்த்தர் வரப்போகும் தண்டனையைப் பற்றி கூறுகிறார். தன்னுடைய சொந்த பட்டயத்தினால் எத்தியோப்பியர் கொலை செய்யப்படுவார்கள் என்று கர்த்தர் உரைக்கிறார். அசீரியாவை தமது கையை நீட்டி அழிக்கப்போகிறார் என்று உரைக்கிறார். கடவுளுக்கு விரோதமான பாவம் நம்மை அழித்துவிடும். கடவுளின் வார்த்தைகளை எச்சரிப்புடன் கேட்டு நம்மை நாமே சரி செய்துக்கொள்வோம். இல்லையெனில் அவருடைய கோபத்தின் நாளிலே அவர்முன் நம்மால் நிற்க முடியாது.

நினிவே [வச.13பி]: இப்பொழுது இருக்கும் லண்டன், டோக்கியோ, பாரீஸ் அல்லது நியுயார்க் பட்டணத்தைப் போன்று சிறப்பாக அமைந்துள்ளதுதான் நினிவே. இந்தப் பட்டணம் அழகாகவும், கிழக்கு கலாச்சாரத்தாலும், இரசிக்க தக்க கட்டிடங்கள் மற்றும் நூலகத்தோடு அமைந்துள்ளது. மேலும் 90 கிலோ மீட்டர் நீள சுற்று சுவரும், 100 அடி உயரமும், 30 அடி அகலமும், 1500 கோபுரங்களுடனும், ஆயிரக்கணக்கான வீரர்களாலும் பாதுகாக்கப்பட்ட பட்டணம். இப்படிப்பட்ட இந்த நினிவேயை கர்த்தர் பாழாக்கி, வனாந்திரத்திற்கு ஒத்த வறட்சி பூமியாக்குவேன் என்று கூறுகிறார். இதற்கும் காரணம் அவர்களுடைய பாவம். பாவம் பொல்லாதது; அது நமக்கு வேண்டாதது.

அழிவு [வச.14,15]: செப்பனியா அவர்கள் இந்நூலை எழுதி பத்து ஆண்டுகளுக்குப் பின்பு இந்த நினிவே பட்டணம் அழிக்கப்பட்டது. என்னைத் தவிர உயர்ந்தவர்கள் வேறொருவரும் இல்லை என்ற அதிகார மேட்டிமை, இருதயத்தில் கர்வம், எதைப்பற்றியும் கவலைப்படாமல் தன் இஷ்டம்போல் வாழ்ந்த மக்கள் அழிவை சந்தித்தார்கள். நினிவே பட்டணம் அழிந்துப்போனது. கர்த்தரின் வார்த்தை மாறாதது, நிறைவேறக் கூடியது. கர்த்தர் சொல்லியும் செய்யாமல் இருப்பாரோ. தன்னை பற்றி உயர்த்துகிறவர்கள் அனைவருக்கும் கர்த்தர் வார்த்தை எதிராகவே இருக்கிறது.

அன்புள்ள ஆண்டவரே, உம்முடைய உம்முடைய மாறாத வார்த்தைக்கு அடிபணிந்து வாழ அர்ப்பணிக்கிறேன். ஆமென்.

நித்தியம்

> செப்பனியா எருசலேமை சுற்றியுள்ள நாடுகளுக்கு நடக்கும் தீமைகளை சொல்லிவிட்டு, எருசலேமைப்பற்றி கர்த்தர் கூறும் வார்த்தைகளை பதிவு செய்திருக்கிறார்.

கீழ்ப்படியாமை (வச.1-5): எருசலேமிலுள்ள மக்கள் இடுக்கண் செய்து, கர்த்தருடைய சத்தத்துக்கு செவிகொடாமல், அவருடைய கண்டிப்பை ஏற்காமல், கர்த்தரை நம்பாமல், அவரிடம் சேராமல் இருக்கிறார்கள். ஆளுகை செய்கிறவர்கள் சத்தம் போடுபவர்களாகவும், ஓநாய்களை போலவும், அவர்களுடைய தீர்க்கத்தரிசிகள் வீண்பெருமை கொண்டவர்களாவும், வஞ்சிக்கிறவர்களாவும், அவர்களுடைய ஆசாரியர்கள் பரிசுத்தத்தை குலைக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். கர்த்தரின் இரக்கத்தை தவறாக புரிந்துக் கொண்டு தவறு செய்தவர்களை வசனம் ஐந்திலும் (வச.5) வாசிக்கலாம்.

உணர்வில்லாமை (வச.6-8): கர்த்தர் தெளிவாக அவர்களுக்கு ஏற்படும் தண்டனையை விளக்கமாக அவர்களுடைய ஜாதிகளை சங்கரித்தும், அவர்களுடைய வீடுகளை யாரும் பயன்படுத்தாதபடி அதை பாழாக்கியதாவும், மனிதர்கள் வாழ முடியாத பட்டணமாக அவர்கள் பட்டணத்தை மாற்றுவதாகக் கூறுகிறார். மேலும் அவர்களின் மனநிலைமையை பற்றி கர்த்தருடைய கடிந்து கொள்தலை அதாவது அவர் எச்சரித்தும் அதை ஏற்றுக்கொள்ளாமல் இருந்து எப்போதும் போல தங்கள் காரியங்களை செய்தார்கள் என்று விளக்குவதை நாம் புரிந்துக் கொள்ளலாம். வசனம் 8-ல் கர்த்தர் தன்னுடைய கோபத்தின் விளைவுகளை உணர்வற்ற மக்களுக்கு விளக்குகிறார்.

அழியாமை (வச.9-13): கர்த்தர் தான் தெரிந்துக்கொண்ட மக்களை ஒன்றாக கூட்டி மகிழ்ச்சியோடு அவருக்கு ஆராதனை செய்ய வைப்பார். அப்பொழுது மேட்டிமையான மக்கள் தள்ளப்பட்டு தாழ்மையுள்ளவர்கள் என்றென்றும் கர்த்தருடன் வாழ்வார்கள். பாவமில்லாத பரிசுத்தமுள்ள ஒரு கூட்டத்தை தேவன் எருசலேமில் வைக்கிறார். ஒவ்வோரு காலத்திலும் ஒரு சிறு கூட்டத்தை தேவன் ஏற்படுத்துவதால் மனுக்குலம் இன்றும் வாழ்கிறது. இவர்கள் மீது தேவன் கரிசனை கொண்டிருக்கிறார். தேவனை விட்டு நாம் வழி விலகிப் போனாலும் நம் மீது அன்பும் இரக்கமும் கொண்டவராக அவர் இருக்கிறார்.

அன்பின் கர்த்தாவே, உமது வசனங்களுக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்து அழியாத வாழ்வை உம்மோடு வாழ அர்ப்பணிக்கிறேன். ஆமென்.

மகிழ்ச்சி

> மனித அறிவு, மனித இனம் தங்களுடைய படைப்புகளால் மகிழ்ச்சியற்று வாழ்கிறது. ஆனால் கர்த்தரின் பிள்ளைகள் என்றென்றும் மகிழ்ச்சியோடு வாழ வேண்டும்.

காப்பாற்றுதல் [வச.14-18]: மக்கள் செய்த பாவங்களினால் வந்த தண்டனைகளை கர்த்தர் அகற்றி, சத்துருக்களினின்று மீட்பார் என்பதினால் சீயோனையும் எருசலேமையும் குமாரத்தி என்று அழைத்து சந்தோஷமடையுங்கள் என்று கூறுகிறார். மேலும் இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உங்கள் நடுவில் இருக்கிறேன் என்றும் கூறுகிறார். நம்முடைய ஆண்டவர் இரக்கத்தின் உருவானவர். அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நித்திய வாழ்வு. வாழ்க்கை அழித்துக் கொள்ளும் சூழ்நிலையிலுள்ள ஒருவருக்கு உதவிசெய்யும் வாய்ப்பு கிடைத்து அதை செய்து அந்த மனிதனை காப்பாற்றினால் அவனுடைய மனநிலை எவ்வாறு இருக்கும் என்பதனை நாம் நன்றாக உணரமுடியும். இதே போலத்தான் கர்த்தரும் தாம் நேசித்த மக்கள் மிகவும் ஆபத்தான சூழ்நிலையிலுள்ளபோது அவர்களை சத்துருவின் கைகளிலிருந்தும், பயத்திலிருந்தும், நம்பிக்கையற்ற மனநிலையிலிருந்தும் விடுவித்து அவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறார்.

நம்பிக்கை [வச.19,20]: கர்த்தருடைய கோபம், பழிவாங்குதல் என்று துவங்கி இறுதி வசனங்கள் வாக்குறுதிகளோடு முடிவடைகிறது. கர்த்தர் எருசலேமின் நடுவில் இருக்கிறார். அதை "பயப்படாதே" என்றும் "கைகளை தளரவிடேரோத" என்றும் கர்த்தர் கூறுகிறார். கர்த்தர் சிதறியிருக்கும் இஸ்ரவேலர் யாவரையும் கூட்டிச் சேர்க்கிறார். புகழ்ச்சியோடு வாழ வைப்பேன் என்று கூறுகிறார். கர்த்தர் பலனற்றவர்களுக்கு பலன் தருகிறவர். வெட்கத்திற்கு பதிலாக மகிழ்ச்சி, கண்ணீருக்கு பதிலாக களிப்பு, தோல்விக்கு பதிலாக வெற்றி, தாழ்ச்சிக்கு பதிலாக உயர்வு. பூமியின் சகல ஜனங்களை பார்க்கிலும் அவரை நம்பும் பிள்ளைகளை உயர்த்துவார். எப்பொழுதும் பூமியிலும், நித்தியத்திலும் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். சிலுவையின் மீட்பு நித்திய மகிழ்ச்சி, தாழ்மை, நீதி செயல், அவர் மேல் வைக்கும் நம்பிக்கை நம்மை மகிழ்ச்சி அடையச் செய்யும். இஸ்ரவேல் மக்களை நேசித்ததுபோலவே நம்மையும் அவர் நேசிக்கிறார். நம்மீது இரக்கம் வைக்கிறார். அவரது இரக்கத்தை பெற பாவம் இல்லாத வாழ்வு நமக்கு வேண்டும்.

அன்பின் ஆண்டவரே, என் வாழ்வின் தவறுகளை உணர்ந்து உம்முடன் மகிழ்ச்சியாக உதவி செய்யும். ஆமென்.

தேவர்களிலும் பெரியவர்

நீ கர்த்தருக்குப் பயந்து நடந்து கர்த்தரின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்.

உலகத்தையும் அதில் உள்ள அனைத்தையும் உண்டாக்கியவர் கர்த்தர். ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் அவரைத் தள்ளிவிட்டு தங்களுக்கு ஒரு இராஜா வேண்டும் என்று கேட்டுப் பெற்றுக் கொண்டனர். அப்பொழுது கர்த்தர் தாவீதின் சிங்காசனத்தை ஏற்படுத்தி அவர்களைப் பாதுகாத்து வந்தார். ஜனங்களுக்கு முன்பாக மகிமையான காரியங்களைச் செய்தார்.

பயப்படத்தக்கவர் [வச.1-4]: கர்த்தர் சர்வ வல்லமையுள்ளவர். எல்லா தேவர் களிலும் பயப்படத்தக்கவர். மகிமையும், கனமும் அவர் சமூகத்தில் இருக்கிறது. வல்லமையும், மகத்துவமும் அவர் பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது. அவரே நம்மை உண்டாக்கிய கர்த்தர். நாம் அவருக்கு முன்பாக குனிந்து பணிந்து முழங்காலிட்டு அவருடைய நாமத்தை ஸ்தோத்தரிக்க அழைக்கப் படுகிறோம்.

ஆராதிக்க வேண்டும் [வச.5-7] : தாவீது கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டு சமஸ்த இஸ்ரவேலின் மேலும் இராஜாவானான். கர்த்தர் தாவீதோடு இருந்து யுத்தங்களை நடத்தினார். தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்தான். அது தாவீதின் நகரமாயிற்று. அப்பொழுது அவன் கர்த்தருடைய பெட்டியை கர்த்தருடைய நகரத்திற்கு கொண்டு வந்தான். தாவீது சணல் நூல் ஏபோத்தைத் தரித்துக் கொண்டு தன் முழுபலத்தோடு கர்த்தருக்கு முன்பாக ஆடிப்பாடினான். நாமும் தேவனை புகழ்ந்து பாடி அவரை ஆராதிக்க வேண்டும்.

ஆளுகை செய்கிறார் [வச.8,9] : கர்த்தர் பரலோகத்தில் தமது சிங்காசனத்தில் அமர்ந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கிப் பார்க்கிறார். அவர் பூலோகத்திலுள்ள யாவரையும் உண்மையோடும், நீதியோடும் அரசாளுகிறார். கர்த்தரின் ஆசீர்வாதத்தின்படி ஆதாமின் சந்ததி பலுகிப் பெருகி பூமியில் தூளைப் போல நிரப்பினார். பூமியெல்லாம் கர்த்தருடையது. நாம் அவருடைய வசனங்களைக் கைக்கொண்டு அதன்படி நடந்தால் நாம் அவருடைய சொந்த ஜனங்களாயிருப்போம். அவர் சர்வ பூமிக்கும் ஆண்டவராயிருந்து நம்மை ஆளுகை செய்வார்.

ஆண்டவரே, நீர் சர்வவல்லவர் உம்முடைய ஆலோசனையினால் என்னை வழிநடத்தும். ஆமென்.

தாழ்மையை விரும்பும் தேவன்

தேவனின் வழிநடத்துதலை அறிந்துகொள்ள முடியுமா?

கொர்நேலியு என்ற ரோம நூற்றுக்கதிபதியால் அனுப்பப்பட்ட மூன்றுபேர் அங்கு வந்தனர். பேதுருவை செசரியா பட்டணத்துக்கு வரும்படி அழைத்தனர். பரிசுத்த ஆவியானவரின் ஆலோசனைப்படியே, பேதுருவும் கொர்நேலியுவின் அழைப்பை ஏற்றுக்கொண்டான். இன்றைக்கு பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை நாம் கேட்க முடிகிறதா?

பேதுருவின் தாழ்மை (வச.24-27): யோப்பா பட்டணத்தைச் சேர்ந்த ஆறு விசுவாசிகளையும் சேர்த்துக் கொண்டு பேதுரு செசரியா பட்டணத்தில் உள்ள கொர்நேலியுவின் வீட்டிற்கு வந்தார். கொர்நேலியு பேதுருவின் காலில் விழுந்து வணங்கினான். உடனே பேதுரு அவனை தூக்கிவிட்டு "நானும் ஒரு மனுஷன்தான்" என்று சொன்னார். இதன்மூலம் தேவன் மட்டும் நம் துதிக்குப் பாத்திரர் என்பதை வலியுறுத்தினார். மேலும் யூதனாகிய தானும் புற மதத்தினராகிய கொர்நேலியுவும் சமமானவர்கள் என்பதைக் காண்பித்தார். சிலவேளைகளில் மற்றவர் நம்மை அதிகமாக புகழ்ந்து பேசும்போது, நாம் எப்படி அதை ஏற்றுக் கொள்ளுகிறோம்? நாம் நம்மைப் பற்றி அதிக உயர்வாகவோ அல்லது அதிக தாழ்வாகவோ எண்ண வேண்டியதில்லை. நம்மை நாமே நிதானித்து அப்படிப்பட்ட மனோபாவத்துடன் நடந்து கொள்ளவேண்டும். தாழ்மை உள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறார் என்கிற வேத உண்மையை நாம் அடிக்கடி அநேக ஊழியர்கள் மூலமாக கேட்டிருக்கிறோம். ஒரு நாளவது நம் வாழ்வில் நம்முடைய செயல்கள் மூலம் அவைகளைக் காண்பித்திருக்கிறோமா?

கொர்நேலியுவின் அழைப்பு (வச.27-33): புற மதத்தானாகிய கொர்நேலியு பக்தியும், யூத மக்களால் பாராட்டப் பெற்றவரும் தேவனுக்குப் பயப்படுகிறவருமாக இருந்தார். அவரும் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, பேதுருவை அழைத்து வந்து தேவ வார்த்தையைக் கேட்கும்படி பரிசுத்த ஆவியானவரால் திட்டவட்டமாக வழிநடத்தப்பட்டார். தன் குடும்பத்தாரையும் உறவினரையும் பேதுரு வருமுன்னரே தன் வீட்டில் கூட்டியிருந்தான். கடவுளின் பிரசன்னம் தன் வீட்டில் இருப்பதை அறிந்திருந்தார். நம் இல்லங்கள் தேவன் தங்கியிருக்கும் இடமாக உள்ளதா?

ஆண்டவரே, மற்றவர்களைக் குறித்த எதிர்மறையான எண்ணங்களை சரியான விதத்தில் மேற்கொள்ள உதவி செய்யும். ஆமென்.

நற்செய்தி

கிறிஸ்தவ நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள வாஞ்சிக்கிறேனா?

பேதுருவின் செய்தி [வச.34-43]: யோவான் ஸ்நானனின் ஊழியத்தைப் பற்றிச் சொல்லி ஆரம்பிக்கிறார். பின் இயேசு நிறைவேற்றின ஊழியத்தைப் பற்றி பேசுகிறார். இயேசுவின் சிலுவை மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் பற்றி விளக்குகிறார். இந்த உண்மை நிகழ்வுகளுக்குத் தானும் மற்ற அப்போஸ்தலர்களும் நேரில் கண்ட சாட்சிகள் எனவும், இந்த நற்செய்தியை அறிவிக்க அனுப்பப்பட்டவர்கள் எனவும் குறிப்பிடுகிறார். உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார். தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தபடி, இயேசுவை விசுவாசிக்கும் எவரும் பாவமன்னிப்பு பெறுவர் (லூக்.24:47) என்பதையும் சொல்லுகிறார். கிறிஸ்தவ விசுவாசிகள் நற்செய்தியை அறிவிப்பதுடன் வாழ்க்கையிலும் வாழ்ந்து காட்டும் பொறுப்பைப் பெற்றுள்ளனர்.

பரிசுத்த ஆவியின் வரம் [வச.44-46]: பேதுரு பிரசங்கம் பண்ணிக் கொண்டு இருக்கும்போதே, ஒரு அசாதாரணமான நிகழ்வு நடந்தது. பேதுருவின் வார்த்தையை கேட்டுக் கொண்டிருந்த அனைவரும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு தாங்கள் அறியாத பாஷைகளில் தேவனைப் புகழ்ந்து போற்றினர். பெந்தேகோஸ்தே நாளில் எருசலேமில் யூதர்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு பலபாஷை பேசியதைப் போன்றே (அப். 2:4) இப்புற இனத்தவரும் பரிசுத்த ஆவியானவரின் ஈவைப் பெற்றுக் கொண்டனர்.

விசுவாசிகளின் ஞானஸ்நானம் [வச.47,48]: இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொண்ட கொர்நேலியுவும் அவரது வீட்டில் கூடியிருந்த அனைவரும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டதுமன்றி, தண்ணீரால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர். ஞானஸ்நானம் என்பது ஒருவர் பாவத்திலிருந்து கழுவப்பட்டு கிறிஸ்துவுக்குள் உயிர்த்தெழுந்து புது வாழ்வை பெற்றுக் கொண்டதற்கு ஒரு வெளிப்படையான அடையாளமாக உள்ளது. ஆயினும் நாம் ஞானஸ்நானத்தினாலே அல்ல, விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஆண்டவரே, நீர் தரும் தருணங்களில் நற்செய்தியை வார்த்தை மற்றும் வாழ்க்கை மூலம் பகர உதவி செய்யும். ஆமென்.

அப்போஸ்தலர் 11:1–18

மக்களின் முறுமுறுப்பு

நம்மேல் கூறப்படும் எதிர்மறையான குற்றச்சாட்டுகளை எவ்வாறு எதிர்கொள்ளுகிறோம்?

விருத்தசேதனம் செய்து கொண்ட சில யூத விசுவாசிகள் பேதுரு புற இனத்தவர் வீட்டிற்குச் சென்றதையும் சாப்பிட்டதையும் குறித்து குற்றம் சாற்றினர். இவர்கள் யூத பாரம்பரியத்தை அதிகமாக நம்பினவர்கள். யூதருக்கும் புற இனத்தவருக்கும் உள்ள வேறுபாட்டை பேதுரு மீறிவிட்டார் என்று நினைத்தனர். கிறிஸ்தவ ஊழியத்தில் இப்படிப்பட்ட எதிர்ப்புகள் வருவது இயல்பு. நம்மை சுற்றி உள்ள மக்கள் நம்மை பற்றி அவதூறாக பேசவோ, குறை கூறவோ நேரிடும். அவற்றை நிதானமான மனப்பான்மையோடு சந்திக்க வேண்டும். மெதுவான பிரதியுத்திரம் உக்கிரத்தை மாற்றும் என்று நீதிமொழிகளில் நாம் வாசிக்கின்றோம். எனவே நம்மீது கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மையான குறைகளாயின், அவற்றைச் சரிசெய்து கொள்ள வேண்டும்.

பேதுருவின் விளக்கம் [வச.4-18]: தேவன் சுத்தமாக்கியவைகளை அசுத்தமாக எண்ணக்கூடாது என்ற கட்டளைமூலம் யூதர்களும் புற இனத்தவரும் சமமானவர்களே என்று அறிந்து கொண்டதையும் புற இனத்தவரான கொர்நேலியு தேவ வழிநடத்துதலின்படியே, தன்னை அழைத்து தேவ செய்தியைக் கொடுக்கவும், அவன் வீட்டில் கூடியிருந்த குடும்பத்தாரும் உறவினரும் தான் பேசிக்கொண்டு இருக்கும்போதே பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு பல பாஷை பேசினதையும் எடுத்துரைத்தார். நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று இயேசு சொன்ன வார்த்தைகளை நினைவு கூர்ந்து சொன்னார் (வசனம் 16). பேதுரு சொன்னதை யோப்பாவிலிருந்து வந்த விருத்தசேதனம் செய்த ஆறு யூத விசுவாசிகளும் ஆமோதித்துப் பேசினர். அப்போது யூத விசுவாசிகள் குதூகலத்துடனும் மகிழ்ச்சியுடனும் தேவனை மகிமைப்படுத்தினார்கள். கிறிஸ்துவ விசுவாசிகளுக்கும் ஊழியத்தில் ஈடுபடுபவருக்கும் சேவை செய்போருக்கும் இது ஒரு முன்மாதிரியான நிகழ்வு ஆகும். இன்றைய காலத்தில் சபைகளில் ஜாதி, இனம், மதம் என்ற வேறுபாடு செழித்தோங்கி இருக்கின்றது. வேறுபாடுகள் பார்க்கப்படுகிறது. ஆனால் நம்முடைய ஆண்டவர் யாவருக்கும் தேவன். அவர் பட்சபாதம் பார்க்கிறவரல்ல. அவரே பட்சபாதம் பார்க்கவில்லை என்றால், நாம் ஏன் அதை செய்யவேண்டும்?

ஆண்டவரே, சாந்தமான பதிலை ஏற்றவேளைகளில் சொல்லி, உம் அன்பை வெளிப்படுத்த உதவி செய்யும். ஆமென்.

துரிதமான வளர்ச்சி

மற்றவர்கள்மேல் அக்கறையும் பகிர்ந்தளித்தலும் ஒரு கிறஸ்தவனின் குணநலன்.

கிறிஸ்தவ சபையின் ஆரம்ப நாட்களில், புற இனத்தவருக்கு சுவிசேஷம் அறிவிப்பதில் மையமாக இருந்தது எருசலேம் சபை. கிரேக்க மொழி பேசியும், கிரேக்கக் கலாச்சாரத்தைப் பின்பற்றினவர்களும், பின்பு யூதேயாவுக்குத் திரும்பி வந்து, விசுவாசிகளான யூத மக்கள் ஹெல்லனிஸ்ட் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் எங்கெல்லாம் சென்றார்களோ, அந்த இடங்களில் நற்செய்தியை எடுத்துச் சென்றனர் (2:19). அந்தியோகியாவில் முதலில் யூதர்களுக்கும் பின்பு கிரேக்கர்களுக்கும் நற்செய்தி சென்றடைந்தது. புற இனத்தவரும் இயேசுவின்மேல் விசுவாசம் வைத்து விசுவாசிகளாக மாறினார்கள். இப்பொழுது அந்தியோகியா சபையில் புற இனத்தவரின் எண்ணிக்கைக் கணிசமாக வளர்ந்தது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட விசுவாசியின் முக்கிய பணி நற்செய்தியைக் கேள்விப்பட்டிராத மக்களுக்கு நற்செய்தியைச் சொல்லி சாட்சி பகருவதாகும்.

கிளை சபையாகிய அந்தியோகியா சபை துரிதமான வளர்ச்சி அடைவதைக் குறித்து தாய் சபையான எருசலேம் சபை கேள்விப்பட்டபோது பர்னபா (ஆறுதலின் மகன் என்பது அர்த்தம்) என்பவரை அந்தியோகியா சபைக்கு உற்சாகமூட்ட அனுப்பினர். பர்னபா, சமீபத்தில் விசுவாசியாக மாறி தர்சுவில் இருந்த சவுலை அழைத்து வந்து, இருவரும் போதனை ஊழியத்தைச் செய்தனர். அந்தியோகியாவிலிருந்த விசுவாசிகள் முதன்முதலாக "கிறிஸ்தவர்கள்" (கிறிஸ்துவைப் போன்றவர்கள்) என்று அழைக்கப்பட்டதில் ஆச்சரியமே இல்லை. ஊழியத்தைச் செய்கிறவர்கள் பிரசிங்கிக்கப்பட்டதோடு வாழ்ந்துக்காட்டும்போது, விசுவாசிகளின் வாழ்க்கை மேன்மையான மறுரூபமடைகிறது, சமுதாயத்தில் நல்ல விளைவுகளையும் ஏற்படுத்தும்.

எருசலேம் சபையார் வறுமையில் வாடியதை அந்தியோகியா சபையினர் கேள்விப்பட்டபோது, அவர்கள் தங்கள் சபையினரிடமிருந்து நிவாரணப் பொருட்களை சேகரித்தார்கள்; அவற்றை சவுல் மற்றும் பர்னபா மூலம் கொடுத்தனுப்பி கிறிஸ்தவ அன்பை வெளிப்படுத்தினர். இன்றும் வெள்ள பெருக்கு, சுனாமி போன்ற காரணங்களினால் பாதிக்கப்படும் மக்களுக்காக நாம் என்ன செய்கின்றோம்? அவர்களுக்கா ஜெபிக்கின்றோமா?

ஆண்டவரே, நற்செய்தியை அறிவிப்பது எங்கள் முதற்பேரான கடமை என்பதை உணர்ந்து செயல்பட உதவி செய்யும். ஆமென்.

அப்போஸ்தலர் 12:1–19அ

விடுதலையின் நாயகன்

> ஒவ்வொரு நாளும் புதிய புதிய காரியங்களை நம் வாழ்வில் பார்க்கிறோம்.

கிறிஸ்தவ சபையானது மிக வேகமாக வளர்ந்து வரும் அதே வேளையில், சபைக்கு எதிராக உபத்திரவங்களும் தொடங்கின. இந்தப்பகுதியில் குறிப்பிடப்பட்ட இராஜா, மகா பெரிய ஏரோது இராஜாவின் பேரன் ஆவார். இந்து ஏராது யாக்கோபின் சகோதரன் யோவானைக் கொலை செய்தார். இப்படிச் செய்தது இயேசுவின் புதிய வழியை எதிர்த்த யூதர்களுக்குப் பிரியமாயிருந்தபடியால், பேதுருவையும் கைது செய்து காவலில் வைத்தார்.

பஸ்கா பண்டிகை முடிவுற்றதும், பேதுருவை விசாரணை செய்து, பின் கொல்லுவது அவரது திட்டம். அடுத்த நாள் பேதுருவை சிறையிலிருந்து வெளியில் கொண்டு வரவேண்டும். ஆயினும் சபையார் ஊக்கமாக பேதுருவுக்காக ஜெபத்தில் மன்றாடினார்கள். கிறிஸ்தவனுக்கும் சபைக்கும் எதிராக எழும்பும் எதிர்ப்பை மேற்கொள்ள ஆயுதமல்ல, வல்லமையுள்ள ஜெபம் போதுமானது. பேதுரு நிம்மதியாக தூங்கிக் கொண்டிருந்தார். தேவனுடைய கட்டுப்பாட்டில் எல்லா மனிதரும் எல்லா சூழ்நிலைகளும் இருக்கின்றன. தேவதூதன் மூலம் பேதுரு சிறையிலிருந்து சுதந்திரமாக வெளியே வந்தார். பேதுரு கதவை தட்டினபோது ரோதை என்னும் பெண் சந்தோஷத்தினால் கதவை திறக்கவில்லை. ஆனால் வந்திருப்பது பேதுரு என்று அறிந்து கொண்டாள்.

விடுதலை பெற்ற பேதுரு, யோவான் மாற்குவின் தாயார் மரியாளின் வீட்டிற்கு வந்தார். ஊக்கமுடன் ஜெபித்த, ஆனால் முதலில் விசுவாசியாத, சபையார் பேதுருவைக் கண்டு தேவனைத் துதித்தனர். விளையாட்டாக ஒரு கதை சொல்லுவார்கள். ஒரு விசுவாசி அம்மா தன் வீட்டின் முன் உள்ள மலை ஒன்று அங்கிருந்து நகர வேண்டும் என்று ஜெபித்துவிட்டு, தூங்கிவிட்டார்கள். அடுத்தநாள் மலை அப்படியே இருந்தது. உடனே அந்த அம்மா எனக்கு அப்பவே தெரியும் என்று சொல்வார்களாம். இது நமக்கு சிரிப்பை ஏற்படுத்தும். ஆனால் சிந்திப்போம். யாக்கோபுக்குத் தான் விடுதலையாகிய செய்தியைச் சொல்லும்படி பேதுரு கேட்டுக்கொண்டார். கடவுளின் திட்டத்தில் தாமதமே கிடையாது. கிறிஸ்தவர்களாகிய நமக்கு விசுவாசிகள் என்று பெயர். ஆனால் நம்மிடம் தேவன் எதிர்பார்க்கும் விசுவாசம் இருக்கின்றதா?

ஆண்டவரே, வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும் உம்மைப் பற்றிக் கொள்ள உதவும். ஆமென்.

அப்போஸ்தலர் 12:19ஆ–25

தேவனின் தீர்ப்பு

உலகத்தில் நடக்கும் அநீதியான சம்பவங்களைக் குறித்து என் மனப்போக்கு.

சிறைச்சாலையின் காவலர்கள் அடுத்தநாள் பேதுருவை காணவில்லை, வெளியே கொண்டுவர பேதுரு சிறையில் இல்லை என அறிவித்தபோது ஏரோது, அதிக கோபமடைந்து, அந்த காவலர்களை கொலை செய்தான். ஏரோதின் கோபம் உயிர்கள் போக காரணமாயிருந்து.

ஏரோதுவின் இராஜ்யத்தின் எல்லைக்கு அருகில் இருந்த பெனிக்கேயா நாட்டின் கடலோரத்தில் இருந்த தீரு மற்றும் சீதோன் பட்டணங்கள் மிக முக்கியமானவை. இவை வாணிபம் மற்றும் கப்பல் தளங்களின் மைய ஸ்தலமாகவும் விளங்கின. ஆயினும் இப்பட்டணங்களின் உணவுத் தேவைகளுக்குக் கலிலேயாவையே சார்ந்து இருக்க வேண்டியிருந்தது. ஏரோதுவுக்கும் இந்தப் பட்டணங்களுக்கும் இடையில் சில உடன்பாடுகள் ஏற்பட இருந்தது. அந்த உடன்பாடானது ஒரு பொதுவான விழாவின்போது உறுதி செய்யப்பட இருந்தது. அந்த விழாவில் ஏரோது உரையாற்ற இருந்தான்.

ஏரோதின் சொற்பொழிவும் கடவுளின் நியாயத்தீர்ப்பும் : ஏரோதின் சொற்பொழிவைக் கேட்ட கூட்டத்தினர் "இது மனுஷ சத்தமல்ல. இது தேவ சத்தம்" என்று ஆரவாரித்தார்கள். ஏரோது அதை மறுத்துப் பேசாமல், அவர்கள் தன்னை தேவன் என்று அழைத்ததை அங்கீகரித்தான். இயேசு அநேக அற்புதங்களை செய்தார். ஒருமுறை கூட அவர் தன்னை உயர்வாக பேசினதாக நாம் காணமுடியாது. ஏனெனில் அடிமையின் ரூபம் எடுத்து தாழ்மையின் சின்னமாய் வந்தவர். உடனே தேவனுடைய நியாயத்தீர்ப்பு வந்தது. தேவதூதன் அவனை அடிக்க, புழுபுழுத்து அகால மரணமடைந்தான். இந்நிகழ்வுக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் நடந்து கொள்ளும் பேதுருவின் தாழ்மையைப் பாருங்கள் (10:25-26). பர்னபாவும் பவுலும் யோவான் என்கிற மாற்குவையும் கூட்டிக்கொண்டு எருசலேமுக்குத் திரும்பினர். முடிவாக, நற்செய்தி எப்படி யூதரிடமிருந்து புற இனத்தினருக்கும் செல்லுவதுபற்றியும், பேதுருவின் ஊழிய முடிவையும், சவுல் என்கிற பவுல் ஊழியம் ஆரம்பிப்பதையும் காண்கிறோம்.

ஆண்டவரே, வல்லமையுள்ள உம்முடைய வார்த்தை எங்கும் செல்ல என் பங்கை நிறைவேற்ற அருள்தாரும். ஆமென்.

எருசலேமைப் பற்றி

எருசலேமை கர்த்தர் காத்தது போல, நம்மை எவ்வாறெல்லாம் பாதுகாக்கிறார்?

படையெடுத்து வந்த பகைவர்களின் கைகளுக்கு கர்த்தர் காப்பாற்றினார். இதை எண்ணி தேவனைப் புகழ்ந்து இச்சங்கீதம் பாடப்பட்டது.

அழகுள்ள நகரம் [வச.1-3] : எருசலேம் நகரம் தேவனுடைய நகரம். பரிசுத்தமான நகரம். மகிழ்ச்சியை தரக்கூடிய நகரம். அழகில் சிறந்த இடம். முழு பூமியும் எருசலேமைப் பற்றி மகிழ்ச்சியடையும் நகரம் என்று வர்ணிக்கப்படுவது அதன் மகிமையை உயர்த்திக் காட்டுகிறது. இந் நகரத்தின் அழகைக் கூறுவதை விட, அங்கு வாசம் செய்யும் தேவனுடைய மகிமையையே பெரிதுபடுத்தி சங்கீதக்காரன் கூறுகிறான். கர்த்தர் நம்மில் வாசம் செய்வாரேயானால், நம் வாழ்க்கை அழகுள்ளதாகவும், நறுமணம் வீசக்கூடியதாகவும் அமையும்.

பாதுகாக்கப்பட்ட நகரம் [வச.4-8] : இராஜாக்கள் ஒன்று கூடி எருசலேமுக்கு எதிராக வந்தார்கள். இது கி.மு.701ல் சனகெரிப் செய்த முற்றுகை என்று சொல்லப்படுகிறது. ஒன்று கூடி வந்தவர்களை உடைந்த கப்பல் துண்டுகளைப் போல கர்த்தர் சிதறப்பண்ணினார். எருசலேம் கர்த்தர் வாசம் செய்யும் இடமாக இருப்பதால் எந்தவொரு சக்தியாலும் அதை நெருங்க முடியாது.

மகிழும் நகரம் [வச.9-11] : இதற்கு முன் படையெடுத்து வந்த அரசர்களுக்கு கர்த்தர் செய்தவைகளை இஸ்ரவேலர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். இப்போது தங்கள் கண்களால் கண்டார்கள். இதனால் மகிழ்கிறார்கள். தேவனுக்கு நன்றி செலுத்த தேவாலயம் சென்று, அவர் தங்களுக்குக் காட்டிய கிருபையை எண்ணுகிறார்கள்.

உற்றுப்பார்க்க வேண்டிய நகரம் [வச.12-14] : எருசலேமை கர்த்தர் பாதுகாத்ததை எண்ணிப் பார்த்து, பின்சந்ததிக்கு அறிவிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. தேவன் வாசம் செய்யும் இடத்தின் கொத்தளங்கள், கோட்டைகள் யாவற்றையும் உற்றுப்பார்க்க வேண்டிய நகரம். இப்போது இந்தப் பட்டணத்தைக் காத்ததைப் போன்று இனி வரும் நாட்களிலும் இறுதி வரை பாதுகாத்து நடத்துவார் என்கிறான் சங்கீதக்காரன்.

தேவனே, எனக்கு வரும் தீமைகளினின்று நீர் பாதுகாத்தருள உம்மை மன்றாடுகிறேன். ஆமென்.

ஏசாயா 5:1-7

கனி தருதல்

என் வாழ்வின் முன்னுரிமைகள் தேவன் என் வாழ்விற்கென வைத்திருக்கும் இலக்கையும் திட்டத்தையுமே ஒத்திருக்கிறதா?

தேவன் அன்பாக கரிசனையோடு வாழ்வினை நேர்த்தியாக நமக்கு கொடுத்து சிறப்பான இடத்தில் நம்மை வைத்திருக்கிறார். கனிகொடுக்க எதிர்பார்க்கிறார். அவரது கரிசனையான கண்காணிப்பினிமித்தம் கனி எதிர்பார்க்கிறார். கற்களை எடுத்து, சுத்தப்படுத்தி, வேலியடைத்து, திராட்சை ஆலை நிறுவி காத்திருந்த அவருக்கு ஏமாற்றம்தான். **வேலியடைத்து** - வாழ்க்கைக்குரிய 10 கட்டளைகளை அளித்து, **கற்களைப் பொறுக்கி** - பாவங்களையும் சாபங்களையும் நம்மை விட்டு நீக்கி, **நற்குல திராட்ச செடிகளை நட்டு** - தேவனால் தெரிந்தெடுக்கபட்பட்ட மக்களாய் மாற்றினார். அன்பையும், கிருபையையும் அளித்து, நீதியும் நியாயமும் எதிர்பார்த்திருந்த அவருக்கு கிடைத்தது இரத்தம் சிந்துதலும், ஏழ்மை நிலையிலிருப்பவரின் கூக்குரலும்தான். நாம் நிதானமாய் யோசித்து பார்ப்போம். நாம் ஒரு மரம் வளர்த்து அதற்கு அதிக முக்கியவத்துவம் கொடுத்து அது சரியான பலனை தரவில்லையென்றால் நாம் என்ன செய்வோம்? நம்முடைய ஆண்டவரும் நம்மை நேர்த்தியாய் இந்த மண்ணில் நம்மை படைத்து, நாம் அவர் விரும்பும் பாத்திரமாய் காணபட்டு, அவரையே சேவிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். நாம் அவர் விரும்பும் வண்ணம் வாழ்கிறோமா?

திராட்சை தோட்டம் என்ற உருவச்சாயல் புதிய ஏற்பாட்டில் அநேக இடங்களில் வருகிறது. (உ.ம். மத்தேயு 21:33-46 : யோவான் 15:1-11) போன்ற பகுதிகள் இயேசு கிறிஸ்துவின் பண்பினை கூறும் இறையியல் பகுதிகளாக உள்ளது. கிளைகளாக, கொடிகளாக நாம் இயேசுவாகிய திராட்சைச் செடியோடு இசைந்திருக்கும்போது கனி கொடுக்க முடியும். விசுவாச வாழ்வில் நற்கிரியைகளாகிய கனிதர இது ஒரு நல்ல கூற்று. திருச்சபை கர்த்தரை சார்ந்திருக்கும்போது நம்முடைய நீதி, விசுவாசத்தினால் கிருபையாக நமக்கு அளிக்கப்பட்டுள்ள ஈவு என்பதை அறிகிறோம். இயேசு கிறிஸ்து சொன்னார், "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" மத்தேயு 7:20. உன்னுடைய கனி சமீபத்தில் எது என்று நிர்ணயித்து அறிந்ததுண்டா? அது நல்லதா கெட்டதா? பிரயோஜனமுள்ளதா காட்டுப்பழமா?

பொறுமையோடு, கனிதந்து இறுதியில் நித்திய வாழ்வினை பெற என்னையும் தகுதிப்படுத்தும் ஆண்டவரே. ஆமென்.

கீழ்ப்படியாமை அவலமானது

கீழ்ப்படிதல் விலையேறப்பெற்றது.

தீர்க்கதரிசி ஐயோ என்று ஆறு முறை இப்பகுதியில் கூறுவதைக் காண்கிறோம். சமுதாயத் தலைவர்கள் நியாயத்தை, ஒழுக்கத்தை சமய மதிப்பீடுகளை சீர்குலைத்திருந்தார்கள். தேவனிடத்திலிருந்து வரும் ஞானம் நிராகரிக்கப்பட்டது. முதலாவது வருத்தம் (வசனம் 8-10)ல் அதிக செல்வம் சேர்த்த மக்களை குறித்தது. அவர்கள் வீடுகள் பாழாகும். அவர்கள் வயல்கள் விளைச்சலை தராது. இரண்டாவது (வச.11-17)ல் கர்த்தரின் வழியை அறியாதிருந்த மதுபான வெறியரைக் குறித்தது. அவர்கள் மரணமடைவார்கள்.

மூன்றாவது (வச.18-19)ல் நியாயத்தை புரட்டி, வர இருக்கும் நியாயத்தீர்ப்பை அலட்சியப்படுத்தினவர்களை குறிக்கும். நான்காவது (வச.20)ல் சமய மதிப்பீடுகளை கறைப்படுத்தினவர்களைப் பற்றியது. கர்த்தரின் வெளிப்பாடு அவர்களுக்கு இனி ஒருநாளும் பாதைக்கு வெளிச்சமாய் இருப்பதில்லை. ஐந்தாவது (வச.21) கர்த்தரின் ஞானத்தை மனிதனின் புத்தியீனத்திற்கு மாற்றிக்கொண்டவர்களைப் பற்றியது. ஆறாவது (வச.22, 23) பரிதானத்திற்காக குற்றவாளியை நீதிமானாக்கி, நீதிமானின் நியாயத்தை அவனுக்கு விரோதமாய் புரட்டுகிறவர்களுக்கு விரோதமாக இருக்கிறது.

தேவன் உணர்த்தும் ஆறு பாவங்கள் இப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. பிறரை சூறையாடுவது (வச.8-10), மதுபானம் அருந்துவது (வச.11,12) மது அருந்துவது எத்தகைய அடிமைத்தனம், பாவத்தில் பெருமைப்பாராட்டுவது (வசனம் 18, 19), குழப்பமான ஒழுக்கநெறி (வச.20), இறுமாப்பு (வச.21), நியாயத்தைப் புரட்டுவது (வச.22-24). நமது சந்தோஷங்களில் தேவ ஆசீர்வாதம் இல்லையெனில் அது நம்மை அழிக்கும். கடவுளை நம்மைவிட்டு தூரப்படுத்தும்போது பாவம் கிட்டிச்சேரும். இதில் எந்த ஒரு பாவமும் குறிப்பிட்ட ஒரு வயதினருக்கு மட்டுமே என்று சொல்லமுடியாது. இன்றைய சமுதாய சூழலில் அனைத்துமே உள்ளது. கர்த்தரின் ஊழியர்கள் இப்படிப்பட்ட பாவத்தைக் குறித்து ஆணித்தரமாக பேசுவது எத்தனை அவசியமானது!

தேவனே உம்மை துக்கப்படுத்தும் பாவ வழியிலிருந்து விடுதலைப் பெற்று மனந்திரும்ப உதவி செய்யும். ஆமென்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு

> கர்த்தருடைய நாள் வெளிச்சமும், மீட்புமுடையதல்ல. அந்தகாரமும், தெளிவற்றதும், கவலையுள்ள நாளுமாகும்.

நம்முடைய ஆண்டவர் ஆசீர்வதிப்பவர்தான். இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே பிரியம் என்று கூறுகிறார். ஆனால் இங்கே ஆசீர்வாதத்திற்குப் பதில் சாபத்தை தேவனிடமிருந்து பெற்றனர் இஸ்ரவேலர். தேவன் நியாயாதி பதியாக வரும்போது இராஜாவாக இஸ்ரவேலின் பரிசுத்தராக வர இருக்கிறார். சேனைகளின் தேவனை நிராகரித்து, அவரது வார்த்தைகளை அசட்டைப் பண்ணுகிறவர்களுக்கு உண்டாகும் அழிவினை தீர்க்கதரிசி உரைக்கிறார். கர்த்தர் இரக்கமற்று அழிப்பதை காண்கிறோம். அகோரமான ஓய்வில்லாத பகைஞர்கள் எழும்பி அழித்து நிர்மூலமாக்கி தேவ ஜனத்தை சிறைப்படுத்துவதை இங்கு காண்கிறோம். தேனீக்களை பயில்காட்டி அழைப்பதுபோல தேவன் அசீரியரை அழைக்கும்போது அவர்கள் உடனே பதில் கொடுப்பார்கள் என்பதாக அறிகிறோம்.

கடவுளின் கட்டளைகளுக்கு கீழ்ப்படியாததின் நிமித்தமாக மனிதர் பாடுபட்டனர் என்கிறார். இன்று அநேகர் வாழ்வின் அர்த்தம் காண அலைகின்ற நிலையை காண்கிறோம். வேத வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து இஸ்ரவேல், யூதா செய்த தவறிலிருந்து நாம் விடுபடுவோம். பாவம் செய்கிற ஆத்துமா சாகும் என்ற வார்த்தையின்படி தேவனுக்கு விரோதமாக கலகம் செய்தவர்கள் நிச்சயம் அதற்குரிய தண்டனையைப் பெறுவார்கள். அந்நிய தேசத்தாரைக் கொண்டு தம் சொந்த மக்களைத் தேவன் தண்டிக்கிறார். அசீரியப் படைகள் கி.மு.722ல் இஸ்ரவேலரையும், கி.மு.701ல் யூதாவையும் தாக்கின. பின்னர் கி.மு.605 முதல் யாவற்றையும் பாபிலோனியர் நாசப்படுத்தத் துவங்கினர். பழைய ஏற்பாட்டில் தேவன் உடனே தண்டனை வழங்கினார். ஆனால் கிறிஸ்துவுக்கு பிறகு அவரது கிருபையால் நாம் தண்டனையை உடனே பெறுவதில்லை. ஆயினும் பாவம் செய்தவர்களுக்கு நித்திய தண்டனை உண்டு. இவ்வுலக நியாயத்தீர்ப்பு இனிவரும் தேவாதி தேவனின் பெரிய நியாயத்தீர்ப்பின் முன் அடையாளம். இதுவே தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாகவும் பாவத்தின் நியாயத்தீர்ப்பாகவும் அமையும். தன் இஷ்டபடி வாழும் மனிதனை தேவன் ஆசீர்வதிக்க முடியாது.

தேவனே உமது சத்தம் கேட்கும் உணர்வுள்ள இருதயம் தந்து உமது சத்தியத்திற்கு செவிசாய்க்க உதவி செய்யும். ஆமென்.

ஏசாயா 6:1–13

பொறுப்புரிமையளிக்கப்படுதல்

தூய தூய தூய சர்வ வல்ல நாதா!

இது வேத புத்தகத்தின் ஒரு முக்கியமான பகுதி. இதில் தீர்க்கதரிசி தேவ தரிசனம் பெறுகிறார். தேவாலயம் தேவ மகிமையால் நிறைந்திருக்கிறது. இயற்கைக்கு அப்பாற்பட்ட மகிமையுடைய ஆனால் உள்ளார்ந்த பிரசன்னத்தால் நிறையப்பட்டது தேவாலயம். சேராபீன்கள் தேவ மகிமையை இஸ்ரவேலின் பரிசுத்தரை போற்றினர். பரிசுத்தம் என்பது பாவத்திற்கு முற்றிலும் விலகின முழு ஒழுக்கமும் நீதியுமுடையவர் என்பதாகும். தேவனுடைய பரிசுத்த மகிமையையும் உன்னதமானவரின் பரிசுத்த பிரசன்னத்தையும் கண்ட ஏசாயா, "ஐயோ அதமானேன்!" என்கிறார். தன்னுடைய அபாத்திர நிலையை உணருகிறார். உடனே சேராபீன்களில் ஒருவன் தன் கைகளில் பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து, ஏசாயாவின் வாயைத் தொட்டார்.

ஏசாயா ஆண்டவரோடு பேசு முன் அவன் மன்னிக்கப்பட வேண்டும். இந்த மன்னிப்பு தனி மனிதனுக்குரியது. நாமும் தேவனுடைய பரிசுத்தத்தை கண்டுபிடிக்க வேண்டும். நம்முடைய அநுதின எண்ணக்குலைவு, சமுதாய அழுத்தங்கள், குறைபாடுகள் கடவுளை குறித்த பார்வையை மட்டுப்படுத்துகிறது. கடவுளுடைய தூய்மையை நாம் சரியாக கண்ணோக்கும்போது அவர் நம்மை பாவமற கழுவி நம்முடைய பிரச்சனைகளிலிருந்து நம்மை விடுவித்து அவரை தூய்மையான மனதோடு தொழுது கொள்ளவும், சேவிக்கவும் உதவுவார். தேவன் நம்மை சுத்திகரிக்க அநுமதிப்பது சற்று வேதனையாக இருக்கும். ஆனால் தூய்மைப்படுத்தப்படும்போதுதான் ஒரு பரிசுத்த தேவனை நாம் பிரதிபலிக்க முடியும்.

ஏசாயா பரிசுத்தமாக்கப்பட்டபின் தேவ சமூகத்தில் பொறுப்புரிமை பெறுகிறான். யேகோவா கேட்கிறார். "யாரை நான் அனுப்புவேன்? யார் நமது காரியமாய் போவான்?" என்று. ஏசாயா தன்னார்வமாக தத்தம் செய்கிறார். தேவன் பொறுப்புரிமையளிக்கிறார். இந்த ஊழியம் கடினமாக இருக்கும் என்றும் கூறுகிறார். நியாயத்தீர்ப்பு, பாழாக்குதல், அழிவு இவையே அழுத்தமாக சொல்லப்பட்டாலும் "பரிசுத்த வித்து" மீந்திருக்கும் என்பதே நம்பிக்கை.

தேவனே, உமது சித்தமே எனது மூச்சாகட்டும். ஆமென்.

நெருக்கடியான சூழலில் நம்பிக்கை

> ***நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறியுங்கள். சங்கீதம் 46:10***

கி.மு.734 ஆம் ஆண்டு நடைபெற்ற நிகழ்ச்சிதான் இங்குச் சொல்லப்பட்டு உள்ளது. ஏசாயா தீர்க்கதரிசி ஆகாஸ் ராஜாவுக்கு சொல்லும் செய்தியாக அமைகிறது.

அசீரியாவும் எகிப்தும் இரக்கமற்ற வல்லரசாக இருந்தனர். சூரியனுக்கு கீழே அனைத்து நாடுகளும் அவர்களுக்கு பயந்தனர். ஆனால் அவர்களை பயில்காட்டி அழைப்பதாக தேவன் கூறுகிறார். யூதர்கள் தேவனை இஸ்ரவேலின் தேவனாக அறிந்தனர். ஆனால் அசீரியரையும் எகிப்தையும் பயில்காட்டி அழைப்பார் என்று எண்ணவில்லை. இஸ்ரவேலை நியாயம் விசாரிக்க மிகச் சிறந்த வல்லரசையும் கொண்டு வருவது தேவனுக்கு இன்றியமையாதது.

தேவன் சர்வாதிகாரமுள்ளவர் : 1. நாடுகள் மேல் - அசீரியா, எகிப்து, பாபிலோன், மேதியர், பெர்சியர், கிரேக்கர், ரோமர் போன்ற வல்லரசுகளை கொண்டு வந்து தன் வார்த்தையை நிறைவேற்றினார். (ஆபகூக் 1:6-11 ; ஏசாயா 40:11-17), 2. இராஜாக்கள், அதிகாரிகள் மேல் (நீதி. 21:1 ; ரோமர் 13:1), 3. தனி நபர் மேல் (நீதி. 16:1 ; எரேமியா 10:28), 4. நிகழ்வுகளின் மேல் (ரோமர் 8:28).

இம்மானுவேலின் அடையாளம் : பயப்படாதே என்று தைரியப்படுத்திய கர்த்தர் அகாஸிடம் ஒரு அடையாளத்தைக் கேள் என்றார். இஸ்ரவேல் என்னும் கன்னிகை பெறப் போகும் பிள்ளை இம்மானுவேல் என்று அழைக்கப்படுவான். அவன் வெண்ணெயையும் தேனையும் சாப்பிடுவான். இந்த காலம் நிறைவேறும்போது இஸ்ரவேலும், சீரியாவும் அழிந்து போகும். ஏசாயா வாசகத்தின் பயனிலைப்பகுதியை ஆகாஸிடம் கூறி தேவன் தம்முடைய மக்கள் மத்தியில் அவருடைய நோக்கங்களை நிறைவேற்றுகிறார் என்றான். மேசியாவைக் குறித்த வாக்கு தேவன் தம்முடைய பிள்ளைகளை இதுவரை கைவிடவில்லை என்பதும், இனியும் கைவிடமாட்டார் என்பதும், முழுமையான மீட்பு வரை அவரது திட்டத்தை நிறைவேற்றுவார் என்பதுமாகும்.

தேவனே என்னோடிருக்கிறவர் நீர் என்பது உம்முடைய மீட்பையும், நியாயத்தீர்ப்பையும் எனக்கு நினைவுபடுத்துகிறதற்காய் நன்றி. ஆமென்.

ஏசாயா 8:1–22

கர்த்தருக்கு காத்திரு

> கர்த்தர் – எனது அடைக்கலமா? எனது அறிவா?

கர்த்தருடைய வார்த்தை எச்சரிப்பாகவும் அதே நேரம் ஆறுதலாகவும் ஏசாயா மூலமாக வருகிறது. ஏனெனில் கர்த்தருடைய வார்த்தை இருபுறமு கூர்மையானதல்லவா?

முதலாவதாக, வச.11ல் ஏசாயாவுக்கு பிறரிடமிருந்து பிரிந்து வித்தியாசமாக வாழ அழைப்பு விடப்படுகிறதையும், கர்த்தரின் துணையின்றி அவ்வாறு வாழ இயலாது என்பதையும் அறிகிறோம். ஏசாயா இவ்வாறு எச்சரிப்பு பெற்றார் என்றால், இன்று பொல்லாங்கான உலகில் வாழ்கிற நமக்கு இது எத்தனை பொருத்தம். பிறரின் வழியில் வாழ்வது ஒன்று. ஆனால் அவர்களது வாழ்வு முறை நம்மை நெருக்குவது ஆபத்தானது. தேவன், நாம் அவர்களால் நிலைமாற்றம் அடையக்கூடாது என்கிறார் (வச.12).

இரண்டாவதாக தேவனை நோக்க ஒரு அழைப்பு கொடுக்கப்பட்டது. அவர்கள் அசீரியரை கனப்படுத்தி, தேவனை கனப்படுத்தாதிருந்தனர். எனவே கர்த்தரையே நோக்க ஏசாயாவும் அவனது கூட்டாளிகளும் அழைக்கப்படுகின்றனர். நாம் தேவனை நோக்கிப்பார்க்கும்போது அவர் நமக்கு புகலராணாகிறார். இல்லையெனில், கல்லில் இடறுவீர்கள் (வச.14,15). கல் நம்மை புரளச் செய்யும் அல்லது மூலைக்கல்லாகும். மூன்றாவதாக, கர்த்தருக்கு காத்திருக்க ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது (வச.17,18). கர்த்தருக்கு காத்திருக்கும்போது நாம் ஒரு நாளும் தர்மசங்கடமான சூழலுக்கு தள்ளப்படோம். பிறர் நம்மை உந்தி தள்ளினாலும் தேவனுடைய சித்தத்திற்கும், நேரத்திற்கும் காத்திருப்பது நல்லது. அதுவே சிறந்தது. சூழ்நிலைகளை கையாள நினைக்கும்போது அது நம்மை வடிகால்களாக மாற்றுகிறது. ஆனால் கர்த்தருக்காக அமைதியாக காத்திருப்பது நம்மை புது பெலன் அடையச் செய்யும். நம்மை அவர் அழைத்திருக்கும் அழைப்புக்காக பெலப்படுத்தக் கேட்கும்போது அவர் தரும் வியக்கத்தக்க பெலனை நாம் அனுபவிக்கலாம். கடைசியாக அவரது சத்தத்தை கவனிக்க அழைப்பு கொடுக்கப்படுகிறது (வச.19-22). ஞானத்திற்கும், ஆலோசனைக்கும் நாம் தேவ வசனத்தை கவனியாமல் இருந்தால், நாம் இருளில் அலைகிறவர்களாய் இருப்போம்.

என் கோரிக்கையை தேவனே நீர் நிறைவேற்ற பொறுமையாய் காத்திருக்க உதவி செய்யும், ஆமென்.

மனச் சோர்விலிருந்து மகிமைக்கு

இன்று கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளை துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்.

ஏசாயாவின் முக்கியமான தீர்க்கதரிசனம் யூதாவும், இஸ்ரவேலும் தேவனுக்கு உண்மையற்று இருந்ததினிமித்தம் தேவன் அவரது கிருபையை அவர்களைவிட்டு விலக்கினதைப்பற்றியது. ஆனால் இந்த நியாயத்தீர்ப்பைத் தொடர்ந்து வரும் மகிமையையும் அவர் கூறுகிறார். வெளிச்சம் உதிக்கும்போது, நாடு மீண்டும் ஆசீர்வதிக்கப்படும் என்பதாக கூறுகிறார். மிகுதியான அறுப்பில் மகிழ்கிறதற்கு ஒப்பான மகிழ்ச்சி இருக்கும் என்கிறார். இது தேவனுடைய திருச்சபையாகிய இஸ்ரவேலைக் குறிக்கும். கிறிஸ்துவில் அவர்களுக்கு இருக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தையும், மகிழ்ச்சியையும் அது சித்தரிக்கிறது.

இயேசு கிறிஸ்துவில் நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் : தங்களது பாவச் செயல்களினால் தங்களையே இருளுக்குள் வைத்துக் கொண்ட மக்களுக்கு வெளிச்சம் உண்டாகத்தக்கதாக சூழ்நிலை மாறுகிறது. இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் வருகையை முன்னறிவிக்கிற வார்த்தைகள் இவை. 1. கர்த்தத்துவம் அவர் தோளின்மேல் இருக்கும் – இன்று இயேசு கிறிஸ்துவுக்கு அதிகாரம் உண்டு (மத்தேயு 28:18-20). 2. இயேசு கிறிஸ்து நமக்கு ஆலோசனைக் கர்த்தா. அவரது ஆலோசனைகள் வியப்பூட்டுபவை, 3. அவர் வல்லமையுள்ள தேவன். அவரே மிகச்சிறந்தவர். ஏனெனில் அவரது தியாகம், அன்பு, வல்லமைக்கு ஈடானது ஒன்றுமில்லை. 4. அவர் 'நித்திய பிதா' அவருடைய பிள்ளைகளாகும்படியான அதிகாரத்தை நமக்கு கொடுத்திருக்கிறார். (யோவான் 1:12). அவர் பிதாவின் குணலட்சணங்களை உடையவராகையால் அவரைப் பார்க்கும்போது பிதாவை காண்கிறோம் என்று சொல்லலாம் (யோபு 14:8-11). 5. அவர் 'சமாதான பிரபு' அவர் ஒருவரே தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தராகி சமாதான காரணராயினார். (2 கொரி. 5:18,19). கடைசி வசனம், கிறிஸ்து தாவீதின் வம்சத்தில் உதித்து நீதியாய் அரசாளுவார். இந்த கிறிஸ்து நித்திய ஒளியாக நம்மில் பிரகாசிக்கட்டும். இவரே தாவீதின் சிங்காசனத்தின்மேல் ஆயிரம் வருஷமல்ல நித்தியகாலமாய் அரசாளுவார் என்பதை தெளிவாக்குகிறது.

அன்பினாலும் பரிசுத்தத்தினாலும் இருளையும் நீக்கின தேவாதி தேவனே உம்மை துதிக்கிறேன். ஆமென்.

ஏசாயா 9:8–10:4

அமைதியாயிருப்பதின் ஆபத்து

> **தேவனுடைய கோபம் அவரது ஒருபக்கம் என்றால் அவரது அன்பு அதன் மறுபக்கம்.**

இந்த பகுதி நான்கு பாகமாக உள்ளது. ஒவ்வொரு முறையும் "இவை எல்லாவற்றிலும் அவருடைய கோபம் ஆறாமல், இன்னும் அவருடைய கை நீட்டியபடியே இருக்கிறது" என்று முடிவு பெறுகிறது. (வசனம் 9:12,17,21 : 10:4) இஸ்ரவேலின் அகந்தை தேவனால் எச்சரிப்பு பெறுகிறது. சீரியர், பெலிஸ்தியர் இஸ்ரவேலரை பெலவீனப்படுத்தினார். ஆனால் இந்த இராணுவ தோல்வி தேவனின் சிட்சையாக கருதப்படவில்லை. தேவன் அசீரியரை இஸ்ரவேலரை தண்டிக்க எழுப்பினார் என்று அவர்கள் அறியவில்லை. எனவே கர்த்தரின் கரம் நீட்டப்பட்டிருந்தது.

தலைவர்கள் சரியாக வழிகாட்ட தவறினர். தலைவர்களும், தீர்க்கதரிசிகளும் சிறப்பான கண்டனம் பெறுகின்றனர். அவர்களது பொறுப்பினிமித்தம் அதிக ஆக்கினை அடைகிறார்கள். எனவே தேவன் அவர்களை பகைஞரிடம் ஒப்புக்கொடுத்து அவர்கள் மரிக்க அனுமதிக்கிறார். ஒற்றுமையின்மையை குறிப்பிடுகிறார். இங்கு சொந்த ஜனத்தை சூறையாடினவர்களை குறித்து காண்கிறோம். ஜனங்கள் அடித்த ஆண்டவரிடம் திரும்பவில்லை. தேவன் நியாயம் விசாரிக்கும்போது அவர் மேற்கொள்வார். செருக்குள்ளவனும், பாவியும் வளைந்து கொடுக்க வேண்டும் அல்லது உடைக்கப்படுவார்கள்.

கர்த்தரின் நியாயமான கட்டளைக்கு எதிர்த்து நிற்பதைப்பற்றி உள்ளது. அநியாயம் தழைத்தது. ஒடுக்கப்பட்டனர். ஆனால் இஸ்ரவேல் ஒடுக்கப்படும்போது அவர்களுக்கு கர்த்தரிடமிருந்து உதவி கிடைக்காது. அவரது கோபம் இஸ்ரவேல் அழிப்பதை நிலை நிறுத்தும் என்று அறிகிறோம். இவை எல்லாவற்றிலும் தேவன் அநியாயமான தீர்ப்பு செய்கிற நியாயாதிபதிகளையும், ஒடுக்குகிறவர்களையும் நியாயம் விசாரிக்கிறார் என்று பார்க்கிறோம். நீதி நிலைநாட்டப்பட்ட பகுதியில் வாழ்ந்தால் மட்டும் போதாது. ஒவ்வொருவரும் ஏழைகளிடம் பெலவீனரிடம் நீதியாக நடக்க வேண்டும். நமது பொறுப்பை நாட்டின் மீதோ, திருச்சபையின் மீதோ சுமத்துவது நல்லதல்ல. நாம் செய்யும் தவறுக்கும், அமைதியாய் கண்டும் காணாதவர்போல் இருக்கும் நிலைக்கும் நாமே கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

ஆண்டவரே பிடிவாதமான எனது பொல்லாப்பினின்று என்னை விடுவியும். ஆமென்.

ஏசாயா 10:5-19

மனிதனின் பெருமை

> ஒரு பெருமையான மனிதன் எப்பொழுதுமே மற்ற மனிதரையும், பொருட்களையும் கீழாக நோக்குகிறான். – சி. எஸ். லூயிஸ்.

கோரி டென் பூம் ஒரு அழகான மரக்கொத்தி பற்றி ஒரு கதை சொன்னார்கள். ஒரு பெருமையான மரக்கொத்தி செத்த மரத்தினை கொத்திக் கொண்டிருந்ததாம். அந்நேரம் வானம் கருத்து இடி இடித்ததாம். மரக்கொத்தி உறுதி தளராது வேலை செய்துகொண்டே இருந்ததாம். திடீரென்று மின்னல் தாக்கியதில் அம்மரம் சிறு துண்டுகளாக சிதறியதாம். காயமடையாத மரக்கொத்தி பயந்திருந்தும் வேகமாக பறந்து வந்து தன் நண்பர்களிடம் பெருமையாக, "இங்கே பாருங்கள் நான் என்ன செய்திருக்கிறேன்" என்று கூறியதாம். இந்த மரக்கொத்தி எண்ணுவதற்கு மிஞ்சி எண்ணும் மனிதனின் பெருமையை சித்தரிக்கிறது. நம்மில் அநேகர் நம்முடைய சாதனைகளையும், பெருமைகளையும் மேன்மைபடுத்தி அதற்கு காரணமான கர்த்தரை மறந்துவிடுகிறோம். இப்படிப்பட்டவர்கள் ஆவிக்குரிய மயக்கத்தின் உயர்நிலையிலுள்ளவர்கள்.

பிரியாணி போடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கரண்டி பிரியாணியின் சுவை தன்னால்தான் வந்தது என்று எண்ணினால் எப்படியிருக்கும்? அவ்வறே இஸ்ரவேலரை தண்டிக்க அசீரியரை பயன்படுத்தினார். ஆனால் அவர்கள் தங்களால்தான் இப்படி நடந்தது என்று எண்ணினர். அசீரியா. தேவனுடைய சர்வாதிகாரத்தைக் குறித்து கவலைப்படவில்லை. வேறொரு நிகழ்ச்சி நிரல் அவர்களுக்கு இருந்தது - பிற நாடுகளை அழிப்பது (வசனம்7) தன்னை சர்வாதிகாரியாய் நினைத்தது (வசனம் 8). வச.9-11ல் கூறப்பட்டுள்ள இடங்கள் வடக்கிலிருந்து தெற்குவரையுள்ள இராஜ்யங்களை குறிக்கும். எருசலேமுக்கு தூரமாக ஆரம்பித்து எருசலேமை கிட்டி வருகிறது. முதல் நான்கு இராஜ்யங்கள் அசீரியரின் படையரண் நகரங்கள். இவை அனைத்தும் கிமு. 717-ல் வெற்றி பெற்றது. 35 வருடத்தில் வெவ்வேறு அசீரிய அரசர்கள் இந்த இடங்களை ஜெயிக்க காரணமாயினர். ஏசாயா யூதா ஜெயிக்கப்போகும் இடங்களை குறிப்பிடுகிறார். அசீரியர் தங்கள் பெலனே அவர்களுக்கு இந்த வெற்றியை அளித்துள்ளதாக நம்பினர். அனைத்து நாடுகளுக்கு மேலாக உயர்த்தப்பட்டிருப்பதாக அசீரியர் நினைத்தனர். அவர்கள் பிற நாடுகளை அழித்ததுபோல தேவன் அவர்களை அழிக்க இருக்கிறார் என்பதை மறந்தனர்.

தேவனாலேயன்றி என்னால் ஒன்றும் செய்ய இயலாது என்பதை உணர கிருபை தாரும் தேவனே! ஆமென்.

கர்த்தரின் கிருபை

கிருபையினால் இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல.

இதுவரை அழிவைப் பற்றியும் இஸ்ரவேல் பெறப் போகும் தண்டனையைப் பற்றியும் தியானித்தோம். இன்றையப் பகுதியில் இஸ்ரவேல் மக்களுக்கு தேவன் செய்யும் நன்மைகளைப் பற்றி காண்கிறோம்.

மீதியாயிருப்பவர்கள் என்பது ஏசாயாவில் அடிக்கடி வருகிற ஒரு கருத்து. இந்த மீந்திருப்பவரைக் குறித்து அதிகம் அறிய ரோமர் 11ஐ படித்தால், கிருபையையும் மீந்திருப்பவரையும் பிரிக்க முடியாது என்று அறிகிறோம். கிரியைகளினால் அல்ல என்பதை பவுல் அழகாக எடுத்துரைக்கிறார். கிருபையை கிரியைகளினால் பெற முடியாது. கர்த்தரை முழுமையாய் சாரும்போது கிருபையினை உணரமுடியும்.

நீதிமொழிகள் 3:5ல் 'உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து' என்று வாசிக்கிறோம். நமது திறமை, ஞானம், பெலன் ஆகியவற்றை நம்பலாம். நம்மையே சார்ந்திருக்கும்போது நாம் தோல்வியையே தழுவுவோம் என்பதல்ல. மாறாக நமது வெற்றி நமது அழிவாகவும் மாறலாம்.

என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய இயலாது என்ற ஆண்டவரின் வாக்கினை நாம் நினைவில் கொள்ள வேண்டும். சில சமயங்களில் என் சுய முயற்சி எனக்கு வெற்றியைக் கொடுக்கும்போது, இயேசு கிறிஸ்துவின் கூற்று உண்மையா பொய்யா என்ற சந்தேகம் எழும். அநுபவங்கள் உண்மையின் பரீட்சையாக முடியாது. உண்மை தேவனே அதனை சரிபார்க்க முடியும் மனித அநுபவங்கள் அல்ல.

வீண் முயற்சியை கைவிட்டு, தேவன் அவரது நேரத்தில், அவசியமான சிறப்பானதை எனக்காக தருவார் என்ற நம்பிக்கையில் முன்னேற வேண்டும். ஆனால் இது இயல்பாக வருவதில்லை. அது என் ஆசையை அழித்து விசுவாச வாழ்வினை முயற்சிப்பதாகும். - சார்லஸ் ஆர். சுவின்டோல்.

தேவனே, உமது கிருபை எத்தனை பெரியது என்பதை உணரச் செய்யும். ஆமென்.

ஏசாயா 11:1-16

கர்த்தரின் இரட்சிப்பு

தேவன் நமது இருதயத்தை ஆளுகை செய்யும்போதுதான் நாம் பிறருக்கு முன்பாக நேர்மையாக இருக்க முடியும்.

பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிரப்பப்படும் என்பது ஒருங்கிசைந்த வாழ்வின் இரகசியம். அசீரியரின் வெற்றியும், வல்லரசுகளும் தாழ்த்தப்படும் (வச.10:33). தேவன் மேசியாவை துளிர்போல தோன்றப்பண்ணுவார் (வச.11:1-9) அவர் தாவீதின் வம்சத்தில் தோன்றி தேவனுடைய ஆளுகையை ஸ்தாபிப்பார். பரிசுத்த ஆவியானவரால் அது அறியப்படும் (வச.2).

தேவனுடைய ஆவியானவர் மேசியாவின் மீது இருப்பது அவரது ஆளுகையினாலும், நியாயம், நீதி, உண்மை, சமாதானம், தீங்கற்ற சூழல் மற்றும் உலகை முழுதளாவிய தேவனைப்பற்றிய அறிவினால் விளங்கும். தேவையுள்ளவர்களை காப்பாற்றி, பொல்லாதோர் மீது நியாயமான தீர்ப்பு செய்து, இயற்கை அனைத்தும் சமாதானமாக இருக்க செய்வார். சிறுபிள்ளைகளும் அபாயகரமான விலங்குகளோடு விளையாடும் அளவிலான சமாதானம்.

கிறிஸ்து ஆளுகை செய்யும்போது பகைவர்களால் சிதறடிக்கப்பட்ட இஸ்ரவேலர்கள் தாங்கள் நாட்டிற்கு திரும்பி வருவார்கள். மக்களிடையே காணப்பட்ட ஏற்றத்தாழ்வு, பொறாமை நீங்கி நல்லதொரு ஐக்கியம் ஏற்படும். ஈசாயின் வேரான மேசியா மீதியாயிருக்கும் தனது ஜனத்திற்கு ஒரு கொடியாக விளங்குவார் (வச.11:10-16). இரண்டாம் விடுதலை பயணத்தில் மீதியாயிருக்கும் இஸ்ரவேல் யூதா வம்சத்தாரை கூட்டிச் சேர்ப்பார்.

சிறையிருப்பிலிருந்து மீண்டு வருவது மிகவும் மகிமை நிறைந்ததாக இருக்கும். இஸ்ரவேலும் யூதாவும் ஒன்றாக இணைவதால், அவர்கள் தாங்கள் பகைவரை மேற்கொள்வார்கள். இந்த தீர்க்கதரிசன நிறைவேறுதல் சிறையிருப்பிலிருந்து மீண்டு வந்ததில் ஆரம்பித்து, காலம் நிறைவேறும்போது யூதரும் புறஜாதியாரும் ஒரே மந்தையாக சேர்க்கப்படும் நாளில் நிறைவு பெறும் (யோவான் 10:16). நம் வீட்டிலும் திருச்சபையிலும் கிறிஸ்துவின் ஆளுகை இருக்க வேண்டும். கிறிஸ்துவின் ஆளுகை இருக்க வேண்டுமெனில் நாம் முழுமையாய் அவருக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும்.

ஆண்டவரே உமது மீட்பின் திட்டத்திற்காக நன்றி. உமது பெலத்தில் உமது நோக்கங்களுக்காக வாழ உதவி புரியும். ஆமென்.

டிசம்பர் 30
வெள்ளி

ஏசாயா 12:1-6

துதியின் பாடல்

> ***நமது துதிகள் நமது அன்றாட நடைமுறை வாழ்விலை எப்படி பிரதிபலிக்கிறது?***

அதிகாரங்கள் 1 - 11 யூதா மீது யெகோவா தேவனின் நியாயத்தீர்ப்பையும் அதிகாரங்கள் 13 - 23 உலகைத்தின்மீது தேவனின் நியாயத்தீர்ப்பையும் குறிக்கிறது. 12 ஆம் அதிகாரம் தேவன் கோபம் நிறைந்தவராய் இருந்தாலும் (யூதர்கள் மீது) அவர்கள் யூதராயிருந்தாலும் புறஜாதியாராயிருந்தாலும் தமது கரத்தை நீட்டி தமது நாமத்தை உயர்த்தும் அனைவரையும் அணைக்கிறார் என்பதை குறிக்கிறது. இஸ்ரவேலர் செங்கடலைக் கடந்த போதும், கோலியாத் கொல்லப்பட்ட போதும், நீண்ட நாட்கள் கழித்து உடன்படிக்கைப் பெட்டி எருசலேமுக்கு வந்தபோதும் பாடல் பாடினார்கள். இங்கு இஸ்ரவேலில் ஏற்பட்ட மாற்றங்களுக்காக வெற்றி கீதம் பாடப்படுகிறது. சிறையிருப்புக்கு பின் யூதா பட்டணத்திற்கு மீண்டும் மீட்கப்பட்டு வந்தவர்கள் சந்தோஷப்பட்டு தேவனுக்கு நன்றி செலுத்தினர். இந்த மீட்பு கிறிஸ்துவின் வருகையில் முடிவு பெறும் மாபெரும் வெற்றி!

தேவன் தம்முடைய கோபத்தினின்று தங்களை மீட்டார். அவரே எங்கள் இரட்சிப்பு. நம்பிக்கையின் அடையாளம் துதியும் நன்றி செலுத்துதலுமாகும். அப்படிப்பட்ட துதியை தேவனுக்கு செலுத்தினார்கள். ஆராதனை, ஆண்டவரின் கோபம் மாறியதை விவரிக்கிறது (வச.12:1). ஆராதனை, ஆண்டவரை மட்டும் நம்ப ஏவுகிறது (வச.12:2). ஆராதனை, தேவன் நமக்கு செய்தவற்றை பிறருக்கு சொல்வதற்காகவுமே (வச.12:4,5). நாமும் ஒவ்வொரு நிமிடமும் ஆராதிக்க அழைக்கப்படுகிறோம். ஆராதனையை அசட்டை செய்யாமல் இருந்து தேவனுடைய நாமத்திற்கு மகிமையை சேர்ப்போம்.

தேவனுடைய இரட்சிப்பைப் பெற்றவர்கள் தேவனைத் துதிப்பதோடு மட்டுமன்றி அவரைப் பற்றியும், அவர் செய்த யாவற்றையும் பிறருக்கு அறிவிக்கவும் வேண்டும். வாழ்வில் நடக்கும் அனைத்து மேலான காரியங்களுக்கும் தேவனுக்கு கனத்தைக் கொடுக்கிறோமா? உலகம் நம்மை ராஜாதி ராஜாவின் கைவேலையாய் பார்க்கவேண்டும். இந்த கருத்து மாறுபட அனுமதிக்க கூடாது. இயேசு கிறிஸ்து ஆளுகை செய்ய வருவார்.

தேவனுக்கு நன்றி செலுத்தி, துதித்து, அவரைப்பற்றி பிறருக்கு சொல்ல கிருபை தாரும். ஆமென்.

பாபிலோனின் வீழ்ச்சி

தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு மனிதனின் பாவமே காரணம்!

உலகின் வல்லரசாக்வும் கலாச்சாரத்திலும் கலையிலும் மற்றும் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கிய பாபிலோன், அதன் அநீதிகளுக்கான அழிவைச் சந்திக்கிறது.

ஏசாயா 13:1-22ல் கூறப்பட்டுள்ள தேவனுடைய பாரம் இஸ்ரவேலை சுற்றியுள்ள நாடுகளைப் பற்றியது. தேவன் பாபிலோனிலிருந்து ஆரம்பிக்கிறார். பாபிலோனின் அநீதிகளினால் தேவ கோபம் மூண்டது. இப்போது அந்தக் கோபம் நிறைவேறுவதற்கு மேதியர் மற்றும் பாரசீகரது போர் வீரர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். தீர்க்கனும் இந்தச் செய்தியை சத்தத்தோடும், அதிகாரத்தோடும் தெளிவாகவும் கூறுகிறான்.

பாபிலோன் அதாவது இன்றைய ஈராக்தான் நாகரீகம் உருவான இடம். பாபேல் கோபுர வரலாற்றிலிருந்து பொய்யான பல மதங்கள் உருவாகிய இடமும் அதுதான் என அறிகிறோம் (ஆதியாகமம் 11). எனவே தேவன் பாபிலோனை முதலாவது நியாயந்தீர்ப்பது பொருத்தமானது. பாபிலோன் வல்லரசாகி யூதாவை பயமுறுத்திக் கொண்டிருந்தது. ஏசாயா அதன் அழிவை முன்னுரைக்கிறார். தேவனுடைய ஜனத்திற்கு ஒரு சவாலையும் நம்பிக்கையின் செய்தியையும் ஏசாயா கூறுகிறார். மக்களை நம்பாமல் கர்த்தரையே சார்ந்திருக்க ஏசாயா கூறுகிறார்.

கர்த்தருடைய நாள் பாபிலோனிய வீழ்ச்சிக்கு ஒத்திருக்கும் (வசனம் 13 : 17-22) மேதியர் விரோதிகளாயிருந்தனர் (வசனம் 17). இவர்கள் பெர்சியரோடு இணைந்து பாபிலோனை தரியு ராஜாவின் காலத்தில் மேற்கொண்டனர். (539 கிமு) காட்டு விலங்குகளின் தாபரமாக மாறியது பாபிலோன். கலையிலும் நாகரீகத்திலும் உலகத்திற்கே சிறந்து விளங்கிய பாபிலோன் அதன் அகந்தையால் விழுகிறது. அது ஆண்டவருக்கு விரோதமாக செயல்படும் கொடுமை, பெருமை, அடக்குமுறை, வல்லமையினால் அறியப்படும். நாம் தேவன் மீதுள்ள நம்பிக்கையில் உண்மையாயிருக்கும் போது அசைக்கப்படாத ஒரு ராஜ்யத்தை பெறுவோம். பெருமை நமக்கு அழிவைக் கொண்டு வரும்.

ஆண்டவரே சிலுவையில் என் பாவங்கள் உருண்டோடுகிறபடியால் உமக்கு நன்றி! ஆமென்.

வேதாகம ஐக்கிய சங்கம்
Scripture Union

1867ஆம் ஆண்டு வடக்கு வேல்ஸ் நாட்டில் திரு. ஜோசையா ஸ்பையர்ஸ் என்பவரால் துவக்கப்பட்டு இன்று 140க்கும் அதிகமான நாடுகளில் இவ்வூழியம் நடைபெற்று வருகிறது.

இந்தியாவில் 1896ஆம் ஆண்டு திரு. பெர்னார்டு ஹெர்க்லாட்ஸ் என்பவரால் துவக்கப்பட்டு. திரு ஆர்.டி.ஆர்கியால்டு என்பவரால் வளர்க்கப்பட்டு, இன்று 132 முழுநேர மற்றும் தன்னார்வ ஊழியர்களைக் கொண்ட இயக்கமாக வளர்ந்துள்ளது. வேதாகம ஐக்கிய சங்கத்தின் இரண்டு நோக்கங்கள்

☺ **நற்செய்திப் பணி** ☺ **வேத வாசிப்பைத் தூண்டுதல்**

வேத வாசிப்பைத் தூண்டுவதற்காக தமிழ் வெளியீட்டுத் துறை செயல்பட்டு வருகிறது. மேலும் கீழ்காணும் தியான நூல்களை தமிழில் வெளியிடுகின்றது.

தின தியானம் – பெரியவர்களுக்கு
வல்லமையின் வழியில் – இளம் வாலிபர்களுக்கு
என் தேவனும் நானும் – சிறுவர்களுக்கு

இந்தத் துறையில் பல தன்னார்வ ஊழியர்கள் இணைந்து செயல்பட்டு வருகின்றனர். நீங்களும் இணைந்து செயல்படலாம். இந்தத் துறையின் தேவைகளுக்காகவும், திட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள். மேலும் விபரங்களுக்கு எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

வேதாகம ஐக்கிய சங்கம்,
தமிழ் வெளியீட்டுத் துறை

நெ.27, முதல் மெயின் ரோடு, யுனைட்டெட் இந்தியா நகர், அயனாவரம்,

சென்னை - 600 023. தொலைபேசி : 044 - 2674 1913.

உங்களுக்கு ஊழியத்தில் உதவவும், தமிழ் வெளியீட்டுத் துறையின் வெளியீடுகள் குறித்த விபரங்களை அறியவும், பிரதிகள் பெறவும் இவர்களை அணுகவும்

TAMIL NADU (North)

Solomon Kirubakaran (Fld.Sec.) (9789074947)
Thomas Edison (9445261305)
Caleb Karthikeyan (9444807002)
Selvan Jayakaran (9443965269)
John Chellaiah (9444284825)
Ramesh Kumar (9445246989)
Mohan (9884848344)
Aesa Rooban (9840513847)
Tamil Selvan (9488567111)
Mangala Jebakumar (7708287870)
Rajesh (9600121267)
Jayaseelan (8344489601)

Office Address

No.6, 'A' Block, Olives Residency,
Arputham Nagar, West
Tambaram, Chennai - 600 045.
Cell : 97890 74947

TAMIL NADU (Central)

Mohan Raj (Fld.Sec.) (9443646437)
Mrs.Eunice Elias (9443078997)
Balakrishnan (9442083952)
Daniel Balakrishnan (9489951580)
Ramesh Gandhi (9943599606)
Johnson Manosay (9894831116)
Kani Raja (9626494663)
Jacob Vijayakumar (9442714166)
Augustine (9443050672)

Office Address

No.36, Bishop Road, Puthur,
Trichy - 620 017. Ph. : 0431-2741140

TAMIL NADU (South)

P.Billy Zahariah (Fld.Sec.) (9443961955)
John Stephen (9442079832)
Henry Gnanam (9486609265)
Solomon (9442491355)
Karthick Pandian Raj (9487566086)
Raja (7598146344)
Jagadeesh (9442469878)
Murasoli (9442147241)

Office Address

5, CSI Church North Street,
Perumalpuram, Tirunelveli - 627 007.
Ph. : 0462-2530064

DEV MOHAN
Scripture Union & CSSM - India,
Post Box No.507, Junglighat (PO),
Port Blair - 744 103.
Andaman & Nicobar Islands.
Cell: 0 99332 62834

SU - SRI LANKA
The National Director
138, Fourth Floor, St. Michael's Road,
Colombo - 03. Sri Lanka.
Phone : +94 -11 -2472526

TAMIL PUBLICATIONS

- **Mr.VADIVEL VICTOR** Secretary
- **Mr.ANAND DAS**

Office address

No.27, 1st Main Road, United India Nagar, Ayanavaram, Chennai - 600 023.
Ph. : 044 - 2674 1913 Cell : 0 - 7299690502 / 9003042753
e-mail : **sutamilpublications@gmail.com/sutamilnotes@yahoo.com**

ORDER FORM - 2017

புத்தகங்கள்	ரூபாய்	பிரதிகள்	மொத்தம்
தின தியானம்	100/-		
வல்லமையின் வழியில்	100/-		
என் தேவனும் நானும்	100/-		
அன்புள்ள ஆண்டவரே	15/-		
வெற்றியா? தோல்வியா?	15/-		
தேன் துளிகள் (3பகுதிகள் - ஒவ்வொன்றும்)	5/-		
வேத வாசிப்பு அட்டை	2/-		
தேர்வு செய்க ☑: தபால் ☐ கூரியர் ☐			
எனது காணிக்கை			
மொத்தம்			

* அஞ்சல் செலவு [கூடுதலான ஒவ்வொரு புத்தகத்திற்கும் ரூ.15/- சேர்த்துக்கொள்ளவும்]

  சாதாரண தபால் :- ரூ.20/-   பதிவுத் தபால் :- ரூ.40/-

  கூரியர்

  தமிழ்நாடு :- ரூ.30/-   ஆந்திரா, கேரளா, கர்நாடகா :- ரூ.45/-

  [கூடுதலான ஒவ்வொரு புத்தகத்திற்கும் ரூ.15/- சேர்த்துக்கொள்ளவும்]

  பிற மாநிலங்கள் :- ரூ.80/-[கூடுதலான ஒவ்வொரு புத்தகத்திற்கும் ரூ.30/- சேர்த்துக்கொள்ளவும்]

* புத்தகங்களுக்குரிய தொகையை Scripture Union Tamil Publications என்ற பெயரில் காசோலை (Cheque) [அ] காசாணை (Money Order) [அ] வரைவோலை (Demand Draft) மூலமாகவோ அனுப்புங்கள்.

* கீழ்காணும் விவரங்களின்படி, எங்களது வங்கிக் கணக்கில் நேரடியாகவோ அல்லது இணையதளம் மூலமாகவோ செலுத்தலாம். வங்கியில் செலுத்தியபின் எங்களுக்கு தெரியப்படுத்தவும்

Scripture Union Tamil Publications

Core Banking : Indian Overseas Bank
Branch : Ayanavaram
A/c.No.: 000901000033433
IFSCode No.: IOBA0000009

பெயர்: திரு/ திருமதி ______________________________

முகவரி: ______________________________

____

____

______________________________ அஞ்சல் எண்: ______________

மொபைல் / தொலைபேசி எண்: ______________________________

மின்னஞ்சல் (Email): ______________________________

அனுப்பவேண்டிய வழி – தபால் / கூரியர் / ______________________________

தேதி ______________ கையொப்பம் ______________

புத்தகங்களுக்குரியத் தொகையை Scriture Union Tamil Publications என்ற பெயரில்
காசோலை (அ) காசாணை (அ) வரைவோலை மூலமாகவோ அனுப்புங்கள்.
உங்கள் முழு முகவரியையும், தொலைபேசி எண்ணையும் எழுத மறவாதீர்கள்

தின தியானம்

உங்கள் அனுதின வேத வாசிப்புக்கு உகந்த தியான நூல்

- முறையான வேத வாசிப்பு
- தெளிவான விளக்கம், வெளிப்பாடு
- ஆவிக்குரிய உண்மைகள், அனல்மூட்டும் தியானங்கள்

வேதத்தை வாசித்துப் புரிந்துகொள்ள உதவும்
வேதாகம ஐக்கிய சங்கத் தமிழ் வெளியீடுகள்

தின தியானம்
பெரியவர்களுக்குரியது
– அனுதின கிறிஸ்தவ
வாழ்க்கைக்குப் பயனுள்ள
தியான நூல்

வல்லமையின் வழியில்
இளம் வாலிபர்கள்
வேதத்தை வாசிக்க
உற்சாகப்படுத்தும் நூல்

என் தேவனும் நானும்
8–12 வயதினர்
அனுதினமும் வேதத்தை வாசித்து
விளங்கிக் கொள்ள உதவும் நூல்

SCRIPTURE UNION India
Tamil Publications
Regd. Office: 27, First Main Road, United India Nagar
Ayanavaram, Chennai 600 023
Tel: 044 26741913, 26740137
E mail: sutamilpublications@gmail.com

DIOCESAN
BOOK DEPOT
11873
Rs 100/-